# இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் உரைநடை நூல்

# சொற்படலம்

பாவலரேறு ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

# இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் ~ சொற்படலம்


ஆசிரியர்

பாவலரேறு ச. பாலசுந்தரனார்



தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-349-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 288

திருவள்ளுவராண்டு 2036 - ஐப்பசி - அக்டோபர் 2005

| | | |
|---|---|---|
| நூல் | : | இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் - சொற்படலம் |
| ஆசிரியர் | : | பாவலரேறு ச. பாலசுந்தரனார் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கணம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2005 |
| பக்கம் | : | 394 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு.140/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்**

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

# அணிந்துரை

தமிழில் காணப்பெறும் மிகத் தொன்மை வாய்ந்த இலக்கண நூல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய தொல்காப்பியம் எனலாம். தொல்காப்பியரின் ஆசிரியரான அகத்தியர் எழுதிய அகத்தியமே தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் என்பர். மொத்தத்தில், தொல்காப்பியத்துக்கு முன்னரே பல இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பது வெள்ளிடைமலை. எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல் இலக்கியம் தோன்றிய பின்னரே இலக்கணம் தோன்றும் என்பது மொழியியலாரின் கருத்து. இந்த அடிப்படையில் தொல்காப்பியத்துக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே தமிழில் வளமையான இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கவேண்டும்.

தொல்காப்பியத்துக்குப் பல நூற்றாண்டுகள் இடைவெளிக்குப் பின் தோன்றிய இலக்கண நூல்கள் நேமிநாதம், வீரசோழியம், நன்னூல் ஆகியன. இவற்றில் பரவலாகப் பயிலப்பட்டு வருவது நன்னூல். நேமிநாதமும் வடமொழி மரபைத் தழுவி எழுதப்பட்ட வீரசோழியமும் பெருவழக்கில் இல்லை.

தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் முதலியோர் எழுதிய உரைகள் தொல்காப்பியத்தையும் தமிழ் இலக்கண அமைப்புக்களையும் அறியத்துணைபுரிந்தாலும் அறிவியற் கோட்பாட்டுக்குச் சில இடங்களில் ஒத்துவராதனவாக உள்ளனவாக இந்நூலாசிரியர்

குறிப்பிட்டு, அவற்றை ஆராய்ந்து இந்நூலில் சொல்லிலக்கணக் கோட்பாடுகள், தமிழ்நெறி மரபுகள் விளங்க எடுத்தியம்பப் பெற்றிருப்பதாகக் கூறியுள்ளார். இத்தகு பின்னணியில், தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் இவருடைய இந்தப் புதிய முயற்சியை தமிழுக்குப் பெருமைசேர்க்க வந்துள்ள புதிய வரவாகக் கருதலாம்.

ஆழ்ந்த இலக்கணப் புலமையும், தமிழ் கற்றுக்கற்றுத் தரப்படுத்தப்பட்ட மெய்யறிவும் பெற்ற பெரியவர் பாவலரேறு ச. பாலசுந்தரனார் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகுக்குக் கிடைத்த தேடக்கிடைக்காத செல்வம். அவருடைய இந்த அரிய பணி பாராட்டுதலுக்குடையது. முந்தைய உரையாசிரியர்கள் உரையிலிருந்து வேறுபட்டு, தமிழ்மொழியைக் கற்றவர் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாக இச்சொற்படலம் படைக்கப்பட்டுள்ளது.

செம்மொழியாக்கப்பட்டவுடன் பழம்பெருமைபேசி வாழாவிருந்து நம்மொழி வளர்ச்சியில் ஒரு தேக்கநிலையை உண்டாக்காமல்; புதிய அளவுகோள்களோடு மொழியையும், இலக்கண, இலக்கியங்களையும் கூர்ந்தாய்வு செய்து இதுபோன்ற படைப்புகளைக் கொண்டுவருவதுதான் இன்றைய தலையாயபணி. இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் தமிழிலக்கணம் - சொற்படலம் தமிழ் மக்களிடையே புதிய புரிதலை உண்டாக்கும் என நம்புகிறேன்.

இந்நூலாசிரியருக்கும், இதை அழகுற அச்சிட்டு வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநருக்கும், பதிப்புத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் என் வாழ்த்துகளும், பாராட்டுதல்களும்.

13.10.2005 (சி. சுப்பிரமணியம்)
தஞ்சாவூர்.

# இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம்

## உரைநடை நூல்

# சொற்படலம்

## நூற்பொருளமைப்பு

1. சொற்படலம் - சொல் - மொழி - கிளவி என்பன பற்றிய விளக்கம்

2. தனிச்சொல் ஆக்கம் - நெறிமுறை - விளக்கம்

3. சொல்லும் பொருளும் விரிந்தமையும் மரபு

4. சொல்லாக்கத்திற்குரிய ஏதுக்கள், பொருட்பாகுபாடுகள், திணையமைப்பு விளக்கம், உயர்திணை, அதன்பிரிவுகள், அஃறிணை, அதன்பிரிவுகள்.

5. சொல்லும் பொருளும் - சொற்களின் தோற்றம் - பேச்சு மொழி எழுத்து மொழி - இருவகைப் பொருள் நிலைகள் - விளக்கம்

6. வெளிப்படைச்சொல் - குறிப்புச்சொல். உயர்சொற் கிளவி, வினா, செப்பு, ஒன்றொழி பொதுச்சொல், பலபொருளொருசொல், பொருளொடு புணராச் சுட்டு, இனமொழி - திணைநிலைப்பெயர், பாற்பெயர் பிறவாகவரும் குறிப்புச் சொற்கள்.

7. வடமொழியாளர் கூறும் வெளிப்படைச்சொல் குறிப்புச் சொல் பற்றிய குறிப்புக்கள் இலக்கணக்குறிப்பு எடுத்துக் காட்டுக்கள்.

8. சொல்வகைகள் இலக்கியச் சொல்வகைகள், வடசொல் பற்றிய விரிவான விளக்கம்.

9. பெயர்ச்சொல் - வகை - உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல்

10. பொதுப்பெயர் அல்லது விரவுப்பெயர்கள்

11. மூவிடப்பெயர்கள் - அறுவகைப் பெயர்கள் முறைப்பெயர்கள்.

12. வேற்றுமை - எண் வகை வேற்றுமைகள் - தொல்காப்பியம் முதல் பிறநூலார் கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்கம், முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை - விளக்கம்.

13. வேற்றுமை உருபுகள் விரிந்தும் மறைந்தும் வரும் நிலைகள்

14. வேற்றுமை மயக்கம் - பொருள் மயக்கம் - உருபு மயக்கம்

15. ஆகுபெயர் என்னும் முதல் வேற்றுமை மயக்கம்

16. வினைச் சொல் - வினையும் வினைச் சொற்களும் - வினையும் காலமும் - காலம் பற்றிய வடநூலார் கொள்கை விளக்கம்.

17. வினைமுற்றுச் சொல் - தெரிநிலைவினை - குறிப்புவினை- வினைச்சொல் விகுதிகள் - தன்மை வினை - முன்னிலைவினை, படர்க்கை வினைவிகுதிகள் - தெரிநிலை வினையாலணையும்பெயர், குறிப்பு வினையாலணையும் பெயர் ஈறுகள் - வியங்கோள் வினை

18. அஃறிணை வினைகள் - துணை வினைகள்

19. இருதிணைப் பொதுவினைகள் அல்லது விரவு வினைகள் முன்னிலை வினை - எதிர் மறைவினைகள்.

20. தெரிநிலை வினையெச்சம் - வினையெச்ச வாய்பாடுகள் - முற்றெச்சம் - அவை அடுக்கிவருதல் - எச்சங்கள் முடியும் முறைமை.

21. பெயரெச்சம் - சிலபொதுவினைகள்.

22. தொகை மொழிகள் - வகை - விளக்கம், வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை பற்றிய விளக்கம்.

23. வடமொழியாளர் கூறும் சமாசன்கள்.

24. பத்துவகை எச்சங்கள் - விளக்கம்.

25. இடைச்சொல் - பொதுவிளக்கம் - தத்தம் பொருளவாகவரும் இடைச்சொற்கள் எடுத்துக்காட்டுகளுடன்.

26. உரிச்சொல் - பொதுவிளக்கம் - வினை, குறிப்பு, பண்பு அடிப்படையில் உரிச்சொற்கள் அமைந்துவருதல் - ஒரு சொல் பல்பொருள் - ஒருபொருள் பலசொற்கள்.

27. பிற்சேர்க்கை: சொல்லாக்க நெறிமரபு பற்றிய விளக்கம் எடுத்துக்காட்டுகளுடன்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| இலக். | - | இலக்கணக் கொத்துரை |
| உயிர். | - | உயிரெழுத்துக்கள் |
| உயிர்மெய் | - | உயிர்மெய் எழுத்துக்கள் |
| எ.டு. | - | எடுத்துக்காட்டு |
| எழுத்து. | - | எழுத்ததிகாரம் |
| கலி. | - | கலித்தொகை |
| குறள் | - | திருக்குறள் |
| சேனா. | - | சேனாவரையர் |
| சொல். | - | சொல்லதிகாரம் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நன். | - | நன்னூல் |
| நன்.விருத்.மேற். | - | நன்னூல் விருத்தியுரை மேற்கோள் |
| புறம் | - | புறநானூறு |
| பொருள் | - | தொல்காப்பியம் - பொருளதிகாரம் |
| மயிலை உரை | - | மயிலைநாதர் உரை |
| மெய் | - | மெய்யெழுத்துக்கள் |
| வே. | - | தொல்காப்பியம் - வேற்றுமையியல் |
| வே.மய. | - | தொல்காப்பியம் - வேற்றுமைமயங்கியல் |

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | 'சொல்' என்பதன் விளக்கம் | 3 |
| 3 | தனிமொழி ஆக்கம் - உட்பிணைப்புச்சொல் | 4 |
| 4 | எழுத்துக்களின் பொருளாற்றல் | 11 |
| 5 | சொல்லும் பொருளும் விரிந்து பலவாதல் | 13 |
| 6 | பொருளும் - பாகுபாடுகளும் | 17 |
| 7 | திணை - பால் பகுப்புக்கள் | 18 |
| 8 | சொல்லாக்க மரபுகள் | 26 |
| 9 | சொல்லின் தோற்றம் | 28 |
| 10 | பேச்சுமொழியும் எழுத்து மொழியும் | 30 |
| 11 | சொற்களின் இருவகைப் பொருள்நிலை | 31 |
| 12 | பொருள்களும் - சொற்களும் | 32 |
| 13 | வெளிப்படையும் குறிப்பும் | 33 |
| 14 | குறிப்புச் சொற்களின் வகைகள் | 34 |
| 15 | வடமொழியாளர் கூறும் வெளிப்படைச்சொல் குறிப்புச்சொல் பற்றிய சில குறிப்புக்கள் | 38 |
| 16 | இலக்கணைக்குறிப்பு | 42 |

| | | |
|---|---|---|
| 17 | இலக்கணச்சொற்களும் வகைகளும் | 45 |
| 18 | பெயர் - வகைகள் | 46 |
| 19 | இலக்கியச் சொல் வகைகள் | 48 |
| 20 | வடசொல் தமிழ்ச்சொல் விளக்கம் | 56 |
| 21 | பெயர்ச்சொல் - இலக்கண விளக்கம் | 78 |
| 22 | உயர்திணைப்பெயர்கள் - வகை | 79 |
| 23 | அஃறிணைப் பெயர்கள் - வகை | 84 |
| 24 | பொதுப்பெயர் அல்லது விரவுப்பெயர் | 86 |
| 25 | மூவிடப்பெயர்கள் ஆக்கமுறைமை | 94 |
| 26 | சுட்டுப்பெயர் - வினாப்பெயர் விளக்கம் | 97 |
| 27 | கிளைப்பெயர் - உறவுப்பெயர்கள் | 98 |
| 28 | வேற்றுமை இலக்கணம் பற்றிய ஆய்வு | 109 |
| 29 | முதல் வேற்றுமை - விளக்கம் | 112 |
| 30 | இரண்டாம் வேற்றுமை - விளக்கம் | 125 |
| 31 | மூன்றாம் வேற்றுமை - விளக்கம் | 132 |
| 32 | உடனிகழ்ச்சிப் பொருள் பற்றிய ஓர் ஆய்வு | 142 |
| 33 | நான்காம் வேற்றுமை - விளக்கம் | 148 |
| 34 | ஐந்தாம் வேற்றுமை - விளக்கம் | 155 |
| 35 | ஆறாம் வேற்றுமை - விளக்கம் | 164 |
| 36 | ஏழாம் வேற்றுமை - விளக்கம் | 174 |
| 37 | எட்டாம் வேற்றுமை - விளக்கம் | 182 |
| 38 | வேற்றுமை உருபு விரிந்து வருதலும் தொக்க வருதலும் | 187 |
| 39 | வேற்றுமை மயக்கம் வகைகள் | 192 |

| | | |
|---|---|---|
| 40 | வேற்றுமைப் பொருள் மயக்கம் | 194 |
| 41 | வேற்றுமை உருபு மயக்கம் | 200 |
| 42 | உருபுகள் வடிவுதிரிதல் | 206 |
| 43 | நான்காம் வேற்றுமை உருபிற்குச் சிறப்பு விதி | 206 |
| 44 | வேற்றுமைக்கும் வினைக்குமுள்ள தொடர்பு | 207 |
| 45 | எழுவாய் வேற்றுமை மயக்கம் - ஆகுபெயர் | 209 |
| 46 | ஆகுபெயர் - வகைகள் விளக்கம் | 211 |
| 47 | ஆகுபெயர்க்கும் வேற்றுமைக்குமுள்ள தொடர்பு | 217 |
| 48 | வினைச்சொல் - விளக்கம் | 220 |
| 49 | வினையும் - வினைச் சொற்களும் | 221 |
| 50 | வினையும் - காலங்களும் | 223 |
| 51 | வடநூலார் கூறும் காலம் பற்றிய குறிப்பு | 225 |
| 52 | வினைச்சொல் வகை | 227 |
| 53 | தெரிநிலை வினையாலணையும் பெயர் | 229 |
| 54 | குறிப்பு வினையாலணையும் பெயர் | 233 |
| 55 | அஃறிணை - தெரிநிலை வினைகள் | 234 |
| 56 | அஃறிணை - குறிப்பு வினைகள் | 237 |
| 57 | குறிப்பு வினை பற்றிய நன்னூலார் கருத்து | 239 |
| 58 | துணை வினைகள் | 239 |
| 59 | இருதிணைப்பொதுவினை அல்லது விரவுவினை | 243 |
| 60 | முன்னிலை வினை | 244 |
| 61 | வியங்கோள் வினை | 246 |
| 62 | முன்னிலைக் குறிப்பு வினைமுற்று | 248 |
| 63 | எதிர்மறை வினை முற்று | 248 |

| | | |
|---|---|---|
| 64 | தெரிநிலை வினையெச்சம் | 250 |
| 65 | வினையெச்சவாய்பாடுகளும் ஈற்றிடைச்சொற்களும் | 252 |
| 66 | முற்றெச்சம் (விளக்கம்) | 263 |
| 67 | இடைப்பிறவரல் | 270 |
| 68 | வினையெச்சங்களில் காலவழுவமைதி | 270 |
| 69 | பெயரெச்சம் - விளக்கம் | 272 |
| 70 | பெயரெச்சங்கள் பொருள் மயங்கி வருதல் | 278 |
| 71 | 'செய்யும்' என்னும் முற்றும் எச்சமும் | 280 |
| 72 | வேறு இல்லை உண்டு முற்றுக்கள் | 281 |
| 73 | வேண்டும் தகும் படும் முற்றுக்கள் | 282 |
| 74 | வினா - வினைக்குறிப்பு முற்றுக்கள் | 283 |
| 75 | தொகை மொழி | 284 |
| 76 | தொகைமொழி - தொகைச் சொல் தொகைநிலைத் தொடர் வேறுபாடுகள் | 290 |
| 77 | வேற்றுமைத் தொகை மொழி | 291 |
| 78 | உவமத் தொகை மொழி | 293 |
| 79 | வினைத் தொகை மொழி | 296 |
| 80 | பண்புத் தொகை மொழி | 297 |
| 81 | உம்மைத் தொகை மொழி | 302 |
| 82 | அன்மொழித் தொகை | 305 |
| 83 | ஆகுபெயர்-அன்மொழித்தொகை வேறுபாடுகள் | 309 |
| 84 | வடநூலார் கூறும் சமாசன்கள் | 310 |
| 85 | தொகைமொழிகளில்-பொருள் நிற்கும் முறைமை | 316 |
| 86 | பத்துவகை எச்சங்கள் | 317 |

| | | |
|---|---|---|
| 87 | இடைச்சொல் இயல் | 323 |
| 88 | இருவகை வழக்கிலும் பயின்றுவரும் இடைச்சொற்கள் | 326 |
| 89 | அசையிடைச் சொற்கள் இசைநிறை இடைச் சொற்கள் | 334 |
| 90 | விகுதி இடைச் சொற்கள் வரலாறு | 337 |
| 91 | உரிச்சொல் இயல் | 341 |
| 92 | நிரம்பிய உரிச் சொல்லும் நிரம்பா உரிச்சொல்லும் | 349 |
| 93 | உரிச்சொல்பொருளும் பொருள்நிலைஉணர்தலும் | 350 |
| 94 | சொல்லாக்க நெறி மரபுகள் | 355 |
| 95 | எழுத்துக்களும் அவை சொல்லாதலும் | 357 |
| 96 | சொல்லாக்கம் | 363 |
| 97 | தொழிற் பெயர்கள் பொருட் பெயராதல் | 372 |

❖ ❖ ❖ ❖ ❖

# இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம்

## உரைநடை நூல்

# சொற்படலம்

**முகவுரை**

*சொல்லாவது உயர்திணை மருங்கின் நிலைபெறுவதாகிய தொரு பொருள் என்பார் தொல்காப்பியர் (சொல் - 57) அதற்கு நாமகளாகிய தெய்வம் என்று பொருள் கூறுவார் சேனாவரையர்.*

*சொல் என்பது ஒலிகளின் காரியமாயினும் அவ்வொலிகள் மாவும் புள்ளும் பிறவும் எழுப்பும் ஓசை ஒலிகளைப் போல்பவை அல்ல, மக்கள் எழுப்பும் சொல்லொலிகள். மாவும் புள்ளும் பிறவும் எழுப்பும் ஒலிகள் அவைதம்மை உணர்த்தும். மக்கள் வெளிப்படுத்தும் சொல்லொலிகள் இருதிணைப் பொருள்களையும் அவற்றின் தன்மை, பண்பு, செயல் முதலாயவற்றையும் உணர்த்தும்.*

*சொற்கள் மக்களின்பால் இன்பதுன்பங்களையும் மெய்ப்பாடுகளையும் அறிவு உணர்வுகளையும் தோற்றுவிக்கும் ஆற்றல் வாய்ந்தவை. தெய்வத்திற்குரிய ஆற்றல்யாவும் மக்கள் பேசும் சொற்களுக்கும் உண்டு. பரம்பொருளைப் போல சொல்லும் நிலை பேறுடையது.*

*"ஆக்கமும் கேடும் அதனான் வருதலாற்*
*காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு"* (குறள்.642)

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்"* (குறள்.648)

என்பவை பொய்யாமொழி. அதனான் சொற்களின் உருவாக்கம் உறுப்பமைவு ஒன்றோடொன்று தொடருங்கால் நேரும் வேறுபடு பொருள்நிலை, சொல்லுறுப்பின்கண் ஓசை ஒலிகள் குன்றினும் நீளினும் வலிப்பினும் மெலியினும் ஏற்படும் பொருள் மாற்றம், எடுத்தல் படுத்தல்களால் தோன்றும் பொருள் நிலைகள் முதலியவற்றைச் செம்மையாகத் தெரிந்துணர்ந்து சொற்களைக் கையாளுதல் வேண்டும். அதனான் அருளார்ந்த அறிஞர் பெருமக்கள் தனிச்சொல் தொகைச்சொல் தொடர் சொற்கள் பற்றி நுட்பமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து வழாநிலை, வழு, வழுவமைதி எனப்பாகுபாடு செய்து காலத்தால் நேரும் மாற்றங்களைப் புறனடைகளால் அகப்படுத்து நெறிப்படுத்தி விதிமுறைகளை முப்பத்திருவகை உத்தியொடும் இலக்கணப்படுத்தி வழங்கியுள்ளனர்.

சொல்லாக்கம் பற்றியும், பெயர் வினை இடை உரி என்னும் வகைபற்றியும், அறுவகைத்தொகை மொழி பற்றியும், வேற்றுமை பற்றியும், பல்வகைத் தொடர்பற்றியும், தனித்தனி நூல்கள் பல தமிழில் அமைந்திருந்தமை தொல்காப்பியர் கூறும் என்மனார், என்றிசினோர், என்ப, எனவரும் வழிநூல் வாய்பாடுகளால் புலனாகின்றது. எனினும் அந்நூல்கள் ஒன்றும் இற்றைக்குக் கிட்டவில்லை. அவற்றை ஆராய்ந்து சுருக்கமாகத் தொகுத்துக்கூறும் தொல்காப்பிய நூல் ஒன்றே சில பாடப் பிழைகளுடன் நமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் பல நூற்றாண்டுகள் கழித்து எழுத்து சொல்பற்றிக் கூறும் இலக்கணமாக வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகியவை இயற்றப் பெற்றுள்ளன. பிற்கால நூல்கள் யாவும் இவற்றைப் பின்பற்றிச் சில மாறுதல்களுடன் இயற்றப் பெற்றவையே. இக்கால இருவகை வழக்கையும் நோக்கியான் 1991-ஆம் ஆண்டில் இயற்றிய தென்னூல் பரவலாகத் தமிழ் அறிஞர்பால் சென்று சேரவில்லை. மூலபாடம் மட்டும் உள்ளமையால் கருத்தறிதல் சிறிது கடினமே. அதனால் அதற்குக் காண்டிகையளவில் உரையும் வரைந்துள்ளேன். விரைவில் வெளிவரும்.

மற்று, வீரசோழியம் தமிழ்நெறி மரபினை மாற்றி வடமொழி பாலிமொழிக் கோட்பாடுகளை ஒட்டியியற்றப் பெற்றுள்ளமையான் தமிழ் நெறிமுறைகளை அதனைக் கொண்டு தெரிந்து கொள்ளும் வாய்ப்பில்லை. நன்னூல் இற்றைக்குப் பெருவழக்காகப் பயிலப்பெற்று வருகின்றது. அடிப்படை இலக்கணங்களாகிய எழுத்து மரபு அவற்றின் தொகை

சார்பெழுத்து, பற்றிய இலக்கணங்களும், பெயர், வினை, வேற்றுமை இயல்பு, தொகை மொழி, உரிச்சொல் பற்றிய இலக்கணங்களும் அறிவியலுக்கும் தொல்காப்பிய நெறிமுறைகட்கும் மாறாக அமைந்துள்ளன. அவர் வீரசோழியத்தைப் பின்பற்றிச் அமைத்த பதவிலக்கணக் கோட்பாடு புதிய வரவாயினும் பிழைபட அமைந்துள்ளது.

தொல்காப்பியத்திற்குச் சமண நூலாசிரியர் கோட்பாடுகளை ஒட்டி இளம்பூரணரும், வடமொழி, நன்னூல் கோட்பாடுகளை ஒட்டிச் சேனாவரையர், நச்சினார்க்கினயர், தெய்வச்சிலையார் முதலானோரும் எழுதிய உரைகள் ஓரளவு தொல்காப்பியத்தையும் தமிழ் இலக்கண அமைப்புக்களையும் அறியத் துணைபுரிவன அன்றி அறிவியல் கோட்பாட்டிற்கு சில இடங்களில் ஒத்து வாராதனவாக உள்ளன. அவற்றை யெல்லாம் ஆராய்ந்து இந்நூலில் சொல்லிலக்கணக் கோட்பாடுகள் தமிழ் நெறி மரபுகள் விளங்கச் சுருக்கமாக வரையப்பெற்றுள்ளன. தொல்காப்பியத்தின் மெய்ம்மையான கோட்பாடுகளை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் காணலாம்.

## சொற்படலம் - சொல்லிலக்கணம்

சொற்படலம் என்பதற்குச் சொல்லிலக்கணத்தைப் பற்றி விரியும் விளக்க விரிவு என்பது பொருள். சொல்லிலக்கணம் என்பதற்கு முதலாவதாக மேற்கூறப் பெற்ற எழுத்துப்படலத்துள் விளக்கப் பெற்ற எழுத்துக்களால் தனிமொழியாகவும் பகுநிலை மொழியாகவும் தொகை மொழியாகவும் சொற்கள், இருதிணை ஐம்பால் மூவிடப் பெயர்ச் சொல்லாகவும் வரும் பெயர்ச் சொல், பெயர்ப் பொருளின் குணம் செயல்பற்றிவரும் வினைச் சொல் - பெயர் வினைகளைப் பல்வேறு கோணங்களில் பொருள்தரச் செய்யும் இடைச் சொல், அவற்றிற்குத் துணையாகவும் அவைபோன்றும் வரும் இருவகை உரிச்சொல் ஆயவை பற்றியும் அவை வெளிப்படையாயும் குறிப்பாயும் பொருள்தரும் மரபு பற்றியும், பிற மரபுகள் பற்றியும் கூறும் கோட்பாடு என்பது பொருளாகும்.

## சொல் - என்பதன் விளக்கம்

தமிழில் தனித்தும் சார்ந்தும் வரும் முப்பத்துமூன்று எழுத்துக்களால் உருவாகும் மொழி என்னும் பொருள் சுட்டும் வடிவம் ஆக்கம் பெறும் என்பதும், அது பகாநிலை மொழி,

பகுநிலைமொழி என இருதிறனாக அமைந்து தொகை மொழியாகவும் தொடர் மொழியாகவும் ஆக்கம் பெறும் என்பதும் எழுத்துப்படலத்துள் புலப்படுத்தப் பெற்றது.

சொல், மொழி, கிளவி என்பன பொதுவாக வார்த்தை என்னும் பொருள் தரினும் மூன்றும் இலக்கண நோக்கில் தனித்தனி சிறப்புப் பொருளுடையனவாகும். மொழி என்பது பற்றியும் அதன் வகைபற்றியும் எழுத்துப்படலத்துள் விளக்கப் பெற்றன. ஈண்டு 'சொல்' ஏன்பது மொழி அடிப்படையில் தோன்றித் திணை, பால், எண், இடம் காலம் முதலியவற்றைச் சுட்டும் உறுப்புக்களோடு கூடியும் தனித்துப் பெயராயும் வினையாயும் ஆக்கம் பெறுவனவாகும்.

## தனிமொழி ஆக்கம் - உட்பிணைப் சொல்

பெயரும் வினையுமாகிய கிளவிகள் திணை முதலியவற்றான் வேறுபடுதற்குக் காரணமாக வரும் ஒட்டுறுப்புக்கள் இடைச்சொல் எனப்படும். பெயர் வினைகளுக்கு அடையாக வண்ணம் வடிவு முதலிய குணங்களை உணர்த்தும் கிளவிகள் உரிச்சொல் எனப்படும். நால்வகைச் சொற்களுக்கும் அடிமனையாக நிற்கும் மூலச் சொற்களும் உரிச்சொல் எனப்படும். இவற்றின் வேறுபாடுகள் பின்னர் விளங்கும்.

கிளவி என்பது ஒருகருத்தைச் சொல்வதற்கு எழுவாயாகக் கிளக்கப்படும் எழுத்துக்களும் நால்வகைச் சொற்களும், தொகை மொழிகளும் தொடர் மொழிகளும் பற்றிப் பொதுப்பட நிற்கும். கிளக்கப்படுவது கிளவி. அதனால் சொல்லையும் சொற்றொடர்களையும் ஆக்கிக் கொள்ளும் இலக்கணம் கூறும் இயலுக்குத் தொல்காப்பியர் “கிளவியாக்கம்” என்று பெயரிட்டார். ஓரெழுத்தொரு மொழி முதலாய மூன்றும் சொல்லாக ஆக்கம் பெறும் முறைமைகளை இனிக்காண்போம்.

ஓரெழுத்தொருமொழிகள் என்பவை இருதிணைப் பொருள்கள். அவற்றின் வடிவம் நிறம் தன்மை பயன் செயல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவற்றுள் யாதேனும் ஒருபொருளை மட்டும் தரும். உதாரணம் ஆ. ஆ-பசு. மக்களுக்கு ஆக்கமாக (ஆக்கம் - செல்வம்) உடைமையாக உள்ளமையால் பயனை நோக்கி ஆக்கம் பெற்ற பொருட் பெயராகும். ஆ (ஆதல்) ஆனான். ஆவான் என்னும் வினைகளில் முதனிலை வினைப்பெயராக நின்றது. உண்ணா, தின்னா

என்னும் எதிர்மறை வினைகளில் இறுதிநிலை இடைச் சொல்லாக எதிர்மறைப் பொருளும் வினைமுற்றுப் பொருளும் தந்து நின்றது. ஆ! இது மிக அரிது. என்னுமிடத்து வியப்பிடைச் சொல்லாக நின்றது. இப்பொருள்கட்கெல்லாம் மூலமாக நிற்கும் ஆ என்பது குறிப்பு உரிச் சொல்லாகும்.

இவ்வாறே கா. கா = சோலை. நிழலும் பூவும் காயும் கனியும் தந்து அடைந்தவர்களைக் காத்து நிற்றலின் பயனடிப்படையில் ஆக்கப் பெயராக நிற்கின்றது. காத்தான், காப்பான் என்னுமிடத்து வினைப்பகுதியாக நின்றது. காண்டிகா (காண்பாய்) என இறுதியில் முன்னிலையசையிடைச் சொல்லாக நின்றது. காகா எனக் கரைந்தது காக்கை என்னுமிடத்து இசையுரிச் சொல்லாக நின்றது. இங்ஙனம் ஓரெழுத்தொரு மொழிகள் யாவும் பெயர் முதலாய நான்கினும் ஒருபொருளை மட்டும் தந்து நிற்கும்.

ஈரெழுத்தொரு மொழிகள் எழுத்தமைப்பிற்கேற்ப வேறு வேறு பொருளினவாக ஆக்கம் பெறும். எடுத்துக்காட்டாக அல். அல் - இரவு. ஒளியைக் குறிக்கும் எல் என்பது ஆகுபெயராய் ஒளியையுடைய கதிரவனைக்குறிக்கும் எல் இரவில் புலப்படாமையான் அன்மையை உணர்த்தும் அல் என்பது இரவுக்குப் பெயராயிற்று. அல் என்பதனோடு இ என்னும் எழுத்தைச் சேர்க்குமிடத்து அலி என ஆகிப்பேடியை உணர்த்தும். ஐகாரம் சேரின் அலை என ஆகி நீரலையையும், அலைவாயாக என ஏவல் வினையையும் உணர்த்தும்.

கல். கல்=மலை, பாறை, பாறைத்துண்டு எனப்பொருட் பெயராயும், கற்க! என்னும் ஏவல்வினைப் பொருள் தருமிடத்து முதனிலை வினையாகவும், அதனோடு அகரம் சேரின் கல = (கூடு) என்னும் வினையாயும், இகரம் சேரின் கலி = (மகிழ்ச்சி) எனப்பண்புப் பெயராயும் பொருள் தரும். ஐகாரம் சேரின் கலை. கலை - மான், கல்வி, நூல் எனப்பொருட் பெயராகும். கலைப்பாயாக எனப் பொருள்தரின் வினைமுதல் நிலையாகும்.

ஈரெழுத்து மொழிகளில் சில பகுபதமாய் நின்று பகுதிப்பொருளையும் விகுதிப் பொருளையும் தரும். கூனி (கூன்+இ) கூனலையுடைய முதியவள். பணி (பண்+இ) பண்ணையுடையது. உணா (உண்+ஆ) உண்ணுதற்கு ஆகும் பண்டம் எனவரும். சில சொற்கள் திரிந்து ஆக்கம்பெறும்.

மின் = ஒளி. மீன் - மின்னுகின்ற விண்மீன். நரை = வெண்மை. நாரை - வெண்மை நிறமுடைய கொக்கு. சிலமொழிகள் ஈறுகெட்டு ஈரெழுத்தொரு மொழியாக வரும். மேல்+நில் = மேலாகப் புலப்பட நிற்பது உடம்பு என்னும் பொருளில் மேல்+நில் = மேனி எனவரும். சில மூன்றெழுத்துச் சொற்கள் ஈரெழுத்துச் சொற்களாக மாறும். அகல் - ஆல் (மரம்) துவள் - தோள். துகள் - தூள். நிகர் - நேர். அகழி - ஆழி எனவரும். பிறவாறும் வரும்.

இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழிகள் இரண்டு உரியடிகள் இணைந்தும், தனித்துப் பகா நிலை மொழியாகவும், பால் இடம் காட்டும் விகுதிகளையுடைய பகுநிலை மொழியாகவும் பிறவாறும் வரும். சில சொற்கள் வினைமுதற்பொருள் விகுதி, செயப்படு பொருள் விகுதி, கருவிப் பொருள் விகுதி, உடைமைப் பொருள் விகுதிகளோடு கூடி ஒரு சொல்லாய்ப் பகா நிலைக் கிளவிகளாகவும் வரும். எடுத்துக்காட்டும் விளக்கமும் - மலர் - மல் + ஆர் - மல் = வளம் + தேன். ஆர்தல் - நிறைதல். தேன் நிறைந்திருப்பது என்பது பொருள். வானம் - வான் + அம் = மேலாக உயர்ந்து விளங்கும் விண்ணிடம். குருவி, குரு+வி. நிறத்தையுடையது. குரு - நிறம். வி - உடையது. குருவி. இது குரீஇ எனத் திரிந்தும் வரும். மணம். மண் + அம் = மணம். மண் - நாற்றம். அம் - இனிமை. இனிய நாற்றம் என்பது பொருள் மண் = கலத்தல். அம் - சிறப்பு. சிறப்பாகக் கூடுதல் (திருமணம்) என்பதும் பொருளாகும். கடல். கட+அல்= கடத்தற்கரிய நீர்ப்பரப்பு என்பது பொருள். அன்னை - அன் + ஐ. அன் = அன்பு. ஐ = உடைமை. அன்புடையவள். தாய் என்பது பொருள். பறவை. பற+ஐ=பறத்தல். மேல் எழுதல். ஐ-செயப்படு பொருள்விகுதி. பறத்தலைச் செய்யும் புள் என்பது பொருள்.

சில ஈரெழுத்துச் சொற்கள் திரிந்து மூவெழுத்துச் சொற்களாகும். கனா - கனவு. சுறா - சுறவு. அரா-அரவு எனவரும். இவையெல்லாம் பகாநிலைச் சொற்களாகவே கொள்ளப் பெறும். சில சொற்கள் இருசொற்கள் இணைந்து ஒருசொல்லாகப் பொருள்தரும். கடவுள் கட+உள். பிரபஞ்சத்தை இயக்குவது என்பது பொருள். புல்+வாய்= மான். மென்மையான வாயினையுடையது. கடுவாய் - கடிய வாயினையுடையது ஒட்டகம் முதுகு இரண்டாக ஒட்டிய உடம்பையுடைய விலங்கு என்பது பொருள். மற்றும் சுட்டுப் பெயர் பொருட் பெயர் தொழிற் பெயர்கள் பால்காட்டும் விகுதிகளோடு கூடி அவன் இவன் மகன்

மகள் தமிழன், வடுகன், ஊரன், மலையன், சேர்ப்பன், கண்ணன், பொன்னன், ஆசிரியன் எனப்பலவாக வரும்.

அகப் புணர்ச்சியாக நிறைந்த விகுதிகளால் உட்பிணைப்புச் சொற்கள் பின்னொட்டாகிய விகுதிகளால் தொடர்மொழிப் பொருளை உணர்த்தி வரும். இவ்வகைச் சொற்களை வடநூலார் 'தத்தி தாந்தம்' என்பர். அவற்றைத் தத்தித பதங்கள் என்பர். சில எடுத்துக் காட்டுக்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ஆரியல் | - | அரி - நெருப்பு நெருப்பை வழிபடுபவர் ஆரியர் |
| ஆயிரம் | - | ஆயிர் நுண்மணல் (நூறு - துகள்) பத்து நூறுகளைக் கொண்ட எண். |
| கொண்டல் | - | குணக்கிலிருந்து வீசும் காற்று |
| கோடை | - | குடக்கிலிருந்து வீசும் காற்று |
| தென்றல் | - | தெற்கிலிருந்து வீசும் காற்று |
| வாடை | - | வடக்கிலிருந்து வீசும் காற்று |
| காலம் | - | கால் = கலித்தல் - நகர்தல். இடையறாது கலித்துச் செல்வது |
| மாதம் | - | மதி = நிலா, மதியால் அளவிடப்படும் முப்பது நாள் கொண்டது |
| சாகாடு | - | (வண்டி) சகடுகளால் உருண்டு செல்வது (சகடு = சக்கரம்) |
| காளை | - | களித்தலைச் செய்யும் பருவம் களிக்கும் தன்மையுடையது. |
| பாரதி | - | (ஓடம்) நீரிற்பரவிச் செல்லும் ஓடம் |
| பாணன் | - | பண்களை இசைக்கும் தொழில்புரிபவன் |
| மருதி | - | மருத நிலத்தில் வாழ்பவள் எனவரும் |

தத்திதாந்த இலக்கணம்பற்றி எழுத்துப்படலத்துள் விளக்கப் பட்டது. ஆதலின் பிறவிளக்கங்களை ஆண்டுக்கண்டு கொள்க.

இனி நடந்தனன், நடக்கின்றான். நடப்பான், நடந்து, நடந்த, நடந்தேன், நடமின் எனவரும் வினைச் சொற்கள் ஒரு பொருளே தருதலின் ஒருமொழியாயினும் காலம், பால், இடம், உடன்பாடு, எதிர்மறை என்னும் பொருள்களைத் தரும் உறுப்புக்களோடு கூடி நிற்றலின் பகுநிலைச் சொல் என இலக்கண நூலார் கூறுவர். உறுப்புக்கள் புணர்ந்து ஒரு சொல்லாக நிற்பனவற்றை வடநூலார் 'அகச் சந்தி' என்பர் ஒரு சொல்லாக்கப் புணர்ச்சி என்பது தமிழ் மரபு.

தமிழ்மொழி வினைச்சொல்லாக்கம் பற்றித் தொல்காப்பியம் வினையியலுள் அதன்பாகுபாடுகளையும் முற்றெச்சங்களையும் விகுதிகளையும் கூறுகின்றது. புணரியல் உரியியல் வாயிலாகப் பகுதிகளை உயத்துணரச் செய்துள்ளது. கால இடைநிலைகளை விரித்துக் கூறவில்லை. இடையியலுள் குறிப்பாக உணர்த்திச் சென்றது.

மொழியின் பயன் அகமும் புறமுமாகிய மக்கள் வாழ்க்கை நிலையால் அறம் பொருள் இன்பம் என்னும் பேறுகளையடைய உதவுவதேயாகலின் அவைபற்றிய படைப்பிலக் கணங்களையும் இலக்கிய ஆக்கங்களையுமே விரித்துக் கூறுகின்றது. கிளவியாக்கத்துள்ளும் எச்சவியலுள்ளும் வெளிப்படையும் குறிப்புமாகச் சொற்கள் பொருள்தரும் நுணுக்கங்களை விரித்துக் கூறுகின்றது. தனிச்சொல்லாக்கம் பற்றி விரித்துக் கூறவில்லை.

வடமொழி வேதங்களும் மந்திரங்களும் ஒரு வகையாப்பு முறையில் அமைந்திருத்தலானும், அவை ஓசை ஒலிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளமையானும் தனிச்சொல்லாக்கம் பற்றியவிரிந்த இலக்கணம் வடமொழிக்கு இன்றியமையாததாக அமைந்தது. அம்முறையில் பாணினி முனிவர் அட்டாத்தியாயீ என்னும் தனது வியாகரண நூலைச் செய்தார். அதை ஒட்டிப் பாலி மாகதி மொழிகளிலும் இலக்கண நூல்கள் தோன்றின. இவ்விலக்கணக் கோட்பாடுகளில் பல தமிழில் இயல்பாகவே அமைந்துள்ளமையைக் காணலாம்.

## தமிழ் மொழியில் தனிச் சொல்லாக்கம்

தமிழில் எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் வழங்கப் பெறும் தனித்தமிழ்ச் சொற்கள் இரண்டு வகையில் ஆக்கம் பெற்றனவாகும். (1) நிறை உரிச் சொற்களாலும், நிரம்பப் பெறாதகுறையுரிச் சொற்களாலும் அமைந்த முதனிலைச் சொற்கள். (2) தொகை மொழி, தொகைச் சொற்கள் சுருங்கியும் மருவியும் உட்பிணைந்தும் திரிந்தும் அமைந்துள்ள முதனிலைச் சொற்கள்.

தமிழில் ஓசை எழுத்துக்கள் முப்பத்து மூன்று உள உயிரும் மெய்யும் இணைந்த வரிவடிவு 216. அவற்றுள் மொழிக்கு முதல் வருவன, இறுதியில் நிற்பன, இடையே இணைந்து வருவன இவை இவை என்னும் வரையறை உண்டு இவை பற்றிய நெறி முறைகள் எழுத்துப்படலத்துள் விரிவாக விளக்கம் பெற்றன.

அம்முறையில் உயிரெழுத்துப் பன்னிரண்டும் தனித்துத் தனிமொழியாக வரும். உயிர் மெய்யுள் சில தனித்து வரும். அவை வருமாறு:

**அ, இ, உ, எ, ஒ, ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, கா, கூ, கை, கோ, கௌ, சா, சீ, சே,சோ, தா, தீ, து, தூ, தே, தை, நா, நீ, நே, நை, நொ, பா, பீ, பூ, பே, பை, போ, மா, மீ, மூ, மே, மை, மோ, யா, வா, வீ, வே, வை, வௌ** என்பவை ஓரெழுத்தொரு மொழியாக வரும். இவற்றோடும் மொழிக்கு முதலாக வரும் ஏனையவற்றோடும் புள்ளிமெய்களும் உயிர் மெய்களும் இணைந்து ஈரெழுத்தொரு மொழிகள் வரும். சில இரண்டு எழுத்துக்கு மேல் தொடர்ந்து வரும். [முதல் நிலைச் சொல் அட்டவணை காண்க].

உயிர்மெய்களுள் மொழிக்கு முதலாக வரும் தொண்ணூற்றாறு எழுத்துக்களின் பின் **க், ங், ச், ட், த், ப், ற்** ஏழும் ஓர் எழுத்துடன் இணைந்து மொழியாவதில்லை. ஏனைய ஞ்ண்ந்ம்ன்ய்ர்ல்வ்ழ்ள் என்பன இணைந்து மொழியாகும். மொழி முதல் எழுத்துக்களின் பின் சில உயிர்மெய்கள் இணைந்து மொழியாகும்.

ஈரெழுத்தொரு மொழியாக நிறைந்தும் நிறையாதும் நிற்கும் சொற்களின்பின் நிற்கும் புள்ளிமெய்கள் உயிர்வரின்

சில இரட்டியும் சில இரட்டாமலும் ஆக்கப்பெறும். இரட்டாத வழி ஈரெழுத்தொரு மொழியாகவும், இரட்டியவழி இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழியாகவும் ஆக்கம்பெறும். புள்ளியீற்று ஈரெழுத்தொரு மொழிகளின் பின் உயிர்வரின் சில கெடும்; சிலதிரியும்; சில இயல்பாகும்.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

உயிருள் முதல் எழுத்ணைதயும் மெய்யுள் முதல் எழுத்தையும் இணைத்தால் 'அக்' எனவரும். இதற்குப் பொருளில்லை. ஆதலின் இது நிரம்பா உரிச்சொல் எனப்படும். அக் என்பதனோடு உயிர்களை இணைத்தால் அக, அகா, அகி, அகீ, அகு, அகூ, அகெ, அகே, அகை, அகொ, அகோ, அகௌ எனவரும். இவற்றுள் அகை என்பது மட்டும் நிரம்பிய உரிச்சொல்லாகும். (அகைதல் - தழைத்தல்) ஏனைய குறையுரிச் சொற்களாம். அக் என்பதன்பின் உயிர்மெய்யைச் சேர்ப்பின் அக்க, அக்கா, அக்கி, அக்கீ, அக்கு, அக்கூ, அக்கெ, அக்கே, எனவரும். அக்கை என்பது மட்டுமே தனிச்சொல்லாகப் பொருள் தரும். அக்கா - அச்சோலை. அக்கோ = அவ்வரசன் என இவை இருசொல்லாக நின்று பொருள்தரும் அக்கா (தமக்கையே!) என்பது விளிப்பெராகித் தனியே வரும். இங்ஙனம் பிற உயிர்மெய்களைச் சேர்க்குமிடத்தும் சில பொருள் தரும், சில தாரா. (அட்டவணை காண்க.)

இனி அ என்பதனோடு ண் என்னும் புள்ளி மெய்யைச் சேர்ப்பின் அண் எனவரும். இதுமேல் இடம், மேல், உயர்வு, நெருக்கம் என்னும் பொருள்களைத் தரும். ஆதலின் இது நிரம்பிய உரிச் சொல்லாம். அஃதாவது நிறை உரிச்சொல்லாக, பெயர்க்கும் வினைக்கும் முதனிலையாக நிற்கும். இதனுடன் உயிர் எழுத்துக்களைச் சேர்ப்பின் சில இரட்டும். சில இயல்பாகி அண்+அ = அண - தலையை மேல் தூக்கல். அண்ணா - வாய் திறத்தல். அண்+இ = அணி - அணிகலன். அண்ணி - அண்ணன் மனைவி, தலைவி. அண்+உ= அணு - சிறுதுகள். அண்ணு - நெருங்கு. அண்+ஐ=அணை - மதில்நிலை, அணைத்துக் கொள்ளல் எனப் பொருள் தரும்.

இங்ஙனமே அல் என்பது ஒரு நிறை உரிச்சொல் அதனோடு உயிர்கள் சேரின் அல, அலி, அலை எவைும், அல்லி, அல்லா(கு) அல்லை எனவும் விகுதி சேரின் அலன் அல்லேன் அல்லேம் அல்லி எனவும் பல பொருளில் வரும்.

இரண்டு இணைச் சொற்கள் சேர்ந்து மூன்றெழுத்தாகச் சில சொற்கள் ஆக்கம் பெறும், சில நாலெழுத்தாகவே நிற்கும்.

புல்+நல் = புனல் = புல்லுக்கு நலம்தரும் நீர்.
கன்+அல் = கனல் = இனிமை தாராதது - நெருப்பு.
கன்+நல் = கன்னல் = இனிமையுடையது - கரும்பு.
தண்+நீர் = தண்ணீர்= குளிர்ந்த நீர் எனவரும்.

சில தொடர் மொழிகள் இடைகுன்றி ஈரெழுத்தொரு மொழியாக வரும்: பார்வை - பாவை, புல்லி - புலி, செவ்வி - செவி என வரும். சில இடைகுறைந்து முதல் நீண்டுவரும். அகழி - ஆழி. வரல் - வால். நுவல் - நூல் எனவரும்.

சில தொழிற் பெயர் நீண்டு பெயராக வரும்: கொல் - கோல், வெல் - வேல், பெறு - பேறு எனவரும். கண் - காண் என வினையாக வரும். தொய்யல் - தோல் எனவும், விரவல் - வேர் எனவும் திரியும். இங்ஙனம் சொல்லாக்கம் பல நிலைகளாக அமையும்.

## எழுத்துக்களின் பொருளாற்றல்

தமிழ் எழுத்து ஒவ்வொன்றற்கும் சிறப்புப் பொருள் தன்மையுண்டு, சில தெளிவாகப் புலப்படும். சிலவற்றை ஊன்றி நோக்கின் புலனாகும். உதாரணமாக நகர ஒற்று நீர்மத் தன்மையை உணர்த்தும். இதனை நா, நீர், நதி, நெஞ்சு, நேயம் என்பவற்றிற் காணலாம். னகர ஒற்று இனிமைச் சுவை யுணர்த்தும். இதனைக் கன்னல், கனி, கனா, கன்னி, தென்றல், மன்றல், அன்னை என்பவற்றிற் காணலாம். பிறவற்றைப் பின்வரும் நிரலிற் கண்டு கொள்க.

மொழி ஆய்வாளர் சிலரும் இலக்கண ஆய்வாளர் சிலரும் இதனை ஆய்ந்து காணவில்லை. எழுத்து ஒவ்வொன்றற்கும் சிறப்பானதொரு பொருள் தன்மை உண்டென்பதைத் தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். அவர் உரை வருமாறு:-

தொல்காப்பியர் முதலாய நூலாசிரியன்மார் எழுத்துக்களை எனைத்து வகையான் உணர்த்தினாரோ எனின்? எட்டுவகையானும் எட்டிறந்த பல்வகையானும் உணர்த்தினார் என்பது. அவற்றுள் எட்டுவகையாவன: எழுத்து இனைத்து என்றலும், இன்னபெயரின என்றலும், இன்ன முறைமைய

என்றலும், இன்ன அளவின என்றலும், இன்ன பிறப்பின என்றலும்? இன்ன வடிவின என்றலும், இன்ன தன்மையன என்றலுமாம். அவற்றுள் தன்மையும் வடிவும் ஆசிரியர் உணருவார் எனினும் நமக்கு உரைத்தல் அருமையின் ஒழிந்த ஆறுமே இதனுள் உணர்த்தினர் “என உணர்க” என அவர் வரைந்துள்ளமையான் எழுத்து ஒவ்வொன்றற்கும் ஒரு தன்மை (குணம்) உண்டு என்பதை அறியலாம். நச்சினார்க் கினியரும் அவர் உரையை அப்படியே தழுவிக் கூறியுள்ளமையான் அவர்க்கும் இஃது உடன்பாடே என்பது நன்கு விளங்கும்.

அவர் கூறியாங்குச் சொற்களை ஆழ்ந்து நோக்கின் ஒவ்வொரு எழுத்தின் தன்மைகளைப் பின்வருமாறு காணலாம். உயிர்களுள்,

அ,இ,உ,எ - இவற்றிற்குப் பொருளைச் சுட்டி உணர்த்தும் தன்மையும்

ஆ,ஈ,ஊ,ஏ,ஓ - இவற்றிற்கு மெய்ப்பாட்டுத் தன்மைகளும்

எ,ஏ,ஓ - இவற்றிற்கு வினாவும் தன்மையும்

ஒ - என்னும் உயிர்க்கு ஒப்புத்தன்மையும்

ஔ - என்னும் உயிர்க்குச் சுருங்குதல் தன்மையும்

அமைந்திருப்பதைக் காணலாம். மெய்களுள்,

க் - வன்மை, திண்மை எனும் கடினத் தன்மைகளும்

ங் - மென்மைத் தன்மையும் அயர்வுத் தன்மையும்

ச் - மூச்சொலித் தன்மையும் அமைதித் தன்மையும்

ஞ் - மெலிவும் எச்சத் தன்மைகளும்

ட் - ஆரவாரத் தன்மையும் தொழிற்றன்மையும்

ண் - மணம், நாற்றம் ஆகிய தன்மைகளும்

த் - உறவு, தொடர்பு, உடைமைத் தன்மையும்

ந் - நீர்மம், கூர்மைத் தன்மைகளும்

ப் - பரவல், விரிதல், தோன்றல் தன்மைகளும்

ம் - அழகு, மென்மை இசைத் தன்மைகளும்

ய் - இயக்கம், வெளிப்பாடு ஆகிய தன்மைகளும்

ர் - உரசல், குளிர்ச்சி, ஓசை ஆகிய தன்மைகளும்

ல் - ஒலித்தன்மையும் வினைத்தன்மைகளும்

வ் - நைவு, பகை, இளைப்புத் தன்மைகளும்

ழ் - குழைவுத் தன்மையும், ஒழுகல் தன்மையும்

ள் - களி, இளக்கம், மென்மைத் தன்மைகளும்

ற் - உறுதித்தன்மையும்

ன் - இனிமை, கனிவு, நிலைபேறு ஆகிய தன்மைகளும் அமைந்திருத்தலைச் சொற்களில் காணலாம். இவை பிற எழுத்துக்களோடு கலந்து வருமிடத்து அவற்றின் தன்மைகளோடு கலந்து வரும்.

சில சொற்கள் சொல்லாக்க விகுதிகளோடு கூடி நிற்குமிடத்து உருவம் திரியும்: பெய்சு = பேச்சு. பண்+து = பாட்டு, கால்+து = காற்று. ஆள்+தூ = ஆடூஉ. மகள்+தூ = மகடூஉ. மூள்+து = மூடு, மூட்டு எனவரும். சில சொற்கள் ஈறுகெடும் கரும்புல் = கரும்பு. தம்பின் = தம்பி. செம்பொன் = செம்பு இரும் பொன் = இரும்பு எனவரும்.

## சொல்லும் பொருளும் விரிந்து பலவாதல்

ஒரு மொழியில் பல்லாயிரக் கணக்கில் சொற்கள் அமைந்திருப்பினும் எழுத்துக்கள் மிகச்சிலவாகவே இருக்கும். தமிழில் முப்பத்து மூன்று எழுத்துக்களே இருப்பினும் அவை இணைந்தும் தொடர்ந்தும் சிலநூறு அடிச்சொற்களை உருவாக்கும். அவ்வடிச் சொற்கள் பலகோணங்களில் பலப்பலவாக விரியும். ஓர் அடிச் சொல்லிலிருந்து பல சொற்கள் விரிவதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் காணலாம்.

### வாய்

வாய் என்பது முகத்தில் உள்ளதோர் உறுப்பு. உண்ணுதலும் உமிழ்தலும் பேசுதலும் கௌவுதலும் இதன்செயல். வ் - என்னும் மெய்யொலி உதட்டைக் குறித்து நிற்கும். 'இவ்' என ஒலிக்குமிடத்துக்கீழிதழ் மேல்வாய்ப்பல்லைப் பொருந்தி நிற்கும். இது இசை அடிப்படையில் எழுந்த குறிப்பொலி. ஆ என்னும் இசை (உயிர்) எழுத்து ஈரிதழ்களையும் பிரித்து அகன்று ஓங்கிய துளைபோல அமையும். இவ்இரண்டெழுத்தும் (வ்+ஆ=வா) வா என இணைந்து வினைமுதற்பொருள் தரும். இகர விகுதியோடு கூடி வாயி? என்றாகும் அளபெடையாகவன்றி உயிரெழுத்துச் சொல்லிறுதியாக நில்லா. ஆதலின் 'இகரயகரம் இறுதி விரவும்' என்னும் விதிப்படி "வாய்" என ஆக்கம் பெற்றது.

வாய் என்பதன் ... புறத்தேயிருந்து ஒரு பொருள் உட்புகவும் உள்ளேயிருந்து வெளிவரவும் அமைந்த வழி, (துளை,

துவாரம்) என்பது பொருளாக அமைகிறது. வாய் தரும் பொருட்பயன் காரணமாக உள்ளிருந்து வெளியே வரவும் வெளியே இருந்து உட்புகவும் அமைந்த உறுப்பு அல்லது வழி வாய் எனப்படும். வீடு முதலியவற்றில் அமைந்த வாய் இல்+வாய் = இவைமுன்பின்னாக மாறி வாயில் என ஆக்கம் பெற்றது. ஒருவரிடத்திலிருந்து ஒருவர் ஒருவரிடம் தூதுவராகச் செல்வோர் வாயில் எனப்படுவர். ஒரு கருத்தை அல்லது காரியத்தை ஆராய அல்லது காணத்துணைபுரியும். கருவி வாயில் எனப்படும். அத்துளை முதலாகவும் மூலமாகவும் இருத்தலின் வாயில் என்பது காரணம் என்னும் பொருளையும் தரும்.

வாய் இரண்டு செயல்களைச் செய்கின்றது. ஒன்று உணவு முதலியவற்றை உட்கொள்ளுதல் மற்றொன்று பேச்சினை வெளிப்படுத்துவது. அவ்வாற்றான் தேக்கி வைக்கப்பட்ட நீர் வெளிவரும் வழி மடைவாய் எனப்படுகின்றது. அவ்வாயினின்று காலாக வழிந்து செல்வதால் அது வாய்க்கால் எனப்படுகின்றது. மடை நீரைக் காலுதலாலும் அதற்குக் கால்வாய் என்று பெயர், வாயாகிய அலகை அசைத்துக் கரைதலால் காக்கைக்கு வாயசம் (வாய்+அசைத்தல்) என்று பெயர் அமைந்தது. (இது தமிழ்ச் சொல்).

வாய் உணவை உட்கொண்டு தனதாக்குதலால் ஒரு செயல்புரியச் சூழ்நிலை கைகூடுதலை வாய்ப்பு, வாய்தல் என்று கூறுவர். வாய்தல் தனக்கு வயப்படுதலாதலின் தன்கைப் படுதலை வயமாதல் என்பர். பகைவர்களை வென்று அவர்களின் உடைமைகளை வயப்படுத்தலால் போர் மறவர் வயவர் எனப்படுகின்றனர். வயப்படுத்தல் தனது வலிமை காரணமாக நிகழ்தலின் 'வய' என்பது வலிமை உணர்த்தும் உரிச் சொல்லாக அமைந்தது. வலிமையாற் பெற்ற வெற்றி வயம் எனலாயிற்று. அவ்வெற்றியால் புகழ் விளங்கித் தோன்றுதலின் விளக்கம் வயங்கல் எனப்பட்டது.

வயத்தால் வாய்த்தது வெற்றி. அது வாகை (வாய்கை) எனப்பட்டது. மரப்பெயர் வாகை என்பதற்குப் பொருள் கப்பும் கிளையும் வகைப்பட்டு நிற்றல் என்பது. வகை வாகை எனத் தத்திதமாக நீண்டமைந்தது. வாயின் தொழில்களுள் ஒன்று பேசுதல். வாயின் செயல் வாய் செய்கை - வாசகம் என ஆக்கம் பெற்றது. வாய்+செயல்=வாசித்தல் என ஆக்கம் பெற்றது.

வாய்தல் கண்கூடான மெய்ம்மை ஆதலின் வாய்+தன்மை= வாய்மை எனப்பட்டது. மெய்ம்மையாதலை "வாயாகின்று" என்பது இலக்கிய வழக்கு. சொல் என்பது வாயாற் கூவப்படுதலின் வாய்+கூ = வாக்கு என்றாயிற்று. வாய்+கூ+இயக்கம் = வாக்கியம் வாக்கால் இயங்குவது என்பது பொருள். எனவே வாசகம், வாக்கியம் என்பவற்றிற்கு வாய் அடிச்சொல் என்பதும் அவை தமிழ்ச் சொற்கள் என்பதும் விளங்கும்.

வாய் என்பது உட்புகு தலையும் வெளிப்படுத்தலையும் செய்யும் கருத்தாலமைவதால் அச்செயல்கள் நிகழாமையை உணர்த்த வா என்னும் நெடிலைக் குறிலாக்கி வய் என ஆக்கம் செய்யப்பட்டது. வய் என்பது ஓரெழுத் தொரு மொழியாக ஆக்கம் பெறுமிடத்து வை என்றாகும். வை என்பதற்கு இருத்தல், தங்குதல், அமர்த்தல், கடுஞ்சொல் என்பவை பொருளாகும். கை,தை,நை,மை, என்பனவும் இவ்வாறு ஆக்கம் பெற்றவையே ஆகும். வயிறு (வய்+இறு) என்னுமிடத்துத் திரியாமல் நிற்பதையும் காணலாம்.

வைதல் கடுஞ்சொற் கூறுதல் (வய்+செய்=வசை) வை என்பது வாய் என்னும் மூலப் பொருளைவிடாதிருத்தலைக் காணலாம். வினையடி உரிச்சொற்களொடு தல் என்னும் தொழிற் பெயர் விகுதி சேருங்கால் எடுத்தல் படுத்தல் நலிதல் என்னும் ஓசை வேறுபாட்டால் பொருள் வேறுபடும். எ.டு: தொடுதல் - தொடுத்தல், வருதல் - வருத்தல், கடிதல்-கடித்தல், கருதல் - கருத்தல் எனவரும்.சில தன்வினையும் பிறவினையுமாக வேறுபடும். எ.டு: பொருந்தல் - பொருத்தல், திரிதல் - திரித்தல், சேர்தல் - சேர்த்தல் எனவரும்.

வைத்தல் என்பது உள்ளிருத்தல் என்னும் பொருளுடையதாதலின் இருதிணைப் பொருள்களையும் தன்னுள் உள்ளும் புறமுமாகக் கொண்டிருத்தலின் மண் உலகம் வையம் - வையகம் எனப்படுகின்றது.

வாய் என்பது துளை - துவாரம் முழை என்னும் பொருளையுடையதாதலின் புறக்காழும் உள் துளையும் உடையவற்றைப் புல் என்பர். வை என்பது புல்லிற்குப் பெயரானமைக்கு காரணம் இதுவேயாகும். வைக்கோல் என்பது அம்முறையில் அமைந்த[illegible]ாகும்.

வாய் பொருள்கள் உட்புகுவதற்கு முற்பகுதியாக இருத்தலின் ஒரு பொருளின் முனை வாய் எனப்படுகிறது. மரத்தைச் செதுக்கும் கருவி வாய்ச்சி எனப்படும். வேல் அம்பு - வாள் ஈட்டி முதலியவற்றின் முனைப்பகுதி கூர்மையுடையதாகலின் வை (வாய் -வய்-வை) எனப்படுகின்றது. வைத்தல் என்பது இடத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தலின் இடம் - வயின் (வை+இன்) என்றும் அவ்வாய் இவ்வாய் என்றும் வழங்கப்படுகின்றது. இருள் தங்கியிருக்கும் பொழுது வைகுறு - வைகறை ஒளி தங்கியிருக்கும் நாள் பொழுது வைகல் என்றும் வழங்கப் பெறுகின்றன.

எனவே தமிழ் மொழியின் சொல்லாக்க மரபுகளை விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறவற்றை எனது "மொழியாக்க மரபுகள்" என்னும் நூலிற் கண்டு கொள்க. பிற்சேர்க்கையுள் சில தரப்பட்டுள்ளன.

## சொல்லாக்கத்திற்குரிய ஏதுக்கள்

மொழி - சொல் என்பவை மக்களால் மக்களுக்காகப் படைத்துக் கொள்ளப்பட்டதொரு அறிவுக் கருவியாகும். அறிவு, அறிதல், அறிவித்தல் என்பவற்றிற்கு அடிப்படை உணர்வாகும். உணர்வு என்பது உலகத்தில் மண்ணிலும் விண்ணிலும் தோன்றி நிகழும் காட்சிப் பொருள் கருத்துப்பொருள்களின் வடிவமும் அவற்றின் இயக்கமும் அவற்றால் மக்களுக்கு ஏற்படும் இன்பதுன்பப் பயன்களும் பற்றிப் புலன்வழியாக மனத்தினை அடைந்து உடம்பாலும் ஓசை ஒலிகளாலும் உரையாலும் வெளிப்படும் அருவுருவப் பொருளாகும்.

எனவே உணர்வு என்பது பொருள்களைப் பற்றியது எனவிளங்கும். அப்பொருள்களைப் பற்றிய கருத்துக்களைப் பிறர் உரைவாயிலாக உணர்வதும் தம்உரை வாயிலாக உணர்த்துவதும் வேண்டுமிடத்து அப்பொருள்களை மொழியமைப்பின் கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவர வேண்டியிருத்தலின் அப்பொருள்களையும் அவற்றின் இயக்கங்களையும் எழுத்தானாகிய சொற்களுக்குள் வருமாறு வரையறை செய்து கொள்வதே மொழியிலக்கணமாகும். அதனான் பொருள்களையும் அவற்றின் இயக்கங்களையும் திணை, பால், இடம், காலம், வேற்றுமை என்னும் நோக்கிற் பாகுபாடு செய்தனர் நூலோர்.

## பொருளும் பாகுபாடுகளும்

உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களின் கலப்பினால் இயற்கை நியதியாக உருவாகி விளங்கும். புல், பூண்டு, புள், விலங்கு முதலாகிய உயிர்கள் முதல் மக்களாகிய ஆறறிவுயிர் ஈறாக உள்ள உயிரினங்களும் மண்,மலை, கடல், நாடு, காடு, நீர், நெருப்பு, காற்று, வானம், கதிர், மதி, உடுக்கள் முதலிய பொருள்களும் அடங்கியதொரு உள்பொருளாகும்.

அவற்றுள் மக்களினம் மட்டுமே சிந்திக்கும் ஆற்றலும் பேசும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றுள்ளது மக்கள் முக்காலங்களையும் உணரும் சிந்தனை வலிமையால் இயற்கைப் பொருள்களைத் தமது வாழ்விற்காகப் பயன்படுத்திக் கொள்வதுடன் அவ்வியற்கைப் பொருள்களைக் கொண்டே செயற்கைப் பொருள்களை உருவாக்கிப் பயன் துய்த்து வருகின்றனர். அவ்வாற்றான் பொருள்கள் காட்சிப்பொருள், கருத்துப்பொருள், உருவப்பொருள், அருவப்பொருள், அருவுருவப் பொருள், உள்பொருள், இல்பொருள் என வகைப்படுவனவாயின

இயற்கைப் பொருள்களுள் மக்களினமும் ஒன்றாகும். எனினும் பிற உயிரினங்களினின்றும் மக்கள் பெரிதும் வேறுபட்டுச் சிறக்கின்றனர். காரணம் பலவெனினும் சிறப்பானவை சிந்தித்தல், பேசுதல், பேச்சுக்குவரிவடிவம் கற்பித்து எழுதுதல், ஒவ்வொரு பொருளையும் பகுத்தறிதல், இயற்கைப் பொருள்களைக் கொண்டு செயற்கைப் பொருள்களைப் படைத்துக் கொள்ளுதல், ஆன்மீக உணர்வால் தெய்வங்களைத் தத்துவ நோக்கில் உருவாக்கி இன்புறுதல், வழிபாட்டு நெறிகளை வகுத்தொழுகுதல், ஆடவரும் பெண்டிரும் கூடிவாழும் வாழ்க்கையிலும் சமுதாய அமைப்பிலும் உறவுமுறையிலும் ஓர் ஒழுங்கினை அமைத்துக் கொண்டு அதற்கு ஏற்ப ஒழுகுதல், வாழ்தல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டு நாடொறும் உயர்ந்து வருதலாம். பிற உயிரினங்களுள் சிலவற்றிற்கு மன அறிவு உண்டெனினும் அவற்றிற்கு அறம், நெறி, ஒழுக்கம், ஆட்சியமைப்பு முதலிய ஒழுகலாறுகள் வாயாமையின் மக்கள் அவற்றினின்றும் ஒழுகலாறுகளால் வேறுபடுகின்றனர். இவ்வொழுக்கமே மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் உள்ள தலையாய வேறுபாடாகும்.

## திணை - பால் பகுப்புக்கள்

மேற்கூறியவாற்றான் தமிழ்ச் சான்றோர்கள் உலகப் பொருள்களை மக்கள் - மக்கள் அல்லாத பிறபொருள்கள் என இரண்டே பிரிவாக முதற்கண் வகுத்தனர். வாழ்க்கை ஒழுக்கம் காரணமாக அமைதலான் அதற்குப் பெயர் குறியீடு - திணை என அமைத்தனர். (திணை - ஒழுக்கம்.)

திணை என்னும் சொல்லுக்குச் சாதி,குலம்,குடி,நிலம், பொருள் ஒழுக்கம் எனப் பலபொருள் உண்டு. ஈண்டு இலக்கணக் கலைச்சொல்லாக நிற்கும் திணை என்பது அறம், ஒழுக்கம், கடமை என்பவற்றை வகுத்து அவற்றின் வழி ஒழுகும் ஒழுக்கம் என்னும் ஒருபொருளையே கொண்டுள்ளது. இவ்வொழுகலாறு மக்களினத்திற்கு மட்டுமே அமைந்துள்ளமையின் திணை என்பது அவ்வொழுக்கமாகிய பொருளை உடைய மக்களினத்தையே வரைந்து சுட்டும் முறையில் உயர்திணை எனப்பட்டது. தொல்காப்பியர் "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" எனத் தேற்றேகாரம் தந்து கூறுகின்றார். அம்முறையில் திணை என்பது இனம் அல்லது சாதி என்னும் பொருளை உணர்த்துகின்றது.

மக்களை உயர்திணை என வகுத்தமையின் அம்மக்கட் பண்பமையாத பிற, உயிர்ப் பொருள் உயிரில் பொருள் யாவும் அஃறிணை (அல்+திணை) எனப்பட்டன.

"உயர் திணை" என்பது வினைத்தொகை மொழி, உயர்ந்த திணை உயரும் திணை எனவிரியும். மக்களினம் காலந்தொறும் கல்வி, அறிவாற்றல், படைப்பு, ஆட்சி நெறிமுறைகளால் உயர்ந்து வருதலின் உயரும் திணை எனப்பட்டது. இலக்கண நூலுரையாசிரியன்மார் பலர் உயர்திணை என்னும் தொகை மொழியைப் பண்புத் தொகையாகக் கொண்டனர். காரணம் அறிவியல் நோக்கற்ற நன்னூலாசிரியர் திணை என்பதற்குச் சாதி என்னும் பொருளை மட்டுமே கொண்டு "மக்கள் தேவர் நரகர் உயர்திணை மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" எனக் கூறிச் சென்றமையேயாகும்.

உலகத்துப் பொருள்களை உயர்திணை அஃறிணை எனப்பிரித்துணர்ந்த அறிவியற்கோட்பாடு தமிழிலக்கண அறிஞர்க்கு மட்டுமே உரியதாகும். உலகமொழிகளில் (வடமொழி உட்பட) இத்திணைப்பாகுபாடு இல்லை. வடமொழியில்

சேதனம் அசேதனம் என்னும் இலக்கணம் அறிவுடையவை அறிவில்லாதவை என்னும் பொருளில் அமைந்தனவாகும். எல்லா உயிர்கட்கும் அவை பெற்றிருக்கும் பொறி புலன்களுக்கேற்ப அறிவு உண்டு. மக்களுக்கு மட்டுமே பகுத்தறிவு உண்டு. உலகில் பெரும்பாலான மொழியிலக்கணங்கள் வரிவடிவ மொழியை அடிப்படையாகக் கொண்டவை; தமிழில் தொல்காப்பியர் காலம் வரை பொருளையும் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டமைந்தன. அதை மாற்றியவர்கள் வீரசோழிய ஆசிரியரும் நன்னூலாசிரியருமாவர்.

பொருள்களை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் படைத்து எழுத்திலும் பேச்சிலும் வழங்கும் மொழி தமிழ். அவ்விருவகை வழக்கினையும் ஆராய்ந்து பொருட்பெற்றி சிதையாமல் அறிவியல் நோக்குடன் வகுத்து நெறிப்படுத்துவது தமிழ் இலக்கணமாகும்.

பொருள்களின் இயற்கை நிலைகளைக் கருதலில் ஒப்புமையாக்கத்தான் சொற்களைப் படைத்துக் கொண்டு அச் சொற்களின் வடிவ அமைப்பு முறையில் ஆண் பெண் அலி எனப்பால்களை வகுத்துக் கொண்டு இலக்கணம் கூறுவது வடமொழி மரபாகும். ஏனைய இந்திய மொழிகட்கும் ஐரோப்பிய மொழிகட்கும் இஃதொக்கும்.

திராவிட மொழிக் குடும்பத்திற்குத் தாயாகிய தமிழ்மொழி மட்டுமே பொருள், பொருட்பண்பு, பொருள்களின் இயக்கம் என்னும் நோக்கில் சொற்களையும் தொடர்களையும் அவற்றின் இலக்கணங்களையும் ஆராய்ந்து உணர்த்துகின்றது. இவ்வடிப்படையை நன்கு உணர்ந்து கொண்டால்தான் தமிழ் மொழியின் எழுத்தாக்கம், எழுத்து வரையறை, மொழியாக்கம், மொழி அடிப்படையில் வரு பெறும் பெயர், வினை இடை உரி என்னும் சொல்லாக்கங்கள், பெயர்ப் பொருள்களின் வேற்றுமை நிலை, பெயர்ப் பொருள் வேற்றுமைப்படுத்தற்குரிய காரணம், வினைச்சொல், வினை என்பதன் பரந்த பொருள் நோக்கு, வினைப்பாகுபாடுகள், தொகை மொழியமைப்பு, வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள், வழாநிலை வழு, வழுவமைதி, தொடராக்கம், எழுவகைச் செய்யுள் அமைப்பு முதலியவற்றைத் திரிபின்றி உணர்தல் கூடும்.

தொல்காப்பியர் சொற்கள் இருதிணைப் பொருள்களினிடமாகத் தோன்றுமென்றும், அப்பொருள்கள்

உயர்திணைப் பொருள், அஃறிணைப் பொருள் என இருவகைப்படுமென்றும் அவ்வாற்றான் சொற்கள் பொருள் அடிப்படையில் உயர்திணைச் சொல், அஃறிணைச் சொல் என இருவகைப்படுமென்றும், அப்பொருள்கள் ஆண்மை பெண்மை பற்றியும், அலித்தன்மை பற்றியும், ஒருமைபன்மை பற்றியும், சொற்களின் வாயிலாக அறியும் நெறி இவை என்றும் கூறுகின்றார். அவை வருமாறு:

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே" (தொல்.சொல்.1)

"ஆடூஉவறி சொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே" (தொல்.சொல்.2)

"ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே" (தொல்.சொல்.3)

...னவாகும். இந்நூற்பாக்களின் செம்பொருள் உணராத ...ல் முதலாய சிலநூல்களும், ஒருசார் உரையாளரும் த...க்குத் தோன்றியவாறு கூறிச் சென்றனர். இவற்றின் ...பொருளை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

இம்மூன்று நூற்பாக்களான் பொருள்கள் உயர்திணை அஃறிணை என இருவகைப்படும் என்பதும், உயர்திணை ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல், பல்லோரறியும் சொல் எனப் பொருளின் தன்மைகளானும், எண் வகையானும், மூன்று வகைப்படும் என்பதும், அஃறிணை பொருட்டன்மைகளாலன்றி எண் வகையால் இருவகைப்படும் என்பதும் உணர்த்தப்படுகின்றன.

## உயர்திணையும் அதன் பிரிவுகளும்

உயர்திணையாவது மக்கட் சுட்டு. சுட்டு என்பதன் பொருள் மக்களாகக் கருதத்தகும் நிலையில் விளங்குவது என்பதாகும். அந்நிலை மக்களுக்குரிய குணங்கள் புலனறிவு உடம்பமைப்பு என்பனவாகும். எனவே மக்களுக்குரிய பண்புகள் புலனறிவு விளக்கத்துடன் காட்சிப் பொருளாகிய உடம்பொடு கூடி நிற்றல். அப்பண்புகளுடன் கூடி நிற்கும் பொருள் உயர்திணை என்பது.

இவ்விலக்கணத்தான் மக்கட் பண்பு கலந்து ஒருபொருளாக நில்லாமல் பண்பு, உயிர், உடம்பு, புலன், அறிவு முதலியவற்றைத் தனித்தனி ஒவ்வொரு பொருளாகக் கூறின்

அவை அஃறிணையின்பாற்படும். (தொல். சொல். 57, 58) மக்கட் சுட்டுடைய உயர்திணைப் பொருள் உடம்பமைப்பாலும் உணர்வுக் கூறுகளானும் இருவகைப்படும். ஆண்மைப்பண்பும் அதற்குரிய உடம்பும் உடையது ஆடூஉ (ஆடவன்) எனப்படும். பெண்மைப் பண்பும் அதற்குரிய உடம்பும் உடையது மகடூஉ. (பெண்டு) எனப்படும். இவற்றின் பன்மை பல்லோர் எனப்படும். அப்பொருள்களையுணர்த்தும் குறியீட்டுப் பெயர்களை அவற்றொடு இணைத்துக் கூறுமிடத்து அவை ஆடூஉ வறிசொல், மகடூஉ வறிசொல், பல்லோர் அறியும் சொல் எனப்படும். பிற்கால நூலாசிரியன்மார் இவற்றை முறையே ஆண்பால் பெண்பால் பலர்பால் எனக் குறியீடு செய்தனர். இக்குறியீடுகள் வடமொழி இலக்கணத் தாக்கத்தால் நேர்ந்தனவாகும். பால் என்பதற்குப் பகுப்பு, பிரிவு, வகை என்பன பொருளாகும்.

ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் என்ற அளவில் அவை ஒருமை என்பதும் பல்லோர் அறியும் சொல் என்ற அளவில் அது பன்மை என்பதும் விளங்குதலின் வடமொழியைப் போல எண் என்னும் ஒரு பிரிவைத் தமிழ் நூலார் கொள்ளவில்லை. பால் காட்டும் விகுதிகளே எண்களையும் காட்டுதலின் எண்களைக் காட்டத் தனியே விகுதிகள் வகுக்கப் படவில்லை. எனினும் அஃறிணைப் பொருட்பெயர்கள் ஒருமைக்கும் பன்மைக்கும். பொதுப்பட நின்று வினை முடிபுகளான் ஒருமை பன்மை காட்டும். வினைமுடிவு பெறாத நிலையில் அஃறிணை இயற் பெயர்களைப் பன்மைப்படுத்த ஒரே ஒரு விகுதியை மட்டும் வகுத்தனர். அது "கள்" என்னும் விகுதியாகும். பறவை, பறவைகள் எனவரும். இடைக் காலத்தில் இவ்விகுதி உயர்திணையிலும் பன்மை மேற்பன்மையாக வழங்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

மக்கள் இயற்கைப் பொருள்களின் அமைப்பாற்றலை நோக்கிச் சிந்தித்து ஆன்ம உணர்வினாற் படைத்துக் கொண்ட கருத்துப் பொருள் தெய்வம். தெய்வங்களுக்கு வடிவு இன்றேனும் தெய்வங்களின் அறிவுப்பகுதியை ஆணாகவும், ஆற்றல் (சக்தி) பகுதிகளைப் பெண்ணாகவும் உருவகம் செய்து ஒலி எழுத்துக்களுக்கு வரிவடிவம் கற்பித்துக் கொண்டமை போலத் தெய்வங்களுக்கும் வடிவம் கற்பித்து வழிபடுவாராயினர். அத் தெய்வங்களைச் சொற்களால் உணர்த்துமிடத்து எங்ஙனம் உணர்த்துவது எனச் சிந்தித்த தமிழ் இலக்கண நூலார் தெய்வங்களுக்கு இடப்படும் பெயர்க் குறியீடுகளின் இறுதிநிலை நோக்கி உயர்திணையுள்ளும் அஃறிணையுள்ளும் அடக்கினர்

தெய்வங்கட்கு மக்கட் பண்பினை ஏற்றி வடிவமைத்துக் கூறுமிடத்து உயர்திணைக்குரிய பால்கள் வாயிலாகக் கூறல் வேண்டுமென்று வரையறை செய்தனர். மக்கட் பண்பினை ஏற்றாமல் வாளா பரம்பொருள், தெய்வம் என்று கூறுமிடத்து அஃறிணைப் பால் முடிபு கொள்ளுதலின் தெய்வங்களை ஒரு திணைக்குள் அடக்காமல் இருதிணைக்கும் உரிய பால்களுள் அடக்கினர். மற்றும் மக்கள் உடம்பு சில பண்புகளும் பெற்று ஆண்மைத் தன்மை பெண்மைத் தன்மைகளுள் ஒன்றனை முழுமையாகப் பெறாமல் ஆண்மைத் தன்மையை இழந்து பெண்மையோடு திகழும் மக்கள் போலியரை ஒருதிணையுள் அடக்காமல் பொதுவாக நிறுத்தி உயர்திணைப் பெண்பாலுள்ளும் பால்காட்டாத அஃறிணையுள்ளும் அடக்கினர். அதனான் அவர்களுக்குப் பெட்டை என்னும் சொல்லடிப் படையில் பேடு எனப் பெயரமைந்து பெண்பால் விகுதி சேர்ந்து பேடி எனப்பெயர் ஆக்கம் பெற்றது. மற்றொரு பெயர் மகண்மா என்பது. இருதன்மையும் இல்லாதாரை அஃறிணையில் அடக்கினர். அலி என்பதற்கு ஆண்மையும் பெண்மையும். அற்ற பொருள் என்பது கருத்து. இதற்கு மற்றொரு பெயர் அழிதூ என்பதாகும். தூ என்பதற்கு வலிமை என்பது பொருள். வலிமை ஆண்மையைக் குறிக்கும். ஆண்மை அழிந்தது அழிதூ எனப்பட்டது. இவற்றைப் பற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கண நெறி வருமாறு :

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்" (தொல்.சொல்.4)

"ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிட னின்றே" (தொல்.சொல்.12)

"குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
வண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்"

(தொல்.சொல்.56)

இந்நூற்பாவில் உள்ள தன்மை திரிபெயர் என்பது ஆண்மையும் பெண்மையும் திரிந்த அலியைக் குறித்து நின்றது. மேலும்,

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன" (தொல்.சொல்.57)

என்றும் உணர்த்துகிறது. மற்றும் இவை ஈறு திரிந்தவழி உயர்திணையாக வருமென்பார்

"நின்றாங் கிசைத்தல் இவணியல் பின்றே" (தொல்.சொல்.58)

என்றும்,

"இசைத்தலும் உரிய வேறிடத் தான" (தொல்.சொல்.59)

என்றும் கூறுகிறார். அஃதாவது குடிமை ஆண்மை முதலிய சொற்களின் பொருண்மை உயர்திணைப் பண்புகளாயினும் அவை உடம்பொடு கூடாமல் நிற்றலின் பயனிலை பெறுங்கால் குடிமை நன்று, ஆண்மை நன்று, அரசு நன்று என அஃறிணையாகவே முடியும். உடம்பொடு கூடியுள்ளமையை உணர்த்தும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் விகுதிகளோடு கூடிக் குடியினன், குடியினள், குடியினர் எனவருமிடத்து குடியினன் நல்லன், குடியினள் நல்லள், குடியினர் நல்லர் எனவரும். ஏனையவும் இவ்வாறு விகுதிபெற்ற வழி உயர்திணையாகும். இவ்வாறே, காலம், உலகம் என்னும் சொற்களும் பால்காட்டும் விகுதியொடு கூடி வருமிடத்துக் காலன் வந்தான், உலகினர் வாழ்ந்தார் எனவரும்.

நன்னூலாசிரியர் சமண சமய நோக்கிலும், வரிவடிவ அடிப்படையிலும் நூல் செய்தார் ஆதலின் உருவகப் பொருள்களாகிய தேவர் நரகர் என்பவற்றை மக்களைப் போல அவர்கள் தேவர் உலகிலும் நரகர் உலகிலும் வாழ்பவராக எண்ணி. "மக்கள் தேவர் நரகர் உயர்திணை மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" என்றார். உரையாசிரியன் மாரும் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு "மக்களே புண்ணிய மிகுதியால் தேவராகவும் பாவமிகுதியால் நரகராகவும் பிறந்து வாழ்வார் ஆதலின். மக்கள், தேவர், நரகர் உயர்திணை" என விளக்கிச் சென்றனர். மற்றும் பேடுபற்றிக் கூறுமிடத்து, "பெண்மை விட்டு ஆணவாவுவபேடு ஆண்பால் ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்" என்பார். ஒன்றைவிட்டு ஒன்றை அவாவி நின்றவழி அவை எவ்வாறு

பேடுகளுள் அடங்கும்? ஆண்பால் பெண்பால்களில் அடங்கி விடாவோ? இதனைக் கருதாத உரையாளர்கள் பேடி வந்தாள், பேடன் வந்தான், பேடர்வந்தார் என உதாரணம் காட்டுவர். உலக வழக்கில் ஆளுமைப் பண்பில்லாரைப் பற்றிக் கூறும் வசை மொழியாகிய 'அவன் ஒரு பெட்டைப்பயல்', 'பேடிப்பயல்' என்பவற்றைக் கருதி உரைகூறிச் சென்றனர். அவை வசைபற்றிப் பால் மயங்கி வரும் குறிப்பு மொழிகள் என்பதை அவர்கள் கருதாது போயினர்.

## அஃறிணையும் அதன் பிரிவுகளும்

இயற்கையின் படைப்பாகத் திகழும் கோடிக்கணக்கான பொருள்களுள் பொறிபுலன்களால் தோன்றும் அறிவொடு கூடிய உயிரினங்கள் பல. பொறிபுலன்கள் அற்ற பூதப் பொருள்கள் பல இவற்றின் வடிவு, நிறம் முதலாய பண்புகளும் தொழிற் பண்புகளும் பல இவற்றுள் மக்கட் சுட்டுடைய மக்களினம் தவிர்ந்த பிறயாவும் அஃறிணைப் பொருள்களாம். அஃறிணை என்பதற்கு மக்களல்லாதனவாகிய இனங்கள் என்பது பொருளாம்.

மக்களினம் தவிர்ந்த பிற உயிரினங்களுள் உடலுறுப்புக்களான் ஆண், பெண் என்னும் வேறுபாடுகள் தெற்றெனப் புலப்படுவனவும் உள. பலவற்றின்கண் தெற்றெனப் புலப்படா. பூதக் கூறுகளாகிய மண், நீர், காற்று, மலை, கடல், நெருப்பு, இருசுடர், விண்மீன்கள் முதலியவற்றின் கண்ணும் அருவப் பொருள் அருவுருவப் பொருள்களாகிய அறிவு, எண்ணம், இன்பம் துன்பம் காமம் பசி சினம் அருள் அன்பு முதலாகிய குணங்களின் கண்ணும் பால்பகுப்பு அமையாது. இலக்கிய வழக்கில் கற்பனையாக அமையலாம். அவை இயற்கையல்ல. உயர்திணையில் மக்கள் என்னும் ஒரேயொரு இனம் மட்டுமே உண்டு. அஃறிணையில் பல்லாயிரக் கணக்கில் இனங்கள் அமைந்துள்ளன. ஆதலின் அஃறிணைப் பொருட் பெயர்கள் பலவாக அமைந்துள்ளன.

சுட்டுவினா ஒப்புகுலம் குடி தொழில் உறுப்பு குணம் பற்றி வரும் பெயர்களைத் தவிர மக்களுக்கு இயற்பெயர் யாதுமில்லை. அஃறிணைப் பொருள்களின் இயற்பெயர்களே பால்காட்டும் விகுதிகளொடு கூட்டியும் கூட்டாமலும் இடுபெயராக இட்டு வழங்கப்படுவனவே. மக்களின் பெயர்களுள் ஒருமை பன்மை காட்டும். முழுப்பெயராக அமைந்த

மாந்தர் மக்கள் என்னும் பன்மைப் பெயர்கள் இனஞ்சுட்டும் பெயர்களேயாகும். இவை மாந்தன், மாந்தி, மக்கன், மக்கி என்று பால்காட்டும் பெயராக வாரா.

அஃறிணையில் பல்வேறு இனங்கள் உள்ளமையானும், ஒவ்வோரினத்தினும் பலபிரிவுகள் உள்ளமையாலும் அஃறிணை இயற்பெயர்கள் பலவாக அமைந்துள்ளன. ஆதலின் இனப்பெயர்கள் ஒருமை பன்மை சுட்டாமல் பொதுவாக அமைந்துள்ளன. பயனிலையாக வரும் முடிக்கும் சொற்களைக் கொண்டு ஒருமை பன்மை உணர்தல் வேண்டும். பயனிலையின்றிக் கூறுமிடத்துக் 'கள்' என்னும் விகுதி சேர்த்துப் பன்மையை உணர்த்தல் வேண்டும்.

இதுகாறும் கூறியவாற்றான் உலகத்துப் பொருள்களும் கருத்துப் பொருள்களும் திணை என்னும் இலக்கணக் குறியீடு பெறும் என்பதும், அவற்றினமாகச் சொற்கள் ஆக்கம் பெறும் என்பதும், திணைப் பொருள்கள் உயர்திணைப் பொருள் அஃறிணைப் பொருள் என இருவகைப்படும் என்பதும், உயர்திணை ஆடூஉ வறிசொல் (ஆண்பால்) மகடூஉ வறிசொல் (பெண்பால்) பல்பொருளறியும் சொல் (பலர்பால்) எனமூன்றுபாலாக வகைப்படுமென்பதும், அஃறிணை ஒன்றறி சொல் (ஒன்றன்பால்) பலவறி சொல் (பலவின்பால்) என இருவகைப் பாலாக வகைப்படுமென்பதும், தெய்வம் சுட்டிய பெயர்கள் உயர்திணைப் பாலுள் அடங்கும் என்பதும், ஆண்மை திரிந்த பெயர் உயர்திணைப் பெண்பாலுள் அடங்கும் என்பதும் இருதன்மையுமல்லாத அலி அஃறிணையுள் அடங்கும் என்பதும் தெளியப்படும்.

இனி இருதிணையைப் பற்றிப் பொருள்கட்கு இசை, குறிப்பு, பண்புகளின் அடிப்படையில் சான்றோர்கள் இட்டு வழங்கும் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் படைத்துக் கொள்ளும் நெறிமுறைகளைத் தொல்காப்பிய வாயிலாகக் காணலாம்.

இருதிணை ஐம்பால் சொற்களைப் படைத்துக் கொள்ளுமிடத்துத் திரிபின்றித் திணை யுணர்த்துவன வினைச் சொற்களேயாகும். அவற்றுள் சில இருதிணைப் பொதுவாகவும் நிற்கும் பெயர்ச் சொற்களுள் சிலவே திரிபின்றித் திணையுணர்த்தும். அஃறிணை இயற்பெயர்களும், இடுபெயர்களும் இருதிணைப் பொதுவாகவே நிற்கும். பொது

வினைகளும் பொதுப் பெயர்களும் மேல் வந்து முடிக்கும் சிறப்புப் பயனிலைச் சொற்களால் ஒரு திணைக்குரியவாக அமையும். பிற விளக்கங்களைப் பெயர்ச் சொல் வினைச் சொல்பற்றி இலக்கணம் கூறுமிடத்துக் கண்டு கொள்க.

## சொல்லாக்க மரபுகள்

எழுத்துக்களால் முதனிலைச் சொற்கள் (பகுதிகள்) உருவாகும் முறைபற்றி மேலே உணர்த்தப் பட்டது. அங்ஙனம் உருவாகும் பொருட் பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப் பெயர், குணப் பெயர், தொழிற் பெயர்கள் திணைபாலிடங் காட்டும் விகுதிகளோடு கூடாவழி யாவும் அஃறிணைச் சொற்களாகவே நிற்கும். சிறுபான்மை உயர்திணைச் சொற்களாக நிற்கும். அறுவகைப் பெயர்களின் முதனிலைச் சொற்களுக்குச் சில எடுத்துக்காட்டு வருமாறு: மலை, கடல், நீர், காற்று, விலங்கு, பறவை - ஊர், நாடு, காடு, அகம், புறம் - காலை, பகல், கார், வேனில், ஆண்டு, ஊழி - தலை, கண், செவி, கை, கால், சிறகு, வால், கொம்பு - வெள்ளை சிவப்பு, கருமை, நெடுமை, குறுமை - நட, செல், இரு, காண், உறங்கு எனவரும்.

திணை பால் முதலியவற்றைக் காட்டும் விகுதிகள் - அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ர், ப, மார், அ, ஆ, வ, கு, டு, து, று எனவரும். இவைபற்றிய விளக்கங்களை எழுத்துப் படலத்துள் கண்டு கொள்க. இவை திணைபால் இடம் சுட்டுமாற்றைப் பெயர்ச் சொல் வினைச் சொல் இலக்கணத்துள் கண்டு கொள்க. வினைச் சொற்கள் அடிப்படையில் இருதிணை ஐம்பாற் சொற்களைச் சுட்டும் ஈறுகளைத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது. அவை:

"னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்" (தொல்.சொல்.5)

"ளஃகான் ஒற்றே மகடூஉ வறிசொல்" (தொல்.சொல்.6)

"ரஃகான் ஒற்றும் பகரக் கிளவியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே" (தொல்.சொல்.7)

"ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்" (தொல்.சொல்.8)

"அஆவ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே" (தொல்.சொல்.9)

"இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே" (தொல்.சொல்.10)

எடுத்துக்காட்டுக்கள் : உண்டனன், உண்டனள், உண்டனர், உண்ப, உண்மார் வந்தார், உண்டது, உண்டன்று, குறுந்தாட்டு, உண்டன, உண்ணா, உண்குவ எனவரும். இவற்றுள் சில பெயரீறாகவும் வரும். எ.டு: கொற்றன், மனையாள், நல்லார், தாய்மார், பெரியன், சிறியன,பெரியது சிறியது - பகரமும் வகரமும் றுகரமும் வினையீறாகவே வரும் ஆ எதிர்மறை வினையில் மட்டுமே வரும் டுகரம் குறிப்பு வினைமுற்றாகவே வரும்.

இனி அறுவகைப் பெயர்களின் முதனிலைச் சொற்களைக் கொண்டு இருதிணை ஐம்பாற் பெயர்களைப் படைத்துக் கொள்ளுமாறு பற்றிச் சில எடுத்துக் காட்டு: பொன்னன், ஊரன், வேனிலான்,கண்ணன், கருப்பன், நடிகன் எனவும் ளகரம் இன் சாரியை பெற்றுப் பொன்னினாள், ஊரினள், வேனிலாள், கண்ணினாள் எனவும், பொன்னர், ஊரர்,வேனிலார், கண்ணர், நடிகர் எனவும் வரும். அஃறிணையீறுகள் பெரும்பாலும் குறிப்பு வினையாலணையும் பெயரீறுகளாக வரும். எ.டு: பொன்னது, ஊரது, வேனிலது, கண்ணது, கரியது, உழுவது, பொன்னின, ஊரின, வேனிலின, கண்ணின, கரியன, உழவின எனவரும். பிறவற்றைப் பெயரியலுள் கண்டு கொள்க.

## சொல்லும் பொருளும்

சொற்கள் யாவும் உலகில் இயற்கையாகவும் செயற்கையாகவும் திகழும் பொருள்களை உணர்த்தவும் உணரவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் மக்களால் ஒலியாகவும் ஒலிக்கோவையாகவும் படைத்துக் கொள்ளப் பெறுபவையாதலின் பொருள் இல்லாத சொற்களோ பொருள் பயவாத சொற்களோ இல்லை, எல்லாம் பொருளுடையனவே யாகும்.

மற்று ஆகாயப்பூ, குதிரைக் கொம்பு எனவருபவை பொருள் அற்றவையன்றோ எனின், இத்தகைய சொற்கள் வெளிப்படைப் பொருள்தாராமல் குறிப்புப் பொருள் தருவனவாம். அஃதாவது ஒரு கருத்தைக் கற்பனை செய்தோ, பொய்யாகவே கூறுமிடத்து அக்கருத்து பொய்யானது என்று காட்ட இத்தகைய தொடர்களைப் பயன்படுத்தலின் அவை

சொல்லின் பொருளை நேரே உணர்த்தாமல் தாம் கருதும் பொருளைக் குறிப்பால் உணர்த்துவனவாகும். அவற்றை ஆகாயம்பூ - குதிரை கொம்பு எனப்பிரித்துத் தனித் தனியே கூறுமிடத்து அவை வெளிப்படையாகத் தம்பொருளைத் தரும் அதனான் தனிச் சொற்கள்யாவும் பொருளுடையனவே என உணர்த்தத் தொல்காப்பியம்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல்.சொல்.152)

என்கிறது.

## சொல்லின் தோற்றம்

சொற்கள் மக்களின் கருத்தையுணர்த்தும் பேச்சுக் கருவியாகும். மக்கள் மட்டுமே பேசும் ஆற்றலுடையவர். பேசும் கருத்துத் தொடர்களின் உறுப்புக்களே சொற்கள். பொருளை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் படைத்து. அச்சொற்களால் அவ்வப் பொருள்களைச் சுட்டி உணர்த்துபவர் மக்கள். பொருளை உணர்த்த ஒலிக் கோவையாகிய சொற்களை மக்கள் எவ்வாறு படைத்துக் கொண்டனர்? இதற்கு விடை கூறும் முறையில் மொழியியல் ஆய்வறிஞர்கள் பற்பல காரணங்களைக் கூறியுள்ளனர். அதுபற்றித் தமிழ்மொழி அறிஞர்கள் கூறும் கருத்துக்களை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

உயிரினங்களுக்குப் பொதுவாக வாய்த்துள்ள உணர்வுகள் பசி, தாகம், வேட்கை, காமம், அவா, அச்சம், சினம், நட்பு, பகை, அழுக்காறு முதலியனவாகும். இயற்கை தரும் நிலைமைகள் உண்ணல், உறக்கம், புணர்ச்சி, இளமை, முதுமை, சாக்காடு முதலினவாகும். இவ்வாற்றான் உணர்வும் நிலைமைகளும் தம்மாலும் பிறவற்றானும் ஏற்படும் உயிர்க்குணங்களாக உள்ளன.

உணர்வு என்பது மக்களைப் பொருத்த வரையில் மனம் உட்பட அறுவகைப் பொறிகள் வாயிலாக உண்டாகும். பொறிகள் மெய் வாய் கண் மூக்கு செவி மனம் என்பவையாம். இவற்றின் உணர்வுகளாவன முறையே ஊற்றுணர்வு, சுவையறிதல், காட்சி, நாற்றமுணர்தல், ஓசையறிதல் (மனம்) இன்ப துன்ப உணர்தல் முதலியனவாகும்.

எனவே, இவ்வறுவகைப் பொறிகளுக்கும் உணர்வைத் தருபவை தன்னைச் சூழ்ந்துள்ள இருதிணைப் பொருள்களேயாகும் அப்பொருள்களின் வடிவு, பண்பு, செயல், நாற்றம், ஒலி அவற்றால் எய்தும் பயன் ஆகியவை பற்றியே மக்களுக்கு உணர்வு தோன்றும்.

அவ்வுணர்வுகளை ஒலிகளால் (மொழியால்) உணர்த்துமிடத்து ஓரெழுத்தொருமொழி முதலாய சொற்கள் தோன்றும் என்பது தமிழ் நூலார் ஆய்ந்து கண்ட முடிவாகும்.

பிறபொருள்களின் இயல்புகளை உணரும் கருவிகளுள் கண்ணும் செவியும் முதன்மையானவை, ஐம் பொறிகளான் வரும் உணர்வுகளை அறியும் கருவி மனம். ஆதலின் மனம் அடிப்படைக் கருவி என்பதைத் தொல்காப்பியம்.

"கண்ணினும் செவியினும் திண்ணிதின உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"
(தொல்.பொருள்.271)

என மெய்ப்பாட்டியலுள் கூறுகின்றது. இவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் அடிநிலைச் சொற்கள் உரிச்சொல் எனப்படும். அவ்வுரிச் சொற்களின் தோற்றம் பற்றிக் கூறுமிடத்து

"உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி" (தொல்.எழுத்.482)

என்றும், குறைநீங்கி நிரம்பிய உரிச் சொற்களின் தோற்றத்தைக் கூறுமிடத்து

"உரிச் சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி"
(தொல்.சொல்.292)

வரும் என்றும் கூறுகின்றது.

இவற்றுள், இசை என்பது செவிப்புலன் உணர்வையும் பண்பென்பது மெய் வாய் கண் மூக்கு செவி ஆகியவற்றின் புலன் உணர்வுகளையும் குறிப்பு என்பது ஐம்புலன்களையும் தன்னுள் அடக்கி உணரும் மன உணர்வினையும் குறித்து நிற்பனவாகும்.

எனவே, மக்கள் பிறபொருள்களின் வடிவு, செயல், பண்பு ஆகியவற்றையும், ஓசை, ஒலிகளையும், அவற்றின் எய்தும் பயன்களையும் அடிப்படையாகக் கொண்டே சொற்களைத் தோற்றுவிக்கின்றனர் என்பது நன்கு புலப்படும். மக்களுடைய அறிவும், துய்ப்புணர்வும், கூட்டுறவும், கண்டு பிடிப்புக்களும் பெருகப் பெருகத் தொடக்க காலத்தில் தோன்றிய சொற்களின் அடிபபடையில் மேலும் மேலும் சொற்களைப் படைத்துக் கொண்டுள்ளனர்-படைத்துக்கொள்கின்றனர் என்பது நனி விளங்கும்.

பொருள்களின் வடிவு, பண்பு, செயல், பயன் முதலியன பற்றித் தனித் தனியாகப் படைத்தக் கொண்ட சொற்களையே சிறிதும் பெரிதுமாகிய கருத்துக்களைப் பிறர்க்கு உணர்த்துமிடத்துக் கோவையாகத் தொகுத்துக் கூறும் நிலை ஏற்படுகின்றது. இவற்றைச் சொற்றொடர் என்கின்றோம். சொற்றொடர்கள் இரண்டு சொற்கள் முதலாகக் கருத்துக்கட்கு ஏற்பப் பலவாகத் தொடர்ந்தமையும். கருத்துக்கள் வினா-விடை என்னும் அடிப்படையில் வெளிப்படும்.

## பேச்சு மொழியும் - எழுத்து மொழியும்

பேச்சு மொழி என்பது கூறுவோரும் கேட்போரும் நேருக்கு நேராக இருந்து கருத்துக்களை வினாதல் விடுத்தல் என்னும் முறையில் நிகழ்த்துவதாகும் கருத்துக்களை நேருக்கு நேர் வெளிப்படத்துமிடத்து வினையும், (நடிப்பு) மெய்ப்பாடுகளின் வாயிலாகவும் உணர்த்த இயலும் சொற்கள் ஓரளவில் நிகழும். சொற்களால் உணர்த்த வேண்டிய கருத்துக்களில் பெரும்பாலானவற்றை வினையத்தாலும் மெய்ப்பாட்டாலும் உணர்த்த இயலும். உதாரணமாக:

சாத்தனும் தேவனும் பேசிக் கொள்கிறார்கள். சாத்தன் தேவனை "நீயார்?" எனவினாவுகிறான். "சாத்தா!" என அழைத்துச் சுட்டு விரலை நீட்டிக் கைவிரல்களை மடக்கிச் சிறிது அசைக்கிறான். தேவன் புரிந்து கொண்டு "தேவன்" என்கிறான். பின்னர் சாத்தன் தன்புருவத்தை உயர்த்திமுகத்தை மேலும் கீழுமாக அசைக்கிறான். தேவன் தன்கை விரல்களை மடக்கிக் கட்டுவிரலை வாய்க்கருகே நீட்டுகிறான் சாத்தன் புரிந்து கொண்டு அவனுக்குக் குவளையில் நீரை நிரப்பித் தருகிறான். இந்நிகழ்ச்சியை எழுத்து மொழியில் எழுதினால்.

சாத்தன் தன்முன் சோர்வோடு வந்து நிற்பவனைப் பார்த்து "நீயார்?" என வினாவுகிறான். அவன் "என் பெயர் தேவன்" என்கிறான். பின்னர் சாத்தன், "தேவா! எதற்காக என்னை நாடி வந்திருக்கிறாய்" என்று கேட்க அவன் "நீர் வேட்கையாக உள்ளேன் பருகுவதற்கு நன்னீர் வேண்டும்" என்கிறான் சாத்தன் அவனுக்கு ஒரு குவளையில் நீரை வார்த்துத் தருகிறான் என அமையும்.

மற்றொரு வகை: ஒருவன் கருத்தை விளக்குதற்குரிய சொற்களை எல்லாம் கூறாமல், "ஐயா! யான் இரண்டு நாளாக உணவின்றிப் பட்டினியாக உள்ளேன். உண்பதற்கு உணவேனும் அல்லது உணவைக் கடையிற் பெறுதற்குரிய காசேனும் தந்துதவ வேண்டுகிறேன். தருமம் செய்யுங்கள்" என அமையும்.

மற்றொருவகை - சொற்களைச் சிதைத்தும் எழுவாய்ப் பயனிலை ஒழுங்கின்றியும் பேசுதல் : பெரியா அந்தக் காவாலிப்பே எங்கடா ஒங்க நாட்டாமே இதாங் கொங்கூரு ஒப்பரையான்னு கேக்கான். என்று ஒருவன் கூற, அதனைக் கேட்பவன் புரிந்து கொள்கிறான். இதனைச் செம்மையாக எழுதினால் நாட்டாமைக்காரப் பெரிய ஐயா அந்தக் கயவாளிப் பையல் அடே எங்கே உங்கள் நாட்டாண்மைக்காரர் இதுதான் உங்கள் ஊர் ஒப்புரவா? என்று கேட்கிறான் என அமையும்.

மொழியிலக்கண நூல்களின் நோக்கமும் பயனும் எழுத்து மொழியில் (இலக்கியத்தில்) சொற்களையும் தொடர்களையும் எவ்வெவ்வாறு கையாள வேண்டும், உரையும் செய்யுளுமாக அமைந்துள்ள இலக்கியங்களைத் தொடராகவும் சொற்களாகவும் பிரித்து அவற்றின் பொருள்களைத் திரிபின்றி எவ்வாறு உணர்தல் வேண்டும் என்பவற்றை வரையறை செய்து வற்புறுத்துவதேயாகும்.

வழக்கு மொழியே உயிருள்ள மொழி எனப்பசப்புவோர் அது சூழ்நிலைக்கு ஏற்பத் தோன்றிக் கேட்போர் கருத்தை உணர்ந்து கொண்டபின் இறந்து விடுதலைக் கருதுவதில்லை. ஒரு காலத்தில் வழங்கும் பேச்சு மொழியை அப்படியே எழுதிவைத்தால் அது எதிர்காலத்தில் தனது கருத்தை விளக்காமையோடு விபரீதமான பொருளையும் தரும் என்பதையும் உணர்வதில்லை அதனான் சான்றோர்கள் எழுத்து மொழிக்கே இலக்கணம் வரைந்து பேச்சு மொழி இயல்பையும் ஆங்காங்கே சுட்டிச் சென்றனர்.

## சொற்களின் இருவகைப் பொருள்நிலை

நீரானது அரிசி காய்கறி முதலியவற்றைச் சமைக்க அவற்றிற்குத் துணையாகக் கலந்தும், தான் தனியாகவும் உணவாவது போல, சொற்கள் தாம் கருவியாக நின்று பொருளை உணர்த்தலும் தாம் உருவான முறையில் தம்மை உணர்த்தலும் எனச் சொற்கள் பொருள் விளக்கும் முறைகள்

இருவகையனவாகும். ஒரு சொல் தன்னை உணர்த்துமிடத்துப் பிற பொருள் தோன்றாது. பிற பொருளை உணர்த்துமிடத்துத் தான் தோன்றாது. ஒரோவழித் தன்னையும் உணர்த்திப் பொருளையும் உணர்த்தும்.

எ.டு: 'கண்ணன் உண்கிறான்' என்னுமிடத்துக் கண்ணன் என்னும் பெயருடைய ஆடவன் உணவை உண்டு கொண்டிருக்கிறான் எனப் பொருள் உணர்த்தும். ஓர் ஆசிரியன் ஒரு மாணவனைப் பார்த்துக் "கண்ணன் உண்கின்றான். இது என்ன தொடர்?" என வினவுமிடத்து மாணவன் 'எழுவாய்த் தொடர்' என்கிறான். ஈண்டுன் கண்ணன் என்னும் ஒருவனையோ அவன் உண்ணுகிறான் என்ற செயலையோ உணர்த்தாமல் கண்ணன் என்பது ஓர் எழுவாய்ப் பெயர். அது உண்கின்றான் என்னும் பயனிலையோடு முடிந்தது எனத் தம்மையே உணர்த்தும். இதனைத் தொல்காப்பியம்,

*பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்*
*சொல்லின் ஆகும் என்மனார் புலவர்* (தொல்.சொல்.153)

என்று கூறுகின்றது. இங்ஙனம் பொருள்களின் அடிப்படையில் சொற்களின் நிலைகளை விளக்குவதே தமிழ் இலக்கணக் கோட்பாடு ஆகும். சொற்கள் தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் பொருளுணர்த்துங்கால் அவ்வச் சொற்கள் தம் இயற் பொருளை வெளிப்படையாகத் தருவதும் சூழ்நிலை, சொல்லுவோன் குறிப்பு ஆகியவற்றிற் கேற்பத் தம் பொருளை விட்டுக் கூறுவோனது கருத்திற் கேற்பக் குறிப்புப் பொருள் தருதலும் எனச் சொற்பொருள் நிலை இருவகைப்படும். இதனைத் தொல்காப்பியம்,

*தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்*
*இருபாற் றென்ப பொருண்மை நிலையே* (தொல்.சொல்.154)

என்று கூறுகின்றது.

## பொருள்களும் சொற்களும்

உலகில் விளங்கும் இருதிணைப் பொருள்களும் அவற்றின் குணம் செயல்களும் பல்லாயிரக்கணக்கானவை, அவற்றையெல்லாம் தனித்தனிச் சொற்களால் குறியீடு செய்துணர்த்தல் என்பது மிக அரிய செயலாகும். மக்கள் வாழும் நிலச்சூழல், தொழில், பயன்படுத்தும் பொருள் முதலியவற்றிற்கு ஏற்ப அவ்வம் மொழிகளில் சொற்கள் தோன்றும் எடுத்துக் காட்டாகக் குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர் முல்லை நிலத்தில் வாழ்பவர் பலநூறு மலர்கள் கிழங்குகளின்

பெயர்களைத் தனித்தனி அமைத்து வழங்குவர். நெய்தல் நிலத்து வாழும் பரதவர் மீன்களுக்கும் நீர் வாழ் பிற உயிரினங்களுக்கும் பல்வேறு பெயரிட்டு வழங்குவர். பிற நிலங்களில் வாழ்பவர் இவைபற்றி ஓரளவே தெரிந்திருப்பர். சில பொருள்களை நுணுக்கமாகப் பிரித்துணர்வர். பூக்களின் பருவங்களைத் தளிர்,அரும்பு, முகை,மொட்டு, மலர் அலர், வீ, செம்மல், வாடல் எனவகுத்துக் கூறுவர். வண்ணங்கள் நூற்றுக்கணக்கில் உள எனினும். தமிழில் வெண்மை,பசுமை, மஞ்சள், நீலம், கருமை எனச் சில சொற்களே உள. யானையைக் குறிக்க முப்பது சொற்களுக்கும் மேல் உள. ஒட்டகம் பற்றி ஒன்றிரண்டு சொற்களே உள. இவையெல்லாம் மொழிக்குரிய இயல்புகளாகும்.

அதனான் மக்கள் ஒரு பொருளுக்கே பலசொற்களையும், ஒரு சொல்லுக்கே பல பொருள்களையும் அமைத்து வழங்கி வருகின்றனர். நெருப்பு என்னும் ஒரு பொருளுக்கு அனல், கனல், தணல், தீ, சுடர், தேயு, சேர்ந்தாரைக் கொல்லி எனப் பல சொற்களையும். மா என்னும் சொற்கு மரம், விலங்கு, குதிரை, இலக்குமி, பெரிய எனப் பல பொருள்களையும் படைத்து வழங்குகின்றனர். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் வேறுபாடும், வேரமைப்பு வேறுபாடும் உண்டு. அவற்றான் சொற்கள் கூறுவோர் கருத்திற்கேற்ப வெளிப்படைப் பொருளும் குறிப்புப் பொருளும் தருவன வாயின.

## வெளிப்படையும் குறிப்பும்

*வெளிப்படையாவது:* ஒரு சொல் எப்பொருளை உணர்த்துவதற்காகப் படைக்கப்பட்டதோ அப்பொருளைத் திரிபின்றி உணர்த்துதல். எ.டு: கண்ணன் வந்தான், பண்புகளால் சிறந்தோர் பெரியோர், காய்முற்றிக் கனியானது, "அறஞ்செயவிரும்பு", "ஆறுவது சினம்", "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றாற் போல உரைநடை வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கிலும் சொற்கள் தம்பொருளைத் திரிபின்றி உணர்த்தி நிற்குமிடத்து வெளிப்படையாம்.

*குறிப்பாவது* : தாயைத் தாயார் என்றும், ஆசிரியனை ஆசிரியர் என்றும் ஒருவரையே அரசர் அமைச்சர் பெரியவர் என்றும் பண்மையாற் கூறுதல் உயர்த்தற் குறிப்பாகும். ஒருவனை, இவன் சிங்கம், இவன் புலி என்னுமிடத்து அவன்

பெருவீரமுடையவன் என்பது குறிப்பு. ஒருவன் ஒருவனை நோக்கித் தேவா உண்டாயோ? என்னுமிடத்துப் பசியில்லை என அவன் கூறுமிடத்து உண்ணேன் என்னும் பொருளைத் தரும் குறிப்பு மொழி. சிறையிலிருந்து தப்பியவனை அவன் கம்பி நெட்டிவிட்டான் எனலும், பொய்யாகப் புகழ்பவனை இவன் அவன் காதில் பூச்சுற்றுகிறான் என்பதும் இவ்வாறு வருவன பிறவும் குறிப்பு மொழிகளாம். வெளிப்படைப் பொருள் ஒன்றே. குறிப்புப் பொருள் பல நிலைகளில் பலவகைப் பட்டு வரும். அவற்றுள் தலையாயவற்றை இனிக்காண்போம்.

## குறிப்புச் சொற்களின் வகைகள்:

### 1. உயர் சொற் கிளவி :

உயர்திணை ஒருமைப்பாற் பெயரையும் - அஃறிணை ஒருமைப்பாற் பெயரையும் மதித்துச் சிறப்பிக்குமிடத்து உயர்திணைப் பலர்பால் விகுதி கொடுத்துக் கூறுதல்.

**எ.டு. :** தந்தையார் வந்தார், அரசி வந்தார், ஔவையார் பாட்டு நரியார் யானையாரை ஏமாற்றினார், நாலடியார் படித்தான், திருக்கோவையார் கற்றான் எனவரும் பிறிதொருவகை அஃறிணையை உயர்திணையாகச் சிறப்பித்துக் கூறுதல். ஒரு நாய்க்கு வீரன் என்று பெயரிட்டு இந்த வீரன் எங்கள் வீட்டுக் காவலன் என்பதும் ஒரு பசுவுக்கு இலக்குமி எனப் பெயரிட்டு எங்கள் வீட்டு இலக்குமி வேளைக்கு நாலுபடி பால் தருவாள் என்பதும் உயர் சொற் கிளவிகளாம்.

### 2. வினா - செப்பு : (செப்பு - விடை)

கவிதை பற்றிய இலக்கண மறியாத ஒருவன் ஒரு கவியரங்கப் பொறுப்பாளரிடம் ஐயா! கவியரங்கிற் கலந்து கொள்ள விரும்புகிறேன். அதற்கு அவர், "நீ என்ன கம்பனா காளிதாசனா யார் எதற்கு ஆசைப்படுவது?" என்கிறார். இவ்வினாவின் குறிப்பு கவிதைபற்றி யிலக்கணம் தெரியாத நீ ஆசைப்படுவது தவறு. அதிற் பயிற்சி பெறு. பின்னர் அரங்கேறலாம் என்பதாகும். விடைக்குறிப்புப் பலவகையாக வரும் ஒருவன், உனக்கு அறிவழகனைத் தெரியுமா? என வினாவுகிறான். அதற்கவன், அவனைத் தெரியாதவன் எவனாவது இருப்பானா இஃதொரு விடை. அவன் பாட்டனையும் தெரியும். இஃதொரு விடை. இந்தப் புத்தகம் அவன் தந்ததுதான். என் உயிர்த் தோழனாயிற்றே என்கிறான். இவையெல்லாம் தெரியும் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்தின. எனக்கு அதுதானா வேலை. கண்ணனைத் தான் தெரியும். அப்படி

ஒருவன் இருப்பதாக வேலன் சொன்னான். என வருவன தெரியாது என்பதனைக் குறிப்பனவாகும்.

ஒருவன் தன் நண்பனிடம், இன்று வள்ளியூர் வரதன் நாடகம் பார்க்க வருகிறாயா? வரவியலாது எனக் கருத்துடைய விடைகள் பின் வருமாறு அமையும். 1. எனக்குக் கூடலூர் கோவிந்தன் நாடகம்தான் பிடிக்கும். 2. கோடையிடி குப்புசாமி இசை நிகழ்ச்சி இருக்கிறதே. உனக்குத் தெரியாதா. 3. எனக்கு உடல் நலமில்லை. 4. மாலை ஓர் உறவினர் என்னைக் காண வருவதாகக் கூறியுள்ளார். வருவேன் என்னும் கருத்துடைய விடைகள் பின் வருமாறு அமையும். 1. வரதன் நடிப்பு கண்களுக்கு விருந்தாச்சே. 2. இந்த நிகழ்ச்சி எனக்குத் தெரியாமற் போயிற்றே நல்ல வேளை நீ தெரிவித்தாய். 3. நுழைவுச் சீட்டு நான்தான் வாங்குவேன். 4. வாராமலிருப்பேனா? எனவும் பிறவாறும் வரும்.

### 3. ஒன்றொழி பொதுச் சொல்:

(1) ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொதுவான சில பெயர்களும் வினைகளும் சில ஏதுக்கள் காரணமாக அவருள் ஒருவருக்குரியதாக வரும். (2) அவ்வாறே அஃறிணைக் கண்ணும் வரும். அவற்றை ஒன்றொழி பொதுச் சொல் என்பர். **எ.டு:** ஒருவர் குழந்தையைத் தாலாட்டி உறங்கச் செய்தார் எனின் அது உயர்திணைப் பெண்பாலையும், ஒருவர் மஞ்சுவிரட்டுக் காளையை அடக்கினார் எனின் அது உயர்திணை ஆண்பாலையும் பெரும்பான்மை பற்றி உணர்த்தும். இவர்கள் துணங்கை ஆடுகின்றனர் எனின் ஆடவரையும் குரவையாடுகின்றனர் எனின் பெண்பாலரையும் குறிக்கும். சாத்தன் கணக்குப் பார்க்கும் எனின் சாத்தன் என்னும் பொதுப் பெயர் உயர்திணை ஆடவனையும், சாத்தன் நன்கு மேயும் எனின் அஃறிணை காளை மாட்டையும் உணர்த்தும். ஒருத்தி, என் இரண்டு பிள்ளையையும் கட்டிக் கொடுத்து விட்டேன் என்றால் பிள்ளை என்னும் பொதுப் பெயர் பெண்பாலரையும், என் இரண்டு பிள்ளைகளையும் போருக்கு அனுப்பிவிட்டேன் என்றால் ஆண்பாலரையும் உணர்த்தும். இவை சிலவிடத்துப் பிறழ்ந்தும் வரும். வரின் அவை மரபல்ல என்க.

### 4. பல பொருளொரு சொல்:

ஒரு சொல் (பெயர் அல்லது வினை) பலபொருளுக்கு உரியதாக இருப்பின் இவ்விடத்து இச்சொல் இன்ன பொருளில் வந்துள்ளது என உணர்த்தலும் குறிப்புப் பொருளாம். பல

பொருளொரு சொல் முடிக்கும் சிறப்புப் பெயர் சிறப்புவினை காரணமாகவும் இனம் காரணமாகவும், சூழ்நிலை காரணமாகவும் ஒருபொருளை வரைந்துணர்த்தும். எ.டு. : மா என்னும் சொல் மரம், குதிரை, இலக்குமி, மாவு முதலிய பொருளுக்குரிய பொதுப் பெயர். அது மா பூத்தது எனின் மரத்தையும், மா ஓடிற்று எனின் குதிரையையும், மாவுறை மார்பன் திருமால் எனின் இலக்குமியையும், மாப் பிசைந்தான் எனின் மாவையும் வினைகளான் உணரலாம். இருந்தது, சிறந்தது எனப் பொது வினையாற் கூறின் வரைந்துணர இயலாது. அதனான் அவ்வினைகள் குறிப்புப் பொருள் உணர நின்றன. இனி, மா, பலா, தென்னை வளர்த்தான் என்னுமிடத்துப் பலாதென்னை என்னும் இனம் காரணமாக மா என்பது மரம் என உணர வரும். கவசம் பூண்டு வாளேந்தி நிற்கும் ஒருவன் என் மாவைக் கொண்டு வருக என்றால் சூழ்நிலையால் மா என்பது குதிரையை உணர்த்தும். மா வீழ்ந்தது, மா ஏறினான், மா வெட்டினான் எனவரின் வரைந்துணர்த்த மாட்டா. இவ்விடங்களில் மரமாவின் கண் ஏறினான். பரிமாவின் கண் ஏறினான் என வெளிப்படையாகக் கூறல் வேண்டும் வெளிப்படைப் பொருளைப் பிறவாறும் கூறுவர் காயா மா எனின் குதிரை, ஓடாமா எனின் மரம், பாயா வேங்கை எனின் மரம், பறவாக் கொக்கு எனின் மரம். இங்ஙனம் பலபொருள் ஒரு சொற்கள் குறிப்புக்களாற் பொருளுணர்த்தும்.

### 5. பொருளொடு புணராச் சுட்டுப்பெயர்:

தனக்கு முன் அமைந்திருக்கும் பயறு, அரிசி, உழுந்து இவற்றைச் சுட்டி இதுபடி ஐம்பது காசு, இது எழுபது காசு என்னுமிடத்து இது என்னும் சுட்டுப் பெயர் பயறு அரிசி என்பவற்றை உணர்த்தும். சதுப்பு நிலத்தில் படிந்துள்ள சுவடுகளைச் சுட்டி இதுமான், இது குதிரை, இது யானை என்னுமிடத்து அப்பொருள்கள் ஆண்டில்லை எனினும் காலடிச்சுவடுகளைக் காட்டிக் கூறுதலின் அவ்வப்பொருளை உணர்த்தும். இதனைப் பொருளொடுபுணராச் சுட்டு என்பர்.

### 6. இனமொழி:

ஒரு கருத்தை வலியுறுத்தியோ, சிறப்பித்தோ கூறுமிடத்து அத்தொடர்மொழி அதற்கு இனமான பிறிதொரு பொருளை உணர்த்தின் அதனை இனமொழிக் குறிப்பு என்பர். சில இடங்களில் அவற்றோடு தொடர்புடைய பொருளையும் உணர்த்தும். சில இடத்துப் பிறபொருளுணர்த்தாமலும் நிற்கும்.

எ.டு. : அறம் வெல்லும் என்னுமிடத்தும் பாவம் தோற்கும் என உணர்த்தும். கற்றோர்க்குச் சிறப்புண்டு எனின் கல்லாதார்க்குச் சிறப்பில்லை என உணர்த்தும் சாத்தன் சோறுண்டான் எனின் உடன் கறியும் உண்டான் என்றுணர்த்தும் பொதி சுமந்து சென்றவன் கல்லிடறிவீழ்ந்தான் எனின் பொதியும் வீழ்ந்தது எனவும், நால்வர் சென்ற படகு கவிழ்ந்து எனின் நால்வரும் கவிழ்ந்தனர் எனவும் உணர்த்தும். இனி மணமக்கள் வாழ்க என்னுமிடத்து மற்றவர் வீழ்க என இனப் பொருள் தாராது.

மற்று, நேற்றுக் கொற்றனுக்கும் பூதனுக்கும் நிகழ்ந்த போரில் பூதன் வென்றான் எனின், கொற்றன் தோற்றான் என்பது இனமொழியன்று. ஒருவன் தோற்றாலன்றி ஒருவன் வென்றான் எனல் இயலாதாகலின் இத்தகையன பொருளாற்றல் எனப்படும்.

**7. திணை நிலைப் பெயர்:**

அகப்பொருள் இலக்கியங்களில் வரும் தலைவனைக் காளை, மீளி என்னுமிடத்து அவை அஃறிணையை உணர்த்தாமல் உயர்திணை ஆடவரை உணர்த்தலும் ஒருவகைக் குறிப்பு மொழிகளாம்.

**8. பாற் பெயர்:**

யான், நீ என்னும் தன்மை முன்னிலைப் பெயர்கள் உயர்திணை ஆண், பெண் அஃறிணை ஒருமை ஆயவற்றைச் சூழலுக்கு ஏற்ப உணர்த்தலும் குறிப்பு மொழிகளாம். "யான் வந்தேன்" ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது, 'நீ வந்தாய்' ஆண் பெண் அஃறிணை ஒருமைக்கும் பொது. இவையும் ஒரு சார் குறிப்பு மொழிகளாம்.

**9. பலவகையாக வரும் குறிப்பு மொழிகள்:**

அடுத்த நாட்டு மன்னனிடமிருந்து திருமுகம் வந்துள்ளது எனின் நற்செய்தி மேல் வந்துள்ளது என்பது பொருள். அவன் உன் முயற்சிக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டான் எனின், ஒப்புதல் அளித்துளான் என்பது பொருள். விளக்கைப் பெரிதுசெய் என்றால் அணைத்து விடு என்பது குறிப்பு அவர் திருநாடலங்கரித்தார் எனின் இறந்துவிட்டார் என்பது பொருள்.

**10. பிறவாறு வரும் குறிப்புப் பொருள்கள்:**

இவன் பொற்குவளையில் பால் குடித்து வெள்ளித் தொட்டிலில் வளர்ந்தவன் என்னுமிடத்து மிகப்பெரிய

செல்வனாக இருப்பவன் என்பது குறிப்பு. குழைகொண்டு கோழியை வெருட்டும் வாழ்க்கையர் எனின் அன்ன பெருஞ் செல்வர்கள் என்பது பொருள். கடல்போன்ற செல்வர்க்கிடையே கிணற்றூற்றன்ன நீயும் உள்ளாய் என்னுமிடத்துக் கடல் நீர் குடிப்பதற்காகா. அத்தகு செல்வர்க்கிடையே இறைக்க இறைக்க நன்னீர் தரும் கிணற்றைப் போலப் பலர்க்கும் உதவும் நீயும் உள்ளாய் என்பது குறிப்பு. இவை போன்றவை யாவும் குறிப்புப் பொருள் தருவனவாகும்.

இனி, ஆகுபெயர், அன்மொழித்தொகை பற்றிய குறிப்புக்கள் இவற்றினின்று வேறானவை. இவற்றை அத்தலைப்புக்களிற் கண்டு கொள்க.

## வடமொழியாளர் கூறும் வெளிப்படைச்சொல் குறிப்புச்சொல் பற்றிய சில குறிப்புக்கள்

தொல்காப்பிய உரையாளரும் நன்னூல் முதலிய நூல்களும் அவற்றின் உரையாளர்களும் பரிமேலழகர் முதலிய அறிஞர்களும் வடமொழியாளர் கூறும் குறிப்புப் பொருள்பற்றி ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லுகின்றமையான் அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் மாணாக்கர் கடப்பாடாதலான் வடமொழியாளர் கருத்துக்களும் கோட்பாடுகளும் இந்நூலுள் ஆங்காங்கே தரப்படுகின்றன.

தமிழ் நூலார் கூறும் பலபொருளொரு சொல், ஒன்றொழி பொதுச் சொல், இனமொழி, சுட்டு, ஆகுபெயர் முன்னம், உவமைப் போலி, ஐவகை உள்ளுறைகள் முதலிய குறிப்பிற் பொருள்தரும் சொல் சொற்றொடர்களை ஒட்டியே வடமொழியாளர் அவர்தம் நூல் மரபிற்கேற்பப் பல்வேறு கோணங்களில் விரித்துக் கூறுகின்றனர் சில வடமொழிக்கே உரியனவாகவும் அமைந்துள்ளன.

வடமொழி வரிவடிவச் சொற்களின் அடிப்படையில் இலக்கணங் கூறுவதாகலின்,பொருள்களினிடமாகச் சொற்கள் தோன்றுமெனக் கொள்ளாமல் இருவகை வழக்கினை நோக்கி அவைமரபாக இச்சொல் இப்பொருளை இன்ன முறையில் விளக்கும் எனக் கூறுவர். சொற்கள் யாவும் கட்டிய வழக்கினவே என்பதும் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள இயைபு சங்கேதத்தான் அமைவனவே என்பதும் அவர்தம் கொள்கையாகும். சங்கேதம் என்பதற்குச் சொல்லினது ஆற்றல்

என விளக்கந்தருவார் சேனாவரையர், பரிமேலழகர், கல்லாடனார் முதலிய உரையாசிரியர்கள் வடமொழியாளர் சொற் பொருள் உணர்த்தும் நிலைமையை 'அபிதா' என்பர் அபிதையானது ரூடி, யோகம், யோகரூடி என மூன்று நிலையில் பொருள் விளக்கும் என்பர் 'ரூடி' என்பது கட்டிய வழக்கு. இதனை நன்னூலாசிரியர் இடுகுறி என்பார் அஃதாவது கல், மண், மலை, நீர், காற்று, நதி, வானம், மரம், செடி, கொடி, காடு, ஆடு,மாடு, கோழி, மயில்,கழுகு, பாம்பு, பல்லி என்றாற் போன்ற சொற்களெல்லாம் அவர்தம் இலக்கணப்படி ரூடி அஃதாவது இடுகுறிப் பெயர்களாம்.

யோகம் என்பது காரணத் தொடர்புடையதாகும். இதனைக் காரணப் பெயர் என்பார் பவணந்தி முனிவர். பறவை, காற்றாடி, கைமா, அணிகலன், விலங்கு என்றாற் போலக் காரணம் வெளிப்படையாக விளங்கும் சொற்களும், மலையன், கொல்லன், தச்சன், கூனன், நெடியன், குறளன், கருப்பன் என்றாற் போலப் பொருள் தொடர்புடைய சொற்களும் அவர்தம் இலக்கணப்படி - யோகமாம் (காரணப் பெயர்களாம்)

**யோகரூடி:** காரணம் பற்றியமைந்த ஒரு பெயர் பின்னர்க் காரணத் தொடர்பை விட்டு இடுகுறிப் பெயராக வழங்கின் அவை யோகரூடியாம். இவற்றைக் காரண இடுகுறி என்பர் உரையாளர்கள். அஃதாவது, அந்தணன், முள்ளி, காற்றாடி, நாற்காலி போன்றவை காரணத்தான் முதற்கண் அமைந்து பின்னர்க் காரணங் கருதாமல் குறிப்பிட்ட தொரு பொருளையே தருமிடத்துக் காரண இடுகுறியாகும் அந்தணர், அறவோர் எனக் கொள்ளாமல் ஒருசார் வருணத்தில் பிறந்தவர் பெயராக வழங்குமிடத்துக் காரண இடுகுறியாகி விடுகிறது. முள்ளையுடையது முள்ளி எனினும் அது குறிப்பிட்டதொரு செடியை மட்டும் உணர்த்துமிடத்துக் காரண இடுகுறியாகும்.

வடநூலார் மேற் கூறப்பெற்ற மூவகைச் சொற்களையும் அவைபொருள் தரும் முறைமைகளையும் மூன்று நிலையில் பகுத்துக் கூறுவர். அவையாவன:

| சொல் | பொருள் |
|---|---|
| 1. வாசகம் (செஞ்சொல்) | வாச்சியம் |
| 2. லக்ஷகம் (இலக்கணைச் சொல்) | லக்ஷியம் |
| 3. வியஞ்சகம் (குறிப்புச் சொல்) | வியங்கியம் |

வாச்சியமாக அமையும் பொருட்பரப்பினை அபிதை என்பர். இவற்றுள் வாசகம் என்பது வெளிப்படைப் பொருளையும் மற்றவை இரண்டும் குறிப்புப் பொருளையும்தரும்.

செஞ்சொற்கள் அபிதையாகப் பொருள் விளக்குமிடத்துப் பல பொருளொரு சொற்கள் முன்னும் பின்னும் அமைந்த சொற்களின் துணையால் ஒரு பொருளைவரைந்து சுட்டும் என்பர். தொல்காப்பியர் பல பொருளொரு சொற்கள் ஒருபொருளை வரைந்து சுட்டுதற்குத் துணைபுரிவன சிறப்புவினை, ஒத்த இனம், சூழற் சார்பு என்பார் நன்னூல் ஆசிரியர். அவற்றொடு இடத்தை கூட்டி நான்கென்பார். (இடம் சார்பினுள் அடங்கும்) பலபொருளொரு சொல் ஒரு பொருளை வரைந்து சுட்டுதலை வடநூலார் அபிதாநியாமகம் என்பர். அங்ஙனம் பொருள் சுட்டும் தன்மையைப் பதின்மூன்றுவகையாகப் பகுத்துக் கூறுவர். அவை வருமாறு:

**1. ஸம் யோகம் :**

உடன் சேர்ந்திருக்கும் பொருள். எ.டு: சங்கு சக்கரங்களோடு கூடிய ஹரி. இதன்கண் நெருப்பு முதலிய பொருளுக்குரிய ஹரி என்னும் சொல் சங்கு சக்கரம் என்னும் சேர்க்கையால் திருமாலாகிய தெய்வத்தை வரைந்து சுட்டியது. இது தமிழில் சார்பினுள் அடங்கும்.

**2. விப்ர யோகம் :**

உடனிருக்கும் பொருள் பிரிந்திருத்தல் எ.டு: சீதையைப் பிரிந்த ராமன். இதன் கண் ராமன் என்னும் சொல் பலராமன், பரசுராமன் முதலியோரை விலக்கி அயோத்தி ராமனை சீதையைப் பிரிந்துள்ள என்னும் சார்பு வரைந்துணர்த்தியது.

**3. ஸாஹசர்யம் :**

உடனிருத்தல். எ.டு: இராமலட்சுமணர் இலட்சுமணன் என உடனிருக்கும் சொல் சார்பாக இராமன் என்னும் பெயர் தசரதராமனை உணர்த்திற்று.

**4. விரோதிதை :**

முக்கிய பகைப் பொருளை உடன் கூறுதல். எ.டு: இராமராவணன் போர். இதன்கண் ராவணன் என்னும் பகைப் பொருள் இராமன் என்பது அயோத்திராமனைச் சுட்டி உணர்த்திற்று.

**5. அர்த்தம் :**

பொருட் சார்பு. எ.டு: வீடு பேறு கருதி அரியை வணங்கினான். அரி என்னும் பெயர் வீடுபேறுதருபவன் என்னும் பொருளில் திருமாலை உணர்த்திற்று.

**6. பிரகரணம் :**

நேர்ச்சி (சந்தர்ப்பம்) எ.டு: பணியாளன் ஒருவன் தன் அரசனை நோக்கி, தேவர் கட்டளைப்படி நடப்பேன் என்னுமிடத்துத் தேவர் என்னும் பெயர் அரசனை வரைந்து சுட்டி நின்றது. இதுவும் சார்பின்பாற்படும்.

**7. லிங்கம் :**

பொருள் பிறழாமல் மரபாக வழங்கும் தன்மை. எ.டு: அரசு கோபம் பொல்லாங்கைத் தரும் என்னுமிடத்து அரசு என்பது மரத்தை உணர்த்தாமல் அரசனை உணர்த்திற்று. இதுவும் சார்பின்பாற் படும்.

**8. வேறு சொல்லின் சந்நிதி :**

முன்னும் பின்னும் நிற்கும் சொற்கள் துணைபுரிவது. எ.டு: வேப்பந்தார் வேந்தன் என்னுமிடத்து வேந்தன் என்னும் பொதுப்பெயர் பாண்டியனை வரைந்துணர்த்திற்று.

ஒரு குறிப்பு: வேந்தன் என்பது பொதுச்சொல்லாவ தன்றிப் பலபொருளொரு சொல்லன்று. அவ்வாறே தேவர் என்பதுமாம். இவ்வாறு வருவனவற்றை ஒன்றொழி பொதுச் சொல்லின்பாற்படுத்தல் தமிழ் இலக்கண நெறி. இவற்றான் தமிழ் இலக்கண மரபு வேறு, வடமொழி இலக்கண மரபு வேறு என்பது புலப்படும்.

**9. ஔசித்தியம் :**

தகுதிபட அமைவது (உசிதம் - ஔசித்தியம்) உசிதம் - தகுதி. எ.டு: உலகப்பற்றினை நீக்குதல் வேண்டிமுனிவர்கள் தேவனை வணங்கினர். ஈண்டுத் தேவன் என்னும் பொதுப் பெயர் பாசங்களை நீக்குதற்குரிய பரமனை உணர்த்தி நின்றது.

**10. சாமர்த்தியம் :**

சிறந்த காரண ஆற்றல் எ.டு: மதுவினால் மதங்கொண்டன குயில்கள் என்னுமிடத்து மது என்பது குயில்கள் என்னும் காரணத்தால் அது களித்தற்குரிய வசந்தகாலத்தை உணர்த்திற்று.

குறிப்பு: வேனிலுக்கு மதுவென்னும் பெயரின்மையான் இவ்வாறு வருவனவற்றைத் தமிழ்நூலார் குறிப்பணியாகக் கொள்வர்

**11. தேசம் :**

இடச் சிறப்பு. எ.டு: வைகுந்தத்தில் வாழும் தேவன் என்னுமிடத்து வைகுந்தம் என்னும் இடம் சார்பாகத் தேவன் என்பது திருமாலை உணர்த்தி நின்றது.

**12. காலம் :**

நேரம். எ.டு: இரவில் சித்திரபானு நன்கு பிரகாசிக்கின்றது என்னுமிடத்துச் சித்திரபானு என்னும் பெயர் இரவு என்றமையால் சூரியனை உணர்த்தாமல் நெருப்பை உணர்த்திற்று. இவையெல்லாம் தமிழில் இனம் சார்பு என்பவற்றுள் அடங்கும்.

**13. ஆங்கிகம் :**

உடலுறுப்புக்களான் கருத்தை உணர்த்துவது. எ.டு: கரும்பு இவ்வளவு நீளம் வேண்டும் எனக் கையை நீட்டி அளவினை உணர்த்துவது. தமிழ் நூலார் இதனை 'முன்னம்' என்னும் குறிப்பினுள் அடக்குவர்.

இதுகாறும் கூறியவாற்றான் வடமொழிக்கும் தென்மொழி இலக்கண முறைமைக்கும் சில ஒற்றுமை காணப்படும் எனினும் அடிப்படைக் கோட்பாடுகள் வேறுபட்டிருப்பதைக் காணலாம். அடுத்து வடநூலார் கூறும் "இலக்கணை" என்னும் குறிப்பு மொழி பற்றிக் காண்போம்.

## இலக்கணைக் குறிப்பு

ஒரு தொடர் மொழியினிடத்து அமைந்துள்ள சொல் அதற்குரிய வெளிப்படைப் பொருளைத் தாராமல் அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளைப் பிரசித்தியினாலோ பலனைக் கருதியோ கொள்வது இலக்கணைக் குறிப்பு எனப்படும். (பிரசித்தி = பயின்று வரும் வழக்கு. பலன் - பொருட் பயன்) பிரசித்தியை நிரூடம் என்றும் கூறுவர். அவ்வாற்றான் அது நிரூடலக்கணை - பலலக்கணை என இருவகைப்படுவதாயிற்று.

**1. நிரூடலக்கணை**

நிரூடம் என்பது கற்றார் கல்லார் யாவரும் அறியவும்

உணர்த்தவும் கூடிய வகையில் செஞ்சொற்போலப் பயின்று வழங்கும் சொற்களாம். எ.டு: பொங்கல் உண்டான், வற்றல் பொரித்தான் எனத் தொழிலாகுபெயர் போலவரும். எண்ணெய் என்பது எள்ளிலிருந்து பெறப்படும் நெய். அது பின்னர்ப் பொதுப் பெயராய் வேப்பெண்ணெய், கடலை எண்ணெய் என வருதலும் நீரூட இலக்கணை என்பர்.

இந்நீரூட இலக்கணை வாயிலாகக் கொள்ளும் பொருள் (1) சுத்தம் (2) கௌணி என இருதிறப்படும்.

**1) சுத்தம்:**

சுத்தம் = இயல்பு. இஃது ஒப்புமை முதலியவற்றைக் கருதாமல் பிறகாரண காரியம் பற்றி நிற்பது. கௌணி = குணத்தையுடையது. அது வினை, பயன் மெய், உரு முதலிய ஒப்புமை பற்றி நிற்கும். எ.டு: (1) சுத்தம் - சோறு மக்களுக்கு உயிர், கல்வி மக்களுக்குச் செல்வம் என்றாற் போல வரும். சோறு உயிரை வளர்த்தலும் கல்வி எல்லா நலங்களையும் தருதலும் பற்றி உயிர் என்றும் செல்வம் என்றும் கூறப் பெற்றன. இலக்கணையில் இஃதொரு வகை. மற்றொரு வகை

ஒரு சேவகன் கூறும் ஆணையை அரசன் ஆணை எனக் கொள்வதும், விரலில் மோதிரம் அணிந்துள்ளவனைமோதிரக் கையன் எனக் கூறுவதும், கண்ணிற்கு அணியும் கண்ணாடியை மூக்குக் கண்ணாடி என்பதுமாம்.

**2) கௌணி :**

வண்ணம் வடிவு பண்பு முதலியவற்றின் ஒப்புமையமைந்திருத்தல் கௌணி எனப்படும். குணத்தையுடையது கௌணி எனப்பட்டது. எ.டு: ஒரு வீரனைப் பார்த்து இவன் சிங்கக்குட்டி என்பதும், வீறு முதலியவற்றாற் சிறந்த ஒருவனைக் காளை என்பதும், ஒருவனின் கவிதை இயற்றும்திறன் நோக்கி இவன் கம்பன் என்பதும், யானை, குதிரை முதலியவற்றை ஒப்பச் செதுக்கப் பெற்ற மரப்பொம்மைகளையும் வரையப்பட்ட ஓவியங்களையும் நோக்கி இது யானை, இது குதிரை என்பதும் கௌணியாகும்.

**2. பலலக்கணை:**

யாதானும் ஒருபயன் கருதி ஒரு சொல்லுக்குரிய நேர் பொருளை விட்டுவிட்டுப் பொருந்துமாறு பொருள் கொள்வது

பலலக்கணையாகும். இது (1) விட்டலக்கணை, (2) விடாதலக்கணை (3) விட்டும் விடாதலக்கணை என மூவகைப்படும்.

**1) விட்டலக்கணை :**

காசிநகர் கங்கைக்கரையில் உள்ளது. என்னுமிடத்து நீரோடும் நதியைக் கொள்ளாமல் அதன்கரையை உணர்வது. காசிநகரின் குளிர்ச்சியும் தூய்மையும் கருதி கங்கையில் உள்ளது எனப்பட்டது. இது நதியை விட்டுவிட்டு அதன் கரையை உணர்த்தினமையின் விட்டலக்கணையாயிற்று. இதனைச் சிலர் கூறுபடுத்தி உரைப்பர். அறிவும் பண்புமில்லாதவனைப் பார்த்து இவர் மிகப் பெரியவர் என்னுமிடத்து அது அங்கதமாய்ப் புகழ்வது போலப் பழித்தல் ஆயிற்று, இவ்வாறு வருவனவற்றை விபரீதலக்கணை என்பர். மற்று ஒருபொருளைச் சுட்டஅதன் பரியாயப் பெயர் வாயிலாகக் கூறுவது. அது, இவன் திங்கள் விரவிய பெயரினன் என்றாற் போல வரும். திங்களின் பரியாயப் பெயர் மதி. அதனான் இவன் புத்திமான் என்னும் பொருளைத் தரும். இதனை லக்ஷித இலக்கணை என்பர்.

**2) விடாத லக்கணை :**

மாம்பழம் கொண்டு வருபவனைப் பார்த்து, இதோ மாம்பழம் வருகிறது என்பதும், பால் கொண்டு வருபவனைப் பார்த்து பால் வருகிறது என்பதும் விடாத லக்கணையாகும். பழமும் பாலும் தாமாக வாரா. ஆதலின் அவற்றைக் கொண்டு வரும் ஆட்களை உணர்த்தின. பழமும் பாலும் அவர்களுடன் இணைந்தே வருதலின் விடாதலக்கணை ஆயின.

**3) விட்டும் விடாத லக்கணை :**

ஒரு சிற்றூர் வெள்ளத்தாலோ, தீயாலோ சிதைந்த நிலையில் இவ்வூர் வெள்ளத்தால் அழிந்து போயிற்று தீயால் அழிந்து போயிற்று என்னுமிடத்து அது விட்டும் விடாத லக்கணையாகும். காரணம் சிலபகுதிகள் அழியாமல் சிலபகுதிகள் அழிந்திருக்கும் அதனான் விட்ட நிலையும் விடாத நிலையும் ஒருங்குள்ளமையான் என்க. ஈண்டு ஊர் என்பது வீடுகளை உணர்த்தி நின்றமையின் இலக்கணை ஆயிற்று. மற்றும் ஒருவனைச் சுட்டி இவன் ஓவியத்தின் அழகைக் கண்களாரப் பருகினான் என்பதும் மிக்க பசியுடையவன் பசி என்னைக் கொல்லுகின்றது என்பதும் இனிமையாகப் பாடியவனைப் பார்த்துக் குயிலாகக் கூவினான் என்பதும் இவ்விலக்கணையின் கண் அடங்கும்.

இங்ஙனம் தனிமொழியும் தொகைமொழிகளும் நேரே தம் சொற்பொருளை உணர்த்தாமல் தொடர்புடைய அல்லது சூழ்நிலைக்கேற்பப் பொருள் தரும் பெயர்ச் சொல், வினைச்சொல் பற்றி இலக்கணை என்னும் குறிப்பு வருமென்பது வடநூலார் மதமாகும்.

இலக்கணை தமிழிற் கூறப்பெறும் ஆகுபெயர் போன்றதெனக் கொள்வார் சிலர். தமிழ் ஆகுபெயர் இலக்கணத்திற்கும் வடமொழி இலக்கணைக்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு. விளக்கத்தை ஆகுபெயர் இலக்கணம் கூறும் வழிக் கண்டு கொள்க.

## வியஞ்சனை

மேற்கூறப்பெற்ற செஞ்சொற் பொருள் நிலையாகிய அபிதையின் சொற்களும், இலக்கணைச் சொற்களும் தரும் பொருளுக்கும் அப்பால் ஒரு பொருள் மறைந்து நிற்பதை 'வியஞ்சனை என்பர். வியஞ்சனை தரும் பொருளை வியங்கியம் என்பர். அம்முறையில் வியஞ்சனையை அபிதா மூலவியஞ்சனை என்றும், லக்ஷ்ணா மூல வியஞ்சனை என்றும் இருவகைப்படுத்துக் கூறுவர். தமிழில் வரும் முன்னம் உள்ளுறை தொல்காப்பியம் பொருளியலுள் கூறப்பெறும் சிலகுறிப்பு மொழிகள் போல்வனவற்றை வடநூலார் வியஞ்சனையுள் அடக்குவர்.

## இலக்கணச் சொற்களும் வகைகளும்

எழுத்தானாகும் சொற்கள் தனித்தும், இணைந்தும் தொடர்ந்தும் அகப்பொருள் புறப்பொருள் அல்லது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பொருள்பற்றிய கருத்துக்களை உணர்த்தும் அகவடிவம் உணர்வு புறவடிவம் இலக்கியம். இலக்கியங்கள் உரைநடை, செய்யுள் நடை என்னும் இருவடிவங்களில் உருப்பெறும்.

அத்தகு இலக்கியங்களைப் படைப்பதற்குக் கருவியாகத் திகழும் சொற்கள் இலக்கண நோக்கில் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச் சொல் என நான்கு வகைப்படும். இலக்கிய நோக்கில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என நான்கு வகைப்படும்.

நால்வகை இலக்கணச் சொற்களுள் பெயர்ச் சொல் என்பது பொருட் பெயர்டாகத் திணை, பால், எண், இடம்,

வேற்றுமை ஆகியவற்றை விளக்கி நிற்கும். வினைச் சொல் என்பது திணை, பால் (எண்) இடம், காலம் ஆகியவற்றை விளக்கி நிற்கும். இடைச்சொல் என்பது பெயர் வினைகளில் திணை பால் இடம் காலம் என்னும் உறுப்புக்களை உணர்த்தி அவற்றோடு இணைந்து நிற்கும். சில பெயரோடும் வினையோடும் கூடித் தனிப் பொருள் உணர்த்தும். சில பெயர்ப் போலியாக வரும். உரிச் சொல் என்பது எல்லாச் சொற்களுக்கும் அடிமனையாய் நிரம்பியும் நிரம்பாமலும் முதனிலையாக நின்று திணை பால் முதலிய உறுப்புக்களோடு கூடிய வழிப் பெயரும் வினையுமாக மாறிவிடும். சில பெயர்ப் போலியாகவும், சில வினைப் போலியாகவும் வரும். சில பெயர் வினைகளுக்கு அடையாகவரும். இலக்கணச் சொல் நால்வகையுள் பெயர்ப் போலி வினைப்போலியாகவும் அடையாகவும் வருவனவற்றையே உரிச்சொல் என்பர் நூலோர் பிற விளக்கங்களை அவ்வத் தலைப்பிற் கண்டு கொள்க.

## பெயர்

உலகில் காட்சிப் பொருளாகவும் கருத்துப் பொருளாகவும் திகழும் இருதிணைப் பொருள்களை ஒலியால் உணரவும் பிறர்க்கு உணர்த்தவும் மக்கள்தம் அறிவுணர்வின் அடிப்படையில் யாதானும் ஓர்காரணம் பற்றி இடப்படும் (பெய்யப்படும்) குறியீடுகளே பெயர் எனப்படும். பொருள்களின் பால் அக்குறியீடுகள் பெய்யப் பெற்று அது அப்பொருள் முழுதினும் நிறைந்து நிற்றலாம். பெயர் என்பது காரணக் குறியீடாகும். பெயரை வடநூலார் நாமம் என்ப.

பெய்+அர் = பெயர். பெயர்தல் என்னும் வினை வேறு. இது வேறு. பெயர்தல் என்பது பிரிதல் என்பதனடியாகப் அமைந்த சொல்லாகும். பிரிதல் - பேர்தல் = பெயர்தல் என வரும் பெயர்தல் ஒரு பொருள் ஓரிடத்தினின்றும் பிறிதோரிடத்திற்கும், பிறிதோரிடத்திலிருந்து தன்பாலும் மாறுதலாகும். அதனால் அது மீண்டும் என்னும் பொருளையும் தரும் அதனான் அதனடியாகப் பெயர்த்தும் என்னும் சொல்தோன்றிற்று. எனவே இரண்டிற்கும் மூல உரிச்சொல் வேறுவேறாகும்.

## பெயர் வகைகள்

பெயர்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் அவ்விரண்டற்கும் பொதுவாக நிற்கும் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என மூவகைப்படும். அவை பொருள், இடம்,

காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு நிலைகளில் தோன்றும். இவற்றுள் பொருட்பெயர், என்பது இடம் காலம் முதலிய ஐந்துமல்லாத பிறவற்றை உணர்த்தும்.

**1) பொருட் பெயர்:**

நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வனவாகியவற்றின் பெயர்களும், உறவுப்பெயர், முறைப்பெயர், எண்ணுப் பெயர், அளவைப் பெயர், குழூஉப் பெயர், குலப் பெயர்,குடிப்பெயர், நிலம், நீர், வளி, கடல், மலை, மரம், செடி, கொடிகள், அறிவு, அறம், ஆற்றல், ஒழுக்கம் பற்றியவைகள் இருசுடர் விண்மீன் முதலியவற்றிற்கும் இடப்படும் குறியீடுகள் யாவும் பொருட் பெயர்களாம்.

**2) இடப் பெயர் :**

ஒரு பொருள் தங்குதற்கு ஆதாரமாக உள்ள ஊர், நாடு, நகரம், அகம், புறம், வான், தேசம் என்பனவும் அவை போல்வனவும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபாக வருவபனவும் இடப்பெயர்களாம்.

**3) காலப்பெயர் :**

புவி, இருசுடர், கோள்கள், விண்மீன்கள் இவற்றின் சுழற்சியால் நிகழும் பகல் இரவு, காலை மாலை, நண்பகல் வைகறை, வினாடி நாழிகை, திதி, முழுத்தம், மாதம், ஆண்டு பருவம், உகம், ஊழி முதலியவை காலப் பெயர்களாம்.

**4) சினை (உறுப்பு)ப் பெயர் :**

ஒரு பொருளின் உறுப்பாக நிற்கும் தலை கண் மூக்கு செவி, வாய், நா, பல், தாடை கழுத்து மார்பு, புறம், கை, கால், விரல், நகம் - மரம் முதலியவற்றின் வேர்தண்டு, கிளை, வளார், விழுது என ஒரு பொருளின் அங்கமாக வருவன வெல்லாம் சினைப் பெயர்களாம்.

**5) குணப் பெயர் :**

பொருள்களைப் பற்றி நிற்கும் கருமை செம்மை வெண்மை முதலிய நிறம் பெயர்களும், அன்பு அருள், தயா, நன்மை, தீமை, அழுக்காறு அவா வெகுளி அச்சம் முதலிய பண்புகளும், குறுமை நெடுமை பருமை முதலிய வடிவங்களும், உப்பு, உறைப்',, துவர்ப்பு; கைப்பு முதலாய சுவைகளும் இவைபோல்வனவும் ..ணப் பெயர்களாம்.

**6) தொழிற் பெயர் :**

உடம்பாலும், உறுப்புக்களாலும் நிகழும் நடத்தல் இருத்தல், உண்ணல், உறங்கல், கொடுத்தல், பெறுதல், உணர்தல் அறிதல், ஒழுகல் முதலாய புடைபெயர்ச்சியுடையன யாவும் தொழிற் பெயர்களாம்.

இவையாவும் பிறிதொரு நோக்கிற் கூறப் பெறும். இயற்பெயர், இடுபெயர், முதற்பெயர், சினைப்பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர், ஒருமைப் பெயர் பன்மைப் பெயர் என்பவற்றுள்ளும் சுட்டுப் பெயர் வினாப் பெயர் ஒப்புப் பெயர் யாவும் மேற்கூறப் பெற்ற ஆறுவகையுள்ளும் அடங்கும்.

## இலக்கியச் சொல்வகைகள்

மொழி என்பது மக்களால் உருவாக்கப் பெற்று அறிவோரான் செம்மை பெற்றுக் காலந்தொறும் கிளைத்தும் பொருளுணர்த்தும் முறையில் வளர்ந்து இருவகை வழக்கினும் பயில்வது என்பது முன்னர் உணர்த்தப் பெற்றது. மக்களுள் கல்வி கேள்விகளாலும், அறிவு உணர்வு சிந்தனைகளாலும் மேம்பட்டோர் இடைப்பட்டோர் எனப் பல திறத்தினர் உண்டு. ஒரு நாட்டின்கண் பிற நாட்டவரும், பிறமொழியாளரும் கலந்து வாழ்வர். அதனான் ஒரு மொழிக்கண் பிறமொழிச் சொற்சள் கலப்பதும், வட்டார வழக்கில் திரிபுறலும் இயற்கையாகும். ஒரு மொழியில் இலக்கியம் படைக்கும் அறிஞர்கள் புலவர்கள் பெரும்பான்மையும் தத்தம் மொழிக்குரிய சொற்களையே மேற்கொள்வர். பேச்சு வழக்கிற் பிற மொழிச் சொற்களைக் கலந்து பேசினும், எழுத்து வழக்கிற் பிறமொழிச் சொற்களைக் கலவார். ஒரோவழிக் கூறப் பெறும் கருத்துக்கள் இலக்கியமாந்தர்கள் காரணமாகப் பிறமொழிச் சொற்களைக் கையாள நேரின் தம்மொழி இலக்கண நெறிகட்கு ஏற்ப ஒழுங்குபடுத்திக் கையாள்வர்.

ஒரு நாட்டின்கண் வெவ்வேறு பகுதிகளில் வாழ்வோர் ஒரே மொழியாளராயினும், அவ்வப் பகுதியில் இயற்கைச் சூழல் தொழில் வாணிகம், குலமரபிற்கேற்பச் சில சொற்கள் தோன்றி வழங்குதல் இயற்கையாகும். மக்கள் கருத்துக்களை மொழியாற் பரிமாறிக் கொள்ளுமிடத்துக் கல்லாதார் வழக்கிற் பயிலும் சொற்கள் யாவர்க்கும் தெளிவாகப் புலப்படும். கற்றோர் வழங்கும் சொற்களுள் சில கல்லாதார்க்கு விளங்கா. கற்றார்க்கே விளங்கும்.

நிகண்டுகற்று செய்யுளாராய்ச்சி பெற்றவர்க்கே செவ்விலக்கியங்கள் புலனாகும். காரணம் பலபொருளொரு சொற்களும், ஒரு பொருள் பல சொற்களும் இலக்கியங்களில் இடங்களுக்கேற்பப் பயின்று வருதலாகும்.

அவ்வாற்றான் இலக்கியங்களிற் பயின்று வரும் சொற்களை மொழியறிஞர்கள் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என நால்வகைப்படுத்து அவற்றிற்குரிய இலக்கணங்களையும் கூறிச் சென்றனர். இவை நான்கும் செய்யுள் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு கூறப் பெற்றவை எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. அது வருமாறு:

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.391)

என்பதாகும். நன்னூலாசிரியர் பிறிதொரு முறையில் இவற்றைக் கூறுவார். அதுவே,

"இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை
எனஇரண் டாகும் இடையுரி அடுத்து
நான்குமாம் திசைவட சொலணு காவழி" (நன்.276)

இனி அவற்றை முறையே காண்போம்.

**1. இயற் சொல் :**

"இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாஅமை இசைக்கும் சொல்லே"
(தொல்.சொல்.392)

என்பது தொல்காப்பியம்.

**2. திரிசொல் :**

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச் சொற்கிளவி "
(தொல்.சொல்.394)

என்கிறது.

இவற்றுள் கூறப்பட்டுள்ள செந்தமிழ் நிலம் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் யாவை என்பது பற்றி நூலாசிரியர் யாதும் கூறவில்லை. நன்னூலாரும் கூறவில்லை. உரையாசிரியர்களே விளக்குகின்றனர். அவர்கள் கூறும்.

**பன்னிரண்டு நாடுகள் :**

தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்கா நாடு,

வேள் நாடு, பூழி நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, சீத நாடு, மலை நாடு (மலாடு), புனல் நாடு என்பனவாகும். செந்தமிழ் நாடென்பது மதுரையை மையமாகக் கொண்ட பாண்டி நாடு என்பர். இடைக்காலத்தில் சோழ நாடே செந்தமிழ் நாடு எனக் கொண்டனர். சிலர் இப்பன்னிரண்டு நாடுகள் மதுரையின் தென்பகுதி தொடங்கித் தென்மேற்கு, தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கிச் சென்று வேங்கட மலையின் வடபகுதியிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று பின்தென்பகுதியில் திரும்பிச் சோழ நாட்டில் முற்றுப் பெறுவனவாக அமைந்துள்ளன. இவற்றை

*தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி*
*பன்றியருவா அதன் வடக்கு - நன்றாய*
*சீதமலாடு புனல்நாடு செந்தமிழ் சேர்*
*ஏதமில் பன்னிரு நாட் டெண்* (நன்.விருத்.மேற்.273)

என்னும் வெண்பா உணர்த்துகின்றது. இனி இயற்சொல் முதலாய நான்கையும் தொல்காப்பியத்தின் வழிக் காண்போம்.

## 1. இயற்சொல் :

*அவற்றுள், இயற் சொல் தாமே*
*செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்*
*தம்பொருள் வழாஅமை இசைக்கும் சொல்லே*

(தொல்.சொல்.392)

இதன் கருத்து : மேற்கூறப்பெற்ற செய்யுட் சொல் நான்கனுள் இயற்சொல்லாவது செந்தமிழ் நிலத்து (பாண்டியநாட்டு) வாழும் மக்கள் வழக்கொடு பொருந்தி ஏனைய நிலத்து வாழும் மக்களுக்கும் தம்பொருள் வேறுபடாமல் உணர்த்தும் சொற்களாகும்.

ஒரு சொல்லின் பொருளைப் பிறசொற்களால் விளக்க வேண்டாத நிலையில் யாவர்க்கும் பொருள் விளங்குமாறு அமைந்துள்ளவை இயற்சொல் என்பது கருத்து. சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு.

நம்பி, நங்கை, அன்னை, தந்தை, மகன், மகள், அரசன், அமைச்சன், கண்ணன், தேவன், மூக்கன், நிலம், நீர், தீ, காற்று, வானம், மலை, கடல், நாடு, ஆடு, மாடு, யானை, குதிரை, பாம்பு, மீன், நண்டு, மரம், செடி, கொடி, மலர், இலை, காய், பூ, பழம், கண், கால், தலை, கை, எறும்பு, வண்டு, கருமை,செம்மை, வெண்மை, அறிவு, அன்பு, நட்பு, பகை, வட்டம், கோணம், நீளம், நடத்தல், இருத்தல், உண்ணல், கருப்பன், சிவப்பன், குருடன், செவிடன், ஊமை, வாழ்க, ஒழிக,

உண்டு, இல்லை, பசி, தாகம், புலவர், பாணர், கூத்தர், ஏழை, செல்வர் என்றாற் போலவரும்.

## 2. திரி சொல்

"ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி"

(தொல்.சொல்.393)

**இதன் கருத்து :** வடிவம் வேறுவேறாகத் திரிபுற்று வரும் திரிசொல்லாவன ஒரு பொருளைக் குறித்து வேறு வேறு வடிவுடன் வரும் சொற்களும், வேறு வேறு வடிவுடன் ஒரு பொருளையே குறித்து வரும் சொற்களும் என இருவகையாக வரும் என்பதாகும். இயற்சொல்லுக்கு மாறுபட்டது என்னும் பொருளில் திரிசொல் எனப்பட்டது.

இயற்சொற்கள்போலக் கற்றார் கல்லார்யாவர்க்கும் பொருள் விளங்குதலின்றிக் கற்றார்க்கும் நூற்பயிற்சியுடையார்க்கும் பொருள் விளங்க நிற்றலின் திரிசொல் எனப்பட்டது. ஈண்டுத் திரிபென்பது ஒரு பொருள் குறித்த பலசொற்களும் பலபொருள் குறித்த ஒரு சொற்களும் சுட்டப்படும் பொருளின் நிலைமைகளை விளக்கி நிற்றலின் அக்கோணங்கள் திரிபு எனப்பட்டன என அறிக.

**1. ஒருபொருள் குறித்த வேறு வேறு சொற்கள் வருமாறு:** மலை என்னும் ஒருபொருளைக் குறித்து வெற்பு, ஓங்கல், விலங்கல் என்பன வரும். பொதுப் பொருள் மலை. நிலத்துக்கு அரணாக நின்று வெற்றியைத் தருதலின் வெற்பு எனப்பட்டது. பரப்பாக விரிந்து நில்லாமல் நெடிதாக ஓங்கி நிற்பது ஓங்கல். நிலத்தைத் தான் நடுவில் நின்று விலக்கி நிற்றலின் விலங்கல். இவ்வாறே ஏறு. ஏற்றை, போத்து, காளை என்பவை ஆண்பால் விலங்கை உணர்த்துவன. ஒவ்வொன்றும் நுணுக்கமான பொருள் வேறுபாடுடையனவாகும்.

**2. வேறுபொருள் குறித்த ஒரு சொல் வருமாறு :** 'வண்டு' இது பறக்கும் வண்டினையும், வண்டியின் உருளையையும், மகளிர் கைவளையல்களையும் உணர்த்தும். பறக்கும் வண்டு வட்டமாகப் பறத்தலின் இப்பெயர் பெற்றது. வளைந்து உருளாக நிற்றலின் சக்கரம் வண்டு எனப்பட்டது. வளைந்து சுழற்சியாக இருத்தலின் கைவளையல் வண்டு எனப்பட்டது.

இவ்வாறே வினைச் சொற்களிலும் - பிணித்தல் - யாத்தல், வீக்கல் என்பவை கட்டுதல் என்னும் ஒரு பொருளுக்குரிய வேறுசொற்கள். ஒவ்வொன்றும் சிறுநுணுக்க வேறுபாடுடையவை. வரைதல் என்பது, எழுதுதல், எல்லையிடுதல், மணத்தல், நீங்குதல் என்னும் பல பொருளைத்தரும். காரணம் வேறுபடும்.

இனி இலக்கியப் பயிற்சியுடையார்க்கே விளங்கும் சொற்களும் இத்திரிசொல்லின்பாற்படும் எ.டு: கொங்கு (தேன்) இறால் (தேனடை) அளகு (பறவைக் குஞ்சு) நாகு (விலங்கின் இளமை) நெய்த்தோர் (குருதி) அதோளி (அங்கு) வந்தீத்தை (வந்தாய்) என்றிசினோர் (என்றார்) இவ்வாறு வருவனவற்றை அரிதுணர் பொருளன என்பார்.

ஒவ்வொரு சொல்லும் தனித்தனிச் சிறப்புப் பொருளுடையனவேயாகும். அவற்றுள் அமைந்துள்ள சில ஒற்றுமைக் கூறுகளின் அடிப்படையில் யாப்பியல் புலவோர் தொடை நயங்கருதி ஒருபொருளில் கையாளுவர். அது கருதி இலக்கண நூலார் ஒரு சொற் பல்பொருள் பல பொருளொரு சொல் எனவகுத்து இலக்கணம் கூறிச் சென்றனர். சொல்தொறும் பொருள் வேறுபடும் என்றாரிலர்.

## 3. திசைச் சொல்

*"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்*
*தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"* (தொல்.சொல்.394)

**இதன் கருத்து** : செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்தமைந்துள்ள பன்னிரு நாடுகளில் வாழும் மக்கள் சில பொருள்கட்கு தம்தம் நாட்டுச் சூழலுக்கேற்ப பெயரிட்டு வழங்குவர் அங்ஙனம் தத்தங்குறிப்பினவாக அமையும் சொற்கள் தமிழே எனினும் அவை இயற்சொல் போலாமல் அவர்கள் கற்பித்துக் கொண்ட பொருளைத் தருதலின் அவை திசைச் சொல் எனப்படும். திசை என்பது ஆகுபெயராய்த் திசையிலுள்ள நாடுகளைக் குறித்து நின்றது. இன்றைய மொழியியலார். இவற்றை வட்டார வழக்கு என்பர். உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டுக்கள்:

(1) ஆ (பசு) வினையும் எருமையையும் பெற்றம் என்பது தென்பாண்டி நாட்டார் வழக்கு. இது பேறு = செல்வம் என்பதன் திரிபாகும். பேறு, பெறுதல், பெற்றம்.

(2) தாயைத் தள்ளை என்பது குட்ட நாட்டார் வழக்கு. இது ஈன்றாள் என்னும் சொல்லின் பொருளுடையதாகும். ஈனுதல் = தள்ளுதல் - தள்ளை என அமைந்தது.

(3) தந்தையை அச்சன் என்பது குடநாட்டார் வழக்கு இது ஆத்தன் என்னும் சொல்லின் தகரசகரப் போலியாக அமைந்த சொல்லாகும் அத்தன் - தந்தை

(4) வஞ்சரைக் கையர் என்பது கற்கா நாட்டு வழக்கு. இது கயவர் என்பதன் சிதைவாகும்.

(5) தோழனைக் குறிக்கும் ஏடா என்னும் சொல்லைச் சீத நாட்டார் எலுவன் என்ப. இது எல்லா என்பதன் திரிபாகும். மேலும் சீத நாட்டார் தோழியை இருளை என்றும் தம் மாமியைத் தந்துவை என்றும் வழங்குவர் இகுளை என்பது இகம் (பக்கம்)த்தில் உள்ளவர் என்னும் பொருளையும், தந்துவை என்பது கணவனைத் தந்தவள் என்னும் பொருளையுமுடைய தாகும்.

(6) நாயை ஞமலி என்றல் பூழி நாட்டார் வழக்கு. இது ஞாளி என்பதன் திரிபாகும்.

(7) செய்யை (வயல்)ச் செறு என்பதும் சிறு குளத்தைக் கேணி என்பதும் அருவா நாட்டு வழக்கு. செறு என்பது சேறு என்பதன் குறுக்கமாகும். கேணி என்பது கீழ்+நீர்=கிணறு - கேணி என ஆக்கம் பெற்றதாகும்.

(8) குறுணியைக் குட்டை என்பது அருவா வடதலையார் வழக்கு. குட்டை என்பது குண்டு (குண்டம்) என்பதன் திரிபாகும். இவ்வெடுத்துக் காட்டுக்கள் நச்சினார்க்கினியர் காட்டியவை. ஏனை உரையாசிரியர்களும் இவற்றை ஒட்டியே காட்டியுள்ளனர்.

இனி, அந்தோ, கரைய, சிக்க, குளிர, செப்பு, பாண்டில் (எருது) கொக்கு (மாமரம்) என்பவற்றைத் திசைச் சொற்களாகக் காட்டுவார் தெய்வச்சிலையார்.

நன்னூலாசிரியர் திசை என்பதற்கு எட்டுத் திசைகள் எனப் பொருள் கொண்டு திசைச் சொல் இலக்கணத்தைப் பின்வருமாறு கூறுவார்.

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரட்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" (நன்.273)

என்பார். பன்னிருநிலம் மேற்கூறப் பெற்றவையே. பதினெண் நிலம்பற்றி உரையாசிரியன்மார். பின்வருமாறு கூறியுள்ளனர்.

"சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக்குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லந் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவசம் கடுங்குசலம்
தங்கும் புகழ்ந்தமிழ் சூழ்பதினேழ்புவிதாமிவையே"

(நன்.272. மயிலை உரை)

இவற்றிற்கு உரையாசிரியன்மார் காட்டியுள்ள சொற்கள் வருமாறு: கொக்கு (மாமரம்) துளு நாட்டுச் சொல். சிக்குதல் (அகப்படுதல்) கன்னட நாட்டுச் சொல். எச்சரிக்கை (விழிப்பூட்டல்) செப்பு (விடை) தெலுங்க நாட்டுச் சொல். அந்தோ (இரக்கம்) சிங்கள நாட்டுச் சொல். இவற்றை நுணுகி நோக்கின் இவை தமிழ்ச் சொற்களின் சிதைவுகளே என்பது விளங்கும்.

## 4. வடசொல்

பாரத தேயத்துள் குமரிமுதல் இமயம் வரை வழங்கும் மொழிகளுள் தொன்மையானவை தமிழும் ஆரியமுமாம். இவையன்றி வட்டார வழக்காக வழங்கிவந்த இவற்றின் திரிபுகள் பிராகிருதம் எனப்படும். இம்மும் மொழிகளின் அடிப்படையில் செம்மைசெய்து உருவாக்கப்பட்ட மொழியே செயற்கை மொழியாகிய சமற்கிருதம். பெரும்பான்மையான சொற்கள் ஆரியத்தின் அடிப்படையில் அமைந்துள்ளமை கருதிச் சமற்கிருதத்தையே ஆரியமொழி எனவும் சிலர் வழங்குவர். பிராகிருதத்திற்கு லௌகீகம் (உலகியல் மொழி) என்னும் பெயரும் உண்டு. அதனைப் பாணின் பாஷா (பேச்சு மொழி) என்று குறிப்பிடுவார்.

ஆரியப்பிராமணர்கட்கும் தென்னாட்டு அந்தணராய தமிழர்க்கும் தெய்வக் கொள்கை, கலைத் துறைகள், ஓரளவு ஒத்துப் போனமையாலும், அரசியல் சமுதாய சூழல்கள் காரணமாகவும் இனக் கலப்பும் மொழிக் கலப்பும் நேர்வனவாயின. உயிர், இறை, உலகு, பிறப்புப் பற்றிய தத்துவம் முதலிய சமயக் கோட்பாடுகள், வானியல், கோளியல், காலக் கணிதவியல் முதலியவை பாரதநாடு முழுமைக்கும் பொதுவாக அமையவேண்டும் என்றும் கருத்தினால் அத்துறைகள் பற்றிய கல்விக்கு ஒரு பொதுமொழி உருவாக்க எண்ணிய அறிஞர்கள்

அடிப்படை நூல்களை இயற்றினர். அவற்றையெல்லாம் ஆராய்ந்து பாணினி முனிவர் அட்டாத்யாயீ என்னும் வியாகரண நூலைப் படைத்தார். பின்னர் பாணினீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் பொதுமொழி செம்மை செய்யப் பெற்றது. அந்நிலையில் நன்றாகக் செய்யப்பட்டது. செம்மையாகச் செய்யப்பட்டது என்னும் பொருள்பட அதற்குச் சமஸ்கிருதம் எனப்பெயர் அமைந்து. சமயம் முதலாய துறைகளில் ஆழ்ந்த புலமையுடைய சான்றோர்கள் சமற்கிருதத்தில் பலநூல்களைப் படைத்தனர்.

தமிழகத்தின் ஒருபகுதியாகிய சேரநாட்டில் தோன்றிய சங்கரரும், சோழநாட்டில் தோன்றிய இராமா நுசரும் வேதக் கொள்கையின் அடிப்படையில் அத்வைதம் விசிட்டாத்வைதம் என்னும் தத்துவ நூல்களையும் பிறசாத்திர, தோத்திர நூல்களையும் படைத்தனர். சமற்கிருத மொழிக்குரிய எழுத்து வரிவடிவங்களாகத தமிழ வட்டெழுத்து முறையைப் பின்பற்றிக் கிரந்தம் என்னும் வரிவடிவைப் படைத்து நூல்களை இயற்றினர். அம்முறையில் சமற்கிருதச் சொற்களைத் தமிழ் வரிவடிவ எழுத்துக்களால் எழுதுமிடத்துக் கிரந்த வரிவடிங்களைக் கலந்தே எழுதி வந்தனர், அம்முறைமை இற்றை நாள்வரை மாறவில்லை.

மேற்கூறப்பெற்ற வரலாறுகளை நோக்கின் சமற்கிருதம் உருவாவதற்கும் தமிழ் பெரும்பங்கு அளித்துள்ளமை புலனாகும். அம்முறையில் சமற்கிருதம் பாரத நாட்டுப் பொதுமொழி என்ற நிலையில் தமிழர்க்கும் உரிமையுடைய தாயிற்று. தமிழ் நூல்கள் பல சமற்கிருதம் ஆக்கப்பெற்றன. வடமொழி ஆகமங்களுக்குத் தமிழே மூலம் என்பது அவற்றின் பொருளமைப்புக்களால் தெரியலாம்.

அம்முறையில் சமற்கிருதத்தில் கலந்து சமற்கிருதமாகிய தமிழ்ச் சொற்கள் தமிழர்க்குத் தாய உரிமையுடையவாயின. அவற்றை அப்படியே மேற்கொள்ளின் புணர்மொழி விதிகளும், யாப்பமைதிகளும் பாவென்னும் ஓசையும் சிதையுமாகலின் அவற்றைத் தமிழ் எழுத்திலக்கண. சொல்லிலக்கண நெறிமுறைகளுக்கு ஏற்பச் செப்பஞ்செய்து கொள்வாராயினர். அங்ஙனம் சமற்கிருதத்திற்குச் சென்று மீண்ட சொற்கள் தமிழ் இலக்கியச் சொல்வகையுள் ஒன்றாகச் கொள்ளப்பட்டமையின் தொல்காப்பியம்,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல்.சொல்.39)

என உரிமையாக்கிக் கூறுகின்றது. சென்ற சொற்களை மீட்குங்கால், சமற்கிருத ஓசை ஒலிகளை நீக்கித் தமிழ் எழுத்து ஓசை ஒலிகளாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை,

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" (தொல்.சொல்.395)

என விதிக்கின்றது அங்ஙனம் கொடுத்தவற்றைக் கொள்ளுங்கால் கொடாத சிலவும் கொள்ள நேருமன்றே. நேரின் அவையும் அப்பெயரானே வழங்கப் பெறும் என்பது விளங்க.

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"
(தொல்.சொல்.396)

என விதித்துள்ளது.

இதுகாறும் கூறியவாற்றான் வடமொழி என்பது சமற்கிருத பாடையைக் குறிக்கும் என்பதும், வடசொல் என்பது சமற்கிருதத்திற்குச் சென்று மீண்ட பழந்தமிழ்ச் சொற்களைக் குறிக்கும் என்பது விளங்கும். இதனைப் பி. டி. சீனிவாச ஐயங்கார் முதலாய வரலாற்று ஆசிரியன்மார் உரைகளாலும் அறியலாம்.

## வடசொல் தமிழ்ச்சொல் விளக்கம்

வடமொழித் தமிழாக்கம்பற்றி எழுத்துப் படலத்துள் விளக்கமாகக் கூறப் பெற்றமையின் ஈண்டுச் சுருக்கமாகச் சில குறிப்புக்களே தரப் பெறுகின்றன. வடமொழியில் ஸ்வரங்கள் என்னும் உயிர் எழுத்துக்கள் பதினாறு அவற்றுள் இடையிலுள்ள ருரூலுலூ நான்கும் ஈற்றிலுள்ள அம், அஃஎன்னும் இரண்டும் ஆக ஆறும் வடமொழியில் உள்ள சிறப்பெழுத்துக்களாம். அஆஇஈஉஊஏஐஓஔ என்னும் பத்தும் பொது. எகர ஒகரக் குறில்கள் வட மொழியில் இல்லை. சிறப்பெழுத்துக்களுள் ரு என்னும் ஏழாவது உயிர் மட்டுமே தமிழில் மேற்கொள்ளப்படுகிறது. பிற வழங்கப் பெறுதலில்லை. ஏழாம் உயிர் ருஷபம், ம்ருகம் எனவரும் வடமொழிச் சொற்கள் தமிழில் இடபம் மிருகம் என, இ - இரு எனத்திரிந்து வரும்.

வடமொழியில் வியஞ்சனா என்னும் மெய்யெழுத்துக்கள் முப்பத்தேழு. அவற்றுள் கசடதப என்பவை ஒவ்வொன்றும் நான்கு நிலைகளில் ஒலிக்கும். ஐந்தாவது எழுத்து மெல்லொலி அவை ங ஞண நமன என்னும் தமிழெழுத்தோடு ஒக்கும்

ஏனை இடையிலுள்ள மூன்றும் தமிழில் வரும்போது முதலெழுத்துப் போலவே கொள்ளப்படும் அவையாவன :

நகம், நாகம், மேகம், சலவாதி - விசயம் - சருக்கரை. சகரவரிசையில் உள்ள மூன்றாவது எழுத்து ஜ. அதனைத் தமிழில் ச,ய எனத் திரித்துக் கொள்வர். விஜயம் - விசயம் (வெற்றி) புஜம் - புயம் (தோள்) எனவரும். பீடம் - சடம் - கூடம். தலம் - தினம் - தரை. பலம் - பந்தம் - பாரம். இடையில் உள்ள கசடதபக்கள் முதலில் உள்ள எழுத்தாகவே தமிழிற் கொள்ளப்படும். இவ்விருபத்தைந்தும் தவிர 26,27,28,29 ஆக உள்ளவை யரலவ என்பன. 34வது எழுத்து ள - இவ்வைந்தும் அப்படியே மேற்கொள்ளப்படும். 30,31,32,33,35,36,37 இவை முறையே கிரந்த வடிவில் பா, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பனவாகும். 36,37 கூட்டொலிகள். 'பா' என்னும் 30ஆவது எழுத்து தமிழில் ச,ய - எனத் திரித்துக் கொள்ளப்படும். (ய) சங்கரன். வயம். 31வது ஷ, அது ச, ட எனத் திரித்துக் கொள்ளப்டும். ஷ. சண்முகம். விடம் (விஷம்) எனத் திரித்துக் கொள்ளப்படும். 32 ஆவது 'ஸ'. அது ச, த, எனத் திரித்துக் கொள்ளப்படும். ஸ-சபை, மாதம் எனக் கொள்ளப்படும். 33-ஆவது 'ஹ'. அது தமிழில் அ. முதலிய உயிரெழுத்தாகவும் ககரமாகவும் யகரமாகவும் திரியும். ஹ-ஹரி -அரி. ஹிமாலயம் - இமாலயம். ஹேமம் - ஏமம். எனவும், மோஹம் - மோகம் எனவும், மஹிஷன் - மயிடன் எனவும் வரும். 35-வது க்ஷ என்பது க்க - ட்ச, எனத்திரியும். பக்ஷம் - பக்கம். மோக்ஷம் - மோட்சம் எனவரும். 36-வது த்-ர எனவும், 37-வது ஞ்,க எனவும் திரிந்து வரும்.

தமிழில் மொழிமுதல் வாராத ர,ல,ய முதலாக உள்ள வடசொற்கள் அ,இ,உ என்னும் முன்னொட்டுக்களைப் பெற்று அரங்கம், இராமன், உரோமம் எனவும், இலாபம், உலோபம் எனவும், யுகம் - உகம், யுக்தம் - உக்தம், யக்ஷன் - இயக்கன் என்றும் வரும். டகரம் சிறுபான்மை டாகினி - இடாகினி என்றும் வரும். சில சொற்களில் இடையே எழுத்துக்கள் குன்றியும் திரிந்தும் வரும். பிரஹ்ம - பிரமன், ஸிம்ஹம் - சிங்கம் எனவரும். வடசொற்கள் பெரும்பாலும் பொருட் பெயராகவும் பண்புப் பெயராகவும் சிறுபான்மை வினைச் சொல்லாகவும் வரும்.

தமிழினின்றும் வடமொழிக்குச் சென்றவற்றுள் இருமொழிக்கும் ஒத்த எழுத்துக்களாலானவை, வடமொழியில் திரித்துக் கொள்ளப் பெற்றவற்றை மீண்டும் தமிழ்

எழுத்துக்களால் ஆக்கிக் கொள்ளப் பெற்றவை என வடசொற்கள் இருதிறப்படும். அவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு.

| தமிழ் | வடமொழி |
|---|---|
| அகில | அகரு |
| அந்தம் | அந்தம் |
| அண்டம் | அண்டம் |
| அடவி | அடவீ |
| அம்பரம் | அம்பரம் |
| அம்பு | அப்பு |
| அமர் | சமர் |
| அரங்கம் | ரங்கம் |
| அரசன் | ராஜன் |
| அரண் | அரணம் |
| அரா | அரவம் |
| ஆரண்யம் | ஆரண்ய |
| அளகம் | அலக |
| அனல் | அனல |
| ஆகவம்(போர்) | ஆகவம் |
| ஆணி | ஆணி |
| ஆயம் | ஆய: |
| ஆரம் | ஹாரம் |
| ஆவணம் | ஆபண |
| கடுக | கடுக |
| கண்ணியம் | கண்யச் |
| கண்டம் (முள்) | கண்ட |
| கணிதம் | கணித |
| காரிகை | காரிகா |
| கதை(பேச்சு) | கதா |
| கமுகு | க்ரமுக |
| கலகம் | கலக |
| கலுழன் | கருடன் |
| கலை | கலா |

| | |
|---|---|
| கவளம் | கவல |
| கவுள் | கபோல |
| கவான் | கவீணீ |
| கன்னம் | கர்ணம் |
| கன்னி | கந்யா |
| காக்கை | காக்க |
| காமம் | காம |
| காலம் | கால |
| கானம் | கானன |
| இகம் | இக: |
| இஞ்சிவேர் | சிருங்கவேர் |
| உயர்ச்சி | உச்சம் |
| உத்தி | யுக்தி |
| உதடு | ஒஷ்ட |
| உருவம் | ரூபம் |
| உருத்திரம் | ருத்ரம் |
| உவமம் | உபமா |
| ஊசி | சூசி |
| ஊதை | வாதை |
| எருமை | ஹேரம்ப |
| ஏது | ஹேது |
| ஏமம் | க்ஷேமம் |
| ஓடம் | ஹோட |
| ஒட்டகம் | ஒஷ்ட்ரக |
| கச்சை | கக்ஷ்ய. |
| கட்டை | காஷ்ட |
| கடம்பு | கதம்பு |
| கோடி | கோடி. |
| கோபுரம் | கோபுர |
| சகடம் (சக்ர) | சக்கரம் |
| சமம் | ஸம |
| சரம் (நடத்தல்) | சர |

| | |
|---|---|
| சாந்து | சந்தன |
| சாயை | சாயா |
| சாலை | சாலா |
| சித்திரம் | சித்ர |
| சீர்த்தி | கீர்த்தி |
| சுக்கு | சுஷ்க |
| சுண்ணம் | சூர்ண |
| சுரபி | ஸுரபி |
| சுரம் | ஜ்வர |
| சூரன் | சூரன் |
| தடம் | தட |
| தடாகம் | தடாக |
| குட்டம் | குஷ்ட |
| குடங்கர் | குடங்கக |
| குடம் | குட |
| குடல் | குத |
| குடில் | குடீர |
| குணம் | குண |
| கும்பம் | கும்ப |
| குமாரன் | குமார |
| குயில் | கோகில |
| குரு | குரு |
| குளிர் (நண்டு) | குளீர |
| கூகை | கூக |
| கூடம் | கூட |
| கூந்தல் | குந்தல |
| கூம்பு | கூப |
| கோட்டம் | கோஷ்டம் |
| கோட்டை | கோட்ட |
| கோடரி | குட்டார |
| பரிதி | பரிதி |
| பவழம் | ப்ரவாள |

| | |
|---|---|
| பழம் | பல |
| பள்ளி | பல்லி |
| புவி | புவன |
| பூசை | பூசனா |
| பூதம் | பூத |
| பேச்சு | பாஷா |
| மகள் | மஹிலா. |
| மகுடம் | மகுட |
| மங்கலம் | மங்கல |
| மயிர் | மச்ரு |
| மத்தளம் | மர்தல |
| மதங்கம் | மருதங்கம் |
| மந்திரம் | மந்த்ர |
| மலையம் | மலய |
| மாத்திரை | மாத்ரா |
| தண்டு | தண்ட |
| தவம் | தபஸ் |
| தூண் | தூண |
| தெய்வம் | தைவ |
| தோள் | தோஸ் |
| நகர் | நகர |
| நடனம் | நடந |
| நாகரிகம் | நாகரிக |
| நாவாய் | நௌக |
| இமை | நிமி |
| நிலையம் | நிலய. |
| நீர் | நீரம் |
| நேயம் | நேய |
| படிவம் | பிரதி |
| படிமம் | பிரதிமா |
| பரமன் | பரம |
| மாதம் | மாஸ |

| | |
|---|---|
| மாயை | மாயா |
| மாலை | மாலா |
| மீன் | மீன |
| முகம் | முக |
| முத்து | முக்தா |
| முட்டை | முட்ட |
| மேழம் | மேஷம் |
| வட்டம் | விருத்தம் |
| விடை | ருஷப: |
| வீச்சு | வாஸ் |
| வீணை | வீணா |
| வேலை(கடல்) | வேலா |
| வேளை | வேலா |
| வைகை | வேகவதி |
| முட்டி | முஷ்டி. |

இவ்வட்டவணையில் தமிழினின்றும் வடமொழிக்குச் சென்று அம்மொழியமைப்பிற் கேற்பத்திரிந்த வடிவங்கள் காட்டப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை ஈண்டு உயிரீறாக நிற்பினும் வடமொழியாக உச்சரிக்கும் போது அநுஸ்வாரமும் விஸர்க்குமும் சிலவற்றில் சேர்ந்திசைக்கும்.

மற்று வடமொழி வடிவங்கள்தாம் மூலம் அவற்றினின்று தமிழ் எழுத்தொலிகளுக்கேற்பத் திரிந்து அமைத்துக் கொண்டவையே தமிழில் உள்ள வடசொற்கள் எனக் கொள்ளலாகாதோ? எனின், தமிழ் வடிவங்களே தொன்மையானவை என்பதற்கு அவற்றின் பொருளமைப்பே சான்றாகும் என்பதை ஊன்றி நோக்கின் புலனாகும். சொற்களுக்குரிய பொருள் எந்நிலத்தது அவற்றொடு தொடர்புடை பிறசொற்கள் தமிழில் வழங்கும் பொருளுக்கும் வடமொழியில் வழங்கும் பொருளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை அச்சொல் திராவிட மொழியினத்தில் உள்ளனவா? ஆரிய மொழியினத்தில் உள்ளனவா? என்றும் காணின் ஒருசொல் எம்மொழிக்கு உரிமையுடையது என்பது விளங்கும். மேலே காட்டப் பெற்ற சொற்களுள் சிலவற்றை இனி ஆய்ந்து காண்போம்.

**அகில் :**

அகில் என்பது அகரு எனத் திரிந்ததா - அகரு என்பது அகில் எனத் திரிந்ததா எனக் காணுமிடத்து, அகில் என்பது ஒருவகை மென்மர இனத்தைச் சார்ந்தது. அதனகத்தே பிசின் போல விளையும் மணப் பொருள் அது. காட்டின்கண் சந்தனம் முதலியவற்றோடு விளைந்து நிற்கும் மரம் அது. தமிழகத்திலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மணப் பொருள்களுள் ஒன்று என்பதை. "குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்" (பட்டினப் பாலை) என்னும் வழக்காலும், "கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்" (நான் மணிக் கடிகை) என்பதனாலும் அறியலாம். அக+இல்=அகவில் - அகில் என்பது சொல்லாக்கம். அகத்தே காழ்கொண்டது என்பது பொருள். வடமொழி அகரு என்பது அக-ரு என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. கள்ளி, தென்னகத்து மரவகையுள். ஒன்றாகலின் அகில் என்பதே வடமொழியில் அகரு எனத் திரித்துக் கொள்ளப்பட்டுள்ளமை விளங்கும்.

**அம்பரம் :**

அம்=இடம். பரம்=மேல், உயர்ச்சி. எனவே புவியின் மேற்பரப்பாக உள்ள வெளியிடம் என்பது பொருள். எங்கும் பரவியிருக்கும் பொருள் பரம். அம்+பரம் இரண்டும் தமிழ் உரிச் சொற்களே என்பது விளங்கும்.

**அடவி :**

மரங்களால் அடர்ந்து விளங்குமிடம் என்னும் பொருளில் அடர்+வி= அடவி என அமைந்தது. வி சொல்லாக்க விகுதி.வி-வீ என நீண்டு வடமொழியில் அடவீ என அமைந்தது.

**அம்பு :**

அம்+பு. அம்=நீர். பு=பொழிதல் என்னும் வினையின் முதற்குறிப்பு மழையாகப் பெய்யும் நீரினைக் குறித்து நின்றது. ஒப்புமையாக்கத்தான் வில்லினின்றும் ஏவப்படும் கணை, அம்பு எனப்பட்டது. மலையருவிக்குத் தமிழில் ஆம் என்பது பெயர். உண்ணும் நீர்க்கு (அம்+து) அமுதம் என்பது பெயர். இது வடமொழியில் 'ம்' வன்மையுற்று அப் என்றாய்ப் பின் அப்பு என ஆக்கம் பெற்றுள்ளது.

**அரங்கம் :**

ஆர்+அம்+கு - [illegible] வட்டம். இது ஆரம், ஆரை

எனவட்டமான மாலையையும், தேருருளையையும் குறிக்கும். அம்=இடம். கு - சொல்லாக்க விகுதி. ஆர் அம் கு என்பவை அரங்கு என உருப்பெற்று மேலாய இடப் பொருள் தரும். அம் என்பதனோடு கூடி அரங்கம் என ஆக்கப் பெற்ற தமிழ்ச் சொல் இதன் முதல் எழுத்தை நீக்கி மேடை என்னும் பொருளில் வடமொழியில் ரங்கம் என அமைக்கப் பெற்றது வடமொழியில் ஆக்கம் பெறுமிடத்து இங்ஙனம் முதல் எழுத்தைக் குறைத்து ஆக்கிக் கொள்ளுதலை இலவம் (மரம்)லவம் என்றும் இலக்கியம் - லக்கியம். உலகம்-லோகம் என்றும் வரும் சொற்களால் அறியலாம்.

**அமர் :**

அம்மு+அர்=அமர். அம்முதல்=அமுக்குதல் குழவியால் அமுக்கப் படுதலின் அடிக்கல் அம்மி எனப்பட்டது. ஆர்=நிறைவு, பகையை மேல் எழ ஒட்டாமல் அமுக்கி வெல்லுதரலான் போர்ச் செயல் அமர் என்றும் அதனைப் புரியும் வீரர் அமரர் என்றும் அமைவனவாயின. இது சமர் என்றும் சமம் என்றும் திரியும். வடமொழியில் சமர் என்பது சமம் எனத்திரியும். வடமொழியில் சமர் என்பது சமரம் என்றும் சமர் என்றும் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

**அரசன் :**

ஆர் என்னும் வட்டத்தைக் குறிக்கும் சொல் அணுகுதல் என்னும் பொருளுடைய அண் என்பதனோடு கூடி அரண் என்றும் அரணம் என்றும் வரும். அரணம் கோட்டை மதில் மதிலுக்குள் அமைந்த மனை அரண்மனை. அரணம் என்பது அரையம் எனவும் வரும். அரையத்திலிருந்து ஆளுபவன் அரையன். யகரமும் சகரமும் தேயம் - தேசம், நேயம் - நேசம் எனப் போலியாக வரும். அம்முறையில அரையன் - அரைசன் - அரசன் என ஆக்கம் பெற்றது. வடமொழியில் ராஜன் என்பதன் அடிப்படைப் பொருள் வேறு எனவே அரசன் என்னும் தமிழ்ச் சொல் வேறு. ராஜன் என்னும் வடசொல்வேறு என்க.

**அரா :**

பாம்பு, அரி=காற்று காற்றை உணவாகக் கொள்ளும் இயல்பினது. அரி, அர்+ஆ=அரா. வட்டமாக மண்டலித்தலானும் நாகம் அரா எனப்பட்டது. நிலா கனா என்பவை நிலவு கனவு என வருதல் போல அரா-அரவு எனவரும். அதனோடு அம்விகுதி சேரின் அரவம் எனவரும் வடமொழி அரவம் என்னும் சொல்லை மேற்கொண்டது. வடமொழியில் வேறு பெயர்களும் உண்டு

**அளகம் :**

கூந்தல். பலவாக உள்ள பொருள்களைத் திரட்டிக்கைக் கொள்ளுதலை அள்ளுதல் என்ப. மயிர்க்கற்றை கையால் அள்ளி முடிக்கப் பெறுதலின் கூந்தல் அளகம் எனப்பட்டது. வடமொழியில் அலக எனத் திரிந்தது.

**அனல் :**

நெருப்பு, அல்+நல்=அனல். அல்=இரவு. இரவின் கருமையை நீக்கி ஒளிதருதலின் அல்லுக்கு நலம் செய்வது அனல் என அமைந்தது. இவ்வாறே புல்லுக்கு நன்மைதரும். நீர் புல்+நல்=புனல் எனப்பட்டது.

**ஆகவம் :**

போர்க் களத்தில் வீரர்கள் வஞ்சினம் கூறி (சவால் விடுதல்) எதிர்த்தலை அறைகூவல் என்பர். அறைகூவல் - அகவல் - அகவம் என அமைந்து போர்ச் செயலை உணர்த்திற்று. வடமொழியில் ஆகவம் என்பதன் பொருள் வேறு.

**ஆணி :**

சுவர், மரம் முதலியவற்றுள் அணுகி உட்புகும் கருவி ஆணி. அண் - ஆண்+இ=ஆணி.

**ஆயிரம் :**

பலதுண்டுகளை - கூறுகளையுடையது. பல்+து=பத்து. அதனினும் பல துகள்களை - நொறுங்கிய கூறுகளையுடையது நூறு. அதனினும் மிக்கபல துகள்களையுடையது ஆயிரம். அயிர்- துண்மணல். நுண்ணிய துகள்களின் கூட்டம். அயிர்+அம்=ஆயிரம் என ஆக்கம் பெற்றது.

ஆர்-ஆரம்=ஆர்=வட்டம். வட்டமாகக் கட்டப்பெற்ற மாலைக்குப் பெயர். வடமொழியில் ஆ=ஹாவாகத் திரிந்து ஹாரம் என வந்தது.

**ஆவணம் :**

எழுத்தால் எழுதப் பெற்ற ஓலைப்படிவம். மையால் எழுதப்படுதலின் எழுத்திற்கு வண்ணம் என்பது ஒருபெயர். வடமொழியில் வர்ணம் என்பர். எழுத்துக்களால் ஆயது ஆவணம். கடைத்தெரு என்னும் பொருளில் வரும் ஆவணம் என்பது ஆம் வணிகம் என்பவற்றின் மரூஉவாகும். ஆவணிகம் ஆவணம் எனவரும்.

**இஞ்சிவேர் :**

இஞ்சுதல் - உறிஞ்சி யிருத்தல் நீரைத் தன்னுள் உறிஞ்சி இஞ்சி நிற்றலால் - இஞ்சி எனப்பட்டது. இஞ்சி தமிழகத்திற்குரிய பயிர்களுள் ஒன்றாகும்.

**உயர்ச்சி :**

உய் + அர் + சி. உ= மேலோங்குதல் என்னும் குறிப்புணர்த்தும் எழுத்து. உய்தல் = மேலெழுதல், ஆர்தல் = நிறைதல். சி - தொழிற் பெயர் விகுதி. உயர்ச்சி, உச்சி எனவும், அம் என்னும் பண்பு விகுதி சேர்ந்து உச்சம் எனவும், வரும்.

**உத்தி :**

ஒத்தல் - பொருந்துதல், தகுதல். ஒத்தது - உத்தி என ஆக்கம் பெற்ற தமிழ்ச் சொல். வடமொழியில் உக்தம். உக்தி - யுக்தி என வரும்.

**உதடு :**

வாயிதழ். உ+தள். வாயில் முன்னாகத் தள்ளியிருப்பது என்பது பொருள். உதள்+து=உதடு. என் அமைந்தது. இதழ் இரண்டும் ஒட்டி நிற்பதால் ஒட்டம் என்பதும் வாயிதழுக்குப் பெயர். வடமொழியில் இடையே ஊஷ்மாணந் தந்து நீட்டி ஓஷ்டம் என ஆக்கிக் கொள்ளப்பட்டது.

**உருவம் :**

உரு+அம். சுட்டி உணர நிற்பது. (உர்+உ)என்பது பொருள். அம் இனிமைப் பொருள் விகுதி, வடமொழியில் உகரம் நீங்கி ரூ=ரூபம் என் ஆக்கம் பெற்றது.

**உவமம் :**

ஒ-ஒத்தல். அது ஒவ்வுதல் என உருவாகி உவ எனத் திரிந்து அம் விகுதி பெற்றது. உவமம் - உவமை எனவரும். வடமொழியில் உகரம் பகரமாகி உபமா எனவும் உபமானம் எனவும் வரும்.

**ஊசி :**

ஊசுதல் (ஊ+ச்+அல்) முன்னும் பின்னுமாக ஆடுதல். வழக்கில் ஊஞ்சல் என்பர். ஊசலாடுதல் முன்னும் பின்னுமாகத் திரிதல். ஆடை முதலியவற்றை நூலோடு முன்னம் பின்னுமாக ஊசலாடுதலின் துன்னும் கருவி ஊசி எனப்பட்டது.

ஊ+செல்=ஊடுருவிச் செல்லுதல். ஊசி எனினுமாம். மூ+செய்=மூசு மூச்சு எனவரும். ஊசல்-ஊடு செல்லுதல் ஊசி. எருமை: இரு+மை=இரு=பெரிய மை= ஆடு. பெரிய வடிவமுடிடைய ஆடு போன்றது. என்னும் பொருளில் காரான் எருமை எனப்பட்டது. இனி, இரு+மெய்=பெரிய உடம்பை உடையது என்றுமாம். மெய்=மை எனத்திரிதல் சொல் மரபு.

**ஏது :**

எதிர்தல் தன்மையுடையது ஏது. ஒரு காரியத்திற்கு முன்னாக எதிர்நிற்பது என்பது பொருள். அதனான் இதற்குக் காரணம் என்பதும் பொருள். வடமொழியில் ஏ-ஹேவாகத் திரிந்து ஹேது என நின்றது.

**ஓடம் :**

நீரில் மிதந்து செல்வது. ஓடுவது ஓடம். அம்=நீர். இதற்கு இணைச் சொற்கள் - நீரில் பரிவது பரிசல். படர்வது படகு எனவரும்.

**கட்டை :**

மரத்தினின்று கடியப்பட்டது. கட்டை வடமொழியில் காஷ்டை.

**கணிதம் :**

கண்ணுதல் = கருதுதல். கண்+அக்கு= கணக்கு கணித்தல் கணக்கிடுதல். கோள்களின் இயக்கத்தைக் கணிப்பவர் - கணிவர். பாடங்களைக் கணக்கிட்டுப் பயிற்றுபவர் கணக்காயர்.

**கணிகை :**

கணம் = கூட்டம். கூடிமகிழ்தற்குரியவள் கணிகை. வடமொழியில் ஐகாரம் ஆகாரமாக நீண்டு கணிகா எனவரும்.

**கதை :**

கத்துதல், கதறுதல் என்பவற்றிற்கு ஒலித்தல் என்பது பொருள். கத்=பேச்சு. கதை=வாயால் மொழிதல் வடமொழியில் கதா எனவரும்.

**கலகம் :**

கலக்குதல் - கலகம். கலக்கி ஆரவாரம் செய்தல் கலவரம் கலந்து போரிடுதல் கலகம்.

**கவளம் :**

கவுள்-கன்னமுட்டு வாயாற் கௌவி உண்ணுதலால் உணவு கவளம் எனப்பட்டது. கவ்வு+உள்=கவுள். வடமொழிகபோலம்.

**கவான் :**

தொடை இடுக்கு. இடுப்பினின்றும் கவையாகப் பிரிதலால் தொடை கவான் எனப்பட்டது.

**கன்னம் :**

முகத்தின் இருபுறமும் கனிபோல இனிதமைந்துள்ள உறுப்பு. அது ஆகுபெயராய்ச் செவியையும் உணர்த்தும். வடமொழியில் காது கர்ணம் எனவரும்.

**கன்னி :**

இனிய பருவத்தினள். கன்=இனிமை. கன்னல், கனா,கனி முதலியனவை இனிமைபற்றி அமைந்த பெயர்களாகும். வடமொழியில் கந்யா எனவரும். அதன் திரிபாகத் தமிழில் கன்னிகை எனவரும்.

**காமம் :**

கமம் என்னும் உரிச் சொற்கு நிறைதல் என்பது பொருள். பருவத்தால் நிறைந்தெழும் உணர்வு காமம். அவ்வுணர்வு அவா ஆதலின் அவா என்னும் பொருளிலும் வரும்.

**காலம் :**

நிலையாக நில்லாமல் கணந்தொறும் கலித்துச் செல்லுதலால் பொழுது காலம் எனப்பட்டது. காற்று இடையறாது இயங்கலின் கால்+து=காற்று எனப்பட்டது. அவற்றான் நகர்த்திச் செல்லும் உறுப்புக்கள் கால் எனப்பட்டன. கால்+அம்=காலம். கலிமா, கலைமான், கலைமதி, கலிப்பா என வருவன வெல்லாம் இவ்வடிப்படையில் அமைந்தனவே

**குடம் :**

குடைவுற்றுக் கூடாக உள்ள கலம். கூடு - குடம் எனப்பட்டது. கூடு, கூடை, குடங்கை, குடை என்பவை இவ்வடிப்படையில் ஆக்கம் பெற்றனவாகும்.

**குணம் :**

குண்+அம்=குணம். குன் - குள் - உள் - உள்ளிருப்பது,

உள்ளாக இருப்பது' என்பது பொருள். குணம் ஒருபொருளினிடமாகவன்றித் தனித்து நில்லாது. நிறம், வடிவு, உரு, அளவு, சுவை, பண்பு முதலியவை குணத்துள் அடங்கும்.

**கும்பம் :**

அடிபருத்து நுனி குவிந்து கூம்பியிருத்தலின் கலசம் கும்பம் எனப்பட்டது. கலசம் என்பது கலயம் என்பதன் திரிபாகும்.

**குயில் :**

குய்+ஒல் - கூவி இசை எழுப்பி ஒலித்தலின் குயில் எனப்பட்டது.

**குரு :**

கூர் என்னும் உரிச் சொல் மிகுதி என்னும் பொருள் தரும். அறிவு, அருள், தவம் முதலியவற்றால் மிகுதியுடையவர். கூர்+உ=குரு என ஆக்கம் பெற்றது. அம்முறையில் ஆசான் குரு என விளம்பப்பட்டார். அதனடியாகப் பிறந்த சொல் குரவர். இருமுதுகுரவர் பெற்றோர். குரவன் - கணவன். சமயக்குரவர் - மெய்யறிவாளர்கள். வடமொழியில் கு-அஞ்ஞானம். ரு - ஒழிப்பவர். அறியாமையை நீக்குபவர் என்னும் பொருளில் அமைந்ததாகும். தமிழில் குருசில் என்பது சிறப்பு என்னும் பொருளில் அமைந்தது.

**கோட்டம் :**

கோடு - வளைவு. வளைத்துக் கட்டப்பெற்ற கோயில் கோட்டம் எனப்பட்டது. வடமொழில் டகரத்தை நீக்கிக் கோஷ்டம் எனவழங்கும். கோஷம் என்பதற்குக் கூட்டொலி என்பது பொருள்.

**கோடி :**

குவடு = உயர்ந்த உச்சி. குவடு - கோடு என்றாகி இகர விகுதி பெற்று உயர்ந்த எண்ணினை உயர்த்திற்று. எல்லை உணர்த்தும் கோடி என்பது வரைவு என்னும் பொருள்தரும். கோடு என்பதனடியாகப் பிறந்ததாகும்.

**கோபுரம் :**

கோ+புரம். கோ=குவிதல் - புடை உயர்தல் = குவிந்து ஓங்கியிருக்கும் கட்டிடம் கோ=இறைவன். புரம் = உறையும்

இடம். இறைவன் வாழுமிடம் என்னும் பொருளில் வடமொழியில் அமைந்தது.

**சகடம் :**

ச - ஒலிக்குறிப்பிடைச் சொல். கட+அம்=கடம். கடத்தலைச் செய்வது. கடத்தல் - நகர்தல், ஊர்தல், ஓடுதல் என்னும் பொருளில் வண்டிமுதலிய ஊர்திகளை உணர்த்திற்று. இது சகடு எனவும் சாகாடு எனவும் திரிந்துவரும்.

**சக்கரம் :**

சருக்கு+ஆரம் என்பவற்றின் மரூஉ. ஒப்பாக்கச் சொல். சருக்கிச் செல்லும் வட்டமான உறுப்பு என்பது பொருள். உருள், வண்டு, வட்டை, சக்கரம், என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும். வடமொழியில் சுழல்வது என்னும் பொருளில் அமைந்ததாகும்.

**சாந்து :**

சந்தன மரத்திற்குரிய தமிழ்ப்பெயர். சாந்த மரத்திற்குத் தமிழில் ஆரம் என்பதும் பெயர். சந்தனக் கட்டையை உரசிச்சாந்து செய்து பூசிக் கொள்ளுதலால் சாந்துதரும் மரம் சாந்தம் எனப்பட்டது. அரைத்துப் பூசிக் கொள்ளுதலால் ஆரம் எனப்பட்டது. சாந்தை அணிவதால் வடமொழியில் சந்தணம் எனப்பட்டது.

**சாயை :**

ஒரு பொருளினின்று நிலத்தில் சாய்தலால் நிழல்சாயை (சாய்கை - சாயை) எனப்பட்டது. வடமொழிமரபின்படி சாயா எனவரும்.

**சாலை :**

நிறைந்துள்ள இடம். சால் என்னும் உரிச் சொற்குமிகுதி என்பது பொருள். அதனான் அகன்று நாற்படையும் செல்லுதற்குரிய பெருவழிச்சாலை எனப்பட்டது. மாணவர் பலர் கூடிப்பயிலும் இடம் கல்விச்சாலை (கலாசாலை) தொழிலாளர் பலர் கூடிப் பணிபுரியும் இடம் தொழிற்சாலை. வடமொழி மரபுப்படி சாலா எனவரும்.

**சித்திரம் :**

செத்து என்னும் உவம உருபிடைச் சொல்லுக்கு ஒத்தல்,

ஒப்பு என்பது பொருள் அது செய்து என்பதன் மரூஉவாகும். ஒவ்வுமாறு வரைவது ஓவியம். செய்திரமாகச் செய்வது செய்திரம் - செத்திரம் - சித்திரம் என அமைந்தது

**சுக்கு :**

நீர்வற்றிச் சுருங்கிக் காய்ந்த இஞ்சி சுக்கு - சுருக்கானது. சுருக்கு. அது இடை ஒற்றுக் குன்றிச் சுக்கு என அமைந்தது. நீர்வற்றிய கல் சுக்கான் கல் எனப்படும். நீர்வற்றிய பாறை சுக்காம் பாறை எனப்படும்

**சுரபி :**

பசுமாடு, பாலைச் சுரந்தளித்தலின் சுரபி எனப்பட்டது. இலக்கியங்களில் சுரை - சுரை ஆன் என வழங்கும்.

**சுரம் :**

பாலை நிலம். உடல் வெப்பம் முதலியவற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொல். சூர் என்பது வெப்பம், சூடு, நெருப்பு ஆகியவற்றைக் குறிக்கும். 'சுர்' என்பது இதன் வேர்ப்பகுதி இதனடியாகப் பிறந்த சொற்கள் சூரி, சூரியன், சூரன், சுரனை, சுரம் (பாலை நிலம்) சுரம் (உடல் வெப்பம்) முதலியவையாகும். சூர் = தீண்டி வருத்தும் தெய்வத்திற்குப் பெயர்.

**தடம் :**

தோண்டி அகழப்பெற்ற சிறுகுளத்தின் பெயர். தட்டல் = அகழ்தல், தள் இதன்பகுதி. குளம் அகன்று பெரிதாயின் தடாகம் எனப்படும். வழி என்னும் பொருளில் வரும் தடம் என்பது தாள்களால் (காலால்) நடந்து செல்லுதற்குரியது என்னும் பொருளுடையதாகும். அதற்குத் தள்ளுதல் என்பது தொழிற்பெயர். தாள்-தள்-தடம் என அமையும்.

**தண்டம் :**

தண்டு+அம் - உள்ளீரமுடையதாய்த் திரண்டிருக்கும் கோல் தண்டம் எனப்படும். வாழைத்தண்டு, கீரைத்தண்டு, தாமரைத் தண்டு, மூங்கில் தண்டு முதலியவை அவ்வாறமைந்தனவாகும். தண்டினைக் கொண்டு பகைவரைக், குற்றம் புரிந்தோரை ஒறுத்தலால் தண்டித்தல் தண்டனை எனப் பெற்றது. மூங்கில் வில்லுக்குக் கோதண்டம் என்பது பெயர். தண்டினைக் கைக் கொண்டிருத்தலின் முருகனுக்குத் தண்டபாணி என்று பெயர். தண்டாயுதம் இதனடியாகப் பிறந்த பெயர்.

**தூண் :**

மேல்தளத்தைத் தாங்கி அதற்குப் பற்றுக்கோடாக நிற்றலின் தூண் எனப்பட்டது. தூ-பற்றுக் கோடு. அண் உத்திரம் முதலியவற்றைத் தாங்கி அணுகி நிற்றலால். தூ+அண்=தூண் என அமைந்தது. வடமொழியில் தூணம் எனவரும்.

**தெய்வம் :**

தெய்= பற்றுக் கோடு - இனிமை, இனிய பற்றுக் கோடாக இருப்பது தெய்வு (தேவு) அது அம் என்னும் விகுதியொடு கூடித் தெய்வம் என அமைந்தது. தமிழில் 'தெவு' என்னும் உரிச் சொற்குக் கொள்ளுதல் என்பது பொருள். இதனடியாகப் பிறக்கும் சொல் தேவன், தேவி, தேவர் என்பனவாகும்.

**தோள் :**

மேலும் கீழுமாகக் கைகளைச் சுற்றிச் சுழற்றுவதற்கு அடியாக நின்று துவளுதலின் கையின் மூலப்பகுதிதோள் எனப்பட்டது. துகள் - தூள் என அமைந்தாங்குத் துவள் தோள் என அமைந்தது.

**நகர் :**

நகு+அர்=நகர். இச் சொல் முதற்கண் மனைவி மக்களோடு நிறைவாக மகிழ்ந்துறையும் குடிலை உணர்த்திப் பின், காவற்படையொடும் கூடிய மன்னன் மகிழ்ந்துறையும் அரண்மனையையும் பின் மேலாய என்னும் பொருள்தரும் விண் என்பதனுடன் கூடி தேவர்கள் மக்களுக்கு அருள்புரியும் இடம் என்னும் கருத்தில் விண்ணகரம் என ஆக்கம் பெற்றுத் தேவகோட்டத்தை உணர்த்தி நின்று, பின் - மனை, அரண்மனை, தேவகோட்டம் நிறைந்த பேரூரை உணர்த்திற்று. அம் என்னும் விகுதியொடு கூடி நகர், நகரம் என உணர்த்தி வழங்குகின்றது. நகுதல் - மகிழ்தல், கூடுதல் என்னும் பொருளுடையதாகும். புறத்தே சென்று எய்திய வருத்தம் நீங்கி மகிழ்ந்துறையும் இடமாதலின் வீடு நகர் எனப்பட்டது.

**நாகரிகம் :**

மேற்கூறப் பெற்ற நகரங்களில் வாழும் மக்கள் மேற்கொண்டொழுகும் பண்பாடு. நகர்+இகம்=நாகரிகம். மக்கள் முன்னேற்றப் பண்புகளை உணர்த்தி ஆக்கம் பெற்றது. நாகர் என்னும் மக்கள் இனத்தார் மேற்கொண்ட பண்பாடு நாகர்+இகம்=நாகரிகம் என்பது வெள்ளை விளக்கமாகும்.

**நாவாய் :**

நீரிற் செல்லும் ஊர்திகளுள் ஒன்றற்குரிய பெயர். நீர் ஊர்திகள் படகு, பரிசு பஃறி(பறி) ஓடம், தோணி, அம்பி, கப்பல் எனப்பலவுள ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தால் அமைந்த பெயர்களாகும். அகன்று ஆழ்ந்த தோணியின் இருபுறமும் நீண்ட துடுப்புக்களை இணைத்து அசைத்துச் செலுத்தப்பெறும் நீர் ஊர்திக்கு நாவாய் என்பது பெயர். தோணி அகன்ற வாயைப் போலவும் துடுப்புகள் நாக்கைப் போலவும் அமைந்திருத்தலால் நா+வாய்=நாவாய் எனப்பட்டது. இது வடமொழியில் தத்திதாந்த முறையில் நௌகா எனப்பட்டது. ஐரோப்பிய மொழிகளில் நேவி எனப்பட்டது.

**இமை :**

கண்களின் மூடியாக உள்ள உறுப்பு இமை. 'இம்' என்னும் ஒலிக்குறிப்பால் (இம்+ஐ=இமை) அமைந்த பெயராகும். இமைகள் மூடித்திறக்கும் நேரம் இமைப்பொழுது எனப்படும். பின்னர் இமை என்பதே காலத்தின் பெயராய் அமைந்தது. வடமொழியில் இமை என்பது திரிந்து நிமி-நிமிஷம் என அமைந்தது. நிமியின் உட்கூறுதுமி.

**படிவம், படிமம் :**

படிதல் = ஒத்தல். படி=தன்மை. தன்மையால் வடிவால் ஒப்பியிருக்கும் உரு, வடிவு ஆகியவை படிவம் எனப்பட்டது. வடமொழியில் வகரம் நீங்கி இறுதி நீண்டு படிமா எனவரும். எழுதப் பெற்ற ஓலை, சித்திரம், செதுக்கப் பெற்ற சிற்பம் இவற்றைப் படிவம் என்ப.

**பரம் :**

பிரபஞ்சம் முழுமையும் பரந்து விரிந்த நிற்கும் பேராற்றல் பரம் (பொருள்) எனப்பட்டது. பால் காட்டும் விகுதி சேர்ந்து பரமன் என அமைந்தது.

**பரிதி, பருதி :**

இரண்டும் கதிரவனைக் குறிக்கும். பரி என்பதற்குத் தூய்மை, விரைந்து செல்லுதல் என்பது பொருள். தி-என்பது தீ என்பதன் குறுக்கமாகும். பரிந்து செல்லுதலும், புகையின்றித் தூய்மையாக இருத்தலும் பற்றிச் சூரியன் பரிதி எனப்பட்டது. பரு=பருமை உலகத் தீக்களுள் மிகப் பெரிதாக - பருமையாக இருத்தல் பற்றிச் சூரியனுக்குப் (பரு+தீ) பருதி எனப் பெயர் அமைந்தது.

**பவளம், பவழம் :**

பவளம் கடல்படு பொருள்களுள் ஒன்று. அணுக்களாலும் கிருமிகளாலும் உருவாவது. அணுக்களால் உருவாவது பாறை வடிவாகவும், கிருமிகளால் உருவாவது கிளைத்துச் செடியாகவும் இருக்கும். கடலுக்குப் பௌவம் என்பது ஒருபெயர். பள்ளமாக ஆழ்ந்திருப்பது என்பது இதன் பொருள். பௌ என்பது எழுத்துப் போலியாகப் 'பவ்' எனவரும். பாறை குழைந்த சேறு போலக் கெட்டியாக விளைதலின் அளம் எனப்பட்டது. அளம்=சேறு பவ்+அளம்=பவளம் என அமைந்தது. கொடிபோல் விளையும் பவழம் கடலுக்குள் தீப்பிழம்பு போல இருத்தலின் பவ்-வழல் (அழல்=நெருப்பு) என்பவற்றுள் ஒப்புமையாக்கத்தால் ழகரமாகத் திரிந்து பவழம் என நின்றது. பவளம் என்பது கற்பவளத்தையும், பவழம் என்பது கொடிப்பவழத்தையும் குறிக்கும். பவளம் வடமொழியில் பிரவாளம் எனப்படும்

**பழம் :**

பழுத்தல், முதிர்தல், முதிர்ந்து மென்மையாதல், இனிமையாதல் என்னும் பொருள்களைக் கொண்ட சொல். காயின் முதிர்ந்த நிலை-கனிந்த நிலை பழம் எனப்பட்டது. வடமொழியில் ழகர மின்மையின் பலம் (பல) என அமைந்தது.

**புவி :**

மண்ணுலகம் சிற்றுயிர்களையும் மரஞ்செடி கொடிகளையும் தன்னுள்ளிருந்து வெளிப்படுத்தலால் புவி எனப்பட்டது. வெளிப்படுத்தலைப் பூத்தல் என்பர். பூத்தலைச் செய்வது பூவி-புவி. வடமொழியில் வகரம் மகரமாகத் திரிந்து பூமி எனநிற்கும். பிறசொற்களுடன் இணைந்து வருமிடத்து விகுதி குன்றிப் பூமண்டலம் பூதலம் எனவரும்.

**பூசை :**

(பூசனை) மந்திரம் ஓதிப் பூக்களைக் கொண்டு இறைவனை வழிபடுதலின் பூவால் செய்யப்படும் செயல் என்னும் கருத்தில் பூ+செய்=பூ செய் - பூசை என அமைந்தது. அனை என்பது ஒரு தொழிற்பெயர் விகுதி. பூ+செய்+அனை=என்பவை பூசனை என ஆக்கம் பெற்றது. பூவைச் சொரிந்து வழிபடுதலால் பூசாரி என வந்தது எனினும் பொருந்தும். வடமொழியில் பூஜா என திரிந்து வழங்கும்.

**பூதம் :**

பிரபஞ்சத்தில் தன்மாத்திரைகளாகிய ஆற்றல் நீர்

நெருப்பு காற்று நிலம் வெளி எனப் பூத்தலால் அவை ஐம்பெரும் பூதங்கள் எனப்பட்டன. பதினெண்கணங்களுள் ஒன்றான பூதம் என்பது பருத்த உடம்பையுடைய தெய்வச் சாதியைக் குறிக்கும் வடமொழிச் சொல்.

**பேச்சு :**

நாவசைத்து வாயால் சொற்களைப் பெய்தலால் 'ச' என்பது நாவைக் குறிக்கும் குறிப்பொலி. ச்+ஒல்=சொல். பெய்+சு=பேச்சு. பேச்சு, பேசு, பெய்சு என்பவற்றின் திரிபாக அமைந்தது பாஷா என்னும் வடசொல் பேச்சு மொழியால் அமைந்த உரைக்குப் பாஷியம் என்பது பெயர்.

**மங்கலம் :**

மண்+கலம்=மங்கலம் என ஆக்கம் பெற்ற சொல். மண்=நாற்றம் மணத்தல் நாறுதல். கலம்=கலத்தல், உடம்பை அணுகிக் கலத்தலால் அணிகலன் எனப்பட்டது. மங்கலத்திற்கு மணவணி என்பது ஒருபெயர். மணத்தல்=விளங்கித் தோன்றல். பரவும் பண்புடையது மணம் ஆதலின் நற்செயல்கள் மங்கலம் எனப்பட்டது. வடமொழியில் லகரம் ளகரமாகி மங்களம் எனவரும். அதனான் "மங்கலம் என்ப மனைமாட்சி" என்றார் திருவள்ளுவர்.

**மணி :**

மண்ணப் பெற்ற பொன், கல், பளிங்கு இவற்றிற்குரிய பெயர் மண்ணுதல்=கழுவித் தூய்மை செய்தல், ஒளி ஏற்றுதல். மண்ணுமங்கலம் - மன்னன் முடிசூடி நீராடுதல். மண்ணாமுத்து - கழுவித்தூய்மை செய்யப்படாத கழுவுதல் - நீராற் கழுவுதல் ஒருவகை. களிம்புபோக ஒளியேற்றுதல். ஒரு வகை சாணைதீட்டி ஒளியூட்டுதல். ஒரு வகை சாணையில் தீட்டப் பெற்ற அரதனக் கற்கள். அம்முறையில் மணி எனப் பெற்றன. மணியின் வடிவம் திரட்சியாகவும் உருட்சியாகவும் உள்ளமையால் - ஒலியெழுப்பும் கருவியின் நா. மணி எனப்பட்டது. மணிகளை உருட்டி எண்ணுவதால் கால அளவை மணி எனப்பட்டது.

**மாத்திரை :**

கால அளவையின் சுருக்கம். மா=அளவு. திரை= சுருக்கம் ஓர் எண்ணாக நிற்கும் நிலை சுருக்கம் கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு ஒரு மாத்திரை என்பர் இலக்கண நூலோர். "கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை" என்பது

தொல்காப்பியம் இனி மருந்து பற்றிய மாத்திரை என்பதும் ஒத்த அளவாகத் திரட்டியது என்னும் பொருளுடையதாகும். மா=அளவு. திரை = திரட்டியமைந்தது.

**மாதம் :**

மதி=அளவு. அளவினைக் காட்டுதலால் திங்களுக்கு மதி என்று பெயர். காருவாவிலிருந்து ஒவ்வொரு பிறையாதவள்வது நிலைமை. (திதி) ஒளி உவாகமுற்றுவது ஒருபக்கம். (பட்சம்) மீண்டும் தேய்ந்து காருவாவது ஒரு பக்கம். ஆக இரண்டு பட்சமும் சேர்ந்து முப்பது நாள் அளவைக் காட்டுதலின், நிலாவுக்கு மதி என்று பெயராயிற்று. மதியால் அளக்கப்பெற்ற கால எல்லை மாதம். வடமொழியில் இதனை மாஸம் என்பர்.

**மாயை :**

மறைப்பு உண்மையை மறைத்துப் பொய்ம்மையாகத் தோற்றுவது மாயம். இது மாய்கை என்பதன் இடைக்குறை மாயை வடமொழியில் மாயா எனவரும். மாயம் என்பதனடியாகப் பிறந்த சொல் மயக்கம். மயக்கத்தைச் செய்வது மாயை.

**மாலை :**

மால்=மயக்கம். ஈண்டு மயக்கம் என்பது ஒன்றோடொன்று இரண்டறக் கலத்தலை உணர்த்தும். பன்னிறப் பூக்களை ஒன்றாகத் தொடுப்பின் அது மாலை. பகற்பொழுதும் இரவுப்பொழுதும் கலந்து மயங்கும் காலப்பொழுது மாலை. மார்புக்கு மற்றொரு பெயர் மல்லாகம் மல்=மார்பு. மார்பில் விளங்குமாறு அணியும் அணியும் மாலை எனப்படும்.

**வட்டம் :**

சுருளாக வளைந்துள்ள நிலை வட்டம். வல் + து=வட்டு+அம் =வட்டம். வள் =வளைவு. வள் என்பதனடியாகப் பிறந்தவை வள்ளம், வளாகம். வட்டமாக நின்று மகளிர் ஆகும். கூத்து வள்ளைக் கூத்து எனப்படும். வள்ளி= கொடி. வளைந்து நெளிந்து படர்தலால் கொடி வள்ளி எனப்பட்டது. கிழங்கைக் குறிக்கும் வள்ளி என்பது வளமானது வளம் என்பதனடியாகப் பிறந்ததாகும்.

**வீசுதல் - வீச்சம் :**

பரவிவிரிதல் எடுத்தெறிதல் - நாற்றம் என்னும் பொருள்களில் வரும். கைவீசி நடந்தாள் காற்று வீசுகிறது, மணம்

வீசுகிறது என வரும். வீசி நிகழும் மணம், நாற்றம் வீச்சம் எனப்பட்டது. வீசும் நிலை என்ற பொருளில் வடமொழியில் வாசம் என்னும் சொல் மூக்கின் வழியாகக் காற்றை உள்ளிழுத்துக் கொள்ளும் நிலையை உணர்த்தும். 'ஸ்' வெளிப்படுத்தல், 'வ்ஸ்' - உள்ளிழுத்தல் ஸ்வஸ் என்னும் ஒலிக் குறிப்பு சுவாசம் என ஆக்கம் பெற்றது. அவ்வடிப்படையில் மூக்கால் நுகரும் சுவை வாசனை எனப்பட்டது.

**வேலை :**

வேலை=கடல். வியல் என்னும் உரிச்சொற்கு அகலம் என்பது பொருள். "வியலென் கிளவி அகலப் பொருட்டே" (உரிச்....) வியல் என்பது ஐகார விகுதி பெற்று வியலை என்றாகி, அகழி என்பது ஆழி என நீண்டாற் போல வேலை நீண்டமைந்தது. வடமொழியில் வேலா எனத் திரித்துக் கொள்வர்.

இனி வடிவம் ஒன்றாக அமைந்து பொருளால் வேறுபட்டிருக்கும் சொற்கள் பலவுள. அவற்றை வடிவ ஒப்புமை கருதி வடசொல் என மயங்குதலும் உண்டு. எடுத்துக் காட்டாக.

ஆசான் என்னும் பெயர் ஆசிரியன் எனவரும். ஆசு+ஆன்= என அமையும். ஆசு-பற்றுக்கோடு. மாணவனுக்குப் பற்றுக் கோடாக உள்ளவன் ஆசான் என ஆக்கம் பெற்றது. ஆசு+இரி+அன். ஆசு=குற்றம்குறை. இரி=இரிதல், நீக்குதல். அறியாமை என்னும் குறையை நீக்குபவன் ஆசிரியன். இவை தமிழ் - வடமொழி ஆசான் என்பது. ஆசாரியன் என்பதன் பிறிதொரு வடிவம். ஆசாரம் - ஒழுக்கம். ஆசாரியன்=ஒழுகிக்காட்டுபவன், நடந்து காட்டுபவன் என்னும் பொருளுடையது.

**தருமம் :**

அற்றார்க்கு ஒன்றையீதல் - தருதல் = தருமம். இதுதமிழ். தர்மம் - வடசொல். செயற்பாடு ஒழுக்கம், ஆசிரம ஒழுக்கம் இது வடமொழி.

தீர்த்தம் என்பது தமிழில் தாகத்தைத் தீர்ப்பது- நீக்குவது என்னும் பொருளுடையது. வடமொழியில் தோஷங்களைப் போக்குவது என்பது பொருள். தமிழில் தயவு என்பதற்குத் தாயன்பு என்பது பொருள். வடமொழியில் கருணை என்பது பொருள். தமிழில் எட்டு என்பது வடமொழியில் அட்ட, அஷ்ட எனத் திரியும். தமிழ் - ஆகாயம் என்பது வடமொழியில் ஆகாசம் எனவரும். தமிழ் வண்ணம் - வடமொழி வர்ணம்.

இங்ஙனம் தமிழின் வேரடியாகவும் திரிபாகவும் வடமொழியில் எழுத்தொலி ஓசைகட்கு ஏற்ப வழங்கப்படும் சொற்கள் தமிழில் தமிழ் எழுத்தொலி ஓசைகட்கு ஏற்பத் திரித்துக் கொள்ளப் பெற்றவையே. (பழந்தமிழ்த் திரிபுகளே) தமிழ் இலக்கியச் சொல்வகை நான்கனுள் ஒன்றாகிய வடசொல் என்பதாகும்.

இனி இலக்கணச் சொல்வகை நான்கையும் பற்றி முறையே காண்போம்.

## பெயர்ச் சொல்

இலக்கணச் சொல்வகை நான்கனுள் முதலாவது பெயர்ச் சொல். பெயர்ச்சொல் என்பவை இருதிணைப் பொருள்களின் குறியீடாக அவற்றை வரைந்து சுட்டி நிற்பனவாகும்.

ஒருசொல், மொழி என்னுமளவில் நிற்குமிடத்து நால்வகைச் சொற்கும் உரியதாகப் பொதுப்பட நிற்கும். பெயர் எனச் சிறப்புற்ற விடத்து எழுவாயாகிப்பின் எண்வகை வேற்றுமைகளை எய்தி அவற்றிற்குரிய பயனிலைகளைக் கொள்ளுதற்குரியதாக நிற்கும்.

அஃதாவது 'மதி' என்னும் ஓர் ஈரெத்தொரு மொழி மதி எழுந்தது என எழுவாய்ப் பெயராகி. மதியொளி என்னுமிடத்து உடைமைப் பொருள். வேற்றுமையாகிப் பொருட் பெயராகவும் - நீசான்றோரை மதி! என்னுமிடத்து முன்னிலை ஏவல் வினையாகவும் - கேண்மதி பாக! என்னுமிடத்து முன்னிலை அசையிடைச் சொல்லாகவும் வரும். மதி நன்று, மதிஇது எனஎழுவாயாக நிற்குமிடத்துப் பெயராகவேநிற்கும். ஆதலின் அம்முறையில் பெயர்ச் சொல்லின் இலக்கணம் வருமாறு.

### பெயர்ச் சொல்லின் இலக்கணம்

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில், சுட்டுவினா ஒப்புருபுகள் அடிப்படையிலும், உறவு உடைமை எண் சாதி அடிப்படையிலும் தோன்றிக் காரணம் பற்றியோ இடுபெயராயோ மூவிடங்களுள் ஒன்றற்குரியவாய் வேற்றுமைப்படுமிடத்து உருபுகளை ஏற்பனவாய், வினையாலணையும் பெயர் தவிர்ந்தவை எழுவாயாக

வருமிடத்துக் காலந் தோற்றாதனவாய், பாலிடங்காட்டும் விகுதிகளைப் பெற்றும் பெறாதும் உயர்திணைக்குரியவாகவோ அஃறிணைக்குரியவாகவோ அவ்விருதிணைக்கும் பொதுவாக நின்று ஓரெழுத்தொரு மொழி முதலாக மூவகை மொழிகளுள் ஒன்றாக அமையும் பொருட் குறியீடுகள் பெயர்ச் சொல் எனப்படும்.

அம்முறையில் பெயர்கள் உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் இருதிணைப் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என மூவகைப்படும். அவற்றை இனி முறையே காண்போம்.

## உயர்திணைப் பெயர்கள்

உயர்திணை ஆடூஉ அறிசொல். (ஆண்பால்) மகடூஉ அறிசொல் (பெண்பால்,) பல்லோரறியும் சொல் (பலர்பால்) என முப்பாலாக வரும். அவை அன் ஆன் அள் ஆள் இ,அர்,ஆர் என்னும் விகுதிகளால் மேற்கூறப் பெற்ற பெயர்ப் பகுதிகளோடும் சுட்டு வினா ஒப்புருபுகளோடும் கூடித் திரிபின்றி வருமிடத்து உயர்திணைப் பெயர்களாம். மேற்கூறப்பெற்ற பகுதிகளின் அடிப்படையில் தொல்காப்பியம் உயர்திணைப் பெயர்களைப் பின்வருமாறு வகைப்படுத்துக்கின்றது.

1) அவன் இவன் உவன், அவள் இவள், உவள், அவர் இவர் உவர் எனச் சுட்டுப் பெயராயும், யான் யாம் நாம் எனத்தன்மை இடப் பெயராயும், யாவன் யாவள் யாவர் என வினாப் பெயராயும், அன்னன், அன்னள் அன்னார், இன்னன் இன்னள் இன்னார் என ஒப்புப் பெயராயும், ஆண்மகன் பெண்மகள் பெண்டாட்டி, திருவாட்டி, நம்பி, நங்கை, மகன், மகள், மக்கள், மாந்தர், ஆடூஉ, மகடூஉ பெண்மகள், எல்லாரும் எல்லீரும் எனப் பொருட் பெயர்களாகவும், முல்லையான் குறிஞ்சியான், நாடன், ஊரன், சேர்ப்பன், சோழன், சேரன், பாண்டியன்,பாணன், பாணத்தி, செவிலி விறலி பார்ப்பனி, பார்ப்பனன், அவையத்தார், மன்றத்தார் எனத் திணைபற்றியும், சாதிபற்றியும், இடம்பற்றியும் வரும் பெயர்களாகவும், உண்டவன், தின்றவன், கொல்லன், கூத்தன் எனத் தொழில்பற்றிய பெயராகவும், இனியன், நெடியன், தாயர், தந்தையர், குருடர், செவிடர், வெட்சியர், கரந்தையார், இருவர் மூவர் பதின்மர் நூற்றுவர் எனவும் வருவன உயர்திணைப் பெயர்களாம். இவற்றை ...ளக்கித் கூறும் நூற்பாக்கள் வருமாறு.

1) "அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான்யாம் நாம் என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே" (தொல்.சொல்.159)

இதன்கண் உள்ள யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்களை அறிவியல் நோக்கின்றி இடைக்கால நூலோர் பொதுப் பெயராகக் கொண்டு கூறுவர்.

2) "ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன" (தொல்.சொல்.160)

3. "எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகன்என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்" (தொல்.சொல்.161)

அடுத்துப் பல்வேறு நிலைகளில் வரும் உயர்திணைப் பெயர்களைத் தொகுத்துக் கூறுகின்றார். அவை வருமாறு:

4) "நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரொடு
அன்றி யனைத்தும் அவ்வியல் பினவே" (தொல்.சொல்.162)

**1) இவற்றுள் நிலப்பெயராவன :**

முல்லை குறிஞ்சி முதலிய ஐவகை நிலமும் ஊரும் நாடும் பற்றி வருவனவாம். எ.டு: குறிஞ்சியான், முல்லையான்,

மருதத்தான், பாலையான், நெய்தலான் எனவும், ஊரான், நாட்டான் மதுரையான், கோவூரான், பாக்கத்தான், பட்டினத்தான் எனவும் வரும். மற்றும் இவை இணைந்து வஞ்சிநாடன், சோழநாடன், பாண்டிநாடன் எனவும் வரும். ஏனைய பெண்பால், பலர்பால் விகுதிகளோடும் ஏற்குமாற்றான் வரும்.

**2) குழுவின் பெயராவன :**

யாதானும் ஒருதுறைக் கண் ஒத்த உரிமை உடையோராய்ப் பலர் கூடிய கூட்டத்தின் பெயராக வரும். எ.டு: அவையத்தார், மன்றத்தார், ஆயத்தார், கழகத்தார், அத்தி கோசத்தார், எனவரும். சிறுபான்மை இவை கழகத்தான், அத்திகோசத்தான் என ஒருமைப்பாலிலும் வரும்.

**3) வினைப் பெயர்களாவன :**

தொழில் காரணமாக வரும் வினையாலணையும் பெயர்களாம். எ.டு: உண்டான், தின்றான், கற்றான் எனவும், ஈறுதிரிந்து உண்டவன், தின்றவன், கற்றவன் எனவும் வரும். சாதி குறியாமல் வரும் கொல்லன், கூத்தன், ஓதுவான் எனவும் வரும். பெண்பால் விகுதியோடும் பலர்பால் விகுதியோடும் பொருந்துமாறு கூட்டிக் கண்டு கொள்க.

**4) உடைப் பெயராவன :**

ஒன்றனை உடைமையாகக் கொண்டுள்ள நிலைகுறித்து அது காரணமாக வரும் பெயர்கள். எ.டு: குட்டுவன் (குட்ட நாட்டையுடையவன்) குழையன் (குழையை அணிந்தவன்) வேலன் (வேற்படையை யுடையவன்) எனவரும். ஏனைய பாற்பெயர்களோடும் அமைத்துக் கண்டுகொள்க.

**5) பண்பு கொள் பெயர்களாவன :**

வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலிய குணங்கள் பற்றி அமைந்து வருவனவாம். எ.டு: கரியன், செய்யன், கூனன், நெடியன், குறளன், குறியன், தீயன், அன்பன், நல்லன், மாயன், மெய்யன், பொய்யன் எனவரும். ஏனைப் பால்களோடும் ஒட்டிக் கண்டு கொள்க.

இவ்ஐந்து வகைகளும் ஆடூஉ, மகடூஉ, பல்லோர் என்னும் மூன்றுபாலுக்கும் பொருந்து மாற்றான் வரும். இனிவருவன பலர்பாலுக்கு மட்டும் உரியனவாகும். அவற்றின் ஒருமைப் பெயர்கள் பொதுப் பெயருக்குள் அடங்கிவிடும்.

**6) பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்களாவன :**

பிறப்புத் தொடர்பு காரணமாக அமைந்த உறவுமுறைப் பெயர்களாம். எ.டு: தாயர், தந்தையர், தாய்மார், தந்தைமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், தங்கையர், தம்பியர், பெயரர் எனவரும்.

**7) பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்களாவன :**

ஒருபொருளின் உறுப்புக்கள் காரணமாக அம்முதற் பொருளுக்கு உரியவாக வரும் பெயர்கள் எ.டு: குருடர், செவிடர், முடவர், வாயினர், கையினர் எனவரும்.

**8) பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்களாவன :**

முல்லை குறிஞ்சி முதலாய அகத்திணைகள் ஏழும், வெட்சி வஞ்சி முதலாய புறத்திணைகள் ஏழும்பற்றி வரும் பன்மைப் பெயர்களாம். முல்லை முதலிய ஐந்து பெயர்கள் ஒழுக்கத்தைக் குறியாமல் நிலத்தைக்குறித்துவரின் ஒருமைக்கும் வரும். ஈண்டுத் திணை என்றது ஒழுக்கத்தைப் பற்றி நின்றது. எ.டு: முல்லையார், குறிஞ்சியார், பாலையார் எனவும், கைக்கிளையினர், பெருந்திணையினர் எனவும், வெட்சியார், காஞ்சியார், வாகையார் எனவும் வரும்.

**9) கூடிவருவழக்கின் ஆடியற் பெயராவன :**

இளைஞர் பலர் கூடிவிளையாடுமிடத்துத் தொகுதி தொகுதியாப் பிரிந்து விளையாடுவர். அங்ஙனம் தொகுதி பிரித்தலை இக்காலத்தார் உத்தி பிரித்தல் என்பர். உத்திபிரிக்குமிடத்து ஒருவனை ஒருவன் அறிமுகப்படுத்தும் போது கற்பனையாகப் பெயரிட்டுக் கூறுவான். அஃதாவது, எங்கள் இருவரில் உனக்கு மணலைக் கயிறாகத் திரிப்பவன் வேண்டுமா, கடலைக் கையால் முகப்பவன் வேண்டுமா என்றும், மலையை உகிராற் பிளப்பவன் வேண்டுமா யானையைக் கையால் மறைப்பவன் வேண்டுமா என்றாற் போல வரும். இவை சிறார்கள் கூடி விளையாடுமிடத்து இடப்படும் பெயர்களாதலின். இவற்றைக் கூடி வருவழக்கின் ஆடியற் பெயர் என்றார்.

**10) இன்றிவர் என்னும் எண்ணுப்பெயர்களாவன :**

இவ்விவ்வளவு எண்ணிக்கையினர் என உணர்த்தும் எண்ணொடு கூடிய பெயர்கள்.

எ.டு: ஒருவன், ஒருத்தி, இருவர், ஐவர், பதின்மர், தொண்ணூற்றுவர், நூற்றவர், ஆயிரவர் எனவரும்.

இவ்வுயர்திணைப் பெயர் பற்றிய புறனடையில் "அன்ன பிறவும் அத்திணை யவ்வே" - என்றதனான் இவற்றை ஒட்டி வேறுபட வருவனவும் உள. அவற்றுள் சில வருமாறு

எ.டு: ஏனாதி, காவிதி, அரசர், அமைச்சர், தூதுவர் வாயிலோர், அடியார், எமர், தமர் என மக்கட் சுட்டுடையவாக வருவன எல்லாம் கொள்க. மேலும் பிற மற்றை என்றாற் போன்ற இடைச் சொல்லடியாகவும் வரும்.

எ.டு: பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையவர் எனவரும். மன்னர் என்பது மன் என்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயராகும்.

இனி நன்னூலாசிரியர் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றிய சொற்கள் னகர ளகர ரகர ஒற்றீறாக வருவனவும், சுட்டுவினாவின்வழி வருவனவும், உயர்திணைப் பெயர் என்பார். பொருளாதி ஆறன் அடிப்படையில் னகர ளகர ஈறாக வருவனவற்றுள் பல பொதுப் பெயராதற்கும் உரியவாகும் என்பதை அவர் கருதவில்லை. மற்றும் சினைப்பெயர், குழுப் பெயர், எண்ணுப் பெயர்களைப் பொருட் பெயராகவும், சாதி குடி ஆயவற்றைக் குணப் பெயராகவும் அடக்கிக் கூறுகின்றார். அவர் கூறும் இலக்கணம் வருமாறு

## உயர்திணை ஆண்பாற் பெயர்கள்

அவற்றுள்,

"கிளை எண் குழூஉ முதற் பல் <u>பொருள்;</u> திணை, தேஎம்
ஊர் வான் அகம் புறமுதல <u>நிலன்;</u> யாண்டு
இருது மதிநாள் ஆதிக் <u>காலம்</u>
தோள் குழல் மார்புகண் காது <u>முதல் உறுப்பு</u>
அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி
சாதி குடி சிறப்பு ஆதிப்பல் <u>குணம்</u>
ஓதல் ஈதல் ஆதிப்பல் <u>வினை</u>
இவையடை சுட்டு, வினா, பிற மற்றோடு
உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ
விடலை கோ வேள் குரிசில் தோன்றல்
இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப" (நன்.276)

## உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

"கிளை முதலாகக் கிளந்த பொருள்களுள்
ளவ் வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்

*தோழி செவிலி மகடூஉ நங்கை*
*தையலோ டின்னன பெண்பாற் பெயரே"* (நன்.277)

*"பலர்பாற் பெயர்கள்*
*கிளந்த கிளைமுதல் உற்றரவ் வீற்றவும்*
*கள்ளென் ஈற்றின் ஏற்பவும் பிறவும்*
*பல்லோர் பெயரின் பகுதி யாகும்"* (நன்.278)

தொல்காப்பியர் அறிவியல் நோக்கிற் பகுத்துப் பல்வேறு முறையில் விரித்துச் சொன்னவற்றை நன்னூலாசிரியர் னகர, ளகர, இகர, ரகர ஈறுகளுடையவாக வருவனவெல்லாம் உயர்திணைப் பெயர்கள் எனக் கொண்டு இங்ஙனம் கூறிச் சென்றார்.

## அஃறிணைப் பெயர்கள்

அஃறிணைப் பொருள்கட்குரிய இயற்பெயர்கள் யாவும் மக்கட்குக் குறியீட்டுப் பெயராக. இடுபெயராக இட்டுவழங்கப் பெறுதலின் அவை பொதுப் பெயராக நிற்கும். ஆதலின், அவையல்லாத சுட்டு வினா முதலியவற்றின் அடிப்படையில் ஆக்கம் பெறுவனவே. அஃறிணையை வரைந்து சுட்டும் பெயர்களாக வரும். அஃறிணைப் பெயர்கள் ஆண் பெண் என்னும் பால் பற்றியமையாமல் ஒருமை பன்மை என்னும் பால்பற்றி அமைக்கப் பெறுதலின் அஃறிணை ஒருமை ஈறாக வரும் துவ்வும் பன்மையீறாக வரும். அவ்வும் வையும் ஈறாக உருவாவன வெல்லாம் அஃறிணைப் பெயர்களாக வரும். அஃறிணைப் பெயர்கள் பற்றித் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது.

*"அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்*
*அவை முதலாய ஆய்தப் பெயரும்*
*அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்*
*அவைமுத லாகிய வகரப் பெயரும்*
*யாதுயா யாவை என்னும் பெயரும்*
*ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்*
*பாலறி வந்த அஃறிணைப் பெயரே"* (தொல்.சொல்.164)

ஒருமைச் சுட்டுப் பெயர் ஆறு, பன்மைச் சுட்டுப்பெயர் ஆறு, வினாப் பெயர் மூன்று ஆக பதினைந்து. அடுத்து,

*"பல்ல பலசில என்னும் பெயரும்*
*உள்ள இல்ல என்னும் பெயரும்*
*வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்*
*இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்*
*ஒப்பின் ஆய பெயர் நிலை உளப்பட*
*அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன"* (தொல்.சொல்.165)

1) பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்பவை வினைக்குறிப்பு முற்றாயும் வரும். எனினும் இவை எழுவாயாக நின்று பயனிலைகளைக் கொள்ளுமிடத்தும் பெயர்களாம். இவை ஒவ்வொன்றும் பல்ல, பல, பல்லவை, சில்ல, சில - சில்லவை என விரிந்தும் வரும்.

2) வினைப் பெயர்க் கிளவியாவன:

வினையாலணையும் பெயர்களும் காரணப் பெயர்களுமாம் அவை: வருவது, செல்வது, வருபவை, செல்பவை, உண்பது, உண்டன எனவும், மண்வெட்டி, கோடரி, இடிதாங்கி சேர்ந்தாரைக் சொல்லி என்றாற் போலவும் வரும்.

3) பண்புகொள் பெயராவன:

வண்ணம், வடிவு, அளவு, சுவை, குணம் பற்றி வருபவையாம். அவை:- கரியது, வெளியது, கரியவை, வெளியவை, கரியன, வெளியன, குறியது, நெடியது, குறியவை, நெடியவை, பெரிது, சிறிது, பெரியவை, சிறியவை, தீயது, தீயவை, இனியது, இனியவை, நல்லது, நல்லவை எனவரும்.

4) எண்ணுக்குறிப் பெயராவன:

பொருளைக் குறித்து நிற்கும் எண்ணுப் பெயர்களாம். ஒன்று(பால் கறந்தது) இரண்டு (ஏர் உழுதன) ஐந்து (பூதங்கள்)என்றாற் போலப் பொருளைத் தம்முள் அடக்கி நிற்பனவும் எண்ணாகிய தொகை உணர்த்துவனவும் அஃறிணைப் பெயர்களாம்.

5) ஒப்பினாகிய பெயராவன:

ஒப்புமை உணர்த்தும் உவம இடைச் சொல்லடியாக வருவனவாகும்.

எ.டு: அன்னது, அன்னவை, ஒத்தது, ஒத்தவை, போல்வது, போல்பவை

இனி யானை, குதிரை, மயில், புறா, பாம்பு, மீன், தென்னை, பனை எனவரும். அஃறிணை இயற்பெயர்கள் அவ்வவ் இனத்தைச் சுட்டும் பெயர்களாதலின் இது யானை, இவையானை, யானை வந்தது, யானை வந்தன என ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக நிற்கும் பயனிலையாக வந்து முடிக்கும் சொற்கள் ஒருமையையோ பன்மையையோ உணர்த்தும். பயனிலையின்றிப் பெயரளவில் பன்மையுணர்த்த வேண்டின்

'கள்' என்னும் விகுதி சேர்த்தல் வேண்டும். 'கள்' விகுதி சேர்ந்தவிடத்து அவை ஒருமைப் பயனிலையோடு முடியா. பன்மைப் பயனிலை கொண்டே முடியும். இதனைத் தொல்காப்பியம்,

"கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே" (தொல்.சொல்.166)

என உணர்த்துகிறது. கள்ளொடு கூடாதவழி அஃறிணை இயற்பெயர் யானை வந்தது, யானை வந்தன எனவரும். கள்ளொடு கூடி யானைகள் என நிற்குமிடத்து யானைகள் வந்தது எனமுடியாது. யானைகள் வந்தன என்றே முடியும், அஃறிணை இயற்பெயர்கள் பெயர்ப் பயனிலைகளோடும் முடியும். சிலஎடுத்துக் காட்டுக்கள் வருமாறு:-

எ.டு:- யானை இது, யானை இவை, ஆ ஒன்று, ஆசில, ஆபல என்றும், பத்து யானை, பத்து யானைகள் என்றும் வாய்மை நன்று, வாய்மை நல்ல, பொருள் இனிது, பொருள் இனிய என்றும் வரும்.

அஃறிணை இயற்பெயர்களை, இயற்பெயர் என்றும், பால்பகா அஃறிணைப் பெயர் என்றும், அஃறிணை பொதுப் பெயர் என்றும் கூறுவர். பிற விளக்கங்களைப் பொதுப் பெயரிலக்கணத்துள் கண்டு கொள்க.

## பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர்

விரவுப் பெயர்கள் காரணம் பற்றியும், காரணம் தெற்றெனப் புலப்படாமலும், காரணமின்றியும் ஒரு பொருளுக்கு வழங்கற்பாடுபற்றிய குறியீடாக வரும்.

மக்கள் என்னும் இனம் ஒன்றேயாதலின் மக்களுள் ஒவ்வொருவரையும் குறித்துச் சுட்ட வேண்டுமிடத்து அஃறிணைப் பெயர்களையே பயன்படுத்துவர். ஒரு பெயரின் ஈறுபற்றிச் சிறுபான்மை அவை ஆண் என்றும் பெண் என்றும் அறியப்படும். உதாரணமாக மக்கட்குப் பின்வருமாறு பெயர் அமைந்து வழங்கப்படுதலைக் காணலாம்.

பழநி, அண்ணாமலை, சிதம்பரம், காசி, கங்கை, காவேரி, முத்து, மாணிக்கம், மணி, மாசிலாமணி, மலர், மலர்க்கொடி, மயில், அருள், அன்பு, அன்புமணி, தென்றல், தாமரை, முல்லை, செந்தாமரை, எனவும், தெய்வம் சுட்டிய பெயர்களாக திருமால், நாமகள், முருகு, பரமசிவம், வள்ளி, தெய்வயானை எனவும்

பலவாறாக வழங்கப் பெறுதலைக் காணலாம். மற்றும் உறுப்புக் காரணமாகச் செவிடு, ஊமை, நொண்டி எனவும் வரும். எல்லாப் பெயர்களும் பொருளாதி அறுவகைப் பெயர்களுள் அடங்குமாதலின் இடுபெயர்கள் யாவும் அவற்றுள் அடங்கும்.

உயர்திணையாகிய மக்கள் உடலமைப்பும் உணர்வும் காரணமாகச் ஆண் பெண் என இருவகையாக அமைவர். அஃறிணை உயிர்களுள் உறுப்புக்களால் ஆண் பெண் அறிய நிற்பவை சில. அவை புலப்படாமல் நிற்பவை சில. அவையிரண்டு மில்லாதவை பல.

உயர்திணைப் பலர்பாற் பெயர்கள் தெளிவாகப் பால்காட்டி நிற்றலின் அவை உயர்திணைக்கே உரியவை. அவை விரவுப் பெயராக வாரா. நன்னூலாசிரியர் கள் விகுதியை உயர்திணைக்கும் உரியதாகக் கொண்டமையால் பலர்பாலிலும் விரவிவரும் எனப் பெருளமைப்பு நோக்காமல் கூறிச் சென்றார். ஆண் பெண் ஆகிய பால்பற்றி வரும் இடுபெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்களாக வரும். அஃறிணை ஒருமைப் பெயர் உயர்திணை ஆண் ஒருமை, பெண்ணொருமை, அஃறிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாக வரும். பால்பகா அஃறிணை இயற்பெயர்கள் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் நான்கற்கும் பொதுவாக வரும். அதனான் இத்தகு பெயர்கள் பன்மை விரவுப் பெயர் எனப்படும். விரவுப் பெயர்கள் பற்றித் தொல்காப்பியம் உணர்த்தும் விதிமுறைகளை இனிக் காண்போம்.

## விரவுப்பெயர் வகைகளும் விரிவும்

*"இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே*
*முறைப்பெயர்க் கிளவி, தாமே, தானே*
*எல்லாம் நீயிர் நீஎன்க் கிளந்து*
*சொல்லிய வல்ல பிறவும் ஆஅங்கு*
*அன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே"*

(தொல்.சொல்.171)

இயற்பெயர் என்பவை உறுப்புக்களோடு (சினைகளோடு) கூடிய முதற்பொருளுக்கு இட்டு வழங்கும் பெயர். சினைப்பெயர் என்பவை முதற்பொருளின் அங்கங்களுக்கு (உறுப்புக்கட்கு)ரிய பெயர். சினைமுதற் பெயர் என்பவை சினைப் பெயர்களை அடையாகக் கொண்டுவரும். முதற்பெயர்கள், இவை மூன்றும் ஒவ்வொன்றும் ஆண்மை, பெண்மை, ஒருமை, பன்மை என நான்கு நான்கு வகைப்படும். அம்முறையில் அவை ஆண்மை

முதற்பெயர், பெண்மை முதற்பெயர், ஒருமை முதற்பெயர், பன்மை முதற்பெயர் என்றும், ஆண்மைச் சினைப்பெயர், பெண்மைச் சினைப் பெயர், ஒருமைச் சினைப் பெயர், பன்மைச் சினைப் பெயர் என்றும், ஆண்மைச் சினை முதற்பெயர், பெண்மைச் சினைமுதற்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர், பன்மைச் சினைமுதற் பெயர் என்றும் பன்னிரண்டாக வரும்.

**முறைப் பெயர் என்பது :**

பிறப்புத் தொடர்பாக அமைந்த உறவுப் பெயர்கள். அவையாவன:- தாய், தந்தை, மகன்,மகள் என்பனவாகும் மற்றுத் தம்முன், தம்பின், தமக்கை, தங்கை, மாமன், மாமி, பாட்டன், பாட்டி, பெயரன், பெயர்த்தி என்பவை அஃறிணை உயிர்களுக்கு அமையாமையான் அவையும் தமன், தமள், தமர் முதலாகவரும் கிளைப் பெயர்களும் உயர்திணைக்கே உரியவாக வரும். விரவுப் பெயராக வாரா என அறிக. தாம், தான் என்பவை படர்க்கைப் பெயர்கள். நீயிர், நீ என்பவை முன்னிலைப் பெயர்கள். எல்லாம் என்பது இடப் பொதுப் பெயர். எனினும் உயர்திணையில் தன்மைக்கும், அஃறிணையில் படர்க்கைக்கும் உரியதாக வரும். அல்லபிற என்பவை மேற்கூறப்பெற்ற பத்தொன்பதும் அல்லாமல் பிறவாறு வரும் காரணப் பெயர்களும் இடுபெயர்களுமாம். அவை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் பற்றி வருவனவாகும்.

திணை என்பது உயர்திணை அஃறிணை என இரண்டேயாம். பொதுத் திணை என மூன்றாவதாக ஒரு திணையில்லை. சிலபெயர்கள் இருதிணைகளுக்கும் பொதுவாக நிற்கும். அங்ஙனம் திணைப் பொதுவாக நிற்கும் சொற்களைத் திணைப் பொது என்பர். இவ்விரு சொற்களும் முன்பின்னாக மாறிப் பொதுத் திணை என அமைந்தது. திணைப் பொதுவாக நிற்கும் பெயர்கள் தொடராகுமிடத்து எய்தும் பயனிலைகளால் பொதுமை நிலைநீங்கி இருதிணைகளுள் ஒன்றற்கு உரியனவாகிவிடும் பயனிலைகள் பெயராகவோ, வினையாகவோ, குறிப்பு வினையாகவோ வரும்.

எ.டு:- சாத்தன் இவன், சாத்தன் வந்தான், சாத்தன் நல்லன் என வரும் பயனிலைகளால் சாத்தன் என்னும் பெயர் உயர்திணை ஆண்மைப்பாலாக அடங்கும். சாத்தன் இது, சாத்தன் வந்தது, சாத்தன் வலிது எனவரும் பயனிலைகளால் சாத்தன் என்னும் பெயர் அஃறிணை ஆண்மைப் பாலாகின்றது.

இவ்வாறு பெண்மைப்பாலும் சாத்தி இவள், சாத்தியிது என்றாற்போல வந்து பயனிலைகளால் ஒருதிணைக்குள் அடங்கி விடும். இதனைத் தொல்காப்பியம்,

"இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்
திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே" (தொல்.சொல்.169)

எனக் கூறுகின்றது. ஈண்டு வினை என்றது முடிக்கும் சொல்லாகிய பயனிலை என்னும் பொருள்பட நின்றது. இனி ஆண்மைப் பொதுப்பெயர் முதலாகிய நான்கினையும் முறையே காண்போம்.

## ஆண்மைப் பொதுப் பெயர்

"ஆண்மைசுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே"
(தொல்.சொல்.178)

ஒன்று என்பது அஃறிணை ஒன்றன்பால். ஒருவன் என்பது உயர்திணை ஆண்பால். ஈண்டு ஆண்மை என்றது ஆண்மைத் தன்மை யுணர்த்தும் பால்காட்டும் விகுதியைச் சுட்டும் .

**ஆண்மையியற் பெயர் வருமாறு:**

சாத்தன் வந்தது, சாத்தன் இவ்எருது (அஃறிணை) சாத்தன் வந்தான், சாத்தன் இவன் (உயர்திணை) சாத்தன் என்பது இட்டு வழங்குதற்காக அவ்இருதிணைப் பொருள்களுக்கும் அமைந்த பெயராகும் செயற்கைப் பெயர்.

**ஆண்மைச் சினைப்பெயர் வருமாறு:**

முடவன் வந்தது, முடவன் இவ்எருது (அஃறிணை) முடவன் வந்தான், முடவன் இவன் (உயர்திணை)

**ஆண்மைச் சினைமுதற்பெயர் வருமாறு:**

முடக்கால் கொற்றன் வந்தது, முடக்கால் கொற்றன் இவ்எருது (அஃறிணை) முடக்கால் கொற்றன் வந்தான், முடக்கால் கொற்றன் இவன் (உயர்திணை)

**ஆண்மை முறைப்பெயர் வருமாறு:**

தந்தை வந்தது, தந்தை இவ்எருது (அஃறிணை) தந்தை வந்தான், தந்தை இவன் (உயர்திணை) பெயர்ப் பயனிலைகள் சுட்டுப் பெயராயும் வினாப் பெயராயும் எண்ணுப்பெயராயும் முறைப் பெயருள் ஆண் பெண் வேறுபாடு காட்டும் பெயர்களும் வரும். எ.டு:- சாத்தன் ஒன்று, சாத்தன் ஒருவன்

எனவும் முறைப் பெயர் தந்தை இக்காளை, தந்தை இவ்அரசன் எனவும் வரும்.

## பெண்மைப் பெயர்

*"பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே"*

*(தொல்.சொல்.177)*

**பெண்மை சுட்டிய இயற்பெயர் வருமாறு:**

*சாத்தி வந்தது, சாத்தி இது, சாத்தி வந்தாள், சாத்தி இவள், சாத்தி ஒன்று, சாத்தி ஒருத்தி எனவரும்.*

**பெண்மை சுட்டிய சினைநிலைப் பெயர்:**

*முடத்தி வந்தது, முடத்தி இது, முடத்தி வந்தாள், முடத்தி இவள்*

**பெண்மை சுட்டிய சினைமுதற்பெயர்:**

*முடக் கொற்றி வந்தது, முடக் கொற்றி இது, முடக்கொற்றி வந்தாள், முடக் கொற்றி இவள் எனவரும்.*

**பெண்மை சுட்டிய முறைப் பெயர்:**

*தாய் வந்தது, தாய் இது, தாய் இப்பசு, தாய் வந்தாள், தாய் இந்நங்கை எனவரும்.*

## ஒருமை சுட்டிய பெயர்

*"ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே"*

*(தொல்.சொல்.180)*

*ஒருமைப் பொதுப் பெயர்கள் பால்காட்டும் சிறப்பு விகுதிகளைப் பெறாமல் அஃறிணை இயற்பெயராக வரும். ஒருவர் என்பது ஆண்மைப் பால் பெண்மைப்பால் இரண்டையும் குறித்து நின்றது. எனவே ஒருமை சுட்டிய பொதுப் பெயர்கள். அஃறிணை ஒருமை, உயர்திணை ஆண் ஒருமை, உயர்திணைப் பெண்ணொருமை மூன்றற்கும் பொதுவாய் நின்று பயனிலைகளால் ஒரு திணைக்கும் பாலுக்கும் உரியவாக வரும்.*

**ஒருமை சுட்டிய இயற்பெயர்:**

*கோதை வந்தது, கோதை இது, கோதை வந்தான், கோதை இவன், கோதை வந்தாள், கோதை இவள் என வரும்.*

**ஒருமை சுட்டிய சினைப் பெயர்:**

செவியிலி வந்தது, செவியிலி இது. செவியிலி வந்தான், செவியிலி இவன், செவியிலி வந்தாள், செவியிலி இவள் எனவரும்.

**ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர்:**

கொடும்புற மருது வந்தது, கொடும்புற மருது வந்தான், கொடும்புற மருதுவந்தாள் எனவரும். பெயர்ப் பயனிலைகளைக் கூட்டிக் கண்டு கொள்க. (கொடும்புறம்=வளைந்தமுதுகு)

உரையாசிரியன்மார் கொடும்புற மருதி என உதாரணம் காட்டியுள்ளனர். அஃது ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழையாகும் மருதி எனின் அவ் இகர ஈறு பெண்பாற் குரியதாகலின் ஆண்பாலைச் சுட்டாது. ஆதலின் மருது என்பதே செம்மையானது என அறிக.

## பன்மை சுட்டிய பொதுப் பெயர்

*"பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றே பலவே ஒருவர் என்றும்*
*அன்றிப் பாற்கும் ஓரன் னவ்வே"* (தொல்.சொல்.179)

பன்மை சுட்டிய இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயர்கள் அஃறிணை ஒருமைப்பால் அஃறிணைப் பன்மைப்பால் உயர்திணை ஆண் ஒருமை பெண்ணொருமை ஆகிய நான்கு பாலுக்கும் பொதுவாக வரும். பயனிலைகளால் அவை பாலும் திணையும் உணர்த்தும். அவ் என்னும் சுட்டுப் பெயர் அன்றி எனத்திரிந்து நின்றது. அச்சு நூல்களிற் என்றிப்பாற்கும் என உள்ளது பிழையாகும். காரணம் என்னும் என மேல்கூறப் பட்டுள்ளமையின். மீண்டும் என்று என வாராது. என்னும் என்பதன் பின் சுட்டுச் சொல்தான் வரும் என அறிக. இந்நூற்பாவிற்குப் பழைய உரையாசிரியர்கள் ஒவ்வா உரை கூறிச் சென்றனர். தெளிவான விளக்கத்தை எனது ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

**பன்மை சுட்டிய இயற்பெயர்:**

யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் என வரும். யானை, புலி, வேம்பு முதலிய பெயர்கள் அஃறிணையில் இயற்கைப் பெயராயும், உயர்திணையில் இடுபெயராகவும் வரும். செந்தாமரை, நவமணி முதலிய பெயர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைந்து வழங்குதலைக் காணலாம்.

**பன்மை சுட்டிய சினைப் பெயர்:**

நெடுங்கழுத்து வந்தது, நெடுங்கழுத்து வந்தன, நெடுங்கழுத்து வந்தான், நெடுங்கழுத்து வந்தாள் எனவரும்.

**பன்மை சுட்டிய சினைமுதற்பெயர்:**

பெருங்கை யானை வந்தது, பெருங்கை யானை வந்தன. பெருங்கை யானை வந்தான், பெருங்கையானை வந்தாள் என வரும். ஏனைய பெயர்ப் பயனிலைகளைச் சேர்த்தும் கண்டு கொள்க.

**1) தாம்-தான்:**

இவை இருதிணைப் படர்க்கைப் பொதுப்பெயர். தாம் ôù ÷ñ - î£ù ¢å¼¬ñ. எ.டு:- தாம் வந்தன, தாம் வந்தனர், தாம் நல்லன, தாம் நல்லவர், தான் வந்தது, தான் வந்தான், தான் வந்தாள், தான்வலிது, தான் வலியன், தான் வலியள் எனவும், தாம் பல, தாம் பலர், தான் ஒன்று, தான் ஒருவன் தான் ஒருத்தி எனவும் வரும்.

**2) நீயிர்-நீ:**

இவை இருதிணை முன்னிலைப் பெயர் நீயிர் பன்மை. நீ ஒருமை. எ.டு:- மக்காள் நீயிர் வம்மின், கண்காள் நீயிர் காணன் மின் எனவும், நம்பீ நீ வருக, நங்காய் நீ வருக, பெரியீர் நீயிர், நல்லீர், நம்பீ நீ நல்லை, நங்காய் நீ நல்லை, கிள்ளாய் நீ நல்லை எனவரும்.

இனி விளிப்பெயர் வெளிப்படாமல் நிற்பினும் முன்னும் பின்னும் நிற்கும் சொற்களால் இவை அவ்வத் திணையைத் தெற்றெனப் புலப்படுத்தும். எ.டு:-

*"நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்*
*போதர விட்ட நுமரும் தவறிலர்"* (கலி.50)

என்புழி நீ என்பது உயர்திணைப் பெண்ணொருமையைப் புலப்படுத்துகின்றது.

*"நீயே பிறர் நாடு கொள்ளுங்காலை"* (புறம்.57)

என்புழி நீ என்பது உயர்திணை ஆண் ஒருமைப்புலப்பட நின்றது.

*"இன்துணைப் பிரிந்தாரை உடையையோ நீ"* (கலி.29)

என்புழி அஃறிணை ஒருமையை உணர்த்திநின்றது.

பறவைகளைக்கவர வலை விரித்துள்ள வேடன் நீயிர் அகப்படீர் எனின் அஃறிணைப் பன்மையையும், பகைவரை

வெல்லப் போர்புரியும் வேடன் நீயிர் அகப்படீர் எனின் உயர்திணைப் பன்மையையும் உணர்த்துவதை உணரலாம். பிறவற்றையும் இவ்வாறே கண்டு கொள்க.

**எல்லாம் :**

எல்லாம் என்பது பெயராயும் உரிச் சொல்லாயும் வரும். பெயராக நிற்குமிடத்து ஒன்றற்கு மேற்பட்ட பொருள்களையும் உரிச்சொல்லாக வருமிடத்து ஒரு பொருளின் பரப்பையும் உணர்த்தும். இதனை எஞ்சாப் பொருள் உரிச்சொல் என்றும் கூறுவர். எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தன என்புழிப் பெயர். உடம்பெல்லாம் நோகிறது. மேனியெல்லாம் பசந்தது என்புழி உரிச்சொல். உரிச் சொல்லாக நிற்குமிடத்து முழுதும் எனப் பொருள்தரும்.

இனி எல்லாம் என்னும் பொதுப்பெயர் உயர்திணைப் பெயராக வருமிடத்துத் தன்மையிடத்தில் மட்டுமே வரும். எழுவாய் வேற்றுமையில் சாரியையின்றியும் ஏனை வேற்றுமையில் 'நம்' என்னும் சாரியையும் பெற்றுவரும்.

எ.டு:- எல்லாம் யாம் கண்டவை, யாம் எல்லாம் உணர்ந்தேம் எனவும், எல்லா நம்மையும் அழைத்தனர், எல்லா நம்மாலும் செய்யத் தகும், எல்லா நமக்கும் வாழ்வுண்டு எனவரும். (இடைக் காலத்திலும் இக்காலத்திலும் இந்நியதி பிறழ்ந்து மூன்றிடத்தும் வருவதாயிற்று) முன்னிலையிலும் படர்க்கையிலும் வருமிடத்து எல்லீரும், எல்லாரும் என வருதலே வழா நிலையாகும். இனிப் படர்க்கையில் அஃறிணைக்கண் எல்லாம் வந்தன,. எல்லாம் உண்டன எனவரும். உயர்திணைத் தன்மைக் கண் சிலர் விகுதி கொடுத்து எல்லேமும் வந்தேம் என வழங்குவர். எம் என்னும் விகுதியே உயர்திணையைக் காட்டுதலின் எல்லேம் என்பது உயர்திணைப் பெயராவதன்றிப் பொதுப் பெயராகாதென அறிக.

**அன்ன பிறவாகவரும் பொதுப் பெயர்கள்:**

பொன்னன் வந்தான் பொன்னன் வந்தது எனப் பொருள் பற்றியும், காடன் வந்தான், காடன் வந்தது என இடம்பற்றியும், வேனிலான் வந்தான் வேனிலான் வந்தது எனக் காலம்பற்றியும், செவியன் வந்தான், செவியன் வந்தது எனச் சினைபற்றியும், தொழில்பற்றி நடையன் வந்தான் நடையன் வந்தது எனவும் வரும். ஏனைக் குறிப்பு வினைப் பயனிலை, பெயர்ப்

பயனிலைகளோடும் கூட்டிக் கண்டு கொள்க. இவ்வாறே பெண்பாற் பெயர்களோடு, பொன்னி வந்தான், பொன்னி வந்தது எனப் பொருள் முதலாய ஆறுபெயர்களோடும் கூட்டிக் கண்டு கொள்க.

ஒருவர்: ஒருவர் என்னும் உயர்திணைப் பொதுப் பெயர் ஆணொருமை பெண்ணொருமை பற்றி விரவுப் பெயராக வரும். ஒருவர் என்னும் பெயர்ச்சொல் பகுதியால் ஒருமையையும், விகுதியாற் பன்மையையும் பெற்று நிற்றலின் பயனிலையாகவரும் முடிக்கும் சொல் பன்மைச் சொல்லாகவே வரும்.

எ.டு: ஒருவர் மீசையை முறுக்கினார் (ஆண்) ஒருவர் கூந்தலைமுடித்தார் (பெண்) ஒருவர் மணம் புரிந்தார் (ஆண்) ஒருவர் வாழ்க்கைப் பட்டார் (பெண்) ஒருவர் தந்தை, ஒருவர் தாய் எனவும் வரும். ஒருவர் என்னும் சொல் பால் பிரிந்து நிற்குங்கால் ஒருவன், ஒருத்தி எனவரும்.

## இறைச்சிப்பொருள்வயின் வரும்பொதுப்பெயர்

அகப்பொருள் பற்றிய இலக்கியங்களில் இறைச்சிப் பொருள் பற்றியும், உள்ளுறை உவமம் பற்றியும், அஃறிணை இயற்பெயர்களுக்கு உயர்திணை விகுதி கொடுத்துக் கூறுதலும் அவற்றிற்கு உயர்திணைக்குரிய பண்புகளையும் செயல்களையும் ஏற்றிக் கூறுதலும் இலக்கியமரபாகும். அவ்விடத்து அவை விரவுப் பெயர்களாகா. அஃறிணைப் பெயர்களேயாம்:

எ.டு: கல்லாக் கடுவன் - மந்தி குறை கூறும் செம்மற்று மாதர்வண்டு இன்னிசைபாடும். கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு வதுவையயர்ந்த வண்பறழ்க்குமரி என்றாற் போல வரும்.

இனி அகப்பொருள் ஒழுகலாற்றின் கண் திணைப் பெயர்களாய்த் தலைமகனைச் சுட்டிவரும் இயற்பெயர் அல்லாத திணைப்பெயர்கள். காளை, விடலை, மீளி, செம்மல் என வருமிடத்து அவை உயர்திணைப் பெயர்களாகவே கொள்ளப்படும்.

## பொருள் முதலியனபற்றி வரும் மூவிடப்பெயர்கள் ஆக்க முறைமை

உயர்திணைப் பெயர் பற்றியும் அஃறிணைப் பெயர் பற்றியும் முன்னர்க் கூறியவழி தன்மை முன்னிலை படர்க்கை

இடப் பெயர்களின் அமைப்பும் சுட்டு வினாப் பெயர்களின் அமைப்பும் ஓரளவு விளங்குமெனினும் அவற்றின் சிறப்பமைப்பு முறையாவும் ஆண்டு பெறப்படாமையின் இனி அவற்றை விரிவாகக் காண்போம்

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றிய அறுவகைப் பெயர்களும், பொருண்மை சுட்டும் சுட்டுப் பெயர் வினாப் பெயர்களும், தன்மை சுட்டும் பெயர், இடம் சுட்டும் பெயர், முறைப் பெயர், உறவுப் பெயர்யாவும் ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும் ஐம்பால் பற்றியும் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இடம் பற்றியுமே ஆக்கம் பெறுதலின். மூவிடப் பெயர்களின் ஆக்கம் பற்றித் தெரிந்து கோடல் இன்றியமையாததாகும்.

**1. பொருட் பெயர்கள்**

படர்க்கை : பொன்னன் - பொன்னள் (பொன்னி) பொன்னர், பொன்னது, பொன்னவை.

தன்மை : பொன்னினென், பொன்னினேன், பொன்னினம், பொன்னினாம், பொன்னினெம், பொன்னினேம்.

முன்னிலை : பொன்னினை, பொன்னினிர், பொன்னினீர்,

**2. இடப் பெயர்**

படர்க்கை : ஊரன், ஊரள், ஊரர், ஊரது, ஊரவை

தன்மை : ஊரினென், ஊரினேன், ஊரினம், ஊரினாம், ஊரினெம், ஊரினேம்.

முன்னிலை : ஊரினை, ஊரினிர், ஊரினீர்.

**3. காலப் பெயர்**

படர்க்கை : வேனிலான், வேனிலாள், வேனிலார், வேனிலது, வேனிலவை.

தன்மை : வேனிலென், வேனிலேன், வேனிலம், வேனிலாம், வேனிலெம், வேனிலேம்.

முன்னிலை : வேனிலை, வேனிலிர், வேனிலீர்.

**4. சினைப் பெயர்**

படர்க்கை : செவியன், செவியள், செவியர், செவியது, செவியவை

தன்மை : செவியனென், செவியனேன், செவியினம், செவியினாம், செவியினெம், செவியினேம்.

முன்னிலை : செவியினை, செவியினிர், செவியினீர்.

**5. குணப் பெயர்**

படர்க்கை : கரியன், கரியள், கரியர், கரியது, கரியவை

தன்மை : கரியென், கரியேன், கரியம், கரியாம் கரியெம் கரியேம்

முன்னிலை : கரியை, கரியிர், கரியீர்.

**6. தொழிற் பெயர்**

படர்க்கை : நடையன், நடையள், நடையர், நடையது, நடையவை

தன்மை : நடையினென், நடையினேன், நடையினம், நடையினாம், நடையினெம், நடையினேம்.

முன்னிலை : நடையினை, நடையினிர், நடையினீர்

**அல்வழி - வேற்றுமை மூவிடப் பெயர்கள்**

படர்க்கை : தான், தாம் - எழுவாய் தன், தம் - வேற்றுமை தான், தன் - ஒருமை, தாம், தம் - பன்மை

தன்மை : யான், யாம், நாம் - எழுவாய். என், எம், நம் - வேற்றுமை. இவற்றுள்யான் என்பது ஒருமையாம், நாம், எம்,நம் என்பது பன்மை

முன்னிலை : நீ (நின்) நீர், நீயிர், நீவிர் - எழுவாய். நின், உன், நும், உம் - வேற்றுமை. நீ, நின், உன் - ஒருமை. நீர், நீயிர், நீவிர், நும் உம் - பன்மை. உன், உம் என்பவை உலக வழக்கில் வரும். செவ்விலக்கிய வழக்கில் வாரா.

## சுட்டுப்பெயர் - வினாப்பெயர் விளக்கம்

அஇஉ ஆஈஊ செய்யுள் வழக்கில் அன்றி இன்றி உன்றி என்பனவரும். இவை பொருள்முதலாய அறுவகைப் பெயர்கட்குமுன் அடையாக நின்று சுட்டுக் கருத்தை உணர்த்தும். இவை சுட்டுப் பெயர்கள் அல்ல. சுட்டிடைச் சொற்களாம்.

**மூவிடச்சுட்டுப் பெயர்கள்**

படர்க்கை : அவன், அவள், அவர், அது, ஆது, அவை, அவ்

முன்னிலை : (தன்மை) இவன், இவள், இவர், இது, ஈது, இவை, இவ்

முன்னிலை : (பொது) உவன்,உவள், உவர், உது, உவை, உவ்.

**இடப் பொருள் சுட்டுப் பெயர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அங்கு, | இங்கு, | உங்கு, | ஆங்கு, | ஈங்கு, | ஊங்கு |
| ஆண்டு, | ஈண்டு, | ஊண்டு, | ஆன், | ஈன், | ஊன் |
| அணி, | இணி, | உணி, | அவ்வாய், | இவ்வாய், | உவ்வாய் |
| அவண், | இவண், | உவண், | அதோளி, | இதோளி, | உதோளி |

சுட்டுப் பெயர்களுள் அது இது உது என்னும் ஒருமைச் சுட்டுக்கள் உலகவழக்கில் அந்த இந்த உந்த அத்தை - இத்தை உத்தை எனவும்வகும்.

**தன்மை யுணர்த்தும் சுட்டுப் பெயர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அங்ஙனம், | இங்ஙனம், | உங்ஙனம், | அப்படி, | இப்படி |
| ஆங்ஙனம், | ஈங்ஙனம், | ஊங்ஙனம், | அவ்வாறு, | இவ்வாறு |
| அற்று | இற்று | உற்று | | |
| அன்ன | இன்ன | உன்ன | | |

எனவரும். பெரும்பான்மையும் உகரச்சுட்டு பயின்று வருவதில்லை.

**வினாப் பெயர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| யாவன், | யாவள், | யாவர், | யாது, | யாவை |
| எவன், | எவள், | எவர், | எது, | எவை |

எனவரும்.

**இடம் பற்றிய வினாப் பெயர்கள்**

யாண்டு, யாங்கு, எங்கு

எனவரும்

**தன்மைபற்றிய வினாப்பெயர்கள்**

யாங்ஙனம், எங்ஙனம், எப்படி, எவ்வாறு எனவரும்.

**குறிப்பு வினாப் பெயர்**

எவன், யார், எனவரும்.

இனி, எவன், எவள், எவர், எது, எவை என்னும் சொற்கள் வினாப் பொருளைவிட்டு, எவனாயினும் வெல்க, எவளாயினும் சொல்க, எவராயினும் வருக. எதுவாயினும் தருக, எவையாயினும் அஞ்சேல் எனமூவகைச் சுட்டுப் பொருளையும் தம்முள் அடக்கி எஞ்சாப் பொருள்பட வருமிடத்து அவை சுட்டுப் பெயரின் பயத்தவாய் நிற்கும். செய்யுளில் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்" எனவும், "எவ்வது உறைவது உலகு" எனவும் வரும். மேலும் யாவன், யாவள் முதலியவற்றை இங்ஙனம் சுட்டுப் பொருளில் சிலர் ஆள்வர். அவ்வழி அவை எவன், எவள் முதலியவற்றின் திரிபாகும்.

மற்று யார் யாது எவன் என்பவை வினாவினைக் குறிப்பு முற்றாகவும் வரும். யாது என்பது யாவது என்றும் எவன் என்பது என் என்றும் என்னை என்றும் வடிவுதிரிந்தும் வரும்.

## மூவிடம் பற்றிய கிளைப்பெயர்கள் (கிளை-உறவு)

**தன்மை** : எமன், எமள், எமர், எமது, எம இவற்றுள் முதல்மூன்றும் எம்மான், எம்மோள், எம்மாள், எம்மார், எம்மோர் எனவும் வரும். பின்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். எமர் என்பது எமரம் எனத் திரிந்தும் வரும்.

**முன்னிலை** : நுமன், நுமள், நுமர், நுமது, நும எனவரும்.

**படர்க்கை** : தமன், தமள், தமர், தமது, தம எனவரும்

## முறைப் பெயர்கள்

| பொருள் | தன்மை | முன்னிலை | படர்க்கை | மூவிடப்பொது |
|---|---|---|---|---|
| ஈன்றவள் | யாய் | ஞாய்,ஒய் | தாய் | ஆய்,தாய், ஐயை, |
| பெற்றவன் | எந்தை | நுந்தை | தந்தை | ஐ,ஐயன்,அத்தன் |
| முன்பிறந்தோன் | எம்முன் | நும்முன் | தம்முன் | முன்னோன் |
| பின்பிறந்தோன் | எம்பின் | நும்பின் | தம்பின் | பின்னோன், அம்பி |

| | | | | |
|---|---|---|---|---|
| முன்பிறந்தோள் | எவ்வை | நுவ்வை | தவ்வை | அவ்வை, ஔவை |
| பின்பிறந்தோள் | எங்கை | நுங்கை | தங்கை | நங்கை |
| மாமன் | எம்மான் | நும்மான் | தம்மான் | அம்மான் |
| மாமி | எம்மாமி | நும்மாமி | தம்மாமி | அம்மாமி |

**உலக வழக்கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தாய் | எம்மை | நும்மை | தம்மை | அம்மை,அன்னை |
| தந்தை | என்னை<br>எமப்பன் | நுன்னை<br>நுமப்பன் | தன்னை<br>தமப்பன்<br>(தகப்பன்) | அப்பன்,ஐயன்,நாயன்<br>அச்சன்,ஆஞ்ஞான் |
| முன்பிறந்தோள் | எமக்கை | நுமக்கை | தமக்கை | அக்கை. |

எனவும் வரும்.

## "நான்" என்னும் தன்மை ஒருமைப்பெயர் பற்றிய ஆய்வுரை

தொல்காப்பியர் நான் என்பதனைத் தன்மை ஒருமைப் பெயராக ஏற்கவில்லை. தன்மை என்பது ஒரு பொருள் மட்டுமே தன்மைப் பன்மை என்பது படர்க்கையாரையும் முன்னிலையாரையும் அகப்படுத்து நிற்கும் நிலையாகும். அதனான் தன்மைப் பன்மையை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்பர். யான்,யாம் முதலிய மூவிடப் பெயர்கள்யாவும் அ இ உ என்னும் சுட்டுக்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். மூவிடப் பெயர்கட்குரிய பொருண்மையுணர்த்தும் மெய்யெழுத்துக்கள் ய்ந்த் என்பவையாகும். சுட்டெழுத்து மூன்றனுள் அ-படர்க்கைக்கும், இ - தன்மைக்கும், உ - முன்னிலைக்கும் உரியனவாகும். மெய்களுள், ய் - தன்மைக்கும், ந் - முன்னிலைக்கும், த் - படர்க்கைக்கும் உரியவாகும். மூன்றிடத்திற்கும் னகர மெய்யும் மகர மெய்யும் சொல்லாக்க விகுதியாக வரும். தமிழ் செந்தமிழாகச் செய்யப் பெற்ற காலத்து இலக்கண நூலறிஞர்கள் முன்னிலைக்குரிய உகரம் ஒருமைக்கண் நகர மெய்யொடு கூடாமல் தனித்து நிற்றலானும், பன்மையில் நகரத்தை ஏற்று நும் என நிற்பினும் அது எழுவாய்ப் பெயராக நில்லாமல் வேற்றுமைப் பெயராக நிற்றலானும், தன்மைக்குரிய இகரத்தையும் அதன் நெடிலையும் முன்னிலைக்குக் கொடுத்துத் தன்மைக்கு எகரத்தைச் சேர்த்தனர். எகரம் யகரம் யகரமெய்யொடு சேர்ந்து மொழி முதலாகமையான், ஆகாரத்தைத் தன்மை ஒருமைக் கண் சேர்த்து

யாள் என அமைத்து எகரத்தை வேற்றுமையில் பன்மைக்குரியதாக அமைத்தனர். அம்முறையில் யான், யாம், எம் எனத் தன்மைப் பெயர்களை அமைக்குமிடத்து யாம் படர்க்கையை உட்படுத்தலின் முன்னிலை யாரை உட்படுத்த நகரத்தைச் சேர்த்து நாம், நம் என்பவற்றை அமைத்தனர். முன்னிலையில் நீ, நின் ஒருமையையும், நீயிர், நும் எனப் பன்மையையும் அமைத்தனர். படர்க்கையில் சிக்கல் நேராமையின் தான், தன் என்பவற்றை ஒருமைக்கும், தாம், தம் என்பவற்றைப் பன்மைக்கும் அமைத்தனர். அதனான் உன், உம் என்பவை இலக்கணத்தில் இடப்பெறாமல் இருவகை வழக்கிலும் இலக்கியத்தில் இடம் பெற்றன.

அதனான் தன்மை ஒருமை என்பது தனி ஒரு பொருளேயாதலின் முன்னிலைக்குரிய நகரமெய் சேர்ந்த நான் என்பதை ஒருமைக் கண் நீக்கிப் பன்மையில் நாம், நம் என்பவற்றைக் கொண்டனர். அதனான் தொல்காப்பியர் நீயிர் என்னும் எழுவாய்ப் பெயரை விளக்குமிடத்து அது நும் என்பதன் திரிபு எனக் கூறினார். முன்னிலை ஒருமைக் கண் நுன் என்பதனைக் கொள்ளாமல் நீ என்பது குறுகி நின் எனவரும் என்றனர்.

## மூவிடப் பெயராக்க நிலைகள்

| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| உயிர் | எ,ஆ | இ,ஈ,உ | அ,ஆ |
| மெய் | ய் | ந் | த் |
| அல்வழி | (ஒ)யான்<br>(ப),யாம்,நாம், | நீ(நீன்)<br>நீயிர்,நீவிர்,நீர்(நீம்) | தான்<br>தாம் |
| வேற்றுமை | (ஒ) என்<br>(ப),எம்,நம் | நின்(உன்,நுன்)<br>நும்(உம்) | தன்<br>தம் |

நான் என்பது சங்க இலக்கியத்தில் அருகி அமைந்துள்ளது. சங்கப் பாக்கள் யாவும் தொல்காப்பியத்திற்குப் பின் தேன்றியவையேயாகும். தொல்காப்பியர் சகரம் அகரத் தொடு கூடி மொழிமுதலாகாது என்கிறார். சங்கப் பாக்களில் சகர முதன்மொழிகள் வருகின்றன. தொல்காப்பியர் கோடி என

ஓர் எண்ணுப் பெயர் கூறவில்லை. சங்க இலக்கியத்தில் கோடி வந்துள்ளது. விரிவான பிற விளக்கங்களை எனது மூவிடப் பெயராய்வுக் கட்டுரையிற் கண்டுகொள்க.

## வேற்றுமை இயல்

வேற்றுமை என்பது மேலே பெயரியலுள் கூறப் பெற்ற பெயர்ப் பொருள்கள், தொடரின் கண் ஆக்கம் பெறுமிடத்துப் பயனிலைகளால் எய்தும் நிலைமைகளாகும்.

வேறுபடுதல் பலவகையாக நிகழும். தென்னைக்கும் பனைக்குமுள்ள வேறுபாடு ஒருவகை. மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும், விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பறவைகட்டும் மீனினங்களும், மீனுக்கும் பாம்பிற்கும், உள்ள வேறுபாடு ஒருவகை. வெள்ளாட்டுக்கும் செம்மறிக்கும் உள்ள வேறுபாடு ஒருவகை. பெட்டைக்கும் சேவலுக்கும் உள்ள வேறுபாடு ஒருவகை. இவையெல்லாம் இயற்கையமைப்பு வேறுபாடுகளாகும்.

ஒரு பொருளே குழவி, சிறார், குமரர், முதுவர், கிழவர் என எய்தும் வேறுபாடு ஒருவகை. இதுவும் இயற்கையே கற்றார் கல்லார், நல்லோர் கயவர், வீரர் கோழை என அமையும் வேறுபாடு ஒருவகை. இவை இயற்கையும் செயற்கையுமாக அமையும். ஒருவரே தந்தை, பாட்டன், அண்ணன், தம்பி, மைத்துன், கணவன் என எய்தும் வேறுபாடு ஒருவகை. இஃது இயற்கை காரணமாக அமைந்த செயற்கை வேறுபாடு.

இனி உடுத்துள்ள உடையால் இவர் காவலர், இவர் போர் வீரர், இவர் வழக்கறிஞர், இவர் பணியாளர், எனக்காட்டும் வேறுபாடு ஒருவகை. அணிகலன்களால் இவள் மணாட்டி, இவள் கைம்மணாட்டி என அறிவது ஒருவகை. இவை செயற்கை வேறுபாடு.

அம்முறையில் பெயர்ப் பொருள்கள் எய்தும் வேற்றுமை என்பது உறவு காரணமாக முறைமை வேறுபடுவதும், உடையும் அணியும் காரணமாக நிலை வேறுபடுவதும் போன்றதாகும்.

ஒரு பெயர்ப் பொருள் தன் செயல்களாலும், பிறவற்றின் செயல்களாலும் எய்தும் நிலைமைகளே ஈண்டு வேற்றுமை

எனப்படும். அவ்வேறுபாடுகளை இலக்கண நூலார் எட்டுவகையாகப் பகுத்து அமைத்துள்ளனர். அவற்றை உணர்த்தும் அடையாளங்களாக உருபுகளைப் படைத்துள்ளனர். இவ்எட்டு வேற்றுமைகளையும் காரண காரிய முறையில் வரிசைப்படுத்தி எண்ணுமுறையாலும் உருபுகளின் பெயராலும் பொருள் வகையாலும் பெயர் கொடுத்துள்ளனர். அம்முறை வருமாறு:

| வேற்றுமை எண் | உருபு | பொருள் |
|---|---|---|
| முதல் வேற்றுமை | அப்பெயரேஉருபு | எழுவாய் (கருத்தா) |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | செயப்படு பொருள் |
| மூன்றாம் வேற்றுமை | ஒடு,ஆன்,இன் | கருவி, காரணம், ஏதுப் பொருள் |
| நான்காம் வேற்றுமை | கு | கொள்ளுதல், ஏற்றல் |
| ஐந்தாம் வேற்றுமை | இன் | எல்லை, நீக்கம் |
| ஆறாம் வேற்றுமை | அது (அ) | உடைமை, கிழமை |
| ஏழாம் வேற்றுமை | கண் முதலியவை | பல்வகை இடம் |
| எட்டாம் வேற்றுமை | வடிவுதிரிதல் | விளி-படர்க்கை முன்னிலையாதல். |

இவற்றுள் எட்டாம் வேற்றுமையாவது படர்க்கை முன்னிலையாவதன்றிப் பிற வேறுபாடுகளைக் காட்டாமையானும், இயல்பும் திரிபுமாக நிற்றலன்றித் தனக்கென உருபுகள் இன்மையானும், பண்டைய நூலாசிரியன்மார் விளியை எழுவாயுள் அடக்கி வேற்றுமையை ஏழாகக் கொண்டிருந்தனர். வடநூலாரும் எட்டாம் வேற்றுமை என்னாமல் சம்புத்தி சம்போதனா என்று கூறுவர். தமிழ் செந்தமிழாகச் செம்மையுற்ற காலத்தில் தமிழறிஞன்மார் எழுவாய்க்கும் விளிக்கும் உள்ள பல வேறுபாடுகளை எண்ணி, விளிக்கப் பெறுதலால் தனியாக எண்ணி வேற்றுமை எட்டே எனவரையறை செய்தனர். இதனைத் தொல்காப்பியர் ஏற்று

"வேற்றுமை தாமே ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"

(தொல்.சொல்.63)

என உறுதி செய்து விளி வேற்றுமையை விரிவாக விளக்கிச் சென்றார். இவற்றை வழங்குதற்குரிய பெயர்க்குறியீடாக உருபுகளின் பெயர்களையே அமைத்து,

"அவைதாம் பெயர் ஐ ஒடு கு
இன்அது கண்விளி என்னும் ஈற்ற" (தொல்.சொல்.65)

என்றனர்.

ஒரு பொருட் பெயர் எழுவாய் முதலாக விளி கொள்வது ஈறாக வேற்றுமைப்படும் நிலையை அவை கொள்ளும் பயனிலைகளைக் கொண்டன்றித் தெரிய இயலாதாகலான் தமிழ் நூலார் வேற்றுமை செய்வது பெயரும் வினையுமாக நின்று முடிக்கும் பயனிலைகளே பெயர்ப் பொருளை வேற்றுமை செய்யும் என விதித்தனர். உருபுகள் அவ்வேற்றுமையைத் திரிபு இன்றி உணர்த்தும் அடையாளங்களே என உணர்த்தினர்.

அதனான் வேற்றுமை நிலைகளைக் கூறுமிடத்து முதல்வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே என்றும், இரண்டாம் வேற்றுமை வினையே, வினைக் குறிப்பு அவ்விரு முதலிற் றோன்று மென்றும், மூன்றாம் வேற்றுமை வினைமுதற் கருவி அனைமுதற்று என்றும் நான்காம் வேற்றுமை எப்பொருளாயிலும் கொள்ளும் என்றும், ஐந்தாம் வேற்றுமை இதனின் இற்று, இது என்றும் ஆறாம் வேற்றுமை இதனது, இது என்றும், ஏழாம் வேற்றுமை வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின் அனைவகைக் குறிப்பிற்றோன்றும் என்றும், தொல்காப்பியம் கூறுகின்றது.

சமற்கிருதம் என்னும் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் வேற்றுமைக் கொள்கை ஒன்றே எனப் பிழையாக உணர்ந்தமையான் பவணந்தி முனிவர் வடமொழி மரபை உட்கொண்டு உருபுகளே எட்டுவேற்றுமைகளையும் செய்யும் எனக் கூறிச் சென்றார். மற்றும் ஒருவர் ஒரு கருத்தைப் பேசுமிடத்து அக்கருத்திற்குரிய பொருட் பெயர்களை இருதிணைப் பொருட் பெயர்களினின்றும் பிரித்து எடுத்துக் கொண்டு அவற்றின் செயல்களைக் கூறுவர். அங்ஙனம் பலவாகக் கிடக்கும் பொருட் பெயர்களின்று தான் கருதிய பெயர்ப் பொருள்களைப் பிரித்து எடுத்துக் கொள்ளும் நிலையில்

அவையாவும் முதலாவது வேற்றுமையை எய்திவிடுகின்றன. பின்னர் அவற்றை எழுவாய் வேற்றுமைகளில் கையாளுமிடத்து அவ்வவ் வேற்றுமைப் பொருளாகின்றன. பெயர் என்னும் முதல் வேற்றுமைப் பெயர்களே பின்னர்ச் செயப்படு பொருள் முதலாய வேற்றுமைகளை எய்துகின்றன. அதனான் தொல்காப்பியர்,

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே"

(தொல்.சொல்.66)

என்றும்,

"கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப" (தொல்.சொல்.70)

என்றும் கூறினார். ஈண்டுப் பெயர் என்றது வினை முதலாக எடுத்துக் கொண்ட பெயர்களையேயாம். அவை பிறவேற்றுமை நிலையை, எய்தும் போது எழுவாய் நிலையை இழந்துவிடும். இவற்றையெல்லாம் உணராத இடைக்கால நூலோர் பெயர் என்பதனைப் பொதுவாகப் பெயர்ச் சொற்கள் எனக் கொண்டனர். அவ்வாறே கருதிய பவணந்தி முனிவரும் வேற்றுமைபற்றிய இலக்கணம் கூறுமிடத்து,

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" (நன்.291)

என்றும் அங்ஙனம் வேற்றுமையைச் செய்வன அவ்வுருபுகளே என்பார்

"பெயரே, ஐஆன் குஇன் அதுகண்
விளி என்றாகும் அவற்றின் பெயர் முறை" (நன்.292)

என்று கூறிச் சென்றார். ஈண்டு இங்ஙனம் கூறியதை மறந்து வினையியலுள் வினைச்சொல் இலக்கணம் கூறுமிடத்து,

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" (நன்.326)

என்கிறார். பவணந்தியாரின் இம்முரண்பாட்டிற்குக் காரணம் வடமொழியைக் குறிக்கோளாகக் கொண்டமையேயாம்.

வடமொழியாளர் பிராதிபதிகம் என்னும் மூலப் பெயர்கள் 'சுப்' என்னும் உருபுகளை ஏற்றவிடத்து அவை வேற்றுமைகளை உணர்த்தும் எனக் கொண்டுள்ள மையேயாம். வேற்றுமையை விபத்தி என்றும், வேற்றுமைப் பொருள்களைக் காரகம் என்றும் வடநூலார் கூறுவர்.

மேலும், வேற்றுமை பற்றிய மரபுகளைத் தொடர் மொழியமைப்பில்தான் காண இயலும், வேற்றுமை என்பது

தனிச்சொல் பற்றிய இலக்கணம் அன்று. இடைச் சொல்லும் வினைச் சொல்லும் தொடர்ந்தாலன்றி வேற்றுமை நிலை புலப்படாது. இதனைச் சிறிதும் எண்ணாத இடைக்கால நூலார் வேற்றுமையைப் பெயர்ச் சொல்லுக்குரிய இலக்கணமாகக் கொண்டுவிட்டனர். அம்முறையில் பவணந்தியாரும் வேற்றுமை இலக்கணத்தைப் பெயரியலுள் பெயருக்குரிய இலக்கணமாகக் கூறிச்சென்றார்.

இனி, வேற்றுமை உருபுகளை ஏற்பது எழுவாயாக, அஃதாவது வினைமுதலாகத் தோன்றும் முதல் வேற்றுமைப் பெயர் என்னாமல் பெயர்ச் சொல் உருபேற்று வேற்றுமைப்படும் எனக்கொள்ளின் நேரும் இழுக்கு என்னை யெனின், பொருள் இடம் காலம் சினை குணம் தொழில்பற்றி உருவாகும் சொற்கள்யாவும், பெயர்வினை இடை உரி என்பவற்றிற்குப் பொதுவாகவே நிற்கும். அவை தொடரின்கண் உறுப்பாக வருமிடத்துத்தான் ஒன்றற்கு உரியவாகும். அடிப்படைச் சொற்கள் யாவற்றிற்கும் உரிச்சொல் என்பது பொதுப் பெயராகும்.

அஃதாவது, மதி என்னும் சொல் தொடரின்கண் மதி எழுந்தது, மதியைத் தொழுதான், மதிமுகம் எனவருமிடத்து அது நிலாவை உணர்த்திப் பெயர்ச் சொல்லாக நிற்கும். சான்றோரைமதித்தான், மன்னன் மதிக்கும் மாவீரன், ஒழுக்கத்தை மதி எனவருமிடத்து வினைச்சொல். கேண்மதி, சென்மதி என வருமிடத்து முன்னிலையசை இடைச்சொல். மதி என்னும் ஈரெழுத்தொருமொழி சொற் கூட்டத்தில் கிடக்குமிடத்து, ஒன்றற்குரியதாகக் கிடவாது, ஒரு சொல்லைப் எப்பொருளில் பயன்படுத்தப் பேசுவோன் எடுக்கின்றானோ அப்பொழுதுதான் அது ஒன்றற்குரியதாக எழும். அங்ஙனம் கூறுவோன் கருத்திற்கேற்ப எழுதலின் முதல் வேற்றுமையைப் பெயர் தோன்றும் நிலை என்றார் தொல்காப்பியர். அதனான் அதனை எழுவாய் வேற்றுமை என அமைத்தனர். ஒரு சொல் தொடக்கம் பெறாதநிலையில் பெயர்ச் சொல் உருபேற்கும் எனல் வழுவாகும்.

எண்ணற்றவனவாக உள்ள இருதிணைப் பொருளைச் சுட்டி வழங்கற்கு இடப்படும் குறியீடுகளே பெயர் எனப்படும். அப்பொருள்களுள் ஒன்றைப் பற்றியோ பலவற்றைப் பற்றியோ பேசப்புகுமிடத்து எவ்வெப்பொருள் எடுத்துக் கொள்ளப் படுகின்றனவே அவை அப்பெயர்க் கூட்டத்தினின்று பிரியும் அங்ஙனம் பிரியும் நிலையே பெயர்ப் பொருள்களின் கண் நிகழும் முதல் வேறுபாடு. சொல்லிலக்கண முறையில் முதல்

வேற்றுமை, பின்னர் அவ்வப் பொருள்களின் செயல் தன்மைபற்றிப் பேசுமிடத்து முதல் வேற்றுமைப்பட்டுத் தோன்றிய பெயர்ப் பொருள்தானே செயல்படுமிடத்து எழுவாய் வேற்றுமையாக அஃதாவது முதல் வேற்றுமையாகவே நிற்கும். பிறிதொன்றன் செயலுக்குரியதாக ஆகுமிடத்து முதல்வேற்றுமை நிலையை இழந்து இரண்டாம். வேற்றுமை முதலாக எட்டாம் வேற்றுமையளவும் வேறுபடும்.

எடுத்துக்காட்டாக, எண்ணற்ற விலங்குகள் உள. அவற்றுள் யானை ஒன்று. ஒருவன் யானையோடு தொடர்பான கருத்துக்களைப் பேசமுற்பட்டு யானை பெரிது என்றோ, யானை புறப்பட்டது என்றோ, யானை இது என்றோ கூறுமிடத்து யானை முதல் வேற்றுமையளவில் நிற்கும். யானை விரட்டப்பட்டது எனின் விரட்டியவன் ஒருவன். அவன் செயலுக்கு யானை ஆட்பட்டது. அந்நிலையில் அது விரட்டப்பட்ட செயலுக்குரியதாகலின் செயப்படு பொருளாக வேற்றுமைப் பட்டது. யானைக் கொம்பு நீண்டது என்னுமிடத்து நீண்டது கொம்பு, எதனுடைய கொம்பு, யானையது கொம்பு இந்நிலையில் யானை ஆறாம் வேற்றுமையாகிவிடுகிறது. இவ்வாறே தொடராக்கத்தின்கண் ஒரு தொடரில் அமைந்துள்ள எடுத்துக்காட்டுக்கட்கு ஏற்பப் பலபெயர்களும் பலவினைகளையும் அவற்றோடு இணைக்கும் இடைச் சொற்களும் அமையும். எனவே எல்லாப் பெயர்ப் பொருள்களும் முதற்கண் எழுவாய் வேற்றுமையாகத் தோன்றிப் பின்னர் வேறு வேறு வேற்றுமைகளையடையும். பிறவிளக்கங்களை முதல் வேற்றுமை இலக்கணம் கூறுமிடத்துக்கண்டு கொள்க. சில எடுத்துக்காட்டு.

**மரம்**

1. மரம் வளர்ந்தது - பெயர்.1 மரம் எழுவாய்
2. மரத்தை வளர்த்தான் தேவன் - பெயர்.2 தேவன் எழுவாய்
3. மரத்தால் தேர் செய்தான் தச்சன் - பெயர்.3 தச்சன் எழுவாய்
4. மரததுக்கு நீர்வார்த்தான் கொற்றன் - பெயர்.3 கொற்றன் எழுவாய்
5. மரத்தினின்று பறந்தது கிள்ளை - பெயர்.2 கிள்ளை எழுவாய்

6. மரத்தினது கிளை - பெயர்.2 கிளை எழுவாய்

7. மரத்தின் கண் குரங்கு - பெயர்.2 குரங்கு எழுவாய்

8. மரமே வாழ்க - பெயர்.1 மரம் விளிப்பெயர்

கண்ணன் வீட்டின் நீங்கிக் காலால் நடந்து நகரின் புறத்துள்ள கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கினான். இதன்கண் அமைந்துள்ள பெயர்ப் பொருள்கள்: கண்ணன், வீடு, கால், நகர், புறம், கோயில், இறைவன்,

வினைகள் : நீங்கி, நடந்து, உள்ள, சென்று, வணங்கினான், கண்ணன் முதல் வேற்றுமை எழுவாய். வீடு எல்லைப் பொருள் ஐந்தாம் வேற்றுமை. கால் - கருவி மூன்றாம் வேற்றுமை. நகர் புறத்தினை உடைமையின் ஆறாம் வேற்றுமை. கோயில் நான்காம் வேற்றுமை. இறைவன் இரண்டாம் வேற்றுமை. இத்தொடரின் கண் செயற்பட்ட பொருள் கண்ணன். அது தனக்குரிய பயனிலையொடு முடிந்தது.

ஒரு பெயர்ப் பொருள் எழுவாய் முதலாக வேற்றுமைகளை எய்துவதற்கு அடிப்படைக் காரணம் வினைகள். ஒருவினை முற்றுச் சொல் எட்டுக் காரணங்களைத் தன்னுள் அடக்கி நிற்கும். சில வினைச் சொற்களில் இரண்டொரு காரணங்கள் குறைந்தும் நிற்கும்.

'உண்டான்' என்னும் ஒரு வினைமுற்றுச் சொல்லில் வெளிப்படையாகத் தெரிவன உண்ணுதல் என்னும் ஒரு வினையும், அதனைச் செய்தவன் ஓர் உயர்திணை ஆண்பால் என்பதும், காலம் இறந்த காலம் என்பதும், ஆகும். மறைந்து நிற்பவை எதனை என்னும் வினாவை எழுப்பினால் களி அல்லது சோறு என்னும் ஓர் உண்பொருளாகிய செயப்படு பொருளும், எதனால் உண்டான் எனின் வாயினால் என்னும் கருவியும், எதற்கு எனின் வயிற்றுக்கு என்னும் கொள்ளுதற் பொருளும், எதற்காக எனின் பசியினின்றும் நீங்க என்னும் நீங்கற் பொருளும், எங்கிருந்து உண்டான் எனின் வீட்டில் என்னும் இடமும், என்ன பயன் எனின் பசி நீங்கிக்களைப்புப் போக என்னும் பொருளும் தோன்றும். அதனான் ஒரு வினைக்கு அடிப்படை எட்டுக் காரணங்கள் என்பதைத் தொல்காப்பியம்,

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபயன் ஆக என்னும்
அன்னமரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட்டென்ப தொழில் முதனிலையே" (தொல்.சொல்.108)

என்கிறது. எனவே ஒருபெயர்ப் பொருள் பல்வேறு வேற்றுமைகளை எய்துவதற்கு வினையே காரணம் என்பது நன்கு விளங்கும்.

கண்ணன் கனியை உண்டான் என்னுமிடத்து உண்பவர் பலரினின்றும் கண்ணனைப் பிரித்து வாங்கிக் கொண்டமையின் கண்ணன் என்னும் பெயர் பெயர்ச் சொல் என்னும் நிலையின் நீங்கி எழுவாய் அல்லது வினை முதல் என்னும் வேற்றுமையை எய்துகின்றது. அது உண்டான் என்னும் தனது வினையொடு முடிதலின் எழுவாயாகின்றது. உண்ணப்படும் பொருள்கள் பலவாக இருக்க அவற்றுள் கனியைப் பிரித்து வாங்கிக் கொண்டமையின் கனி எழுவாயாகக் கொள்ளப் பெற்றுப்பின் அது தனது வினையொடு முடியாமல் கண்ணனது வினைக்குச் செயப்படு பொருளாளமையின் இரண்டாம் வேற்றுமையாகிறது. இத்தொடரைக் கனி உண்ணப்பட்டதெனின் கண்ணன் மூன்றாம் வேற்றுமையாக மாறிவிடும்.

கண்ணன் சாத்தனுக்குப் பரிசு கொடுத்தான் என்னும் தொடரில் கண்ணன் கொடுத்தற்கு வினைமுதல், சாத்தன் கொள்ளுதற்கு வினைமுதல், கொடுத்தல் என்னும் வினை கண்ணனுக்கு உரியதாக நிற்றலின் கண்ணன் எழுவாய் வேற்றுமையாகவும் சாத்தன் நான்காம் வேற்றுமையாகவும் அமைகின்றன.

மற்று வினைகளே வேற்றுமைகளைச் செய்யுமாயின் உருபுகளின் பயன் யாது? எனின் சில வினைகள் சில பல வேற்றுமைகளுக்குப் பொதுவாக வரும். அதனால் கூறுவோன் தனது கருத்துக் கவர்பொருள் படாதவாறு வரையறுத்து உணர்த்துதற்கு உருபுகள் துணையாக நிற்கும். அதுவே உருபுகளின் பயனாகும்.

எடுத்துக்காட்டாக - எறிந்தான் என்னும் வினை கல்லை எறிந்தான், கல்லால் எறிந்தான் எனச் செயப்படு பொருட்கும் கருவிப் பொருட்கும் உரியதாக வரும். அதனான் கல்எறிந்தான்

எனக் கூறின் கல், செயப்படு பொருளா கருவிப் பொருளா என ஐயம் நேரும். அதன் கண், ஐ, ஆல் என்னும் உருபுகள் விரியின் ஐயம் தோன்றாது. இங்ஙனம் ஒன்றை உறுதி செய்வது உருபின்பயனாம்.

## வேற்றுமை இலக்கணம் பற்றிய ஆய்வு

உலக மொழிகள் யாவினும் வேற்றுமை இலக்கணம் உண்டு. இந்திய மொழிகளுள் இனத்தால் வேறுபட்டவை ஆரியமும் திராவிடமுமாகும். ஆரியமொழி, இலக்கணத்தான் செம்மை செய்யப்பெற்றபின் அது சமற்கிருதம் என வழங்கப்படலாயிற்று. திராவிடம் செம்மை செய்யப் பெற்றபின் செந்தமிழ் எனவழங்கப்படலாயிற்று. இவை தவிர்ந்த பிற இந்திய மொழிகள் யாவும் செம்மையுறாத நிலையில் வழங்கிய ஆரிய திராவிட மொழிகளினின்றும் தோன்றிச் சமற்கிருத இலக்கண நெறிமுறைகளைப் பின்பற்றி ஒழுங்குபடுத்தப் பெற்ற மொழிகளாகும். செந்தமிழ் மொழி தவிர்ந்த பிற தென்னிந்திய மொழிகள் யாவும் சமற்கிருதக் கோட்டுபாடுகளை யுடையனவாகும்.

தமிழிலக்கணக் கோட்பாடு, கருத்துக்களின் அடிப்படையில் அறிவியல் நோக்கில் அமைந்ததாகும். சமற்கிருதம் உள்ளிட்ட இந்திய மொழிகள் பெரும்பான்மையும் சொல்லமைப்பு அடிப்படையில் இடுகுறி நோக்கில் படைத்துக் கொள்ளப் பெற்றவையாகும்.

உதாரணமாகத் தமிழில் எழுத்துக்கள் உயிர், மெய்,குறில்,நெடில், வலி,மெலி, இடை, சார்பு என வகைப்படும். வடமொழியில் சுரம், வியஞ்சனா, சந்தியட்சரம், ரச்வம், தீர்கம், கண்டஜம், தாலுஜம், தந்தஜம், ஒஷ்டஜம் ஊஷ்மானம், விசர்க்கம், அநுஸ்வாரம் எனவகைப்படும். தமிழில் சொல்லமைப்புக்கள் பெயர், வினை, இடை, உரி, வேற்றுமை, தொகை என வகைப்படும். வடமொழியில் பிராதிபதிகம், தாது, சுபந்தம், திஙந்தம், பிரத்யயம், அவ்யயம் என வகைப்படும். தமிழில் திணைப் பாகுபாடும் அவற்றை ஒட்டிப் பாலிடங்காட்டும் விகுதிகளும் உண்டு. வடமொழியில் சொற்கள் அடிப்படையில் பால்பாகுபாடு அமையும்.

இவை 'பழைய சில விளக்கங்கள் எழுத்துப்படலத்துள் கூறப்பெற்றன. தமிழ்ப் பெயர்ச் சொல், வினைச்சொல்,

காலப்பாகுபாடு முதலியவை சமற்கிருதத்தினின்றும் பெரிதும் வேறுபடும்.

தமிழில் வேற்றுமை என்பது பெயர்ப்பொருள் சொற்றொடர் அமைப்பின்கண் எவ்வெந்நிலையில் அமைந்து பொருள் விளக்குகின்றது எனக் கூறுவதால் அவை அவ்வந்நிலைகளை எய்தச் செய்வன அவை கொள்ளும் பயனிலைகளே என உணர்த்திப் பயனிலைகளாக வரும் இருவகை வினைச் சொற்களையும் எடுத்துக் கூறி அப்பெயர்ப் பொருள்கள் எய்தியுள்ள வேற்றுமைகளை உணர்த்தினர். அடையாளக் குறியீடுகளாகிய உருபுகள் திரிபின்றி உணர்த்தும். உருபுகள் பிறழ்ந்துவரின் பொருள் நிலைகளின் அடிப்படையிலேயே வேற்றுமை நிலைகள் உறுதி செய்யப்படும்.

தமிழில் பல்வேறு பொருளில் வரும் பெயர்ப்பொருள் எய்தும் வேறுபாடுகள் (வேற்றுமை) எட்டே என்றும், வினைகள் பலவாக நிகழினும் அவையாவும் எழுவாய், செயப்படு பொருள், கருவிப் பொருள், கோடற் பொருள், எல்லை (நீக்கம்)ப் பொருள், உடைமைப் பொருள், இடப்பொருள், விளிகோடல் என எட்டு நிலைகளில் அடங்கும்.

வடமொழியில் வேற்றுமை என்பது பெயர்ச் சொற்களில் விகுதியாக வரும் உருபுகளால் நிகழ்வதாகும். உருபுகள் ஒவ்வொன்றற்கும் பலபொருள்கள் உண்டு. அவையெல்லாம் அவ்வவ் வேற்றுமைக்குரிய பொருள்கள் வடமொழியில் உருபுகள் அடிப்படையில் வேற்றுமைகள் ஏழு, விளி வேற்றுமை எட்டாவதாக வைக்கப்பட்டுள்ளது. உருபேற்ற சொல்லை சுபந்தம் என்றும் வேற்றுமையை விபக்தி என்றும் வேற்றுமைப் பொருளைக் காரகம் என்றும் கூறுவர். வேற்றுமைப் பொருள் என்பவை உருபுகளுக்குரிய பொருள்களேயாகும்.

எடுத்துக்காட்டாகத் தமிழில் உண்டல், தின்றல், உரைத்தல், கேட்டல், பார்த்தல், ஆக்கல், அழித்தல், திரித்தல் முதலாய வேறுபட்ட வினைகள் யாவும் ஒரு பெயர்ப் பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுக்கும் ஒரே பொருளுடையனவாகும். இரண்டாம் வேற்றுமை என்பதைக் காட்ட ஐ என்னும் உருபு பெயர்களின் ஈற்றில் ஒட்டாக வரும். ஒவ்வொரு வேற்றுமையும் ஒருபொருளை மட்டுமே தரும். இரண்டு மூன்று பொருள்களைத்தாரா. ஒரு வேற்றுமைக்குள் இரண்டுமூன்று பொருள்களைக் கூறுதல் தமிழ் நெறியன்று.

வடமொழியில் வேற்றுமைகள் உருபுகளின் அடிப்படையில் அமைந்தவை. ஒவ்வொரு உருபும் ஒன்றும் ஒன்றற்கு மேற்பட்ட பொருளையும் தரும். வினைகள் யாவும் வெவ்வேறு பொருள்களாக எண்ணப்படும். எடுத்துக்காட்டாக,

சாத்தன் வீட்டைக் கட்டினான், தேவன் பகைவரை வென்றான், கொற்றன் உணவை உண்டான், பூதன் நிலத்தை உழுதான், கண்ணன் நூலைப் படித்தான், அடியார் இறைவனைத் தொழுதார் என இரண்டாம் வேற்றுமை பல்வேறு பொருளில் வரும். அவையெல்லாம் இரண்டாம் வேற்றுமை உருபின் பொருள்களாம் என்பர்.

தொல்காப்பியத்திற்குப் பின் தமிழ் நெறி மரபினை ஒட்டி வழி நூல்கள் தோன்றாமையானும், தோன்றியவை பெரும்பான்மையும் சமண பௌத்த அறிஞர்களால் சினேந்திரம், கச்சாயனம் முதலிய வடமொழி கலந்த பாலி மொழிகளின் கோட்பாட்டு அடிப்படையில் தோன்றியமையின் பழந்தமிழ் மரபுகள் பேணப்படாமலும் காணப்படாமலும் போயின.

இடைக்காலத்து எழுந்த வீரசோழியம், அவலோகிதன் வழங்கிய மரபினைப் பின்பற்றி எழுந்ததாக அந்நூலாசிரியர் கூறுகின்றார். பவணந்தி முனிவர் வடமொழி இலக்கணத்தையும் பாலிமொழிக் கோட்பாடுகளையும் கலந்து தமது நூலைச் செய்து,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" (நன்.462)

என்று அமைதி கூறித் தாம் கருதியவாறெல்லாம் கூறிச் சென்றார். வேற்றுமையிலக் கணத்தை வடமொழியைப் பின்பற்றி

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" (நன்.291)

என்றும்,

"பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளி யென்றாகும் அவற்றின் பெயர்முறை" (நன்.292)

என்றும் வெளிப்படையாகக் கூறிச் சென்றார்.

தொல்காப்பிய உரையாசிரியன்மாரும், வடமொழியையும் நன்னூலையும் பின்பற்றி உரையெழுதிச் சென்றனர். இற்றைக்குப் பயிலவும் பயிற்றப்படும் வேற்றுமையிலக்கணம் பெரும்பான்மையும் வடமொழி இலக்கணமாகவே

அமைந்துள்ளது. இப்புண்ணிய காரியத்தைச் செய்த பெருமக்கள் தொல்காப்பிய உரையாளர்களும் வடமொழியே தமிழ் இலக்கணத்திற்கு அடிப்படை என வெளிப்படையா விளம்பியுள்ள சுவாமிநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சிதர், நமச்சிவாயப் புலவர், சிவஞானமுனிவர் முதலானோருமாவர் இவைபற்றி ஆங்காங்கே விளக்கப்படும்.

## முதல் வேற்றுமை இலக்கணம்

முதல் வேற்றுமை எனினும் பெயர் வேற்றுமை எனினும் ஒக்கும் முதல் வேற்றுமைக்குரிய இலக்கணத்தை ஆறுகூறுகளாக வகுத்துக் கூறுகின்றார் தொல்காப்பியர்

### I. பெயர் ஒன்றற்கு உரியதாக எழுதல்:

காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் உள்பொருளும் இல்பொருளும் பற்றிக் குறியீடாகவரும் இருதிணைப் பொருள்களுள் யாதானும் ஒருபெயர்ப் பொருளை அப்பெயர்ச் சொற்களின் குழுவினின்றும் குறித்து எடுத்துப் பேசப்புகும் நிலையில் பிரிந்து எழுந்து தோன்றும் பெயர் எழுவாய் வேற்றுமையாகும். இதனை ஆசிரியர்,

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே"

(தொல்.சொல்.66)

என்கிறார். தோன்றுதல் என்பது ஒன்றை நோக்கி எழுந்து நிற்றல். அஃதாவது பயனிலையை நோக்கித் தனித்து நிற்றல். பயனிலை பெற்றபின் அது தொடராகி விடும். எ.டு:- நம்பி, நங்கை, நாடு, ஊர், வேனில், கோடை, கண், செவி, தலை, அன்பு, அருள், அவா, சொல், பார் எனப் பெயர்ப் பொருள் குழுவினின்றும் பிரிந்து எழுந்து நிற்றல்.

### II பயனிலை கொள்ளுதல் :

பயனிலையாக வரும் முடிக்கும் சொற்கள் ஆறுவகைப்படும் என்பார் ஆசிரியர். (1) பொருள் நிலை உணர்த்தல். (2) ஏவல் கருதாத வியங்கோள். (3) தெரிநிலை வினைமுற்றுக்களோடு முடிதல். (4) வினா வினைக் குறிப்பினை ஏற்றல் (5) பண்பு நிலை உணர்த்தும் சொற்களோடு முடிதல். (6) பெயர்கொண்டு முடிதல். இதனை ஆசிரியர்

"பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்என்று
அன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே" (தொல்.சொல்.67)

அகரச் சுட்டு அன்றி எனத் திரிந்து நின்றது. அவ்வனைத்தும் என்பது பொருள். இதன் விளக்கமும் எடுத்துக் காட்டும் வருமாறு:

**1) பொருண்மை சுட்டல்:**

எழுவாயாக நிற்கும் பொருளைக் குறியாமல் அப்பொருளின் பொருட்டன்மையைச் சுட்டி நிற்றல் பொருண்மை எனப்படும்.
எ.டு:- ஆவுண்டு, மரம் உண்டு, குடம் உண்டு எனவரும். பொருட்டன்மையாவது, காணப்படும் பொருள் அழியினும் அதன் இலக்கண அமைப்பு கருத்தில் அழியாமல் நிற்றலாம். பசு என்றவுடன் கேட்போன் உள்ளத்தில் நான்குகால், இரண்டு கொம்பு, அலைதாடி, பெருவயிறு, வால், பால்மடி தோன்றுதலே பொருட்டன்மையாம்.

**2) வியங்கொள் நிற்றல்:**

ஏவுதலைக் கருதாமல் தம் உள்ளத்து விழைவு தோன்ற வேண்டிக் கொள்வதாக நிற்றல்.
எ.டு:- ஆ வாழ்க, அந்தணர் வாழ்க, தெய்வம் அருள்க, தீயன ஒழிக, மறம் வீழ்க, வான் மழை வழாது பெய்க எனவரும். ஏவலைக் கருதியதாயின் முன்னிலைப் பெயர் விளக்கப் பெற்று ஏவல் நிகழும். சாத்தா வருக உண்க. எனவரும். அவ்வழி அவை முதல் வேற்றுமையாகா எட்டாம் வேற்றுமையாகும்.

**3) வினைநிலை யுரைத்தல்:**

காலம் வெளிப்படையாகத் தோன்றும் புடைபெயர்ச்சி வினைகளோடு முடிதல்.
எ.டு:- ஆகிடந்தது, சாத்தன் உண்டான், அவர் வந்தார், நீ கண்டாய், நான் வருவேன், கிள்ளைபாடும், நீ வாராய், குதிரைகள் உண்ணா எனவரும்.

**4) வினாவிற் கேற்றல்:**

வினாச் சொல்லொடும், வினாப் பெயரொடும், வினாவினைக் குறிப்புச் சொல்லொடும் முடிதல்.
எ.டு:- இவன் தேவனா? இவனோ தேவன்? எனவும், ஆயாது? யானைகள் எவை? எனவும், சாத்தன் யாவன்? சாத்தி யாவள்? அவர் யார்? அஃது எவன்? எனவும்வரும்.

**5) பண்பு கொள வருதல்:**

பல்வேறு பண்புகளைச் சுட்டி வினைக் குறிப்பு முற்றாக வருதல்.

எ.டு:- யானை கரிது, ஆ வெளிது, கரும்பு இனிது, கண்ணன் இனியன், தேவன் நல்லன், கற்றோர் பெரியர், கொற்றன் நெடியன், குணப் பண்பல்லாத செயற் பண்புகளும் இதன்கண் அடங்கும்.

எ.டு:- மலர்கள் உள, ஊறுகள் இல, பேய் இலது, அணங்கு உளது எனவரும்.

**6) பெயர் கொள வருதல்:**

பொருட் பெயர் எண்ணுப்பெயர், சுட்டுப் பெயர்களைக் கொண்டு நிற்றல்.

எ.டு:- இவன் சாத்தன், இவள் மருதி, இவர் அரசர், இது யானை, இவை மலர்கள் எனவும், யானை ஒன்று, ஆக்கள் பல, கண்ணன் இவன், சாத்தி இவள் - குதிரைகள் பத்து, புலவர் இவர் எனவும் வரும். இவை மாறிநிற்பினும் பொருந்தும்.

வியங்கொள் வருதலை வினைநிலையுரைத்தலில் அடக்காமல் வேறு கூறியதற்குக் காரணம், வினை முற்று சாத்தன் வந்தான் என முடிக்குஞ் சொல்லாகவும் வந்தான் சாத்தன் என முடிக்கப்படும் சொல்லாகவும் வரும். வியங்கோள் முடிக்குஞ் சொல்லாகவன்றி முடிக்கப்படும் சொல்லாக வாராமையான் என்க. அவ்வாறே வினாவிற்கேற்றலைப் பிரித்துக் கூறியதற்குக் காரணம் வினாச்சொல் முடிக்கப்படும் சொல்லாக வாராமையின் பெயர் கொள வருதலின்கண் அடக்காமல் பிரித்து வேறாகக் கூறப்பட்டது என்க. எழுவாய்த் தொடரின்கண் எழுவாய்ப் பெயர் முன்னிற்பினும் பின்னிற்பினும் முடிக்கப்படும் சொல்லாகவே நிற்குமென அறிக.

**III ஒரு சொல்லாகவன்றித் தொகை மொழியாயும் தொடர்ச்சொல்லாயும் வருதல்**

*"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே"*

(தொல்.சொல்.66)

என்பதில் பெயர் என்றது பொருளை. ஒரு பொருளுக்கு ஒரு சொல்லாலும் பெயர் அமையும். அப்பெயர் அடையடுத்தும் வரும். அவ்வழி அவ் அடைகள் எல்லாம் அவ்வொரு பொருளையே நோக்கி அதைச் சுட்டி நிற்றலின் பொதுப்படப் பெயர் என்றார். எழுவாய்ப் பெயர் தொகுப்பாகவும் வரும்

என்பதை உணர்த்தல் வேண்டி,

"பெயரி னாகிய தொகையு மாருளவே
அவ்வும் உரிய அப்பா லான" (தொல்.சொல்.68)

எனப் புறனடுத்துக் கூறினார். ஈண்டுத் தொகை என்றது அடையாக வரும் சொற்களை என அறிக. உரையாசிரியருள் சிலர் தொகை என்பதற்கு வேற்றுமைத்தொகை முதலாய அறுவகைத் தொகைமொழிகள் என விளக்கங் கூறியுள்ளனர். அது வழுவாகும். ஆசிரியர் தொகை மொழிகளின் இலக்கணம் கூறுமிடத்து,

"எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய" (தொல்.சொல்.414)

என்றாராகலின் அவை ஒருசொல் நீர்மையாகவே அடங்கும். அதனான் ஈண்டுத் தொகை என்றது அறுவகைத் தொகை மொழியல்லாமல் பிறவாறு தொடர்ந்து தொகுப்பாக நிற்பனவற்றை என அறிக. மேலும், "பெயரினாகிய தொகையும்" என்ற உம்மையான் அவை பெயர்ச் சொற்களாகவே வருமெனக் கருதற்க. வினைச் சொற்களும் கலந்து வருமெனக் கொள்க.

எ.டு:- கோவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், முதுகண்ணன் சாத்தனார் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என வருவன இருபெயர் பல்பெயர்த் தொகைப் பெயர்களாம். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, நிலங்கடந்த நெடுஞ்செழியன் என வருபவை வினையொடு தொக்க தொகைமொழிப் பெயர்களாம். இவை யெல்லாம் ஒரு பொருளையே சுட்டிநிற்கும் பெயராகலின் ஒருபெயராய் எழுவாயாக நின்று பயனிலை கொள்ளும். இவை பயனிலை கொள்ளுமாறு.

கோவூர் கிழார் வந்தார், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி வென்றான், முதுகண்ணன் சாத்தனார் புலவர் எனவரும்.

வேற்றுமைத் தொகை முதலிய அறுவகைத் தொகை மொழிகளுள் உம்மைத் தொகை தவிர்ந்த ஏனையவை பயனிலை கொள்ளுங்கால் பயனிலை கோடற்குரிய சொல் ஒன்றேயாக நிற்கும். அன்மொழித் தொகை அவற்றிற்கு அயலதாக நிற்கும். அஃதாவது,

யானைக் கோடு கிடந்தது என்னுமிடத்துக் கிடந்தது என்னும் பயனிலைக்குரிய எழுவாய் கோடு என்பது மட்டுமே. யானை அதற்கு அடையாகும். செந்தாமரை பூத்தது, கொல் யானை

வந்தது, மதிமுகம் வியர்த்தது என்னும் பண்புத் தொகை, வினைத் தொகை, உவமைத் தொகை மொழிகளில் தாமரை, யானை, முகம் என்னும் பெயர்களே எழுவாய் மற்றவை அவற்றிற்கு அடைமொழியாகும் மணிமேகலை வந்தாள் என்னும் அன்மொழித் தொகையுள் மணி, மேகலை என்னும் இரண்டும் எழுவாயாகாமல் மணியாலாகியமேகலையை உடுப்பவள் என அயலாதாகிய மொழி எழுவாயாக அமையும். இங்ஙனமன்றிப் பெயரினாகிய தொகைகளுள் அடைமொழி ஒழிந்த பிறயாவும் பயனிலைக்கு உரியவாக நிற்கும். ஆசிரியன் பேரூர்கிழான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்னும் தொகையுள் பேரூர் இளம் என்னும் அடைமொழி தவிர்ந்தவை எல்லாம் பயனிலைக்குரியவாக நிற்கும்.

இனி, "பெயரினாகிய தொகையும் உரிய" என்னாது "தொகையுமாருளவே" என்றும், "அவ்வும் உரிய அப்பால் ஆன" என்றும் கூறியதனான் நீலமணியின் ஒளி சிறந்தது, சோழமன்னன் குதிரை நடைசிறந்தது என்றாற் போல எழுவாய் அடையடுத்துவரினும் தொகைச் சொல் நீர்மையவாகக் கொள்ளப்படும் என்க.

### IV எழுவாய் வேற்றுமைப் பெயராகிய உருபு சிறுபான்மை தொக்கும் நிற்கும்

முதல் வேற்றுமைக்குப் பெயரே உருபாகலின் ஏனை வேற்றுமை உருபுகள் விரிந்தும் தொக்கும் வருதல் போல எழுவாயுருபும் தொக்கு வருதற்குரிமையுடைய தாயினும் தொகின் தொடர் மொழி சிதையும் ஆதலின் தொகாமல் வெளிப்படையாக வருதலே செம்மையுடையதாகும். இஃது எழுவாய் வேற்றுமைக்குரிய சிறப்பிலக்கணங்களுள் ஒன்றாகும் என்பது நூலோர் கொள்கை என்பதை,

"எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப" (தொல்.சொல்.69)

எனத் தொல்காப்பியர் வலியுறுத்துகின்றார்.

எழுவாய் உருபாகிய பெயர் தொக்கு நிற்றல் செவ்விதாகாது என்றதற்குக் காரணம் எழுவாய் மறைந்து பயனிலை மட்டும் நிற்பின் அது தொடர் எனற்கியலாது போகுமாதலின் வெளிப்பட நிற்றல் செவ்விதாகும் என்றார். எனினும் சொற்களை அடிப்படையாகக் கொள்ளாமல் அவை உணர்த்தும் பொருள்களை அடிப்படையாகக் கொள்வது தமிழ்

நெறியாதலின் ஐயமும் திரிபும் நேராமல் பயனிலை மட்டுமே எழுவாயை உணர்த்தி விடுமாயின் ஆண்டுத் தொக்கு நிற்றல் வழுவாகாது என்பார் 'செவ்விதாகும்' என்னாமல் வழிநூல் வாய்பாடாக "செவ்விதென்ப" எனப் பிறர்கூற்றாகக் கூறினார். அம்முறையில் "எழுத்தெனப் படுப அகரமுதல னகர இறுவாய் முப்பஃது என்ப" என்று கூறினார். இந்நூற்பாவிலும் எழுவாயை வெளிப்படையாகக் கூறாமல் "அவ்வியல் நிலையல் செவ்விதென்ப' என்றார்.

இனி இவ்விரு நிலைகட்கும் எடுத்துக் காட்டு வருமாறு: எ.டு:- பொன்னன் வந்தான், பொன்னி வந்தாள், மரம் வளர்ந்தது, சாத்தன் சென்றான். இவற்றுள் எழுவாய் வெளிப்படத் தோன்றி நின்றன. இப்பயனிலைகள் வெவ்வேறு எழுவாய்களைக் கொள்ளற்குரியவை வந்தேன், உண்டேன், உண்டாய், உண்டனை, கண்டேம், கண்டீர், என்பன எழுவாய் தொக்கு நிற்பினும் இவையான், நீ, யாம், நீயிர் என்னும் எழுவாய்க்கே உரியவாகலின் தொக்கு நிற்பினும் வழுவாகா என்க. இங்ஙனம் நிற்பவற்றைக் தோன்றா எழுவாய் எனல் மரபு.

எழுவாயை எடுத்துக் கூறியது போலப் பயனிலையை எடுத்துக் கூறாமையான் பயனிலை வெளிப்பட்டே நிற்கும் எனக்கொள்க. மற்று "விழுமமும் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்" (உரி-57) என வந்துள்ளதே எனின் இன்னோரன்ன செய்யுளாகலின் பயனிலை செய்யுள் விகாரமாய்க் கெட்டு நின்றன என்க.

V எழுவாயாகத் தோன்றியதொருபெயர் தொடரின் கண் செயப்படுபொருள் முதலிய வேற்றுமைகளை எய்துமிடத்து எழுவாய்த் தன்மையினின்றும் நீங்கி எவ்வேற்றுமையாக ஆகின்றதோ அவ்வேற்றுமைக்குரிய உருபுகளைத் தன்பின்னர் சேர்த்துக் கொண்டு நிற்றல் வேற்றுமை யிலக்கணத்தின் ஐந்தரம் கூறாகும். இதனைத் தொல்காப்பியம்,

"கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க்காகும் இயற்கைய வென்ப" (தொல்.சொல்.70)

என்கிறது. கூறிய முறையின் உருபு என்றது எழுத்ததிகாரத்துள் அல்வழி வேற்றுமையை விளக்குமிடத்து வேற்றுமைப் புணர்ச்சித் தொடர்க்குரிய உருபுகள்.

"ஐஒடு குஇன் அதுகண் என்னும்
அவ்ஆறு என்ப வேற்றுமை உருபே" (தொல்.எழுத்து.114)

என முறையாற் கூறப்பெற்ற உருபுகளேயாகும்.

வேற்றுமை உருபுகள் இவை எனப் பெயரிட்டு உணர்த்தியது இந்நூற்பாவில்தான் என்பதனை மறந்த உரையாளர் வேற்றுமையியலுள் "அவைதாம் பெயர் ஐ ஒடு குஇன் அதுகண் விளி என்னும் ஈற்ற" என்னும் நூற்பாவைக் கருதிக் கொண்டனர். இந்நூற்பா வேற்றுமை எட்டனது பெயர் கூறியதன்றி உருபுகளைக் கூறியதன்று என்பது மேல் விளக்கப்பட்டது.

இயற்கைய என்றது அங்ஙனம் அவை பிற உருபுகளை ஏற்கும் இலக்கணத்தன என்றவாறு. பெயர் என்றது ஒரு சொல்லாயும் தொகைச் சொற்களாயும் வரும் எழுவாய்ப் பெயர்களையாகும். ஆசிரியர் பெயர் தோன்றும் நிலை எனத் தோற்றுவாய் செய்து பின்னர்ப் பெயர்ப் பயனிலையே என்றும், பெயரினாகிய தொகையும் என்றும், எவ்வியற் பெயரும் என்றும் நூற்பாக்கள் தோறும் அவ்எழுவாயாகத் தோன்றிய முதல்வேற்றுமைப் பெயரையே. அவ்எழுவாய் வேற்றுமைக்கே இலக்கணம் கூறிவருதலை ஓராமல் பெயர் என்பதைப் பெயர்ச்சொல் எனக்கருதி உரையாளர்கள் விளக்கம் கூறிச் சென்றனர். ஈறுபெயர்க்காகும் என்பதனைப் பெயர்க்கு ஈறாகும் என மாற்றிக் கொள்க.

முதல் வேற்றுமை உருபாகிய பெயரே ஏனை வேற்றுமைகளாக மாறி வருமிடத்துத் தனது எழுவாய் நிலையின் நீங்கி அவ்வவ் வேற்றுமை உருபுகளை ஏற்கும் என்பதனை நன்குணர்ந்த சிவஞான முனிவர் நன்னூலில் வரும் "ஆறன் உருபேற்கும் அவ்வுருபே" என்னும் சூத்திரத்திற்கு உரை கூறுமிடத்து, எழுவாய் வேற்றுமையாக முதற்கண் தோன்றிய பெயரே ஏனைய ஐ முதலிய உருபுகளை ஏற்கும் என அறிவியலுக்கேற்ப விளக்கியுள்ளமையைக் காணலாம். இவ்வுரையால் பவணந்திமுனிவரின் தவறு திருத்தப்பட்டுள்ளது எனினும் நன்னூலார் கருத்து அதுவன்று.

எ.டு:- கண்ணன் வந்தான், தன் வினையாகிய பயனிலையொடு முடிந்தமையின் கண்ணன் எழுவாய் முதல் வேற்றுமை, கண்ணனை விதுரன் கண்டான். இத்தொடரில் காணுதல் வினை விதுரனுக்குரியது. விதுரன் எழுவாய். காணுதல் தொழில் சேர்ந்த இடம் கண்ணன். அதனாற் கண்ணன் செயப்படு பொருளாய் அதற்குரிய ஐகார உருபை ஏற்றது. இவ்வாறே பாண்டவர் கண்ணனால் கௌரவரை வென்றனர். கண்ணன் கருவி

மூன்றாவதற்குரிய உருபை ஏற்றது. கண்ணனுக்குச் சக்கரம் கொடுத்தான் பரமன், கண்ணன் கொள்ளும் பொருளாய் நான்காம் வேற்றுமையாயிற்று. கண்ணனின் மூத்தவன் பலராமன். கண்ணன் எல்லைப் பொருளாய் நின்றது. கண்ணனது சக்கரம். கண்ணன் உடையவனாய் ஆறாம் வேற்றுமை உருபேற்றது. கண்ணன் கண் உள்ளது கருணை. கண்ணன் இடப்பொருளாய் ஏழாம் வேற்றுமையாய்க் கண்ணுருபை ஏற்றது. கண்ணா! வா. திரிந்து விளி வேற்றுமையாயது.

இத்தொடர்களின் தொடர் கருத்துக் கெடாமல் கண்ணனே முதல் வேற்றுமையாக அமைய வேண்டின் வாக்கியங்கள் பின்வருமாறு அமையும். கண்ணன் விதுரன் காணுமாறு வந்தான். கண்ணன் பாண்டவர் கௌரவரைவெல்லக் காரணனாயினான். கண்ணன் பரமனிடம் சக்கரம் பெற்றான். கண்ணன் பலராமனின் இளையவன். கண்ணன் சக்கரமுடையான் கண்ணன் கருணை உள்ளவன். கண்ணன் வருவானாக எனவரும்.

VI எழுவாய் வேற்றுமையாக நிற்கும் பெயர்களுள் வினையாலணையும் பெயர் தவிர்ந்த பொருளாதி அறுவகைப் பெயர்களும் காலங்காட்டா என்பது எழுவாய் வேற்றுமையின் ஆறாவது கூறாகிய இலக்கணம்.

பெயர்ச் சொற்கள் பிறிதோர் எழுவாய்க்குப் பயனிலையாக வருமிடத்து மூன்று காலத்தையும் அடக்கிய குறிப்புவினையாக நிற்கும். அப்பெயர்கள் எழுவாய் வேற்றுமையாக நிற்குமிடத்துக் காலம் காட்ட மாட்டா.

*விளக்கம்:-* பொன்னன், கரியன், நல்லன் என்னும் சொற்கள் பெயர்ச்சொற்கள். பொன்னன் வந்தான் என்னுமிடத்து முதல் வேற்றுமைப் பெயர். சாத்தன் பொன்னன் (ஆயினான்) என்னுமிடத்துக் குறிப்புவினை. இம்முறையில் பொன்னன் என்னும் சொல் எழுவாயாக நிற்குமிடத்துக் காலங்காட்டாது. முடிக்குஞ் சொல்லாக, பயனிலையாகவரின் காலக் குறிப்புடையதாகும். இங்ஙனம் குறிப்பு வினையாக வந்த சொல் எழுவாயாகவரின் ஆண்டு அஃது வினையாலணையும் பெயருள் அடங்கும். வினையாலணையும் பெயர் காலம் காட்டும். காலம் காட்டுதல் காரணமாகவே அவை வினையாலணையும் பெயர் எனப்பெற்றன. இதனைத் தொல்காப்பியம்,

"பெயர் நிலைக் கிளவி காலந் தோற்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே" (தொல்.சொல்.71)
என்று கூறுகின்றது. இந்நூற்பாவின் அறிவியல் நோக்குணராத உரையாளர் யாவரும் இதனையும் பொதுவாகப் பெயர்ச் சொல்லுக்குரிய இலக்கணமாக எண்ணிப் பொருந்தா விளக்கத் தோடு உரைகூறிச் சென்றனர்.

இதுகாறும் கூறியவாற்றான், பெயராகத் தோன்றல், அறுவகைப் பயனிலை கோடல், பெயர்கள் ஒரு சொல்லாகவும் தொகைச் சொல்லாகவும் வருதல், பெயராகிய உருபு வெளிப்படையாக நிற்றல், பிற வேற்றுமையாக மாறுமிடத்து அவ்வவ்வுருபுகளை ஏற்றல், எழுவாயாக நிற்கும் பெயர் காலங்காட்டாமை என்னும் ஆறும் எழுவாய் வேற்றுமைக்குரிய இலக்கணமே என்பது நன்கு விளங்கும். பின்னைய மூன்றையும் பெயர்ச்சொல்லுக்குரிய இலக்கணமாக உரையாளர்கள் கூறுவது தவறு என்பதும் விளங்கும்.

இனி இம்முதல் வேற்றுமையாக ஆக்கம்பெறும் எழுவாய்ப் பெயர்களைப் பொருளடிப்படையில் நோக்காமல், வரிவடிவச் சொல்லடிப்படையில் நோக்கி வீரசோழிய ஆசிரியர், நேமிநாத ஆசிரியர், இலக்கணக்கொத்து ஆசிரியர், பிரயோக விவேக நூலாசிரியர், முதலானோர் எழுவாய் இலக்கணத்தைப் பலகோணங்களில் விரித்துக் கூறுவர். அவற்றுள் சிலவருமாறு: (இவர்கள் எழுவாயை வடமொழி நோக்கில் கருத்தா எனச்சுட்டிக் கூறுவர்.)

1. **கருமகருத்தா:** செயப்படு பொருளைச் செய்தது போலக் கூறும் வழுவமைதி. எ.டு:- திண்ணைமெழுகிற்று. பசு கறந்தது என்றாற் போலவரும். திண்ணை சாத்தியால் மெழுகப் பெற்றது என்பது பொருள் (கருமம்= செயப்படுபொருள்) இதனைத் தொல்காப்பியம்

"செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே" (தொல்.சொல்.241)
எனக் கூறுகிறது.

2. **காரணக் கருத்தா:-** இராமன் அகலிகையை உய்வித்தான். அகலிகை இராமனால் உய்திபெற்றாள் என்பது பொருள்.

3. **ஏதுக் கருத்தா:-** கதிரவன் கல்லில் தீப்பிறப்பித்தான். கதிரவனால் கல்லில் தீப்பிறந்தது என்பது பொருள்.

4. தான்தெரி கருத்தா:- கல் தச்சனால் எறியப்பட்டது. தச்சன் கல்லை எறிந்தான் என்பது பொருள்.

5. தான் தெரியாக் கருந்தா:- தேவதத்தன் சோற்றை அடுகிறான்

6. தலைமைக் கருத்தா:- எ.டு:- விழுமியோர் நலம்புரிவர்.

7. சுதந்திரக் கருத்தா:- எ.டு:- சாத்தன் சோற்றை உண்டான்.

8. அதிகரணக் கருத்தா: எ.டு:- "அறம் நோக்கி ஆற்றுங் கொல்வையம்" "குன்று குவட்டைத்தாங்கும்" (அதிகரணம் = இடம்)

9 பாவ கருத்தா:- (பாவம் = கற்பித்தல்) எ.டு:- கோறல் பிறவினை எல்லாம் தரும். கொல்லுதல் தொழில் கருத்தாவைப் போலக் கூறப்பட்டது.

10. ஏவுதற் கருத்தா: எ.டு:- அரசன் ஆலயம் செய்தான்.

11. இயற்றுதற் கருத்தா: எ.டு:- தச்சன் தேர் செய்தான்

12. கருவிக் கருத்தா: எ.டு:- கண்காணும்

13. சம்பிரதானக் கருத்தா: எ.டு:- இரப்பவர் என்பெறினும் கொள்வார். (சம்பிரதானம் = கொடை)

14. தடுமாறு கருத்தா: எ.டு:- ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப.

15. இரட்டைக் கருத்தா: எ.டு:- தாய் மகவுக்குப் பாலூட்டினாள்.

இங்ஙனம் சொல் அமைப்பு நோக்கிச் சொற்பொருள் நிலைகளை எல்லாம் காணப்புகின் கருத்தாவின் நிலை பலவாகவரும். இவையெல்லாம் முதல்வேற்றுமைக் கருத்தாவின் நிலைகளே தவிர, எழுவாய்க்குரிய இலக்கணமல்ல. மேற்காட்டியுள்ள வகைகளுள் பல பொருந்தாதிருந்தலையும் காணலாம். இவை யெல்லாம் வடமொழியை நோக்கிக் கூறப்பெற்ற விளக்கங்களாகும் இங்ஙனம் பலவாறாக

விரிந்துள்ளமைக்குச் காரணம் பெயரச் சொற்கள் உருபேற்கும் எனச் கொண்டமையேயாகும்

இனி, செயப்படுபொருள் கருவிப் பொருள் முதலியவற்றின் வேற்றுமைகளைக் காட்டும் ஐ, ஆன்முதலாய உருபுகள் போல வடமொழியைப் பின்பற்றி எழுவாய் வேற்றுமைக்குப் அடையாள உருபுகள் வேண்டும் எனக் கருதி ஆயவன், ஆனவன், ஆகப்பட்டவன், ஆகின்றவன் என ஒவ்வொரு பாலுக்கும் உருபுகளைப் படைத்துக் காட்டுவர் சிலர். அவையெல்லாம் உருபிடைசசொல் எனற்கு ஏலாமையான் தமிழறிஞர் பெருமக்கள் மேற்கொள்ளாராயினர்.

தமிழில் வேற்றுமையுருபுகள் ஆடூஉ, மகடூஉ முதலிய ஐம்பாற் பெயர்கட்கும் தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய இடங்களுக்கும், ஒருமை பன்மையாகிய எண்களுக்கும் பொதுவாகவே வரும். வடமொழிப் பற்றாளர் கூறுவது போல, ஆனவன், என்பவன் என உருபுகளைப் படைப்பின் படர்க்கைக்கே பலஉருபுகள் வரும். தன்மை முன்னிலைப் பெயர்களுக்கு எவ்வாறு படைத்துக் கொள்வது? வடமொழி மரபுவேறு தமிழ் மொழிமரபு வேறு என உணராமையான் அவர்கள் அங்ஙனம் கூறிச் சென்றனர் என்க. மற்று,

> "எழுத்தெனப் படுப அகரமுதல் னகர
> இறுவாய் முப்பஃது என்ப" (தொல்.எழுத்து.1)

என்றும்

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை" (குறள்.41)

என்றும் வருவனவற்றை வடமொழித் தாக்கத்தால் உருபென மயங்குவார் சிலர். இவ்வாறு வருவன சொல் என்னும் பொருள் தரும் என் என்னும் முதனிலையடியாப் பிறந்த வினைச் சொல் அது சிறப்புப் பொருளையுணர்த்தும், "சொல்வதற்குச் சிறந்த" என்பது கருத்து.

உதாரணமாக வடமொழியாளர் உயிர் எழுத்துக்களைப் பதினாறு என்பர். அவற்றுள் ருரூ, லு,லூ என்பவை மெய்யொலியொடு கூடியவை. 'அம்' அஃ என்பவை மெய்களை ஊர்ந்துவாரா. அத்தகைய குறைபாடுகளின்றி எழுத்து எனச் சிறப்பித்துச் சொல்லப்படுபவை. தமிழில் இத்தனை என்று உணர்த்த, "எழுத்து எனப்படுப" என்றார். அவ்வாறே மணம் செய்து கொண்டு வாழ்வோரெல்லாம் இல்வாழ்வான் எனற்கு

ஏலாது. "இயல்புடைய மூவர்க்குத் துணையாக வாழ்பவனே இல்வாழ்வான் எனச் சிறப்பித்துக் கூறுதற்குரியவன்" எனபார். "இல்வாழ்வான் என்பான்" என்று கூறினார் ஆசிரியர் ·ான்க.

வேற்றுமைகளை எட்டாக வரையறை செய்து அவற்றை எண்ணு முறையில் நிரல்படுத்தியுள்ளமுறை தமிழிலும் வடமொழியிலும் அமைந்துள்ளதொரு ஒற்றுமையாகும். எண்முறையில் நிரல்படுத்திய முறை வடமொழியைப் பின்பற்றியது என்பது சிலஉரையாளர்கள், கால்டுவெல் உள்ளிட்ட மொழியாய்வாளர் சிலரின் கருத்தாகும். வடமொழி ஆரியக் குடும்பமொழியைச் சார்ந்தது. தமிழ் திராவிடக் குடும்பமொழியைச் சார்ந்து. மொழிக்கு அடிப்படையான எழுத்துக்களை உயிர் என்றும் மெய் என்றும் பிரித்துக் குறில் என்றும் நெடில் என்றும், வன்மை மென்மை இடைமை என்றும் ஆய்ந்து வகுத்து அவற்றை அகர முதலாக னகரம் ஈறாக வரிசைப்படுத்தி அவற்றிற்கு நெடுங்கணக்கு எனப் பெயர் கொடுத்துள்ள முறை ஆரிய மொழிக்குடும்ப மொழிகளில் காணப்படாத ஒன்று. ஆனால் ஏறத்தாழ வடமொழியில் நெடுங்கணக்கு ஓரளவு முறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் பெயர் வினை இடைஉரி என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. வடமொழியிலும் நாம, ஆக்யாத, அனுயய என வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. தமிழில் தொகை மொழிகளின் வரிசையும் வடமொழியில் சமாசன் வரிசையும் வேறுபட்டுள்ளன. தமிழில் ஒழுங்கு முறை உண்டு. எழுத்திலக்கணத்துள் சொல் இலக்கணம் மயங்கா. வடமொழியில் கலந்து நிற்கும். எனவே வடமொழி இலக்கண அமைப்பு முறைக்கு மூலமொழி தமிழே என்பது விளங்கும்.

இனி வேற்றுமை நிலைகளை எழுவாய் முதலாக விளியீறாக முறைப்படுத்தியதன் காரணத்தைக் காண்போம். வினைமுதலின்றி எச்செயலும் நிகழாதாதலின் வினை முதலாகிய எழுவாய் முதற்கண் வைக்கப்பட்டது. எழுவாயின் செயல் சென்றுறுவதால் செயப்படு பொருள் அதன்பின் வைக்கப்பட்டது. எந்த ஒருசெயலும் மூவகைக் கருவியின்றி நிகழாதாதலின் கருவிவேற்றுமை மூன்றாவதாக வைக்கப்பட்டது. வினைமுதலாற் செய்யப்பெற்ற பொருள் ஒருவர்பால் சென்றடைதலின் கொள்ளுதற் பொருளாகிய வேற்றுமை நான்காவதாக அமைந்தது. கொடுத்தல் பெறுதல் என்பது ஒன்றினின்றும் நீங்கி ஒன்றை அடைவதாகலின் நீக்கம் ஐந்தாவதாக வைக்கப்பட்டது. கொண்ட பொருள் தனக்கு உடைமையாக அமைதலின் உடைமை வேற்றுமை ஆறாவதாக

வைக்கப்பட்டது. எந்த ஒரு செயலும் ஆதாரமாகிய இடம் இன்றி அமையாதாகலின் இடம் ஏழாவதாக வைக்கப்பட்டது. பெயர் திரிந்து முன்னிலையாதலாகிய விளி இறுதியில் வைக்கப்பட்டது.

ஒரு பெயர்ப் பொருள் தன்னிலையினின்று வேறுபடுவதற்குக் காரணம், செயற்பாடாகிய வினையே காரணமாகும். அதனான் ஒருவினைமுற்றுச் சொல் எண்வகை அடிப்படைகளைக் கொண்டு நிற்கும். எண்வகை முதல்நிலைகளில் சிலவெளிப்படையாகவும் சில மறைந்தும் நிற்கும். நடத்தல், இருத்தல், உண்ணல் உறங்கல், கொடுத்தல் பெறுதல், அறிதல் உணர்தல் எனவினைகள் பலஎனினும் அவற்றிற்கு மூலமாகிய அசைவே அடிப்படையாகும். அசைவு எனினும், புடைபெயர்ச்சி எனினும், வினை எனினும், இயக்கம் எனினும் ஒக்கும். அதனை முதலுறுப்பாகக் கூறுவது இலக்கண நெறியாகும். அம்முறையில் வினைமுதல் நிலைகளைக் கூறுமிடத்துத் தொல்காப்பியம்,

> "வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி என்றா
> இன்னதற்கு இதுபயனாக என்னும்
> அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில் முதனிலையே" (தொல்.சொல்.108)

என்று கூறுகின்றது. இவற்றுள் வினை என்றது புடைபெயர்ச்சியாகிய அசைவை உணர்த்தி நின்றது. செய்வது என்பது முதல்வேற்றுமையாகிய எழுவாயை (கருத்தாவை) உணர்த்திற்று. வினை, பயன், செயப்படுபொருள் என்பவை இரண்டாம் வேற்றுமைக்குரிய காரணங்கள். நிலம், காலம் என்பவை ஏழாம் வேற்றுமைக்குரிய பொருள். கருவி என்பது மூன்றாம் வேற்றுமைக்குரியது இவையே ஐந்தாம் வேற்றுமைக்கும் காரணமாம். இன்னதற்கு என்பது நான்காம் வேற்றுமைக்குரியது. இதுபயனாக என்பது ஆறாம் வேற்றுமையைச் சாரும். ஆக, ஒரு பெயர்ப் பொருள் எழுவாய் முதலாக வேற்றுமை எய்துவதற்கு அடிப்படை வினைகளே என்பதும் உருபுகள் அடையாளங்களே என்பதும் உருபுகளின்றியும் வேற்றுமை புலப்படும் என்பதும் வினையின்றி வேற்றுமை உண்டாகா என்பதும் புலப்படும்.

## இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள்)

பல்வேறுபட்ட வினைகளுள் காத்தல், ஒத்தல், ஊர்தல், இழைத்தல், புகழ்தல், பழித்தல் முதலாக நிகழும் வினைகளுள் ஓர் எழுவாயாகிய வினைமுதல் ஒரு பருப்பொருளையோ நுண் பொருளையோ தான் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றை ஆக்கல், அழித்தல், அடைதல், விலக்கல், வேறுபடுத்தல் முதலாய செயல்களைப் புரியுங்கால் அச்செயல் சென்று பொருந்த அதனை ஏற்றுநிற்கும் பொருள் செயப்படுபொருளாகும். செயல் சென்றுபடும் பொருள் செயற்படு பொருள். அது இலக்கணக் குறியீடாய், செய்பொருள் அல்லது செயப்படு பொருள் என அமைந்தது.

எ.டு:- கொற்றன் இறைவனை வணங்கினான், இத்தொடருள் கொற்றன் முதல் வேற்றுமையாகிய எழுவாய். அவன்புரிந்த செயல் வணங்கல். அச் செயல் சென்று பொருந்திய பொருள் இறைவன். எனவே இறைவன் இரண்டாம் வேற்றுமை என்னும் செயப்படு பொருளாயிற்று. ஐகாரம் உருபு. இத்தகு தொடர்களில் உருபு வெளிப்பட்டே வரும். இன்றேல் பொருள் தெளிவுபடாது. ஆதலின் உருபு அடையாளம் இன்றியமையாத தாயிற்று. மற்று, கொற்றன் சோற்றை உண்டான் என்பதனுள் சோறு செயப்படு பொருள். ஐ உருபு, இதன் கண் கொற்றன் சோறுண்டான் என உருபு வாராவிடினும் பொருள் சிதையாது. எனவே உருபின் பயன் அவ்வவ் வேற்றுமையை உறுதி செய்வதே என்பது விளங்கும்.

இருதிணைப் பொருள்கள் நிகழ்த்தும் வினைகள் எண்ணற்றவை. அவற்றுள் இன்ன இன்ன வினைகள் இன்னஇன்ன வேற்றுமைகளைச் செய்யும் எனப் பெரும்பான்மைபற்றி நூலோர் வகுத்துக் கூறுவர். அவற்றுள் சிலவினைகள் ஒன்றற்கு மேற்பட்ட வேற்றுமைகளுக்குப் பொதுவாகவும் நிற்கும். அத்தகைய தொடர்களில் உருபு விரிந்தே வருதல் வேண்டும்.

எ.டு:- கொற்றன் வாள் கேட்டான், இதன்கண் உருபு இன்றேனும் வாளைக் கேட்டான் எனச் செயப்படுபொருள் தெளிவாக விளங்கும். கொற்றன் வாள் வீசினான் என்னும் தொடர் பொருள் மயக்கத்தைத் தரும். வீசினான் என்றாற்போல வரும் வினைகள் செயப்படு பொருளுக்கும் கருவிப் பொருளுக்கும் பொதுவாக வரும். எனவே வாள் செயப்படு

பொருளாயின் கொற்றன் வாளை வீசினான் என்றும், கருவிப் பொருளாயின் கொற்றன் (பகைவரை) வாளால் வீசினான் என்றும் உருபுகள் விரியும். முன்னும் பின்னும் தொடர்ந்துள்ள சொற்களால் பொருள் மயக்கமின்றி விளங்குமாயின் ஆண்டு உருபுகள் தொக்குவரலாம். மயக்கம் ஏற்படுமாயின் உருபுகள் விரிந்தே வருதல் வேண்டும். விரிவான விளக்கத்தை வேற்றுமை மயக்கம் என்னும் தலைப்பிற் கண்டுகொள்க.

பண்டைய இலக்கண நூலாசிரியர் தம் நெறிமுறைகளை நன்கு தேர்ந்த தொல்காப்பியர். வினைச் சொற்களைத் தேர்ந்து இவ்விவ்வினைகள் இன்னின்னவாறு இவ்விவ் வேற்றுமைகளைச் செய்யும் என விரிவாக எடுத்தியம்பியுள்ளார். மயக்கத்திற்குரிய வினைகளையும் அவைபற்றிய அமைதிகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். அதனான் வேற்றுமை பற்றி இலக்கணத்தை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என மூன்றியல்களாக வகுத்துரைக்கின்றார்.

தமிழில் வினைச் சொற்கள் இருவகையாக அமைந்து பொருள் விளக்கும். ஒன்று தொழிற் சொற்களின் அடிப்படையில் தோன்றிக் காலம் காட்டும் உறுப்புக்களோடு கூடி நிற்கும். மற்றொன்று பொருளாதி அறுவகைப் பெயர்களின் அடிப்படையில் தோன்றி மூன்று காலத்தையும் தம்முள் அடக்கிநிற்கும். முன்னதைத் தெரிநிலை வினை என்றும், பின்னதைக் குறிப்பு வினை யென்றும் இலக்கணநூலார் கூறுவர். இனி இரண்டாம் வேற்றுமை இலக்கணம்பற்றித் தொல்காப்பியம் கூறுவதைக் காண்போம்.

> **"இரண்டாகுவதே**
> **ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
> **எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பென்று**
> **அவ்விரு முதலிற் றோன்றும் அதுவே"** (தொல்.சொல்.72)

இதன் பொருள்:- எண்ணுமுறையில் இரண்டாவதாகிய ஐகார வேற்றுமை எண்ணும் பெயருடைய வேற்றுமைச் சொல் (உருபு) யாதொரு பொருளிடத்து வெளிப்படையாகவோ மறைந்தோ எவ்வாறு வரினும் அவ்வேற்றுமை தெரிநிலைவினை, வினைக் குறிப்பு என்னும் அவ்விரண்டனது அடிப்படையில் தோன்றும் என்பதாம்.

பொருளைச் சொல்லால் உணர வேண்டுதலான் உருபினைக் கிளவி என்றும், அடிப்படை (மூலகாரணம்)யை முதல் என்றும் கூறினார்.

எ.டு:- கண்ணன் குடத்தை வனைந்தான், (குடம்வனைந்தான்) கொற்றன் மரத்தை வெட்டினான், சாத்தன் ஆடையை நெய்தான், தேவன் நூலைக் கற்றான், மாணாக்கன் அறிவைப் பெற்றான், பூகன் நடத்தலைச் செய்தான், பொன்னன் குழையினை உடையாள், மாடன் பொருளை இலன் எனவரும்.

இவற்றுள் வனைதல், வெட்டுதல், நெய்தல், கற்றல், பெறுதல் என்பவைச் சிறப்புத் தெரிநிலை வினை. செய்தல் பொதுத் தெரிநிலை வினை. உடைமை, இன்மை என்பவை குறிப்பு வினை. உடைமையையும் இன்பத்தையும் மனத்தின்கண் இன்பத்தையும் துன்பத்தையும் செய்தலான் புடை பெயர்ச்சி கருத்து வகையான் அமைந்து வினையாயின.

வினைகளுள் செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினை என இருவகையுண்டு. உண்டான் என்றாற் போல்வன செயப்படு பொருள் குன்றாவினை. உறங்கினான் என்றாற் போல்வன குன்றிய வினை. குன்றிய வினைகளை அடுத்துச் செய்தல் என்னும் பொதுவினைவரின் அக்குன்றிய வினையே செயப்படுபொருளாக நிற்கும். அஃதாவது நடந்தான், உறங்கினான் என்னுமிடத்து எதைச் செய்தான் என வினவின் நடத்தலைச் செய்தான், உறங்குதலைச் செய்தான் எனவரும். அவ்வழிச் செய்தல் என்னும் பொது வினைக்குச் சிறப்புவினைகள் செயப்படு பொருளாகவரும். இவற்றை அகநிலைச் செயப்படு பொருள் என்று கூறுவர். அந்நிலையில் சிறப்புத் தெரிநிலை வினைகள் பாலிடம் காலங்காட்டும் உறுப்புக்களை விட்டுத் தொழிற் பெயராக மாறிவிடும். செயப்படு பொருளைத் தோற்றுவிக்கும் சிறப்பு வினைகளாகத் தொல்காப்பியம் கூறும் வினைகளும் எடுத்துக் காட்டும் வருமாறு:

| | | |
|---|---|---|
| காத்தல் | - | மன்னன் மக்களைக் காத்தான் |
| ஒத்தல் | - | விறலி மயிலை ஒத்தாள். |
| இழைத்தல் | - | எயிலை இழைக்கும். (இழைத்தல் = அடுக்கிப் பூசுதல்) எயில்=மதில். |
| ஒப்பல் | - | குறத்தி கிள்ளையை ஒப்பும். |
| புகழ்தல் | - | இரவலன் வள்ளலைப்புகழ்ந்தான். |
| பழித்தல் | - | வீரன் [illegible]யைப் பழிக்கும். |
| பெறுதல் | - | தாய் மகவைப் பெற்றாள். |

காதலித்தல் - காதலன் தலைவியைக் காதலிக்கும்.

வெகுளுதல் - காவலன் கள்வனை வெகுண்டான்.

செறல் - மறவன் பகையைச் செறும்.

உவத்தல் - தந்தை மகனை உவக்கும்.

கற்றல் - மாணாக்கன் நூலைக் கற்றான்.

அறுத்தல் - தச்சன் மரத்தை அறுக்கும்.

குறைத்தல் - மருத்துவன் நோயைக் குறைக்கும்.

தொடுத்தல் - ஆசான் செய்யுளைத் தொடுத்தான்.

பிரித்தல் - வஞ்சனை நட்பைப் பிரிக்கும்.

நிறுத்தல் - வணிகன் பொன்னை நிறுத்தான்.

அளத்தல் - சாத்தி நெல்லை அளந்தாள்.

எண்ணல் - சான்றோர் நன்மையை எண்ணுவர்.

ஆக்கல் - ஒழுக்கம் உயர்வை ஆக்கும்.

சார்தல் - கன்று தாயைச் சாரும்.

சேர்தல் - சாத்தன் ஊரைச் சேர்ந்தான்.

கன்றல் - கண்ணன் சூதினைக் கன்றும்.

நோக்கல் - பயிர் மழையை நோக்கும்.

அஞ்சல் - பாம்பு கலுழனை அஞ்சும்.

சிதைத்தல் - சிறுவன் சிற்றிலைச் சிதைக்கும்.

பணித்தல் - தலைவன் அடிமையைப் பணிக்கும்.

பணிதல் - மாணாக்கன் ஆசானைப் பணியும்.

நினைதல் - வீரன் வெற்றியை நினைக்கும்.

அடைதல் - பறவை கூட்டினை அடையும்.

நீத்தல் - துறவு பற்றினை நீக்கும்.

எழுதுதல் - தூதன் ஓலையை எழுதும்.

பாடுதல் - பாடினி பாடலைப் பாடினாள்.

தேடுதல் - பறவை இரையினைத் தேடும்.

அடுதல் - மருதி சோற்றை அடும். (அடுதல் - சமைத்தல்)

இடுதல் - வள்ளல் பொருளை இடும்.

பெருக்கல் - கல்வி அறிவைப் பெருக்கும்.

சுருக்கல் - அழுக்காறு நலத்தைச் சுருக்கும்.

இயற்றல் - புலவன் நூலை இயற்றும்.

இவ்வாறே குறிப்பு வினைகளும் வரும்.

உடைமை - குமரன் வேலை உடையான்.

உவமம் - ஆசான் தெய்வத்தை அனையன்.

இன்மை - வறியன் பொருளை இலன்.

உண்மை - சான்றோன் பண்பினை உளன்.

வன்மை - செழியன் போரினை வல்லன்

எனவரும்.

இடைக்கால வடமொழி நூலோர் இத்தகுவினைகளை நிவர்த்தியம் (இயற்றப்படுதல்) விகாரியம் (வேறுபடுக்கப்படுதல்) பிராப்பியம் (எய்தப்படுதல்) என மூவகையாகப் பகுத்துக் கூறுவர். இப்பகுப்பு, வினைகளை நோக்காமல் பொருளை நோக்கி அமைந்தனவாகும்.

ஐ என்னும் உருபிடைச் சொல் 'ஏய' என்னும் வினையெச்சச் சொல்லின் மரூஉவாகும். ஏய்தல் - ஒத்தல். பொருந்தல் என்னும் பொருள்தரும். செயல் ஒரு பொருளைச் சென்று ஒன்றுதல், பொருந்துதல் என்பது கருத்து. பேச்சு வழக்கில் எ என்றும் அ என்றும் சிதைந்து வரும். அஃதாவது கனியெத் தின்றான், மரத்தெ வெட்டினான் எனவும் யானையப் பார்த்தான், வாயப் பிளந்தான் எனவும் வரும். இலக்கிய வழக்கிற் சிறுபான்மை "காவலோனக் களிறஞ்சும்மே" என்றாற்போல ஐகாரம் அகரமாகத் திரிந்தும் வரும்.

வடமொழியாளர் இரண்டாம் வேற்றுமையைக் கருமக் காரகம் (காரகம் வேற்றுமைப் பொருள்) உருபுகளே வேற்றுமை நிலைகளைக் காட்டும். ஓர் உருபு பலபொருளில் வரும் என்பர்.

வடமொழியைப் பின்பற்றித் தமிழ் மொழிக்கு இலக்கணமாக இயற்றப்பட்டுள்ள வீரசோழியம் முதலிய நூல்கள் இரண்டாம் வேற்றுமை பற்றிக் கூறுவன வருமாறு:-

## வீரசோழியம்

1. **பற்றுக் காரகம்:** எ.டு:- பொன்னை ஆசைப்பட்டார்வறியர்.

2. **வீட்டுக் காரகம்:** எ.டு:- (வீட்டுதல் = தவிர்த்தல்) ஒழுக்கத்தை இகழ்வர் கயவர்.

3. **இருபுறக் கருமம்:** எ.டு:- துகளொடு சோற்றை உண்டான்.

4. **தான்தெரி கருத்தா :** எ.டு:- வீட்டை எழுப்பினான் தச்சன்.

5. **தான்தெரியாக் கருத்தா :** எ.டு:- வீடு தச்சன் எடுத்தான்.

6. **கருத்தாக் கருமம் :** எ.டு:- கொற்றனை ஊர்க்குப் போக்கினான் சாத்தன்.

7. **தீபகக் கருமம்:** எ.டு:- பசுவைப் பாலைக் கறந்தான் எனக் கூறும்.

## பிரயோக விவேகம்

இந்நூலாசிரியர் செயப்படு பொருளைத் தெரிநிலை (அபிகிதம்) தெரியா நிலை (அநபிகிதம்) என இரண்டாக வகுத்து, தெரிநிலைச் செயப்படுபொருள் ஒன்றே என்றும், தெரியா நிலைச் செயப்படுபொருள் ஈச்சிதம், அநீச்சிதம், ஈச்சிதா நீச்சிதம், கர்த்திரு கர்மம், அகதிதம் என ஐந்தாக விரிந்துவரும் என்றும் கூறுவர். மேலும் அகநிலைச் செயப்படுபொருளாகவும் வரும் என்பார்.

**I தெரிநிலை:**

எ.டு:- மாடம் தச்சனால் செய்யப்பட்டது.

**II தெரியாநிலை:**

*1. ஈச்சிதம்: (கருத்துள் வழி நிகழ்தல்)* சோற்றை உண்டான்.

*2.அநீச்சிதம்: (கருத்தில் வழிச் செய்தல்)* சோற்றைக்குழைத்தான்.

3. ஈச்சிதா நீச்சிதம்: (கருத்துள் வழியும் இல்வழியும்) ஊரைச் செல்வான் பசும்புல்லை மிதித்தான்.

4. கர்த்திரு கர்மம்: எ.டு:- மாணாக்கனை ஊர்க்குப்போக்கினான். மகட் போக்கியதாய், தன்னைத்தான் காதலித்தான்.

5. அகதிதம்: எ.டு:- பசுவினைப் பாலைக் கறந்தான்.

6. அகநிலை: எ.டு:- சாத்தன் வருதலைச் செய்தான் நடத்தலைச் செய்தான்.

## இலக்கணக் கொத்துரை

இந்நூலாசிரியர் மேலிருவரும் கூறியவற்றையே வேறுமுறையில் கூறுவார்.

1. கருத்துண்டாதல்: எ.டு:- சோற்றை உண்டான்.

2. கருத்தின்றாதல் : எ.டு:- சோற்றைக் குழைத்தான்.

3. இருமையுமாதல்: எ.டு:- எறும்பை மிதித்து வழியைச் சென்றான்.

4. ஈருருபு இணைதல்: எ.டு:- ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினாவினான்.

5. கருத்தாவாதல் : எ.டு:- தன்னைக் குத்தினான்.

6. அகநிலையாதல் : எ.டு:- வருதலைச் செய்தான்.

7. தெரியாநிலை: எ.டு:- மாடம் செய்யப்பட்டது - என வரைகிறார்.

## நன்னூல்

"இரண்டா வதன்உருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும்" (நன் - 296)

இதன் பொருள்:- இரண்டாம் வேற்றுமையினது உருபு ஐ என்பதே. அவ்வுருபின் பொருள் ஒன்றை ஆக்குதல், அழித்தல், அடைதல், துறக்கப்படுதல், ஒத்தல், உடைமையாகக் கொள்ளல் முதலியவைகளாகும். எ.டு:-

| | | |
|---|---|---|
| குடத்தை வனைந்தான் | - | ஆக்கல் |
| கோட்டையை இடித்தான் | - | அழித்தல் |
| ஊரை யடைந்தான் | - | அடைதல் |
| வீட்டைத் துறந்தான் | - | நீத்தல் |
| புலியை ஒத்தான் | - | ஒத்தல் |
| பொன்னை உடையான் | - | உடைமை. |

இது குறிப்பு வினை

நன்னூலார் வடமொழி இலக்கண மரபைத் தழுவி உருபு வேற்றுமை செய்யும். அவ்வுருபுக்குரிய பொருள் ஆக்கல் அழித்தல் முதலியவைகளாம் என்று கூறுகிறார். ஆக்கல், அழித்தல் முதலியவை வினைகள் செயப்படுபொருளை உணர்த்தும் தொழில்களேயன்றி அவை பொருள்கள் அல்ல. இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் செயப்படுபொருள் ஒன்றேயாகும்.

வீரசோழியம் முதலாய நூல்கள்கூறும் பொருள்களுள் பல ஒவ்வாதனவாகும். வீடு தச்சன் கட்டினான் என்பது தான் தெரியாச் கருமம் என்கிறார். உருபு தொக்கு நிற்பதையே அவ்வாறு கூறுகிறார். பசுவினைப்பாலைக் கறந்தான் என்பதைத் தீபகக் கருமம் என்கிறார். அது பசுவினது பாலைக் கறந்தான் என்பது உருபு மயக்கமாகும். அவ்வாறே ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினாவினான் என்பது ஒருதொடராயின் ஆசிரியனிடம் என உருபு மயக்கமாகும். இன்றேல் ஆசிரியனை வினாவினான் ஐயுற்ற பொருளை வினாவினான் என்பவை ஒருதொடராக நின்றனவாகா.

செயப்படு பொருளில் பாகுபாடு இன்மையான் ஐ- என்னும் ஒரேயொரு உருபுமட்டுமே அமைந்தது. சொல்லுருபாக யாதும் அமையவில்லை. செயப்படுபொருள் தரும் வினைச் சொற்களையெல்லாம் தொகுத்து வகைப்படுத்தின் அவை உண்டாக்கப்படுதல், அழிக்கப்படுதல், வேறுபடுக்கப்படுதல், என்னும் மூன்றனுள் அடங்கும். உடைமை ஆக்கத்தில் அடங்கும்.

## மூன்றாம் வேற்றுமை-கருவிப்பொருள்

ஒருவினைமுதலின் தொழில் செயப்படுபொருட்கண் சென்றுசேரத் துணையாக, உதவியாக, காரணமாக நிற்பவை கருவி எனப்படும். காரணம், ஏது என்பவை கருவி என்பதன்கண் அடங்கும். ஓர் எழுவாய்ப் பொருள் ஒரு செயலைச்

செய்யுமாயின் அக்காரியம் யாதானுமோர் கருவியின் சார்பின்றி நிகழாது. ஆதலின் செயப்படு பொருள் காரியம் நிகழ்வதற்கு அடிப்படையும் துணையுமாகிய இப்பொருள் மூன்றாம் வேற்றுமையாக அமைந்தது.

கருவி என்பது பருப்பொருளாகவும் இருக்கும் நுண்பொருளாகவும் இருக்கும். முதல், மூலம், அடிப்படை என்பவை கருவியைச் சுட்டும் சொற்களாகும். என்றும் ஏது என்றும் கூறுவர். நிமித்தம் என்பது ஏது என்னும் பொருள்தரும் வடசொல்.

கருவி என்னும் தமிழ்ச்சொல் (கரு+இ=கருவி) கரு என்னும் பகுதியொடு இகரவிகுதி சேர்ந்தமைந்ததாகும். காரணம் என்னும் தமிழ்ச் சொல் (கரு+அணம் - கார் அணம் - காரணம்) கருவை அணுகிநிற்பது என்னும் பொருளுடையதாகும். ஏது என்பது ஏ+து=ஏ=செலுத்துதல். து=பற்றுக்கோடு என்னும் பொருளினவாகும். அம்முறையில் 'ஏது' என்பது பற்றுக்கோடாகச் செலுத்துவது என்னும் பொருள்தரும். ஆரம் (மாலை) என்னும் சொல் வடமொழியில் ஹாரம் எனத்திரித்துக் கொள்ளப் பெற்றமைபோல ஏது என்பது வடமொழியில் ஹேது என அமைந்தது. கல்வி புகழுக்கு ஏதுவாகும். தவம் வீட்டிற்கு ஏதுவாகும் என்னுமிடத்துக் கல்வி புகழைத்தரும், தவம் வீட்டைத் தரும் எனப் பொருள் தருமாறு காண்க. தருதல்=செலுத்துதல்.

இக்கருவி, அகக்கருவி - புறக்கருவி - முதற்கருவி துணைக் கருவி - சார்புக் கருவி (நிமித்தக் கருவி) ஒற்றுமைக் கருவி - வேற்றுமைக் கருவி எனவகைப்படும். ஏது என்பது ஞாபக ஏது, காரக ஏது என வகைப்படும்.

இனி, மூன்றாம் வேற்றுமைபற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கண நெறி மரபுகளைக் காண்போம்.

> *"மூன்றா குவதே*
> *ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி*
> *வினைமுதற் கருவி அனைமுதற் றதுவே"* **(தொல்.சொல்.73)**

**இதன்பொருள்:-** ஒடு என்னும் பெயரையுடைய மூன்றாம் வேற்றுமை உருபுச் சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அது மூன்றாம் வேற்றுமையைக் குறிக்கும். அவ்வேற்றுமை இரண்டாம் வேற்றுமைக்குரிய வினை நிகழ்தற்கு அடிப்படைக்

கருவி என்னும் அத்தகைய காரணத்தை உடையதாகும் என்பது கருவியாக நிற்கும் அச்சொல்லை அவ்வுருபு சார்ந்து மூன்றாம் வேற்றுமையைப் புலப்படுத்தும். இரண்டாம் வேற்றுமை வினையே வினைக்குறிப்பு என்று அவ்விருமுதலிற்றோன்றும். இம்மூன்றாம் வேற்றுமை அவ்வினை நிகழ்வதற்கான கருவியிடத்து அமைந்து நிற்கும் என்பதாகும்.

இந்நூற்பாலில் வினைமுதல் என்றது வினையின் அடிப்படையை. அஃதாவது அவ்வினை நிகழ்தற்குரிய மூலத்தை உணர்த்திற்று. எனவே வினைமுதற் கருவி என்றது அவ்வினை நிகழ்தற்கு மூலமாக நிற்கும் கருவி என்றவாறாம். அனைமுதற்று = அக்காரணத்தையுடையது. முதல் = காரணம்.

மற்று, "மூன்றாகுவதே ஒடுவெனப்பெயரிய வேற்றுமைக் கிளவி கருவி யனைமுதற்றதுவே" எனக் கூறினும் அமையும். "வினைமுதற் கருவி அனை முதற்றதுவே" என மிகுத்துக் கூறியதன் கருத்து யாதெனின் அதுமிகையன்று. "விழுமியது பயத்தல்" என்னும் அழகாகும். மூன்றாம் வேற்றுமைப் பொருளைத் தோற்றுவிக்கும் வினைகள் பலவாக வருமாதலின் அவ்வவ் வினைக்கு ஏற்ற கருவிகள் அமைந்தாலன்றி அத்தொடர்கள் செம்பொருள் பயவா. ஆதலின், அவ்வினைகட்கு அவை அடிப்படையாக அமைதல்வேண்டுமென்பார் இங்ஙனம் விளங்க உரைத்தார் என்க.

அஃதாவது, கண்டான், பருகினான், வெட்டினான், எய்தான், குத்தினான், தாழ்ந்தான், உயர்ந்தான், அடித்தான், உதைத்தான் எனவரும் வினைகள் முறையே,

| | | | | |
|---|---|---|---|---|
| கண்ணாற் கண்டான் | - | கண் | - | கருவி |
| வாயாற் பருகினான் | - | வாய் | - | கருவி |
| வாளால் வெட்டினான் | - | வாள் | - | கருவி |
| கணையால் எய்தான் | - | கணை | - | கருவி |
| வேலாற்குத்தினான் | - | வேல் | - | கருவி |
| வறுமையான்தாழ்ந்தான் | - | வறுமை | - | கருவி |
| கல்வியால் உயர்ந்தான் | - | கல்வி | - | கருவி |
| கையால் அடித்தான் | - | கை | - | கருவி |
| காலால் உதைத்தான் | - | கால் | - | கருவி |

எனவரும்.

கண் வாய் முதலிய யாவும் கருவிகளே எனினும் கண்ணாற் பருகினான், வாயாற் கண்டான், கையால் உதைத்தான், காலால் அடித்தான் எனின் செம்பொருள் பயவா ஆதலின் அவ்வவ் வினைகட்கு ஏற்பக் கருவி அடிப்படையாக அமைதல் வேண்டும் என்பார் இங்ஙனம் விளங்கக் கூறினார் என்க.

சில வினைகள் ஒன்றற்கு மேற்பட்ட கருவிகளை எய்தும். அவ்வழி அவ்வினைகளில் பொருள்நிலை சிறிது மாறுபடும். எறிந்தான் என்னும் வினை வாளால் எறிந்தான் எனின் வெட்டுதலையும், கல்லால் எறிந்தான் எனின் உதிர்த்தலையும், கோலால் எறிந்தான் எனின் அடித்தலையும் உணர்த்தும்.

சில வினைகள் கருவிகள் வேறுபடினும் தாம் வேறுபடாது நிற்கும். உயர்ந்தான் என்னும் வினை கல்வியால், செல்வத்தால், அறிவால், அகவையால், பண்பால் எனப் பல்வேறு கருவிகளுக்கும் பொதுப்படவரும். இவற்றையெல்லாம் தெளிந்துணர வேண்டும் என்பார் "வினைமுதற் கருவி அனைமுதற்று" என்றார்.

தொல்காப்பிய உரையாசிரியன்மார் யாவரும் வடமொழித்தாக்கங் காரணமாக வினைமுதற் கருவி என்பதனை ஒருதொடராகக் கருதாமல் வினைமுதலும் (கருத்தா) கருவியும் எனப்பிரித்துப் பொருள்கூறிச் சென்றனர். பவணந்தி முனிவர் இன்னும் ஒருபடி மேற்சென்று கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள் என்று கூறினார்.

ஒரு பெயர்ப் பொருள் தன் செயல்களாலும் பிறவற்றின் செயல்களாலும் நிலைவேறுபடுதலே வேற்றுமை எனப்படும். பல்வேறுபட்ட பன்னூறு செயல்களால் எய்தும் வேறுபாடுகளை எல்லாம் தொகுத்து அடிப்படை வேறுபாடுகளை ஆராய்ந்து அவற்றை எட்டுவகைப் படுத்தினர் நூலோர். அஃதாவது, ஒருவர் தனித்தும் பிறவற்றோடு சேர்ந்தும் புரியும் தொழில்கள் பலவாகும். அச்செயல் பலவற்றையும் செய்பவர் தாம் ஒருவரே ஆதலின் அத்தொழில்களால் அவர் எய்தும் வேற்றுமை நிலை, அத்தொழில்கட் கெல்லாம் கருத்தாவாக வினைமுதலாக நிற்கும் நிலை ஒன்றே. அந்நிலையே முதலாவதாக நிகழும் வேற்றுமை. அதனால் பெயர் பொருள் எய்தும் கருத்தா என்னும் நிலை தனி ஒரு வேற்றுமை.

பிற கருத்தாவால் நிகழும் பல்வேறுபட்ட தொழில்கள் ஒருபொருளைச் சென்று அடையுமிடத்து அச்செயல்கட்கு எல்லாம் தான் பொருளாக அமையும் நிலை இரண்டாவது வேற்றுமை நிலையாகும். அந்நிலை செயப்படு பொருள் வேற்றுமைநிலை எனப்பட்டது.

அவ்வாறே பிறர்புரியும் பல்வேறு செயல்களுக்குத்தான் கருவியா அமையுமிடத்து அது மூன்றாவது வேற்றுமை நிலை பல்வேறு நிலையில் தன்னை வந்தடையும் பொருள்களை ஏற்றுக்கொள்ளும் நிலை நான்காவது வேற்றுமை நிலை. தன்னிடத் தினின்றும் ஒருபொருள் நீங்கவோ, தன்னை நடுவாக வைத்து ஒரு பொருளின் நிலையைக் குறிப்பிட்டோ உறழ்ந்தோ கூறும் நிலை ஐந்தாவது வேற்றுமைநிலை. தாம் பிறிதொரு பொருளுக்கு உடைமையாக நிற்கும் நிலை ஆறாவது வேற்றுமை நிலை. பொருள்கள் புரியும் செயல்களுத்தான் ஆதாரமாக இடமாக இருக்கும் நிலை ஏழாவது வேற்றுமை நிலை. தாம் பிறரால் அழைக்கப்படும் நிலை எட்டாவது வேற்றுமை நிலையாகும். எல்லாச் செயல்களும் காரணமாக ஒருபொருள் எய்தும் நிலைகள் இவ்வெட்டனுள் அடங்கும். ஒவ்வொன்றும் ஒரு வேற்றுமை நிலையையே எய்தும். ஒருவேற்றுமைக்குள் இரண்டு பொருள் நில்லா. பொருள் வேறுபாடுகளை எட்டாகப் பிரித்தபின் ஒருவேற்றுமையுள் இரண்டுபொருள் மூன்று பொருள் அமையுமெனின் எட்டாக வகுத்ததும் ஒவ்வொன்றற்கும் ஒரு பொருளை வரையறை செய்ததும் பிழையும் முரணுமாகும்.

இந்நெறி முறைப்படி காணின் கருத்தாவை வினைமுதல் எனக் கூறி அதனை முதல் வேற்றுமை எனச் கூறிய பின் மூன்றாம் வேற்றுமையும் வினைமுதல் பொருளையுடையது எனின் அது முரண்பாடன்றோ? ஆசிரியர் வினைமுதல் நிலைகளைக் கூறுமிடத்து செய்வது என்னும் எழுவாயை முதல் வேற்றுமைக்கும் கருவியை மூன்றாம் வேற்றுமைக்கும் உரிமையாக்கிக் கூறியிருப்பதை எண்ணாமல் இரண்டு வேற்றுமைகளை ஒரு வேற்றுமையாகக் கூறுவதும் அதைச் சாதிப்பதும் அறிவியல் முரண்பாடாகும்.

கருவி என்பது பருப்பொருளாயும் நுண்பொருளாயும் அமையுமாதலான் அதுபலவகைப்படுமாதலின் ஆசிரியர் அவற்றைக் கருவி, காரணம், ஏது என மூன்று வகையில் அடக்கிக் கருவிக்குத் தலைமை தந்து கருவிப் பொருள்

வேற்றுமை என்றார். அதற்குச் சிறந்த உருபு ஒடு என்பது. அதனை வேற்றுமைப் பெயராக்கி "மூன்றாகுவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" என்றார். காரணத்திற்கும் ஏதுவிற்கும் உரிய உருபு, இன், ஆன் என்பவையாம். அவற்றைக் கருவி வகைப் பற்றிக் கூறும் நூற்பாவில் உடம்பொடு புணர்த்திக் கூறுகின்றார். அந்நூற்பா வருமாறு:-

*"அதனின்" இயறல் அதற்றகு கிளவி*
*அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்*
*அதனிற் கோடல். அதனொடு மயங்கல்*
*அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி*
*அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி*
*அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை*
*இன்ஆன் ஏது ஈங்கென வரூஉம்*
*அன்ன பிறவும் அதன்பால என்மனார்"*

(தொல். சொல். 74)

**இதன்பொருள்:** அதனின் ஆதல் முதலாக அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை ஈறாக வரும் பொருள்களும், இன், ஆன் என ஈங்கு ஏதுப் பொருள்பற்றி வருவனவும் அவை போல்வன பிறவும் மூன்றாம் வேற்றுமையின் பாற்பட்டவையாகும் என்பர் நூலோர்.

இன், ஆன், ஏது என்றது இன் ஆன் என்னும் இணை உருபுகளைப் பெற்றுவரும் ஏதுப் பொருள் என்றவாறாம். இவற்றைப் பின்னர் "ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும் தாம் பிரிவிலவே" (தொல்.சொல்.93) எனவும், இந்நூற்பாவின்கண் அதனின் இயறல் அதனின் ஆதல் எனவும் ஆசிரியர் தம் நூற்பாக்களிலே உடம்பொடு புணர்த்துக் கூறலான் அறியலாம். ஆன் என்னும் உருபு புணர்மொழியின் கண் நேர்ந்த பிறழ்பிரிப்பினால் ஆல் எனவும் வழங்கலாயிற்று. நன்னூலாசிரியர் அதற்கே தலைமைதந்து மூன்றாவதன் உருபு ஆல், ஆன், ஒடு,ஓடு என்றார். "ஈங்கென வரூஉம்" என்பதனை "என ஈங்கு வரும்" எனமாற்றிக் கொள்க.

இனி இவ்விரண்டு நூற்பாக்களிற் கூறப்பெற்ற இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டுக்கள் வருமாறு:

**ஒடு:**

கொடியொடு துவக்குண்டான், மனத்தொடு வாய்மை மொழியின்

ஆன் :

மனத்தான் ஆம் மன்னுயிர்க் காக்கம் - (அகக்கருவி)
காலான் நடந்தான் - (புறக் கருவி)
மண்ணானியன்றகுடம், அறிவால்
உயர்ந்த சான்றோர் - (முதற்கருவி)
திரிகையான் இயன்றகுடம்,
உளியான் செதுக்கிய சிலை - (துணைக் கருவி)
நாணான் உயிரைத் துறப்பர். - (நிமித்தக்காரணம்)
கண்ணாற் கண்டான். - (ஒற்றுமைக் கருவி)
நீரான் நெருப்பை அவித்தான். - (வேற்றுமைக்கருவி)
மானத்தான் உயிர் நீத்தான். - (ஏது)
முயற்சியிற் பிறத்தலான்
ஒலி நிலையாது. - (ஞாபக ஏது)

இன் :

வாணிகத்தின் ஆயினான் - (காரகஏது)

## இரண்டாவது நூற்பாவுக்குரிய இலக்கணமும் எடுத்துக்காட்டும்

### 1. அதனின் இயறல்:

மண்ணின் இயன்ற குடம், அறிவின் அமைந்த சான்றோர் எனவரும். மண்ணே குடமாகவும் அறிவே சால்பாகவும் நிற்றலின் அதனின் இயல்தல் எனப்பட்டது. இங்ஙனம் காரணமே காரியமாக வரும் நிலையை முதற்காரணம் என்பர். இங்ஙனம் பெயர்ப்பயனிலையொடு முடியும் வாக்கியங்களில் தெரிநிலை வினை பெயரெச்சமாக வரும். உருபு தொக்குவரின் பயனிலையாகும் வினையும் தொக்கு இது மண்குடம், இது பொன் வளையல் எனவரும். இவ்வாறு வருவனவற்றை உருபும் பயனும் (பயனிலையும்) உடன்தொக்கத் தொகை என்பர். குடம் எழுவாய் நிலை எய்தின் இக்குடம் மண்ணான் இயன்றது எனவரும். செயப்படு பொருளாகக் கூறின் சாத்தன் குடத்தை மண்ணான் இயற்றினான் எனவரும். மூன்றாம் வேற்றுமைக்குரிய கருவிப் பொருள்களுள் இஃதொருவகை.

**2. அதற்றகு கிளவி:**

வாயாற்றக்கது வாய்ச்சி (வாய்ச்சி மரம் செதுக்கும் கருவி) இஃது அதன்வாய் காரணமாக அமைந்தமையின் அது தகவாயிற்று வாய்ச்சி வாயான் தகவுடைத்தாயிற்று என முதல் வேற்றுமைத் தொடர் வரும். கருவிகளுள் இஃதொரு வகை.

**3. அதன் வினைப்படுதல்:**

கொற்றன் நாயாற் கௌவப் பெற்றான் எனவரும். கௌவுதல் வினை. கொற்றனிடம் உறுதலின் அதன் வினைப்படுதலாயிற்று. இக்கருவி புலிக்கோட்பட்டான், பாம்புக் கோட்பட்டான் எனச் செயப்பாட்டுவினையாகவே வரும்.

**4. அதனின் ஆதல்:**

வாணிகத்தின் (உயர்வு) ஆயினான் எனவரும். உயர்வுக்குக் காரணம் வாணிகமாதலின் அதனின் ஆதல் என்றார். அதனின் இயறல்வேறு. ஆதல் வேறு. ஆதல் = ஆக்கமுறுதல் - நிலை வேறுபடுதல்.

**5. அதனிற் கோடல்:**

பணத்தாற் கொள்ளப்பட்ட அரிசி எனவரும். அரிசியைக் கொள்ளுதற்குக் கருவி பணமாதலின் அதனிற் கோடலாயிற்று. கருவியுள் இஃதொருவகை.

**6. அதனொடு மயங்கல்:**

பாலொடு தேன் மயங்கிற்று இதன்கண் தேன்தன் தன்மையினின்றும் திரிந்து வேறுபட்டமை வேற்றுமையாம். பாலான் தேன் மயங்கிற்று என்பது பொருள். தேன் மயங்குதற்குப் பால் காரணமாக நின்றது. இனிப் பாலொடு தேன்கலந்தான் எனவரின் பாலின்கண் தேனைக் கலந்தான் என்பது பொருள். ஆண்டு மூன்றனுருபு ஏழாம் வேற்றுமையாக மயங்கியதாகும். இதற்கு உரையாசிரியன்மார் எள்ளொடு விரவிய அரிசி என உதாரணம் காட்டுவர். அஃது எள்ளொடு ஒன்று கலந்து கலப்பாவதன்றி மயக்கமாகாது என்க. கருவியுள் அதனொடு மயங்கல் என்பது ஒருவகை.

**7. அதனொடியைந்த ஒருவினைக் கிளவி:**

ஒரே வினையை நிகழ்த்தும் இரண்டு வினை முதல்களின் பயனிலையை உணர்த்துமிடத்து, ஒன்றை ஒன்றனொடு சார்த்தி ஒருவினைமுடிபு கூறுதல். அதனொடியைந்த ஒருவினைக் கிளவியாம்.

எ.டு: அரசனொடு இளையர் வந்தார், தாயொடு குழந்தை வந்தது. இளையர் வந்திருப்பதற்கும், குழந்தை வந்திருப்பதற்கும் காரணம் அரசன் வந்தமையும் தாய்வந்தமையுமாகும். இங்ஙனம் காரணப் பொருளில் வருமிடத்து மட்டுமே ஒடுமூன்றாம் வேற்றுமை உருபாக நின்று கருவிப் பொருள் தரும். சாத்தனொடு கொற்றன் வந்தான். ஆசிரியனொடு மாணவன் வந்தான் என இருவரும் இணைந்து வந்தமையைச் சுட்டுவது பொருளாயின் ஆண்டு ஒடு என்பது உருபாகாது. இணைப்பு இடைச் சொல்லாகும். சாத்தனும் கொற்றனும் வந்தனர் என்பது பொருளாகும். சாத்தன் வரவுக்குக் கொற்றன் காரணமாயின் ஒடு உருபாகும். இங்ஙனம், ஒடு என்னும் இடைச்சொல் ஒருவினையொடு முடிந்து நிற்கும் வாக்கியத்தின் பொருளை உணர்ந்து ஒடு உருபாக நிற்றலையும் இணைப்பு இடைச் சொல்லாக நிற்றலையும் உணர்தல் வேண்டும். இணைப்பிடைச் சொல்லை உருபாக எண்ணி ஒடு உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். உடனிகழ்ச்சி மூன்றாம் வேற்றுமைப் பொருள் எனப் பிற்கால நூலோரின் கருத்துப் பொருந்தாமை பின்னர் விளக்கப்பெறும்.

**8. அதனொடியைந்த வேறுவினைக் கிளவி:**

இரண்டு வினைமுதலின் தொழில்களை இணைத்துக் கூறுமிடத்து வினைமுடிபு ஒன்றற்கு மட்டும்பொருந்தி மற்றொன்றற்கு ஒவ்வாது வருதல் வேறுவினைக் கிளவி எனப்படும். வினை வேறுபடினும் காரணப் பொருள் தருதலில் வேறுபடாது.

எ.டு: இடியொடு மழை பெய்தது. காவொடு அறக்குளம் தொட்டான் எனவரும். பெய்தல் தொழில் மழைக்கு மட்டுமே உரியது. இடிக்குரியதாகாது. அதற்கு இது வேறுவினை எனினும் மழை பெய்தல் காரணமாயிற்று. அவ்வாறே குளம்தோண்டுதல் என்னும் வினை காவளர்த்தற்காதலின் தொடுதல் காரணமாகநின்றது என்க. வினை வேறுபடினும் ஒடு உருபால் இயைக்கப் பெற்ற பொருளுக்கு அது காரணமாதலை நோக்கி மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருளின் வகைகளுள் ஒன்றாக ஆசிரியர் அமைத்தார்.

உரையாசிரியர்கள் இதற்கு "மலைபொடு பொருதமால் யானை" என உதாரணம் கூறிப் பொருதல் யானைக்கல்லது மலைக்கின்மையின் ஒருவினை ஒடுவாயிற்று என்பார். ஆசிரியர்

வேறுவினைக் கிளவி என்பதனை ஒருபக்கத்திற்குரிய வினை எனத்திரியக் கருதி இவ்வாறு கூறியுள்ளனர். மற்று இதன்கண் காரணப் பொருள் யாதும் இன்மையின் மூன்றாம் வேற்றுமை யாதற்கேலாமை அறிக. மலையைத் தனக்குப் பகையாகக் கருதினமையால் போரிட்டது எனின் இவ்வாறு தம் கருத்தே காரணமாக வருவன அன்னபிற என்பதன்கண் அடங்கும் என்க.

## 9. அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை:

தமக்குள் ஒப்புமையில்லாத இரண்டு பொருள்களை உவமமாக எடுத்து அவ்வாறமைந்த வேறு இரண்டு பொருளுக்கு உவமமாகக் கூறுதல் ஒப்பல் ஒப்புரையாகும். ஒப்பில்லாதவை ஒப்புமையாகக் கூறற்குக் காரணமாக அமைதலின் மூன்றாம் வேற்றுமைக் குரியதாயிற்று.

எ.டு: பொன்னொடு இரும்பு அனையர் நின்னொடுபிறரே எனவும், "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோ டேனையவர்" எனவும் வரும். பொன்னும் இரும்பும் பண்பாலும் மதிப்பாலும் வேறுபட்டவை. அவ்வாறே நின்னொடு பிறர் எனப் பிறரைத் தாழ்த்திக் கூறிற்று. அவ்வாறே மக்களும் விலங்கும் தன்மையால் வேறுபட்ட பொருள்கள். இவை கற்றார்க்கும் ஏனையவர்க்கும் உவமமாயின. இங்ஙனம் இவை உவமித்துக் கூற ஏதுவாயினமையின் மூன்றாம் வேற்றுமைக்குரிய வாயின.

இன் ஆன் ஏது: இன் ஆன் என்னும் இணை உருபுகளை ஏற்று ஏதுப் பொருளில் வருவனவும் மூன்றாம் வேற்றுமைக்குரியனவாம்.

எ.டு: கல்வியிற் பெரியன் கம்பன். கம்பன் கல்வி காரணமாகப் பெரியனாயினான் என்பது பொருள். பனியின்மையின் குளிர் இல்லை எனவும், தவத்தாற் சிறந்தான் அகத்தியன், புகை உண்மையான் நெருப்புண்டு எனவும் பிறவாற்றானும வரும். 'இன்' ஐந்தாவதற்குரியதாகக் கொள்ளப் பெற்றமையின் காரணப் பொருளில் அருகியே வரும். ஆன்உருபு பயின்றுவரும். ஆன் என்பது பிறழ்பிரிப்பால் ஆல் எனப்பிறழ்ந்து வரும். ஆல் உருபையே சிறப்பாக எடுத்துக் கூறுவார் பவணந்தியார்.

'இன்னா[illegible] ஏது' எ[illegible]பவற்றை உரையாசிரியர்கள் ஒரு தொடராக எண்ணி, [illegible]வ ஒருங்கு வருமெனக் கூறி முயற்சியிற்

பிறத்தலான் ஒலி நிலையாது என உதாரணங் கூறுவர். இரண்டும் ஒருதொடரின்கண் வரும் என்பதனால் சிறப்பொன்றுமில்லை. பிறத்தற்கு முயற்சி, ஏது நிலையாமைக்குப் பிறத்தல் ஏது.

வடமொழியில் பாணினி முனிவர் மூன்றாம் வேற்றுமை பற்றி இலக்கணம் கூறுமிடத்து உறுப்புக்களின் விகாரம் பற்றியும் வரும் என்பர். அதனைப் பின்பற்றி உரையாசிரியர் இத்தொடரை "இன்னான்" என ஒரு சொல்லாகக் கருதிக் கண்ணாற் குருடன், காலான் முடவன் எனமூன்றாம் வேற்றுமைவரும் எனக் கூறினார். அதனைச் சேனாவரையர் மறுத்து இன் ஆன் என்னும் இரண்டு உருபுகள் ஒருதொடரில் ஏதுப் பொருளில் வருமென்பார். கண்ணாற் குருடன் என்றாற் போல வருவனவற்றை 'அன்னபிற' என்பதனாற் கொள்ளலாம் என்பார் அவர். இன் ஆன் என்பவை ஒடு உருபிற்கு இணையாக ஏதுப்பொருளில் வரும் என்பதே நூலாசிரியர் கருத்தாகும். இவற்றை ஆசிரியர் உடம்பொடு புணர்த்துக்கூறுதலான் அறியலாம்.

## "உடனிகழ்ச்சிப் பொருள்" பற்றிய ஓர் ஆய்வுரை

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமைபற்றிய துணைச் சூத்திரத்தில் "அதனொடியைந்த ஒருவினைக் கிளவி" காரணப் பொருள் தருமிடத்து மூன்றாம் வேற்றுமையின் வகையாக அடங்கும் என்று கூறியதை நன்னூல் முதலிய பின்னூல்கள் அதனை உடன் நிகழ்ச்சிப் பொருள் எனக்கொண்டு தமிழ் நெறிக்கு மாறான கருத்துக்களை விதைத்துச் சென்றன. இற்றைநாள் வரையும் அவ்வாறே பயிற்றுவிக்கப் பெற்று வருகிறது. பவணந்தி முனிவர் கூறுமாறு,

> "மூன்றாவதன் உருபு ஆல்ஆன் ஒடுஓடு
> கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள்" (நன்.297)

என்பதாம். கருத்தா முதல் வேற்றுமைப் பொருளாவதல்லது மூன்றாம் வேற்றுமைக்குரியதாகாது என்பதை உணராமல் வடமொழியைப் பின்பற்றி ("கர்த்திரு கரணயோ த்ருதியா என்பார் பாணினி) கருவி கருத்தா உடனிகழ்வதன் பொருள் என்றார். ஒடு ஓடு என்பவற்றை உடனிகழ்ச்சிப் பொருளுக்குரிய உருபுகளாக விளக்கிச் சென்றனர். அவ்வளவோடு நில்லாமல் 'உடன்' என்னும் உருபு சொல்லுருபாக வரும் என்றும் கூறியுள்ளனர்.

வினைகள் பெயர்ப் பொருளை வேறுபடுத்தப் பயனிலைகளாக வருமேயன்றி அவை வேற்றுமை ஏலா என்பதைத் தொல்காப்பியம்,

*"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது*
*நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" (தொல்.சொல்.195)*

என்பார். உடனிகழ்வு என்னும் வினை ஒருஉருபின் பொருளாயின் அது செய்யும் வேற்றுமை யாது?

'ஒடு' என்னும் இடைச்சொல் மூன்றாம் வேற்றுமைக்குரிய காரணப் பொருள்தந்து உருபாகநிற்கும். வினை ஒழிபாக நிற்கும் இணைப்பு இடைச் சொல்லாகவரும். எண்ணிடைச் சொல்லாக வரும். இவற்றை அவ்வத்தொடர் மொழியமைப்பை நோக்கி உணர்தல் வேண்டும்.

**எ.டு:** வாளொடு வெட்டினான். (வாளான் வெட்டினான்) என்னுமிடத்து மூன்றாம் வேற்றுமையுருபு. வாளொடு வந்தான் (வாளை ஏந்திக் கொண்டு வந்தான்) என்னுமிடத்து வினையொழிபு வாளொடு கிடந்தான் உடனாதல் என்னும் இடைச் சொல். சாத்தனொடு கொற்றன் வந்தான் - இணைப்பு இடைச் சொல்.

*"பொருள் கருவிகாலம் வினையிடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்.675)*

இதன்கண் 'ஒடு' எண்ணிடைச் சொல்.

தொல்காப்பியர் ஒடு என்னும் சொல்லை வழங்குமிடங் களுள் சிலவற்றையும் அதனதன் பொருளையும் இனிக் காண்போம்.

*"முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்" (தொல்.எழுத்து.29)*

*"உம்மைப் பொருட்டு*
*இசையொடு சிவணிய நரம்பின்மறை" (தொல்.எழுத்து.33)*

*"உடனாதற் பொருட்டு*
*மேல் முப்பெயரொடும் வேறுபாடிலவே" (தொல்.எழுத்து.193)*

*"அளவைப் பொருட்டு*
*பொருளொடு புணராச் சுட்டுப்பெயர்" (தொல்.சொல்.37)*

*"இடப்பொருட்டு*
*ஆயிரைந்தொடு பிறவுமன்ன" (தொல்.சொல்.58)*

*"உம்மைப் பொருட்டு*
*ஒப்பொடு வருஉம் கிளவியொடு தொகைஇ" (தொல்.சொல்.160)*

"வினையடை
ஆயெண்கிளவியும் அவற்றொடு கொள்ளும்"
(தொல்.சொல்.209)

"ஒப்புப் பொருட்டு
தன்னொடு சிவணிய ஏனோர் சேறலும்" (தொல்.பொருள்.29)

"ஐகார வேற்றுமைப் பொருட்டு
ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"
(தொல்.பொருள்.83)

"உடனாதற் பொருட்டு
நிலந்தீ நீர்வளி விசும் பொடைந்தும்" (தொல்.பொருள்.635)

எண்ணுப் பொருட்டு, இங்ஙனம் பல்வேறு பொருள்களில் ஆளுதலைக் காணலாம்.

எனவே மூன்றாம் வேற்றுமைக்குரிய வேறுபாட்டுப் பொருள் கருவியாக நிற்கும் நிலை ஒன்றே என்பதும் கருவியே காரணமாகவும் ஏதுவாகவும் வரும் என்பதும், அதற்கு அடிப்படை உருபு ஒடு என்பதும், இன், ஆன் என்பவை இணை உருபாக வரும் என்பதும், உடனிகழ்ச்சி என்பதொரு வேற்றுமைப் பொருள் தொல்காப்பியர் கூறவில்லை என்பதும், அது வேற்றுமையைச் செய்யும் வினையே தவிர வேற்றுமைப் பொருளாகாது என்பதும். ஒடு என்னும் உருபிடைச் சொல் வேறு, இணைப்பு முதலிய பொருள்தரும் ஒடு என்னும் இடைச்சொல் வேறு என்பதும் பிறவும் புலனாகும்.

## மூன்றாம் வேற்றுமை பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள்

"ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, வினை முதற் கருவி அனைமுதற்று அதுவே" (தொல்.சொல்.73) என்னும் தொடரை உரையாளர் யாவரும் வடமொழி இலக்கணத்தைக் கருத்திற்கொண்டு மூன்றாம் வேற்றுமை வினைமுதலும் கருவியும் என்னும் இரண்டு பொருள்பற்றி வரும் என்றும் "அதனொடியைந்த ஒருவினைக் கிளவி" என்னும் கருவிவகையினை உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருள் என்றும் உரைத்துச் சென்றனர். நன்னூலாசிரியர், "கருவி கருத்தா உடன்நிகழ்வு அதன் பொருள்" என்று கூறிச் சொன்றார்.

கருத்தா என்னும் வினைமுதல் முதல்வேற்றுமைக்குரிய பொருளாகும். அதுவே மூன்றாம் வேற்றுமைக்கும் பொருளாகும். எனல் வேற்றுமை என்னும் தத்துவத்திற்கும் எட்டாக வகுத்துக்கொண்ட இலக்கணத்திற்கும் முரணாகும். அரசன் கோயில் கட்டினான் என்னும் தொடரில் அரசன் மூன்றாம் வேற்றுமைக் கருத்தா என்றும், காரணம் அரசன் கல்லையும் மண்ணையும் அடுக்கிப் பூசிக் கட்டும் பணியைச் செய்தான் என்பது தவறு. அவன் கட்டளையால் தச்சரே கோயிலைக் கட்டுவார்கள். அதனான் அரசனால் கோயில் கட்டப்பட்டது என்பது அரசன் கோயில் கட்டினான் என அமைந்துள்ளது என்பார். அங்ஙனம் ஏவுதலால் அரசன் என்பது நிமித்தக் கருவியாய்க் கருத்தா வாயிற்று என்பார். அம்முறையில் மூன்றாம் வேற்றுமைக்குக் கருத்தாப் பொருளும் உண்டு என வரைந்தனர்.

அரசன் கோயில் கட்டினான் என்னுமிடத்துத் தச்சரால் என்பது தொக்கு நின்றதாகக் கொள்ளுதலே முறையாகும். வாக்கிய அமைப்பு நோக்கியும் வினைமுடிபு நோக்கியுமே வேற்றுமை உறுதி செய்யப்படும். தச்சன் தேர் செய்தான் என்புழி, தச்சன் இயற்றுதற் கருத்தாவாக முதல் வேற்றுமையாக நிற்பதைப் போன்றே அரசன் தேர்செய்தான் என்னுமிடத்து அரசன் ஏவுதற்கருத்தாவாக முதல் வேற்றுமையாகவே நிற்கும். கருத்தா பல்வேறு நிலைகளில் வரும் என்பது எழுவாய் வேற்றுமை விளக்கத்திற் கூறப்பட்டுள்ளது.

கண்காணும், பசிதுன்புறுத்தும், கல்வி இன்பம்தரும் எனவரும் தொடர்களில் கண், பசி, கல்வி என்பவை கருவிகளே எனினும் அவை வினைமுடிபு கொண்டுள்ள நிலையில் எழுவாயாக நிற்றலைக் காணலாம்.

அவ்வாறே அரசன் கோயில் எழுப்பும் என்னும் தொடரில் வினைமுடிபினால் அரசன் என்னும் பெயர் எழுவாய் வேற்றுமையாம். அஃதாவது வினைமுதலாகும். அரசனைக் கருவியாக்கின் கோயில் அரசனால் எழுப்பப்பெற்றது எனவரும். தொடரின் கண் உருபேற்றுள்ள பெயர்ப்பொருள் எந்த வேற்றுமை நிலையில் நிற்கிறது என்பதை நோக்காமல் கருத்துப் பொருளை நோக்கிக் கூறமுற்படின், சாத்தன் பழத்தை உண்டான் என்னுமிடத்துப் பழம் இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருள். பழம் சாத்தனால் உண்ணப்பட்டது என்னுமிடத்துப் பழம் முதல் வேற்றுமை வினைமுதல். இதனை

இரண்டாம் வேற்றுமைக் கருத்தா எனலாமோ? மன்னன் பாணற்குப் பரிசளித்தான் என்னுமிடத்துப் பாணன் நான்காம் வேற்றுமை. பாணன் மன்னன் அளித்த பரிசைப் பெற்றான் என்னுமிடத்து முதல் வேற்றுமை. இதனை நான்காம் வேற்றுமைக் கருத்தா எனலாமோ? சாத்தன் ஊரின் நீங்கினான் என்னுமிடத்து ஊர் ஐந்தாம் வேற்றுமை. இவ்வூர் சாத்தன் நீங்கிய ஊர். இதன் கண் ஊர் முதல் வேற்றுமை. இதனை ஐந்தாம் வேற்றுமைக் கருத்தா எனலாமோ? வேலன் மலையின் கண் நடந்தான் மலை ஏழாம் வேற்றுமை. இம்மலை வேலன் நடந்த மலை. மலை எழுவாய். இதனை ஏழாம் வேற்றுமை கருத்தா எனலாமோ?

அவ்வாறே கோயில் அரசனாற் கட்டப்பட்டது. இதன்கண் அரசன் மூன்றாம் வேற்றுமைக் கருவி. அரசன் கோயிலைக் கட்டினான் என்னுமிடத்து அரசன் முதல் வேற்றுமைவினைமுதல். இதனை மட்டும் மூன்றாம் வேற்றுமைக் கருத்தா எனல் எவ்வாறு பொருந்தும்? காரணம், அரசன் கற்களை அடுக்கிக் கட்டும் பணியைச் செய்யமாட்டான். தச்சனைக் கொண்டுதான் கட்டுவான் என்னும் கருத்தேயாம்.

இங்ஙனம் மூன்றாம் வேற்றுமை கருத்தா, கருவி, உடனிகழ்ச்சி, இன்னான் ஏது என்னும் பொருள்களில் வரும் என உரையாசிரியன்மாரும் நன்னூலாரும் கொண்டமைக்குக் காரணம் பின்வரும் பாணினீயச் சூத்திரங்களேயாம். மூன்றாம் வேற்றுமை உருபின் பொருள்களாகப் பாணினி,

1) கர்த்ரு கரணயோ த்ருதீயா
2) ஸம்யுக்த அப்ர தானே
3) ஏநாங்க விகார:
4) இத்தம் பூத லக்ஷ்ணே
5) ஏதௌ

எனக் கூறும் சூத்திரங்களாகும். இவற்றின் பொருள் (1) மூன்றாம் வேற்றுமை உருபு கருத்தா பற்றியும் கரணம் (கருவி) பற்றியும் வரும். (2) உடனிகழ்சசியில் உருபு தலைமையில்லாத பொருளிடத்து வரும். (3) உறுப்புக்களின் விகாரம் பற்றி வரும். (4) இவ்வாறிருத்தல் எனவரும். (5) ஏது பற்றி வரும் என்பனவாம்.

இனி, "அதனொடியைந்த ஒருவினைக் கிளவி" எனக் காரணம் பற்றித் தொல்காப்பியர் கூறுவதைக் கருதாமல்

உடனிகழ்ச்சியை ஒரு பொருளாகக் கொண்டு சாத்தனொடு கொற்றன் வந்தான் என உதாரணங்காட்டி, ஒடு உருபு வந்தான் வினையைச் சாத்தனுக்கும் உரிமையாக்குதலின் வேற்றுமையாயிற்று என்பர். சாத்தனையும் வருவோனாகச் செய்தலின் வேற்றுமையாயிற்று எனின், சாத்தனே கொண்டான் என்னுமிடத்துப் பிறர் கொள்ளவில்லை எனப் பொருள் தருதலின், ஏகாரத்தையும், யானோ செய்வேன் என்னுமிடத்துச் செய்யேன் எனப்பொருள் தருதலின் ஓகாரத்தையும், கொற்றனும் வந்தான் என்னுமிடத்துச் சாத்தனும் வந்தான் என்னும் பொருள் தருதலின் உம்மையை வேற்றமை உருபுகளாகக் கொண்டு பலப்பல வேற்றுமைகளை வகுக்க நேரிடும்.

எனவே, உடனிகழ்ச்சி என்பது ஒரு வேற்றுமைப் பொருளன்று என்பதும், சாத்தனொடு கொற்றன் வந்தான் என்னுமிடத்துச் சாத்தன் வருகைக்குக் கொற்றன் காரணமாயின் ஒடு உருபாகும் என்பதும், இருவரும் வந்தனர் எனப் பொருள்தரின் ஒடு இணைப்பிடைச்சொல் என்பதும் விளங்கும்.

மூன்றாம் வேற்றுமை உருபிடைச் சொற்கள் ஒடு, ஆன், இன் என்பனவாகும். பவணந்தியார் ஆன் என்பதன் திரிபாகிய ஆல் என்பதையும், ஒடு என்பதன் நீட்டல் விகாரமாகிய ஓடு என்பதையும் வேறாக எண்ணிக் கூறுவார்.

இவற்றுள் ஒடு உருபு கருவிப்பொருட்குச் சிறப்புருபாகும். ஒடு என்பது கொண்டு என்னும் வினையெச்சச் சொல்லின் மரூஉவாகும். கொண்டு-கொடு-ஒடு என மருவி இடைச் சொல்லாக அமைந்தது. வாள் கொண்டு வெட்டினான் - வாள் கொடு வெட்டினான். வாளொடு வெட்டினான் எனவரும்.

இணைப்பிடைச் சொல்லாகிய ஒடு என்பது வேறு. அது நீண்டு ஓடு எனவும், திரிந்து உடன் எனவும் வரும்.

ஆன் என்பது அதனான் என்பதன் சுருக்கம். இன் என்பது அதனின் என்பதன் சுருக்கம். இவற்றுள் முதனிலையாகிய சுட்டுப் பயனின்றி நிற்றலின் அதனை நீக்கி, ஆன், இன் என அமைத்துக் கொண்டனர் நூலோர். மகர ஈற்றுப் பெயர்களில் சுட்டு அழுத்தம் பெற்று மரத்தான் இயன்றதேர், மரத்தின் இயன்றதேர் எனவரும். இவற்றுள் அது என்னும் சுட்டு சுட்டுப் பொருள் உணர்த்தாமையான் நூலோர் அதனைச் சாரியையாகக் கூறினர்.

மற்று மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஒடு, ஆன், இன் ஆகியவற்றோடு மாறு - உளி என்பவை சொல்லுருபாக வரும். சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே (பிறந்தமையான்) இயல்புளிக் கோலோச்சும் மன்னன் (இயல்பினான்) எனவரும். மூன்றாம் வேற்றுமை யுருபு பெயர் கொண்டு முடியுமிடத்து மண்குடம், நூலாடை, வாள்வெட்டு எனச் பயனிலைச் சொல்லோடு கூடித் தொக்கு நிற்கும். வினையொடு முடியுமிடத்து வெளிப்பட்டே நிற்கும்.

உரையாசிரியன்மார் ஆன் உருபு ஒரோவிடத்து ஒடு உருபிற்குரிய உடனிகழ்ச்சிப் பொருளில் வருமென்று கூறி "தூங்குகையான் ஓங்கு நடைய" என்றும் "உறழ்மணியான் உயர் மருப்பின" என்றும் உதாரணம் காட்டுவர். இவற்றின் பொருள் தொங்குகின்ற கையோடு கூடிய உயர்ந்த நடையின, என்பதும் உறழ்கின்ற மணியோடு கூடிய உயர்ந்த மருப்பினை உடையன என்பதும் பொருளாம். ஆன் என்னும் இடைச்சொல் ஈண்டு வேலொடு வந்தான் என்பதுபோல உடனாக என்னும் பொருளில் வந்தனவேயன்றி உடனிகழ்ச்சிப் பொருள் இன்மையான் உருபு எனல் ஒவ்வாது என அறிக. 'இன்' என்பது மூன்றாம் வேற்றுமையில் காரணப் பொருள்தரும் உருபாகவரும். ஐந்தாம் வேற்றுமை இன் உருபு நின்று என்னும் வினையெச்சச் சொல்லின் மரூஉவாகும். அதற்குரிய பொருள் இதனின், இற்று, இது என்னும் உறழ்ச்சிப் பொருளாகும். பிறவிளக்கங்களை ஐந்தாம் வேற்றுமை விளக்கத்துள் கண்டுகொள்க.

## நான்காம் வேற்றுமை (கொள்ளுதற் பொருள்)

வினை முதலாக (எழுவாயாக)த் தோன்றியதொரு பொருள், செயப்படு பொருளைக் கருவி காரணங்களால் இயற்றிய பின் ஆக்கம் பெற்ற பொருளையோ, இயற்கையாக ஆக்கம் பெற்ற பொருளையோ பிறிதொரு பொருள் கொள்ளுமாறு கொடுப்பது உலகியற்கையாகும். அங்ஙனம், ஒருபொருளைப் பிறிதொன்றற்குக் கொடுக்கும் வினைமுதல் முதல்வேற்றுமையாகவும், கொள்ளும் வினைமுதல் நான்காம் வேற்றுமையாகவும் அமையும். கொள்ளும் செயல் இரண்டாம் வேற்றுமைக்கோ மூன்றாம் வேற்றுமைக்கோ ஆகாமையின் அது நான்காம் வேற்றுமையாக அமைந்தது. அவ்வாற்றான் கோடற்பொருள் நான்காவதாக வைக்கப்பட்டது.

மன்னன் புலவர்க்குப் பொன் வழங்கினான் - மலர் வண்டிற்குத் தேனளித்தது - தாய் குழந்தைக்குப் பாலூட்டினாள்

· எனவரும் தொடர்களில் கொடுத்தல் மன்னனுக்கும் மலருக்கும் தாய்க்கும் உரியவாக அமைதலின் புலவர் வண்டு குழந்தை என்னும் பெயர்ப் பொருள்கள் நான்காம் வேற்றுமைக் குரிய அடையாளமாகிய 'கு'வ்வுருபை ஏற்று நின்றன. கொடுக்கும் பொருளும் கொள்ளும் பொருளும் இருதிணைப் பொருள்களுள் யாதாக வேண்டுமாயினும் அமையலாம். அம்முறைமையான் நான்காம் வேற்றுமை இலக்கணம் பற்றித் தொல்காப்பியம்,

"நான்காகுவதே,
குவ்வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே" (தொல்.சொல்.74)

என்கிறது.

**இதன் பொருள்:** குவ்வெனப் பெயர்பெற்ற நான்காம் வேற்றுமைச் சொல் யாதொரு பொருட் பெயரிடத்துவரினும் அது நான்காம் வேற்றுமையாகும். அஃது எத்தகைய பொருளாயினும் அதை ஏற்றுக் கொள்ளும் நிலையினதாகும்.

கொள்ளுதல், ஏற்றல், பெறுதல், உறுதல், படுதல், அடைதல் என்பவை யாவும் கொள்ளும் என்பதனுள் அடங்கும்.

நான்காம் வேற்றுமைக்குரிய கு-உருபு ஒரு தொடரின்கண் விரிந்து நிற்குமிடத்தும், பிறவேற்றுமைப் பொருள்களோடு மயங்கும் இலக்கணத்த தாகலின் இதற்குரிய கோடற் பொருளை மிக நுணுகியறிதல் வேண்டுமாதலின் எப்பொருளாயினும் கொள்ளும் என்றார்.

**எ.டு:** ஆசிரியன் மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் எனக் கொடுப்போன் பொருளை இழவாமற் கொள்வோன் கொள்ளும் பொருளும், தலைவன் தலைவிக்கு இன்பம் அளித்தான் என்றாற் போலக் கொடைப் பொருள் ஆண்டுத் தோன்றும் பொருளாதலும் - அறிவிலான் தனக்குத் தானேபகை செய்து கொண்டான் என ஆக்கிக் கொள்ளும் பொருளாதலும் அடங்க எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே என்றார்.

ஆசிரியர் இதன் வகைகளைக் கூறுமிடத்து,

1) அதற்கு வினையுடைமை
2) அதற்கு உடம்படுதல்
3) அதற்குப் படுபொருள்
4) அதுவாகு கிளவி
5) அதற்கு யாப்புடைமை

6) அதன் பொருட்டாதல்
7) நட்பினதாதல்
8) பகையாதல்
9) காதலாதல்
10) சிறப்பாதல்

எனப் பலவாறு வரும் என்கிறார்.

எ.டு: 1) அதற்கு வினையுடைமை : நெல்லுக்கு உழுதான், கரும்பிற்கு உழுதான் என்றாற்போல வரும். உழுதலின் பயனை நெல்லும் கரும்பும் கொள்ளுதலின் அவைகோடற் பொருளாய் நான்காம் வேற்றுமையாயின. நெல்லைப் பெறுதற்கு உழுதான் என்பது பொருளாயின் அதன் பொருட்டாதல் என்பதன்கண் அடங்கும். இத்தகு தொடர்களில் நெல்லுக்காக உழுதான் என ஆக என்னும் சொல் துணையாக வருதலும் உண்டு.

2) அதற்கு உடம்படுதல் : சாத்தன் மணத்திற்கு உடன்பட்டான். அரசன் போருக்கு உடன்பட்டான் எனவரும். உடன்பாட்டினை ஏற்பவை மணமும் போரும் ஆதலின் அவை உருபேற்று நான்காம் வேற்றுமையாயின. உடம்படுதல் - ஒப்புக் கொள்ளுதல். இது சான்றோர் கொலைக்கு உடம்பட்டார் என்றாற் போலவும் வரும்.

3) அதற்குப் படுபொருள் : வண்ணந் தீட்டும் ஓவியன் ஒருவன் தான் வரைந்த மலர் ஓவியங்களைக் காட்டி இம்மலர்க்கு நிறம் மஞ்சள், இம்மலர்க்கு நிறம் நீலம் என்றாற் போலக் கூறுமிடத்து அந்நிறம் அம்மலர்கள் ஏற்பனவாதலின் அதற்குப்படு பொருள் எனப்பட்டது. படுதல்=ஒத்துரிமையாதல், படுபொருள் என்பது வினைத் தொகை மொழியாதலின் முக்காலத்திற்கும் ஏற்புடையதாக நிற்கும். இது "நெல்லுக்கு உமியுண்டு. நீர்க்கு நுரையுண்டு", புகழுக்கு ஒளியுண்டு என்றாற் போலவும் வரும்.

உரையாசிரியர்கள் இதற்குச் சாத்தற்குக் கூறு கொற்றன் என உதாரணந்தருவார்கள். சாத்தன் உருவாவதற்குக் கொற்றன் உடம்பு ஒரு கூறுவந்து அமையின் நான்காம் வேற்றுமையாகும். சாத்தன் உடம்பில் ஒரு கூறு கொற்றனது எனப் பொருள் தரின் அது ஆறாம் வேற்றுமையின் பாற்படும். சாத்தன்கண் ஒரு கூறு கொற்றன் உடம்பு எனப் பொருள்தரின் அது ஏழாம் வேற்றுமையின் பாற்படும். ஆதலின், உரையாசிரியர் தரும்

உதாரணங்களை இலக்கணத்தொடு பொருந்தப் பொருள் கொள்ளல் வேண்டும்.

4) அதுவாகு கிளவி : தாலிக்குப் பொன் கொடுத்தான் ஆடைக்கு நூல் தந்தான் எனவரும். பொன்னே தாலியாகவும் நூலே ஆடையாகவும் ஒன்றுபடுதலின் கொடுத்த பொருளும் கொண்ட பொருளும் ஒன்றாயின. அதனான் இவைபோல்வன அதுவாகு கிளவி எனப்படும். இவற்றின்கண் கொள்ளும் என்னும் இலக்கணம் எவ்வாறு அமைந்துள்ளது எனின் பொன் தாலியான பின் அது பொன் என்று கூறப் பெறாது. ஆதலானும் தாலி பொன்னை ஏற்று வேறு பொருளாக ஆக்கம் பெற்றமையானும் தாலி ஏற்கும் பொருளாயிற்று. ஆடையும் இவ்வாறே கொள்ளும் பொருளாயிற்று.

5) அதற்கு யாப்புடைமை : இன்றியமையாத இயைபுடைமை யாப்புடைமையாகும். பிணிக்கு மருந்துண்டான், பாடற்கு இசை கூட்டினான் எனவரும். கைக்குக் கடகமிட்டான் எனவும் வரும். மருந்தைப் பிணியும், இசையைப் பாடலும், கடகத்தைக் கையும் ஏற்றுக் கொண்டமையின் அவை நான்காம் வேற்றுமையாயின.

6) அதன் பொருட்டாதல் : பொருட்டு=நிமித்தம். அதற்குக் காரணமாதல் என்பது பொருள். பசிக்கு உணவளித்தான், மழைக்குக் குடை பிடித்தான், கூழிற்கு வேலை செய்தான் எனவரும். பசி உணவையும், மழை குடையையும், கூழ் வேலையையும் ஏற்றுக் கொள்வதனான் அவை நான்காம் வேற்றுமையாயின.

7) நட்பு : நெருப்புக்கு நெய் வார்த்தான். பாரிக்கு நண்பர் கபிலர் எனவரும்.

8) பகை : நெருப்புக்கு நீர் விட்டான். பாம்பிற்குப் பகை மயில் எனவரும்.

9) காதல் : தலைவன் தலைவிக்குப் பூச்சூட்டினான், நட்டார்க்குக் காதலன் கண்ணன் எனவரும். (காதல் = பேரன்பு)

10) சிறப்பு : "மனைக்கு விளக்கம் மடவார்". கல்விக்குச் சிறந்தது செவி உணவுக்குச் சிறந்தது நெய் எனவரும்.

11) பிறவாறு வருவன : 'போர்க்குப் புணைமன்', 'மனைக்குப் பாழ் வாணுதலின்மை', உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், அவற்குச் சோறுண்டு, அடியார்க்கு அன்பு செய்தான் எனவரும். பிறவாறு கொள்ளும் பொருளாக வருவன எல்லாம் இதன்கண் அடங்கும்.

'கு' என்னும் இவ்விருபிடைச் சொல் ஏற்கும் என்னும் முற்றுச் சொல்லின் திரிபாகிய ஏற்கு என்பது ஏக்கு-கு எனமருவி ஐகார உருபைப் போல ஓரெழுத்தொரு மொழியாக இலக்கணக் குறியீட்டு இடைச்சொல்லாக அமைந்ததாகும்.

இனி, நன்னூலாசிரியர் நான்காம் வேற்றுமை இலக்கணமாகக் கூறுவதைப் பார்ப்போம். அவர் கூறுமாறு:

"நான்கா வதற்கு உருபாகும் குவ்வே
கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்
பொருட்டு, முறையாதியின் இதற்கிது எனல்பொருளே" (நன்.298)

என்பதாகும். கொடை, பகை முதலியவை 'இதற்கிது' என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள். அஃதாவது நான்காம் வேற்றுமை "இதற்கு இது" என்னும் பொருளில் வரும் என்பதாகும்.

கொடை : அரசன் பாணற்குப் பரிசு கொடுத்தான்.

பகை : பாம்புக்குப் பகை கருடன்.

நேர்ச்சி : (நட்பு) சாத்தற்கு நண்பன் கொற்றன்.

தகவு : மன்னர்க்குரியது மணிமுடி.

அதுவாதல் : குண்டலத்திற்குப் பொன் அளித்தான்.

பொருட்டு : கூலிக்கு வேலை செய்தான்.

முறை : சாத்தனுக்கு மகன் கொற்றன் ஆதி (முதலியவை) என்றதனால் மழைக்கு மின்னல், அவனுக்கு இது போதும் என்றாற் போல்வனவாகும்.

நான்காம் வேற்றுமை பாம்புக்குப் பகை கருடன் எனப் பெயர்ப் பயனிலையொடும், அரசன் பாணற்குப் பரிசு கொடுத்தான் என வினைப் பயனிலையொடும் முடிதலின் "இதற்கு இது" என்னும் வாய்பாடு வினையொடு முடிதலைக் கொள்ளாமையான் இங்ஙனம் இலக்கணம் கூறுதல் குன்றக் கூறலாகும். மற்றும், முறை என்பது பிறப்புத் தொடர்பான் வருவது. பசுவினது கன்று, கன்றினது தாய் என அஃறிணையாவும், சாத்தனது தந்தை,

சாத்தியது தாய் எனப் பொதுப் பெயராயும் வரும். பொதுப் பெயர் பொதுத் தன்மை நீங்கி உயர்திணைக்குரியதாக வருமிடத்து 'அது' உருபுக்கு மாற்றாக குகரம் இடைச் சொல்லாக வரும். நம்பிக்கு மகன், நங்கைக்குக் கணவன் எனவரும். முறைப் பொருள் உடைமை பற்றியல்லது கோடற் பொருளாக வராது. சாத்தன் மகன் என்னுமிடத்துக் கொடுப்பதும் கொள்வதும் இன்மையானும் மகன் சாத்தன் உடைமைப் பொருளாக உள்ளமையானும் முறைப் பொருள் ஆறாம் வேற்றுமைக்கே உரியதாகும். சாத்தன் மகன் என்னும் தொடரை விரிப்புழி, அஃறிணைப் பெயராயின் சாத்தனது மகன் எனவரும். உயர் திணையாயின் அது உருபு விரியாது. ஆண்டு ஓர் குகரம் வந்து சாத்தனுக்கு மகன் என விரியும். அதனான்,

"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே" (தொல்.சொல்.90)

என விதித்தார் ஆசிரியர் தொல்காப்பியர். அதனை உணராத பவணந்தியார் குவ்வுருபிற்கே முறைப்பொருள் உண்டு எனக் கருதிப் "பொருட்டு முறையாதியின் இதற்கிது எனல் பொருளே" என்றார். இது மாறுகொளக் கூறல் என்னும் குற்றமாகும். இங்ஙனம் தமிழ் நெறிக்கு முரணாகப் பவணந்தியார் கூறுவனவற்றைச் சிறிதும் ஆராயாமல் உரையாளர்கள் எல்லாவற்றிற்கும் ஒவ்வாத அமைதி கூறிச் சென்றனர்.

இனி வீரசோழிய நூலாசிரியர், பிரயோகவிவேக நூலாசிரியர், இலக்கணக் கொத்து நூலாசிரியர் ஆகியோர் வடமொழிக் கோட்பாட்டினை ஒட்டி நான்காம் வேற்றுமைப் பொருளைச் சொற்றொடர்களின் பொருளை ஒட்டிப் பலவாறு விரித்துரைப்பதை இனிப்பார்க்கலாம். நான்காம் வேற்றுமைக் காரகமாக (பொருளாக) வடநூலார் கூறும் காரகம் சம்பிரதானம் என்பதாகும். அதனைக் கொடை, கோளி எனமொழி பெயர்த்துக் கூறுவர்.

## வீரசோழியம்

வீரசோழிய ஆசிரியர் கோளிக் காரகம் மூன்று வகையாக வரும் என்பார். அவையும் அவற்றிற்கு உரையாசிரியர் தரும் உதாரணங்களும் வருமாறு:

1. ஆர்வக் கோளி : அருந்தவர்க்கு உணவு கொடுத்தான்
2. கிடப்புக் கோளி : தேவர்க்குப் பூவிட்டான்
3. இரப்புக் கோளி : அந்தணர்க்குப் பொன் கொடுத்தான்

என்பனவாம்.

### பிரயோக விவேகம்

பிரயோக விவேக நூலாசிரியர் சம்பிரதானம் ஐந்துவகையாக வரும் என்று கூறி அவர்தரும் உதாரணங்கள் வருமாறு:

1. அநிரா கர்த்ரு சம்பிரதானம் : (கேளாது ஏற்றல்) முக்கண் மூர்த்திக்குப் பூ இட்டான்.

2. பிரேரக சம்பிரதானம் : (கேட்டே ஏற்றல்) வறியார்க்குப் பொருளீந்தான்.

3. அநுமந்திரு சம்பிரதானம் : (அநு மதிக்கப் பட்ட கொடை) ஆசிரியன் மாணாக்கற்குக் கசையடி கொடுத்தான். இதனை விருப்பாயேற்றல் என்பர்.

4. அபேத சம்பிரதானம் : (வேறுபாடின்மை) "அருமறை சோரும் அறிவிலான் செய்யும் பெருமிறைதானே தனக்கு" (இதனை ஈவோனேற்றல்) என்பர்.

5. ததார்த்தியே சதுர்த்தி: (அதுவாகு கிளவி) குண்டலத்திற்குப் பொன்.

### இலக்கணக் கொத்துரை

இலக்கணக் கொத்துரையாசிரியர் ஏற்றல் பதினான்கு நிலைகளில் வரும் என்று கூறி அவர்தரும் உதாரணங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. கேளா தேற்றல் | : | ஆவிற்கு நீர்விட்டான். |
| 2. கேட்டே யேற்றல் | : | வறியார்க்குப் பொன் ஈந்தான் |
| 3. ஏலா தேற்றல் | : | மாணாக்கனுக்கு அறிவு கொடுத்தான். |
| 4. ஈவோ னேற்றல் | : | தனக்கு அரிசி கொடுத்தான் |
| 5. உயர்ந்தோ னேற்றல் | : | அரனுக்குக் கண்ணலர் கொடுத்தான் அரி. |
| 6. இழிந்தோ னேற்றல் | : | அரிக்குச் சக்கரங் கொடுத்தான் அரன் |

7. ஒப்போ னேற்றல் : சோழற்கு விருந்து கொடுத்தான் சேரன்

8. உணர்வின்றி யேற்றல்: சோற்றிற்கு நெய் விட்டான்.

9. விருப்பா யேற்றல் : மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசிரியன்.

10. வெறுப்பா யேற்றல் : கள்ளனுக்குக் கசையடி கொடுத்தான் அரசன்.

11. வழக்கு : மருகனுக்கு மகட் கொடுத்தான்.

12. உரிமை : மகனுக்கு அரசு கொடுத்தான்.

13. அச்சம் : அரசற்குத் திறை கொடுத்தான்.

14. பாவனை : தந்தைக்குத் திதி கொடுத்தான்

என்பனவாம். இவையெல்லாம் எப்பொருளாயினும் கொள்ளும் என்னும் தொல்காப்பிய விதிக்குள் அடங்கும்.

## ஐந்தாம் வேற்றுமை

### இதனின் இற்று இது (என்னும் பொருள்)

யாதானும் ஒரு பொருளை வினைமுதலாக வைத்து அதனை எல்லையாக நிறுத்தியோ, அளவையாக வைத்தோ பிறிதொரு பொருளை அதனொடு சார்த்தி இப்பொருளின்றும் இப்பொருள் இந்நிலைமைத்து எனல், ஐந்தாம் வேற்றுமையாம்.

கோடற் பொருள் ஒரு பொருளினின்று நீங்கி மற்றொரு பொருளிடத்துச் சேர்வது ஆதலின் நீக்கற் பொருளாகிய ஐந்தாம் வேற்றுமை கோடற் பொருளின்பின் வைக்கப்பட்டது.

ஐந்தாம் வேற்றுமை பெரும்பான்மையும் வினைப் பயனிலையானும் சிறுபான்மை வினைத் தன்மையை உள்ளடக்கிய பெயர்ப் பயனிலையானும் முடியும். ஒரு பொருளினின்றும் மற்றொரு பொருளை விலக்கி நிறுத்தி அதன் நிலைமையை உணர்த்துவது, இவ்வேற்றுமையின் பொருளாகும். ஒன்றனொடு தொடர்புடைய ஒருபொருளை விலக்குமிடத்து அப்பொருள் எல்லையாக அமைதலின் இதனை எல்லைப்

பொருள் வேற்றுமை என்றும் பிரித்து நீக்குதலான் நீக்கற் பொருள் வேற்றுமை என்றும் கூறுவர். மேலும் ஒரு பொருளை நிறுத்திப் பிறிதொன்றன் உயர்வு தாழ்வு ஒப்பு ஆயவற்றைக் கூறுதலின் உறழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்றும் கூறுவர்.

ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபு 'இன்' என்பதாகும். மூன்றாம் வேற்றுமையின் இணையுருபாக வரும் 'இன்' (இன் ஆன் ஏது) என்பது வேறு. இது வேறு ஆக்கப் பொருள் மூன்றாம் வேற்றுமை ஐந்தாம் வேற்றுமை இரண்டிலும் வரும். அதனான் ஐந்தாம் வேற்றுமைக்கு ஏதுப்பொருளும் உண்டு. என மயங்கி இடைக்கால நூலோர் இலக்கணங் கூறிச் சென்றனர். மேலும் உறழ்ச்சிப் பொருளில் வரும் இயல்பு நோக்கி ஐந்தாம் வேற்றுமைக்கு ஒப்புப் பொருள் உண்டு என மயங்கினர். ஏதுப்பொருள் மூன்றாவதற்கே உரியது. ஒப்புப் பொருள் இரண்டாவதற்கே உரியது என்பது மேல் விளக்கப்படும். தொல்காப்பியர் ஐந்தாம் வேற்றுமைக்குரிய இலக்கணத்தைக் கூறுமிடத்து,

> **"ஐந்தாகுவதே,**
> **இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
> **இதனின் இற்றுஇது என்னும் அதுவே"** (தொல்.சொல்.75)

என்றார். அஃதாவது வேற்றுமை ஏற்ற சொல் ஓர் அளவையாக எல்லையாக நின்று பிறிதொரு பொருளின் நிலை இத்தன்மைத்து என உணர்த்துதல் இதன் வேற்றுமை நிலையாகும்.

**எ.டு:** 'ஓதலின் சிறந்தது ஒழுக்கமுடைமை' - தஞ்சையின் மேற்கு உறையூர் - பழியின் நீங்கினான் பாண்டியன் எனவரும். ஒழுக்கமுடைமையின் சிறப்பை ஒருவர் கூறுமிடத்து, எடுத்துக்காட்டாக மற்றொரு பொருளை நிறுத்தி இதைக் காட்டினும் சிறந்தது என்று கூறமுற்பட்டு ஓதுதலைக் காட்டிலும் ஒழுக்கம் சிறந்தது என்கிறார். அஃதாவது ஒழுக்கத்தின் சிறப்பை உணர்த்த ஓதல் ஓர் அளவையாக எல்லையாக நின்றது. அதன்கண் இன் உருபு ஊர்ந்து அதனை ஐந்தாம் வேற்றுமையாக்கியது. இதனின் என்றது ஓதலை. இற்றிது என்றது ஒழுக்கமுடைமையை இவ்வாறே உறையூர் மேற்கே உள்ளது எனக் கூறமுற்பட்ட ஒருவர் அது தஞ்சையினின்று மேற்கு எனத் தஞ்சையை எல்லையாக வைத்துக் கூறலின் தஞ்சை ஐந்தாம் வேற்றுமையாக நின்றது. இவ்வாறே பாண்டியன் பழியின் நீங்கினான் என்னுமிடத்து எதனிலிருந்து நீங்கினான்

என்பதைப் பழி எல்லையாக அளவையாக நின்று உணர்த்தலின் பழியின் என அது ஐந்தாம் வேற்றுமையாக நின்றது. ஏனையவற்றையும் இவ்வாறே காணுமிடத்து யாவும் இதனின் இற்றுஇது என்னும் இலக்கணத்தினுள் அடங்குதலைத் தெளியலாம்.

இந்நூற்பாவால் எல்லைப் பொருளை உணர்த்தி அடுத்த நூற்பாவில் உறழ்ச்சி நீக்கம் முதலியவற்றைப் பொருள்நிலை வாயிலாக உணர்த்துகின்றார். இன்னுருபை ஏற்று நிற்கும் சொல்லை அளவையாக வைத்துப் பிறிதொரு பொருளின் நிலையை உணர்த்துதலின் இதனைப் பொரூஉப்பொருள் வேற்றுமை என்றும் கூறுவர். பொருவுதலாவது ஒப்பிட்டும் உறழ்ந்தும் கூறுதல்.

எ.டு: உறையூரின் பெரியது மதுரை - உறையூரின் சிறியது வஞ்சி என ஒன்றின் பெருமை சிறுமையை பிறிதொன்றனோடு ஒப்பிட்டுக் கூறுதலாம். இது அளவை அல்லது எல்லை என்பவற்றுள் அடங்கும்.

இங்ஙனம் உறழ்ந்து கூறாமல் உறையூரின் மேற்கு வஞ்சி - உறையூரின் தெற்கு மதுரை எனக் கூறின் அது எல்லைப் பொருளாக அமையும். சோழன் உறையூரினின்று வஞ்சி சென்றான் எனின் உறையூர் நீக்கற் பொருளாய் எல்லையாகும்.

எனவே, உறழ்ச்சி, எல்லை, நீக்கம், பொருவுப் பொருள் என்னும் வகையில் "இதனின் இற்று இது" என்னும் முறையில் நிற்றலின் அவற்றுள் ஒன்றனை எடுத்துக்கூறாமல் அவையாவும் அடங்க இதனின் இற்று இது என வாய்பாட்டு முறையில் இதன் வேற்றுமையிலக்கணத்தைக் கூறினார்.

"இதனின் இற்று இது" ஒருபால் மேல்வைத்துக் கூறியிருப் பினும் அவை பொருளைச் சுட்டி நிற்றலின் இவனின், இன்னன். இவன், இவளின் இன்னள் இவள், இவரின் இன்னர் இவர், இவற்றின் இன்ன இவை என ஏனைப் பாலுக்கும் உரியதாகும்.

பொருள் வேறுபடும் நிலை என்பது ஒவ்வொரு வேறுபாட்டினையும் தனித்தும் உணர்த்தும் என்னும் அறிவியல் நோக்கையும் தமிழ் இலக்கணநெறியையும் கருதாமல் ஒரு வேற்றுமையின் பொருள் கூறுகளை எல்லாம் உருபு

அடிப்படையில் தனித்தனிப் பொருள்களாக எண்ணி அவற்றை ஒரு வேற்றுமைப் பொருள்களாக இடைக்கால நூலாசிரியன்மார் கூறிமயங்க வைத்துள்ளனர்.

இங்ஙனம் உரையாசிரியர்களும் நன்னூல் முதலாய நூலாசிரியர்களும் தடுமாறியதற்குக் காரணம் தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை பற்றிக் கூறுமிடத்துக் கூறிய "இன் ஆன் ஏது" என்பதன்கண் உள்ள 'இன்' உருபையும், ஐந்தாம் வேற்றுமைக்குரியதாகக் கூறிய 'இன்' உருபையும் ஒன்றாகக் கருதிக் கொண்டமையும், வேற்றுமைப் பொருள் மயக்கம் கூறுமிடத்தும்

> "மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
> ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி நோக்கு,
> ஓரனைய என்மனார் புலவர்" (தொல்.சொல்.88)

என்ற நூற்பாவின் செம்பொருளை உணராமையுமேயாகும்.

மற்று, ஒடு என்னும் இடைச்சொல் வரும் தொடர்களை யெல்லாம் உடனிகழ்ச்சி வேற்றுமை என மயங்கியமை போல, 'இன்' என்னும் இடைச்சொல் வரும் தொடர்களையெல்லாம் ஐந்தாம் வேற்றுமை என மயங்கி விட்டனர். அதனான் ஏதுப் பொருள் ஐந்தாவதற்கும் உரியது எனக் கொண்டு பவணந்தி முனிவர் நூல் செய்தார். உரையாசிரியர்களும் அவ்வாறே கூறிச் சென்றனர். மூன்றாம் வேற்றுமைக்குரிய 'இன்' உருபும், ஐந்தாம் வேற்றுமைக்குரிய 'இன்' உருபும் பொருளால் வேறுபட்ட வெவ்வேறு மூலத்தினின்றும் தோன்றியவை என்பது பின்னர் விளக்கப் பெறும்.

இடைக்கால நூலோரும் உரையாசிரியர்களும் ஐந்தாம் வேற்றுமைக்கு 'இன்' என்னும் உருபோடு இல், இருந்து, நின்று, விட என்னும் சொற்களையும் உருபுகளாகக் கூறிச் சென்றனர். இவற்றுள் இல் என்பது பிறழ்பிரிப்பான் நேர்ந்த பிழையான உருவமாகும். ஏனையவை சொல்லுருபுகள். மற்றும் சில ஆய்வாளர்கள் ஐந்தாம் வேற்றுமைப் பொருளாகிய எல்லையை இடப் பொருள் எனக் கருதிக் கொண்டு இதனை ஏழாம் வேற்றுமையில் அடக்கி விடலாம் ஐந்தாம் வேற்றுமை என்னும் ஒரு வேற்றுமை மிகையாகும் என்பர். அவர்கள் உறழ்தலாகிய வேற்றுமையை ஏழாம் வேற்றுமை செய்யாது என்பதைக் கருதாது போயினர்.

இனி, 'இதனின் இற்று இது' எனவரும் பொருள்களைத் தொல்காப்பியர் தொகுத்துணர்த்து மிடத்து, வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறப்பு, இழிவு, புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்று விடுதல் என்பவை பற்றியும், இவைபோல்வனபற்றியும் வரும் என்பார். இவற்றிற்குரிய உதாரணமும் விளக்கமும் வருமாறு:

**வண்ணம்:**

காக்கையிற் கரிது களம் பழம் என்றாற் போல நிறம் பற்றிவரும். காக்கை என்றது அதன் நிறத்தை. அந்நிறம் காக்கைக்குத் தற்கிழமைப் பொருளாதலின் உருபு காக்கை என்னும் சொல்லிடத்து வந்தது. காக்கையின் கருநிறத்தை விடக் களம்பழத்தின் கரு நிறம் மிக்கது என்பது பொருள்.

**வடிவு:**

சாத்தனின் குறியன் கொற்றன் கையின் நெடியது கால் எனவரும்.

**அளவு:**

வானின் அகன்றது மனம். நாழியின் சிறியது உழக்கு, கஃசின் கனத்தது தொடி, ஆறிற் குறைந்தது ஐந்து எனவரும்.

**சுவை:**

குழலின் இனியது குழந்தையின் மழலை, பாகலின் கசப்பினது எட்டி எனவரும்.

**தண்மை:**

நீரின் தண்ணிது பனி, நிலவின் தண்ணியள் என்நெஞ் சமர்ந்தோளே எனவரும்.

**வெம்மை:**

தீயின் வெய்யது தேறார் கடுஞ்சொல் எனவரும்.

**அச்சம்:**

மானின் அ[illegible]வளிம் ம[illegible]வரல், கயவரின் அஞ்சுபவர் கள்வர் என வரும். (மானை[illegible]ட, கயவரைவிட என்பது பொருள்.)

**நன்மை:**

*கற்றலின் நலத்தது கேட்டல் எனவரும்.*

**தீமை:**

*கொலையின் தீயது குரவரை இகழ்தல் எனவரும்.*

**சிறுமை:**

*ஏழ்மையின் சிறுமைத்து இயல்வது கரத்தல் எனவரும்.*

**பெருமை:**

*கடலிற் பெரியது வானம் எனவரும்.*

**வன்மை:**

*மலையின் வலிதவர் மனத்திண்மை எனவரும்*

**மென்மை:**

*மலரின் மெல்லிது காமம். அனிச்சத்தின் மெல்லிதவள் அடி எனவரும்.*

**கடுமை:**

*வேலின் கடிதவர் வெஞ்சொல், கரும்பின் கடியது வேய் எனவரும்.*

**முதுமை:**

*அதியனின் முதியோள் ஔவை, கமுகின் முதியது பனை எனவரும்.*

**இளமை:**

*இலையின் இளையது துளிர், தருமனின் இளையன் வீமன் எனவரும்.*

**சிறத்தல்:**

*ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை எனவரும்.*

**இழித்தல்:**

*இரத்தலின் இழிந்தது இவறல் எனவரும்.*

**புதுமை:**

*காலையிற் புதியது கதிரொளி, அறிவதின் புதியது ஆய்வு எனவரும்.*

**ஆக்கம் :**

ஒன்றினின்றும் ஒன்று ஆவது ஆக்கம். பாலின் ஆயிற்றுத் தயிர். பாலே தயிராக மாற்றம் பெற்றது. ஆக்கமாம். பால்தன் தன்மையின் நீங்கிய நிலை ஐந்தாம் வேற்றுமையாம். இனி, மண்குடம், பொற்றொடி என்னுமிடத்து மண்ணாற் குடமும் பொன்னால் தொடியும் ஆக்கம் பெற்றமை முதற்காரண காரியமாம். அவ்வழி அவை மூன்றாம் வேற்றுமை ஆக்கப் பொருளாகும். பாலின் ஆயிற்றுத் தயிர் என்னும் போது பாலை முதற் காரணமாகக் கொண்டால் மூன்றாம் வேற்றுமை ஆக்கமாம். அதனான் ஆக்கப் பொருள் மூன்றாம் வேற்றுமைக்கும் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரியதாக நின்றது. தொடர்ப் பொருளை விரித்துப் பொருள் கொள்ளும் முறையில் யாதானும் ஒரு வேற்றுமையுள் அடங்கிவிடும்.

**இன்மை:**

வறுமையின் இன்மை எழுத்தறியாமை எனவரும்.

**உடைமை:**

செல்வத்தின் உடைமை செப்பமுடைமை எனவரும்.

**நாற்றம் :**

தாழையின் நறியது மகிழம் எனவரும்.

**தீர்தல் :**

பசியின் தீர்ந்தான் பாணன், ஊரின் தீர்ந்தான் ஒற்றன், மலையின் வீழ்தரும் அருவி விண்ணின் பொழியும் மழை எனவரும்.

**பன்மை:**

யானையிற் பலவாம் பரிமா எனவரும்.

**சின்மை:**

பரிமாவிற் சிலவாம் கரிமா எனவரும்.

**பற்றுவிடுதல் :**

காமத்திற் பற்று விட்டான் முனிவன், பொருளிற்பற்று விட்டான் புத்தன் எனவரும். விடுதல் என்பது இரண்டாம் வேற்றுமைக்குரிய வினையாதலின் - பற்று விடுதல் என்றார்

ஆசிரியர். தீர்தலும் விடுதலும் ஓராற்றான் ஒத்த பொருளினவாயினும் நீங்கலும் நீக்கலுமாகிய நிலைமை பற்றி வேறாக ஓதப் பெற்றன. இவற்றுள் தீர்தலும் பற்றுவிடுதலும் நீக்கம் பற்றியும் ஏனைய உறழ்ச்சி பற்றியும் வந்தன. எல்லை முதல் நூற்பாவில் அடங்கும்.

இனி, காக்கையிற் கரிது களம்பழம் என்பதற்குக் காக்கையைப் போலக் கரிய நிறமுடையது களம்பழம் என்று சொல்லி ஐந்தாம் வேற்றுமைக்கு ஒப்புப் பொருளும் உண்டு எனப் பிழையான இலக்கண விளக்கங் கூறுவர். காக்கையைப் போலக் கரிது என்பது பொருளாயின் 'இன்' வேற்றுமை உருபாகாது. உவம உருபாகும். அவ்வழி அஃது இரண்டாம் வேற்றுமைப் பொருளாகும்.

இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு நின்று என்னும் வினையெச்சச் சொல்லின் மரூஉவாய் அமைந்த இடைச்சொல்லாகும். நின்று - நின்னு - நின் - இன் என ஆக்கம் பெற்றதாகும். 'இன்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு இதனின் என்பதன் சுருக்கமாகும். 'இன்' என்னும் சாரியை இடைச்சொல் இதன் என்பதன் இடைக்குறையாக அமைந்த இடைச்சொல்லாகும். 'இன்' என்னும் உவம உருபு 'இன்ன' என்பதன் கடைக் குறையாகும். ஆதலின் இவை வடிவத்தால் ஒத்து நிற்பினும் அடிப்படை மூலச் சொல்வேறுவேறானவையாம். சொல்லாக்க நெறிமரபு பற்றிச் சிந்தியாத உரையாளரும் நன்னூலாரும் வரிவடிவம் நோக்கி இங்ஙனம் ஒவ்வா இலக்கணமும் உரையும் கூறிப் போந்தனர்.

இனி ஐந்தாம் வேற்றுமை இலக்கணம்பற்றி நன்னூல் கூறுமாறு:

***"ஐந்தாவதன் உருபு இன்னும் இல்லும்***
***நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே"*** (நன்.299)

என்பதாகும். இன், இல் என்பவை வேறு வேறல்ல. காக்கையிற் கரிது என்பதைக் காக்கையின் கரிது எனப்பிரிக்காமல் காக்கையில் கரிது எனப் பிரித்து 'இல்' உருபு எனக் கொண்ட பிறழ் பிரிப்பாகும். இல் என்பது இடப்பொருள் பற்றியல்லது உறழ்ச்சிப் பொருளில் வாராமையை இவர் கருதவில்லை.

பொருள் கூறுமிடத்து ஒரு வேற்றுமைக்கு ஒரு பொருள் என்பதையும் அதனாற்றான் அவற்றிற்கு வேற்றுமை என்னும்

பெயர் அமைந்தது என்பதையும் எண்ணாமல் வடமொழியைப் பின்பற்றி உருபு அமைந்த தொடர் தரும் பொருளை எல்லாம் ஒரு வேற்றுமையாக உருபுகளின் அடிப்படையில் பவணந்தியார் இலக்கணம் கூற முற்பட்டதனால் 'இன்' என்னும் இடைச்சொல்வந்த தொடரையெல்லாம் ஐந்தாம் வேற்றுமை என்றார். கருத்தாவை முதல் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் உரியதாகக் கூறியமை போன்றே ஏதுப் பொருளை மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் உரியதாகக் கூறிச் சென்றார். இக் கோட்பாடு தமிழ் நெறியன்று என்பது மேலே விளக்கப்பட்டது.

பிரயோகவிவேக நூலாரும், இலக்கணக் கொத்துரை ஆசிரியரும் ஐந்தாம் வேற்றுமை அபாதானம் (நீக்கம்) அவதி (எல்லை) என்னும் பொருள்பற்றி வரும் என்றும், நீக்கற் பொருள் சலம் (அசையும் பொருள்) அசலம் (அசையாப் பொருள்) வெகிச்சீமை (வெளிஎல்லை) பண்பு முதலியவைபற்றி வருமென்பார். இவற்றிற்கு அவர்கள் தரும் உதாரணம்:

1. சலப் பொருள் - குதிரையின் இழிந்தான், யானையின் நீங்கினான்
2. அசலப்பொருள் - மலையின் இழிந்தான், ஊரின் நீங்கினான். குற்றத்தின் நீங்கினான், ஐயத்தின் நீங்கினான்.
3. வெகிச்சீமை பண்பு - முதலியவை வெகிச் சீமையில் அடங்கும்.

வடமொழி இலக்கணமே தமிழ் இலக்கணத்திற்கு அடிப்படை எனக் கொண்டு உருபுகளின் அடிப்படையில் இலக்கணம் கூறுகின்ற இவ்வாசிரியர்கள் வடநூலார் ஐந்தாம் வேற்றுமைக்கு ஒப்புப் பொருளும் ஏதுப் பொருளும் கூறாமையையும் கருதாமல் நன்னூலார்,

"நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே" (நன்.299)

எனக் கூறிச் சென்றார். நன்னூல் பழைய உரையாளர்களும் அதைப்பற்றிச் சிறிதும் சிந்தியாது போயினர்.

உலக வழக்கிலும் பேச்சு வழக்கிலும் எல்லையாகிய உறழ்ச்சிப் பொருளிலும் நீக்கற் பொருளிலும், விட, காட்டினும் நின்று, இருந்து என்னும் சொல்லுருபுகள் வரும்.

எ.டு: சாத்தனை விடக் கொற்றன் பெரியவன்
உயிரைவிட மானஞ் சிறந்தது
தேவனைக் காட்டிலும் சாத்தன் புத்திமான்
செல்வத்தைக் காட்டிலும் கல்வி சிறந்தது
ஊரினின்று புறப்பட்டான் கண்ணன்
கூட்டிலிருந்து பறந்தது குருவி - என வரும்.

## ஆறாம் வேற்றுமை

**(உடைமைப் பொருள்) இதனது இது.**

தனியொருவர் வாழ்வும் சமுதாய வாழ்வும் தம்மொடும் பிறபொருளொடும் யாதானும் ஒரு வகையில் இயைபும் தொடர்பும் உடையனவாகும். அவ் இயைபு ஒரு பொருளுக்கு யாதானும் ஒருமுறையில் உரிமையாய் உடைமையாய் அமையும். அங்ஙனம் ஒருபொருள் ஒரு பொருளை உடைமையாகப் பெற்றிருக்கும் நிலை ஒருபொருள் எய்தும் வேற்றுமை நிலைகளுள் ஒன்றாகும். அவ்வாற்றான் இஃது உடைமைப் பொருள் வேற்றுமை எனப்பட்டது. ஒருவர் ஒரு பொருளினின்றும் ஒன்றைக் கொள்ளுமிடத்து, அது கொடுக்கும் பொருளிலிருந்து நீங்கிக் கொள்வோரது உடைமையாக அமைதலின் நீக்கப்பொருள் வேற்றுமையை அடுத்து இவ்வுடைமைப் பொருள் வேற்றுமை வைக்கப்பட்டது.

அதுவென் வேற்றுமை எனினும், ஆறாம் வேற்றுமை எனினும், உடைமைப் பொருள் வேற்றுமை எனினும், கிழமைப் பொருள் வேற்றுமை எனினும் ஒக்கும். வடநூலார் சம்பந்தப் பொருள் வேற்றுமை என்பர். ஒருபொருளுக்கு உடைமை பல்வேறு நிலைகளில் வந்தமையும். பலகோணங்களில் வந்தமையும். அவ்முறையில் தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமைபற்றிக் கூறும் இலக்கணமும் பொருள் வகைகளும் வருமாறு:

> "**ஆறாகுவதே,**
> **அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
> **தன்னினும் பிறிதினும் இதனது இது எனும்**
> **அன்ன கிளவி கிழமைத்து அதுவே"** (தொல்.சொல்.76)

என்பதாகும்.

இதன்பொருள்: அது என்னும் பெயருடைய வேற்றுமைச் சொல் யாதொரு பொருட் பெயரிடத்து வரினும் அஃது ஆறாம் வேற்றுமையாகும். அது தன்னொடு ஒற்றுமைப் பட்ட பொருளானும், பிறிதாகிய பொருளானும்

இப்பொருளினது இப்பொருள் என்னும் அத்தகைய பொருட் கிழமையுடையதாகும்.

உருபுடைய வேற்றுமை ஆறனுள் இரண்டாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையும் வினை கொண்டு முடியும். நான்காம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினை கொண்டும், வினைத் தன்மையை உள்ளடக்கிய பெயர் கொண்டும் முடியும். ஆறாம் வேற்றுமை பெயர் கொண்டு முடிவதல்லது வினை கொண்டு முடியாது. ஆறாம் வேற்றுமை பெயர்ப் பயனிலை கொண்டே முடியும் என்பது இதன் தனித் தன்மையாகும்.

தொடர்மொழி ஆக்கத்தின் கண் உருபேற்ற பெயர்கள் ஒரு தொடரின் இடையிலும் நிற்கும். சிறுபான்மை ஈற்றிலும் நிற்கும். அஃதாவது, சாத்தன் மரத்தை வெட்டினான் என்றும், சாத்தன் வெட்டினான் மரத்தை என்றும், சாத்தன் வாளான் வெட்டினான் என்றும், சாத்தன் வெட்டினான் வாளால் என்றும், மன்னன் பாணற்குப் பரிசளித்தான் என்றும், மன்னன் பரிசளித்தான் பாணற்கு என்றும், சாத்தன் ஊரின் நீங்கினான் என்றும், சாத்தன் நீங்கினான் ஊரின் என்றும், வீட்டின்கண் இருந்தான் சாத்தன் என்றும், சாத்தன் இருந்தான் வீட்டின்கண் என்றும் வரும். ஆறாம் வேற்றுமை இறுதிக் கண் நில்லாது. பெயர் கொண்டே முடியும். பிறவேற்றுமை உருபுகள் இறுதிக்கண் நிற்குமிடத்துப் பொருள் கவர்வு படாமல் நிற்றல் வேண்டும்.இதனைத் தொல்காப்பியம்,

"இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்" (தொல்.சொல்.99)

என்பார். ஆறாம் வேற்றுமை உருபு இறுதியில் நில்லாது பெயர் கொண்டே முடியும் என்பதை எழுத்தியலுள் "வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே" எனவிதி கூறியமையான், "நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்" என்றார், அது உருபு: இது சாத்தனது வீடு. இது பரணரது நூல் எனவரும். வீடு சாத்தனது, நூல் பரணரது எனவரின் 'அது' உருபன்று. ஆறாம் வேற்றுமைத் தொடருமன்று எழுவாய்த் தொடரும் குறிப்பு வினை முற்றுமாகும். "இது பரணரது நூல்" என்பது ஆறாம் வேற்றுமைத் தொடர். "இது" எழுவாய். "நூல்" பெயர்ப் பயனிலை. இத்தொடர் "இது பரணர் நூல்" என உருபு தொக்கும் வரும். "இந்நூல் பரணரது" என்பது எழுவாய்த் தொடர் 'நூல்' என்பது எழுவாய் 'பரணரது' என்பது குறிப்பு

வினைமுற்றுப் பயனிலை. அகரச் சாரியை பெற்ற துவ்விகுதி [பரணர்+அ+து = பரணரது] து - வினை விகுதி.

அதனால் ஆறாம் வேற்றுமைப் பொருள் பற்றிய வாய்பாட்டினை 'இது இதனது' என்று கூறாமல் 'இதனது இது' என, உருபின்பின் பெயர்ப்பயனிலை வரல்வேண்டுமென்பது விளங்கக் கூறினார். 'இதனது இது' என்பது பொருள் பற்றிய வாய்பாடாகும். அதனான் இதன் பொருள் விளக்கம் இப்பொருளினது இப்பொருள் என்பதாகும். இது என்பது ஒருமையைச் சுட்டி நின்றதன்று. அது சாத்தனது மாடு, அவை சாத்தனது மாடுகள் என்னும் ஒருமையும் பன்மையும் 'இதனது இது' என்னும் வாய்பாட்டினுள் அடங்கும்,

தமிழ்நெறி மரபை உணராத உரையாசிரியன்மார் வடமொழியைக் கருத்திற் கொண்டு 'இதனது இது' என்றாராயினும் இதன இவை என்னும் பன்மையுருபும் அடங்க "அன்ன கிளவி கிழமைத்து அதுவே" என்றார் ஆசிரியர் அதனான் ஆறாம் வேற்றுமைப் பன்மை யுருபாகிய அகரத்தை உரையிற் கோடலாற் கொள்க என்று கூறிச் சென்றனர். நன்னூலார், "ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும் பன்மைக்கு அவ்வும் உருபாம்" எனக் கூறிச் சென்றார்.

வேற்றுமை உருபுகள் பால் காட்டுவது வடமொழிக் கொள்கை தமிழில் விகுதிகளே பால்காட்டும். உருபுகள் வேற்றுமை நிலையை மட்டுமே காட்டும். மேலும் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையுள்ள உருபுகளுள் ஏனைய வேற்றுமைகளுக்கு ஒருமை உருபு பன்மை உருபு என வேறுவேறு இன்மையைச் சிறிதும் உணராமல் ஆறாம் வேற்றுமைக்கு மட்டும் ஒருமை பன்மை கற்பிப்பது அடாது எனக் கருதாமல் குறிப்பு வினையை மனத்திற் கருதிக் கொண்டு இங்ஙனம் ஒவ்வாத விளக்கத்தையும் முரணான கருத்தையும் கூறிச்சென்றனர்.

அகரம் பன்மை உருபாக வருமென ஆசிரியர் குறிப்பாகவேனும் யாண்டும் கூறாமையானும் - அரசன் நாடுகள், புலவர் நூல்கள் என்னும் தொங்கைகள் அரசன நாடுகள், புலவர நூல்கள் என விரியாமையானும், சான்றோர் இலக்கியங்களுள் அரசனது தோழன், குன்றவர் தமது செம்மல், நினது அடியாரொடல்லால் என அது என்னும் உருபே பயின்று

வந்துள்ளமையினும் உரையாசிரியர்கள் மணற்கயிறு ஒவ்வாதென்பதை உணரலாம்.

மற்று, "சம்பந்தன செந்தமிழ்" என வந்துள்ளதே எனின், அது இசைப்பாடலாதலின் தாள இசை நோக்கி 'து' தொகுத்தல் விகாரமாய் நின்றது என அறிக.

மற்று, அரசன் நாடுகள், மன்னவன் மக்கள், புலவர் நூல்கள் எவ்வாறு விரியுமெனின் உயர்திணையின் கண் அது உருபு விரிதல் செவ்விதாகாமை கருதியே தமிழ் நூலார் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக ஆறாம் வேற்றுமைக்கு "உடைய" என்னும் பெயரெச்சத்தைச் சொல்லுருபாக வகுத்துரைத்தனர்.

இனி, உடைமைப் பொருள் பல்வேறு நிலைகளில் பல்வேறு கோணங்களில் வருமெனத் தொல்காப்பியர் சிலவற்றை விதந்து கூறுதலைக் காண்போம். ஆறாம் வேற்றுமை, இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழி உறுப்பு, குழு, தெரிந்து மொழிச் செய்தி, நிலை, வாழ்ச்சி, திரிந்து வேறாய பொருள் இவை போல்வனவாக வரும் பிறபொருள்கள் பற்றிவரும் என்பார். இவற்றிற்கு விளக்கமும் எடுத்துக் காட்டும் வருமாறு:

**இயற்கை :**

ஒரு பொருளிடத்து இயற்கையாக உடன் தோன்றி அமைந்திருப்பது. இது சாத்தனது இயல்பு. நிலத்தது திண்மை, நங்கையது நலம் எனவரும்.

**உடைமை :**

ஒரு பொருளை யாதானுமொன்றை விலையாகத்தந்து, தனக்கு உரிமையாகக் கொள்வது. சாத்தனது செல்வம், சாத்தனது ஆடை எனவரும். இதனை நிலைமையில் உடைமை என்பர். எல்லாம் இறைவனதுடைமை, அரசனது நாடு எனப்பிறவகையாலும் உடைமை வரும். இவற்றைப் பொருட் பிறிதின் கிழமை என்பர்.

**முறைமை :**

பிறப்புத் தொடர்பாகவரும் முறைமை. தாய், தந்தை, மகன்,

மகள், தம்முன், தம்பின், தங்கை, தமக்கை என்றாற் போல்வன முறைமைகள்.

எ.டு: மறியது தாய், மந்தியது சேய், கன்றினது தந்தை, சாத்தனது தாய் எனவரும். உயர்திணைக் கண் அது உருபு கெட்டுக்குவ்வுருவு மயங்கி வரும். கொற்றனுக்கு மனைவி, நங்கைக்குக் கணவன், பூதனுக்கு மகன் எனவரும். இதுவும் பொருட் பிறிதின் கிழமையாம்.

**கிழமை :**

வரலாற்று முறையான் தொன்று தொட்டு உரிமையாக அமையும் பொருள். (கிழமை=உரிமை) வேந்தனது செங்கோல், முருகனது குறிஞ்சி நிலம், வெள்ளியது ஆட்சி எனவரும். இவற்றுள் வேந்தனது செங்கோல் என்பது பொருட் பிறிதின்கிழமை. முருகனது குறிஞ்சி நிலம் என்பது நிலப் பிறிதின் கிழமை. வெள்ளியது ஆட்சி என்பது காலப்பிறிதின் கிழமை.

**செயற்கை :**

தன் முயற்சியான் ஆக்கிக் கொண்ட பொருளும் பிறகாரணங்களான் பெற்றதும் செயற்கை உடைமையாகும்.

எ.டு: சாத்தனது கற்றறிவு, கபிலரது புலமை, அரசனது மாண்பு, கம்பரது புகழ் எனவரும். இவை திரிபினாக்கமாக வந்ததற்கிழமை.

**முதுமை :**

இயற்கையின் ஒரு நிலையைக் குறிக்கும் தன்மை.

எ.டு: கொற்றனது முதுமை, அறிவினது முதிர்ச்சி எனவரும். முதுமை என்பது அகவையைச் சுட்டாமல் அதனாலாம் பயனைச் சுட்டி நிற்றலின் இயற்கையுள்ளும் செயற்கையுள்ளும் அடக்காமல் வேறாகக் கூறப்பட்டது. தன்னினம் முடித்தல் என்னும் உத்தியான் தேவனது இளமை, தமிழினது இளமை எனப்பயன்பற்றி வருவனவும் கொள்க. இது தற்கிழமையுள் ஒன்றியற் கிழமையின்பாற்படும்.

**வினை :**

ஒரு பொருளின் செயல்நிலைபற்றி வருவது வினையாகும்.

எ.டு: சாத்தனது நடை, தேவனது வரவு, கொற்றனது கூத்து, இறைவனது பார்வை எனவரும். இது மெய்திரிந்தாயதற் கிழமை.

**கருவி :**

ஒரு காரியம் நிகழத் துணையாக அமைவது கருவி.

எ.டு: சாத்தனது எழுதுகோல், வனைகலத்தது திகிரி எனவரும். இது பொருட் பிறிதின்கிழமை.

**துணை :**

ஒன்றனொடு ஒன்றன் இயைபுபற்றி ஈணர வருவது துணை எனப்படும்.

எ.டு: அவனது இணக்கம், மனைவியது துணை (துணைவன்எனப்பால் தோன்ற நிற்பின் மனைவிக்குத்துணைவன் எனக் குவ்வுருபு விரிந்து வரும்) இது பொருட் பிறிதின்கிழமை.

**கலம் :**

(ஆவணப் பத்திரம்) ஒருவர் எழுதிய உரிமை ஒலை குறித்து வருவது.

எ.டு: நிலத்தது ஒற்றிக்கலம், அரசனது பட்டோலை, சாத்தனது விலைத் தீட்டு எனவரும். கலம் என்பது உண்கலம் நீர்க்கலம் (பாத்திரம்) என்றும் பொருள் தருமாதலின் பாலினது கலம், அரிசியது கலம் எனவும் வரும். இவை பொருட் பிறிதின்கிழமை.

**முதல் :**

வாணிகம் முதலியவற்றிற்காக வைக்கப்படும் மூலப்பொருள் (முதலீடு)

எ.டு: வணிகரது முதல், ஒற்றியது முதல் எனவரும். இது பொருட் பிறிதின் கிழமை.

**ஒருவழியுறுப்பு :**

ஒரு பொருளின் பகுதியாக (அங்கமாக) ஒன்றுபட்டு நிற்கும் சினையாகிய உறுப்புக்கள்.

எ.டு: யானையது கோடு, புலியது உகிர், மரத்தது கிளை, கிளியது மூக்கு, எலியது செவி, ஞாயிற்றினது கதிர், நங்கையது புருவம், சாத்தனது தோள் எனவரும்.

'ஒருவழி யுறுப்பு' என்றதனான் யாதானுமொரு வகையில் உறுப்பாக இருப்பனவும் கொள்க.

எ.டு: அரசனது படை, நாட்டது அரண், காவிரியது கிளை நதி எனவரும். இவற்றுள் முன்னையவை தற்கிழமை பின்னையவை பிறிதின் கிழமை.

**குழு :**

திரள், குழுமம், கூட்டம் பற்றி வருவது.

எ.டு: எள்ளது குவியல், படையது குழாம், பறவையது கூட்டம் எனவரும். இவற்றுள் முன்னையவை ஒன்று பல குழுமிய தற்கிழமை பின்னையது வேறுபல குழுமிய தற்கிழமை.

**நிலை :**

ஒரு பொருளின் அப்பொழுதைய நிலைமை பற்றி வருவது.

எ.டு: தேவனது வெற்றி, அரக்கரது தோல்வி, சாத்தனது செல்வம், கொற்றனது வறுமை, பூதனது இயலாமை என வரும். இவை தற்கிழமையாக வரும்.

**தெரிந்து மொழிச் செய்தி :**

ஆராய்ந்து மொழியால் ஆக்கப்பட்ட இலக்கிய இலக்கண நூல்கள். செய்தி=செய்யுள் (செய்தி - தொழிற் பெயர்) பா, உரை, பாட்டு, நூல், காப்பியம் என்பவை செய்யுளுள் அடங்கும். இவைதாமே செய்தவை தம்மைப் பற்றிப் பிறர் செய்தவை என இருவகைப்படும். தாம் செய்தவை தற்கிழமை யாகவும், பிறராற் செய்யப் பெற்றவை பிறிதின் கிழமையாகவும் வரும்.

எ.டு: கபிலரது பாட்டு, கம்பரது காவியம், பவணந்தியது நன்னூல், எனவருவன செய்யுள் - தற்கிழமை. முருகனது பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம் எனவருவன பிறிதின் கிழமை.

**வாழ்ச்சிக் கிழமை :**

வாழ்தலாகிய நிலைபற்றி வருவது.

எ.டு: காட்டது யானை, குளத்தது தவளை எனவும், யானையது காடு, தவளையது குளம் எனவும் வரும். காட்டது யானை என்பது உருபு தொக்குக் காட்டு யானை எனவும், குளத்தது தவளை என்பது குளத்துத் தவளை எனவும் உருபு தொக்குவருமிடத்துக் காட்டின் கண் உள்ள யானை, குளத்தின்கண் உள்ளதவளை என ஏழாவதனொடு மயங்கும். இவை பிறிதின் கிழமை. யானையது காடு எனவருவதைத் தற்கிழமைப் பொருட்டாகவும் கூறுவர். யானை இன்றேல் காட்டிற்கு அப்பெயர் வாயாமையான் என்பர்.

**திரிந்து வேறுபடுதல் :**

இஃது இருநிலையில் வரும். (1) மெய் (பொருள்) திரிந்து வேறுபடுதல் (2) மெய்திரிந்து அதுவேயாதல்.

எ.டு: நெல்லினது பொரி. மஞ்சளது பொடி எனவரும். இவை தற்கிழமை.

**பிறவாறு வருவன :**

சொல்லது பொருள் - ஒன்றியல் தற்கிழமை. சாத்தனது ஒப்பம் - பிறிதின் கிழமை. அழகினது பொலிவு - தற்கிழமை. சாத்தனது ஒப்பு. (ஒப்பு=படிமம்) பிறிதின் கிழமை. இங்ஙனம் கிழமைப் பொருள் பற்றி வருவன வெல்லாம் ஆறாம் வேற்றுமைப் பொருளாகும்.

வட நூலார் கருத்தையொட்டிப் பிரயோக விவேக நூலாசிரியரும், இலக்கணக் கொத்துரையாசிரியரும் ஆறாம் வேற்றுமையைச் சட்டி (சஷ்டி) என்றும், பொருளைச் சம்பந்தம் என்றும் கூறுவர். சம்பந்தம் மூன்று வகைப்படும் என்பர். அவை

1. சமவாய சம்பந்தம் = ஒற்றுமைத் தொடர்பு - தற்கிழமை

2. சையோக சம்பந்தம் = கூட்டத் தொடர் - ஒருசார் பிறிதின் கிழமை

3. சுரூப சம்பந்தம் = யாதானும் ஒருவகைத் தொடர்பு என்பனவாகும்.

இயற்கைப் பேத சம்பந்தம் (வேறுபட்டது) அபேத சம்பந்தம் (வேறுபடாதது) என இருவகைப்படுத்துக் கூறுவர். இலக்கணக் கொத்துரையாசிரியர் ஒற்றுமைச் சம்பந்தம் ஒன்றே என்றுகூறி அதற்கு இராகுவினது தலை என உதாரணம் காட்டுவார். வேற்றுமைச் சம்பந்தம் பலவாக வருமென்றும், அவை மூவகைப்படுமென்றும் விரித்துக் கூறுவார். அவை வருமாறு:

## I ஒன்றாய்த் தோன்றல் - ஆறுவகைப்படும்.

1. ஒன்றன் கூட்டம் - எ.டு: எள்ளது குவியல்
2. பலவின் ஈட்டம் - எ.டு: படையது குழாம்
3. திரிபின் ஆக்கம் - எ.டு: கோட்டது நூறு
   { கோடு = சங்கு, நூறு = பொடி}
4. சினை - எ.டு: சாத்தனது கண்
5. குணம் - எ.டு: நிலத்தது அகலம்.
6. தொழில் - எ.டு: கொற்றனது வருகை.

## II உரிமையாய்த் தோன்றல் - ஐந்து வகைப்படும்

1. பொருள் - எ.டு: முருகனது வேல்

2. இடம் - எ.டு: முருகனது குறிஞ்சி நிலம்

3. காலம் - எ.டு: வெள்ளியது ஆட்சி

4. நூல்(1) - தன்னான் வந்த உரிமை.
எ.டு: சம்பந்தனது தமிழ்

5. நூல்(2) - பிறரான்வந்த உரிமை.
எ.டு: சம்பந்தனது பிள்ளைத் தமிழ்.

## III வேறாய்த் தோன்றல் - பலவகைப்படும்

சாத்தனது பசு - உடைமை - பிறிதின்கிழமை

இராகுவினது தலை - உடைமை - தற்கிழமை- அதுவாதல்

சாத்தனது கண்கள் - உடைமை - தற்கிழமை- வேறாதல்

சாத்தனது உணர்வு - உடைமை - தற்கிழமை- அதன்கண் பரவி நிற்றல்

சாத்தனது சினம் - உடைமை - தற்கிழமை- அதன்கண் தோன்றி மறைதல்

இவையெல்லாம் உடைமை என்பதன்கண் அடங்கும்.

**நன்னூலார் கூறும் இலக்கணம்**

> "ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
> பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்பு உறுப்பு
> ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
> திரிபின் ஆக்கம் ஆம் தற்கிழமையும்
> பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே" (நன்.300)

உருபுகளுள் ஒருமையுருபு பன்மையுருபு என்பது தமிழ் நெறியன்று என்பது மேல்விளக்கப்பட்டது. ஆது என்பது அது என்பதன் விகாரமின்றி வேறு பொருளுடையதன்று. வரிவடிவங்களை நோக்கியே இவர் இலக்கணம் கூறமுற்பட்டமையின் இத்தகு பிழைகள் நன்னூலில்

மலிந்துள்ளன. இவர் கருத்தை அப்படியே ஏற்று உரையாளர்கள் உரைகூறி உதாரணம் காட்டியுள்ளனர். அவை வருமாறு:

## 1. தற்கிழமை

| | | |
|---|---|---|
| சாத்தனது கருமை | - நிறப்பண்பு | பண்புத் தற்கிழமை |
| சாத்தனது வருகை | - தொழிற் பண்பு | |

சாத்தனது கை,
புலியதுவால் - உறுப்புத் தற்கிழமை

மாந்தரது தொகுதி
நெல்லது குவியல் - ஒன்றன் கூட்டத் தற்கிழமை.

படையது தொகுதி
பறவைகளது கூட்டம் - பலவின் ஈட்டத் தற்கிழமை

நெல்லினது பொரி
மஞ்சளது பொடி - திரிபினாக்கத் தற்கிழமை.

## 2. பிறிதின் கிழமை

சாத்தனது பசு - முருகனது வேல் - பொருட்பிறிதின் கிழமை

சாத்தனது வீடு- முருகனது குறிஞ்சி- இடப்பிறிதின் கிழமை

சாத்தனது நாள்-மாரனது வேனில் - காலப் பிறிதின் கிழமை

எனாது கை - நினாது தலை - தனாது புறம்-ஆது உருபு.

ஆது என்னும் உருபு என் நின் தன் என்னும் மூவிடப் பெயரின் கண் அன்றிப் பிற பெயரிடத்து வாராது. வடாது, தெனாது என்பவை குறிப்பு வினைமுற்றுக்கள் ஆகும். என கைகள் - தனதாள்கள் - அகரஉருபு. இவற்றுள் 'து' விகார வகையாற் கெட்டு நின்றது என்பதே தமிழ் நெறியாகும்.

எனவே ஆறாம் வேற்றுமை என்பது இதனுடையது இப்பொருள் என்று உணரவருவது என்பது விளங்கும் - உடைமைப் பொருள் பருப்பொருளாகவோ - நுண் பொருளாகவோ - உருவப் பொருளாகவோ - அருவப் பொருளாகவோ - கருத்துப் பொருளாகவோ - கற்பனைப்

பொருளாகவோ. இருக்கலாம். அவ்வாறே உடைமையும் உடைய பொருளும் இருக்கலாம். எதுவாயினும் இதனது இது வருவன வெல்லாம் ஆறாம் வேற்றுமையாகுமென அறிக.

## ஏழாம் வேற்றுமை - இடப்பொருள்

உலகப் பொருள் யாவும் நிலம் நீர்காற்று நெருப்பு. ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களிடத்துத் தோன்றியவையேயாகும். ஐம்பெரும் பூதங்களின் பரிணாமங்களே பொருள் எனப்படும். ஆதலின் பொருள்களின் செயல், இயக்கம், நிலை முதலியவை ஓரிடத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழும். எழுவாய் வேற்றுமை முதல் உடைமைப் பொருள் வேற்றுமையீறாக யாவும் நிகழ ஆதாரமாக இருப்பவை இடங்கள். ஆதலின் இடப்பொருள் வேற்றுமை இறுதியாக ஏழாவதாக வைக்கப்பட்டது.

இடம் எனினும் நிலம் எனினும் ஒக்கும். வடநூலார் இதனை ஆதாரம் என்பர். இடம் பலகோணங்களில் அமையும். கூறுவோன் குறிப்பிற்கு ஏற்ப ஒரு பொருள் இடமாக அமையும். இடுதற்குரியது இடம். (இடு+அம்=இடம்) நிறுத்தற்குரியது நிலம். (நில்+அம்=நிலம்) ஐம்பூதங்களுள் ஒன்றாகிய நிலம் என்பது வேறு. ஏழாம் வேற்றுமைப் பொருளாகக் கூறப் பெறும் நிலம் என்பது வேறு. மண்ணின் கண் விளைந்தது மரம் என்றதில் மண் நிலம். மரத்தின்கண் உள்ளது கிளை என்புழி கிளை நிலம். இங்ஙனம் எது இடமாகக் கூறப்படுகின்றதோ அஃது ஏழாம் வேற்றுமை நிலமாகும்.

தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமை இடத்தை மூன்று கூறாக வகுத்துக் கூறுவார். அவர் கூறும் ஏழாம் வேற்றுமை இலக்கணம்

"ஏழாகுவதே
**கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்**
**அனைவகைக் குறிப்பிற் றோன்றும் அதுவே"**

(தொல்.சொல்.77)

என்பதாகும்.

வடநூலார் ஏழாம் வேற்றுமை இடப்பொருளை அதிகரணம் என்று கூறுவர். இவ் இடப்பொருள் காட்சிப் பொருள் உருவம் அருவம் அருவுருவம் என முத்திறமாக அமையும். அவை கண் முதலாய ஐம்பொறிகளாலும்

மனத்துணையானும் அறியப்படும். கருத்துப் பொருள் அறிவு உணர்வு சிந்தனை ஆகிய அடிப்படையில் மனத்தான் உணரப்படும்.

எ.டு: கோடையின்கண் வெப்பம் (மெய்) கரும்பின் கண் சுவை(நா) நீரின்கண் நுரை (கண்) மலரின்கண் மணம் (மூக்கு) இசையின் கண் இன்பம் (செவி) இனி கருத்துப் பொருள் வருமாறு:

எ.டு: அறிவின்கண் ஒளி. சினத்தின்கண் சிறுமை. உணர்வின் கண் திரிபு. எனவரும்.

இவ்வாறே இடத்தின்கண் நிற்கும் பொருள்களும் காட்சிப் பொருளாயும் ஐம்புலனால் அறியப்படும். கருத்துப் பொருளாயும் நிற்கும். அவை இடத்தின் ஒரு பகுதியிலும். முழுதாகவும் வெளிப்படையாகவும் மறைந்தும் நிற்கும். சில எடுத்துக் காட்டுக்கள் வருமாறு: எ.டு:

| | | | |
|---|---|---|---|
| மரத்தின்கண் பருந்து | உருவம் | ஒருபகுதி | வெளிப்படை |
| தாயின்கண் அன்பு | அருவம் | முழுவதும் | ” |
| சோலையின்கண் காற்று | அருவுருவம் | முழுவதும் | ” |
| மலையின்கண் குகை | கட்புலன் | ஒருபகுதி | ” |
| பழத்தின்கண் சுவை | நாப்புலன் | முழுவதும் | ” |
| இசையின்கண் இன்பம் | செவிப்புலன் | முழுவதும் | ” |
| மலரின்கண் மணம் | மூக்குப்புலன் | முழுவதும் | ” |

| | | | |
|---|---|---|---|
| பனியின்கண் குளிர் | மெய்ப்புலன் | முழுதும் | வெளிப்படை |
| மோரின்கண் வெண்ணெய் | அருவுரு | முழுதும் | „ |
| வீரத்தின்கண் பெருமிதம் | அருவம் | முழுதும் | „ |
| பாட்டின்கண் குற்றம் | கருத்துப் பொருள் | முழுதும் | வெளிப்படை |

இவையாவற்றினையும் தொல்காப்பியர் வினைசெய் இடம், நிலம், காலம் என்னும் மூன்றனுள் அடக்கிக் கூறுவார். கூறுவோன் கூறும் கூற்றில் இடமாக நிற்பனவற்றைக் குறிப்பால் உணரவேண்டும். ஆதலின், "அனைவகைக் குறிப்பிற் றோன்றும் அது" என அறிவுறுத்தினார். வினைசெய் இடம் என்பது காட்சிப் பொருளின்கண் அருவமாக நிற்கும். நிலம் என்பது உருவம் அருவம் அருவுருவம் என முத்திறமாக நிற்கும். காலம் என்பது கருதிக் கொள்ளும் நியதிப் பொருளாய் அருவமாக நிற்கும் விளக்கம்.

**வினைசெய் இடம்:**

நடத்தலின்கண் சோர்வு தோன்றிற்று, உறக்கத்தின்கண் கனவு தோன்றிற்று, போரின்கண் வீரம் விளங்கிற்று எனவரும். ஊடலின்கண் புலவி தோன்றிற்று - மழைபெய்தற்கண் காற்று வீசிற்று எனவும் வரும். நடத்தல் முதலிய வினை நிகழ்ச்சிகளை இடமாகக் கொண்டு தோன்றி நின்றன.

மழை பெய்தற்கண் காற்று வீசிற்று என்பதற்குப் பெய்யும் மழையை இடமாகக் கொண்டு காற்று வீசிற்று எனப்பொருள் கொள்ளின் அது காலமாகிய இடம் எனப்படும். உண்ணுதற்கண் வந்தான், தட்டுப்புடைக் கண் வந்தான் எனவருவனவும் வினைசெய் இடமாம். பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.

**நிலம் :**

மண், மலை, கடல், நாடு, விண் முதலியனவும், அமர்தல், இருத்தல், கிடத்தல் முதலியவற்றிற்குரிய இயற்கைப்பொருள் செயற்கைப் பொருள்களும் இடங்களாம். அவை வருமாறு :

எ.டு. : செய்யின்கண் பயிர் விளைந்தது - மரத்தின்கண் பழம் விளைந்தது - செடியின்கண் மலர் பூத்தது - மலையின்கண் யானை சென்றது - விண்ணின்கண் பறவைகள் பறந்தன - கடலின்கண் நாவாய் ஓடிற்று - நீரின்கண் மீன் திரிந்தன - மழையின் கண் குளிர் பிறந்தது - அறிவின்கண் உணர்வு தோன்றிற்று - கோயிலின் கண் தெய்வம் உள்ளது - மனையின்கண் இருந்தான் - அரியணையின் கண் அரசன் அமர்ந்தான் - பாயலின் கண் படுத்து உறங்கினான் - உவப்பின்கண் வாழ்த்துத் தோன்றிற்று எனவரும்.

**காலம் :**

காலம் என்பது நொடி, வினாடி, நாழிகை, காலை, மாலை, இரவு, நாள், உவா (விண்மீன்) கார், கூதிர், வேனில், ஆண்டு, உகம், ஊழி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, அசுவினி, பரணி, கார்த்திகை என வருவனவாம்.

எ.டு: ஒரு நொடிக்கண் வந்தான் - காலைக்கண் கதிர் எழுந்தது - இரவின்கண் உறங்கினான் - வேனிலின்கண் வந்தான் - பரணியின்கண் பிறந்தான் - சித்திரைக்கண் வந்தான் - வேனிலின் கண் பாதிரி பூத்தது - பரணியின் கண் பிறந்தான் - சித்திரைக் கண் வந்தான் - ஆண்டின்கண் நிகழ்ந்தது விழா - ஊழிக்கண் தோன்றியது வெள்ளம் எனவரும்.

கண் என்னும் ஏழாம் வேற்றுமையுருபு ஐ, ஒடு என்றாற் போல இடுங்கி மருவிய சொல்லன்று முழுமையான நிறைஉரிச் சொல்லாகும். பூமிக்குப் பார் என்பது ஒரு பெயர். அதற்குப் பரவியிருப்பது பார்க்கப் படுவது என்பது பொருள். லோகம் என்னும் வட சொல்லும் காணப்படுவது என்னும் பொருளுடையதேயாகும். காணப்படுவது என்னும் பொருளில் இடத்திற்குக் கண் என்பதும் ஒரு பெயராயிற்று. "கண்ணகல் ஞாலம்" என்பதற்கு இடமகன்ற ஞாலம் என்பது பொருள் இடப்பொருள் உணர்த்தும் சொற்கள் பலவுள. அவற்றைத் தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமையின் பொருள் வகையாக விரித்துரைப்பார். ஏழாம் வேற்றுமை இலக்கணமாக,

> **"கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
> **வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்**
> **அனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே"** (தொல்.சொல்.77)

எனக் கூறிப்பின், கண்ணுருபின் பொருளை,

"கண், கால், புறம், அகம், உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்" (தொல்.சொல்.77)

என விரித்துரைத்தார். அன்ன பிறவாவன வயின், வழி, உழி, மாட்டு, பாங்கு, பால், இல், முதல், அளை, பாடு, திசை, வாய், உளி, பக்கல், பாங்கர், முகம் முதலியனவாகும்.

இவையெல்லாம் ஏழாம் வேற்றுமைப் பொருள் என்பது எவ்வாறு எனின்? காட்சி வகையானும், கருத்து வகையானும் ஒரு பொருளைத் தாங்கி நிற்பவை இடமாகும் மலையின் கண் இருந்தான் என்புழி மலையில் எவ்விடத்து இருந்தான் என விளங்கக் கூற வேண்டின் உச்சியில் நடுவில் அயலில் உள்ளில், புறத்தில் எனக் கூறுவர். அங்ஙனம் கூறுமிடத்து அவை யெல்லாம் மலை என்னும் பொதுவாய பரப்பின்கண் ஒவ்வொரு பகுதியாக அமைந்திருத்தலின் அவையாவும் இடத்தைச் சுட்டி நிற்பதை அறியலாம்.

இளம்பூரணர் இச்சூத்திரத்தின் பொருளை ஓராமல் இவையெல்லாம் ஏழாம் வேற்றுமையின் மாற்று உருபுகள் எனக் கூறிச் சென்றார். இளம்பூரணரின் உரை வாயிலாகத் தொல்காப்பியத்தைக் கற்ற பவணந்திமுனிவர் இன்னும் ஒருபடி மேலே சென்று இவையெல்லாம் இடப்பொருளுருபே எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறிச் சென்றார்.

உருபிடைச் சொற்கள் தமக்கென வேறுபொருளின்றி அடையாளமாக நிற்பவை. கண் கால் புறம் அகம் என்பவை தனித்தனி வேறுபொருளுடையவை ஆதலின் இவையெல்லாம் உருபின் பொருளை உள்ளடக்கி நிற்கும் இடப் பெயர்களே. ஏழாம் வேற்றுமையின் பொருள் வகைகளே இவற்றை உருபு எனல் ஒவ்வாது எனச் சேனாவரையர் இளம்பூரணர் உரையை மறுத்துரைத்தார்.

மற்று, இவை ஏழாம் வேற்றுமைக்குரிய பொருளாயின் ஊரைக் காத்தான், மண்ணானியன்ற குடம் என்னும் தொடர்களில் ஊர், மண் என்னும் பெயர்களொடு ஐ, ஆன் என்னும் உருபுகள் இணைந்து வருமாறு போலப் புறம், அகம், உள் உழை, கீழ்மேல் என்னும் இடப்பெயர்களின் ஏழாம் வேற்றுமை உருபாகிய கண்ணுருபு இணைந்துவரல் வேண்டுமே எனின்? வேண்டப்படாது. காரணம் கரும்பிற்கு வேலி, காட்டது

யானை என்னும் தொடர்களில் அதற்கு வினையுடைமை, வாழ்ச்சிக் கிழமையாகிய பொருள்களைக் கரும்பு வேலி, காட்டுயானை என உருபின்றிவரினும் முடிக்கும் சொற்களின் ஆற்றலால் நான்காம் வேற்றுமைப் பொருளையும் தரும். அவ்வாறே அவ்இடப் பெயர்களே உருபின் பொருளை விளக்கி நிற்கும். ஊர்க்கண் உள்ளது நெல்வயல், ஆவின் கீழ்க் கிடந்த பசு என்னும் தொடர்களில் கண் - கீழ் என்னும் இடப்பெயர்கள் ஏழாம் வேற்றுமைப் பொருளைத் தரும். அவையே உருபாகவும் நிற்கும். காரணம், அவை உருபின் பொருளை உள்ளடக்கி நிற்றலான். மிகையாகக் கண் என்னும் உருபு விரியாதாயிற்று. அவ்வாற்றான் இவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.

கண் கால் புறம் அகம் என்னும் சூத்திரத்தில் உள்ள கண் என்பது உருபன்று, இடப் பெயராம். இதனை, இக்கண்ணி (வயல்) உழப்பட்டது. இக்கண்ணி விளைந்தது என்னும் வழக்கானும்

*"கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க*
*முன்னின்று பின்னோக்காச் சொல்"* (குறள்.184)

என்னும் குறட்பாவானும் அறிக. தேஎம் என்பது இடம் என்னும் பொருள்தரும் உரிச் சொல். இது தேயம், தேசம் எனத்திரிந்தும் வரும். இவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டு வருமாறு :

| | | |
|---|---|---|
| கண் | : | மணியின் கண் ஒளி (மணி = இரத்தினம்) |
| கால் | : | ஊர்க்கால் நிவந்த பொதும்பர் |
| புறம் | : | ஊர்ப் புறத்திருந்தான் |
| அகம் | : | மனையகத் திருந்தான் |
| உள் | : | காவினுள் இருந்தான் |
| உழை | : | வேந்தனுழை இருந்தான் |
| கீழ் | : | மரத்தின்கீழ் நின்றான் |
| மேல் | : | மாடத்தின் மேலிருந்தான் |
| பின் | : | ஏர்ப்பின் சென்றான் |
| சார் | : | காட்டுச்சார் ஓடும் குறுமுயல் |
| அயல் | : | குளத்தயல் இருந்தான் |
| புடை | : | எயிற்புடை நடந்தான் |
| தேஎம் | : | மறையோர் தேஎத்து மன்றல் |
| முன் | : | கற்றார்முற் சென்றான் |
| இடை | : | அரங்கிடை ஆடினாள் |
| கடை | : | வாயிற்கடை நின்றாள் |

தலை : வலைத்தலை மான்
வலம் : கைவலத்துள்ளது தந்தான்
இடம் : கடலிடத்து நாவாய் சென்றது
வயின் : ஊர்வயின் சென்றான்
வழி : நிழல்வழி அமர்ந்தான்
மாடு : அவர் மாட்டுள்ளது
உழி : காண்புழிக் கேட்பான்
மருங்கு: தேர்மருங்கேறினான்
பால் : அவன்பால் வேண்டினான்
முதல் : 'சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை'
பாடு : நம்பாடுணர்ந்தான்
அளை : கல்லளைச் சுனைநீர்
திசை : ஊர்த்திசை யிருந்தான்
வாய் : அவ்வாய் நின்றான்
உளி : காவுளிச் சேர்ந்தான்
இல் : மனையிலிருந்தான்
பக்கல் : அரசர் பக்கல் இரந்தான்
பாங்கர்: காட்டுப் பாங்கர் போயினான்
முகம் : போர் முகத்தெதிர்ந்தான்

எனவரும். இவற்றுள் கண் கால் புறம் அகம் என்னும் சொற்களே இடவிகற்பங்களை உணர்த்தி உருபின் பயத்தவாய் நிற்றலைக் காண்க.

## நன்னூல்

நன்னூலாசிரியர் ஏழாம் வேற்றுமை இலக்கணமாகக் கூறுவது

"ஏழன் உருபு கண்ணாதி யாகும்
பொருள் முதலாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் அதன்பொருள் என்ப" (நன்.301)

இதன்பொருள் :

ஏழாம் வேற்றுமை உருபுகண் முதலியனவைகளாம். இதன்பொருள், பொருள் இடம் காலம் சினை குணம் தொழிற் சொற்கள் ஆறு தற்கிழமை பிறிதின் கிழமையாக இடமாக நிற்றலாம் பிற உருபுகளாவன

"கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிடம் மேல்கீழ் புடைமுதல்

பின்பா டளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே" (நன்.302)

என்பனவாகும். எடுத்துக்காட்டுகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| பொருள் இடம் : | மணியின்கண் நிற்கின்றதுஒளி | தற்கிழமை |
| | பனையின்கண் வாழ்கிறது அன்றில் | பிறிதின்கிழமை |
| இடமிடம் : | ஊரின்கண் இருக்கும் வீடு | தற்கிழமை |
| | ஆகாயத்தின்கண் பறக்கிறது பருந்து | பிறிதின் கிழமை |
| காலமிடம் : | நாளின்கண் நாழிகை உள்ளது | தற்கிழமை |
| | வேனிற்கண் பூத்தது பாதிரி | பிறிதின்கிழமை |
| சினையிடம் : | கையின்கண் உள்ளது விரல் | தற்கிழமை |
| | கையின்கண் உள்ளது கடகம் | பிறிதின்கிழமை |
| குணமிடம் : | கறுப்பின்கண் உள்ளது அழகு | தற்கிழமை |
| | இளமையின் கண் உள்ளது செல்வம் | பிறிதின்கிழமை |
| தொழில் இடம் : | ஆடற்கண் உள்ளது சதி | தற்கிழமை |
| | ஆடற்கண் பாடப் பட்டது பாட்டு | பிறிதின்கிழமை |

ஒரு வேற்றுமையின் நிலைமைக்கும் வேற்றுமை செய்யும் பொருட்கும் வேறுபாடு கருதவில்லை பவணந்தி முனிவர். மற்றும் வினைசெய் இடத்தை எடுத்துக் கூறாது போயினார். அது தொழிற் பெயருள் அடங்குமென்பது இவர் கருத்தாகும். தொழிற் பெயர் காலங்காட்டாது. தொழிற்பெயர் வேறு வினைச் சொல் வேறு. ஆடலின்கண் வியர்வை தோன்றிற்று. என்புழி ஆடல் என்பது ஆடலைப் புரியுமிடத்து எனக் காலங்காட்டும் இடமும் இடத்தில் நிற்கும் பொருளும் கிழமை பற்றி வரும் என்கிறார். விண்ணின்கண் பருந்து பறந்தது என்புழி விண்ணினது பருந்து அல்லது பருந்தினது விண் எனக்கிழமைப் பொருள் கொள்ளுதற்கு ஏலாது என்பதை உரையாளர்கள் கருதாமற் போயினர். இடப்பொருள் என்பது வேறு. கிழமைப் பொருள் என்பது வேறு என அறிக.

## எட்டாம் வேற்றுமை - விளிப்பொருள்

விளித்தல் - அழைத்தல். விள் = சொல் இ - செயப் படுபொருள் விகுதி. விளி = சொல்லுதலைப்புரிவது என்பது பொருள். அது அழைத்தல், தன்முகப் படுத்தல் என்னும் பொருளில் நின்றது.

படர்க்கையாக உள்ளதொரு பொருளை வாழ்த்தல், வைதல், வேண்டல், ஆணையிடல், அழைத்தல் முதலிய பயன் கருதிப் படர்க்கையை முன்னிலையாக்குதல் இதன் வேற்றுமைப் பொருள் நிலையாகும். அழைக்கப்படுவன யாவும் பெயர்ப் பொருள்களேயாதலின் அப்பெயர்களை இடமாகக் கொண்டு இவ்வேற்றுமை வரும்.

விளியேற்றுமைக்கு உரியதாகத் தனியே உருபு யாதும் வரையறுக்கப் பெறவில்லை. விளிக்கப் பெறும் பெயர்கள் இயல்பாயும் ஈறு கெட்டும், ஈறு ஈற்றயல் நீண்டும், அளபெடுத்தும், ஆ, ஆய், ஏ, ஓ முதலிய எழுத்துக்களை விகுதி போலப் பெற்றும்வரும் திரிபுகளே உருபின் பயத்தவாகக் கொள்ளப்படுதலின் விளியியல் என்னாமல் தொல்காப்பியர் விளிமரபு என இவ்வேற்றுமை நிலைகளைக் கூறுகின்றார்.

எல்லாப் பெயர்களும் விளி ஏற்பன அல்ல சில ஏற்கும். சில ஏலா. ஆதலின்

"விளியெனப் படுவது கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றம் இயற்கைய என்ப" (தொல்.சொல்.115)

என்கிறார்.

பெயர்கள் உயர்திணைப் பெயர். அஃறிணைப் பெயர். இரண்டன் கண்ணும் விரவும் பொதுப்பெயர் என மூவகைப் படுமாதலின் அவை மொழி இறுதியாக வரும் ஈறுகளுள் ஏற்பனவற்றைப் பெற்று நிற்கும் உயிர்களுள் எகரம் பெயரீறாக வாராது. ஒ ஔ இரண்டும், வினையீறாகவே வரும். அவை தவிர்ந்த அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஓ என்னும் ஒன்பதும், மெய்களுள் ஞகர மெய் பெயரீறாக வாராது. அஃதொழிந்த ஏனைய ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பத்தும் குற்றியலுகரமும் வரும். ஆக முப்பத்து மூன்று எழுத்துக்களுள் இருபது எழுத்துக்களே பெயரீறாக வரும்.

அவற்றுள் உயர்திணையில் இ, ஊ, ஐ, ஓ, ன், ள், ர், ல், ய் குற்றியலுகரம் பத்தும் விளிக்கப்படும் பெயர் ஈறாக வரும்.

எ.டு: நம்பி!வாழ்க. ஆடூக!வருக. விடலை!வருக. கோ!வாழ்க. ஐயன்!வருக. வேள்!வாழ்க. மன்னர்!வாழ்க. தோன்றல்!செல்க. சேய்!வருக. வேந்து!வாழ்க எனவரும்.

அஃறிணையில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் குற்றியலுகரம் ஆகிய இருபதும் விளியேற்று வரும்.

எ.டு: மக! வாழ்க. புறா! மேய்க. தும்பி! யாடுக. தீ! அணைக. முசு! செல்க. பூ! விரிக. சே! வாழ்க. நாரை! வருக. சோ! உயர்க. மண்! விளைக. வெரிந்! பொலிக. மரம்! தழைக. அலவன்! செல்க. நாய்! தாவுக. தகர்! வெல்க. குயில்! பாடுக தெவ்! ஒழிக. ஊழ்! நலிக. புள்! பறக்க. வண்டு! சுழல்க எனவரும்

பொதுபெயர் : (விரவுப்பெயர்) ஆ, இ, உ, ஊ, ஐ, ண், ன், ள், ல், ய், குற்றியலுகரம் ஆகிய பதினொன்றும் விளியேற்கும்.

எ.டு: பிறை! வாழ்க. சாத்தி! வருக. உறவு! வாழ்க. அழிதூ! வருக. தந்தை! வருக. ஆண்! செல்க சாத்தன்! வருக. மகள்! வாழ்க. தூங்கல்! ஓங்குக. தாய்! வருக. பேடு! செல்க எனவரும். இவை பிறவாறும் வரும். விதிகள் வருமாறு :

**விதிகள்**

I. மேற்கூறப் பெற்ற மூவகைப் பெயர்களும் இயல்பாகவும், ஏகாரம் பெற்றும் இகர ஈற்றுள் சில பெயர் நீண்டும் அளபெடுத்தும் வரும்.

எ.டு: (உயர்திணைப் பெயர்) நம்பி! வருக நம்பியே! வருக. நம்பீ! வருக. நம்பீஇ! வருக.

(அஃறிணைப் பெயர்) தும்பி! வருக. தும்பியே! வருக. தும்பீ! வருக. தும்பீஇ! வருக

(பொதுப் பெயர்) சாத்தி! வருக. சாத்தியே! வருக. சாத்தீ! வருக. சாத்தீஇ! வருக.

பிற ஈற்றுப் பெயர்களையும் இவ்வாறே விளித்துக் கண்டுகொள்க.

II. அம்மூவகைப் பெயர்களுள் ஐகார ஈறு இயல்பாயும், ஏகாரம் பெற்றும் வரும். மேலும் ஈறு திரிந்து ஆய், ஆ, ஏ ஆகியவற்றைப் பொருந்து மாற்றான் பெற்றுவரும்.

எ.டு: (உ.பெ.) விடலை! வருக. விடலாய்! வருக.

(அஃ.பெ) நாரை! வருக. நாராய்! வருக.

(பொ.பெ) அன்னை! வருக. அன்னே! வருக. அன்னாய்! வருக. அன்னா! வருக எனவரும்.

III. னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் பொருந்துமாற்றன் இயல்பாயும், ஐகாரம் பெற்றும் வருதலேயன்றி மலையமான் என்பது மலையமாஅன்! என அளபெடுத்தும் வரும்.

| | | |
|---|---|---|
| புலவன் | - | புலவ! என ஈறழிந்தும் |
| நல்லன் | - | நல்லான்! என ஈற்றயல் நீண்டும் |
| மன்னன் | - | மன்னா! என ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டும். |
| ஐயன் | - | ஐயாவோ! என ஈறுகெட்டு ஓகாரம் பெற்றும் |
| கோயிலான் | - | கோயிலாய்! என இறுதியகரமாகத் திரிந்தும் |
| வாயிலான் | - | வாயிலோய்! வாயிலோயே! என ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகத் திரிந்தும் ஏகாரம் பெற்றும் |
| ஐயன் | - | ஐயே! என ஈறுகெட்டு அயலகரம் ஏகாரம் பெற்றும், உண்டான், குழையன் என்பவை வினையாலணையும் பெயராக வருமிடத்து உண்டாய்! வருக. |
| குழையன் | - | குழையாய்! வருக என னகரம் யகரமாகத் திரிந்தும் வரும். |

**IV.** ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் பொருந்தும் மாற்றான் இயல்பாயும் ஏகாரம் பெற்றும் வருதலேயன்றி

வேள் - வேஎள்! என அளபெடுத்தும்

எல்லாள் - எல்லா! என ஈறழிந்தும்

மக்கள் - மக்காள் என ஈற்றயல் நீண்டும்

குழையன் - குழையாய்! என ஈற்றயல் நீண்டு யகரமாகத் திரிந்தும்.

அடிகள் - அடிகேள்! என ஈற்றயலகரம் ஏகாரமாயும் வரும்.

**V.** ரகர ஈற்றும் உயர்திணைப் பெயர்கள் பொருந்துமாற்றான் இயல்பாயும் ஏகாரம் பெற்றும் வருதலேயன்றி.

சிறார் - சிறாஅர்! என அளபெடுத்தும்

தெவ்வர் - தெவ்விர்! என ஈற்றயல் அகரம் இகரமாயும்

வணிகர் - வணிகீர்! என ஈற்றயல் அகரம் ஈகாரமாயும்

கணியார் - கணியீரே! என ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் பெற்றும்.

நம்பியார் - நம்பீரே! என ஏகாரம் பெற்று ஈற்றயல் கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாயும் வரும்

நமர் - நமரங்காள்! என விளி ஏலாப்பெயர் செய்யுள் வழக்கில் வழுவமைதியாக இங்ஙனம் திரிந்தும் வரும்.

**VI.** லகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் இயல்பாயும் ஏகாரம் பெற்றும் வருதலேயன்றிப் பொருந்துமாற்றான் அளபெடுத்தும் அயல் நீண்டும் வரும்.

**எ.டு:** மால் - மாஅல்! அருள்க.
மடவரல் - மடவரல்! வருக எனவரும்

**VII** யகர ஈற்றுப் பெயர் இயல்பாயும் ஏகாரம் பெற்றுங் வருதலேயன்றி அளபெடுத்தும் வரும்.

**எ.டு:** சேய் - சேயே சேஎய்!
தாய் - தாயே தாஅய்! வருக எனவரும்.

**VIII.** னகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் ஈறு கெட்டும், ஈறுகெட்டு அயல்நீண்டும் வரும்.
**எ.டு:** அலவன் - அலவ! செல்க. அலவா! செல்க எனவரும்.

னகர ஈற்றுப் பொதுப் பெயர்களும் அவ்வாறே ஈறுகெட்டும், அயல் நீண்டும் வரும்.
**எ.டு:** சாத்தன் - சாத்த! வருக. சாத்தா! வருக எனவரும்.

**IX.** லகர ளகர ஈற்று அஃறிணைப் பெயர்களும், பொதுப் பெயர்களும் ஈற்றயல் நீண்டு வரும்.

**எ.டு:** (அஃ.பெ) முயல் - முயால்! வருக.

கிளிகள் - கிளிகாள்! வருக. எனவரும்.

(பொ.பெ) தூங்கல் - தூங்கால்! வாழ்க.

பிள்ளைகள் - பிள்ளைகாள்! வருக எனவரும்.

பொதுவாக அண்மை விளிக்கண் இயல்பாயும், ஈறழிந்தும், சேய்மை விளிக்கண் குறில் நீண்டும் அளபெடுத்தும் வரும்.

புலம்பலின்கண், ஐயா - ஐயாவோ! வருக. அண்ணா - அண்ணாவோ! வருக என ஓகாரம் பெற்றுவரும்.

மற்று பெயரல்லாத இடைச் சொல்லாகிய 'அம்ம' என்னும் இடைச் சொல் கேள் என்னும் பொருள்பட வருமிடத்து அம்மா! சாத்தா என நீண்டும், அம்ம! வாழி தோழி என இயல் பாயும் வரும்.

## விளி ஏலாத பெயர்கள்

தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், சுட்டுப்பெயர், வினாப் பெயர்களும் தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமன், நுமர், எமன், எமள், எமர் என்னும் கிளைப் பெயர்களும், தம்மான், தம்மாள், தம்மார் என நீண்டு வரும் பெயர்களும், பிறன், பிறள், பிற, மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையவை என இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயர்களும், தான், தாம் என்னும் சொற்களும் விளி ஏலாவாம்.

சிறுபான்மை நமர், எமர் என்பவை நம்மவர், எம்மவர் என்று திரிந்து நம்மவரே! எம்மவரே! நம்மோரே! எம்மோரே! என ஈறுதிரிந்து உலகியல் வழக்கில் விளிப் பெயராக வரும்.

## விளி ஏற்கும் பெயர்களும் விளி ஏற்குமாறும்

| விளி ஏற்கும் ஈறுகள் | உயர் திணை விளி | உயர் திணை விரவுப் பெயர்கள் | அஃறிணை விரவுப் பெயர்கள் | அண்மை விளி | அஃறிணை விளி | அளபெடை விளி |
|---|---|---|---|---|---|---|
| இ | ஈ | - | ஈ | இயல்பு | விளிபெறும் ஈறுகள் ஏயாக மாறி விளி ஏற்கும் | இயல்பாயும் மூன்று மாத்திரையின் மிக்கும் அளபெடுத்து விளிஏற்கும் |
| உ | ஏ | - | ஏ | இயல்பு | | |
| ஐ | ஆய் | ஆய்-ஆ | ஆய் | இயல்பு | | |
| ஓ | ஏ | ஏ | ஆ | இயல்பு | | |
| ன் அன் ஆன் | ஆ | ஏ | ஆ | அகரம் | | |
| | இயல்பு-ஆய் | ஏ | இயல்பு-ஆய் | இயல்பு | | |
| ர் அர் ஆர் | ஈர்<br>ஈரொடு-ஏ<br>இயல்பு-ஈர் | | ஈர்<br>ஈரொடு-ஏ<br>இயல்பு-ஈர் | இயல்பு | | |
| ல் | ஈரொடு-ஏ<br>ஈற்றயல் நீளல் | | ஈரொடு-ஏ<br>ஈற்றயல் நீளல் | இயல்பு | | |
| ள் அன் ஆன் | ஈற்றயல் நீளல்<br>இயல்பு | ஏ | ஈற்றயல் நீளல்<br>ஈற்றயல் நீளல் | இயல்பு | | |
| | ஈற்றயல் நீளல்<br>இயல்பு<br>ஆய் | ஏ | ஈற்றயல் நீளல்<br>இயல்பு<br>ஆய் | இயல்பு | | |

## வேற்றுமை உருபு விரிந்து வருதலும் தொக்கு வருதலும்

சொற்கள் ஒன்றோடொன்று புணர்ந்து வரும் தொடர்மொழிகள் யாவும் அல்வழித் தொடர், வேற்றுமைத்

தொடர் என இருவகைப்படும். வேற்றுமை உருபும் அவற்றின் பொருளும் அமைந்த தொடர்கள் வேற்றுமைத் தொடர்களாம். அவையல்லாதவையெல்லாம் அல்வழித் தொடராம். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் - தனியே இன்மையின் அவை அல்வழித் தொடர்களாக வரும். இவை பற்றிப் புணரியல் தொடக்கத்தில் விளக்கப்பட்டது.

வேற்றுமைத் தொடர்கள் எழுவாய்ப் பெயர், வேற்றுமைப்படும் பெயர், வேற்றுமைப் பொருள், அவற்றின் அடையாளமாகிய உருபு, வேறுபடுத்தும் பயனிலை என ஐந்து கூறுகளை (உறுப்புக்கள்) உடையனவாகும். எடுத்துக் காட்டுக்கள்.

**வேற்றுமை உருபு விரிந்த தொடர்கள்**

2-ஆம் வேற்றுமை : கண்ணன் கனியைத் தின்றான். கண்ணன் எழுவாய் - கனி வேற்றுமைப்படும் பெயர்ப் பொருள், செயப்படு பொருள் வேறுபாடு, உருபு - ஐ தின்றான். பயனிலை.

3-ஆம் வே. : தச்சன் மரத்தால் தேரைச் செய்தான். தச்சன் எழுவாய். தேர் செயப்படுபொருள். மரம் கருவிப் பொருள். ஐ, ஆல் உருபுகள். மரமும் தேரும் வேற்றுமைப் படும் பொருள்கள். செய்தான் பயனிலை.

2-3-4-ஆம் வே. : மன்னன் பாணர்க்குத் தன்கைகளால் பரிசை வழங்கினான். மன்னன் எழுவாய். பாணர் கோடற்பொருள். கைகள் கருவிப்பொருள். பரிசு செயப்படுபொருள். கு, ஆல், ஐ உருபுகள். வழங்கினான் பயனிலை.

2-3-4-5-ஆம் வே. : கண்ணன் உறையூரின் நீங்கித் தன் கால்களால் நடந்து மதுரைக்குச் சென்று புலவரைக் கண்டான். கண்ணன் எழுவாய். உறையூர் நீக்கப்பொருள். கால்கள் கருவிப்பொருள். மதுரை கோடற்பொருள். புலவர் செயப்படு பொருள். கண்டான் பயனிலை. இன், ஆல், கு, ஐ உருபுகள்.

2-3-4-5-6-7-ஆம் வே. : தேவன் திருச்சியின் வடக்கின் கண் உள்ள காவிரியைக் கைகளால் நீந்தி அரங்கரது கோயிலுக்குச் சென்றான். தேவன் எழுவாய். திருச்சி எல்லைப் பொருள். வடக்கு இடப்பொருள். காவிரி செயப்படுபொருள். கைகள் கருவிப் பொருள். கோயில் உடைமைப் பொருள் கோடற்பொருள். சென்றான் பயனிலை. இன், கண், ஐ, ஆல், அது, கு உருபுகள்.

## வேற்றுமை உருபு தொக்கத் தொடர்கள்.

1. கண்ணன் கனியுண்டான். இரண்டாம் வேற்றுமைத் தொகை (கனியை)

2. கண்ணன் கற்சிலை செய்தான், கல்லால், சிலையை 2-3-ஆம். வே.தொகை.

3. பொற்குடம் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனிலையும் தொக்கதொகை. பொன்னாலாகிய குடம் என்பது பொருள். மூன்றாம் வேற்றுமை பெயர்ப் பயனிலை கொள்ளுமிடத்து வினை தொக்கு நிற்கும் வினையின்றிப் பொருள் வேறுபடாதாகலின் இவற்றை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்பர்.

4. நெல்வேலி யமைத்தான். நான்காம் வேற்றுமைத் தொகை. நெல்வேலி நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

5. மலையருவி. ஐந்தாம் வேற்றுமைத் தொகை மலையினின்று விழும் அருவி. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

6. கண்ணன் வீடு. ஆறாம் வேற்றுமைத் தொகை ஆறாம் வேற்றுமைப் பெயர்ப் பயனிலை கொண்டே முடியும்.

7. மலை ஏறினான். ஏழாம் வேற்றுமைத் தொகை. (மலையின் கண் ஏறினான்) மலைக்குகை. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. மலையின் கண் உள்ள குகை என விரியும்.

குறிப்பு : பெயர்ப் பொருளை வேற்றுமை செய்வன வினைகளேயாதலின் பெயர்ப்பயனிலை பெற்று நிற்குமிடத்து அவை வினைகளை உள்ளடக்கியே நிற்கும். மண்குடம் - மண்ணாலாகிய குடம், கரும்புவேலி - கரும்பிற்குக் கோலிய வேலி. மலையருவி - மலையின் வீழும் அருவி. சாத்தன் வீடு. இது சாத்தன் வீடாக அமைந்துள்ளது. மலைச்சுனை - மலையின் கண் உள்ள சுனை என்பவை அவற்றின் பொருள்விளக்கமாம் இரண்டாம் வேற்றுமைப் பெயர்ப் பயனிலை கொள்ளாது வினை கொண்டே [illegible] யும.

வேற்றுமைப் பொருள் சிதையாமல் உருபுகள் மறைந்து இருசொற்களாக அமையுமிடத்து அவைகாரணப் பெயர்களாய் ஒரு சொல் நீர்மையவாய் நிற்கும் அவற்றை வேற்றுமைத் தொகைமொழி அல்லது வேற்றுமைத் தொகை என்பர். அவை ஒரு சொல் போல எழுவாயாயும் பயனிலையுமாகவும் வரும்.

| தொகைமொழி | எழுவாய் | பயனிலை |
|---|---|---|
| பழந்தின்னி (2) | பழந்தின்னி பறந்தது | இது பழந்தின்னி |
| மரத்தேர் | மரத்தேர் ஓடுகின்றது | இது மரத்தேர் |
| கரும்புவேலி | கரும்புவேலி சிதைந்தது | இது கரும்புவேலி |
| மலையருவி | மலையருவி வழிந்தது | இது மலையருவி |
| யானைக்கோடு | யானைக்கோடு பெரியது | இது யானைக்கோடு |
| காட்டியானை | காட்டியானை வந்தது | இது காட்டியானை |

எனவரும்.

இங்ஙனம் தொகை மெழியாக ஆக்கம் பெறுமிடத்து உருபு தொக்குவருதல்போல, எழுவாயும் பயனிலையுமாக வரும் சொற்றொடர்களிடத்தும் உருபுகள் தொக்குவரும். அவற்றை வேற்றுமை உருபு தொக்கதொகைச் சொற்றொடர் என்பர். எடுத்துக்காட்டு வருமாறு :

| | | |
|---|---|---|
| நிலங்கடந்தான் | - | நிலத்தைக் கடந்தான் |
| கண்காண நின்றான் | - | கண்ணாற்காண நின்றான் |
| கூலிவேலை செய்தான் | - | கூலிக்கு வேலை செய்தான் |
| நோய் நீங்கினான் | - | நோயினின்று நீங்கினான் |
| முருகன்கை வேல் | - | முருகனது கைவேல் |
| மலை ஏறினான் | - | மலையின்கண் ஏறினான். |

எனவரும் பிறவிளக்கங்களைத் தொகைமொழி இலக்கணங் கூறுமிடத்துக் கண்டுகொள்க.

இங்ஙனம் ஆக்கம் பெறும் தொகைமொழி - தொகைச் சொற்றொடர் யாவும் முழுமையான வேற்றுமைத் தொடர்களின் சுருக்கங்களேயாதலின் அவற்றை விரிக்குங்கால் அவைகள் பலவாறாகப் பொருள்தரும், அவற்றையெல்லாம் பொருந்து மாற்றால் விரித்துப் பொருள் உணர்தல் வேண்டும். இதனைத் தொல்காப்பியர்,

> "வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
> ஈற்றுநின் றியலும் தொகைவயிற் பிரிந்து
> பல்லாறாகப் பொருள் புணர்ந் திசைக்கும்
> எல்லாச் சொல்லும் உரிய என்ப" (தொல்.சொல்.78)

என்பார்.

எ.டு: குழைச்செவி : குழையை யணிந்த செவி. குழையினைப் பூண்ட செவி, கொண்ட செவி, ஏற்ற செவி, அமைந்துள்ள செவி என விரியும்.

மட்குடம் : மண்ணான் இயன்ற குடம், மண்ணாற் செய்யப்பட்ட குடம், மண்ணாற் பண்ணிய குடம், மண்ணான் வனைந்த குடம், மண்ணான் உருவாக்கிய குடம், மண்ணான் ஆகியகுடம் எனவிரியும்.

கருப்பு வேலி - (கரும்புவேலி) : கரும்பிற்கு இட்ட வேலி, கரும்பிற்காகக் கட்டிய வேலி, கரும்பிற்குப் புனைந்த வேலி, கரும்பிற்குக் கோலிய வேலி, கரும்பிற்கு நாட்டிய வேலி, கரும்பிற்குச் சூழ்ந்த வேலி, அமைத்தவேலி, கரும்பின் பொருட்டுக் கட்டிய வேலி எனவரும்.

மலையருவி : மலையின் வீழ் அருவி, மலையினின்று வீழும் அருவி, வழியும் அருவி பெருகும் அருவி, கொட்டும் அருவி, ஒழுகும் அருவி எனவரும்.

மரக்கிளை : மரத்துக்கிளை, மரத்தினுடைய கிளை, மரத்திற்குரிய கிளை எனவும், சாத்தன் பேச்சு என்பது சாத்தன் பேசிய பேச்சு, சாத்தனுரைத்த பேச்சு என்றும் சாத்தன் நடை சாத்தனது நடை, சாத்தன் நடந்த நடை எனவும், எழுத்ததிகாரம் என்பது எழுத்தின்து இலக்கணம் அதிகரித்தலையுடையது எனவும் விரியும.

குன்றக் கூகை : குன்றத்தின் கண் உள்ள கூகை, வாழும் கூகை, உறையும் கூகை எனவிரியும்.

இவ்வேற்றுமைத் தொகை மொழிகள் மட்குடம், வளைக்கை என்றாற் போல ஒரு வேற்றுமைக்கே உரியவாக நிற்றலேயன்றி இரண்டும் இரண்டுக்கு மேற்பட்ட வேற்றுமைகளையும் விரித்தற்குரியவாய் வரும்.

எ.டு: மலைச்சுனை என்பது மலையினது சுனை, மலைக்கண் உள்ள சுனை எனவும், மரவேலி என்பது மரத்தானாகிய வேலி, மரத்திற்குக் கோலிய வேலி, மரத்தின் வேலி எனவும், சொற்பொருள் என்பது சொல்லுக்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லின்கண் உள்ள பொருள் எனவும் விரியும். பிறவாறு விரிவதைத் தொகைமொழி இலக்கணங் கூறுமிடத்துக் கண்டுகொள்க.

## வேற்றுமை மயக்கம்

சொற்களும் சொற்றொடர்களும் கருத்துக்களைத் தெரிவிக்கும் கருவிகளாயினும் அவைதமக்கு இயல்பாக அமைந்த பொருளைக் கொண்டு மட்டும் மக்கள் எண்ணும் கருத்துக்களை உணர்த்தி விடுவதில்லை. மக்கள் தம் கருத்துக்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துவதனால், மக்கள் குறிப்பாக உணர்த்தும் சொற்கள் தமக்குரிய இயற்பொருளினின்றும் நெகிழ்ந்து தளர்ந்து பிறசொற்களால் உணர்த்த வேண்டிய பொருளைத் தம்வயப்படுத்தி இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப உணர்த்தும். அம்முறையில் அமைவனவே வேற்றுமை மயக்கம் என்னும் இலக்கணம்.

வேற்றுமை என்பது ஒரு பெயர்ப்பொருள் கொள்ளும் வினைமுடிபு காரணமாகச் செயப்படுபொருள் முதலாய வேற்றுமை நிலையை எய்துவதாகும். ஐ ஒடு கு இன் அது கண் என்னும் உருபுகள் தொடர் மொழியின் கருத்து, பயனிலை முடிபுகளுக்கேற்ப வேற்றுமை நிலைகளைத் திரிபின்றி உணர்த்தும் அடையாளங்களாக நிற்கும், வினைமுடிபுகளே வேற்றுமைகளைச் செய்யும்.

அங்ஙனம் வேற்றுமை செய்யும் பயனிலைச் சொற்களைத் தொல்காப்பியர்,

"காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்" (தொல்.சொல்.72)

"அதனின் இயறல் அதற்றகு கிளவி" (தொல்.சொல்.73)

"அதற்கு வினையுடைமையின் அதற்குப் படுபொருளின்"

(தொல்.சொல்.74)

"வண்ணம் வடிவே அளவே" (தொல்.சொல்.75)

"இயற்கையின் உடைமையின் முறைமையின்"

(தொல்.சொல்.76)

"கண் கால் புறமகம்" (தொல்.சொல்.77)

என்னும் சூத்திரங்களால் விரித்துக் கூறி, அவை போல்வனவற்றையும் கொள்ள வைத்துள்ளமையை, மேலே வேற்றுமையியலுள் விரிவாகக் கண்டோம்.

அங்ஙனம் ஒவ்வொரு வேற்றுமைக்கும் கூறிய பொருட் கிளவிகளுள் சில இரண்டு வேற்றுமைகளில் அமைந்துள்ளமையைக் காணலாம். அஃதாவது 'சார்தல்' என்னும் வினை இரண்டாம் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும், 'ஆதல்' என்னும் வினை மூன்றாம் வேற்றுமையிலும், ஐந்தாம் வேற்றுமையிலும் 'அச்சம்' என்னும் கிளவி இரண்டாம் வேற்றுமையிலும், ஐந்தாம் வேற்றுமையிலும் இடம் பெற்றுள்ளன. இவையும், இவைபோல்வனவும் ஒருவகையாக வருதலின் வேற்றுமைப் பொருள் மயக்கம் எனப்படும்.

கன்றல், செலவு - என்பவை இரண்டாம் வேற்றுமைப் பொருளாகவும் ஏழாம் வேற்றுமைப் பொருளாகவும் அமைந்து வருதலும், 'நோக்கம்' என்னும் கிளவி இரண்டாம் வேற்றுமையிலும் மூன்றாம் வேற்றுமை ஏதுப்பொருளிலும் அமைந்து வருதல் ஒருவகை வேற்றுமைப் பொருள் மயக்கம் எனப்படும்.

இங்ஙனம் வரும் பொருள் மயக்கமேயன்றி, ஒரு வேற்றுமைக்குரிய உருபு, பிறிதொரு வேற்றுமைக் கண் வருதலும் உண்டு. அங்ஙனம் வருவனவற்றை வேற்றுமை உருபுமயக்கம் என்ப.

அஃதாவது, சில தொடர்களில் உருபு விரிந்து நிற்குமிடத்து, அவ்வுருபிற்குரிய வேற்றுமைப் பொருளினின்றும் நெகிழ்ந்து, பிறிதொரு வேற்றுமைக்குரிய பொருளைத் தருதல் ஒருவகை உருபுமயக்கமாம்.

சில தொடர்களில் உருபு விரிந்து நிற்குமிடத்துத் தன்பொருளை இழவாமல், பிறிதொரு வேற்றுமைக்குரிய பொருளையும் தரும். இவைபோல்வன ஒருவகை உருபு மயக்கமாம்.

ஒரு தொடரில் முதலும் சினையும் அமைந்து, ஒரு வினை முடிவு கொள்ளுமிடத்து, உருபுகள் மாறிமாறி வருதலும் ஒருவகை உருபு மயக்கமாம்.

ஒரு பெயர் தனக்குரிய நேர்பொருளை நெகிழவிட்டுத் தன்னொடு தொடர்புடையதொரு பொருளை உணர்த்தலாகிய ஆகுபெயரும் ஒருவகை மயக்கமாம். இஃது எழுவாய் வேற்றுமையில் மட்டும் வரும்.

ஆக, வேற்றுமை மயக்கம் என்பது பொருள் மயக்கம், உருபுமயக்கம் என இருவகைப்படும் என்பது புலனாகும். இரண்டும் ஒருங்கு வருவதலும், ஒரோ வழி நிகழும். இனி அவற்றை விரிவாகக் காண்போம்.

## வேற்றுமைப் பொருள் மயக்கம்

சார்தல் என்னும் பொருள் தூணைச் சார்ந்தான் எனச் செயப்படுபொருளிலும், அரசன்கண் சார்ந்தான் என இடப்பொருளிலும் வரும். இரண்டாம் வேற்றுமையில் பருப்பொருளையும், ஏழாம் வேற்றுமையில் நுண்பொருளையும் கொண்டுவரும். இதனைத் தொல்காப்பியம்,

> "கரும மல்லாச் சார்பெண் கிளவிக்கு
> உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை"
>
> (தொல்.சொல்.80)

என்று கூறுகின்றது.

கன்றல் - செல்லுதல் என்பவை, சூதினைக் கன்றினான், சூதின்கண் கன்றினான் எனவும், நெறியைச் சென்றான். நெறிக்கண் சென்றான் எனவும் வரும். இதனைத் தொல்காப்பியம்,

> "கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே" (தொல்.சொல்.82)

என்றும், ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளாகிய 'இன்' உருபும். மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளாகிய 'இன்' உருபும், ஆதல் என்னும் ஆக்கச் சொல்லொடு இணைந்து, கருத்து வகையான் ஒரு தன்மையினவாக வரும்.

எ.டு: மண்ணின் ஆகிய குடம் - எள்ளின் ஆகிய நெய். என வருமிடத்து, இவை ஐந்தாம் வேற்றுமையில் மண் என்னும் நிலையினின்றும் நீங்கிக் குடம் என்னும் பொருளாயிற்று. எள் என்னும் நிலையின் நீங்கி நெய் என்னும் பொருளாயிற்று என நீக்கப் பொருள் தரும் மூன்றாம் வேற்றுமையில் மண் என்னும் முதற்கருவி ஏதுவாகக் குடமாயிற்று எள் என்னும் முதற் கருவி ஏதுவாக நெய்யாயிற்று என ஏதுப்பொருள் தரும் இதனைத் தொல்காப்பியம்,

"மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கு ஓர் அனைய என்மனார் புலவர்" (தொல்.சொல்.88)

என்று கூறுகிறது.

இந்நூற்பாவின் செம்பொருளை ஓராமல் உரையாசிரியன்மார் 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், ஏதுப் பொருளில் வரும் எனக் கூறிச் சென்றனர். இவ்விளக்கம் நன்னூலின் தாக்கத்தால் நேர்ந்ததாகும். ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏதுப்பொருள் உண்டு எனின் ஆண்டு மயக்கம் என்பது எவ்வாறு அமையும்? இதற்குச் சேனாவரையர் போலியாக ஒரு விளக்கம் கூறுவார். மூன்றாம் வேற்றுமை 'இன்' உருபும், ஐந்தாம் வேற்றுமை 'இன்' உருபும் வடிவால் ஒத்திருப்பினும் அவை வேறுவேறு அடிச்சொற்களிலிருந்து தோன்றினவை என்பது முன்னர் விளக்கப் பெற்றது.

அடுத்து இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய நோக்கல் என்பது நோக்குறு(ம்) நோக்கம், நோக்கல் நோக்கம் என இருவகைப்படும். கண்களால் நோக்குவது நோக்குறு நோக்கம். கருத்தால் கருதுவது நோக்கல் நோக்கம் எனப்படும். இவற்றுள் கருத்தால் நோக்கும் நோக்கம் இன், ஆன் என்னும் உருபுகளுக்குரிய, மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளிலும், மற்றையது இரண்டாம் வேற்றுமைக்குரிய செயப்படு பொருளிலும் வரும்.

எ.டு:

"வான்நோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி" (குறள்.542)

என்னுமிடத்து, உயிரெல்லாம் வானை (மழையை) நோக்கி வாழும் எனவும், குடிகள் எல்லாம் மன்னவன் கோலை (நீதியை) நோக்கி வாழும் என்றும் பொருள். மழையைக் கண்ணால் கண்டு வாழும் எனப்பொருள் கொள்ளின் மூன்றாம் வேற்றுமையாம்.

"இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்
இரண்டன் மருங்கின் ஏதுவு மாகும்" (தொல்.சொல்.89)

அடுத்து : ஓம்புதல் (ஓம்படை) என்னும் பொருள்தரும் பேணுதல், காத்தல், போற்றுதல் என்னும் கருத்துடைய தொடர்களில் உருபு, தொக்கு வருமிடத்து இரண்டாம் வேற்றுமைக்கும், மூன்றாம் வேற்றுமைக்கும் பொதுவாக நிற்கும்.

எ.டு: அறம் போற்றி வாழ்க என்னும் தொடர்அறத்தைப் போற்றி வாழ்க என்றும் அறத்தாற் போற்றி வாழ்க என்றும் விரியும். அறத்தைப் போற்றி வாழ்க எனின் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்க என்பது பொருள். அறத்தாற் போற்றி வாழ்க எனின், நீகாக்க வேண்டியவற்றை, அறவழியில் காத்து வாழ்க என்பது பொருளாம். இதனைத் தொல்காப்பியம்,

"ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
தாம்பிரி விலவே தொகவரு காலை" (தொல்.சொல்.93)

என்கிறது.

அடுத்து : அது என்னும் உருபுடைய ஆறாம் வேற்றுமை, உடைமைப் பொருளிலும், கிழமைப் பொருளிலும் வரும். ஆறாம் வேற்றுமை உருபு தொக்கு வருமிடத்து, அத்தொடர் ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் மயங்கி வரும்.

எ.டு: காட்டு யானை என்புழிக் காட்டிற்கு உரிமையுடைய யானை என்னும், கிழமைப் பொருள்படவரின் காட்டது யானை என்றுவரும். காட்டில் வாழும் யானை எனப் பொருள்படவரின் காட்டின் கண் வாழும் யானை என ஏழாம் வேற்றுமைப் பொருளில் வரும். இதனைத் தொல்காப்பியம்,

"ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு
ஏழும் ஆகும் உறைநிலத் தான" (தொல்.சொல்.94)

என்கின்றது.

அடுத்து : கோடற்பொருளுடைய நான்காம் வேற்றுமைஉருபு தொக்குவரும் தொடர் உடைமைப் பொருள்பட ஆறாம் வேற்றுமை உருபு விரிந்தும் வரும்.

எ.டு: தேவர்பலி (தேவர்க்குக் கொடுக்கும் பலிப்பொருள்) என்பது. இது தேவர்க்குப் பலி கொடுத்தான் என நான்காம் வேற்றுமை விரிதலேயன்றித் தேவர்க்குரிய பலி என்னும் உடைமைப் பொருள்பட தேவரது பலி எனவும் வரும். இதனைத் தொல்காப்பியம்,

"குத்தொக வருஉம் கொடை எதிர்கிளவி
அப்பொருள் ஆறற்கு உரித்து மாகும்" (தொல்.சொல்.95)

என்கின்றது.

அடுத்து : இரண்டாவதற்கும் ஐந்தாவதற்கும் ஓதப்பட்ட அச்சப்பொருள், ஒரு தொடரின்கண், உருபுதொக்கு வருமிடத்து பழியஞ்சும் எனவரும். இது உருபு விரியுமிடத்துப் பழியை அஞ்சும் என்னும் செயப்படு பொருள் படவும், பழியின் அஞ்சும் என நீக்கப் பொருள் படவும் வரும். இரண்டாம் வேற்றுமையாயின் செயப்படுபொருளாம், ஐந்தாம் வேற்றுமையாயின் நீக்கப் பொருளாம். இதற்குப் பழிதன்னைப் பற்றாமல் அதனின்றும் நீங்க எண்ணும் என்பது பொருள். இதனைத் தொல்காப்பியம்,

"அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்
எச்ச மிலவே பொருள் வயினான" (தொல்.சொல்.96)

என்கின்றது.

**முதற் பொருளிலும் சினைப் பொருளிலும் உருபுகள் மயங்குதல்**

முதற் பொருளும் சினைப் பொருளும் ஒருங்கு வரும், தொடரின்கண், முதற்பொருளில் 'அது' உருபுவரின் சினைப் பொருளில் 'ஐ' உருபு வரும்.

எ.டு: யானையது கோட்டைக் குறைத்தான் எனவும் மரத்தினது கிளையை வெட்டினான் எனவும் வரும்.

முதற் பொருளில் ஐகார உருபுவரின் சினைப் பொருளில் கண் உருபுவரும்.

எ.டு. : யானையைக் கோட்டின்கண் சிதைத்தான். மரத்தைக் கிளையின்கண் வெட்டினான் எனவரும். இவற்றைத் தொல்காப்பியம்,

"முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கு ஐவருமே" (தொல்.சொல்.83)

என்றும்

"முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப" (தொல்.சொல்.84)

என்றும் கூறுகிறது.

தெள்ளிது = தெளிவுடையது. இவ்வாறு வருதல் தெளிவுடையது என்றதனான் யானையைக் கோட்டைக்

குறைத்தான் - மரத்தினைக் கிளையை வெட்டினான் என இரண்டு செயப்படு பொருளாகக் கூறுதல் தெளிவுடையதன்று என்பது கருத்தாகும். வழக்கின்கண் சிறுபான்மை இவ்வாறு வருதல் வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

மேலும், குழுமியும் குவிந்தும் கூட்டமாகியும் இருக்கும் பிண்டப் பொருளை முதலும் சினையுமாகக் கொண்டு கூறுமிடத்தும், இவ்விலக்கணம் பொருந்தும் என்பர் நூலோர். அவை வருமாறு :

**எ.டு:** குப்பையது தலையைச் சிதறினான் - குப்பையைத் தலைக்கண் சிதறினான் (குப்பை-குவியல்) எனவரும். இதனை ஆசிரியர்,

*"பிண்டப் பொருளும் ஆயியல் திரியா*
*பண்டியல் மருங்கின் மரீஇய மரபே"* (தொல்.சொல்.86)

என்பார். பிண்டப் பொருளை முதலாகவும் சினையாகவும் கூறுதல் ஒருவகைக் குறிப்பாகும். அஃதாவது முதல் - சினை என்பவை வேறுவேறு பொருள்கள் அல்ல. பல உறுப்புக்கள் கூடியதொரு பொருள் முதற்பொருள். முதற்பொருளின் கூறுகள் சினைப் பொருளாதலின், கூறுவோன் சில உறுப்புக்களை நோக்கி, அவை ஒன்றுபட்ட நிலையில், முதற்பொருள் என்று கருதுவான். அவ்வாறே ஒருபொருளைச் சில கூறுகளாக நோக்கி, அவற்றைச் சினைகள் என்று கூறுவான்.

அஃதாவது, ஒரு யானையை முதலாகக் கருதுமிடத்து, அதன் தலை, வயிறு, முதுகு, கால்கள் சினைகளாம். தலையை முதலாகக் கருதுமிடத்துக் கண், காது, வாய், கோடு முதலியவை சினையாம். கண்ணை முதலாகக் கருதுமிடத்துப் புருவம் கருவிழி வெள்விழி முதலியவை சினைகளாம். எனவே, முதல், சினை என்பவை கூறுவோரது கருத்துப் பற்றிய குறிப்பேயாகும். இதனை ஆசிரியர்,

*"முதலும் சினையும் பொருள் வேறுபடாஅ*
*நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே"* (தொல்.சொல்.85)

என்பார். இதனான் ஒரு பொருளே உடைமையாகவும், உடையதாகவும், செயப்படு பொருளாகவும், ஏதுப் பொருளாகவும், உடைமைப் பொருளாகவும், இடப்பொருளாகவும் மயங்குதற்குரிய காரணம் புலப்படும்.

உருபுகளைத் தனிமொழியாக நோக்குமிடத்து, அவை பெயர்ப் பொருளும் தரும். ஐ = தலைமை, ஒடு = ஒரு மரம்,

ஆன் = பசு, கு = உலகம், இன் = இனிமை. அது, சுட்டுப் பெயர். கண் = நிலம். இவற்றுள், அது என்னும் ஆறாம் வேற்றுமை உருபு சுட்டுப் பெயர்போல நிற்றலின், உயர்திணை, உடைமைப் பொருளாக வருமிடத்துப் பொருள் கவர்பு நேரிடும். ஆதலின், உயர்திணை உடைமைப் பொருட்கண் கோடற்பொருள் தரும், குவ்வுருபே வருதல் தெளிவுடையது என்பது நூலோர் கொள்கை. பொதுப்பெயர்க் கண் உடைமைப் பொருள் உருபு தொக்குவருமிடத்து, அப்பொருள் அஃறிணையாயின் 'அது' உருபும், உயர்திணையாயின் 'கு'வ்வுருபும் விரித்தல் இலக்கண நெறியாகும்.

அஃதாவது, நம்பி மனைவி; நங்கை கணவன் என்பவை நம்பியது மனைவி, நங்கையது கணவன் எனவரின், அஃறிணைப் பொருளாகி விடுமாதலின், நம்பிக்கு மனைவி. நங்கைக்குக் கணவன் எனக் 'கு'வ்வுருபு கொடுத்துக் கூறுதல் வேண்டும். சாத்தன் மகன் என உருபு தொக்கு நிற்கும் தொடரை விரிப்புழி, சாத்தன் உயர்திணையாயின் சாத்தனுக்கு மகன் என்றும், அஃறிணையாயின் சாத்தனது மகன் என்றும் உருபுகளை விரித்தல் வேண்டும். இதனை ஆசிரியர்,

> *"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்*
> *அதுவென் உருபுகெடக் குகரம் வருமே"*
>
> (தொல்.சொல்.90)

என ஓதினார். அஃதாவது உயர்திணை உடைமைப் பொருளில் நான்காவதன் உருபு மயங்கி வரும் என்பது கருத்து.

## தடுமாறு தொழில் பற்றி வரும் உருபு மயக்கம்

புலிகொல்யானை - புலிகொன்ற யானை என்றாற் போல உருபு தொக்குவரும் தொடர்களில், பொருள்நிலைகட்கு ஏற்ப உருபுகள் மயங்கி வரும். புலி ஒருகால் கருவியாகவும், ஒருகால் செயப்படு பொருளாகவும் தடுமாறும். புலியைக் கொன்ற யானை எனின் செயப்படு பொருள். புலியால் கொல்லப்பட்ட யானை எனின் கருவிப் பொருள், இஃதொருவகை உருபு மயக்கமாகும். இத்தொடர் உருபு விரியாமல் பயனிலையால் பொருள் விளக்கம் பெறுதலும் உண்டு. புலிகொல் யானை ஓடுகின்றது எனின் புலியைக் கொன்ற யானை எனவும், புலிகொல் யானை மடிந்தது என்னுமிடத்துப் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் பொருள்தரும். இதனை,

> *"தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்*
> *கடிநிலை யிளவே பொருள் வயினான"* (தொல்.சொல்.91)

என்பார் ஆசிரியர்.

ஒரு காலத்தில் புலியைக் கொன்ற யானைப் பின்னர் நோயால் மடிதலும் உண்டு. அவ்வழிப் புலிகொல் யானை மடிந்தது எனின், பொருள் சூழ்நிலையைக் கொண்டே உணர வேண்டுதலான், இந்நிலையை ஆசிரியர்,

"ஈற்றுப் பெயர் முன்னர் மெய்யறி பனுவல்
வேற்றுமை தெரிய உணரு மோரே" (தொல்.சொல்.92)

என்று கூறுகிறார்.

## வேற்றுமை உருபு மயக்கம்

தொடரின்கண் எவ்வுருபு விரிந்து நிற்பினும், பயனிலை முடிபிற்கேற்ற உருபின் பொருளைத் தெரிந்துணர்தல் வேண்டும் உருபுத்தடுமாறியும் நிற்கும். இவற்றை உருபு மயக்கம் என்பர்.

எ.டு: நாணற் கிழங்கு. மணற்கு ஈன்ற முளை என்னும் தொடரில், 'கு'வ்வுருபு நின்றதாயினும் மணற்கண் ஈன்றமுளை என்பதே தெளிவுடைய பொருளாதலின், ஏழாவது உருபோடு நான்காம் உருபு மயங்கி நிற்கும். கடலொடு காடொட்டாது (காடு = தூக) என்புழிக் கடலின்கண் காடு ஒட்டாது என்பதே பொருளாகலின், ஏழாவதன் உருபொடு மூன்றாம் உருபு மயங்கி நிற்கும்.

"கோட்டுப் பூ சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினிர்" என்று ஒருத்திக்கு என நான்காம் உருபு வரவேண்டிய இடத்து, இரண்டாவதன் உருபு மயங்கிற்று. கொக்கினுக் கொழிந்த தீம்பழம் (கொக்கு = மாமரம்) கொக்கின் நின்றும் ஒழிந்த என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபிற்கு மாறாக, நான்காம் உருபு மயங்கிற்று. பிறவும் இவ்வாறே கண்டு கொள்க. இதன் இலக்கணத்தை ஆசிரியர்,

"யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்"

(தொல்.சொல்.102)

என்பார். எனவே, வேற்றுமை மயக்கம் என்பது ஒரு பொருள் இரண்டு வேற்றுமைக் கண்வந்து, அவ்வப் பொருளில் மயங்கி நிற்பதும், ஓர் உருபு வரவேண்டியவிடத்துப் பிறிதோருருபு வந்து மயங்கி நிற்பதுமாம் என்பது விளங்கும்.

## நன்னூல்

நன்னூலாசிரியர் உருபுகளே பொருளை வேற்றுமை செய்யும் எனக் கருதினமையான், பொருள் மயக்கம் பற்றி யாதொன்றும் கூறாமல். உருபு மயங்குதலையும் விளக்கிக்

கூறாமல், தொல்காப்பியச் சூத்திரத்தையே ஆசிரிய வசனமாக எடுத்து "யாதன் மருங்கிற் கூறிற்றாயினும் பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்" எனக் கூறிச் சென்றார். இந்நூற்பாவால் பொருளை வேறுபடுத்துவன, பயனிலைப் பொருள்களே உருபுகள் அல்ல என்பது விளங்கும்.

## உருபுகள் பற்றிய சில மரபுகள்

மூன்றாம் வேற்றுமையில் அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி, காரணப் பொருளில் வருமிடத்து ஒடு உருபு உயர்ந்த பொருளிடத்து வரும். "ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே" என்பது விதி. இன்றேல் காரணப் பொருள் தராது உடன் என்னும் இடைச் சொற்பொருளைத் தரும். அரசனொடு இளையர் வந்தார். நாயொடு மகவு வந்தது என வரல் வேண்டும். வடநூலார் மூன்றாம் வேற்றுமைக்கு உடனிகழ்ச்சி என்னும் பொருளையும் கொண்டதனால் உருபுதலைமையில் பொருளில் இணைந்து வருமென்பார் "ஸம்யுக்தே அப்பிரதானே" என்பது பாணினீயம். இதனானும் வேற்றுமை பற்றிய வடநூலார் கோட்பாடு வேறு, தமிழ் நெறிமரபு வேறு என்பது விளங்கும்.

மற்று, ஒரு தொடரின்கண் ஒத்த உருபுகளோ வேறுபட்ட உருபுகளோ அடுக்கி வருமிடத்து, அவைதனித்தனி வினைமுடிபு கொள்ள வேண்டும் என்பது யாப்புறவில்லை. ஓர் எழுவாயின் வினைகளாயின், இறுதியில் வரும் பயனிலையொடு அவை தனித்தனி இணைந்து முடியும்.

**எ.டு.** : மக்கள் நிலத்தையும், நீரையும், காற்றையும், தீயையும் போற்றி வாழ்வார். அவன் அவற்றைக் கண்ணானும் கருத்தானும் நோக்கினான். "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்". வீட்டினின்றும் ஊரினின்றும் நாட்டினின்றும் நீங்கினான் சாத்தன். இவை சாத்தனதும் கொற்றனதும் தேவனதுமாகிய நூல்கள். அவர் காட்டின்கண்ணும் மலையின் கண்ணும் அமர்ந்து தவம் புரிந்தார் எனவரும். இவை ஒத்த உருபுகள் அடுக்கி ஒருவினை கொண்டன.

அவன் மரத்தைக் கோடரியால் விறகிற்காக வெட்டினான். யான் தேவனை வீட்டின்கண் கண்களாற் கண்டேன். அரசன்தன் செங்கோன்மையான் நாட்டின்கண் தன்புகழை நிலை நாட்டினான். இவைவேறு வேறு உருபுகள் அடுக்கி ஒருவினை முடிபு கொண்டன.

தொடர்களில் வேறு உருபுகளுக்கு இடையே, 'அது' உருபுவரின் 'அது' வினையொடு முடியாது. தனக்குரிய பெயர்ப் பயனிலையொடு முடிந்து வரும். சாத்தன் வாளான் யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான் என்னும் தொடரில் ஆன், ஐ, கண் உருபுகள் குறைத்தான் என்னும் வினைப் பயனிலையொடு முடிந்தன. 'அது' உருபு கோடு என்னும் பெயரொடு முடிந்தது.

இங்ஙனம், பொருள் தொடர்ந்து செல்லுமிடத்து, இயைபுடைய நிலையில் ஒருவினை முடிபு கொள்ளும். இடையே வேறுவேறு வினையெச்சமும், பெயரெச்சமும் வரின், சிலஉருபுகள் அவற்றொடு முடிந்து தொடரும்.

எ.டு: கொற்றன் மலையின் நீங்கி ஊர்க்குச் சென்று மனையின் கண் அமர்ந்து உணவை யுண்டான் என்னும் தொடரில், 'இன்' உருபு நீங்கி என்னும் எச்சத்தோடும், குவ்வுருபு சென்று என்னும் எச்சத்தோடும் கண்உருபு அமர்ந்து என்னும் எச்சத்தோடும் முடிந்து நிற்க, அவ்எச்சங்கள் உண்டான் என்னும் முற்றுவினையொடு முடிந்தன. 'ஐ' உருபு மட்டும் முற்று வினையொடு முடிந்தது. இவ்விலக்கணத்தைத் தொல்காப்பியம்.

*"உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி*
*ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே" (தொல்.சொல்.98)*

*என விதிக்கின்றது.*

மற்று, உருபுகள் கவர்பொருள்படாத தொடர்களிடத்து இடையிலும் வரும். ஈற்றிலும் நிற்கும். 'அது' வென்னும் உருபு பெயர் கொண்டு முடியும் இயல்பினதாகலின், இடையேயன்றி ஈற்றில் நில்லாது. நிற்பின் 'அது' வினைக்குறிப்பு முற்றாகி விடும். உருபு எனப்படாது. கவர்பொருள் படுமாயின் இறுதியில் நில்லா.

எ.டு:

| | | |
|---|---|---|
| தேவன் உணவை உண்டான் | - | தேவன் உண்டான் உணவை |
| சாத்தன் கண்களாற் பார்த்தான் | - | சாத்தன் பார்த்தான் கண்களால். |
| அரசன் பாணர்க்குப் பரிசளித்தான் | - | அரசன் பரிசளித்தான் பாணர்க்கு. |
| சாத்தன் கொற்றனின் வலியன் | - | சாத்தன் வலியன் கொற்றனின். |
| பூதன் மலையின்கண் இருந்தான் | - | பூதன் இருந்தான் மலையின்கண். |

கவர்படு பொருளாக வருவன: சாத்தன் அறிவான் உணர்ந்தான் என்பது உணர்ந்தான் சாத்தன் அறிவான் என 'ஆன்' இறுதிக்கண் வரின் கவர்பொருள் தரும், இனிமேல் அறிவான் எனவும் பொருள் தருமாதலின். குன்றத்தின்கண் கூகை என்பது, கூகை குன்றத்தின்கண் எனவரின், கூகை குன்றம் என்பது ஒரு பெயராகவும் அமையலாமாதலின் பொருள் கவர்புபடும். அதனாள் ஆசிரியர்,

"இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்"
(தொல்.சொல்.99)

என விளக்கிக் கூறினார்.

அடுத்து : ஒரு பெயர்ப் பொருள், வேற்றுமைப் பொருள் மயக்கத்தின்கண், வேறுவேறு உருபுகளை ஏற்று வருதலும், பொருள் கவர்வு படாதவழி உருபு தொக்கு வருதலும் இலக்கணமாகும். பிறிது பிறிது ஏற்றல்.

**எ.டு:** அரசர் என்னும் பெயர் சார்புப் பொருட்கண் கருமச் சார்பாயின் அரசரைச் சார்ந்தான் என 'ஐ' உருபையும், கருமமல்லாச் சார்பாயின், அரசர்கண் சார்ந்தான் எனவும் பிறிதாய உருபினை ஏற்றது.

அவ்வாறு நாகர்பலி என்னும் தொகை விரியுமிடத்து, வினை முடிபிற்கு ஏற்ப நாகராற்பலி நேர்ந்தது, நாகர்க்குப் பலிகொடுத்தான், நாகரது பலி இவை என வேறுவேறு உருபுகளை ஏற்று வந்தது. அவ்வாறே தடுமாறு தொழிற் பெயர்க்கண் புலிகொல்யானை என்பது புலியைக்கொன்ற யானை எனவும் புலியாற் கொல்லப் பெற்ற யானை எனவும் வேறுவேறு உருபுகளை ஏற்று வந்தது.

உருபு தொக வருதல் : எ.டு: பழந்தின்றான் (பழத்தைத் தின்றான்) மரப்பாவை. (மரத்தாற் செய்யப் பெற்ற பாவை) நெல்லுழவு (நெல்லுக்கு உழுத உழவு) வரையருவி (வரையின் வீழ் அருவி) சாத்தன் கை (சாத்தனது கை) கிணற்றுத் தவளை (கிணற்றின்கண் வாழும் தவளை) என ஆறு உருபுகளும் இடையே தொக்கு வந்தன இவற்றைத் தொல்காப்பியம்,

"பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப" (தொல்.சொல்.100)

என்று கூறுகின்றது. இந்நூற்பாவின் செம்பொருளை ஓராத உரையாசிரியன்மாரும் நன்னூலாரும் பிழைபட உரை எழுதிச் சென்றனர்.

இனி, வேற்றுமை உருபுகள், தொடரின் இடையேயும், பொருந்து மாற்றான் ஈற்றிலும் வரும் என்று கூறிப்பின் உருபு தொக்கும் வரும் என்றமையான், எல்லா உருபுகளும் இறுதிக் கண்ணும் தொகும் என்று கருதுமாறும் நேரும் ஆதலின், ஆசிரியர் ஆறு உருபுகளுள் இரண்டாம் வேற்றுமையுருபும், ஏழாம் வேற்றுமை உருபும், தவிர்ந்த மூன்று, நான்கு, ஐந்து ஆகிய வேற்றுமை உருபுகள், இறுதிக் கண் தொக்குவாரா என வரையறை கூறுகின்றார் ஆசிரியர்.

எ.டு: கடந்தான் நிலத்தை என்பது கடந்தான் நிலம் எனவும், குன்றத்தின்கண் இருந்தான் என்பது இருந்தான் குன்றத்து எனவும், ஐயும் கண்ணும் இறுதிக்கண் தொக்கு வந்தன. பிற உருபுகள் இறுதிக்கண் தொகின் பொருள் சிதையும்.

அஃதாவது, எறிந்தான் கல்லால் என்பது எறிந்தான் கல் எனவரினும், சாத்தற்குக் கொடுத்தான் என்பது கொடுத்தான் சாத்தன் எனவரினும், சாத்தனின் உயர்ந்தான் என்பது இவன் உயர்ந்தான் சாத்தன் எனவரினும், பொருள் சிதையுமாகலின் ஆசிரியர்,

"ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா இறுதி யான" (தொல்.சொல்.101)

என விதித்தார்.

அடுத்து : செயப்படு பொருள் முதலாகக் கூறப்பெற்ற வேற்றுமைப் பொருள்கள், வினை நிகழ்ச்சியாற் றோன்றுவனவாகும். குடந்தை வனைந்தான் என்னுமிடத்துக் குயவன் வனைந்தான். அதனால் குடம் என்னும் செயப்படுபொருள் தோன்றிற்று. 'ஐ' உருபு அவ்வேற்றுமை நிலையைக் காட்டி நின்றது. குடத்தை வனையான் என எதிர்மறையாகவரின் ஆண்டு வினை நிகழவில்லை. குடத்தை என்பது எவ்வாறு செயப்படு பொருளாகும் என்னும் ஐயம் தோன்றுவது இயல்பே. அதனை அறிவியல் நோக்கில் ஆசிரியர் விளக்குகிறார்.

வினை என்பது ஒருபொருளின் புடைபெயர்ச்சி. அஃதாவது, அசைவு இயக்கம் அதனை உணர்த்தும் குறியீடு வினை எனப்பட்டது. அவ்வினைகள் நடத்தல், இருத்தல், உண்ணல், உறங்கல், கொள்ளல், கொடுத்தல் எனப்படுப் பொருள் பற்றியும், அறிதல், உணர்தல், நினைதல், எண்ணல்

என நுண்பொருள் பற்றியும் நிகழும். வினைநிகழ்ச்சிகள் எண்ணற்றவை. அவ்வினைகளை ஒரு பொருள் நிகழ்த்தலாம். நிகழ்த்தாமலும் இருக்கலாம். நிகழ்த்தாமையும் ஒருவகை வினையே. கண்ணன் நடந்தான் என்பது போலவே, கண்ணன் நடவான் என்பது வினையே. நடந்தான் என்பதனை விதிவினை என்றும், நடவான் என்பதனை மறைவினை என்றும் இலக்கண நூலோர் வகை செய்தனர். விதிவினையை உடன்பாடு என்றும், மறைவினையை எதிர் மறைவினை என்றும் கூறுவர் நூலோர் எதிர்மறை என்பது வினை நிகழ்ச்சியை மறுத்துக் கூறுவதாகும். குயவன் குடத்தைச் செய்தான் - உடன்பாட்டு வினை. குயவன் குடத்தைச் செய்யான் எதிர்மறைவினை. எதிர்மறைவினை என்பது ஒருவினையை எடுத்து அது நடைபெறவில்லை, நடைபெறாது எனக் கூறுவதாகும்.

வினை நிகழாமை எதிர்மறையில் மட்டுமன்றி, எதிர்கால வினையிலும் நிகழ்ச்சி நிகழாது.

அஃதாவது, சாத்தன் உண்பான் என்னுமிடத்து இப்பொழுது உண்ணவில்லை. இனிமேல் உண்பான் என்பது பொருள். எனவே காலம் காட்டும் வினைச் சொற்கள் யாவும் வினைகளேயாம். எதிர்மறை முக்காலத்திற்கும் உரிமையாக நிற்கும்.

அதனால், காத்தல் ஒத்தல் முதலாகக் கூறப்பெற்ற வினைகள் யாவும், அவற்றிற்குரிய உருபுகளும் உடன்பாட்டிற் கூறினும், எதிர்மறையிற் கூறினும், செயப்படுபொருள் முதலாய வேற்றுமை நிலைகளைக் காட்டுவதில் பிழைபடா. ஆதலின், ஆசிரியர் இம்மெய்ம்மையை இலக்கண விதியாகக் கூறுகின்றார். அவ்விதி வருமாறு :

> "எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்
> பொருள் நிலை திரியா வேற்றுமைச் சொல்லே"
>
> (தொல்.சொல்.103)

என்பதாகும். காரணம் மறுக்கப்படுவது வினை நிகழ்வையே ஆதலானும், விதிவினைக்கும் மறைவினைகளுக்கும் தொழில் முதனிலை யாவும் ஒக்குமாகலானும், அம்முதனிலைகள் பற்றியே வேற்றுமைகள் தோன்றுதலானும், பொருட்டன்மைபோல வினைத்தன்மையும் அழிவற்றதாகலானும் "எதிர்மறுத்து மொழியினும் பொருள் நிலைதிரியா" என வற்புறுத்தினர் நூலோர்.

## உருபுகள் வடிவு திரிதல்

இலக்கிய வழக்கில் கு ஐ ஆன் என்னும் உருபுகள் ஒரோவிடத்து வடிவு திரியும். உயர்திணையில் கு - க எனவும் அ எனவும், ஆன் - ஆன எனவும் திரியும், அஃறிணைக்கண் ஆன் மட்டும் ஆன எனத் திரியும். எ.டு :

*"கடிநிலையின்றே ஆசிரியர்க்க"*
*"காவலோன(னை)க் களிறஞ்சும்மே"*
*"புரைதீர் கேள்விப் புலவரான"*

(தொல்.சொல்.108 சேனா.உரை)

எனவும், "புள்ளினான" எனவும் வரும். அது என்னும் ஆறனுருபு வடிவு திரியாமல் இறுதி கெட்டு 'அ' எனவும் வரும். தனகைகள். நினதாள்கள் எனவரும்.

## நான்காம் வேற்றுமை உருபிற்குச் சிறப்பு விதிகள்

நான்காம் வேற்றுமைக்குவ்வுருபு விரிந்து நிற்குமிடத்தும் பிறவேற்றுமைப் பொருள்களிலும் வரும்.

1. யானையது கோடுகூரிது என்னும் பொருளில் யானைக்குக் கோடு கூரிது எனவும்,

2. காணத்தாற் கொண்ட அரிசி என்னும் பொருளில் காணத்திற்குக் கொண்ட அரிசி எனவும், அவனாற் செய்யத்தகும் என்பது அவனுக்குச் செய்யத்தகும் எனவும்,

3. இம்மகவினது தாய் என்பது இம்மகவிற்குத் தாய் எனவும்,

4. கருவூரின் கிழக்கு என்பது கருவூர்க்குக் கிழக்கு எனவும், சாத்தனின் நெடியன் இவன் என்பது சாத்தற்கு நெடியன் இவன் எனவும்,

5. நாளைக் கண் வரும் என்பது நாளைக்கு வரும் எனவும்,

6. மனைவாழ்க்கையிற் பற்றுவிட்டான் என்பது மனை வாழ்க்கைக்குப் பற்று விட்டான் எனவும்,

7. ஊரின் நீங்கினான் என்பது ஊர்க்கு நீங்கினான் எனவும்,

8. ஊர்க்கண் சென்றான் என்பது ஊர்க்குச் சென்றான் எனவும் வரும்.

நான்காம் வேற்றுமைப் பொருள் கோடற் பொருளாதலின் உடைமை, எல்லை, ஏது, இடம் முதலியவற்றைக் கொள்ளும் பொருளாகக் கருதியவழி நான்கனுருபு வருதல் உலக வழக்காதலின் இம்மயக்கம் அமைந்தது. இதனை ஆசிரியர்.

"இதனது இதுவிற்று என்னும் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயினானும்
அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பினாக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபின்
தொல்நெறி மரபின தோன்ற லாறே" (தொல்.சொல்.106)

என்று கூறுகிறார்.

## வேற்றுமைகட்கும் வினைச்சொற்கும் உள்ளதொடர்பு

வினை நிகழ்வு என்பது ஒரு கருத்தா இன்றி நிகழாது, யாதானும் ஒருபுடை பெயர்ச்சியை உடையதாக இருக்கும், வினை நிகழ்வால் காலம் புணர்ந்து நிற்கும். அவ்வினை நிகழ ஒரு கருவி வேண்டும். ஓர் இடம் வேண்டும். அவ்வினையின் பயன் உள்ளடங்கி நிற்கும்.

எ.டு: 'உண்டான்' என்னும் வினைமுற்று ஆக்கம் பெற எட்டுக்கூறுகள் அமையும், தொழில் பலவினுள் ஈண்டு உண்ணுதல் என்னும் தொழில் அமைந்துள்ளது. அதனைச் செய்த வினைமுதலைக் (கருத்தாவை) கொண்டுள்ளது. காலம் புலப்படுகின்றது. செயப்படுபொருள் புலப்படுகின்றது. கைகளால், வாயால் என்னும் கருவி புலப்படுகின்றது. ஓர் இடம் புலப்படுகின்றது. உடல் நலத்திற்கு வயிறு கொள்ள எனக் கொள்ளும் பொருளும், பசிநீங்க என்னும் பயனும் பெறப்படுகின்றது.

எனவே, ஒரு வினைமுற்று ஆக்கம்பெற ஒருபுடை பெயர்ச்சி வினை, எழுவாயாகிய வினைமுதல், செயப்படு பொருள், கருவி, கோடற்பொருள், நீக்கப் பொருள், இடம், பயன் முதலியவை அமைய வேண்டும் என்பது புலனாகும். சில வினைகளில் கோடல், நீக்கம் என்பன வெளிப்படாமல் இருக்கும். ஆதலின், ஆசிரியர் ஒருவினை முற்றுத் தோன்ற அடிப்படை எட்டுக் கூறுகளாகும் என்கிறார். இவற்றுள்

சிலவினைகளில் சில குன்றியும் வரும். நடந்தான் என்னும் வினையில் செயப்படுபொருள் குன்றியது. பிறவற்றையும் இங்ஙனம் ஓர்ந்து கொள்க. இதனைத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது.

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற்கு இதுபய னாக என்னும்
அன்னமரபின் இரண் டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முத னிலையே" (தொல்.சொல்.108)

இதன்கண்,

வினை - என்பது உண்ணல் - செல்லல் - கேட்டல் என்னும் புடைபெயர்ச்சியை உணர்த்தும் தொழிலின் அசைவாகிய முதனிலை வினைத் தன்மைகளாகும்.

செய்வது - என்பது வினைமுதலாய கருத்தாவை. இது முதல் வேற்றுமைப் பொருள்.

செயப்படு பொருள் - என்பது அவ்வினையை ஏற்றுக்கொண்டு அமையும் பொருள். இது இரண்டாம் வேற்றுமைப் பொருள்.

நிலம் - என்பது அத்தொழில் நிகழ்தற்கு ஆதாரமாகிய இடம். இது ஏழாம் வேற்றுமை.

காலம் - அத்தொழில் நிகழ்வை உணர்த்தும் காலம். இது ஏழாம் வேற்றுமையுள் அடங்கும்.

கருவி - அத்தொழில் நிகழத் துணையாகும் பொருள். இது மூன்றாம் வேற்றுமைப் பொருள்.

இன்னதற்கு - அத்தொழில் நிகழ்ச்சி இதன் பொருட்டு என உணர்த்துவது. இது கோடற் பொருள் ஏதுவை உள்ளடக்கியது.

இதுபயன் - அத்தொழில் நிகழ்வு விளைக்கும் பயன். இது நிமித்தம், நீக்கம், அடைதல், உடைமை எனப்பல நிலைகளில் அமையும்.

இவற்றுள் வினைமுதலாய ஆறும் சொல்லின் அகத்துறுப்பாகும். இன்னதற்கு இது பயனாக என்பவை புறத்துறுப்புக்களாகும்.

வினைச்சொற்கள், இங்ஙனம் எட்டுக்காரணங்களைக் கொண்டு ஆக்கம் பெறுதலின், அவை பெயர்ப் பொருள் வேற்றுமை அடைதற்கும், வேற்றுமை மயக்கத்திற்கும் காரணமாகும்.

தொழில் என்பது தெரிநிலைவினை. குறிப்பு வினை இரண்டையும் சுட்டிநின்றது. குழையன் என்னும் குறிப்புவினை குழையை உடையான் என விரிதலின் உடைமைத் தன்மையான் உள்ளத்துள் எழும் கிளர்ச்சியாகிய வினையும், உடையானாகிய வினைமுதலும், குழையாகிய செயப்படு பொருளும், செவியாகிய இடமும், முக்காலக் குறிப்பும், செருக்கினைப் புலப்படுத்தும் கருவியும், செவிக்குப் பூட்டினான் என இன்னதற்கு என்னும் அழகு செய்தலாகிய, பிறர் மதித்தலாகிய பயனும் அமைந்துள்ளமை புலனாகும்.

## எழுவாய் வேற்றுமை மயக்கம் - ஆகுபெயர்

"எழுவாய் வேற்றுமை பெயர்தோன்றும் நிலை" என்றும், அப்பெயர்கள் இவ்விவ்வாறு அமையும் என்றும் பெயர்வேற்றுமையிலக்கணத்தை விரித்துக் கூறினார். ஆசிரியர். சொல் என்பதற்குப் பொது இலக்கணம் கூறுமிடத்து, "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றும், "சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லின் ஆகும்" என்றும், "தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும் இருபாற்றென்ப பொருண்மை நிலையே" என்றும் விளக்கினார். நால்வகைச் சொற்களும், வெளிப்படைப் பொருளும் குறிப்புப் பொருளும், தொடர் மொழிக் கருத்திற்கேற்பத் தரும். அவற்றுள், இருதிணைப் பொருள்களின் குறியீடாக அமையும் பெயர்கள், தொடர் மொழியில் கருத்திற்கேற்பத்தன் பொருளைத் தரும்.

ஒரு பெயர்ச் சொல் தனக்குரிய இயற்கையான பொருளையும், தன்னொடு தொடர்புடைய பொருளையும் உணர்த்தும். இயற்கையான பொருள் தருமிடத்து இயற்பெயர் என்றும், தொடர்புடைய பிறிதொரு பொருளைத் தருமிடத்து ஆகுபெயர் எனவும் கூறுதல் இலக்கணமாகும். ஆகுபெயர்கள் பல்வேறு அடிப்படையில் பிறபொருள் தரும்.

வேற்றுமை மயக்கம் என்பது ஒரு வேற்றுமைக்குரிய பொருள், தன் பொருளில் தீராமல், மற்றொரு வேற்றுமைப் பொருளாக மயங்குதலும், தன் பொருளை விட்டுப் பிறிதொரு

வேற்றுமைப் பொருளாக மயங்குதலுமாம் என மேலேவிளக்கப் பெற்றது. அம்முறையில் ஓர் எழுவாய்ப் பெயர் தனக்குரிய இயற்கைப் பொருளினின்றும் திரியாது நிற்றலும் திரிந்து தன்னொடு தொடர்புடைய பிறிதொரு பொருளில் நிற்றலும் வேற்றுமை மயக்கமேயாகும்.

அஃதாவது, பொன்னை உருக்கினான் என்னுமிடத்துப் பொன் மாழையை (உலோகத்தை)க் குறிக்கும். பொன்னை அணிந்தான் என்னுமிடத்துப் பொன்னாலாகிய அணிகலனைக் குறிக்கும். காஞ்சிபுரம் சென்றான் என்னுமிடத்துக் காஞ்சிபுரம் காஞ்சிநகரைக் குறிக்கும். காஞ்சிபுரம் உடுத்தான் என்னுமிடத்துக் காஞ்சிபுரத்தில் நெய்த பட்டாடையைக் குறிக்கும். இத்தொடர்களில் பொன்னும் காஞ்சிபுரமும் தம்பொருளை விட்டுவிடாமல் தம்மொடு தொடர்புடைய பிறபொருளை உணர்த்துமிடத்துப் பொருள் மயக்கமாகிறது.

எனவே, ஆகுபெயர் என்பது எழுவாய் வேற்றுமையின் பொருள் மயக்கமாதலை உணர்ந்த தமிழ் நூலார், ஆகுபெயர் இலக்கணத்தை வேற்றுமை மயங்கியலுள் வைத்துக் கூறினர். அம்மரபை உணர்ந்த தொல்காப்பியர், ஆகுபெயர் இலக்கணத்தை வேற்றுமை மயங்கிலுள் வைத்துக் கூறியுள்ளார். இம்மரபை உணர்ந்த இளம்பூரணர், ஆகுபெயர் என்பது எழுவாய் வேற்றுமை மயக்கம் என்று தெளிவாகக் கூறினார்.

வட மொழியில் ஆகுபெயர் என்னும் இலக்கணக் கோட்பாடு இல்லை. அவர்கள் சொற்களை நேர்பொருளைத் தருதல், குறிப்புப் பொருளைத் தருதல் என இருவகையாக்கிக் குறிப்புப் பொருளை, 'இலக்கணை' என வகுத்துக் கூறுவர். அம்முறையில் சேனாவரையர் முதலாய உரையாளர்களும் நன்னூலாசிரியரும், ஆகுபெயரைக் குறிப்பு மொழி வகையுள் அடக்கி, இலக்கணமும் விளக்கமும் கூறிச் சென்றனர்.

ஆகுபெயர் என்னும் மொழி, வினைத்தொகை மொழியாதலின் முன்னர் வழங்கி வருவனவும், அவ்வப்பொழுது ஆகிவருவனவும், எல்லாம் அமையும். மரபு காரணமாகச் சில ஆகுபெயர்கள், இயற்கைப் பொருள்போல வழங்கும். எடுத்துக்காட்டாக, புளிப்பு என்பது ஒரு சுவையின் பெயர். அச்சுவையையுடைய பழம் புளிம்பழம், எனினும், புளி தின்றான் என்னுமிடத்துப் புளி ஆகுபெயராய்ப் புளியமரத்தின் பழத்தை உணர்த்திற்று என்று கூறுவர். அவர்கள் புளியமரம் என்பதை

இயற்பெயராகக் கொண்டு புளி ஆகுபெயர் எனக் கூறுவதைக் காணலாம்.

## ஆகுபெயர் - வகைகள் விளக்கம்

ஆகுபெயர் ஒரு சொல்லாகவரும். ஒரோவழி அச்சொல் அடையடுத்தும் வரும். ஒரு பொருள் குறித்த இருசொல்லாகவும் வரும். அவற்றை இருபெயரொட்டு ஆகுபெயர் என்பர். எவ்வாறு வரினும், ஆகுபெயர் தன்னொடு யாதானுமொரு வகையில், தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருதல், இதன் இலக்கணமாகும். ஆகுபெயர் பற்றிய இலக்கணத்தை இரண்டு சூத்திரங்களிற் கூறுகிறார். அவை வருமாறு :

*"முதலிற் கூறும் சினையறி கிளவியும்*
*சினையிற் கூறும் முதலறி கிளவியும்*
*பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்*
*இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்*
*வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ*
*அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி"*

(தொல்.சொல்.110)

இதன் விளக்கமும் எடுத்துக் காட்டும் வருமாறு :

### 1. முதலிற் கூறும் சினையறி கிளவி :

ஒரு முதற்பொருளுக்குரிய பெயர், அதன் சினைக்கு (உறுப்பிற்கு) வருதல். இதனை முதலாகுபெயர் என்பர்.

எ.டு: கடுத்தின்றான் - தெங்குதின்றான் எனவரும். கடு, தெங்கு என்பவை மரத்தின் பெயர். அவை தின்றான் என்னும் வினை காரணமாக அவற்றின் காய்களை உணர்த்தின. இது சினைப்பொருள், முதற்பொருளாக மயங்கிய மயக்கம்.

### 2. சினையிற் கூறும் முதலறிகிளவி :

ஒரு பொருளின் உறுப்பின் பெயர், அதன் முதற் பொருளுக்கு ஆகி வருவது, இதனைச் சினையாகு பெயர் என்பர்.

எ.டு: வெற்றிலை நட்டான் - பூ நட்டு வாழும் எனவரும். இலை, பூ என்பன நடுதல் என்னும் வினை காரணமாக, அவற்றின் கொடிக்கும், செடிக்கும் ஆகிவந்தன.

### 3. பிறந்தவழிக் கூறல் :

ஒரு பொருளை அது தோன்றிய (விளைந்த) இடத்தின் பெயரால் உணர்த்துவது. இதனை இட ஆகுபெயர் என்பர்.

**எ.டு:** குழிப்பாடி உடுத்தான் - காஞ்சிபுரம் உடுத்தான் எனவரும். குழிப்பாடி, காஞ்சிபுரம் என்னும் இடப்பெயர்கள், உடுத்தல் என்னும் வினை காரணமாக, அவ்வூர்களில் நெய்த ஆடைகளை உணர்த்தின. ஊர் கூடிற்று - ஊர் விழித்துக் கொண்டது என வருவனவும், இட ஆகுபெயர்கள். இஃது இடப்பெயர் பொருட் பெயராக மயங்கிய மயக்கம்.

**4. பண்பு கொள் பெயர் :**

நிறம் முதலாய பண்புகள், அவற்றையுடைய பொருளுக்கு ஆகிவருவது. இவற்றைப் பண்பாகுபெயர் என்பர்.

**எ.டு:** நீலஞ் சூடினாள், இனிப்புண்டான், வெள்ளை உடுத்தான் எனவரும். சூடினாள் என்னும் வினையால், நீலம் அந்நிறத்தையுடைய மலரையும், உண்டான் என்னும் வினையால், இனிப்பு என்னும் சுவைப்பெயர், அதனை உடைய தின்பண்டங்களையும், உடுத்தான் என்னும் வினையால், வெள்ளை என்பது வெள்ளாடையையும் உணர்த்தின. இப்பண்புப் பெயர்கள், நேரே ஓர் ஆகுபெயர்ப் பொருளை உணர்த்தாமல், முதற்கண் ஒன்றை உணர்த்திப்பின் ஒன்றை உணர்த்துதலும் உண்டு. இது பண்புப் பெயர் பொருட்பெயராக மயங்கிய மயக்கம்.

**எ.டு:** வேனில் முடிந்து கார் வந்தது என்னுமிடத்து, கார் என்னும் பண்புப் பெயர், கரியநிறமுடைய மேகத்திற்கு ஆயினமையின் ஆகுபெயர். கார் பொழிந்தது என்னுமிடத்துக் கரியநிறமுடைய மேகத்திற்காகிப் பின் அது பெய்யும் மழைக்காயினமையின் இருமடியாகுபெயர். கார் அறுத்தான் என்பது கருநிறம் மேகத்திற்காகிப் பின் அது பெய்யும் காலத்திற்காகிப் பின் அக்காலத்தில் அறுக்கப் பெறும் நெல்லிற்காயினமையின் மும்மடி ஆகுபெயர். இதனைக் கால ஆகுபெயர் என்றும் கூறுவர். இது காலப்பெயர் பொருட் பெயராக மயங்கிய மயக்கம்.

**5. இயன்றது மொழிதல் :**

ஒரு பொருள், எவ்வகை மூலப் பொருளால் ஆக்கம் பெற்றதோ, அப்பெயராற் கூறுதல் இவ்வாகுபெயர்.

**எ.டு:** பொன்பூண்டாள் - பட்டுடுத்தாள் எனவரும் பொன் - பட்டு என்பவை பூண்டாள் உடுத்தாள் என்னும் வினை

காரணமாக முறையே பொன்னாலான அணிகலனையும் பட்டாலாகிய உடைமையும் உணர்த்தின. இவ்வாகுபெயர் பிறவாறும் வரும்.

எ.டு: கீறல் ஆறிவிட்டது. வெட்டு ஆறவில்லை என்னுமிடத்து, ஆறியது ஆறவில்லை என்னும் வினைகள், கீறப்பெற்ற புண்ணையும் வெட்டப் பெற்ற காயத்தையும் உணர்த்தின. இவற்றைத் தொழிலாகு பெயர் என்றும் கூறுவர். மற்றும் யாழ் கேட்டான், குழல் கேட்டான் என்னுமிடத்து, அவற்றால் எழுப்பப்பெற்ற இசையை உணர்த்துமிடத்து ஆகுபெயராம். இசையை அவற்றின் காரியமாகக் கருதின் இயன்றது மொழிதலாகுபெயராம். இசையின் பிறப்பிடமாகக் கருதின் பிறந்தவழிக் கூறல் என்னும் ஆகுபெயராம். இஃது ஒருபொருளின் திரிபு மயக்கம்.

இனி, இயன்றது மொழிதல் என்றதனான், அதன் இனமாகிய இயல்வது மொழிதல் என்பதும் இதன்கண் அடங்கும். அஃதாவது, நெல்லைப் பெற்றவனைச் சோறு பெற்றான் என்பது, நெல் பின்னர்ச் சோறாக ஆக்கம் பெறுதலின் நெல் காரணமாயிற்று. இதனைச் சிலர் காரண ஆகுபெயர் என்பர். வடமொழி நோக்கில் இதனை உபசார வழக்கு என்றும் கூறுவர்.

## 6. இரு பெயரொட்டு :

ஆகுபெயர்ப் பொருளைத் தரும் சொல், பிறிதொரு சொல்லை அடையாகக் கொண்டுவருவது இருபெயரொட்டு எனப்படும். இதனை அடையடுத்த ஆகுபெயர் என்றும் கூறுவர். அடைமொழிகள் ஆகுபெயர்ப் பொருள்தரும் சொல்லைச் சிறப்பித்தும் விளக்கியும் வரும்.

எ.டு: பவளவாய் வந்தாள். திரிதாடி வந்தான். அறுகால் மொய்த்தது எனவரும். இப்பெயர்கள் பவளம் போன்ற வாய், திரிந்ததாடி, ஆறாகிய கால் எனத் தொகை மொழியாக அமைந்துள்ளமையின் இரு பெயரொட்டாம். இவை அவற்றையுடைய முதற் பொருள்களை உணர்த்தலின் ஆகுபெயர்களாம். இவற்றுள், வாய், தாடி, கால் என்னும் சினைகள், ஆகுபெயராய் முதல் பொருளை உணர்த்தின. பவளம், திரி, ஆறு என்பவை, அவற்றை விளக்கி அடையாக நின்றன.

சொற்பொருள் அமைப்பினையும், ஆகுபெயர் என்னும் இலக்கண நுண்மையினையும், தேறாத உரையாளர் சிலர்

பவளவாய், திரிதாடி எனவரும், அடையடுத்த ஆகுபெயர்களை அன்மொழித்தொகை என்று கூறுவர். அன்மொழித் தொகையுள் அமைந்துள்ள இருசொற்களிலும், அன்மொழிப் பொருளின் கூறுகள், யாதுமின்றிப் புறத்தொடர்பும் மரபும் பற்றி நிற்கும். அது அன்மொழித் தொகை. பவள வாய், திரிதாடி என்பவற்றுள், வாய், தாடி என்பன சினையிற் கூறும் முதலறி கிளவியாக நிற்றலின், அவை அன்மொழித் தொகையாகா. ஆகுபெரேயாம். பவளம், திரிபு என்பவை, அவற்றின் தன்மை சுட்டி நிற்கும். அடைகளாகும். அன்மொழித் தொகைக்கும், ஆகுபெயர்க்கும் உள்ள வேறுபாட்டை நன்குணர்ந்த பரிமேலழகர்,

> **"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
> **மாதர்கொல் மாலும் என் நெஞ்சு"** (குறள்.108)

என்னும் குறட்பாவின் உரைவிளக்கத்தில், **"கனங்குழை"** ஆகுபெயர் எனக் குறிப்புரை கூறிப்போந்தார்.

குழை = கூந்தல். குழை என்பது காதணியைக் குறிப்பின் அவ்வழி அன்மொழித் தொகையாகும்.

இனி இருபெயரொட்டு ஆகுபெயர்க்கண், பின்மொழி அடையாக நில்லாமல், அப்பொருளையே குறித்து நிற்பின், முன்மொழி மட்டும் ஆகுபெயராம்.

எ.டு: வகரக்கிளவி பெயர்ச் சொற்கிளவி எனவரும். இவற்றுள், கிளவி என்பவை ஆகுபெயர்ப் பொருளைத் தரும். பின்னொட்டாக நிற்கும் வகரம்பெயர்ச் சொல் என்பவை செம்பொருள் உணர்த்தும். ஆதலின், இவை போல்வனவற்றைப் பண்புத் தொகையாகக் கொள்வர் நூலோர்.

**7. வினைமுதல் உரைக்கும் கிளவி :**

ஒரு பொருள் அதனைப் படைத்த வினைமுதலின் (கருத்தாவின்) பெயரால் சுட்டப்படுமிடத்து, அது வினைமுதலாகு பெயர் எனப்படும். பின்னூலார் கருத்தாவாகு பெயர் என்பர்.

எ.டு: வள்ளுவரைக் கற்றான், கம்பரைப் பயின்றான் எனவரும். இவற்றுள் வள்ளுவர், கம்பர் என்னும் பெயர்கள். அவர்களால் இயற்றப் பெற்ற திருக்குறள் நூலையும், இராமாயண நூலையும் குறிக்கும். இது கருத்தா செயப்படு பொருளில் மயங்கிய மயக்கம் 'அனைமரபின' என்றது. இவ்வாறு அகத் தொடர்பும் புறத்தொடர்புமாக வரும் ஆகுபெயர்களைச் சுட்டும்.

எ.டு: திருவாய்மொழி ஓதினான், திருவாசகம் படித்தான் எனவரும். இவற்றுள் திரு என்னும் அடையடுத்த மொழி, வாசகம் என்பன, அவற்றாலான செய்யுட்களை உணர்த்துமிடத்து ஆகுபெயராம். திருவாய் மொழியை எடுத்து வந்தான், பெற்றுக்கொண்டான் என நூலை உணர்த்துமிடத்து, அன்மொழித் தொகைகளாகும். பிற விளக்கங்களைத் தொகை மொழி பற்றிய இலக்கணம் கூறும் வழிக் கண்டுகொள்க.

## அளவைகள் பற்றி வரும் ஆகுபெயர்கள்

அளவைகள் எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் என நால் வகையாக வரும். ஒப்பிட்டுரைத்தல் அளவையின்பாற்படும். அளவைப் பெயர்கள் யாவும், அளக்கப் பெற்ற பொருள் பற்றியே வருதலின், அவை ஆகுபெயர்களகவே வரும். எனினும் அவ்வளவைகளுள் எண்ணல் அளவை தவிர்ந்தவற்றைக் கருவிகளாகச் செய்து, அக்கருவிக்கு அவ்வளவைப் பெயர்களை இட்டு வழங்கப் படுதலின், இயற்பெயராயும் அமைவனவாயின. அதனான் தொல்காப்பியர்,

"அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே" (தொல்.சொல்.113)

என்று கூறினார். நிறையை எடுத்தலளவை என்றும் கூறுவர். அளவு என்பது ஏனைய முகத்தல் அளவையையும், நீட்டல் அளவையையும் குறிக்கும் எண்ணலளவை அவற்றை ஒட்டிக் கொள்ளப்படும்.

நிறுத்தல் அளவை : கஃசு, கழஞ்சு, தொடி, பலம், துலாம் எனவரும்.

நீட்டல் அளவை : விரல், சாண், முழம், கோல் எனவரும்.

முகத்தல் அளவை : உழக்கு, ஆழாக்கு, நாழி, படி, மரக்கால், குறுணி எனவரும்.

எண்ணல் அளவை : கால், அரை, ஒன்று, இரண்டு, பத்து, நூறு எனவரும்.

எ.டு: பொன் விற்பவனிடம், தாலிக்கு இரண்டு கழஞ்சு கொடு என்றால், இரண்டு கழஞ்சு எடையுடைய பொன்னை உணர்த்தும். ஆடை விற்பவனிடம், நாலு முழத்தில் ஒன்றும், இரண்டு முழத்தில் ஒன்றும் கொடு என்றால், நாலுமுழமுள்ள ஆடையையும், இரண்டு முழமுள்ள துண்டையும் உணர்த்தும்.

நெல் விற்பவனிடம், ஒரு மரக்கால் என்ன விலை எனின், ஒரு மரக்கால் அளவையுள்ள நெல்லைக் குறிக்கும். நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி - என்னுமிடத்து, நாலடியால் ஆகிய நூலையும், இரண்டடியாலாகிய திருக்குறளையும் உணர்த்தும்.

ஆகுபெயராய்ப் பிறபொருளுணர்த்தாமல், தம்மை உணர்த்துமிடத்து, இது கழஞ்சு படிக்கல், இது தொடிப்படிக்கல், இது மூங்கில் முழக்கோல், பிரம்பு முழக்கோல், இது செம்பு மரக்கால், இது இரும்பு மரக்கால் எனவரும். எண்ணல் அளவை ஆகுபெயராகவே வரும். வரிவடிவாக எழுதப்படுமிடத்து, இயற்பெயராகக் கொள்ளப்படும். 'உண்பது நாழி உடுப்பவை நான்கே' என்னுமிடத்து, நாழி என்பது நாழியளவுள்ள கூலத்தையும், நான்குமுழ அளவுள்ள ஆடையையும் குறித்து நின்றன.

கணக்காசிரியர் விரல் எட்டுக் கொண்டது சாண், சாண் இரண்டு கொண்டது முழம் என்னுமிடத்து, அவை அவ்வளவு நீளமுள்ள கருவிகளை உணர்த்தும். பூவிற்பவனிடம் எனக்கு ஒரு முழங்கொடு எனின், முழம் ஆகுபெயராய்ப் பூச் சரத்தை உணர்த்தும். கணக்காசிரியர் பத்துப் பத்துக் கொண்டது நூறு - பத்தினைப் பத்தாற் பெருக்கின் நூறாகும் என்னுமிடத்து, எண்கள் இயற்பொருள் தரும். நாலும் தெரிந்தவர் அவர் என்னுமிடத்து, நாலு என்பது அறம்பொருள் இன்பம் வீடு என்னும் பொருள்களை ஆகுபெயராய் உணர்த்தும்.

இனி ஒப்புப் பற்றியும் குறிப்புப் பற்றியும் பிறவாறும் ஆகுபெயர்கள் வரும்.

எ.டு: பாவை போல்வாளைப் பாவை வந்தாள் என்பதும், வஞ்சகத் தன்மையுடையானை நரி வந்தான் என்பதும், எப்பொழுதும் அணிந்து கொண்டிருப்பது பற்றிப் பட்டுருமாலை வந்தான் - வைர மோதிரம் வந்தான் என்பதும் - சிறப்பாகக் கற்றிருப்பது பற்றச் சிலம்பு வருகிறார், சிந்தாமணி வருகிறார் என்பதும், ஓவிய உருவங்களை அவ்வப் பொருளாகக் கூறுவதும் ஆகுபெயரின் பாற்படும்.

பொதுவாக ஆகு பெயர்களை இருவகைப் படுத்துக் கூறுவர். அவைதாம்,

"தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை" (தொல்.சொல்.111)

என்பர் தொல்காப்பியர். (1) கடுத்தின்றான், தெங்கு தின்றான் நீலம் சூடினாள் எனத் தற்கிழமைப் பொருளாக வருவன தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலாகும். (2) குழிப்பாடி உடுத்தான், யாழ் கேட்டான் எனப் பிறிதின் கிழமையாக வருவன ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாகும்.

இவற்றை உரையாசிரியன்மார் சிலர் வடமொழிக் கோட்பாடுகளை உட்கொண்டு விடாத ஆகுபெயர், விட்ட ஆகுபெயர், விட்டும் விடாத ஆகுபெயர் என்றும் வகுத்துக் கூறுவர்.

1) விடாத ஆகுபெயர் : புளிதின்றான், கருப்பு வந்தது. வெள்ளை (மாடு) போயிற்று எனவரும்.

2) விட்ட ஆகுபெயர் : காஞ்சிபுரம் உடுத்தான், ஊர் சிரித்தது எனவரும்.

3) விட்டும் விடாத ஆகுபெயர் : பகலவன் இருளை விழுங்கி பகலைக் கக்கினான் எனவரும். வடமொழியாளர் இவற்றை 'இலக்கணை' என்பர். குறிப்பு மொழி இலக்கணம் கூறிய வழி இவை விளக்கப் பெற்றன. ஆண்டுக் கண்டு கொள்க.

## ஆகுபெயர்க்கும் வேற்றுமைக்கும் உள்ள தொடர்பு

மேற்கூறியாங்கு இருவகையாக வரும் ஆகுபெயர்கள், செயப்படு பொருள் முதலாய வேற்றுமைகளின் தொடர்பினால் வருமாதலின், இன்ன இன்ன வேற்றுமைத் தொடர்பான இப்பெயர் ஆகுபெயராயிற்று எனப்புரிந்து கொள்ளுதல் வேண்டும். இன்றேல் அவை தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணி வந்தனவா, ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டி வந்தனவா என்பது புலப்படாது.

ஊன்றி உணருங்கால் இரண்டாம் வேற்றுமையும், ஆறாம் வேற்றுமையும் தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணிவரும். ஏழாம் வேற்றுமை ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டிவரும். மூன்றாம் வேற்றுமை இருநிலைமைத்தாயும் வரும்.

எ.டு: காவி உடுத்தான் (காவிநிற ஆடை) என்னும் பண்பாகுபெயர், காவி தோய்ந்த ஆடையை உடுத்தான் என இரண்டாம் வேற்றுமை பற்றி வந்தது. தம்மொடு சிவணி வந்தது.

கடுத்தின்றான் என்பது (கடுக்காயை) கடுவினது காயைத் தின்றான் என ஆறாம் வேற்றுமை பற்றி வந்தது. தம்மொடு சிவணி வந்தது.

குழிப்பாடி உடுத்தான் என்பது, குழிப்பாடி என்னும் ஊரின் கண், நெய்து வந்த ஆடையை உடுத்தான் என ஏழாம் வேற்றுமை பற்றி வந்தது. இது பிறிது பொருள் சுட்டியது. பொன் அணிந்தான் மூன்றாம் வேற்றுமை பற்றித் தம்மொடு சிவணிவந்தது. இஃதொரு வாள் வெட்டு என்பது, வாளால் வெட்டப் பெற்ற புண்ணைக் குறித்தலான் பிறிது பொருள் சுட்டி வந்தது.

நான்காம் வேற்றுமை பற்றியும் ஐந்தாம் வேற்றுமை பற்றியும் ஆகுபெயர்கள் அரிதாக வரும் ஆதலின் தொல்காப்பியம் ஆகுபெயர்களை "வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல்.சொல்.112) எனக் கூறுகின்றது.

## நன்னூல்

நன்னூலாசிரியர் ஆகுபெயரைக் குறிப்பிற் பொருள்தரும் சொல் வகையுள் ஒன்றாக வைத்து அதன் இலக்கணத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்.

*"பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி*
*கருவி காரியம் கருத்தன் ஆதியுள்*
*ஒன்றன் பெயரால் அதற்கியை பிறிதைத்*
*தொன்முறை உரைப்பன ஆகு பெயரே"* (நன்.290)

என்றார்.

பொருள் முதல் ஆறு என்றது : பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் பற்றி வரும் பெயர்கள், தானி என்பது (ஸ்தானம்) இடத்தில் உள்ள பொருள், ஆதி என்றதனால் உவம அடிப்படையில் வருவனவும் கொள்க என்பர் உரையாளர்.

எடுத்துக்காட்டுக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருளாகுபெயர் | - | பொன் அணிந்தான், பட்டுடுத்தான். |
| 2. | இடவாகுபெயர் | - | ஊர் சிரித்தது, காஞ்சிபுரம் உடுத்தான் |
| 3. | கால ஆகுபெயர் | - | கார் விளைந்தது, கார்த்திகை சூடினார். |

| | | | |
|---|---|---|---|
| 4. | சினை ஆகுபெயர் | - | தாமரை பூத்தது, வெற்றிலை நட்டான். |
| 5. | பண்பாகு பெயர் | - | நீலம் சூடினாள், வெள்ளை உடுத்தான். |
| 6. | தொழிலாகு பெயர் | - | வற்றல் உண்டான், துவையல் உண்டான். |
| 7. | அளவை : எண். | - | பதிற்றுப்பத்துப் படித்தான், குறுந்தொகை கற்றான். |
| | அளவை : முகத்தல் | - | கலம் கூலி பெற்றான், நாலுழக்குப் பெற்றான். |
| | அளவை : எடுத்தல் | - | ஒரு பலம் வாங்கினான். துலாம் என்ன விலை. |
| | அளவை : நீட்டல் | - | நான்கு முழம் உடுத்தான், மேலைத்தடி விளைந்தது. |
| 8. | சொல்லாகுபெயர் | - | பழமொழி நானூறு படித்தான், நூற்கு உரை செய்தான். |
| 9. | தானியாகு பெயர் | - | விளக்கு முரிந்தது (விளக்குத்தண்டு), நெல்லறுத்தான். |
| 10. | கருவியாகுபெயர் | - | திருவாசகம் படித்தான், யாப்புப் பயின்றான். |
| 11. | காரிய ஆகுபெயர் | - | அரிசி பெற்றவனை - சோறு பெற்றான் என்பது. |
| 12. | கருத்தாவாகு பெயர் | - | கம்பனைக் கற்றான், வள்ளுவரைப் பயின்றான். |
| 13. | உவம ஆகுபெயர் | - | பாவை வந்தாள். காளை வந்தான் |

எனவரும்.

இவையெல்லாம் தொல்காப்பியம் கூறும் முதலிற்றோன்றும் சினையறி கிளவி முதலிய நூற்பாவினுள்ளும் தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணல், ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டல் என்னும் வகையுள்ளும் அடங்குமாறறிக.

## வினைச் சொல் இயல்

வினைச் சொற்களின் அமைப்பு இலக்கணம் பற்றித் தமிழ் இலக்கண நூலாரின், வினைச் சொற் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்குமுன், மொழியின் அடிப்படைச் சொல்லாக்க நெறிமரபுகள் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல் நலம் பயக்குமாதலின், அவைபற்றிச் சில குறிப்புக்கள் மட்டும் ஈண்டு தரப் பெறுகின்றன.

உலகம், ஐம்பெரும் பூதங்கள், அவற்றின் தன் மாத்திரைகள், அவற்றானாகிய உலக உயிர்ப் பொருள், உயிரில் பொருள்கள், நாள்மீன்கள், கோள்மீன்கள் ஆகிய பருப்பொருள்களும் நுண் பொருள்களும் யாவும் மக்களால் படைக்கப் பெற்றவை அல்ல. காணுங்கால் பலகோடி உயிரினங்களுள், மக்களும் ஓர் உயிரினம். அளவை நூல் முறையிற் காணின், அண்ட கோளங்கள் ஒரு கடல் எனக் கொண்டால், மக்களினம் அக்கடலினுள் ஒரு துளியாகும்.

எனினும், பிரபஞ்சத்தின் பேராற்றற் கூறுகள் யாவும் ஒருங்கமைந்த உயிரினம் மக்களினம். காலந்தொறும் அறிவாற்றலால் வளர்ந்து, இயற்கைப் பொருள்களைக் கொண்டு, பல்வேறு செயற்கைப் பொருள்களைப் படைத்துக் கொண்டு, அவற்றால், இன்பதுன்பங்களை எய்திவரும் இனம் மக்களினம்.

மக்கள் படைப்பினுள் தலையாயதும், ஈடில்லாததும், இயற்கை ஓசை ஒலிகளின் கூறுகளைக் கொண்டு, கருத்துணர்த்தும் சொற்களை (மொழியை)ப் படைத்துக் கொண்டதாகும். சொற்கள் என்றும் நிலைபேறுடையவை.

சொல் வடிவமாகத் திகழும் மொழியில் வழங்கப்பெறும் சொற்களை, அவற்றின் பொருள் அமைப்பை நோக்கித் தமிழ் நூலார், பெயர், வினை, இடை உரி என நான்கு கூறுகளாகப் பகுத்து, அவற்றின் செயற்பாடுகளை ஆராய்ந்து, இலக்கணம்

வரைந்துள்ளனர். அவற்றுள், பெயர்ச் சொற்கள் என்பவை இருதிணையாக அமைந்துள்ள எல்லாப் பொருள்களையும் உணர்த்தும் குறியீடுகளாகும். பொருள்மேல் குறியீடாகப் பெய்யப் பெறுதலின் (பெய்+அர்) பெயர் எனப்பட்டது. வட நூலார் நாமம் என்பர். பெயர்ப் பொருள்கள் தம்மாலும், பிறவற்றாலும் எய்தும் நிகழ்வுகள் செயல்கள் பற்றிக் காலந்தோன்ற விளக்குவன வினைச் சொற்களாகும். பெயர்ச் சொல் வினைச் சொற்களின் உறுப்பாக, அவற்றொடு இணைந்தும், சார்ந்தும், அவற்றின், திணைபால், இடம், காலம், எண் பல்வேறு குறிப்புப் பொருள்களை உணர்த்துவன இடைச் சொற்களாகும். இம்மூவகைச் சொற்களும் ஆக்கம் பெற அடிமணையாகவும், அவற்றின் பொருளைச் சிறப்பித்தும், பிறவாறும் வருவன உரிச் சொற்களாகும். பிறவிளக்கங்கள் அவ்வத்தலைப்புக்களில் கூறப்படும்.

அசைவும் இயக்கமுமின்றிப் பொருள் விளைவு நேராதலின், உலகைச் செயற்படுத்தும் பேராற்றலாகிய, பரம்பொருளைச் சான்றோர்கள் கடவுள் (கடவும் ஆற்றல்) என்றும், இயவுள் (இயக்கும் ஆற்றல்) என்றும், ஊழ்விதியை வினையென்றும், பெயரிட்டு வழங்குவாராயினர்.

## வினையும் - வினைச் சொற்களும்

வினை என்பது அதிர்வு, அசைவு, புடை பெயர்வு, இயக்கம் முதலியவற்றை உணர்த்தும் குறியீட்டுச் சொல்லாகும். இது 'விண்' என்னும் துடிப்புக் குறிப்பு உணர்த்தும், உரிச்சொல்லைச் சிறப்புப் பொருள் தரும் இலக்கணக் குறியீட்டுச் சொல்லாக ஆக்கம் செய்தல் வேண்டி, உடைமைப் பொருள் விகுதியாக ஐகாரத்தைச் சேர்த்து, 'ண்'கர ஒற்றை 'ன'கர ஒற்றாக்கி வினை என ஆக்கப் பெற்றது. இதற்குக் காலக்கிளவி என்றும் பெயர்.

வினை, செயல், தொழில், கருமம் என்பவை ஒத்த பொருளில் வரும் இலக்கணக் குறியீட்டுச் சொற்களாகும். வினை என்பது புடைபெயர்ச்சி நிலையை உணர்த்தும் நட, வா, எடு, விடு, உண், தின், செல், சொல், பார், சேர், வாழ், கேள் எனவருவன முதனிலைத் தொழிற் சொற்களை உணர்த்தும். இவற்றை, எடுத்தலோசையாற் கூறுமிடத்து முதனிலை ஏவல் வினை எனப்படும். படுத்தலோசையாற் கூறுமிடத்து, முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும். இவை நடத்தல், செல்லல், வருகை, செய்தி என விகுதி பெற்றமையின், தொழிற்பெயர் எனப்படும். வினைப்பெயர் என்றும் கூறுவர்.

வினை முதனிலைச் சொற்கள் காலம் உணர்த்தும் இடைச் சொற்களோடு கூடி, ஒருவினை முதலின் (கருத்தாவின்) செயலாகவரின் வினைச் சொல் எனப்படும். பாலிடம் காட்டும் ஈறுகளொடு கூடிநிற்றலின் வினைமுற்று அல்லது முற்றுவினை எனப்படும். ஈறு குன்றிவிடின் எச்சவினை எனப்படும். மூன்று காலங்களுள் ஒரு காலத்தைத் தெளிவாக உணர்த்தும் கால இடைநிலை, விகுதிகளோடு கூடி நிற்கும் வினைச் சொற்கள் தெரிநிலை வினை எனப்படும். தெரிநிலை வினைப்பகுதிகள், தொழில் முதனிலைச் சொற்களாகவே இருக்கும்.

ஒரு பெயரை, அஃதாவது எழுவாயாக அமைந்த சொல்லுக்கு முடிவு நிலையாக, பயனிலையாக வந்து முடிக்கும் சொற்களும் வினை எனப்படும். அவை கால இடைநிலைகளைப் பெறாமல், மூன்று காலங்களுக்கும் பொதுவாய், தொடர் மொழிப் பொருள்நிலைக் கேற்ப, ஒரு காலத்திற்குரிய ஆக்கவினையொடு பொருந்தி வருமிடத்து, வினைத் தன்மை எய்தலின் இவற்றைக் குறிப்பு வினை என்று கூறுவர். குறிப்பு வினைக் கோட்பாடு தமிழ் மொழிக்கே உரியதொரு சிறப்பானதாகும். (பின்னர் விரிவாக விளக்கப்படும்)

## வினைச் சொல்

ஓரெழுத்து ஈரெழுத்துக்களால் உருவாகி நிரம்பியும் நிரம்பாமலும் நிற்கும் உரிச்சொல் முதனிலைகள், காலமுணர்த்தும் இடைச் சொற்களைப் பெற்றும் பெறாமலும், பாலிடங்காட்டும் விகுதி இடைச் சொல்லொடு கூடிக் காலத்தை வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ உணர்த்தி நிற்றலும், எவ்வாற்றானும் எழுவாய், செயப்படு பொருள் முதலிய வேற்றுமை நிலை எய்தாமல், பயனிலையாக நிற்றலும் வினைச் சொல்லின் பொது இலக்கணமாகும். இதனைத் தொல்காப்பியர்,

> "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" (தொல்.சொல்.195)

என்பர். வேற்றுமை மயங்கியலுள் வேற்றுமை மயங்குதற்குக் காரணம் தொழிற் சொற்களின் அடிப்படை உறுப்புக்களே என விளக்குமிடத்து,

> "வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி என்றா
> இன்னதற்கு இதுபய னாக என்னும்
> அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில்முத னிலையே" (தொல்.சொல்.108)

என்று கூறியவழி, வினை (செயல்) என்பது வினைச் சொல்லின் முதலாவது உறுப்பு என்பதும், செய்வது என்பது (கருத்தா) அதன் இறுதி உறுப்பெனபதும் உணர்த்தினார். வேற்றுமையியலுள், பயனிலை பற்றிக் கூறிய வழி, வினை நிலை உரைத்தல் என்றும் கூறினார். அவ்வாற்றான், அது பயனிலையாக நிற்கும் என்னும் இலக்கணம் பெறப் பட்டமையான், எஞ்சிய குணம் பற்றிய இயல்பினை விதந்து, "வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது" என்றும், குறிப்பு வினைக்குக் காலங்காட்டும் உறுப்பு இன்மையின், அதுகுறிப்பாற் காலம் உணர்த்தலின், "நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" என்றும் கூறினார்.

எனவே, ஒரு முதனிலைச் சொல் காலம், பால், இடம் காட்டும் உறுப்புக்களோடு, பயனிலையாக நிற்றலும். வேற்றுமை கொள்ளாமையும், வினைச் சொல்லின் இலக்கணம் என்பது நன்கு புலனாகும்.

## வினையும் காலங்களும்

காலம் என்பது மனத்தான் உணரப் படுவதோர் அருவப் பொருளாகும். கால் என்னும் உறுப்புப் புடைபெயர்ந்து கலித்துச் செல்வதாகலின், இடையறாமல் நடந்து சென்று கொண்டிருக்கும் இவ்வருவப் பொருள் காலம் எனப்பட்டது. கால் + அம் = காலம். ஈண்டு அம் - பண்புணர்த்தும் விகுதியாகும். பொழுது என்பது பொருளால் வேறுபட்டதாயினும் காலம் என்பதற்குரிய மாற்றுச் சொல்லாக இலக்கண நூல்களில் ஆளப்பெறும்.

காலத்தைக் கணித்துரைக்கக் கருவியாக உள்ளவை புவியும், ஞாயிறு முதலில் கோள்களும், விண்மீன்களுமாகும். அவற்றின் இயக்கங்களை அளந்து கூறுமிடத்து, அவ்வளவைகளே காலமாக அமைகின்றன. புவி சுழலுங்கால் கதிரவன் ஒளிபடும் நேரம் பகல் எனப்படும். பகலின் தொடக்க நேரம் காலை எனப்படும். மறையும் நேரம் மாலை எனப்படும். இடைப்பட்ட நேரம் உருமம் எனப்படும். உருமத்தை மையமாக வைத்துப் பேசுமிடத்துக் காலை இறந்த காலம் மாலை எதிர்காலம். நண்பகல் நிகழ்காலம். ஒரு நாளை மையமாக வைத்துப் பேசுமிடத்து நேற்று என்பது இறந்த காலம், நாளை என்பது எதிர்காலம் இன்று என்பது நிகழ்காலம்.

மொழி இலக்கணத்திற் காலம் என்பது ஓர் எழுவாய்ப் பொருளின் செயலை, இயக்கத்தை, நிலைமையை, மையமாகக் கொண்டதாகும்.

உண்ணல் என்பது ஒரு செயல், அதனை ஒருவினை முதல் (கருத்தா) புரியுமாயின் அது வினை. அவ்வினை தொடங்காத நிலை எதிர்காலம். தொடங்கிப் புரிகின்ற நிலை நிகழ்காலம், அது முற்றுப் பெற்ற பின்னைய நிலை இறந்தகாலம். அவ்வினைமுதல் ஓர் ஆடவனாயின் அது உண்பான் - உண்கின்றான் - உண்டான் என வரும். உண்ணும் என்பது பெயரெச்சமாக இருப்பின் நிகழ்காலம். வினை முற்றாக நிற்பின் எதிர்காலம்.

காலம் என்பது இடையறாது நடந்து கொண்டே இருத்தலின், இறந்தகாலம் எதிர்காலம் என இரண்டே எனினும், வினையின் அடிப்படையில் நோக்கு மிடத்து, ஒரு தொழில் தொடங்கிய பின் அது முடியும் வரை நிகழ் காலமாக அமையுமாதலின் காலத்தை மூன்றாக வகுத்தனர்.

வினைச் சொல் என்பது உணர்த்த எடுத்துக் கொண்டதொரு பொருளின் நிலைமையை உணர்த்தும் குறியீடாகலின், அது கருத்தினை உள்ளடக்கிக் கொண்டு நிற்கும். அதனான் சொல்லின் வரி வடிவத்தை மட்டும் நோக்காமல் பொருளையும் இணைத்து நோக்கி இலக்கணம் கூறிச் சென்றனர். அதனான் காலத்தைக் காட்டும் குறியீட்டு உறுப்புக்கள் வெளிப்படையாக நிற்றல் வேண்டும் என்று விதிக்காமல், பொருள்நிலையில் உணர்ந்து கொள்ளுமாறு இலக்கணம் கூறிச் சென்றனர்.

அம்முறையில் தமிழில் தெரிநிலை வினை, குறிப்புவினை என்னும் வகைகள் அமைந்துள்ளன. குறிப்புவினையுள் காலங்காட்டும் இடைச் சொல் இன்மையான், வடநூலார் குறிப்புவினை அமைப்பில் பொருள்தரும் சொற்களைத் "தத்திதாந்தம்" என வகைப்படுத்தினர்.

தமிழ் நூலார், தெரிநிலை வினைச் சொற்களின்கண். காலம் தெளிவாகப் புலப்படும் என்று கூறினரேயன்றிக் காலங்காட்டும் உறுப்புக்கள் வெளிப்படையாக நிற்கும் எனக் கூறினாரல்லர் தெரிநிலை வினையுள் உண்டான், உண்கிறான், உண்பான்

எனவரும் சொற்களில், இடைநிலை வெளிப்படையாகவும் கூறுதும், காண்கும், உண்ணும் எனவரும் சொற்களில், காலம் காட்டும் உறுப்பு உள்ளடங்கியும் நிற்றலானும், எதிர்மறை வினைக்கண் காலங்காட்டும் உறுப்புச்சொல் இன்றியே காலமுணர்த்தலானும், தொன்னூலார் அவற்றை விதந்தெடுத்துக் கூறாமல் பொருள் நோக்கிக் கொள்ள வைத்தனர். அதனான், தொல்காப்பியர் "வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்" என இடைச் சொல் பற்றிக் கூறிச் சென்றார்.

பவணந்தி முனிவர், அவற்றை ஒருவாறு வகைப்படுத்துக் கூறுவார் எனினும், காண்கம், வம்மோ என்றாற்போல வரும் சொற்களில், கால இடைநிலைகளை உணருமாறு தெளிவுபடுத்தினாரில்லை. காலங் காட்டும் இடைநிலைகள், விகுதிகள் பற்றி எழுத்துப் படலத்துள் விளக்கப் பெற்றன. ஆண்டுக் கண்டுகொள்க.

## வடநூலார் கூறும் காலம் பற்றிய குறிப்பு

வடநூலார், வினைச் சொற்களில் அமையும் காலத்தைப் பத்துக் கூறாகவும், நான்கு வகையாகவும் கூறுவர். வினைச் சொல்லின் அடியாகிய தாதுக்கள்பால், இடம், எண் காட்டும் "திங்" என்னும் ஒட்டுக்களுடன், (விகுதிகள்) காலமுணர்த்தும் ஒட்டுக்கள் சேர்ந்து வருமென்பார். காலமுணர்த்தும் உறுப்பினை வடநூலார், "லகாரங்கள்" என்பர். அஃதாவது, அவையாவும் லகர மெய்யில் தொடங்குதலின் லகாரங்கள் எனப்பட்டன. அவையாவன,

லங், லிட், லங், லட், லுட், ல்லுட், லோட், லிங், ல்லுங் என்பனவாகும். காலவகைகளை பூத (இறந்த காலம்) வர்த்தமான (நிகழ் காலம்) பவிஷ்ய (எதிர் காலம்) பொது எனக் கூறுவர். பொது என்பது முக்காலத்திற்கும் பொதுவாக வருதல். அவை ஏவல், வியங்கோள், வாழ்த்தல், நிலைப்பாடு என நான்காக வருமென்பார்.

**பூத - (இறந்த காலம்)**

1. வரையிலா இறந்த காலம் : பூத - லுங்
2. இன்றலா இறந்த காலம் : அனத்யதன பூத - லங்
3. செய்மை இறந்த காலம் : பரோக்ஷ பூத - லட்

**பவிஷ்ய (எதிர்காலம்)**

1. எதிர்காலம் I பவிஷ்ய - லுட்
2. எதிர்காலம் II அனத்யதன பவிஷ்ய - ல்லுட்

**வர்த்தமான (நிகழ்காலம்)**

1. நிகழ்காலம் - வர்த்தமான - லட்

**பொது**

1. ஆஞ்ஞா - விதித்தல் - ஏவல் - லோட்
2. விதி - வியங்கோள் - விதி - லிங்
3. ஆசீர் - வாழ்த்தல் - ஆசீர் - லிங்
4. சங்கேதம் - நிலைப்பாடு - ல்லுங்

இவையன்றி வேதமொழியில் "லேட்" என ஒரு காலம் உள்ளது என்பர்.

இனி "தமிழ் மொழியின் வரலாறு" என ஒரு நூலை எழுதிய பரிதிமாற் கலைஞர் என்னும் சூரியநாராயண சாத்திரியார் ஆங்கில மொழியைக் கருத்திற் கொண்டு இறந்த காலத்தில் மூன்று வகையும் நிகழ்காலத்தில் மூன்று வகையும் கொள்ளலாமென்று கூறிப் பின் வருமாறு எடுத்துக் காட்டுத் தருவர்.

**இறந்த காலம்**

1. இறப்பில் இறப்பு - உ.ம் : செய்யா நின்றான்
2. இறப்பில் நிகழ்வு - உ.ம் : செய்திருக்கிறான்.
3. இறப்பில் எதிர்வு - உ.ம் : செய்திருப்பான்.

**நிகழ்காலம்**

1. நிகழ்வில் இறப்பு - உ.ம் : செய்யாநின்றான்
2. நிகழ்வில் நிகழ்வு - உ.ம் : செய்யா நிற்கிறான்
3. நிகழ்வில் எதிர்வு - உ.ம் : செய்யா நிற்பான்

எதிர்காலம் ஒன்றே எனக் கூறிச் செய்வான் என உதாரணங் காட்டுவார்.

இவற்றுள், செய்திருந்தான் முதலிய மூன்றனுள், 'செய்து' என்னும் எச்சத்தை ஒரு தனிச் சொல்லாகக் கொள்ளின், அது வேறொரு செயப்படு பொருளையுடைய சொல்லாகும். செய்தலை வினையாகக் கொள்ளின், இருத்தல் என்பது எழுந்திருந்தான், பார்த்திருந்தான் என்பவற்றுள் உள்ளமைபோலத் துணை வினையாகும். அவை செய்தான். செய்கிறான், செய்வான் என்னும் பொருள் தருதலன்றி இரண்டு பொருள் தாரா.

அவ்வாறே, செய்யா நின்றான் முதலியவற்றுள் உள்ள செய்யா என்பது இறந்த கால வாய்பாட்டு வினையெச்சப் பொருள் தருவதன்றி, நிகழ்காலப் பொருள் தாராது. அவற்றிற்குரிய தெளிவான பொருள் செய்து நின்றான், செய்து நிற்கிறான், செய்துநிற்பான் என்பனவாகும். எனவே, முடிந்த பொருள் யாதானும் ஒரு காலத்தை உணர்த்தலன்றி, இரண்டு காலங்களை ஒருங்குணர்த்தா என அறிக.

இன்னோரன்ன எச்சத் தொடர்களைப் பகுதிச் சொல்லாக்குமிடத்து, அவை செய்திரு, செய்யாநில் என அமைந்து ஒரு சொல் நீர்மையவாக அமையும். தமிழ் நூலார், பொருளடிப்படையில் இலக்கணம் கூறுவதை உணராமல், சொல்லடிப் படையில் நோக்கியதன் விளைவே, இத்தடுமாற்றத்திற்குக் காரணமாகும்.

ஒரு தொடரின் கண் அமையும் கருத்துக்களில், பல்வேறு வினை நிகழ்ச்சிகள் வரும். அவையெல்லாம் இறுதியில் முடியும் வினைமுற்றொடு முடிதலின், வினைமுற்றுக்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் காலங்களை வரைந்துணர்த்தும். ஆதலின் தொல்காப்பியர்,

"காலந் தாமே மூன்றென மொழிப" (தொல்.சொல்.196)

என்றும்

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்..." (தொல்.சொல்.421)

என்றும் கூறுகின்றார். இதனானும் தமிழ்நூற் கொள்கை வேறு, வடநூற் கொள்கை வேறு என்பது தெளியப்படும்.

### வினைச்சொல் வகை

தெரிநிலையும் குறிப்புமாக முற்றாகவும், எச்சமாகவும் வரும் எல்லா வினைச் சொற்களும், உயர்திணைக்குரிய வினைகள், அஃறிணைக்குரிய வினைகள், அவ்விரு திணையின் கண்ணும் விரவும் பொது வினைகள் என முத்திறப்படும்.

அவற்றுள், உயர்திணை வினைகள், இடம் பற்றித் தன்மை வினை, படர்க்கை வினை எனவும், பால்பற்றி ஆடூஉவினை, மகடூஉவினை, பல்லோர் வினை எனவும் (பாலே எண்களையும் காட்டும்) வகைப்படும். இவற்றுள், தன்மை வினை, தனித்தன்மை - உளப்பாட்டுத் தன்மை என இரு திறப்படும். தனித்தன்மை எண் காட்டுவதன்றி ஆடூஉ, மகடூஉ என்னும் பால் காட்டாது. பாற் பொதுவாக நிற்கும். விதிவினையாயும் மறைவினையாயும் வரும்.

அஃறிணை வினைகள் படர்க்கையாகவே வரும். இடைக் காலத்தில் இம்மரபு பிறழ்ந்தமையின் பவணந்தி முனிவர், தன்மை வினையை அஃறிணைக் கண்ணும் வருமெனக் கொண்டார். (விளக்கம் பின்னர்க் கூறப்பெறும்) அஃறிணை வினைகள் ஆண்பெண் என்னும் பால்காட்டா. ஒருமை பன்மை என்னும் பால்களை மட்டுமே காட்டும். விதிவினையாயும் மறைவினையாயும் வரும். பொதுவினை அல்லது விரவு வினைகள் இருதிணைக் கண்ணும் வரும். வினைச் சொல்லின் வகை பற்றித் தொல்காப்பியர்,

> "குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
> காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
> உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
> ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
> அம்மூ வுருபின தோன்ற லாறே" (தொல்.சொல்.198)

என்பர்.

> உண்டனர், உண்கின்றனர், உண்பர் எனவும்
> உண்டான், உண்ணாநின்றான், உண்பான் எனவும்
> உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள் எனவும்
> உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும்

வரும்.

இவற்றுள், எதிர்காலத்தில் வகர இடைநிலை பெறுமிடத்துச் சிறுபான்மை உகரமும் குகரமும் சாரியையாக வரும்.

எ.டு:

உண்ணுவன், உண்குவன், உண்ணுவான், உண்குவான் எனவரும்
உண்ணுவர், உண்குவர், உண்ணுவார், உண்குவார் எனவரும்
உண்ணுவள், உண்குவள், உண்ணுவாள், உண்குவாள் எனவரும்

ப : இயல்பாயும், உகரகுகரங்களைச் சாரியையாகப் பெற்றும் வரும்

எ.டு: உண்ப, உண்ணுப, உண்குப

மார் : பாடன்மார் எமர் (எமர் பாடுதலைச் செய்யார் - பெயரொடு முடிந்தது). கொண்மார் வந்தார் என வினையொடு முடிந்தது (கொள்வார் என்பது பொருள்)

இவ் இருபத்து மூன்று ஈறுகளுள் ஆம், ஆன், ஆள், ஆர் என்னும் விகுதிகளின் ஆகாரம் செய்யுள் வழக்கில் ஓகாரமாகத் திரிந்துவரும்.

எ.டு: உண்போம், உண்போன், உண்போள், உண்போர்
செல்வோம், செல்வோன், செல்வோள், செல்வோர்
எனவரும்.

## தெரிநிலை வினையாலணையும் பெயர்

ஒரு கருத்தாவின் வினை காரணமாக, அவ்வினையே காரணப் பெயராக வருவது. வினையாலணையும் பெயர் எனப்படும். இருதிணைக் கண்ணும் படர்க்கை வினைகளே, வினையாலணையும் பெயராக அமையும். வருங்கால் ஈறு திரியாமலும், திரிந்தும் வரும்.

எ.டு: உண்டான், உண்டாள், உண்டார், உண்டது, உண்டன எனவும்,
உண்டவன், உண்டவள், உண்டவர், உண்டது, உண்டவை எனவும் வரும்.

பிறிதொரு பயனிலையொடு முடியும். பெரும் பான்மையும் இறந்தகாலச் சொல்லே பெயராக வரும். சிறுபான்மை உண்கின்றவன் வருவான், உண்பவள் வருவாள் எனவரும்.

தெரிநிலைக்குரிய இருபத்து மூன்று விகுதிகளுள், அம், ஆம், எம், ஏம், என், ஏன், அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் பன்னிரண்டு ஈறுகளை, வினைக்குறிப்பு முற்று வினைகள் பெறும். இவைகளே, குறிப்பாகக் காலத்தையும், பாலையும், இடத்தையும் உணர்த்தும்.

குறிப்பு வினைமுற்றுக்கள், அறுவகைப் பெயர் முதனிலைகளால் ஆக்கம் பெறுதலோடு, அன்மை, இன்மை, உண்மை, வன்மை, நன்மை, உடைமை, முறைமை முதலிய தொழிற் பண்புணர்த்தும் சொற்களின் முதனிலைகளாலும் ஆக்கம் பெறும்.

அம், ஆம் முதலிய பன்னிரண்டும் பெயர் முதனிலைகளோடும், அன்மை, இன்மை முதலாய தொழிற் பண்புகளின் முதனிலைகளோடும் கூடி, ஓர் எழுவாய்க்குப் பயனிலையாக நிற்குமிடத்து, அப்பெயர்ப் பொருள்களை உரிமை, உடைமை, இடம் முதலியவாக, வேற்றுமை செய்து காலத்தையும் குறிப்பாக உணர்த்தும். குறிப்புவினை இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

> "அதுச்சொல் வேற்றுமை உடைமையானும்
> கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்
> ஒப்பினானும் பண்பி னானும் என்று
> அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்" (தொல்.சொல்.210)

என்றும்,

> "அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
> அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
> என்ன கிளவியும் குறிப்பே காலம்"
>
> (தொல்.சொல்.210)

என்றும் கூறுகின்றது.

விளக்கம் : 'பொன்' என்பது அறுவகைப் பெயருள் பொருட்பெயராகும். இது திணை, பால், இடம் காட்டும் விகுதிகளுள் ஒன்றைப் பெற்று, ஒரு பொருளுக்குப் பெயராகவும், ஒரு பெயரை முடிக்க வினையாகவும் வரும். அஃதாவது, 'அன்' என்னும் விகுதியைப் பெற்ற வழி, பொன் + அன் = பொன்னன் எனவரும். இஃது, ஓர் ஆடவனின் இடுபெயராக அமையின் பொன்னன் வந்தான், பொன்னனைக் கண்டேன் என வேற்றுமைப் படுதற்குரியதாக நிற்கும் ஒருசொல், எழுவாயாகப் (பெயராக) நிற்குமிடத்துக் காலக்குறிப்பு யாதுமின்றி நிற்கும்.

இச்சொல், இவன் பொன்னன், அரசனருளால் சாத்தன் பொன்னன் என வருமிடத்துப் பொன்னன், பயனிலையாய் முடிக்குஞ் சொல்லாய் நிற்றலின் வினைமுற்றாகும். காலத்தைத் தெளிவாகக் காட்டாமல், சாத்தன் நெருநற் பொன்னன், இன்று பொன்னனன், நாளை பொன்னன் என்றோ, சாத்தன் பொன்னாயினான், பொன்னனாகின்றான், பொன்னனாவான் என்றோ விரியுமாதலின் குறிப்பு வினை முற்றென அமைந்தது.

சாத்தன் பொன்னன் என்னுமிடத்துச் சாத்தன் பொன்னையுடையவனாக இருக்கிறான் என்பது பொருளாயின், அஃது ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருள் பற்றி அமையும். பொன்னை ஒத்த நிறம் உடையவனாக இருக்கிறான் எனின்,

இரண்டாம் வேற்றுமை ஒப்புப் பொருள் பற்றி அமையும். இப்பன்னிரண்டு ஈறுகளும் இயல்பாகவும் வேண்டுமிடத்துச் சாரியை பெற்றும் ஆக்கம் பெறும்.

**எ.டு:** பொன்னன் - சாரியையின்றி வந்தது. பொன்னினன் சாரியையுடன் வந்தது. கச்சினன் கழலினன் என்பவை சாரியை பெற்றே வரும்.

ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருள் விரியுமிடத்துக் குறிப்பு வினை கொண்டே முடியுமாதலின், அதனை விதந்து கூறினார் ஆசிரியர். சாத்தனது ஆடை, சாத்தனது குழை என்னுமிடத்துச் சாத்தன் ஆடையை உடையான், குழையை யுடையான் என விரியும். அவ்வழி உடைமைப் பொருளில் இரண்டாம் வேற்றுமை விரியும்.

குறிப்பு வினைகளுள் செயப்படு பொருள் புறநிலையாகவும் அகநிலையாகவும் வரும்.

**எ.டு:** இவன் கச்சினன் என்புழிக் கச்சினை உடையவன் என விரியும். தேவன் நடையன், குடியன் என்புழி நடையைப் புரிபவன், குடித்தலைப் புரிபவன் என அகநிலையாக வரும். எனினும், உடைமை ஆறாம் வேற்றுமைக்கே உரியதாகலின் ஆசிரியர் அதுச்சொல் வேற்றுமை உடைமையானும் என்று கூறினார்.

**கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் :** ஏழாம் வேற்றுமை வினைச் சொல் இடம், காலம், நிலம் என்னும் மூன்று நிலையில் வருதலின், அவற்றுள், முதலிரண்டும் குறிப்பு வினைக்கண் வாராமையான் "நிலத்தினானும்" என்றார்.

**எ.டு:** சாத்தன், அகத்தன், புறத்தான், வானவன், கானவன், மதுரையான் எனவரும். இவை சாத்தன் அகத்தின் கண் உள்ளான், வானின்கண் திரிபவன், காட்டின் கண் உறைபவன், மதுரையின்கண் வசிப்பவன் என விரியும் அகத்தையும் மதுரையையும் உடைமையாகக்கருதின் ஆறாவதன் உடைமைப் பொருளில் அடங்கும்.

**ஒப்பினானும் :** ஒப்புப் பற்றி வருவன என்பது உவமம் கூறுமாறு வரும்.

எ.டு: பொன்னன் - பொன் போன்றவன், உயிரன் - உயிர் போன்றவன் என விரியும். இவை பொன்னன்னன், உயிரன்னன் என உவம உருபு விரிந்தும் வரும். புலியன், நரியன் என்பவை புலி ஒப்பான், நரி ஒப்பான் என விரியும். புலியை உடையன், நரியை உடையான் என விரியின் உடைமைப் பொருளில் அடங்கும்.

பண்பினானும் : பண்பு (குணம்) பற்றி வருவன என்பது பண்பு காரணமாக வருதல்.

எ.டு: கரியன், வெளியன், குறளன், நெடியன், அன்பன், நண்பன் எனவரும். கரிய நிறத்தவன், வெளிரிய நிறத்தவன், குறிய தோற்றமுள்ளவள், நெடிய தோற்றமுள்ளவன் என விரியும். இவற்றைத் தற்கிழமைப் பொருளாக விரிப்பின், உடைமையுள் அடங்கும்.

ஈண்டுப் படர்க்கை ஆண்பாற் பெயர் பற்றி உதாரணம் காட்டப் பெற்றன. ஏனைய திணை பால் இடங்களோடும் கூட்டிக் கண்டு கொள்க.

எ.டு: பொன்னினம், பொன்னினாம், பொன்னினெம், பொன்னினேம், பொன்னன், பொன்னினன், பொன்னாள், பொன்னர், பொன்னினம், பொன்னார் எனவும் பொன்னது, பொன்னினது, பொன்னவை, பொன்னினவை எனவும் பொன்னினை, பொன்னினிர் எனவும் வரும்.

அன்மை : அல்லேன், அல்லேம், அல்லை, அல்லன், அல்லள், அல்லர், அல்லது, அல்ல, அலது, அல எனவும், அன்று எனவும் வரும்.

இன்மை : இல்லேன், இல்லேம், இலன், இலள், இலர், (இலது, இல, இலை எனவும் இன்று) எனவும் வரும்.

உண்மை : உள்ளேன், உளேன், உள்ளேம், உளேம், உளன், உளள், உளர் (உளது, உள எனவும்) உண்டு எனவும் வரும், உளீர், உளை எனவும் வரும்.

வன்மை : வல்லேன், வல்லேம், வல்லன், வல்லள், வல்லர், (வலிது, வலியவை, வல்லை, வலியர்) எனவும் வரும்.

அன்னபிற என்றதனான் : நல்லேம், நல்லென், நல்லன், நல்லள், நல்லர் (நல்லை, நன்று, நல்ல) எனவும் தீயேம், தீயேன் தீயன், தீயள், தீயர் (தீயது, தீய, தீயை, தீது) எனவும், உடையேம், உடையேன், உடையன், உடையள், உடையர் (உடையது, உடைய, உடையை, உடைத்து) எனவும் வரும். இவ்வாறே வருவன பிறவும் அறிந்து கொள்க.

இனி அறுவகைப் பயனிலைகளுள் பெயர்ப்பயனிலையும் ஒன்றாகலின், பெயர்கள் மூவிடத்திற்கு ஏற்ற விகுதிகளைப் பெற்று வருமிடத்துக் குறிப்பு வினையாக வரும்.

**எ.டு:** யான் கண்ணினேன், நீ கண்ணினை, அவன் கண்ணினன் எனவரும். யான் கண்ணன், நீ கண்ணன், அவன் கண்ணன் என இடங்காட்டும் விகுதி பெறாமல் வரின் அவை பெயர்ப்பயனிலைகளாம் என்க. இடப் பெயர் பற்றி ஊரினேன், ஊரினை, ஊரினள் எனவும் பண்புபற்றிக் கரியேன், கரியை, கரியன் என்றும் வரும்.

குறிப்பு வினை சிறுபான்மை கருவிப் பொருளிலும் வரும்.

**எ.டு:** வேலன் - என்பது வேலினாற் போர் புரிபவன் என்றும், வலையன் என்பது வலையினால் தொழில் புரிபவன் எனப்பொருள் தருமிடத்துக் கருவியாம். வேலையுடையவன், வலையை உடையவன் எனப் பொருள் தருமிடத்து உடைமைப் பொருளாம்.

## குறிப்பு வினையாலணையும் பெயர்

ஒரு கருத்தாவால் இயற்றப் பெற்ற வினை, பின்னர் அக்கருத்தாவிற்குக் காரணப் பெயராக வருமிடத்து வினையாலணையும் பெயர் எனப்படும். கண்ணன் உண்டான் என்னும் தொடரில் கண்ணன் (எழுவாய்) உண்டான் என்பது பயனிலை. கண்ணன் உண்டல் வினையை நிகழ்த்தியமை காரணமாகக் கண்ணனை அழைத்துவா என்பதற்கு ஈடாக உண்டானை அழைத்து வா, உண்டான் நல்லன், உண்டானுக்குப் பரிசு கொடு எனக் கூறுமிடத்து, உண்டான் என்பது தெரிநிலை வினையாலணையும் பெயராக நின்றது. இப்பெயர் ஈறுதிரிந்து உண்டவன் எனவும் வரும்.

அவ்வாறே, சாத்தன் பொன்னன் என்புழிக் குறிப்பு வினையாக நிற்கும், 'பொன்னன்' என்னும் சொல் பின்னர்

பொன்னனை அழைத்துவா, பொன்னனுக்குக் கொடு என வருமிடத்துப் பொன்னன் என்பது, குறிப்பு வினையாலணையும் பெயராக அமையும். சாத்தன் கரியன் என்புழிக் கரியன் குறிப்புவினை. பின்னர்க்கரியனை அழைத்துவா எனவருமிடத்துக் குறிப்பு வினையாலணையும் பெயராம். இக்குறிப்பு வினையாலணையும் பெயர்களும் ஈறுதிரிந்து, பொன்னவன், கரியவன் எனவும் வரும். குறிப்பு வினையாலணையும் பெயரைக் குறிப்பு வினைப் பெயர் என்றும் குறிப்புப் பெயர் என்றும் வழங்குவர்.

வடமொழியில் குறிப்புவினைக் கோட்பாடின்மையாள், குறிப்பு வினையமைப்பில் உருவாகும் சொற்களை அவர்கள் "தத்திதாந்தம்" என்று கூறுவர். காரணப் பெயர்களும் தத்திதாந்தத்துள் அடங்கும்.

எ.டு: மன்னன், நாடன், வேலன், வலையன் என்றாற்போல வருவனவற்றை, அவர்கள் தத்திதாந்தமாகக் கொள்வதனை எழுத்துப் படலத்துள் கூறினாம்.

இனி, மின்னிப் பிறழ்தலான் மீன், தின்னப்படுதலால் தீனி, நரையாக (வெள்ளையாக) உண்மையான் நாரை என்றும், வேல முள்ளால் அமைதலான் வேலி என்றும், பறி (தோல்) யால் செய்யப்படுதலால் பறை என்றும், மதியால் அளக்கப் படுதலால் மாதம் என்றும், வருவனவற்றையும் அவர்கள் தத்திதாந்தமாகக் கொள்வர். தமிழ் நூலார், இவை போல்வனவற்றைக் காரணம் பற்றி ஆக்கப் பெற்ற இயற்பெயராகவே கொள்வர்.

## அஃறிணைத் தெரிநிலை வினைகள்

### ஒருமை வினை

அஃறிணையில் தன்மைவினை கொள்வது பண்டைத் தமிழ் நெறியன்று. அஃது அறிவியல் நோக்குமாகாது. இலக்கியப்புலவோர் கொண்டெடுத்து மொழிவதை உணராமல், இடைக்கால நூலோர், அஃறிணையில் தன்மைக்கண்ணும் வினைச் சொல்லைக் கொண்டு கூறிச் சென்றனர். முன்னிலை வினை இருதிணைக்கும் பொதுவாதலை எண்ணித் தன்மை வினையையும் இருதிணைப் பொதுவாகக் கூறிச் சென்றனர்.

அஃறிணை ஒருமை வினைக்கண் துறுடு என்னும் விகுதிகள் தெரிநிலை ஈறாக வரும் என்பதனைத் தொல்காப்பியம்,

"ஒன்றன் படர்க்கை தடற ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்" (தொல்.சொல்.213)
என்கிறது. இவற்றுள் 'து' மூன்று காலத்தும் வரும். 'று' இறந்த காலத்தில் மட்டும் வரும். 'டு' தெரிநிலைக் கண் வாராது. துறுடு மூன்றும் குறிப்பு வினை யீறாக வரும்.

து : துவ்வீறு இறந்த காலம் பற்றி வருங்கால் த், ட், ற், இ என்னும் கால இடைநிலை எழுத்துக்களுடன் அகரச் சாரியை பெற்று வரும்.

எ.டு: வந்தது, உண்டது, சென்றது, எஞ்சியது, போயது எனவும் புகு, உறு எனவரும் முற்றுகர ஈற்றுப் பகுதியாயின் இரட்டித்துப் புக்கது, உற்றது, விட்டது, எனவும் வரும், நிகழ்காலம் பற்றி வருங்கால் : ஆநின்று, கின்று, கிறு என்னும் கால இடைநிலைகளோடு அகரச் சாரியை பெற்றுவரும்.

எ.டு: உண்ணா நின்றது, உண்கின்றது, உண்கிறது எனவரும். கின்றும், கிறுவும் சிறுபான்மை உகரச் சாரியை பெற்று உண்ணுகின்றது, உண்ணுகிறது எனவும் உரிஞ்சுகின்றது திருமுகின்றது எனவும் வரும். எதிர்காலம் பற்றி வருங்கால் : பகரத்தையும் வகரத்தையும் கால இடைநிலைகளாகக் கொண்டு அகரச்சாரியை பெற்று ஆக்கச்சொல்லொடு கூடிவரும். இவ்வழக்கு அருகியதாகலின் செய்யும் என்னும் முற்றுவினையாக வருதலே பெருவழக்காகும்.

எ.டு: உண்பதாகும், சொல்வதாகும், உரிஞ்சுவதாகும் எனவும், உண்ணும், செல்லும், உரிஞ்சும் எனவும் வரும்.

று : றுவ்வீறு இறந்தகாலம் பற்றி வருங்கால் த் ட் ற் என்னும் கால இடைநிலைகளுக்கு முன் அன் இன் என்னும் சாரியைப் பெற்றுவரும். சில சொற்களில் இன் சாரியையின் னகரம் றகரமாகத் திரிந்து வரும்.

எ.டு: வந்தன்று, உண்டன்று, (வந்தது - உண்டது) என்பது பொருள்) கூயின்று, போயின்று எனவும், தாயிற்று, போயிற்று எனவும் வரும் முற்றியலுகர ஈறாயின புக்கன்று, உற்றன்று எனவரும்.

மற்று இல் என்னும் எதிர்மறை, இடைநிலை பெற்று றுகர ஈறாக வரும் சொற்களில் லகரம் னகரமாகத் திரிந்து

வந்தின்று, சென்றின்று, உண்டின்று, புக்கின்று எனவரும். ஆதலின், இன் சாரியைப் பெற்று உடன்பாட்டில் வரும் வினையையும், இல் என்னும் இடைநிலை திரிந்து வந்தின்று எனவரும் எதிர்மறை வினையையும், தொடர்மொழியின் சொற்பொருள் நோக்கித் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும், களைதல், வியத்தல், இழிதல் என்றும் தொழிற் பெயர்கள், செய்யுள் வழக்கின்கண் களைந்தது, வியந்தது, இழிந்தது எனவரும். அங்ஙனம் வரும் தொழிற்பெயர்கள், இசை யின்பங்கருதி களைந்தன்று, வியந்தன்று, இழிந்தன்று எனவும் வரும்.

எ.டு: தாலி களைந்தன்று மிலனே. வியந்தன்றும் இழிந்தன்று மிலனே (புறம். 77) இவை வினைமுற்றுச் சொற்களல்ல. தொழிற் பெயர்களேயாம். இவ்வாறு திரிந்து வருவனவற்றையும் சொற்றொடரின் பொருள் நோக்கித் தெரிந்துணர்தல் வேண்டும்.

டு : டுவ்வீறு முக்காலத்திற்கும் பொதுவாய் குறிப்பு வினையாக வரும்.

எ.டு: குண்டுகட்டு (கட்டு = கண்ணையுடையது) குறுந்தாட்டு (தாட்டு = தாள்களையுடையது) எனவரும்.

**அஃறிணைப் பன்மை வினை**

அஃறிணைப் பன்மை படர்க்கை வினைகள், அ, ஆ, வ என்னும் விகுதிகளைப் பெற்று வரும். இவற்றுள் ‘ஆ’ எதிர்மறையில் மட்டும் வரும்.

அ : அகர ஈறு மூன்று காலமும் பற்றி அன்சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.

எ.டு: வந்தன, வந்த - உண்டன, உண்ட எனவும், அஞ்சின, போயின, போய என்வும், புக்கன, புக்க என இறந்த காலத்தில் வரும். நிகழ் காலத்தில் உண்கின்றன, உண்கின்ற, உண்ணா நின்றன, உண்ணா நின்ற எனவரும். எதிர்காலத்தில் உண்ப, உண்ணுவ, தின்ப, தின்னுவ, உண்குவ என அன்சாரியை பெறாமல் வரும்.

ஆ : மூன்று காலத்திற்கும் பொதுவாக உண்ணா, தின்னா, வாரா என எதிர்மறை வினைமுற்றாக வரும்.

வ : வகர ஈறு எதிர் காலத்தில் மட்டும் உகரச்சாரியையும் குகரச் சாரியையும் பெற்று வரும்.

எ.டு: உண்குவ, உண்ணுவ, வருகுவ, வருவ, செல்வ, உரிஞுவ எனவரும்.

பண்டை நூலோர் உயர்திணைப் பன்மையீறாகப் பகரத்தையும், அஃறிணைப் பன்மை ஈறாக வகரத்தையும் வகுத்தோதினராதலின், உண்ப, தின்ப, காண்ப, கூறுப என வருவன உயர்திணைக்கே உரியவாகும். உண்ணுவ, தின்னுவ எனவருவன அஃறிணைக்கே உரியவாகும்.

இடைக்கால நூலோர், இப்பாகுபாட்டை மறந்து உண்ப - தின்ப - என்பவற்றை அஃறிணைக்கும் காட்டுவர். அவ்வழி, அவை பகர ஈறாகாது, பகரத்தைக் கால இடைநிலைகளாகக் கொண்ட அகரஈறாகும். இவ்வாறு கொள்ளுமிடத்து உண்ணுவ, தின்னுவ என்னும் வகர ஈறும், கால இடைநிலை பெற்ற அகர ஈறாகக் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கொள்ளின் பகர ஈறு, வகர ஈறு என்று கூறுவது பயனில் கூற்றாகி விடும். ஆதலின், பகரம் உயர்திணைக்கும் வகரம் அஃறிணைக்கும் உரிய உயிர்மெய் ஈறுகள் எனக் கொள்வதே தமிழ்நெறி மரபாகும்.

இனி, 'எவன்' என்னும் வினா வினைக் குறிப்புப் பெயர் அஃறிணை இருபாலுக்கும் பொதுவாக வரும்.

எ.டு: அஃதெவன், அவை எவன் எனவரும்.

## அஃறிணைக் குறிப்பு வினைகள்

அஃறிணை வினைக்குறிப்பு முற்று வினைகள் ஒருமைப்பாலும், பன்மைப் பாலும் பற்றி வரும். அவை உடைமைப் பொருள் பற்றியும், இடம் பொருள் பற்றியும், பண்பு பற்றியும், ஒப்புப் பற்றியும், பண்பினாகிய சினை, முதல் பற்றியும், இன்று, இல, உடைத்து, அன்று, அல்ல, உளது, உள என்னும் சொற்களாகவும், தொழிற் குறிப்புப் பற்றியும் வரும். எ.டு:

### 1) அதுச் சொல் வேற்றுமை உடைமை :

'அறிந்த மாக்கட்டு ஆகுக' இவ்வூர், இது குழையது, இவை குழையன, மணி என்னும் பெயர்த்து, மணிகள் என்னும் பெயர, 'உண்டிமுதற்றே உணவின் பிண்டம்', அகர முதல எழுத்தெல்லாம், [illegible]ந்து இந்நீர்[illegible]மைத்து, ஆகுல நீரபிற, இது நன்னடைத்து, இவை [illegible]டைய எனவரும்.

**2) கண்ணென் வேற்றுமை இடம் :**

பயிர் நிலத்தது, மரங்கள் நிலத்தன, இவ்வூர் அணித்து, அரியசேய பெருங்கல்லாறு. மதில் கோயில் புறத்தது, படைகள் மதிற் புறத்தன, கூகை குன்றின் மேற்று, கிள்ளைகள் ஆலத்தின் மேல, இலங்கை குமரியின் தெனாது, கையது வேல், காலன புனைகழல் எனவரும்.

**3) பண்பு**

காக்கையிற் கரிது களம்பழம், காரின் கரியன களிறுகள், இது நெடிது, இவை நெடிய, கரும்பு இனிது, கனிகள் இனிய, மலரினும் மெல்லிது காமம், நாணின் வலியது கற்பு, இடை சிறிது, கண்கள் பெரிய எனவரும்.

**4) ஒப்பு :**

இது பொன்னன்னது, இவை பொன்னன்ன, இவை இன்ன தன்மைய, அற்று (அத்தன்மைத்து) இற்று (இத்தன்மைத்து) எனவரும்.

**5) பண்பின் ஆகிய சினைமுதற்கிளவி :**

குண்டுகட்டுக் களிறு, குறுந்தாட்டுப் பூதம், நெடுஞ்செவிய முயல்கள் எனவரும். சிறுபான்மை பண்படையின்றி, 'துஞ்சாக் கண்ண வடபுலத்தரசே' என சினை முதற் கிளவியாகவும் வரும்.

**6) சொல் பற்றி வருவன :**

அஃதின்று, அவை சில, சிலது என்பது வழூஉ வழக்கு இது வலியுடைத்து, இவை வலியுடைய, இஃதறமன்று, அவையல்ல நல்ல மரங்கள். பொன் உளது, பொருள்கள் உள எனவரும்.

**7) தொழிற் குறிப்பு :**

இஃது ஓடவற்று (வலிமையுடையது) ஓடவல்ல பரிகள் எனவும் இது நன்று, இவை நல்ல, இது தீது, இவை தீய எனவும் வரும்.

அஃறிணை வினைக்குறிப்பு முற்று ஈறுகள் உயர்திணைக்குக் கூறப்பெற்ற முறையில் ஒருமைக்கண் து, று, டுவ்வும், பன்மைக்கு அ, ஆவும் வரும், வகர ஈறு வாராது.

இவை பற்றிய ஆய்வுக் கருத்துக்களை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

## குறிப்பு வினைபற்றிய நன்னூலார் கருத்து

நன்னூலார் வரிவடிவச் சொற்களின் அடிப்படையில் இலக்கணங் கூறுதலான், குறிப்பு வினைபற்றி விளக்கமாக யாதும் கூறாமல், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களின் அடிப்படையில், வினைச்சொல் இலக்கணமாகிய, செய்பவன், கருவி, நிலம், செயல்காலம் என்பவற்றுள், செய்பவனை மட்டும் விகுதியாற் காட்டி வரும் என்பார். அவர் கூறியுள்ள இலக்கணம்,

> **"பொருள்முத லாறினும் தோற்றிமுன் ஆறனுள்**
> **வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே"**
>
> **(நன்.321)**

என்பதாகும். நன்னூலார், வடமொழி இலக்கணங்களைக் குறிக்கோட் பொருளாகக் கொண்டமையால், தமிழ் மொழிக்கே உரிய குறிப்புவினைக் கோட்பாடுகளை விரித்துக் கூறமுயலாது போயினார் என்க.

## துணை வினைகள்

ஒரு பொருளுக்கு விளக்கமாகப் பெயரிடுங்கால், தண்ணீர், செந்தாமரை, கலைமான், புள்ளிமான், வெள்ளாடு, கொல்லேறு என, அவற்றின் பண்பு, தன்மை, நிறம், உடைமை, செயற்பாடு முதலியவற்றை விளக்கும் அடைகளோடு இடுவது புலவோர் மரபு. அவ்வடைகளைச் சேர்க்குமிடத்து அரிமா, பரிமா, கரிமா என முன்வைத்தும், வேல்முருகன், வல்வில் ஓரி என உடைமைப் பொருளோடு சேர்த்தும், நக்கீரன், நப்பாலத்தனார், நச்செள்ளையார் எனச் சிறப்படை புணர்த்தும், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் நளங்கிள்ளி, சேரன் செங்குட்டுவன் எனக்குடிப் பெயரொடு கூட்டியும், பலராமன், கோதண்டராமன், குமாரவேலன் என இருபெயரொட்டாகவும் கூறுதல் வழக்காகும்.

அவ்வாறே, ஒரு வினைச் சொற்பகுதியைக் காலஇடைச் சொல்லொடு கூட்டி, முற்றுவினையாகக் கூறுமிடத்து, அவ்வினைச் சொற்கு முன்னொட்டாகவும், பின் இணைப்பாகவும், தொழிற்சொல் முதனிலை வடிவிலும், எச்ச வடிவிலும் சேர்த்துக் கூறுதலும் வழக்காகும் இவ்வாறு வருவனவற்றைத் துணைவினைகள் என்பர்.

துணை வினையைச் சேர்த்துக் கூறுவதன் நோக்கம், ஓசையின்பத்தொடு அவ்வினையின் பொருள் நிலையைப் பல கோணங்களிற் சிறப்பித்துணர்த்தலாகும். அத்துணை வினைகள் தலைமை வினையொடு கூடி ஒருசொல் நீர்மையவாய் அமையும். துணை வினையாக வரும் ஒட்டுக்கள், பெரும்பான்மையும் செய்து, செய என்னும் வினையெச்ச வாய்பாட்டு வடிவத்தில் நிற்கும். நிற்பினும் அவை, தம்முடைய காலங்களை உணர்த்தாமல், தலைமை வினையின் காலத்தொடு முடிந்து விடும். துணை வினையும், தலைமை வினையும் ஒரு தொழிலே பற்றி நிற்பின், துணைவினை தொழிற் பெயர்ப் பொருட்டாக நிற்கும்.

துணை வினைகள், (1) தலைமை வினையினை அதன் கருத்தாவொடு உரிமைப் படுத்தியும், (2) உறுதிப்படுத்தி இடையீடின்மை உணர்த்தியும், (3) நிச்சயப் படுத்தியும், (4) பிறவினைப் பொருட்டாக்கியும், (5) முடிந்த முடிபுணர்த்தியும், (6) கருத்தாவின் பெருமையைச் சுட்டியும், (7) ஐயத்தையும் ஆய்வையும் உணர்த்தியும், (8) பிறபொருள் சுட்டியும், (9) கருத்தாவின்உயர்வைச் சுட்டியும், (10) ஈடுபாடு குறித்தும் வரும்.

பெரும்பான்மையும் கொள், கொண்டு, கொண்டிரு, இரு, படு, விடு, அருள், பார், காட்டு, வரல், தரல், இடு, வை என்பவை துணை வினையாக வரும்.

### சில எடுத்துக் காட்டுக்கள்

**1. கொள் :**

இது, தலைமை வினையின் நிலை. அவ்வினை முதற்கு உரிமையாக அமைதலைக் காட்டும்.

**எ.டு:** கண்ணன் அன்புடன் நடந்து கொண்டான், நடந்து கொள்கிறான், நடந்து கொள்வான் எனவும், ஏவலிடத்துச் சொல்வதைக் கேட்டுக் கொள், இதனைத் தெரிந்துகொள், அவரைப் பார்த்துக் கொள் எனவும் வரும். இவற்றின் பகுதி - நடந்து கொள், கேட்டுக்கொள் என நிற்கும்.

**2. (கொண்டு) - கொண்டிரு :**

இது தலைமை வினையை நிச்சயப்படுத்தி அச்செயலின் இடையீடின்மையைக் காட்டும்.

**7. அருள் :**

இது தலைமை வினைக் கருத்தாவின் பெருமையைச் சுட்டிநிற்கும்.

எ.டு: கொடுத்தருளினார், கொடுத்தருள்கின்றார், கொடுத்தருள்வார், வந்தருள்க, எழுந்தருள்க எனவும் வரும். இவற்றின் பகுதி கொடுத்தருள், வந்தருள், எழுந்தருள் என நிற்கும்.

**8. பார் :**

இது தலைமை வினையின்கண் ஐயத்தையும், ஆராய்ச்சியையும் தோற்றும்.

எ.டு: சொல்லிப் பார்த்தான், சொல்லிப் பார்க்கிறான், சொல்லிப் பார்ப்பான், கேட்டுப்பார், வந்துபார் எனவரும். இதன்பகுதி, சொல்லிப்பார் என நிற்கும். இது முதனிலை ஏவலாக வருமிடத்து, இக்களியை உண்டுபார், என்னொடு போரிட்டுப் பார் என முன்னிலைப் பொருளை உணர்வு கொள்ளச் செய்யும்.

**9. காட்டு :**

இது தலைமை வினை வேட்கும் வெளிப்பாட்டினை உணர்த்திவரும்.

எ.டு: எங்கே பாடிக்காட்டு, இதனைச் சொல்லிக்காட்டு, இதனை எழுதிக்காட்டு எனவரும் இவைஏவல். செய்து காட்டினான் என முற்றாகவும் வரும்.

**10. அ) வருதல் (வா) :**

இது தலைமை வினையைப் புரிதல், இயற்றுதல் என்னும் பொருள்படச் செய்யும்.

எ.டு: இவன் அரசாங்க அலுவல் பார்த்து வந்தான். அவன் தஞ்சையில் வாழ்ந்து வந்தான் - வாழ்ந்து வருகிறான், வாழ்ந்து வருவான் எனவரும். இதன் பகுதி பார்த்துவா, வாழ்ந்துவா என நிற்கும்.

**ஆ) தருதல் (தா) :**

இது தலைமை வினையைத் தொழிற் பெயராக்கி, தனது காலத்தை அதன்கண் ஏற்றி நிற்கும்.

எ.டு: அரசர் விழாவிற்கு வருகை தந்தார் - தருகிறார் - தருவார் என வரும். இதன் பகுதி வருகை தா என நிற்கும். இத்துணை வினையுள் வருகை என்னும் வினையொடு மட்டும் பயின்று வருகிறது. வருகை புரிந்தார், வருகை செய்தார் எனப்புரிதலும், செய்தலும், அதன் மாற்று வினையாக வரும்.

**11) இடு :**

இது தலைமை வினைக்கண் கருத்தாவின் ஈடுபாட்டைக் காட்டி நிற்கும்.

எ.டு: உளமார வாழ்த்திட்டான், வாழ்த்திடுகிறான், வாழ்த்திடுவான், உண்டிட்டான், பார்த்திட்டான் எனவரும். இவற்றின் பகுதி வாழ்த்திடு, உண்டிடு, பார்த்திடு என நிற்கும்.

**12) வை :**

இது தலைமை வினையை வலியுறுத்துங் கருத்தில் வரும்.

எ.டு: அவனிடம் இதனைச் சொல்லிவை, இந்நூலைப் படித்துவை, நல்லதைத் தேடிவை என ஏவலாக வரும். சிறுபான்மை, அதனையும் கேட்டு வைத்தான், செய்து வைத்தான் எனமுற்றாகவும் வரும்.

**13. புகுதல் :**

வழக்கின்கண் பெரும்பான்மையான வினைச் சொற்கள் நிச்சயப்படுத்துங் குறிப்பைத் தரும். புகுகிறது என்னும் சொல் போகிறது எனத்திரிந்து துணை வினையாகவரும்.

எ.டு: வானம் இருள்கிறது, மழை வரப்போகிறது (புகுகிறது என்பதன் திரிபு) அதோ பெரியகோயில் தெரிகிறது, தஞ்சாவூர் வரப்போகிறது. அவன் கேட்டால் நீ என்ன சொல்லப் போகிறாய், நாளை யாள் உங்கள் ஊருக்கு வரப்போகிறேன், அவருக்கு நல்ல காலம் வரப்போகிறது எனவரும் இது வழூஉ வழக்காகும்.

## இருதிணைப் பொதுவினை - விரவு வினை

வினைச்சொற்கள் முற்றாகவோ, எச்சமாகவோ இருதிணைகட்கும் அல்லது ஐம்பாலுள் சில பாலுக்கும், மூன்றிடங்களுள் இரண்டற்கோ, மூன்றற்குமோ பொருள் பொருந்த வருமிடத்து, அவை பொதுவினை எனப்படும். சில

வினைகள் காலப் பொதுவாகவும் வரும். விரவு வினைகளைப் பொருள் பற்றியும், சொல் பற்றியும் நூலோர் வகுத்துக் கூறுகின்றனர்.

பொருள் பற்றி வருவன முன்னிலை வினை, தன்மை வினை, செய்யும் என்னும் முற்று, வினையெச்சவினை, பெயரெச்ச வினை ஆகியவைமாகும். சொல் பற்றி வருவன செயம்மன, வேறு, இல்லை, உண்டு, வேண்டும், தரும், படும் என்பனவாகும். இனி, இவற்றை முறையே காண்போம்.

## முன்னிலை வினை

இ, ஐ, ஆய், இர், ஈர், மின், உம் என்பவை முன்னிலை ஈறுகளாக வரும். இவற்றுள் இ, ஐ, ஆய் என்பவை ஒருமைக் கண்ணும், இர், ஈர், மின், உம் என்பவை பன்மைக் கண்ணும் வரும். வருங்கால் ஐ, இர், ஈர் என்பவை முக்காலமும் பற்றி முற்று வினையாக வரும். இ, ஆய், மின், உம் என்பன ஏவலாய் எதிர்காலம் பற்றி வரும். உம்மீறு செய்யுள் வழக்கில் அருகியும், உலக வழக்கில் பயின்றும் வரும். இ, ஆய் இரண்டும் ஏவலுணர்த்தாமல் வினைநிலை உணர்த்தியும் வரும்.

### எடுத்துக்காட்டுக்கள்

இ : உண்டி கொற்றா! வருதி சாத்தா! பாடுதி மகளே! ஆடுதி பெண்ணே! எனவும், வருதி, பெயர்தி, வருந்துதி துஞ்சாயால் நெஞ்சே எனவும் வரும்.

இனி முன்னிலைக் கண் காண்பி, உண்பி, செய்வி, புகுவி எனவரும். பிறவினைச் சொற்களில் வரும் ஈறுகள் வி,பி - என்னும் பிறவினை விகுதிகளாம் இகர ஈறல்ல.

ஐ : கொற்றா உண்டனை, உண்கின்றனை, உண்பை (உண்ணுவை) என ஐகாரம் மூன்று காலமும் பற்றி வரும் ஏவல்வினை ஈறாக வாராது.

ஆய் : உண்டாய், உண்கின்றாய், உண்பாய், உண்ணுவாய் என 'ஆய்' ஈறு மூன்று காலமும் பற்றி வரும். மற்று உண்பாய் என்பதை எடுத்த லோசையாற் கூறின் ஏவல் வினையாம். படுத்த லோசையாற் கூறுமிடத்து முன்னிலை வினையாம்.

நட, வா முதலிய இருபத்திரண்டு வினைப்பகுதிகள் யாவும், 'ஆய்' என்னும் விகுதிபெற்று எதிர்காலச் சொல்லாக, வருமிடத்து ஏவல் வினைகளாம். மற்று, உண்ணாய், பாராய் என்பவை, எதிர்மறைப் பொருளுணர்த்துமிடத்து எதிர்மறை யுணர்த்தும், ஆகார இடைச் சொல்லின்முன் ஆகாரம் கெட்டு நின்றனவாகும். உண்+ஆ+ஆய் = உண்ணாய், பார்+ஆ+ஆய் = பாராய் இவை எதிர்மறை வினை. உண்+ஆய்= உண்ணாய், பார்+ஆய்= பாராய் இவை ஏவல் வினை.

மற்றும், நடப்பாய், வருவாய், உண்ணாய், கேட்பாய் என்னும் ஏவல் வினைகள் எடுத்தலோசையால் ஆய் விகுதி குன்றி, சாத்தாநட வா, உண், கேள் என நின்று ஏவற் பொருள் உணர்த்தும். ஆதலின் நன்னூலாசிரியர்,

"ஐஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வரும் எல்லா ஈற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே" (நன்.335)

என்று கூறினார். மற்றும் புள்ளியீற்று வினைப்பகுதிகள் வழக்கின்கண் உரிஞு, உண்ணு, பொருநு, திருமு என உகரச்சாரியை பெற்று ஏவலாக வரும்.

முன்னிலை வினைப் பன்மை விகுதிகளுள் இர், ஈர் இரண்டும், முக்காலமும் பெற்று வரும். மின்னும், உம்மும் எதிர்காலம் பற்றி ஏவலாகவே வரும் எடுத்துக்காட்டு :

இர் : உண்டனிர், உண்கின்றனிர், உண்பிர், உண்ணுவிர், உண்குவிர் எனவரும். எதிர்கால வினை எடுத்தலோசையாற் கூறுமிடத்து உண்பீர் என ஏவற் பொருளும் தரும்.

ஈர் : உண்டீர், உண்டனீர், உண்கின்றீர், உண்ணாநின்றனீர், உண்பீர், உண்ணுவீர், உண்குவீர் எனவரும் உண்பீர் என்பது ஏவற் பொருளும் தரும்.

மின் : உண்மின், காண்மின், வருமின், வாழ்மின், உண்ணுமின், சென்மின், செல்லுமின் என ஏவலாகவே வரும்.

உம் : நண்பீர் வாரும், இவற்றைக் கேளும், ஊரினைப் பாரும் எனவரும்.

குறிப்பு : இவ்விகுதி இடைச் சொற்களின் மூலவடிவங்களை நோக்குமிடத்து இ, ஐ, ஆய் என்பவை ஏய்

(ஏய்தல் - ஒத்தல், பொருந்துதல்) என்பதன் மருவாகலாம். இர், ஈர் என்பவை படர்க்கை விகுதிகளாகிய அர், ஆர் என்பவற்றின் திரிபாகலாம். மின் என்பது வழக்கில் ஒருவரை ஒருவர் ஏவுமிடத்து கேளுமேன், சொல்லு மேன், பாருமேன் எனப்படுதலைக் காணலாம். அம்முறையில் அவற்றின் இறுதிகளாகிய உம் + ஏன் என்பவை இணைந்து, மருவி மின் என ஆக்கம் பெற்றதாகலாம் எனத் தெரிகின்றது.

## வியங்கோள் வினை

வியங்கோள் : வியங் கொள்ளுதல் அஃதாவது, ஒரு பொருளிடத்து ஒருவர் தாம் கருதிய, விரும்பியதொரு தொழிற்றன்மையை வெளிப்படுத்தும் கொள்கை என்பது பொருள். வியம் = வெளிப்பாடு. ஏவல் வேறு வியங்கோள் வேறு என்பதை "ஏவல் வியங்கொண்டு இளையரொடு எழுதரும்" (பதிற்று - 34) என்பதனால் அறியலாம். வியம் என்பது வெளிப்படுத்தல் என்னும் பொருளினது என்பதைச் "செல்கம் செலவியங்கொண்மோ" (குறுந். 114) "வினை கடைக்கூட்ட வியங்கொண்டான்" (சிலம்பு. 9-78) என்பவற்றால் அறியலாம்.

மற்றும், ஏவல் முன்னிலையிடத்தன்றி ஏனை ஈரிடத்தும் வாராது. வியங்கோள் ஐம்பால் மூவிடத்தும் வரும். வியங்கோள் விழைதல், வெறுத்தல், விதித்தல் என்னும் பொருள் பற்றி வரும். இவற்றுள் விதித்தல் ஏவுதற் பொருட்டாய் நிற்கும். அதனான் "ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவி" என்றார் தொல்காப்பியர்.

### வியங்கோள் வினை விகுதிகள் :

அல், ஆல், ஆர், இய, இயர், இ, க என்பனவாகும். இவற்றுள் அகரம் பயின்று வரும் ஏனைய அருகி வரும்.

எ.டு: செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல். மரீஇயது. ஒரால்!. வசைதீர்ந்த என் நலம் வாடுவது அருளுவார்! மன்னிய பெரும நிலமிசையானே! உணீஇயர்! வாழிய! வாழியர்! வாழி! வாழ்க! வரல் வேண்டும் ஐய! எனச் சிறுபான்மை உம் விகுதியும் வரும்.

### விழைதல் :

ஆ வாழ்க! அந்தணர் வாழ்க! மழைபெய்க! நாடுய்க! எனவரும்.

**வெறுத்தல் :**

வறுமை ஒழிக! பகை நலிக! அல்லவை கெடுக! எனவரும்.

**விதித்தல் :**

சான்றோன் வருக! சாத்தன் உண்க! கசடறக் கற்க எனவரும். வியங்கோள் ஐம்பால் மூவிடத்தும் வரும்

எ.டு: யான் வாழ்க! யாம் வாழ்க. நீ வாழ்க. நீயிர் வாழ்க. அவன் வாழ்க. அவள் வாழ்க. அவர் வாழ்க. அது வாழ்க. அவை வாழ்க எனவரும். 'பேரமர் உண்கண் இவளினும் பிரிக' (தன்மையிடம்) கடாவுகபாக! நின் கால்வல் நெடுந்தேர் (முன்னிலை) கொடாமை வல்லர் ஆகுக (படர்க்கை) அல் ஈறு முனிவின்கண் எதிர்மறையிலும் வரும்.

எ.டு: "பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்" (எனல் - என்று சொல்லற்க) சிறுபான்மை ககர ஈறு மா என்னும் முன்னிலை அசை பெற்று 'உப்பின்று புற்கை உண்கமா! கொற்கையோனே' எனவரும்.

வினைமுற்று விகுதிகள். உண்டேன், உண்டாய், உண்டான் என் இடங்களைத் தெளிவாகக் காட்டும். வியங்கோள் வினை விகுதிகள் பொதுவாக நின்று, எழுவாய்க்கு ஏற்ப இடப்பொருளைக் குறிப்பால் உணர்த்தும், விகுதியளவில் படர்க்கையாகவே நிற்கும். இடத்திற்கு ஏற்பத்திரியா ஆதலின், தொல்காப்பியர் சொல்வடிவில் தன்மை, முன்னிலைகளாக நில்லாது படர்க்கை ஈறாகவே நிற்கும் என்றார். அவ்விலக்கணம்,

"முன்னிலை தன்மை ஆயீரிடத் தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி" (தொல்.சொல்.221)

என்பதாகும். அஃதாவது வாழ் என்னும் முதனிலை வினை இடங்காட்டும் விகுதி பெறுமிடத்துத் தன்மையில் வாழ்வேன் என்றும், முன்னிலையில் வாழ்வாய் என்றும் படர்க்கையில் வாழ்வான் என்றும் வரும். வியங்கோள் விகுதி மூன்றிடத்தும் யான் வாழ்க! நீ வாழ்க! அவன் வாழ்க! என ஒரே வடிவில் வரும். பொருளை விரிக்குமிடத்து வாழ்க என்பது யான் வாழ்வேனாகுக என்றும், நீ வாழ்வாய் ஆகுக என்றும், அவன் வாழ்வானாகுக என்றும், படர்க்கையாகவேவிரிதலின் "முன்னிலை தன்மையிடங்களில் மன்னாதாகும்" என்றார்.

இந்நூற்பாவின் நோக்கையும், கருத்தையும் ஊன்றி உணராத உரையாசிரியன்மாரும், இக்கால ஆய்வாளர் பலரும் தன்மை முன்னிலை இடங்களில் வியங்கோள் வராது என்றும், வரின் வழுவமைதியாம் என்றும் கூறிச்சென்றனர். வியங்கோள் ஏவற்பொருட்டாய் வரும் என்பதனை "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி" என உணர்த்தியிருப்பதனையும் உணராது போயினர்.

எழுத்ததிகாரம் புணரியலுள் ஆசிரியர், 'வாழிய' என்னும் வாய்பாட்டு வடிவம், வாழ்க என்னும் பொருளில் திரிந்தமைந்தது என்பதை உணர்த்த,

**"வாழிய என்னும் செய்கென் கிளவி**
**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே"** (தொல்.சொல்.212)

என்றார்.

அச்சூத்திரம் ஏடு எழுதினோரால் வாழிய என்னும் செயவென் கிளவி எனப் பிழைபட்டுள்ளதை ஆராயாமல் செய என்னும் அகர ஈற்றுச் சொல் வியங்கோளில் வரும் என உரைவரைந்து சென்றமையான், இக்கால மொழியியலார் சிலர், சாத்தன் வாழ! சாத்தி வாழ! என வியங்கோள் வினை வருமென்று மயங்குவர். ககரமெய்யை ஊர்ந்த அகர ஈறு (க) தவிர்ந்த, பிறமெய்களை ஊர்ந்து அகரம் வியங்கோள் விகுதியாக் வாராதென அறிக.

## முன்னிலைக் குறிப்பு வினைமுற்று

முன்னிலைத் தெரிநிலை வினைமுற்று விகுதிகளுள் இகரமும், மின்னும், உம்மும் தெரிநிலை வினைக்கே உரியவாகும். அவை தவிர்ந்த ஐ, ஆய், இர், ஈர் என்னும் நான்கும் முன்னிலைக் குறிப்புவினை விகுதிகளாகவரும். ஏவற்கண் வாரா.

எ.டு: கழலினை, நாட்டினை, நாட்டை, கரியை, நடையினை, நடையை எனவும், கழலினாய், நாட்டாய், கரியாய், நடையினாய் எனவும், கழலினீர், நாட்டினிர், நாட்டினீர், கரியிர், கரியீர், நடையினிர், நடையீர், பொன்னன்னிர், பொன்னனையிர், பொன்னனையீர், பொன்னன்னீர் எனவும் வரும்.

## எதிர்மறை வினைமுற்று

ஒரு வினை முதலால் ஒரு தொழில் நிகழ்ந்தது, நிகழ்கின்றது, இனி நிகழும் எனவருவன உடன்பாட்டுவினை

அல்லது விதிவினை எனப்படும். அஃதாவது, வினையை ஒத்துக் கொள்வது. யாதானும் ஒரு தொழிலைச் சுட்டி இவ்வினை நிகழாது, நிகழவில்லை என மறுப்பது எதிர்மறை வினை. வினையை எதிர்த்து, மறுப்பது என்பது பொருள். எதிர்மறை என்பது மறை எனக் குறைந்தும் நிற்கும். எதிர்மறை என்பது வினை நிகழ்ந்ததா, வினை நிகழவில்லையா என்னும் கருத்துடையதன்று. உடன்பாட்டு வினைகளை மறுத்துக் கூறுவது எதிர்மறைவினை.

எ.டு: சாத்தன் வந்தான் - உடன்பாடு, வரவில்லை - எதிர்மறை. சாத்தன் வருவான் - உடன்பாடு, வாரான் - எதிர்மறை. உண்டேன் - உடன்பாடு, உண்ணேன் - எதிர்மறை. உளது - உடன்பாடு, இலது - எதிர்மறை. உண்டு - உடன்பாடு, இல்லை - எதிர்மறை. இது கனி கனியன்று என வரும்.

தெரிநிலை வினைக்கண் ஆ, ஏ, அல், இல், ஆல், ஏல், ஈர் என்பவை எதிர்மறை உணர்த்தும் இடைச் சொல்லாக வரும். இவற்றுள் ஆ, ஏ என்பவை இடைநிலையாக வரும். ஆ - ஈற்றில்வரின் பலவின்பால் விகுதியாகவும், எதிர்மறையாகவும் நிற்கும். ஏனைய ஐந்தனுள் அல் இடையிலும் ஈற்றிலும் வரும். ஏ, இல் இடையில் மட்டும் வரும். ஆல், ஏல், ஈர் ஈற்றில் மட்டும் வரும்.

எ.டு:

ஆ - உண்ணான், உண்ணாள், உண்ணார், உண்ணாது எனவும், உண்ணா எனவும் வரும்.

அல் - வாரல்ன், காணலன், சேரல், போகல் எனவரும்.

ஏ - வாரேன், செய்யேன் எனவும்,

இல் - வந்திலன், கண்டிலன் எனவும் வரும்.

ஆல்,ஏல்,
ஈர் - மறால், கொளாஅல் எனவும் வாரேல், செய்யேல் எனவும் , வாரீர், செய்யீர் எனவும் வரும்.

அல், இல் என்னும் பண்படிகள், ஐம்பால் மூவிடஞ்சுட்டும் விகுதிகளைப் பெற்று, எதிர்மறைக் குறிப்பு வினைகளாக வரும்.

எ.டு: அல்லேன், அல்லை, அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல எனவும் இலேன், இல்லை, இல்லன், இல்லள், இலர், இன்று, இல எனவும் வரும்.

**அல் - இல் வேறுபாடு**

அல் (அன்று) என்னும் எதிர்மறை, குறித்த ஒன்றை மறுத்துப் பிறிதொன்றைக் கொண்டு நிற்கும். இல் என்னும் எதிர்மறை பொருளின் இல்லாமையை உணர்த்தும்.

எ.டு: இது பசுவன்று எனின், காளை அல்லது பிற விலங்கினுள் ஒன்றை உணர்த்தும். பசு இல்லையென்றால், பசு இவ்விடத்தில், என்னிடத்தில் இல்லை என்றும், பசு என்னும் பொருள் இல்லை என்றும் பொருள்.

**தெரிநிலை - வினையெச்சம் (வினைக்குறை)**

(தெரிநிலை) வினையெச்சம், வினை எஞ்சு கிளவி, வினைக்குறை, வினையொழிபு, குறைவினை, வினைக்குறை என்பவை ஒரு பொருட் சொற்கள். எச்சம் - குறை ஈண்டு முழுமை பெறாமல் குறைந்து நிற்கும் வினைச் சொல்லை உணர்த்தும், முற்றி நிற்றலாவது வினையின் பகுதி, கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை, பாலும் இடமும் காட்டும் விகுதியாவும் நிறைந்து நிற்றல். எச்சமாவது பால் இடம் காட்டும் விகுதி மட்டும் குறைந்து நிற்றல். அஃதாவது, நடந்தான் என்பது முற்றுவினை. அதன்கண் பாலிடங்காட்டும் விகுதியாகிய ஆன் என்பது குறைந்து நடந்து, நடக்க, நடக்கின்ற எனவருபவை வினைஎச்சம் அல்லது வினைக்குறை.

எச்சம், குறை, ஒழிபு என்னும் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் சிறிது பொருள் வேறுபாடுடையவை. எச்சம் என்பதற்கு முழுமை பெறாமல் குறைந்து நிற்பது என்பதும், ஒரு வினையைப் பெற்று அதனொடு முடியவேண்டி நிற்பது என்பதும் பொருள். குறை என்பதற்கு முற்றாமல் குறைந்து நிற்பது என்பது பொருள். ஒழிபு என்பதற்கு ஒழிந்து நிற்கும் ஒரு சொல்லைப் பெறநிற்பது என்பது பொருள்.

வினை என்பது இருதிணை ஐம்பால் மூவிடப் பொருள்களின் இயக்கமாகும். அவ்வியக்கங்களை ஒரு வினைப் பகுதியொடு காலம், பாலிடம் காட்டும் உறுப்புக்களொடு கூட்டி, ஒரு வினை முதலுக்கு உரியதாகக் கூறுமிடத்து, அவை வினைச்

சொற்கள் எனப்படும். அஃதாவது நடத்தல் என்பது ஒரு வினையின் பெயர். அது நடந்தான், நடக்கிறான், நடப்பான், நடவான் என்னுமிடத்து வினைச்சொல். இவ்வினைச் சொற்களில் தொழில் நிலை உணர்த்தும் பெயர் காலம் பாலிடங்காட்டும் இடைச் சொற்கள் இணைந்து முழுமையாக நிற்கின்றன. இவற்றுள் பாலிடம் காட்டும் விகுதிகள் குறையின் நடந்து என நிற்கும். இவ்வாறு வருவனவே வினையெச்சம் எனப்படும்.

ஒரு வினை முதல் (கருத்தா) தனித்தோ, பிறவினை முதலின் துணையோடோ, ஒரு செயலைப் புரியுமிடத்துப் பலவினை நிகழ்வுகள் நேரின், யாதானும் ஒன்றை முற்று வினையாகக் கொண்டு, மற்றவற்றை எச்சமாக்கிக் கொள்ளும். அம்முறையில் சொற்றொடர்கள் ஆக்கம் பெறும்.

எடுத்துக் காட்டாக, ஒருவன் காலையில் எழுந்து பல செயல்களைச் செய்து பின் அலுவலகத்திற்குச் செல்கின்றான். இது பற்றிக் கூறுமிடத்துச் சாத்தன் காலையில் எழுந்தான், நீராடினான், உண்டாள், பின் அலுவலகத்திற்குச் சென்றான் எனலாம். இவற்றை ஒரு தொடராகச் சுருக்கிக் கூறுமிடத்துச் சாத்தன் காலையில் எழுந்து, நீராடி, உண்டு, பின் அலுவலகம் சென்றான் எனவரும். இத்தொடரில் வினைகள் யாவும் ஒரு கருத்தாவினுடையவை. ஆதலின், இறுதியாக நிகழ்ந்த வினையால் மட்டும் பாலிடங்காட்டும் விகுதிகளை அமைத்து ஏனையவற்றை எச்சமாக்கிக் கூறலாம். இது ஒரு கருத்தாவின் செயல்களாக அமைந்ததொடர்.

சில தொடர்கள், பல கருத்தாவின் தொழில்களைக் கொண்டு, ஒரு கருத்தாவின் வினையொடு முடியும். அஃதாவது, வேலன் கட்டளையிடக் கண்ணன் சமைக்கச் சாத்தன் பரிமாறத் தேவன் காணப் பூதன் உண்டான் எனவரும். இத்தொடரில் இட, சமைக்க, பரிமாற, காண என்பவை வேறுவேறு வினை முதல்களின் செயல்கள் அவையெல்லாம் உண்டான் என்னும் பூதனுக்குரிய வினையொடு முடிந்தன. காரணம் அவையெல்லாம் பூதன் வினைக்குத் துணையாகக் காரணமாக நிற்றலின்.

ஒரு தொடரில் பல கருத்தாவின் செயல்வந்து, யாவும் இறுதி வினைமுற்றொடு முடியாமல், இடையே முடிந்து பின் எச்சமாகியும் தொடரும்.

எ.டு: சாத்தன் வைகறையில் பறவைகள் ஒலிக்கக் கதிரவன் எழத் துயில் நீங்கி, நீராடி, மனைவி உணவளிக்க, உண்டு, பின் அலுவலகம் சென்றான் என்னும் இத்தொடரில் நீங்குதல், நீராடுதல், உண்ணுதல், சாத்தனுடைய வினைகள் ஒலித்தல் பறவைகள் வினை. எழுதல் கதிரவன் வினை. அளித்தல் மனைவியின் வினை. இவற்றுள் ஒலிக்க என்னும் எச்சம் எழ என்பதனோடும், எழ என்னும் எச்சம் நீங்கி என்பதனோடும், நீங்கி என்னும் எச்சம் ஆடி என்பதனோடும், ஆடி என்னும் எச்சம் உண்டு என்பதனோடும், உண்டு என்னும் எச்சம் சென்றான் என்பதனோடும் முடிந்தன. சில வினையெச்சங்கள் தன் கருத்தா வினையிலும், சில தன் கருத்தா பிறகருத்தா வினையிலும் முடியும்.

வினை எச்சங்கள் காலத்தொடு அமைந்து, தன்கருத்தா வினையொடும், பிறகருத்தா வினையொடும் முடியுமாதலின், அவற்றை யெல்லாம் ஈறுபற்றி வகைப்படுத்தி, வாய்பாட்டு முறையில் இலக்கண நூலார் உணர்த்தியுள்ளனர். எல்லா வினைகட்கும் 'செய்தல்' என்பது பொது வினையாதலின், அதன் அடிப்படையில் வாய்பாடுகளும், ஈறுபற்றிச் சில இடைச் சொற்களும் அமைந்தன.

**வினை எச்ச வாய்பாடுகளும்**
**ஈற்றிடைச் சொற்களும்**

| வாய்பாடு | | இறுதி இடைச் சொற்கள் | | |
|---|---|---|---|---|
| செய்து | செய்யியர் | பின், | இடத்து, | ஏல் |
| செய்யூஉ | செய்யிய | முன், | வான், | உம் |
| செய்பு | செயின் | கடை, | பான், | மேல் |
| செய்யா | செய | கால், | பாக்கு | மே,மை |
| செய்தென | செயற்கு | வழி, | ஆல், | து |

**இவற்றின் காலநிலைகளும் பொருளமைப்பும் வருமாறு :**

செய்து : செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் இறந்த காலச் சொல்லாகப் பயின்று வரும். த் ட் ற் இன் என்பவை இறந்தகால இடைநிலைகளாகும். இவற்றுள் த் ட் ற் என்னும் இடைநிலைகளைப் பெற்றுவருமிடத்து 'செய்து' என்னும் வினையெச்சம் வடிவு திரியாமல் வரும். இன் இடைநிலை பெறுமிடத்து இகரமாகவும் யகரஒற்றாகவும் திரியும். செய்து என்பது திரிந்து அளபெடையீறாகவும் வரும்.

எ.டு: ஒத்து நின்றான், உண்டு வந்தான், கற்று நின்றான் எனவும், கொளீஇச் சென்றான், உடீஇ நின்றான் எனவும், உறிஞ்சிக் குடித்தான், போற்றி நின்றான், ஓடிச் சென்றான் எனவும், போய்ப் பாத்தான், கூய்ச் சென்றான் எனவும் விராஅய்க் கிடந்தது, உலாஅய்ச் சென்றது எனவும் வரும்.

ஒத்தான், உண்டான், கற்றான் என்னும் முற்று வினைகள், பாலிடங்காட்டும் விகுதி குன்றிய விடத்து, அவை ஒத்த - உண்ட - கற்ற என நிற்கும். வல்லொற்றுக்கள் தமிழில் சொல்லிறுதியாக வாரா. ஆதலின், வல்லொற்றை முடிக்கும் ஓசையாகிய உகரம், விகுதிபோல வந்து ஒத்து, உண்டு, கற்று என நிற்குமாதலின், இவ்வகையினவற்றைச் செய்து என்னும் வாய்பாட்டில் அடக்கினார். த், ற், ட் ஒற்றிடை நிலைகள் சில முதனிலைத் தொழிற் சொற்களுடன் வாரா. அவ்வழி அவை 'இன்' என்னும் இடைநிலையை ஏற்கும். இவ்விடைநிலை சில சொற்களில் னகர ஒற்றுக் குன்றி இகர அளவில் நிற்கும். சில சொற்களில் இவ்இகரம் யகர ஒற்றாகத் திரிந்தும் வரும்.

எ.டு: உறிஞ்சி நின்றான், போற்றிப் பேசினான், தழுவி அணைத்தான், கெழுமி நின்றான், தேடிச் சென்றான், ஓதி உணர்ந்தான், கூசி நின்றான், போய்ப் பார்த்தான், தாஅய்ச் சென்றான் எனவரும்.

செய்து என்னும் இவ்வாய்பாட்டு வினையெச்சம் செய்யுளகத்து ஓசை இன்பமும், தளைநிலையும், சீர்நிலையும் கருதி ஏற்புடைய முதனிலைகளில் இகர ஈறு அளபெடை வடிவில் திரிபாக வரும்.

எ.டு: நடைஇ (நடந்து) தழீஇ (தழுவி) உடீஇ (உடுத்து) நிறீஇ (நிறுத்து) விராஅய் (விரவி) எனவரும்.

மற்றும் பெயர்க்கும், வினைக்கும் பொதுவாய் சில ஐயீற்று முதனிலைச் சொற்கள், அளபெடுத்து வினையெச்சமாகத் திரிந்தும் வரும்.

எ.டு: தைஇ (தைத்து) நின்றான். நசைஇ (நச்சி)ச் சென்றான் எனவரும்.

சொல்லாக்க நெறியுணராத உரையாசிரியன்மார், பெயர் முதனிலைகள் அளபெடுத்து வினையெச்சமாகும் என்றும்,

அவை சொல்லிசை அளபெடை எனப்படும் என்றும், கூறிச் சென்றனர். அதுபொருந்தாது என்பது எழுத்துப் படலத்துள் விளக்கப்பட்டது.

*செய்யூஉ:* செய்யூஉ என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அளபெடை வடிவத்திலேயே அமைதல் வேண்டும். சிலர் அளபெடையின்றி வழங்குவர். இது செய்து என்னும் வாய்பாடு போல் இறந்தகாலம் பற்றிவரும். செய்தென்னும் வாய்பாட்டுப் பொருளினின்றும் இது சிறிது நுணுக்கமான பொருட் சிறப்புடையதாகும். அதனான் பிரித்துக் கூறப்பட்டது. இவ் எச்ச வினையின் தொழில் முடிக்கும் சொல்லாக வரும். வினைமுற்றின் தொழிலோடு இடையீடின்றி ஒருங்கு நிகழும்.

எ.டு: "படுமகன் கிடக்கை காணூஉ ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" (காணூஉ - கண்டு கொண்டே) நிலம் புடையூஉ எழுதரும் வலம்படு குஞ்சரம் (புடைத்துக் கொண்டே) எனவரும். வழக்கில் அளபெடையின்றி உண்ணூ வந்தான், தின்னூஉ வந்தான் எனவரும். உண்டு கொண்டே, தின்று கொண்டே என்பது பொருள்.

செய்பு : செய்பு என்னும் இவ்வாய்பாட்டு எச்சம் செய்து என்னும் எச்சத்திற்கு இனமாய் இறந்த காலம் பற்றி வரும். இது முடிக்கும் சொல்லாக முற்று வினையின் தொழிலுக்குத் துணை என்னும் நிலையில் வரும்.

எ.டு: புலராப் பிச்சிலை இடையிடுபு தொடுத்து, வாக்குபுதரத்தர உண்டு, தெரிபுதெரிபு குத்தின ஏறு எனவரும். உரை நடையில் உரினுபு வந்தான், கற்குபு வந்தான் எனவரும்.

செய்யா : இச்சொல் "உண்ணா குதிரைகள்" என எதிர்மறை வினைமுற்றாகவும், 'உண்ணா கிடந்தன''என எதிர்மறை வினையெச்சமாகவும்' உண்ணாக் குதிரைகள்' என எதிர்மறைப் பெயரெச்சமாகவும் உடன்பாட்டு வினையின்கண் 'உண்ணாக் கிடந்தன' என வினையெச்சமாகவும் வரும். செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாக வருமிடத்து வல்லினம் மிகும்.

*எ.டு: கல்லாக் களிப்பர் (கற்றுக் களிப்பர்) நிலங் கிளையா நாணி நின்றோள் (கிளைத்து நின்றாள்) பெய்யாக் கொடுக்கும் மழை (பெய்து கொடுக்கும்) எனவரும், இது பலபொருளொரு*

சொல்லாய் அமைந்து வடிவு வேறுபட்டு நிற்றலின், செய்து என்னும் எச்சத்திற்கு இணையாகத் தனி ஒருவாய்பாடாகக் கொள்ளப்பட்டது.

இச்சொல் எதிர்மறைப் பெயரச்சமாக, வருமிடத்துத் தகர உயிர்மெய் கெட்டு நிற்பதாகக் கொள்வர் சிலர். அவர்கள் உண்ணாத குதிரைகள் என்பது, ஈறு கெட்டு வருமொழிமிக்கு உண்ணாக் குதிரைகள் என அமைந்ததாகக் கூறுவர். எதிர்மறை வினையெச்சமாதற்கண் உண்ணாக் கிடந்தன என வருமிடத்து, அது உண்ணாது கிடந்தன - உண்ணாமற் கிடந்தன, உண்ணாமே கிடந்தன எனத், து, மல், மே என்னும் விகுதிகள் கெட்டு நின்றதாகக் கொள்வர் ஒரு சாரார்.

செய்து, செய்யூஉ, செய்பு, செய்யா என்னும் இந்நான்கு வாய்பாட்டு எச்சங்களும் தம் கருத்தாவிற்குரிய வினையொடு முடியும். சினை வினையாயின் அதன் முதலொடும் முடியும்.

**எ.டு:** சாத்தன் உண்டு வந்தான், சாத்தன் உண்டு, ஓடி வந்தான், உண்ணூஉ வந்தான், உண்குபு வந்தான், உண்ணா வந்தான் எனவரும். சாத்தன் கால் ஒடிந்து வீழ்ந்தது, சாத்தன் கால்ஒடிந்து வீழ்ந்தான் எனவும் வரும்.

இவ் விதிமுறைக்கு மாறாகப் பிறவினை முதல் வினையொடு முடியின் அவ்விடத்து அது 'செய' என்னும் வாய்பாட்டெச்சத்தின் திரிபாகக் கொள்ளப்படும். இம்மரபினைத் தொல்காப்பியர்,

"வினையெஞ்ச கிளவியும் வேறுபல்குறிய"

(தொல்.சொல்.450)

என்பார். அஃதாவது வடிவம் திரிந்தும் வரும் என்பது கருத்து.

**எ.டு:** ஞாயிறு பட வந்தான் என்பது ஞாயிறு பட்டு வந்தான் எனவரும். உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய யாவிரி நீழல் துஞ்சும் என வருமிடத்து, ஒடித்த - உண்ண - எஞ்சிய எனக் கொள்ளல் வேண்டும். அவன் வருகைக்கு ஞாயிறுபடுதல் ஏதுவாயினமையின், பட்டு என்பது பட என்னும் செயவென் எச்சத்திரிபாயிற்று. யாமரம் எஞ்சிய நிற்பதற்கு யானை உண்டது காரணமாகலின், உண்ண என்னும் செயவென்எச்சம் உண்டு எனத்திரிந்து நின்றது என்பர். கோழி கூவிப்பொழுது ப[illegible]ந்தது என [illegible]டனிகழ்ச்சிக் குறிப்பாக நின்றது என்க. இதனைச் சி[illegible] முனிவர் கோழியைக் கூவுவித்துப்

பொழுது புலர்ந்தது எனப் பிறவினைப் பொருட்டாய் நின்றது. இவ்வாறு வருவனவற்றை வடநூலார் அந்தர்ப்பாலிதணிச் என்பார் என்று கூறுவர். அவர் கருத்து ஒவ்வாது என அரசஞ் சண்முகனார் மறுத்துரைப்பார்.

இனி வழக்கின் கண் யான் இவ்வூர்க்கு வந்து பன்னாட்கள் ஆயின என்னுமிடத்து, வந்து என்னும் செய்தென் எச்சம் பிறகருத்தாவின் வினையொடு முடிந்துள்ளதே எனின், இது இருதொடர்கள் மரூஉவாகி ஒரு தொடர் போல அமைந்த தொடராகும். அஃதாவது, யான் இவ்வூர்க்கு வந்துள்ளேன் பின்னர் வரப்பன்னாட்கள் ஆயின என்னும் இருதொடர்கள் இவ்வூர்க்கு வந்து பன்னாட்களாயின என வந்தது. இவ்வாறு வழக்கின்கண் கருத்தை உள்ளடக்கி வழக்கின் வருவதை வழுவமைதியாகக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறே, யான்பாட அவள் ஆடினாள் - என்பதும் யான் பாடினேன். அவள் ஆடினாள் என்பதும், யான்பாடி அவள் ஆடினாள் என வழுவாக வரும். யான் சொல்லி அவன் எழுதினான் என்பதும் அவ்வாறு அமைந்ததேயாகும். பேச்சுவழக்கில் இலக்கணம் சிதைதல் இயற்கை மரபாகும். இலக்கிய வழக்கில் வழுவெனக் களையப்படும். இங்ஙனம் செய்து என்னும் வடிவுதிரிந்துவரும்.

**செய்தென :** செய்தென என்னும் வினையெச்சம், பயனிலையாக வந்து முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிலுக்குத் தான் காரணமாதலை உணர்த்தி இறந்தகாலம் பற்றி வரும்.

**எ.டு:** உண்டெனப் பசி நீங்கிற்று. சோலைபுக்கென அயர்வு தீர்ந்தது எனவரும். இவ்வாய்பாட்டுச் சொல்லை செய்து + எனப்பிரிப்பின் எச்சப்பொருள் தாராமல் பிழைபடும். 'என' என்னும் இடைச்சொல் பொருள்தராது. இது, 'என்' என்னும் தன்மை ஒருமை வினை ஈறு பாலிடம் உணர்த்தாமல் திரிபுற்ற வடிவமாகும். அதனான் அது காரணப்பொருள் தருவதாயிற்று. இதனை இக்கால மொழியியவார் சிலர் உண்டேன், புக்கேன் என்னும் முற்று வினைகளின் திரிபென்றும், வினையெச்ச வாய்பாடாகக் கொள்வது அவ்வளவு ஒவ்வாது என்றும் கருதுவர்.

**செய்யியர் - செய்யிய :** இவ்விரு வாய்பாடுகளும் ஒத்த பொருளுடையன. இவை முடிக்கும் சொல்லால்

உணரப்படும் தொழிற்குப்பின் நிகழ்வனவாய்ப் பொருட்டுப் பொருளில் எதிர்காலம் பற்றி வரும்.

எ.டு: காணியர் வந்தார் - காணியர் வம்மின் எனவும், உண்ணிய வந்தான், தேடிய வந்தான் எனவும் வரும். செய்யியர் என்பது தொழிற்பெயராக வரும் சொல்வேறு. அது பசலை உணீயர் வேண்டும் எனவரும். இதற்கு உண்ணுதல் வேண்டும் என்பது பொருள். உணீயர் வந்தார் என்னும் எச்சத்திற்கு உண்ணும் பொருட்டு வந்தார் என்பது பொருள். உணீயர் என்பது பன்மை பற்றியும், உணீய என்பது ஒருமை பற்றியும் நின்றன. எனினும், இருவகை வழக்கிலும் பொதுவாக வருகின்றன. மற்று வாழியர் நெடிது, வாழிய உலகே என வியங்கோளீறாக வரும். இடைச் சொற்கள் வேறு. ஒரு சொல்லாக வரும், இவ் எச்சங்கள் வேறு என அறிக.

செயின் : செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பெரும்பான்மையும் காரணப் பொருட்டாய் எதிர்காலம் உணர்த்தி வரும்.

எ.டு: மழை பெய்யின் குளம் நிறையும். மெய்யுணரின் வீடு பெறும் எனவரும்.

மற்று இன் ஈறு காப்பின், ஓப்பின், ஊர்தியின், இழையின் எனச் சாரியையாகவும், கற்றலின் உயர்ந்தான், கேட்டலின் இறந்தான் என மூன்றாம் வேற்றுமை உருபாகவும் வரும். ஆதலின், ஒரு சொல்லாக நிற்கும் இவ்வினை எச்சத்தின் தொடர் மொழிப் பொருளை, இடம் நோக்கிஉணர்தல் வேண்டும். இவ்எச்சம் உலக வழக்கில் உண்ணுமாயின், வருமாயின், கூறுமாயின் எனத்திரிந்தும் வரும்.

செய : செய என்னும் வாய்பாட்டு எச்சம் கூறப்படும் கருத்திற்கேற்பக் காரணப் பொருட்டிலும், காரியப் பொருட்டிலும், இறந்த காலம் பற்றியும், எதிர்காலம் பற்றியும், இது நிகழ, இது நிகழா நின்றது என நிகழ்காலம் பற்றியும் வரும்.

எ.டு: மழை பெய்யக் குளம் நிறைந்தது. (காரணப் பொருட்டு) மழை பெய்யக் குளம் நிறையும். குளம் நிறைய மழை பெய்யும் எனவும், உண்ண வந்தான், உண்ண வருகின்றான், உண்ண வருவான் (காரியப் பொருட்டு) எனவும், ஞாயிறுபட

வந்தான் (இது நிகழா நிற்க, இது நிகழ்ந்தது என்னும் பொருட்டு) எனவும் வரும். கோழிகூவ வந்தான் என்பதும் அது.

மற்று செயவென் எச்சம் யான் அவனைக்காண விரும்பினேன், அவன் என்னுடன் வர விரும்பினான் என வருமிடத்துக் காணல், வரல் என்னும் தொழிற் பெயர்ப் பொருட்டாய் நிற்கும் எனவும், செயவென் எச்சத்தை ஈறுகுன்றிய தொழிற் பெயராகக் கொள்ளலாமென்றும் ஒரு சில ஆய்வாளர் கருதுகின்றனர். அவர் கருத்து ஒவ்வாது. தொழிற்பெயர் காலம் பெறாது. காலக் குறிப்பின்றேல் செய என்பது வினையாகாது. ஆதலின், காண விரும்பினேன் என்பதற்குக் காண்பான் விரும்பினேன் (பானீற்று வினையெச்சம்) வரவிரும்பினான் என்பதற்கு வருவான் விரும்பினான் (வானீற்று வினையெச்சம்) என்பனவே பொருளாகு மென்றுணர்தல் வேண்டும். ஈறுகுன்றிய தொழிற்பெயர்கள் செயப்படு பொருளை அவாவிநிற்கும். வேண்டும், தகும் என்னும் பொது வினைகளொடு முடியுமிடத்து உண்ணவேண்டும், காண வேண்டும், சொல்ல வேண்டும், சொல்லத்தகும் எனவரும். இவை ஈறு குன்றாமல் காணல் வேண்டும், சொல்லல் தகும் என்றும் வரும்.

எனவே செய என்னும் வினை எச்சத்தையும் செயல் என்னும் தொழிற்பெயர் ஈறுகுன்றிய செயஎன்னும் சொல்லையும் பொருள் நோக்கி உணர்தல் வேண்டும். வினை கொண்டு முடிவன எல்லாம் வினையெச்சம் எனக் கொள்ளின் வினையொடுமுடியும் வேற்றுமை உருபேற்ற பெயர்களும், வினையொடு முடியும் இடைசொற்களும், வினையெச்ச மெனப்பட்டு வழுவாக முடியும் என்க.

இனி, செயவென் எச்சம் வியங்கோட் பொருளிலும் வருமென்று கூறி நீவாழ! நீசெல்ல, அவன்வர,, வரப்பு உயர என உதாரணம் தருவர். இக்கால மொழியாசிரியர் சிலர். இயர், இய. க என்னும் வியங்கோள் விகுதிகளைப் பெற்று வாழியர்! வாழிய! வாழ்க! என வருதலன்றி, அகரஈறாக நிற்கும் செயவென் எச்சமாக வியங்கோள் வினைவாராதென்க. சாவ, வாழ, வர என்பவை, செயவென் எச்சமாக நிற்பதன்றி. வியங்கோளாகா என அறிக. இவை வியங்கோளாக வரின் ககர உயிர் மெய்யாகிய விகுதி பெற்றுச் சாக! வாழ்க! வருக! எனவரும்.

செயற்கு : செயற்கு என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொட்டுப் பொருள்பட எதிர்காலம் உணர்த்தி வரும்.

எ.டு: உணற்கு வந்தான், தினற்கு வந்தான் எனவரும். உண்ணுதற் பொருட்டு வந்தான், தின்னுதற் பொருட்டு வந்தான் என்பது பொருள்.

இதனை நான்கன் உருபேற்ற தொழிற்பெயர் எனக் கருதுவர் சிலர். அது தவறு உணற்கு என்னும் வினையெச்சம் வேறு உணல் + கு = என்னும் உருபேற்ற தொழிற் பெயர்வேறு. இரண்டும் பொருளால் வேறுபட்டனவாகும்.

உணற்கு வந்தான் என்பது நான்கன் உருபேற்ற தொழிற் பெயராயின், வீட்டிற்கு வந்தான் என்னுமிடத்து, வீடு கோடற் பொருளாக நிற்றல் போல, உணல் என்பது கோடற்பொருளாகும். கோடற் பொருளாயின், ஒருவர் உண்ணுதற்குத் தான் உணவுப் பொருளாக வந்தான் என்று பொருள் தரும். மற்று குவ்வுருபிற்குப் பொருட்டுப் பொருளும் உண்டு ஆதலின் உண்ணுதற் பொருட்டு வந்தான் எனின் உணற்கு என்பது உருபேற்ற தொழிற் பெயராகும். பிறர் உண்ணுதற்குத் தான் பொருளாக வந்தான் என்பது பொருளாகும். எனவே, உணற்கு என்னும் வினையெச்ச வாய்பாடு வேறு - குவ்வுருபேற்ற தொழிற்பெயர் வேறு என்பதும் பொருளமைவு நோக்கி அவற்றை உணர்தல் வேண்டும் என்பதும் விளங்கும்.

## வினை எச்ச ஈறுகள்

ஒரு வினைச்சொல்லையடுத்து ஈறாக நிற்கும் விகுதியிடைச் சொல் வினையெச்சப் பொருளில் ஆக்கம் பெற்றுவரும். பின்முன் முதலிய வினையெச்சங்களை இனிக் காண்போம்.

*பின் :* 'பின்' ஈற்று வினையெச்சம், பெயரெச்ச வடிவில் நிற்கும் சொல்லொடு கூடி ஒரு சொல் நீர்மைத்தாய் வரும். பிளவுபட்டு விட்டிசைப்பின் காலப் பொருளும் இடப் பொருளும் தரும் பெயர்ச் சொல்லாகும். பின்னீற்று வினையெச்சம் மூன்று காலமும் பற்றி வரும்.

எ.டு: *'கற்றபின் நிற்க அதற்குத்தக'* - நீயிர்பொய் கூறியபின் மெய்கூறுவார் யார் எனவரும். கற்றபின், கூறியபின் என்னும் இவ்வெச்சங்கள் கற்றிருப்பின், கூறியிருப்பின் எனப் பொருள் தரின் இறந்த காலமும், கற்கின், கூறின் எனப் பொருள்தரின் நிகழ்காலமும் எதிர்காலமும் உணர்த்தும்.

முன் : 'முன்' ஈற்று வினையெச்சம் செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல் வடிவிலும், ஈறு ஆகாரமாகத் திரிந்த வடிவிலும் நிற்கும். சொல்லொடு கூடி ஒருசொல் நீர்மைத்தாய் வரும். பிளவு பட்டிசைப்பின், காலப் பொருளும், இடப் பொருளும் தரும் பெயர்ச் சொல்லாக வரும். இவ்வெச்சம் மூன்று காலமும் உணர்த்தி வரும்.

எ.டு: மருந்துண்ணாமுன் நோய் தீர்ந்தது. மருந்துண்ணாமுன் நோய் தீரும் எனவும், உன்னைக் காணுமுன் மகிழ்ந்தேன், காணுமுன் மகிழ்வார் எனவும் வரும்.

இவை இறந்த காலம் பற்றி நிற்பின் தின்றதனான், கண்டதனான் என்றும், நிகழ்வும் எதிர்வும் பற்றி நிற்பின் உண்ணின், காணின் என்றும் பொருள்தரும்.

கால் : கால் ஈற்று வினையெச்சம் பெயரெச்ச வடிவில் நிற்கும். சொல்லொடு கூடி ஒரு சொல் நீர்மைத்தாய் வரும். பிளவு பட்டிசைப்பின், உயிரீற்றின்முன் வலிமிகாமல் காலப்பொருள் தரும். இவ்எச்சமும் மூன்று காலமும் பெற்று வரும்.

எ.டு: "வணங்கி நாம் விடுத்தக்கால்" (கலி - 35) விடுக்கின் என்பது பொருள். "அகன்றவர் திறத்தினி நாடுங்கால்" (கலி-16) நாடின் என்பது பொருள்.

கடை : 'கடை' ஈற்று வினையெச்சம் பெயரெச்ச வடிவில் நிற்கும். சொல்லொடு கூடி ஒருசொல் நீர்மைத்தாய் நிற்கும். பிளவுபட்டிசைப்பின் இடப் பொருள் தரும்.

எ.டு: "தொடர்கூரத் துவாமை வந்தக்கடை" (கலி-22) வந்தக் கடை = வந்ததாயின் என்பது பொருள். "ஈதல் இயையாக் கடை" (குறள் - 230) இயையாதாயின் என்பது பொருள்.

வழி : 'வழி'யீற்று வினையெச்சம் முதனிலைத் தொழிற்பெயர்ச் சொல்லொடு கூடி - செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல்லொடு முடியும். மூன்று காலமும் பற்றிவரும்.

எ.டு: "தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே" (கலி - 130) (தொடத்தொட என்பது பொருள்) உரைக்கும் வழி கேட்க (உரைப்பின் கேட்க' என்பது பொருள்) எனவரும்

இடத்து : 'இடத்து' ஈற்றுவினையெச்சம் செய்த, செய்யும் என்னும் வாய்பாட்டு வடிவச் சொற்களொடு கூடி, ஒருசொல் நீர்மைத்தாய் மூன்று காலத்தும் வரும். பிளவுபட்டிசைப்பின் ஏழாம் வேற்றுமை உருபின் பொருள்தரும்.

எ.டு: "களையுநர் கைசொல்லும் காழ்த்த விடத்து" (குறள்-879) காழ்ப்பற்றால் என்பது பொருள்) உரைக்குமிடத்து = உரைப்பின் என்பது பொருள்.

வான் - பான்: வானீற்று வினையெச்சமும் பானீற்று வினையெச்சமும் தொழிற்பெயர்ச் சொல்லொடு கூடி பொருட்டுப் பொருளில் எதிர்காலம் உணர்த்திவரும்.

எ.டு: கொல்வான் கொடித்தானைக் கொண்டு டெழுந்தான். கொல்வான் = கொல்லும் பொருட்டு. அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம். அலைப்பான் = துன்புறுத்தல் பொருட்டு எனவரும்.

பாக்கு : பாக்கு ஈற்று வினையெச்சம் 'செயற்கு' என்னும் வாய்பாட்டெச்சத்தின் திரிபாய் பொருட்டுப் பொருளில் வரும்.

எ.டு: "புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்" (கார் நாற்பது-11) தருபாக்கு = ஈட்டுதற் பொருட்டு, 'வாக்கு' என்னும் சொல்லையும், எச்சமாகக் கொள்வார் நச்சினார்க்கினியர். பாக்கு என்னும் விகுதி தொழிற்பெயர் விகுதியாகவும் வரும். "நெஞ்சத்தால் காதலராக வெய்துண்டல் அஞ்சுதும் வேபாக்கறிந்து" (குறள் - 1128) எனவரும்.

ஆல் -ஏல் -உம் : இம்மூன்றீற்று வினையெச்சங்களும் செயின் என்னும் வாய்பாட்டெச்சத்தின் திரிபுகளாகக் காரணப் பொருளில் எதிர்காலம் பற்றிவரும்.

எ.டு: "அற்றல் அளவறிந்துண்க" (அறின்) "இன்று நம் ஆனுள் வருமேல் அவன் வாயில் கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழி" (வரின்) காண்டலும் இதுவே சொல்லும் - (காணின்) எனவரும்.

மல்-மே-மை-து : இந்நான்கீற்று வினையெச்சங்களும் எதிர்மறை வினையெச்சமாக வரும்.

எ.டு: கூறாமல் குறித்தன் மேற்செல்லும் கடுங்கூளி என்றும், காணாமே நின்று கலங்கினான் என்றும், கூறாமை நோக்கிக் குறிப்பறிவார் என்றும், கேளாது நிற்பின் கெடும் என்றும் வரும்.

மல் என்பது அல் என்னும் எதிர்மறைச் சொல் எச்சப் பொருள் தருதல் வேண்டி மகரம் சேர்ந்து மல் என நின்றது. மை, மே - என்பவை மல் என்பதின் திரிபுகளாகும். து - என்பது உண்ணா தின்னா எனவரும் எதிர்மறைமுற்றுக்களை எச்சப்படுத்துதல் வேண்டி அமைந்த விகுதியாகும்.

இனி, பின், முன், கால், வழி, இடத்துப பெயர் நிலைச் சொற்கள், விகுதி இடைச் சொல்லாக நின்று, பிறிதொரு வினையொடு கூடி வினையெச்சமாக நின்று, பிறிதொரு வினைமுற்றொடு முடிதலைக் கருதி,

| | | |
|---|---|---|
| உறங்கும் போது கண்டேன் | - | சொன்ன பொழுதில் வந்தான் |
| பார்க்குமளவில் மகிழ்ந்தான் | - | சொன்னவரை செய்தான் |
| ஆறாம் வகுப்பு வரையில் படித்தான் | - | நான் சொன்னபடி செய்தான் |
| நான் சொன்னபடியால் வந்தான் | - | எண்ணுந்தொறும் மகிழ்ந்தான் |
| உண்டவுடன் உறங்கினான் | - | யான் உண்கையில் வந்தான் |

எனவரும். தொடர்களில் உள்ள போது, பொழுதில், அளவில், வரை, வரையில், படி, படியால், தொறும், உடன், கையில் என்பனவற்றை வினையெச்ச விகுதி என்று மயங்குவாரும் உளர். இவை பெயர்ச்சொல்லும் உருபேற்ற பெயருமாக அமைந்தனவாகும்.

## முற்றெச்சம்

தெரிநிலை, குறிப்பு ஆகிய இருவகை வினைமுற்றுக்களும் ஓர் எழுவாய்ப்பெயருக்குப் பயனிலையாய் முடிக்கும் சொல்லாகாமல், பிறிதொரு வினைமுற்றொடும் எச்சங்களொடும் முடியுமாயின், அந்நிலையில் அவை முற்றெச்சம் எனப்படும். அவற்றை செய்து செய்யூஉ எனத்திரித்துப் பொருள் கொள்ளுதல் மொழியிலக்கண மரபாகாது. முற்றாகவே வைத்து ஆய் என்னும் ஆக்கச் சொல்லை விரித்து மற்றொரு முற்றுவினையோடு முடித்தல் இலக்கணமாகும். மற்றும் குறிப்பு வினை முற்றுக்களை எச்சமாகத் திரிப்பின், அவை பெயரெச்சமாகத் திரிவதன்றி வினையெச்சமாகத் திரியாது என்பதையும் உணர்தல் வேண்டும். அவையும் ஆய் என்னும் ஆக்கச் சொல் விரியப் பெற்றே முடியும்.

எ.டு: காணான் கழிந்த வைகலும் உண்டு என்பதைக் காணானாய்க் கழிந்த வைகலும் உண்டு என விரித்தல் வேண்டும். காணாது கழிந்தான் என விரிப்பின், அது கண்டு என்னும் செய்தென் எச்சத்து எதிர்மறையாகி விடும். காணான் என்னும் இம்முற்றெச்சம் கழிந்த என்னும் பெயரெச்சத்தொடு முடிந்ததாகும். மோயினள் உயிர்த்த காலை (மோயினாளாய்) எனவிரியும். முகந்தனர் கொடுப்ப - முகந்தனராய்க் கொடுப்ப எனவிரியும் தெரிநிலை வினையாக வருங்கால்.

இம்முற்றெச்சம், இவன் உண்டனன் மகிழ்ந்தான், இவள் உண்டனள் மகிழ்ந்தாள், இவர் உண்டனர் மகிழ்ந்தார், இஃது உண்டது மகிழ்ந்தது, இவை உண்டன மகிழ்ந்தன எனப்படர்க்கை ஐந்து பாலிலும். பெயர்த்தனென் முயங்கயான், மக்களுள் இரட்டையா மாறினம், பிறந்துயாம் எனத்தன்மை இருபாலிலும், சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப - இன்னியம் இயக்கினிர் கழிமின் என முன்னிலை இருபாலிலும் வரும்.

குறிப்பு வினை முற்றெச்சம் : வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்து கொண்டு எனவும், அளிநிலை பெறாது அமரியமுகத்தள் விளிநிலை கேளாள் எனவும் விழுமியது கழிவதாயினும் எனவும், நிலமசைப் புரளும் கைய வெய்துயிர்த்து எனவும், படர்க்கை ஐந்து பாலினும், துணையில் நெஞ்சினேன் துயருழந்து இன்னலேன் எனவும், நீர்வார் கண்ணேம் தொழுது நிற்பழிச்சி எனத்தன்மை இருபாலினும், நீர்வார் கண்ணை நீயிவண் ஒழிய எனவும், வெள்வேல் வலத்தினிர் பொருள்

தரல் வேட்கையான் உள்ளீர் எனவும், முன்னிலை இரண்டு பாலினும் வரும்.

இவை விரியுங்கால் வில்லனாய், முகத்தனாய், கையினராய், விழுமியதாய், கையினவாய், நெஞ்சினேனாய், கண்ணேமாய் கண்ணையாய், வலத்தினிராய் எனவிரியும்.

குறிப்பு வினைகளும் அன்மை இன்மை என்பவற்றின் அடியாக அன்றி இன்றி என்னும் இரு சொற்களே வினையெச்சமாக வரும். அவை அல்லால், அல்லாமல், அன்றேல், அல்லாக்கால், இன்றேல் என்னும் ஈறு பெற்றும் திரிந்தும் வரும்.

## முற்றெச்ச வினைபற்றியதொரு சிறுகுறிப்பு

ஒரு முற்று வினைச்சொல் அத்தொடரின் முடிக்கும் சொல்லாக, பயனிலையாக அமையாமல், பிறிதொரு முடிக்குஞ்சொல்லொடு முடியுமிடத்து, அது முற்றெச்சம் எனப்படும். இருவகை வினைகளும் முற்றெச்சமாக வருமிடத்து, அவைமுடிக்குஞ் சொற்பொருளுடன் இடையீடில்லாத தொடர்புடையனவாக நிற்கும். பொருள் கொளுமிடத்துச் செய்து என்னும் எச்சத்தின் திரிபாகிய ஆய் என்பதனொடு இணைந்து பொருள்தரும். இதுவே தொன்னூலார் மரபாகும். அஃதாவது,

கண்ணனைக் கோவியர் கண்டனர், வியந்தனர், உவந்தனர், களித்தார் என்னும் தொடரைப் பொருள் கொள்ளுமிடத்துக் கண்டனராய், வியந்தனராய்க், களித்தனராய், உவந்தார் எனல் வேண்டும். மற்று, அவற்றின் பால்காட்டும் ஈறுகளை நீக்கிக் கண்டு, வியந்து, களித்து, உவந்தனர் எனல் சிறவாது காரணம் கைபுனை வில்லர் வாகையர் தாரினர் வீரர் வந்தனர் என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள் வில்லினராய், வாகையராய், தாரினராய் வந்தனர் என விரிதலன்றிப் பால்இடம் காட்டும் விகுதி குன்றி எச்சமாக வாராதாகலான் என்க. மற்றும், குறிப்பு வினைமுற்றுக்கள் வீரர் என்னும் பெயரொடு முடியுமாயின், ஆகிய என்னும் பெயரெச்சத்தொடு வில்லினராகிய வாகையராகிய தாரினராகிய வீரர் என்றே விரியும். ஆதலின், தெரிநிலை முற்றுக்களையும், அவ்வாறு விரித்தலே நேரிதென்க.

இனி, வினைமுற்று, வினைஎச்சம் என்பவற்றைப் பற்றிப் பயனற்றதொரு ஆய்வினைச் சிலர் மேற்கொண்டு எச்சந்தான் முற்றாக நிறையுமென்பார் சிலர். முற்றுத்தான் எச்சமாகும் என்பார்

சிலர். இருதிணை ஐம்பால் மூவிடம் பற்றிய வினைச் சொற்கள் ஆக்கம் பெறுமிடத்துத் தொழில் முதனிலைச் சொற்கள் கால இடைநிலைகளோடும், பாலிடம் காட்டும் விகுதிகளோடும் கூடி ஆக்கம்பெறும். முதலாவது ஆக்கம் கால இடைநிலைகளோடு கூடிநிற்றல். இரண்டாவது ஆக்கம் கூறுவோன் கருதும் பாலிடங்களைத் தரும் விகுதிகளொடு புணர்தல். எனவே, தனிச் சொல்லாக்கத்தின்கண் முதற்கண் கால இடைநிலைகளொடு புணர்ந்து நிற்கும் நிலையில் எச்சமாக நிற்கும். பின்னர், பாலிடங்காட்டும் விகுதிகளொடு கூடிமுற்றும். முற்றிய நிலையில் ஐம்பால் மூவிடப் பொருள்களுள் யாதானும் ஒன்றற்கு மேற்பட்ட வினைகளைப் புரியுமிடத்து. அவற்றைத் தனித்தனியே கூறின், அவ்வினைகள் முற்று வினைகளாகவே நிற்கும். அவற்றை இணைத்து ஒரு தொடராகக் கூறுமிடத்து இறுதியில் முடிக்கும் சொல்லாக நிற்கும். வினைமட்டும் முற்றாகவும், ஏனையவை எச்சமாகக் குறைந்தும் நிற்கும். அஃதாவது சாத்தன் என்னும் ஒரு கருத்தா உண்ணுதலாகிய ஒரு செயலைச் செய்த நிலையின் சாத்தன் உண்டான் எனவரும். ஒன்றற்கு மேற்பட்ட வினைகளைப் புரியின் சாத்தன் காலையில் எழுந்தான். நீராடினான் - உணவுண்டான் - பின் அலுவலகம் சென்றான். இவற்றை ஒரு தொடராக்கின் சாத்தன் காலையில் எழுந்து - நீராடி உணவுண்டு பின் அலுவலகம் சென்றான் எனவரும். இதன்கண் சென்றான் என்னும் ஒருவினைமட்டும் முற்றாக நிற்க மற்றையவை பாலிடங்காட்டும். விகுதிகளை விட்டு எச்சமாக நின்றன. எனவே தொடர்மொழியாக்கத்தின் கண் முற்றுக்கள் எச்சமாகும் என்பது விளங்கும்.

மற்றும் செய்துஎன் எச்சம் மட்டுமே முற்றின் திரிபாக வரும். பிறவாய்பாட்டு எச்சங்கள் முற்றாகத் திரியா, அவை எச்சமாகவே உருவாகி எச்சமாகவே நிற்கும். பெயரெச்சங்கள் யாவும் எச்சமாக உருவாகி முற்றுவன அல்ல. அவை வினையாலணையும் பெயர்கள் விகுதிகுன்றி எச்சமாக வருவனவேயாகும்.

## வினையெச்சங்கள் சென்று முடியும் இலக்கண முறைமை

செய்து, செய்யூஉ, செய்பு, செய்யா என்னும் வினையாயின் தம்வினை முதலொடும் முடியும். முற்றெச்சங்களும் அவ்வாறே முடியும். ஏனையவை தன் கருத்தா வினையொடும் முடியும். பிறகருத்தா வினையொடும் முடியும்.

எ.டு: சாத்தன் நடந்து வந்தான். கூற்றுவன் பரீஇ உயிர் செகுக்கும். சாத்தன் காணூஉ வந்தான். புலராப் பச்சிலை இடையிடுபு தொடுத்த, கல்லாக் களிப்பர் தலையாயார், சாத்தன் கால் ஒடிந்து வீழ்ந்தது. கண்டனன் வரும் எனச் செய்து முதலிய நான்கும் தம் வினைமுதல் வினைகொண்டு முடிந்தன.

**செய்தென :**

மழைபெய்தெனப் புகழ்பெற்றது - மழைபெய்தென மரம் தழைத்தது.

**செய்யியர் :**

மழை பெய்யியர் எழுந்தது - மழை பெய்யியர் டாலிகொடுத்தனர்.

**செய்யிய :**

மழைபெய்யிய முழங்கும் - மழைபெய்யிய வான் பழிச்சுதும்

**செயின் :**

மழை பெய்யின் புகழெய்தும் - மழை பெய்யின் குளம் நிறையும்

**செய :**

மழைபெய்யப் புகழ் பெற்றது - மழை பெய்ய மரம் குழைந்தது

**செயற்கு :**

மழை பெய்யற்கு முழங்கும் - மழை பெய்யற்குக் கடவுட் பராவுதும்

**பின் :**

தலைவனைப் பிரிந்தபின் தலைவி வருந்தினாள்
கணவன் இனிது உண்டபின் மனைவி உவந்தாள்

**முன் :**

கடுத்தின்னாமுன் நாத்துவர்ந்தது - கடுத்தின்னாமுன் நோய் தீர்ந்தது.

**கால் :**

உரைத்தக்கால் உரைபல்கும் - நாம் விடுத்தக்கால் இன்னே வருவார்.

**கடை :**

நல்வினைதான் உற்றக்கடை உதவும் - நல்வினைதான் உற்றக்கடை தீவினை சேரா.

**வழி :**

நல்வினை உற்றவழி உதவும் - நல்வினை உற்றவழி தீவினை சேரா.

**இடத்து :**

நல்வினை உற்றஇடத்து உதவும் - நல்வினை உற்றவிடத்துத் தீவினை மாயும்.

**ஆல் :**

உண்டால் உவக்கும் - உண்டால் பசிதீரும்.

**வான், பான், பாக்கு :**

இவை தன் வினை முதலொடு முடியும். பரிசு கொள்வான் எழுந்தான். சாத்தன் உண்பான் வந்தான். செல்வம் தருபாக்குச் சென்றார் எனவரும்.

**ஏல் :**

இது பிறகருத்தா வினையே கொண்டுமுடியும். தலைவன் வருமேல் கேட்போம் எனவரும்.

## வினையெச்சங்கள் அடுக்கி வருதல்

வினையெச்சங்கள் சொல்தொறும் முடிக்குஞ்சொல்லைப் பெறாமல் ஒத்த வாய்பாட்டுச் சொல்லாகவும், வேறுவேறு வாய்பாட்டுச் சொல்லாகவும் அடுக்கியும் வரும். அடுக்கி வருவன அடுத்துவரும் வினையொடும் முடியும். இறுதியாக உள்ள வினைமுற்றொடும் முடியும். அடுக்கி வருமிடத்துப் பொருள்பொருந்தத் தொடரும். ஒன்றற்கொன்று மாறுபட்டுப் பொருள் தொடர்பு இன்றிவரின், அவை ஒவ்வொன்றும் தனித்தனி வினைமுற்றொடு முடியும்.

எ.டு: சாத்தன் உண்டு சென்று தேவனைக் கண்டு பேசிவந்தான். இத்தொடரில் உண்டு என்பது சென்று என்பதனோடும், சென்று என்பது கண்டு என்பதனோடும், கண்டு என்பது பேசி என்பதனோடும் முடியும். பேசி என்பது வந்தான் என்பதனொடு முடியும். இவை யாவும் ஒரு வினைமுதலின் வினைகளே யாதலின் ஒன்று ஒன்றனொடு முடிந்தது.

சாத்தன் உண்டு சென்று தேவனைக் கண்டுபேச எண்ணினான் எனவும், சாத்தன் தேவனைக் காணின் நன்றென்று கருதிச் சென்று அவனைப் பார்த்துப் பேசி வந்தான் எனவும் வரும். பொருள் தொடர்பின்றிச் சாத்தன் உண்டு செல்லக்காணின் கருதி வந்தான் என வராது.

## அடுக்கி வரும் வினையெச்சங்கள் முடியும் முறைமை

அடுக்கி வரும் எச்ச வினைகள் அடுத்துப் பொருள் பொருந்தும் முறையில் நிற்கும். வினையெச்சத்தொடும், பெயரெச்சத் தொடும், வினையாலணையும் பெயர், முதனிலையொடும், தொழிற் பெயரொடும் முடிந்துயாவும் இறுதி வினைமுற்றொடு முடியும்.

எ.டு: இவை பறந்துவந்து பாடிய கிள்ளைகள். இத்தொடரின்கண் பறந்து என்பது வந்து என்னும் வினையெச்சத்தொடும், வந்து என்பது பாடிய என்னும் பெயரெச்சத்தொடும் முடிந்தன. பாடிய என்னும் பெயரெச்சம் கிள்ளைகள் என்பதனோடு முடிந்தது.

அரசன் தன்னைக் காண வந்தவனைப் போற்றிப் பரிசளித்தான். இதன்கண் காண என்னும் எச்சம் வந்தவன் என்னும் வினையாலணையும் பெயரின் முதனிலையோடும், போற்றி என்பது அளித்தான் என்பதனோடும் முடிந்தன.

சாத்தன் உழுது வந்தான் - வினைமுற்றொடு முடிந்தது. சாத்தன் கற்று வல்லன் (ஆயினான்) குறிப்புவினை முற்றொடு முடிந்தது.

இவன் உழுது வந்தவன் - வினையாலணையும் பெயர் முதனிலையொடு முடிந்தது. அவன் செயல் உழுது வருதல்

எனவரும். இது வருதல் என்னும் தொழிற் பெயர் முதனிலையொடு முடிந்தது.

## எதிர்மறை எச்சம்

செய்து, செய்யூஉ, முதலிய வாய்பாட்டு எச்சங்களும், பின், முன் முதலிய ஈற்றுநிலை எச்சங்களும் விதிவினைச் சொற்களால் கூறப்பெற்றுள்ளன. எனினும், அவற்றுள் பல வடிவு திரிந்து எதிர்மறை எச்சமாகவும் வரும். சில ஓர் வினையொடு கூடிநின்று எதிர்மறை யுணர்த்தும். செய்து, செய்பு, செய்யூஉ, செய்யா, செய்தென என்னும் வாய்பாட்டு எச்சங்கள், செய்யாது என வடிவு திரிந்து எதிர்மறைப் பொருள் உணர்த்தும்.

எ.டு: உண்ணாது சென்றான் - செல்கிறான் - செல்வான் சென்றது, சென்றன, சென்றேன், சென்றோம், சென்றனை, சென்றனிர் எனவரும்.

செய்யிய, செய்யியர், செயற்கு என்பவை செய்யாமை, செய்யாமல், செய்யாமே எனத்திரிந்து எதிர்மறை உணர்த்தும்.

எ.டு: உண்ணாமை நின்றான், உண்ணாமல் நின்றான், உண்ணாமே நின்றான் எனவரும். உம், ஆம், என் என்னும் எச்சங்களும் இவ்வாறே திரிந்து வரும்.

செய என்னும் வாய்பாட்டெச்சமும், பின், முன் முதலிய ஈற்று வகை எச்சங்களும், வடிவு திரியாமல் எதிர்மறை வினை முற்றுக்களோடு முடிந்து எதிர்மறை உணர்த்தும்

எ.டு. உண்ண வாரான், காண மாட்டான். கற்றபின் செய்யான், உண்ணுமுன் பசியான், கொள்வான் வந்திலன், தின்பான் வந்திலன் எனவரும். ஏனையவும் இவ்வாறே அருகிவரும்.

ஏல் என்னும் ஈற்று வினையெச்சம் ஐம்பால் முற்றுவினைகளின் பின் இணைந்து, உண்ணானேல் வாரான், உண்ணாளேல் வாராள் உண்ணாரேல் வாரார், உண்ணாதேல் வாராது, உண்ணாவேல் வாரா எனவரும். வழக்கின்கண் உண்ணானாயின், உண்ணாயின் எனவரும்.

## இடைப்பிறவரல்

வினை எச்சச் சொல்லுக்கும், அது கொண்டு முடியும் வினைச் சொற்களுக்கும், இடையே சில விளக்கச் சொற்களும் வரும். அவற்றை இடைபிறவரல் என்பர்.

எ.டு: உழுது வந்தான், உழுது ஏரொடு வந்தான். எழுந்து விரைந்து வந்தான். உண்டு மகிழ்ந்து சென்றான் எனவரும். இடையேவரும் சொற்கள் கவர்பொருள்படவரின் அதுவழுவாகும். அவ்வழி அவற்றை விளங்கக்கூறுதல் வேண்டும். அஃதாவது, சாத்தன் உண்டு விருந்தொடு வந்தான் என்னும் தொடர், உண்டபின் விருந்தொடுகூடி வந்தான் என்றும், விருந்தொடு உண்டு பின் வந்தான் என்றும் பொருள் கவர்புபடும். இதனைத் தொல்காப்பியம்,

"தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்"

(தொல்.சொல்.232)

என்று கூறுகின்றது.

## வினைச்சொற்களில் நேரும் காலவழுவும் அமைதியும்

நிகழ்வு, எதிர்வு, இறப்பு என்னும் மூன்று காலங்களைக் கொண்டு நிகழும் வினைச்சொற்கள் விரைவு, இயற்கை, தெளிவு, மயக்கம் முதலியவை பற்றிப் பிறழ்ந்தும் வரும். அவை இருவகை வழக்கிலும், சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து, வழுவமைதியாகக் கூறுதல் இலக்கண மரபாகும். இவற்றைக் காலவழுவமைதி என்பர். அவற்றை இனிக் காண்போம்.

1. மூன்று காலத்திலும் ஒத்த தன்மைத்தாக உள்ள பொருள்களின் பண்பு, செயல் முதலியவை பற்றிக் கூறுமிடத்துச் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றாற் கூறுதல் மரபாகும்.

எ.டு: மலை நிற்கும், தீச்சுடும், அலை வீசும் எனவரும். ஒரு பொருளின் செயற்பாடு பற்றிக் கூறுமிடத்துக் காற்று வீசியது, காற்று வீசுகிறது, காற்று வீசும் எனவரும். இதனைத் தொல்காப்பியம்.

"முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்"

(தொல்.சொல்.235)

என்கிறது.

2. ஒரு தொழிலின் இயல்பை ஒரு கருத்தாவிற்குரியதாகக் கூறாமல், அத்தொழிலின் தன்மையை உணர்த்து மிடத்து, 'செய்யும்' என்னும் பொதுச் சொல்லாற் கூறுதல் வேண்டும்.
எ.டு:

*"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்",* (குறள்.138)

ஈதல் இசை வழங்கும், அறம் வெல்லும் பாவம் தோற்கும் எனவரும். ஒரு கருத்தாவின்மேல் ஏற்றிக் கூறின், தருமனின் அறம் வென்றது - சகுனியின் பாவம் தோற்றது எனவரும் இதனைத் தொல்காப்பியம்,

*"மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி*
*அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி*
*செய்வதில் வழி நிகழுங் காலத்து*
*மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே"*
(தொல்.சொல்.237)

என்கிறது.

3. ஒருவன் ஒரு செயலைச் செய்து, கொண்டிருக்கு மிடத்து, அவனை அழைத்துச் செல்ல வந்த ஒருவன், 'சாத்தா! நீ இன்னும் உண்டிலையோ?' என்னுமிடத்து, உண்டு கொண்டிருப்பவன் 'உண்டேன் உண்டேன்' என்பதும், உண்டுவிட்டேன். இதோ வந்து விட்டேன் என்பதும் காலவழு, எனினும் விரைவுபற்றி அங்ஙனம் கூறுதலின் அவ்வழு நீக்கப் படாது அமைத்துக் கொள்ளப்படும். இதனைத் தொல்காப்பியம்,

*"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்*
*ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி*
*இறந்த காலக் குறிப்பொடு கிளத்தல்*
*விரைந்த பொருள என்மனார் புலவர்"* (தொல்.சொல்.236)

என்கின்றது.

4. பெரும்பான்மையும் ஒரு காரியம் தப்பாமல் நிகழ்வதனைத் தெரிந்த நிலையிலும், ஒரு விளைவைப் பலகால் கண்டுணர்ந்த தெளிவு பற்றியும், ஒரு செயல்பற்றி எதிர்கால வினைச்சொல்லாற் கூற வேண்டியவற்றை, இறந்தகாலச் சொல்லாலும், நிகழ்காலச் சொல்லாலும், கூறுதல், வழக்குப் பற்றிய வழுவமைதியாகும்.

எ.டு: கள்[illegible]ள் உலவும் ஒரு காட்டு வழியிற் செல்ல முற்பட்ட ஒருவனைப் [illegible]த்து, 'நீ இக்காட்டு வழியே செல்லின் உள்பொரு[illegible]ள இழந்தாய்' என்பதும், எறும்புகள் முட்டையைக்

கைக்கொண்டு மேட்டுநிலம் நோக்கி ஊர்ந்து செல்வதைக் கண்டு 'எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழைபெய்தது என்று கொள்க' எனவரும். இவை தெளிவும் இயற்கையும் பற்றி அமைந்த காலவழுவமைதிகளாகும். இதனைத் தொல்காப்பியம்,

> "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
> இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
> இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை"
>
> (தொல்.சொல்.240)

என்கிறது.

5. இனி இருவகை வழக்கிலும் சிறுபான்மையாக வரும் காலமயக்கம் வருமாறு. இறந்த காலத்தாற் கூறவேண்டிய தொன்றனை எதிர்காலத்திலும், நிகழ்காலத்திலும் வைத்துக் கூறுதல், எதிர்காலத்தில் வைத்துக் கூறவேண்டிய தொன்றை இறந்த காலத்தாற் கூறுதலும் காலமயக்கம் என்னும் வழுவமைதிகளாகும்.

**எ.டு:** முன்பு கல்லூரியிற் படித்த மாணவர்கள் கல்லூரிக்கு வந்து, பயின்று கொண்டிருக்கும் மாணவர்களைப் பார்த்துத் தாம் பயின்ற இடத்தையும், விளையாடிய இடத்தையும், சுட்டிப்பண்டு நாங்கள் இங்கேதான் படிப்போம். இங்கேதான் விளையாடுவோம் என இறந்தகாலத்தை எதிர்காலச் சொற்களாற் கூறுவதும், விருந்தினரை எதிர்நோக்கியுள்ள ஒருவரிடம் ஒருவர், நாளை அவர்கள் வந்தார்கள் எனின், நீ நன்கு பேணுதல் வேண்டும் என்றும், எதிர்காலத்தை இறந்த காலத்தாற் கூறுதலும் வழுவமைதிகளாம். இதனைத் தொல்காப்பியம்,

> "இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
> சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக்கிளவி" (தொல்.சொல்.242)

என்றும்,

> "ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்" (தொல்.சொல்.243)

என்றும் கூறுகின்றது.

## பெயரெச்சம்

இருதிணைப் பொருள்களில் ஒன்றைக் கருதி உணர அவற்றிற்கு இடும் குறியீடு பெயர் எனப்படும். இப்பெயர்ச் சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பொருளின் அடிப்படையில் ஆக்கம் பெறும். பெயர்ச் சொற்களின் சிறப்பிலக்கணம் காலம்

உணர்த்தாமல் பொருட் குறியீடாக வருவது. ஓர் எழுவாய்ப் பெயரை முடித்தற்குப் பயனிலையாக வரின், அவை குறிப்பு வினைகளாக மாறிவிடும். அறுவகைப் பொருளுள் தொழிற் பெயர் என்பது தொழிற்சொற்களின் அடிப்படையில் நடையன், அறிஞன், ஆளன், கூத்தன், ஊணன் எனவரும். இவை நடந்தான், அறிந்தான், ஆண்டான், குதித்தான், உண்டான் எனக்காலம் உணர்த்திவரின் வினைச் சொல்லாம்.

பெயர்ச் சொல்லின் சிறப்பிலக்கணம் காலங்காட்டாமை. கால முணர்த்துமேல் குறிப்பு வினையாகிவிடும். வினைச் சொல்லின் சிறப்பிலக்கணம் வேற்றுமை ஏலாமை. வேற்றுமையை ஏற்றுப் பிறிதொரு வினையொடு முடியின் அது பெயராய் விடும். அதனை வினையாலணையும் பெயர் என்பர். இதனைத் தொல்காப்பியம் எழுவாய்ப் பெயரிலக்கணம் கூறுமிடத்து,

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா

தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே" (தொல்.சொல்.71)

என்கின்றது. எனவே, தொழில் நிலை ஒட்டிக் காலங் காட்டும் சொல் எழுவாயாகவும், பிற வேற்றுமைகளை ஏற்றும் பிறிதொரு வினையொடு முடியின் அது வினையாலணையும் பெயர் எனவும்படும். வினையாலணையும் பெயர் என்பது முன்பு வினை முற்றாய் நின்று, பின் அவ்வினை காரணமாக, அப்பொருளுக்குப் பெயராக வருமிடத்துக் காலங்காட்டிப் பெயராக நிற்கும். வினையாலணையும் பெயர்கள் செயற்கைப் பெயராகக் காரணப் பெயராக நிற்கும்.

வினையாலணையும் பெயர்கள் உண்டான் வந்தான், உண்கின்றவன் கேட்டான், உண்பான் வந்துளான் எனமுக்காலத்திலும் வரும்.

தொல்காப்பியர், பண்டைய நூலோர் வகுத்த இலக்கண நெறிமுறை வழுவாமல், அறிவியல் கண்ணோட்டத்துடன் நூல் செய்தாராதலின், வினைஎச்சம், பெயரெச்சம் என்னும் சொல்லிலக்கணத்தை விளக்குமிடத்து, வினைமுற்றின் குறையாய் வினையொடு முடியும் குறைச் சொல்லை வினை எச்சம், வினை எஞ்சு கிளவி, வினைக் குறை என்றும், தெரிநிலை வினையாலணையும் பெயரின் குறையாய்ப் பெயரொடு முடியும் குறைச் சொல்லைப் பெயரெச்சம் என்றும் பெயரெஞ்சுகிளவி என்றும் பெயர்க்குறை என்றும் தெளிவாகக் கூறிச் சென்றார்.

உரையாசிரியரின்மார் பலரும், நன்னூல் முதலாய இடைக்கால நூலோர் பலரும், எச்சம் என்பதற்கு மேல்வந்து முடிக்கும் சொல்லாய், எஞ்சிநிற்கும் வினைச்சொற்கள் பெயர்ச்சொற்கள் என்று பொருளும், விளக்கமும் கூறிச் சொன்றனர். இப்பிழையான விளக்கமே. இன்று மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

எச்சம் என்பதற்குக் குறை என்பது பொருள். முற்று என்பதற்கு நிறைவு என்பது பொருள். வினைமுற்று என்றால் தொழில், காலம், பால், இடம் என்னும் உறுப்புக்கள் யாவும் முற்றி நிறைந்து நிற்பது. குறைபடுவன பால் இடம் காட்டும் விகுதி மட்டுமேயாம். சிறுபான்மை சாரியையும் குன்றி நிற்கும். சாத்தன் நடந்தான். (நடந்தனன்) என்னும் வினையில் நட - தொழிற் பகுதி ந்த் - கால இடைநிலை. ஆன் - பால் இடம் காட்டும் விகுதி. நடந்தான் என்பது வினையாலணையும் பெயராக வருமிடத்து நடந்தான் ஆண்டான், நடந்தான் பெரியன் என இருவகை முற்றொடும் முடிந்தது. இச்சொல் குறையின் நடந்த எனநிற்கும். இது குறைச் சொல்லாகும். செய்து முதலிய வினை எச்சங்களாக வருமிடத்து, அவ்வவ்வாய்பாட்டுக்குரிய காலக் குறிப்போடு ஆக்கம் பெற்று நிற்கும். அஃதாவது, நடந்து, நடையூஉ, நடக்குபு, நடக்கா, நடந்தென நடைய்ய, நடையியர், நடக்க, நடக்கின், நடத்தற்கு எனவரும். இவ்எச்சங்களில் விளங்கி நிற்பவை தொழிலும், காலமும். குறைந்து நிற்பவை பாலிடம் காட்டும் விகுதிகள். விகுதி எஞ்சி நிற்றலான் வினையெச்சம் அல்லது எச்சவினை என்றும், வினைக்குறை அல்லது குறைவினை என்றும் கூறப்படும். வினை எச்சங்களை முடிக்கும் சொல் வினைமுற்றாகவோ, வினையாலணையும் பெயராகவோ, தொழிற் பெயராகவோ இருக்கும் என்பது மேல் உணர்த்தப்பட்டது.

இவ்வாறே வினையாலணையும் பெயர் எஞ்சுமிடத்தும் விகுதி குறைந்து நிற்கும். நடந்தான், நடந்தவன் என்னும் பெயர்கள் ஆன், அன் என்னும் விகுதிகள் குறைந்து நடந்த என நிற்குமிடத்து, இறந்தகால இடைநிலை ந்த் ஆகலின் அதனொடு அகரம் சேர்ந்து நடந்த என்றும், நிகழ்காலத்தின் கண் நட என்பதனொடு கின்று, கிறு, ஆநின்று என்னும் கால இடைநிலைகள் கூடி நடக்கின்ற, நடக்கிற, நடவாநின்ற என்றும், செய்யும் என்னும் எச்சம் நடக்கும் என்றும் அமைந்து பெயரொடு முடியும்.

நடந்து வந்தான் என்னுமிடத்து, இவன் அல்லது சாத்தன் என்னும் எழுவாய் தொக்கு நிற்பது போலவே, நடந்த சாத்தன், நடந்த பசு என்னுமிடத்து. இவன் நடந்த சாத்தன், இது நடந்த பசு என எழுவாய் தொக்கு நிற்கும். எழுவாய் விரிந்தும் நிற்கும்.

அவ்வழி, நடந்து வந்தான் என்னும் வினையெச்சத் தொடரில், நடந்து என்பது நடந்தான் என வினைமுற்றாக விரியும். நடந்த சாத்தன் என்னும் பெயரெச்சத் தொடர் விரியுமிடத்து, நட்ந்தவனாகிய என வினையாலணையும் பெயராக விரியும்.

எனவே, பெயரெச்சமாக நிற்கும் குறைச்சொற்கள், வினைமுற்றுச் சொற்களின் குறைகள் அல்ல. வினையாலணையும் பெயர்களின் குறைகள் என்பது நன்கு விளங்கும்.

வினையெச்சம் என்பது ஒரு வினைமுதல் (கருத்தா) இயற்றிய தெரிநிலை வினைமுற்றின்கண் உள்ள பாலிடம், எண் காட்டும் விகுதி குறைந்து, உ, இய, இயர், என, இன், கு என்றாற் போன்ற, ஒட்டிடைச் சொற்களைப் பெற்றுத் தொழிலையும், காலத்தையும் மட்டும் உணர்த்திக் குறைச் சொல்லாக நின்று, மேல்வரும் வினைச்சொல்லை அவாவிநின்று, அதனொடு முடிதல் போலப் பெயரெச்சம் என்பதும், ஒரு கருத்தா இயற்றிய வினை காரணமாகப் பெற்ற தெரிநிலை வினையாலணையும் பெயரின் கண், பாலிடம், எண் காட்டும்விகுதி குறைந்து அ, கின்று, உம் என்னும் ஒட்டிடைச் சொற்களைப் பெற்றுத் தொழிலையும், காலத்தையும் மட்டும் உணர்த்தி நிலம், செயப்படுபொருள், கருவி, காலம், வினைமுதல், வினை என்னும் அறுவகைப் பொருட்கும் உரியதாய், அவற்றிற்குரிய சொற்களை, அவாவிநின்று அவற்றொடு முடியும்.

தெரிநிலை வினையாலணையும் பெயர் பால், இடம், எண் காட்டும் விகுதி குன்றிய அளவில், தொழிலையும், காலத்தையும் மட்டுமே உணர்த்தி நிற்றலின், பெயர்வகையுள் அமையாமல் வினைச்சொல்லின் வகையாக அமைவதாயிற்று. அதனால் வழக்கின்கண் வினையெச்ச வினை என்பதுபோலப் பெயரெச்ச வினை எனல் மரபாயிற்றென்க.

பெயரெச்சம், வினையெச்சம் போல எல்லாத்தொழில் முதல் நிலைகளோடும் கூடி, மூன்று காலமும் உணர்த்தி வருதலின்,

இலக்கண நூலோர் இதனையும் வாய்பாடு வகையான் உணர்த்துவாராயினார்.

தொல்காப்பியம் செய்யும், செய்த என இரண்டு வாய்பாடு கூறுகின்றது. செய்யும் என்பதனுள் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் அடக்கிக் கூறுகின்றது. இடைக்கால நூலோர் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்று வாய்பாடுகளைக் கூறினர். இப்பாகுபாடு செய்யும் என்னும் வாய்பாடு அமைந்த தொடரில், காலத்தைப் பொருளமைப்பை நோக்கி அறிதல் வேண்டிய இடர்ப்பாடின்றிச் செய்கின்ற. செய்யும் என நிகழ்கால வாய்பாட்டினை அமைத்தமையால், இதுவே பயின்று வரலாயிற்று.

பெயரெச்சத் தொடரின்கண் பெயரெச்சம் நிலம், செயப்படு பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை என்னும் பொருட் பெயர்களைக் கொண்டுமுடியும். அப்பெயர்கள், அவ் எச்சத்திற்குப் பெயர்ப் பயனிலையாக நிற்கும். அப்பெயர்கட்கு எழுவாய் சுட்டுப் பெயராக மறைந்து நிற்கும்.

பெயரெச்சச் சொற்கள் அவைகொண்டுமுடியும் பெயர்களுக்கு அடைபோல நிற்கும். பெரும்பான்மை, பெயரச்சத் தொடர்கள், புதைநிலை வாக்கியங்களாகவே நின்று பலகோணங்களில் விரிந்து பொருள்தரும். அஃதாவது 'உண்டசாத்தன்' என்னுமிடத்து, எழுவாய் இவன் என்பதாகும். உண்ட என்பது உண்டவனாகிய என விரியும். உண்ணுதல் தொழிலை முன்பு செய்தவனாதலின், அஃது அடையாகி உண்டவனாகிய சாத்தன் என இருபெயரொட்டாக நிற்கும் இத்தொடரில் சாத்தனை எழுவாயாக்கின் சாத்தன் உண்டவன் எனவரும்.

வாழும் இல்லம் என்னும் பெயரெச்சத்தொடரை விரித்துக் கூறுமிடத்து, வாழ்தற்கு வினைமுதல் கொற்றன் என ஒரு பொருட் பெயரும், இல்லம் என்பதற்கு வினைமுதல் இது என்னும் சுட்டுப் பெயரும் விரியும். "இது கொற்றன் வாழும் இல்லம்" என வரும். வாழும் என்பது விரியின் இல்லத்தில் வாழ்பவனாகிய கொற்றன் என விரியும், கொற்றன் எழுவாயாக வருமிடத்து, கொற்றன் இவ்வில்லத்தில் வாழ்கிறான் - வாழ்வான் என விரியும். வாழும் என்பது அடையாக விரியின், கொற்றன் வாழ்வதாகிய இல்லம் என விரியும்.

பெயரெச்சம் பற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கணம்,

"நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே" (தொல்.சொல்.229)

என்பதாகும். நன்னூல் தரும் இலக்கணம்,

"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டின்
காலமும் செயலும் தோற்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே" (நன்.340)

என்பதாகும்.

தொழில் முதனிலை எட்டனுள், இன்னதற்கு இதுபயனாக என்பவைபற்றிப் பெயரெச்சச் சொற்கள் வருதல் சிறுபான்மை யாதலின், நிலம் முதலிய ஆறனையும் எடுத்துக் கூறுவாராயினர். விளக்கமும் எடுத்துக் காட்டுக்களும் வருமாறு:

**1. நிலம் (இடம்) :**

வாழும் இல்லம் - வாழ்கின்ற இல்லம் - வாழ்ந்த இல்லம் இவை விரியுங்கால் வாழ்வதாகிய - வாழ்கின்றதாகிய - வாழ்ந்ததாகிய என விரியும்.

**2. செயப்படு பொருள் :**

கற்கும்நூல் - கற்கின்ற நூல் - கற்ற நூல். இவை விரியுங்கால் இது சாத்தன் கற்பதாகிய நூல், இது சாத்தன் கற்கின்றதாகிய நூல், இது சாத்தன் கற்றதாகிய நூல் என விரியும். கற்பது, கற்கின்றது, கற்றது என்பவை வினையாலணையும் பெயர்கள். எச்சத்தில் உம், கின்று, ற் என்பவையும், வினையாலணையும் பெயர்களுள் ப், கின்று, ற் என்பவையும் காலம் காட்டின. கற்கின்ற, கற்ற என்பவற்றுள் அகரம் பெயரிடைச் சொல். அதுவே பெயரெச்ச விகுதியாகவும், பொருள் தரும் மேல்வருகின்ற உதாரணங்களுக்கும், இவ்விளக்கம் பொருந்தும். இவ்வாறே விரித்துக் கண்டு கொள்க.

**3. காலம் :**

துயிலும் காலம் - துயில் கின்ற காலம், துயின்ற காலம், எனவரும்.

**4. கருவி :**

வெல்லும் வேல், வெல்கின்ற வேல், வென்றவேல் எனவரும்.

**5. வினைமுதல் (கருத்தா) :**

*பாடும் பாணன், பாடுகின்ற பாணன், பாடிய பாணன் எனவரும். பாடிய என்பதில் இகரம் காலம் காட்டும்.*

**6. வினை :**

*(வினை என்பது தொழிற் பெயரைக் குறிக்கும்) காணும் காட்சி, காணுகின்ற காட்சி, கண்ட காட்சி எனவரும். இவை விரியுமிடத்து, இது சாத்தன் காணுவதாகிய காட்சி, இது சாத்தன் காண்கின்றதாகிய காட்சி, இது சாத்தன் கண்டதாகிய காட்சி எனவிரியும்.*

*இவ்வினை என்பது செயப்படு பொருளில் அடங்குமாயினும், தொழிற் பெயராக வரும் வேறுபாடு நோக்கிப் பிரித்துக் கூறப்பட்டது. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களுள் ஈண்டு இடமும், காலமும், தொழிலும், தொழில் முதனிலைகளாக எடுத்துக் கொள்ளப் பெற்றமையான் ஏனைய பொருட்பெயர், பண்புப்பெயர், சினைப் பெயர்கள் செயப்படு பொருள் என்பதனுள் அடங்கும் என்க.*

## பெயரெச்சங்கள் பொருள் மயங்கிவருதல்

*பெயரெச்சங்கள் செய்யுள் வழக்கின்கண் சிறுபான்மை பொருள் வேறுபடும். குறிப்பெச்சமும், இசையெச்சமும் தரும் சொற்கள் தொக்கு இடத்திற்கும், சொல்வோரது கருத்திற்கும் ஏற்பப் பொருள் விரியும்.*

*எ.டு:*

*(1) "நோய் தீரும் மருந்து" இது நோயைத் தீர்க்கும் மருந்து என விரியின் கருவிப் பொருளில் அமையும். இம்மருந்து நோயைத் தீர்க்கும் எனப் பொருள் கொள்ளின், வினைமுதற் கிளவியாக அமையும்.*

*(2) "நின்முகம் காணும் மருந்தினேன்" இது நின்முகம் காணுதலை மருந்தாக உடையேன் என்று பொருள்தரின், காட்சியை மருந்தாக உருவகம் செய்துள்ளமையான் வினைப்பெயர் கொண்டதாக அமையும்.*

*(3) "ஆறு சென்றவியர்" இஃது ஆற்றின்கண் சென்றமையான் தோன்றிய வியர்வை எனப் பொருள் விரியின்,*

காரணகாரியப் பொருட்டாய்க் கருவியின்கண் அடங்கும். உண்ட இளைப்பு என்பதும் அவ்வாறே அமையும்.

(4) "பொச்சாவாக் கருவி" (பொச்சாத்தல் = மறத்தல் கருவி = மனம்) பொச்சாவாமையையுடைய மனம் எனவிரியின், செயப்படு பொருளின்பாற்படும்.

(5) "நிலம் பூத்த மலர்" (பூத்தல் = பொலிதல்) என்பது நிலம் பொலிதலைச் செய்த மலர் என விரியின், வினைமுதற் கிளவியாம்.

(6) "குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி" (பூத்த கண்ணி என இயையும்) என்பது பூத்த பூக்களாற்றொடுத்த கண்ணி என விரியின், கருவிப் பொருளாக அமையும்.

இவ்வாறே செய்யுட்கண் வரும் பெயரெச்சங்கள் பொருள் நோக்கிற்கேற்ப அறுவகைப் பொருள்களுள் அமையும்.

இனி, இன்னதற்கு - இது பயனாக என்னும் பொருள் பற்றியும், நீக்கப் பொருள் பற்றியும் பெயரெச்சங்கள் சிறுபான்மை வரும்.

(1) மன்னன் பரிசு கொடுக்கும் பாணன் - என்பதற்கு மன்னன் பாணற்குப் பரிசு கொடுத்தல் முறைமை என்பது கருத்தாகலான் 'இன்னதற்கு' என்னும் பொருள்பட நின்றதாகும்.

(2) 'இது பாணன் பாடும் பரிசில்' என்பதற்குப் பாணன் பரிசில் பெறுவதற்குப் பாடுவான் என்பது கருத்தாகலின் 'இதன் பயனாக' என்னும் பொருள்பட நின்றது.

(3) 'பழமுதிரும் கோடு' என்பது கோட்டினின்றும் பழம் உதிரும் எனப் பொருள் தருதலின் நீக்கப் பொருள்பட அமைந்ததாகும்.

இங்ஙனம் வரும் பெயரெச்சத் தொடர்களைப் பொருந்தும் முறையில் பொருள் விரித்துத் தொழில் முதனிலை எட்டனுள் அடக்கிக் கண்டு கொள்ளுதல் வேண்டும்.

குறிப்புப் பெயரெச்சங்கள், செய்த என்னும் இறந்த கால வாய்பாட்டுச் சொல் பற்றியே வரும். சிறுபான்மையாக வரும்.

எ.டு: இன்ன தன்மையின் அருமையின் (இன்ன = இத்தகைய) எனவும், அன்ன தன்மையும் அறிந்தீயார் (அன்ன = அத்தகைய) எனவும், கரிய மலர் நெடுங்கண் காரிகை எனவும் செய்ய கோல் புரிந்தான் எனவும் வரும்.

## "செய்யும்" என்னும் வாய்பாட்டு

## எச்சமும் - முற்றும்

செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல், பெயரெச்சமாக வருங்கால், இருதிணை ஐம்பால் மூவிடத்தும் வரும்.

எ.டு: பாடும் பாணன், ஆடும் விறலி, பயிலும் மாணவர், உண்ணும் வாய், காணும் கண்கள், பேசும் யான், வாழும் யாம், கேட்கும் நீ, கொள்ளும் நீவிர் எனவரும். செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல், முற்று வினையாக வருங்கால் படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களிலும் வரும். தன்மையிலும், முன்னிலையிலும், படர்க்கைப் பலர்பால் பற்றியும் வாராது.

எ.டு: அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எனவரும்.

செய்யும் என்னும் எச்சத்திற்கும் செய்யும் என்னும் முற்றிற்கும் வேற்றுமை யாதெனின், எச்சமாயின் ஓர் எழுவாயின் பெயர்ப் பயனிலைக்கு அடையாக வரும், முற்றாயின் ஓர் எழுவாய்க்குப் பயனிலையாக முடியும்.

பெயரெச்ச வாய்பாடுகள் செய்த, செய்கின்ற, செய்யும் என விதிவினையாகக் கூறப்பட்டிருப்பினும், மூன்று காலத்தையும் உள்ளடக்கி, எதிர்மறை எச்சமாகவும் வரும். பொருள் நிலைவேறுபடா.

எ.டு: உண்ணா இல்லம், உண்ணாச் சோறு, உண்ணா நாள், வளையாக் கோல், ஓதாப்பார்ப்பான், நடவா நடை எனவரும்.

எதிர்மறைப் பெயரெச்சம் வழக்கின்கண் சிறுபான்மை தகர உயிர்மெய்யெழுத்தை ஈற்றிலே பெற்று உண்ணாத இல்லம், உண்ணாத சோறு என்றாற்போல வரும். உரையாசிரியர் சிலர், இதனையே இலக்கணமாகக் கொண்டு உண்ணா இல்லம், உண்ணாச்சோறு எனவருவனவற்றை, ஈறுகெட்ட எதிர்மறைப்

பெயரெச்சம் எனக் கொண்டனர். இவ்வழக்கே பெருவழக்காகப் பயிற்றப்பட்டுவருகிறது.

பெயரெச்சம் கொண்டு முடியும் பெயர்களுக்கு இடையே, இடைப்பிறவரலாகச் சில சொற்கள் அடையாகவும் வரும்.

எ.டு: கவளங் கொள்ளாக் களித்த யானை, இன்னிசை பாடும் கருங்குயில், குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி எனவரும்.

செய்யும் என்னும் பெயரெச்சம், செய்யுள் வழக்கில் இடையே உள்ள உகரம் மெய்யொடும் கெட்டுவரும்.

எ.டு: வாவும்புரவி - வாம்புரவி. ஆகும் பொருள் - ஆம்பொருள் எனவரும். செய்யும் என்னும் முற்று உகரம் மட்டும் கெட்டும், உகரம் மெய்யொடும் கெட்டும் வரும். கட்சியுட் காரி கலுழ்ம், மருளினும் எல்லாம் மருண்ம், திசையறி மீகாமனும் போன்ம். இவற்றுள் உகரம் மட்டும் கெட்டது. அம்பலூரும் அவனொடு மொழிமே, இவாகூறுவது உண்மை ஆம். இவற்றுள் இடை உகரம் மெய்யொடும் கெட்டது. சிறுபான்மை செய்யும் என்னும் முற்றின் 'உம்' என்பது உந்து எனத் திரிந்தும் வரும்.

எ.டு: தெள்கடற்றிரை மிசைப் பாயுந்து எனவும், நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து எனவும் வரும். இவற்றை நன்னூலாசிரியர்,

"செய்யும்என் எச்சஈற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம் உந்தாகலும், முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே" (நன்.341)

என்பார்.

## வேறு-இல்லை-உண்டு-முற்றுக்கள்

வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினை முற்றுச் சொற்கள், ஐம்பால் மூவிடத்தும் பொதுவினையாக வரும்.

எ.டு: அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு, யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீயிர் வேறு. வேறு என்பது ஒரு தன்மையின் வேறுபட்ட தொழிற்பண்பினை யுணர்த்தும்.

**இல்லை :**

அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை, யானில்லை, யாமில்லை, நீயில்லை, நீயிர் இல்லை எனவரும்.

**உண்டு :**

அவன் உண்டு, அவள் உண்டு, அவர் உண்டு, அது உண்டு, அவை உண்டு, யானுண்டு, யாமுண்டு, நீயுண்டு, நீயிர் உண்டு எனவரும். இல்லை என்பது இன்மைத் தன்மையையும், உண்டு என்பது உண்மைத் தன்மையையும் குறிக்கும்.

## வேண்டும்-தகும்-படும்-முற்றுக்கள்

வேண்டும், தகும், படும் என்னும் மூன்றும், குறிப்பு உரிச் சொற்களாகும். இவையும் ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக வரும். தனித்தனிச் சிறப்புப் பொருளுடையனவாகும்.

**வேண்டும் :**

இவ்வுரிச்சொல் தெளிவு, உறுதி, துணிவு, அவா, நலம் முதலியவற்றை வற்புறுத்தும் பொருண்மையொடு தொழிற் பெயர்களையும், இன்னது என ஒன்றைக் கருதும் சொற்களையும் கொண்டு கட்டளைபோல வரும்.

எ.டு: "ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை" - யான் ஓதல் வேண்டும் - நீ உணர்தல் வேண்டும் - அவன் காணல் வேண்டும் எனவரும். வழக்கின்கண் தொழிற்பெயர் ஈறுகுன்றி யான் உண்ண வேண்டும். நீ வரவேண்டும். அவள்போக வேண்டும் எனவரும். இலக்கண நூலுள் "வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்" என விதித்தற் பொருளில் வரும். மற்று விரும்புதல் என்னும் பொருளுடைய வேண்டும் என்னும் வினைவேறு. இவ்வுரிச்சொல் வேறு. வேண்டு என்னும் வினை, வேண்டினான், வேண்டினாள், வேண்டினேன், வேண்டினை, வேண்டிற்று, வேண்டின என விகுதி பெற்றுவரும். வேண்டாது, வேண்டா என எதிர்மறையானும் வரும்.

தகும் : இவ்வுரிச்சொல் இயலும், கூடும், ஒக்கும், ஏற்கும் என்பது முதலிய பொருள் பற்றிச் செயவென் எச்சவினையொடு கூடிவரும்.

எ.டு: இவர் இக்காரியம் செய்யத்தகும், இக்கனி உண்ணத்தகும், இந்நூல் ஓதத்தகும், இந்நாடகம் பார்க்கத் தகும்.

மற்று, தகுதல், தகவு என்னும் முதனிலை வினைபற்றி வரும் தக்கான், தக்காள், தகுவேன், தகுவை, தகான், தகாது எனவரும் வினைச்சொல் வேறு, இவ்வுரிச்சொல் வேறு என அறிதல் வேண்டும்.

படும் : இவ்வுரிச் சொல் ஆகும், ஏற்கும், அமையும் என்னும் பொருண்மையுடையதாய்ச் செயவென் எச்சச் சொற்களொடு கூடிவரும்.

எ.டு: ஒளியோடொழுகப் படும் - கற்றறிந்தாரைத் தலை நிலத்தில் வைக்கப்படும், வஞ்சரை அஞ்சப்படும் எனவரும்.

மற்று, படுதல் என்னும் வினைவேறு. இவ்வுரிச்சொல் வேறு. 'படு' என்னும் வினை போரிற்பட்டான், வீழ்ந்து பட்டான், துன்பப்படுவான், சொல்லப்படும், சொல்லப்படாது, கேட்கப்படா என அழிதல், அடைதல் என்னும் பொருளில் வரும்.

## வினா வினைக் குறிப்பு முற்றுக்கள்

யார், எவன் என்னும் வினா வினைக் குறிப்புச் சொற்கள் ஐம்பால் மூவிடத்தும் வரும்.

யார் - எ.டு: யான் யார்? நீயார்?, அவன் யார்?, அது யார்?, அவை யார்?.

எவன் - எ.டு: யான் செய்வதெவன்?, நீ செய்வதெவன்?, அவன் செய்வதெவன்?, அது செய்வதெவன்?, அவை செய்வதெவன்? எனவரும். யார் என்பது ஆர் எனவும், எவன் என்பது - என், என்னை எனவும் திரிந்து வரும். பேச்சு வழக்கில் 'என்ன' எனவும் வரும்.

செய்ம்மன : இவ்வினைத் திரிசொல் பழந்தமிழில் ஐம்பால் மூவிடத்தும் வரும். பொது வினைமுற்றுச் சொல்லாக வழங்கித் தொல்காப்பியத்திற்குப் பின் வழக்கிழந்ததாகும்.

எ.டு: யான் உண்ம்மன (உண்பேன்) நீ உண்ம்மன (உண்க) அவன் உண்ம்மன (உண்ணும்) அவன் உண்ம்மன (உண்பான்) அவர் உண்ம்மன (உண்பர்) அது உண்ம்மன (உண்ணும்) அவை

உண்மன (உண்ணும்) எனவரும். இங்ஙனம், அவ்வவ் இடம்பால்களுக்கேற்ப விரிதலின், இருதிணைப் பொதுச் சொல்லாக அமைவதாயிற்று.

## தொகை மொழி

நால்வகைச் சொற்களுள், பெயரும் வினையும் தனியேயும், விகுதி முதலியவற்றோடு கூடியும் பொருள்தரும். இடைச் சொல் பெயர் வினைகட்கு உறுப்பாக, அவற்றொடு கூடித் தம்பொருள் உணர்த்தும், உரிச்சொல் பெயர்வினைகட்கு அடையாக நின்று பொருள் உணர்த்தும். இடைச் சொல்லும், உரிச் சொல்லும் தனித்துப் பொருளுணர்த்துமாயின், அவை பெயருள்ளும் வினையுள்ளும் அடங்கும்.

எனவே, தனித்து நின்று பொருள் தருவன பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும் என்பது விளங்கும். வினை என்பது காலம் உணர்த்தும், காலம் உணர்த்தாத நிலையில், முதனிலைத் தொழிற்பெயர் எனப்பட்டுப் பெயருள் அடங்கும். எனவே, முதனிலையளவில் பொருளுணர்த்தும் சொற்கள் யாவும், பெயர்களாக அமைந்திருக்கும்.

அப்பெயர்கள் தனித்து ஒரு சொல்லாக நின்று பொருள் உணர்த்துமிடத்து, ஒரு மொழியளவாக நிற்கும். இரண்டு பெயர்ச் சொற்கள் . தம்முள் இணைந்து வருமாயின், அவை தொடர் மொழியளவாக அமைந்து, ஒன்றற்கு மேற்பட்ட பொருளுணர்த்தும். தொடர் மொழிப் பொருளை விளக்குமிடத்து, விளக்கச் சொற்கள் சிலவும் பலவும் விரியும். விரியுமிடத்து முதற்சொல், அடுத்து நிற்கும் சொல்லைச் சிறப்பித்தும், விளக்கியும் அடையாக நிற்கும். இரண்டாவது நிற்கும் சொல், அவ்வடையினால் தன்பொருள் நிலையை விளக்கி நிற்கும்.

சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடருமிடத்து, அவை அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் என இருவகையாகத் தொடர்ந்து நிற்கும். இவ்விருவகைத் தொடர்கள் பற்றி, எழுத்துப் படலம் புணரியலுள் விளக்கப்பட்டன. அம்முறையில் வேற்றுமைத் தொடரல்லாதவை யாவும், அவ்வழித் தொடர்கள் எனப்படும். வேற்றுமைத் தொடரும் தனக்கெனச் சிறப்பு உருபுகளையுடைய, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையான, ஆறுமே வேற்றுமைத் தொடர்களாகும். வேற்றுமைத் தொடர்களில் வேற்றுமை உருபுகள் விரிந்தும்

வரும். விரியாது தொக்கும் வரும் என்பதும் புணரியலுள் விளக்கப்பட்டன.

ஒரு சொல் மற்றொரு சொல்லொடு, பிளவுபடாமல் இணைந்து, தொடர்ந்து ஒருமொழி போலப் பொருள்தரின், அவற்றைத் தொகைமொழி என்பர் இலக்கண நூலார். அவற்றைப் பொருளமைப்பு நோக்கி, வேற்றுமைத் தொகை மொழி, பண்புத்தொகை மொழி, உவமத்தொகை மொழி, வினைத் தொகை மொழி, உம்மைத் தொகைமொழி, அன்மொழித் தொகை மொழி என ஆறுவகையாக வகுத்துக் கூறுவர். இவற்றை வழங்குமிடத்து, மொழி என்னும் இறுதியை விட்டுவிட்டு வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உவமத் தொகை, வினைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை எனவும் வழங்குவர்.

## 'தொகை' என்பதன் பொருள்

தொகை மொழி என்பது பற்றி விளக்கங் கூறுமிடத்து உரையாளருள் ஒரு சாரார், வேற்றுமை உருபு, ஆகிய என்னும் பண்புருபு, உவமஉருபு, உம்மை இடைச்சொல், காலங்காட்டும் இடை நிலைகள் மறைந்து தொக்கு நிற்றலான் தொகை என்பர் ஒரு சாரார் வேற்றுமை நிலை, பண்பமைப்பு முதலாய பொருள் தோன்ற, இரண்டு முதலாய சொற்கள் பிளவுபடாமல் கூடி (தொக்கு = தொகுதியாக) நிற்றலான் தொகை என்பார். ஒருசாரார் பொருள் நோக்கில் இரண்டு முதலாய சொற்கள் இணைந்து நிற்றலும், சொல்வடிவ நோக்கில், உருபுமுதலாயவை மறைந்து நிற்பதும் தொகை மொழி இலக்கணம் எனல் தகும்.

தொகை மொழிகள் விரியுங்கால், ஒன்றற்குமேற்பட்ட தொகைப் பொருள் விரியுமாதலின், ஒருபொருளை வரைந்துணர்த்துதல் வேண்டின், அவற்றிற்கு ஏற்ப உருபுமுதலியவற்றை விரித்தல் வேண்டும். அவ்வாறன்றி உருபுமுதலியவை புணர்ந்து நின்று பின்னர்க் கெட்டன (மறைந்தன) எனல் தமிழ் நெறியாகாது. அஃதாவது "நாகர்பலி" என்னும் வேற்றுமைத் தொகை மொழியிடத்து, உருபுநின்று தொக்கது (கெட்டது) எனின் யாதானும் ஓர் உருபிற்கு மட்டுமே பொருந்தும். ஆனால் நாகர்பலி என்பது நாகரை இட்டபலி, நாகரால் இடப்பெற்றபலி, நாகர்க்கு இட்டபலி, நாகரது பலி எனக் கூறுவே ,ன், கருத்திற்கேற்ப விரிதலின், ஓர் உருபுநின்று கெட்டது என்பது [illegible]வாகும்.

மற்றும், மலைமகள் என்னும் தொகை மொழி மலையையுடைய மகள், மலைக்கு உரியமகள், மலையின்கண் வாழும் மகள் எனப்பல வேற்றுமைக்கும், மலைபோன்றமகள் உவமத் தொகைக்கும், மலையாகிய மகள் என பண்புத் தொகைக்கும். மலையும் (போரிடும்) மகள் என வினைத் தொகைக்கும், பொருந்த நிற்றலின் உருபுநின்று தொக்கது எனின் பிழைபடு மென்க. மேலும், அன்மொழித் தொகைக்குத்தனியே உருபு முதலியவை இன்மையும் அறிக.

எனவே, பெயர்கள் இரண்டு முதலாகப் பிளவு படாமல் தொடர்ந்து தொகுதலே (தொகுதியாதல்) தொகை என்பார் கொள்கையே ஏற்புடைத்தாதலை உணரலாம்.

இனி, தொல்காப்பியர் 'தொகை' என்னும் இக்கலைச் சொல்லைத் தமது நூலுள் கூறியுள்ள முறைகளைக் காண்போம். தொகை என்னும் சொல், தொகு என்னும் முதனிலைத் தொழிற்பெயர், வினைமுதற் பொருளுணர்த்தும் ஐகார விகுதி பெற்றுத் தொகை எனத் தொழிற்பெயராய் நின்றது. தொகை, தொகுப்பு, தொகுதி என்பவை நுணுகிய வேறுபாடுடைய ஒருபொருட் சொற்களாகும். தொல்காப்பியத்துள்,

*"மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்"* (தொல்.எழுத்து.112)

*"மக்கள் முறைதொகூஉம் மருங்கினான்"* (தொல்.எழுத்து.351)

*"ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ"* (தொல்.சொல்.57)

*"பெயரினாகிய தொகையு மாருளவே"* (தொல்.சொல்.68)

*"தொகுத்தலின் குறைத்தலின்"* (தொல்.சொல்.72)

என்னுமிடங்களில் கூடுதல் - இணைதல் என்னும் பொருளிலும்,

*"உயர்திணைத் தொகைவயின்"* (தொல்.சொல்.90)

*"கருவி தொகுதி"* (தொல்.சொல்.359)

*"வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்"* (தொல்.சொல்.33)

*"தம்வயின் தொகுதி கடப்பாடிலவே"* (தொல்.சொல்.282)

*"யாவயின் வரினும் தொகையின்றியலா"* (தொல்.சொல்.285)

என வருமிடங்களில், எண்ணிக்கை - அளவு - தொகுப்பு என்னும் பொருளிலும்,

*"தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்"*

(தொல்.எழுத்து.133)

*"ஐயும் ஆனும் தாம்பிரிவிலவே தொகவருகாலை"*

(தொல்.சொல்.93)

"குத்தொக வருஉம் கொடை எதிர் கிளவி" (தொல்.சொல்.95)

"பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்" (தொல்.சொல்.100)

"உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்" (தொல்.சொல்.291)

எனவருமிடங்களில் மறைந்து நிற்றல் - நீங்கி நிற்றல் என்னும் பொருளிலும் ஆசிரியர் ஆளுதலைக் காணலாம்.

இவ்வாறே சான்றோர் செய்யுட்களிலும் "உடன்மூவர் சொல் தொக்கத் தேறப்படும்" (குறள்-685) என்னுமிடத்தில் கூடுதல் என்னும் பொருளிலும், "சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்" (குறள்-711) என்னுமிடத்து எண்ணிக்கை-தொகுப்பு என்னும் பொருளிலும், "தொல் வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக நல்குரவு என்னும் நசை" (குறள்- 1043) என்னுமிடத்து, ஒருங்கிணைதல் என்னும் பொருளிலும், "தொல்லுழித் தடுமாறித் தொகல் வேண்டும் பருவத்தால்" (கலி -139) "தொடர் நீப்பின் தொகுமிவள் நலம்" (கலி-76) என்னுமிடங்களில் கெடல், மறைதல் என்னும் பொருளிலும் ஆளப்பட்டிருத்தலைக் காணலாம்.

இனி, தொல்காப்பியர் தொகை மொழிகளின் இலக்கணம் கூறுமிடங்களில், மேற்கூறிய பொருள் வகையுள், எப்பொருளை அமைத்துக் கூறியுள்ளார் எனக் காண்போம்.

"வேற்றுமைத் தொகையே வேற்றுமையியல" (தொல்.சொல்.407)

"வினையின் தொகுதி காலத்தியலும்" (தொல்.சொல்.409)

"இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே" (தொல்.சொல்.411)

"பண்புதொக வருஉம் கிளவி யானுட
உம்மை தொக்க பெயர் வயினானும்
வேற்றுமை தொக்க பெயர் வயினானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே" (தொல்.சொல்.412)

"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று
அன்னபிறவும் அதன் குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும பண்பின் தொகையே" (தொல்.சொல்.410)

என்பவை ஆசிரியர் கூற்றாகும். இந்நூற்பாக்களில் புணர்ந்து நின்ற வேற்றுமை, பண்பு, உவமம் முதலாய உருபுகள் கெட்டுத் (தொக்கு) தொகையாகும் என்று கூறவில்லை. அவ்வப்பொருள் தோன்ற இரண்டு முதலாய சொற்கள் இணைந்து தொகையாகும் என்பதனைப் பிற இடங்களில், பெறப்படவைத்துள்ளமை காணலாம்.

வேற்றுமைத் தொகைபற்றி எழுத்தியலுள், வேற்றுமைப் புணர்ச்சிக்கண் உருபு விரிந்துவரின், அவை உருபு புணர்ச்சி எனப்படும். உருபு விரியாமல் அப்பொருள் தோன்றச் சொற்கள் புணரின், அவை வேற்றுமைப் பொருட்புணர்ச்சி எனப்படும் என்றமையான். வேற்றுமை, பண்பு, உவமம் முதலிய தொகைக்கண் வேற்றுமை முதலிய பொருள் தோன்றச் சொற்கள் இணைந்து வருதலே, தொகை என்பது தொன்னூலார் கருத்தென்பது விளங்கும்.

மற்றும் உவம வியலுள் "சுட்டிக் கூறா உவமமாயின் பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே" (உவம - 7) என்பதனான் உவம உருபு ஆண்டு விரியாமல் உவமப் பொருள் புலப்பட இரண்டு சொற்கள் இணைந்து நிற்றலே, தொகுதி அல்லது தொகை என்பது இனிது பெறப்படும்.

எழுத்ததிகாரப் புறனடையுள், புணரியல் நிலையிடை உணரத் தோ;ன்றாதவை பற்றிக் கூறுமிடத்து,

"செய்யும் செய்த என்னும் கிளவியின்
மெய்யொருங் கியலும் தொழில் தொகு மொழி"
(தொல்.எழுத்து.482)

என்று வினைத் தொகை பற்றிக் கூறுகின்றார். மெய் என்றது பொருளை. எனவே, கால இடைநிலைகள் விரியாமல் முதனிலைத் தொழிற்பெயரும், பொருட்பெயரும் கூடி ஒரு சொல் நீர்மைப்பட வருதலே வினைத்தொகை எனத் தெளியலாம்.

பண்புத் தொகை பற்றி, "நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியும்" என்றும், "அடையொடு தோன்றினும் புணர்நிலைக்குரிய", என்றும் "இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்" என்றும், "வண்ணச் சினைச் சொல்" என்றும், "சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும், இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்றும், "பெயரினாகிய தொகையுமாருளவே" என்றும் ஆசிரியர் கூறியுள்ளமையான், இருதிணைப் பெயர்களும், பண்பு முதலாயினவற்றை அடுத்து

வரும் என்பது பெறப்படும். அவ் அடைமொழிகள் வருமிடத்து, அடுத்து நிற்கும் சொல்லினது பாலையே கொண்டு பிளவுபடாமல் இணைந்து நிற்கும் என்பதும், பண்புச் சொல்லுள் பாலுணர்த்தும் இடைச் சொல் தோன்றாமலே, மேல்வரும் சொல்லொடு இணைந்து தொகை மொழியாகும் என்பது விளங்க ஆசிரியர் "உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின் ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும்" (எழுத்து.482) எனக் கூறியுள்ளமையான் அறியலாம்.

உம்மைத் தொகை பற்றி எழுத்ததிகாரத்துள், "உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகை மொழி" (எழு - உயிர் - 21) எனவும், "உம்மை தொக்க எனாஎன் கிளவியும்" (இமை - 41) எனவும், ஆசிரியர் கூறியுள்ளமையான் எண்ணும்மைப் பொருள் தோன்ற, இரண்டு முதலாய சொற்கள் இணைந்து வருதலே உம்மைத் தொகை என்பது புலப்படும்.

தொகை மொழிகளில் இரண்டு முதலாய பெயர்கள் இணைந்து தொகுமிடத்து வேற்றுமைப் பொருள், பண்புப்பொருள், உவமப் பொருள் முதலியவை மறைந்து நிற்கும் என்பதனை,

"அவைதாம்,
முன்மொழி நிலையிலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள் நிலை மரபே" (தொல்.சொல்.413)

என்பதனான் நன்குணரலாம்.

தொகைமொழிகள் ஆறும் பொருளிடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயர்களே, அவ்வத்தொகை மொழிப் பொருள்கட்கு ஏற்ப இணைந்து நிற்கும். தொகை மொழிக்கும் - தொகைச்சொல் தொடர்க்கும், வேறுபாடுணராமல் பவணந்தியார்,

"பெயரொடு பெயரும் வினையும், வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றுருபுஇடை
ஒழிய, இரண்டு முதலாத் தொடர்ந்து, ஒரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்"
(நன்.361)

என்றார். பவணந்தியார் வரிவடிவ நோக்கும், வடமொழிக் குறிக்கோளும் கொண்டு நூல் செய்துள்ளமையைத் தேறாத உரையாசிரியன்மார், நிலங்கடந்தான், தலைவணங்கினான், ஊர்

நீங்கினான், மனையிருந்தான் எனவரும், உருபுகுன்றிய தொடர்களையெல்லாம் உதாரணமாகக் காட்டிச் சென்றனர்.

## தொகை மொழி - தொகைச் சொல் தொகை நிலைத்தொடர் வேறுபாடுகள்

தொகை மொழி ஆறனுள், உம்மைத் தொகை தவிர்ந்த ஐந்தும், இரண்டு பெயர்களாகவே தொகையுற்றமையும், உம்மை இரண்டும் அதற்கு மேற்பட்டும் தொகையுற்றமையும், யாவும் எழுவாயாகவோ - பயனிலையாகவோ கொள்ளுதற்கேற்ப ஒருசொல் நீர்மையனவாகவே அமையும்.

அஃதாவது, ஓரெழுத்தொருமொழி முதலாகிய மூவகை மொழிகளைப் போல, அவற்றின் இனமாக அமைந்து வரும். அஃதாவது, ஓரெழுத்தொரு மொழி முதலியவை ஒருதொடரின்கண் எழுவாயாகவும், ஏனை வேற்றுமைகளை ஏற்றுப் பெயராகவும், பெயர்ப்பயனிலையாகவும் வருமாறு போலத் தொகை மொழிகளும், ஒட்டுப்பெயராக நின்று எழுவாயாகவும், ஏனை வேற்றுமைகளை ஏற்றுப் பெய ராகவும், பயனிலையாகவும் வரும்.

எ.டு: பொற்றொடி நன்று - இது பொற்றொடி பொற்றொடி யணிந்தாள், பொற்றொடியால் அழகுற்றாள், பொற்றொடிக்கு மெருகேற்றினாள் எனவரும்.

தொகை மொழியாக அமைந்துள்ள பெயருள், ஒன்றற்கு ஒன்று எழுவாயும், பயனிலையுமாக முடியா. எழுவாயும் பயனிலையுமாக முடியின், அவை தொகை மொழியாகா. உருபு தொக்க தொடர் மொழியாகும்.

எ.டு: நிலங்கடந்தான் - என்பது தொகை மொழியாயின் திருமால் என ஒருபொருள் உணர்த்தும். தொகைநிலைத் தொடராயின், சாத்தன் நிலத்தைக் கடந்தான் என எழுவாயும், பயனிலையுமாக இருபொருள் உணர்த்தும். தொகை மொழியாக நிற்குமிடத்து, நிலத்தைக் கடந்தவன் (ஆகிய திருமால்) என இருசொல்லும், பெயராக இணைந்து நிற்கும். தொகைநிலைத் தொடராக நிற்குமிடத்து, நிலம் செயப்படு பொருளையும், கடந்தான் என்பது இறந்தகாலப் படர்க்கை ஒருமை வினை முற்றாகவும் நிற்கும். பண்புத் தொகை, உவமத் தொகை முதலியனவும், இவ்வாறே அமைந்து வரும். இனி ஒவ்வொன்றன் இயல்பையும் காண்போம்.

## வேற்றுமைத் தொகை மொழி

வேற்றுமைத் தொகை மொழியாவது, செயப்படுபொருள், கருவிப் பொருள், கோடற்பொருள், எல்லைப் பொருள், உடைமைப்பொருள், இடப்பொருள் ஆகிய ஆறு வேற்றுமைகளின் பொருளைத் தம்முட் கொண்டு, இருசொற்கள் பிளவுபடாமல் இணைந்து நிற்பதாகும். இவை விரிந்து பொருள் புலப்பாடு செய்யுங்கால், அவ்வவ் வேற்றுமைக்குரிய உருபுகளும், வேண்டுமிடத்துப் பொருளை விளக்கும். பயனிலைச் சொற்களும் விரியும்.

எ.டு: பழந்தின்னி (வௌவால்), மரங்கொத்தி (ஒரு சிறு பறவை) ஈர்க்கொல்லி (ஈரைக் கொல்லும் ஒரு கருவி) இவை விரியுங்கால் பழத்தைத் தின்னும் இயல்புடையது. மரத்தைக் கொத்தும் செயலுடையது. ஈரைக் கொல்லுதலைச் செய்வது என விரியும். இவை இரண்டாம் வேற்றுமைத் தொகை மொழிகள்.

மற்று, நிலங் கடந்தான், பழந்தின்றான் என உருபு தொக்கு எழுவாயும், பயனிலையுமாக வருவன தொகைச் சொற்றொடர்களாம். இவை இரண்டும் ஓர் எழுவாயின், ஒட்டுப் பெயர்களாய் நிலங்கடந்தான், அருளினான், பழந்தின்றான், கூறினான் எனவரின் நிலத்தைக் கடந்தவன், பழத்தைத் தின்றவன் எனக் காரணப் பெயராய்த் தொகை மொழியின் பாற்படும்.

2. கால்நடை (விலங்குகள்) பொற்றாலி (கடிசூத்திரம்) வாள்வெட்டு (புண்) என்பவை மூன்றாம் வேற்றுமைத் தொகை மொழிகள். இவை விரியுங்கால் கால்களால் நடக்கும் இயல்பினது, பொன்னாலாகிய அணிகலன், வாளான் வெட்டப்பட்டபுண் என விரியும். இவை உருபுடன் பயனிலைச் சொற்கள் உடன் விரிந்தன. காரணம் மூன்றாம் வேற்றுமை வினை கொண்டு முடியும் இயல்பினது. இனி, தலை வணங்கினான், பொன் பெரியன் என வருவன, தலையால் வணங்கினான், பொன்னாற் பெரியன் என எழுவாயும், பயனிலையுமாக முடிதலின் தொகைநிலைத் தொடர்களாம். தலை வணங்கினவன், பொன்னாற் பெரியவன் எனக் காரணப் பெயராயின், தொகை மொழியின்பாற்படும். இவை மூன்றாம் வேற்றுமைத் தொகை மொழிகள்.

3. நெல்வேலி - நோய் மருந்து - கண்மை என்பவை நான்காம் வேற்றுமைத் தொகை மொழிகள். இவை விரியுங்கால், நெல்லுக்குக் கோலிய வேலி - நோய்க்கு உரிய மருந்து - கண்ணிற்கு இடும்மை என, உருபும் பயனிலைச் சொற்களுமாக விரியும். ஊர் சென்றான் - கருவூர்க் கீழ்த்திசை என்பவை ஊருக்குச் சென்றான், கருவூர்க்குக் கிழக்கேயுள்ள திசை என்பவை தொகைச் சொற்றொடர்கள்.

நான்காம் வேற்றுமை சிறுபான்மை முறைப்பொருள் கொண்டும் வரும். அவ்வழி நான்காம் வேற்றுமைத் தொகைச் சொற்கள். சாத்தன் மகன் - நங்கை கணவன் எனவரும், அவை சாத்தனுக்கு மகன், நங்கைக்குக் கணவன் எனவிரியும். முறைப் பொருள் ஆறாம் வேற்றுமை உடைமைக்கே சிறந்ததாகலின், நங்கை கணவன் - நம்பி மகன் என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகை மொழி விரியுமிடத்து, அது என்னும் உருபு விரியாது நங்கைக்குக் கணவன் - நம்பிக்கு மகன் என்றே விரியும். விரியுமாயினும் அவை உடைமைப் பொருளினவேயாகும். நன்னூலாசிரியர் முறைப் பொருளை நான்காம் வேற்றுமைக்கும் உரியதாகக் கொண்டமையின் இம்மரபு போற்றப்படாமற் போயிற்று.

4. மலையருவி - மொழிபெயர்ப்பு எனவரும். இவை ஐந்தாம் வேற்றுமைத் தொகை மொழிகள். இவை விரியுங்கால், மலையினின்றும் வீழும். அருவி, மொழியினின்றும் பெயர்த்த உரை என விரியும். ஊர் நீங்கினான் - பழிதீர்ந்தான் என வருவன தொகைநிலைத் தொடர்களாம்.

5. யானைக் கோடு - மான்கன்று - அரசாட்சி எனவரும். இவை ஆறாம் வேற்றுமைத் தொகை மொழிகளாம். இவை விரியுங்கால் யானையது கோடு - மானினது கன்று - அரசனது ஆட்சி என விரியும். இவை யானையினுடைய கோடு - அரசனுடைய ஆட்சி - மானினுடைய கன்று என ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபாலும் விரியும்.

6. ஊர்மன்று - கடல்மீன் - மாலை விளக்கு எனவரும். இவை ஏழாம் வேற்றுமைத் தொகை மொழிகளாம். இவை விரியுங்கால் ஊர்க்கண் உள்ள மன்று - ஊரின்கண் உள்ள மன்று - ஊர் அகத்துள்ள மன்று எனவும், கடலின்கண் உள்ளமீன். கடலின்கண் திரியும்மீன் எனவும், மாலைக் கண்சுடரும் விளக்கு. மாலையின்கண் ஏற்றும் விளக்கு என விரியும்.

இனி, மலையகம் - நகர்ப்புறம் என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகை மொழிகள், முன்பின்னாக மாறி அகமலை - புறநகர் எனவும் வரும். அவ்வழி, அவை நேரே தொகை மொழிகள் எனப்படா. இவற்றை முன்பின்னாகத் தொக்க, ஆறாம் வேற்றுமைத் தொகை மொழி எனல் மரபாகும்.

இனி, ஓர் எழுவாய்ப் பொருளைக் குறித்து, இரண்டுக்கும் மேற்பட்ட சொற்களால் வரும் மொழிகளும் உள.

எ.டு: சூடிக் கொடுத்த சுடர்க் கொடி - திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் - நிலங்கடந்த நெடுமுடியண்ணல் - கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதி என்றாற் போல வரும். இவற்றைப் பெயரினாகிய தொகை என்பர். இவை ஒரு பொருளையே சுட்டிவரினும் தொகை மொழியாகா. இவ்வாறு வருவனவற்றைப் பன்மொழித் தொகை எனல் மரபாகும்.

## உவமத் தொகை மொழி

உவமத் தொகை மொழியாவது, ஒரு பொருளை விளக்க வினை, பயன், மெய், உரு என்னும் வகையில், ஒத்ததொரு பொருளை இணைத்துக் கூறும் நிலையில், அவ்விரு பொருளும் பிளவுபடாமல் ஒரு சொல் நீர்மையவாக நிற்பதாகும். இதன் இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

"உவமத் தொகையே உவம இயல" (தொல்.சொல்.408)

என்று கூறும். அஃதாவது உவம வியலுள், சுட்டிக் கூறா உவமமாயின்,

"பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"

(தொல்.பொருள்278)

என்னும் விதிப்படி வருதலாம். அவற்றை விளக்குமிடத்து, இடையே போல, புரைய, ஒப்ப, நிகர என்பன முதலாகக் கூறப்பெற்ற உருபுகளும், உவமத் தன்மையும் விரிந்து வரும்.

எ.டு: கிளிமொழி. இது வினைப் பொருளை ஒப்பாகக் கூறிய வினை உவமத்தொகை. இது விரியுங்கால் கிளிமொழி மானக்கிளக்கும் மொழி (மானுதல் = ஒத்தல்) எனவரும். புலிப்பாய்ச்சல் என்பதுமது.

மாரிவெண்கோ : என்பது பயனுவமத் தொகை. இது விரியுங்கால் மாரிவழங்குவது, பொருவ வழங்கும் கைகளையுடைய வெண்கோ மன்னன் எனவரும். (பொருவுதல்

= ஒத்தல்) மழைக்கை என்பதுமது. மழைபெய்து வழங்கல்போல் வழங்கும் கை என்பது பொருள்.

*துடியிடை:* இது மெய் உவமத் தொகை (மெய் : வடிவம்) இது விரியுமிடத்துத் துடியினது நடுவினை ஏய்ப்ப ஒடுங்கிய இடை எனவரும் (ஏய்தல் = ஒத்தல்)

*கார்வண்ணன்:* இஃது உருவுமத் தொகை. (உரு = நிறம் முதலிய பண்பு) இது விரியுங்கால், கார்முகிலின் நிறத்தைப் போலக் கரிய வண்ணத்தான் எனவரும்.

உவமத் தொகையுள் பொருட் சொல்லும், அதனை விளக்கும் உவமச் சொல்லும், தொகையுற்று ஒருசொல்போல நிற்குங்கால் நிலை மொழியாக நிற்கும் உவமச் சொல்லும் வருமொழியாக வரும் பொருட் சொல்லும், வினை, பயன், மெய் உரு என்னும் நான்கனுள், எப்பொருள்படத் தொக்கு நிற்கின்றனவோ, அப்பொருளையும், அதற்குரிய உவமஉருபுகளையும், விரித்துணர்த்தல் வேண்டும். அவ்வாறன்றிக் கிளியன்ன மொழி, மாரியன்ன வெண்கோ, துடிபோன்ற இடை, கார்போன்ற வண்ணன் என உவம உருபுகளை மட்டும் விரித்துக் கூறுதல் வழுவாகும்.

தொல்காப்பியம் வினை, பயன், மெய், உரு ஆகிய பொருள்களுக்குரிய உருபுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துக் கூறுகின்றது.

| | | |
|---|---|---|
| வினைஉவம உருபுகள் | : | அன்ன, ஆங்க, மான, விறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு. |
| பயன் உவம உருபுகள் | : | என்ன, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ. |
| மெய்யுவம உருபுகள் | : | கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஓட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப. |
| உருவுவம உருபுகள் | : | போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்பனவாகும். 'அன்ன' என்பது நான்கற்கும் பொதுவாக வரும். |

இம்மரபு இலக்கியப் புலவோரால் கடைப்பிடிக்கப் பெறாமையான் போல, அன்ன, ஒப்ப, புரைய, ஏய்ப்ப என்பனவே பயின்று வரலாயின. பிறவிளக்கங்களை, எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை நூலுட் கண்டு கொள்க.

இனி, கிளிமொழி, மாரி வெண்கோ எனவருவன வற்றையெல்லாம் கிளியை ஒக்கும் மொழி, மாரிமை ஒக்கும் வெண்கோ என ஐயுருபை, உடன் விரித்து உவமத் தொகையெல்லாம் வேற்றுமைத் தொகையாதற்கும் ஏற்கும் எனச் சில உரையாசிரியர்கள் கூறிச் சென்றனர். இங்ஙனம் கூறுதல் மயங்க வைத்தல் என்னும் நூற்குற்றமாகும். காரணம், கிளியை ஒக்கும் மொழி என விரித்த வழி வேற்றுமை உருபு கிளி கிளத்தலை ஒக்கும் எனவும், மாரி வழங்குதலை ஒக்கும் என ஐகார உருபு வினைமுடிபை நோக்கி விரிந்ததேயன்றி கிளியையும், மாரியையும் நோக்கி விரிந்ததாகாது. ஆதலின் உவமத் தொகை வேற்றுமைத் தொகையாகாது எனத் தெளிக.

உவமத் தொகை மொழியை விரிக்குங்கால், பொருள் புலப்பாடு தோன்ற விரியும் உருபிடைச் சொல், வினை நிலை எய்துதலான், அவ்வினைக்கு உவமச் சொல் செயப்படு பொருளாதலின், அதன்கண் இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்தது என அறிக. அதனான் 'ஒப்பு' இரண்டாம் வேற்றுமைப் பொருளாக ஓதப்பட்ட தென்க. மற்று, உவமும் பொருளுமாகத் தொக்கும் நிற்கும் தொகை மொழியின்கண், உவமப் பொருள் விரியுமேயன்றி, வேற்றுமைப் பொருளை விளக்காது என அறிக. உவமத் தொகையை உவமைத் தொகை எனல் பிழை வழக்காகும். உவமம் என்பது பொருளையும், உவமை என்பது அதன் தன்மையையும் குறிக்கும். "தேன் போன்ற மொழி" என்னும் உவமத் தொடருள் மொழி என்பது பொருள். தேன் என்பது உவமம். போன்ற என்பது உவம உருபு. இரண்டற்கும் ஒப்பாக உள்ள இனிமை உவமைத் தன்மை என அறிக. இனி, உவமத் தொகையை விரிக்குங்கால், உவம உருபு மட்டும் விரியின் பொருள் மயக்கம் ஏற்படும். உவமத் தன்மையை உடன் விரித்தல் வேண்டும். புலிமறவன் என்பதைப் புலிபோன்ற மறவன் என, உருபு மட்டும் விரிப்பின், புலிபோன்ற காலும், வாலும் உடையவன் எனவும், பொருள் தருமாதலின், புலி போலப்பாயும் மறவன் என விரித்தல் வேண்டும்.

நன்னூலாசிரியர், உவம - உருபிலது உவமைத் தொகையே" என்பார். அது பிழை என்பது புலி மறவன் என்னும் உதாரணத்தில் விளக்கப்பட்டது.

## வினைத்தொகை மொழி

வினைத்தொகை மொழியில் வினை என்றது காலமுணர்த்தும் இடைச் சொற்களையும், அவற்றின் காலத்தையும் குறிக்கும். வேற்றுமைத் தொகை முதலியவை வேற்றுமைப் பொருள் முதலியவற்றைக் குறித்தலைப் போல, வினை என்பது காலத்தை உணர்த்தும். அதனான் வினைச் சொல்லுக்குக் காலக் கிளவி என்பதும் ஒரு பெயராக அமைந்தது. வினைத்தொகையின் இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

**"வினையின் தொகுதி காலத் தியலும்"** (தொல்.சொல்.409)

என்கின்றது. காலத்தியல்வதாவது செய்யும், செய்கின்ற, செய்த என்னும் காலம் உணர்த்தும் இயல்பு, இதனைத் தொல்காப்பியம்,

**"செய்யும் செய்த என்னும் கிளவியின்**
**மெய்யொருங் கியலும் தொழில்தொகு மொழி"**
(தொல்.எழுத்து.482)

என விளக்குகின்றது. (மெய் என்றது பொருளை)

வினைத்தொகை மொழிகளில் உள்ள இரண்டு சொல்லும் பெயர்களே. முதல் நிற்பது தொழிற்பெயர். அடுத்து நிற்பது பொருட் பெயர். மறைந்து நிற்பவை காலமுணர்த்தும் இடைநிலை இடைச் சொற்களாகும். வினைத்தொகையில் முதல் நிற்கும் தொழிற் பெயர் விகுதி பெறாத முதனிலைகளாக அரி, தெரி, செல், கொல், தேய், பாய், வளர், புணர், கழி, மொழி, ஆடு, எழு, சூழ், என்றாற்போல வருவனவாகும். பின்நிற்கும் பெயர் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்பற்றிய பெயராக வரும்.

**எ.டு:** ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல் யானை எனவரும். இவை விரியுங்கால் தொடர் மொழிப் பொருளுக்கேற்ப ஆடின அரங்கு, ஆடுகின்ற அரங்கு, ஆடும் அரங்கு எனவும், செய்தகுன்று, செய்யப்படுகின்ற குன்று, செய்யும் குன்று எனவும், புணர்ந்த பொழுது, புணர்கின்ற பொழுது, புணரும் பொழுது எனவும், அரிந்தவாள், அரிகின்றவாள், அரியும் வாள் எனவும், கொன்ற யானை, கொல்லுகின்ற யானை, கொல்லும் யானை எனவும் விரியும்.

வினைத்தொகை மூன்று காலத்தையும் அடக்கி நிற்பினும், தொடர் மொழிப் பொருளின் சூழலுக்கேற்ப ஒரு காலத்தை உணர்த்தும். உணர்த்துமிடத்து இறந்தகால வினைத்தொகை, நிகழ்கால வினைத் தொகை, எதிர்கால வினைத் தொகை எனப்படும். காலத்தை வரைந்துணர்த்தாத வழி முக்கால வினைத் தொகை எனப்படும்.

எ.டு: மாதவி ஆடரங்கினின்று வந்தாள் என்னுமிடத்து, இறந்த கால வினைத் தொகை. மாதவி ஆடரங்கில் நடிக்கின்றாள் என்னுமிடத்து, நிகழ்கால வினைத் தொகை. மாதவி ஆடரங்கிற்குச் செல்கின்றாள் என்னுமிடத்து, எதிர்கால வினைத்தொகை. இது மக்கள் கட்டிய ஆடரங்கு என்னுமிடத்து, முக்கால வினைத் தொகை.

தமிழ்நெறி மரபை ஓராத பவணந்திமுனிவர் வினைத்தொகைக்கு இலக்கணம் கூறுமிடத்துக் "காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்பார். நிலைமொழி பெயரெச்சச் சொல்லாயின், அதனைப் பெயர் எனக் கூறுதல் வழுவாம். பெயரெச்ச விகுதிகள் நின்று தொக்கனவாயின், அவை நின்ற பொழுது, அவை பெயரெச்சத் தொடர் ஆவதன்றி வினைத் தொகை மொழியாகாதென அறிக. உருபு முதலாயன நின்று தொகுதல் தொகை என்னும் கொள்கை யுடையவராதலின், பவணந்தி முனிவர் இங்ஙனம் கூறிச் சென்றார் என்க. வடநூலார், வினைத் தொகையை ஒரு தனிவகையாகக் கொள்ளாமல், கர்மதாரயன் என்னும் சமாசத்தில் அடக்கிக் கூறுவர்.

## பண்புத் தொகை மொழி

'பண்பு' என்பது காட்சிப் பொருளும், கருத்துப் பொருளுமாகத் திகழும், அறுவகைப் பெயர்ப் பொருள்களிடத்துத் தற்கிழமை இயல்பாக அமைந்து கிடக்கும் காட்சிப் பொருளும், கருத்துப் பொருளுமாக உள்ள குணங்களாம். அவை அடையாக நின்று, அப்பொருள்களைச் சிறப்பிக்குமிடத்துத் தொகை மொழியாக வரும்.

குணப் பொருள்களை வண்ணம், வடிவு, அளவு, சுவை, பண்பு என வகைப்படுத்துவர். அவை ஐம்பொறிகளாலும், மனத்தாலும் உணரப்படுவனவாக அமைந்து வரும்.

**வண்ணம் :** செம்மை, கருமை, வெண்மை, பசுமை, பொன்மை முதலியனவாம்.

**வடிவு:** குறுமை, நெடுமை, பருமை முதலியனவாம்.

**அளவு:** வட்டம், சதுரம், நீட்டல், குறுக்கல், எண்ணல் முதலியனவாம்.

**சுவை:** இனிப்பு, உறைப்பு, கைப்பு, துவர்ப்பு முதலியனவும், நகை, அழுகை, இளிவரல், மருட்கை முதலியனவுமாம்.

**பண்பு:** அன்பு, அருள், ஆண்மை, பெண்மை, அறிவு, ஒழுக்கம் முதலியவை. இவை எல்லாம் தனித்து நில்லாமல், இருதிணைப் பொருள்களைப் புறத்தும், அகத்தும் பற்றிக் கொண்டு காட்சிப் பொருளாகவும், கருத்துப் பொருளாகவும், இல்பொருளாகவும் வெளிப்படுவன, ஆதலின் குணங்கள் எனப்பட்டன.

குணங்களையுணர்த்தும் சொற்கள் நிறைஉரிச் சொல்லாகவும், குறையுரிச் சொல்லாகவும், விகுதி பெற்ற சொல்லாகவும் வரும். இவை ஒரு பொருளுக்கு, அவற்றின் நிலைமைகளை விளக்கும் முறையில், அவற்றிற்கு அடையாக அமைந்து, ஒரு சொல் நீர்மையாக வருமிடத்துப் பண்புத் தொகை மொழிகளாக அமையும்.

மற்றும் ஒரு பொருட்பெயருடன் அவற்றின் சிறப்புப் பெயரும் இணைந்து ஒரு பொருளையே சுட்டிவருமிடத்தும் பண்புத்தொகை மொழி எனப்படும். சிறப்புப் பெயர்கள் என்பவை சாதி, தொழில், இனம் பற்றிய பெயர்களாகும். இவற்றை இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப் பிரித்துக் கூறுவர். மேலும், அளவைப் பெயர்கள் பெருக்கல் வாய்பாடு பட வருவனவும், பண்புத் தொகையுள் அடங்கும், கூட்டல் வாய்பாடாக வரின் உம்மைத் தொகையுள் அடங்கும்.

இப்பொருள் இத்தன்மைத்து, இந்நிலைமைத்து என வருவனவெல்லாம் பண்புத் தொகையாக அமையும். இதனின் இத்தன்மைத்து, இப்பொருள் எனவருவனவும், இதனுடையது இப்பொருள் எனவருவனவும், வேற்றுமைத் தொகைகளாக அமையும். வண்ணம் முதலிய குணங்களை ஒரு பொருளினது

உடைமைப் பொருளாகக் கூறுமிடத்து, வேற்றுமைத் தொகையாக அமையும். ஒரு பொருளை ஒரு பொருளொடு இணைத்து, ஒன்றுபடக் கூறுமிடத்துப் பண்புத் தொகையாக அமையும்.

பண்புத் தொகை மொழி விரியுங்கால் பண்புணர்த்தும் சொற்கள், அப்பண்பினையுடைய பொருட்குரிய பாலிட விகுதிகளோடு ஆகிய என்னும் இணைப்பிடைச் சொல்லுடன் விரியும்.

அஃதாவது கருங்குதிரை என்னும் பண்புத்தொகை விரியுமிடத்துக் கரியதாகிய குதிரை என விரியும். கருங்கொற்றன் என்னும் பண்புத் தொகை கரியனாகிய கொற்றன் எனவிரியும். கருமையாகிய குதிரை, கருமையாகிய கொற்றன் என விரித்தலும் கருமையை யுடைய குதிரை கருமையை உடைய கொற்றன் என விரித்தலும் பெரும் பிழையாகும். இவ்வாறே, செவ்வேள் என்பது செய்யனாகியவேள் எனவும், நுண்பொருள் என்பது நுண்ணிதாகிய பொருள் எனவும், குறுமகள் என்பது குறியளாகிய மகள் என விரியும்.

இனி, பார்ப்பன மகன், பார்ப்பன மகள் என இருபெயரொட்டாக வருபவை பார்ப்பனனாகிய மகன் - பார்ப்பனியாகிய மகள் என விரியும். இவ்வாறே குறமகன் என்பது குறவனாகிய மகன் என்றும் குறமகள் என்பது குறத்தியாகிய மகள் எனவும், கொல்லன் அழிசி என்பது கொல்லனாகிய அழிசி எனவும், ஏனாதி நெடுங்கண்ணன் என்பது ஏனாதியாகிய நெடுங்கண்ணன் எனவும், காவிதி கண்ணந்தை என்பது காவிதியாகிய கண்ணந்தை எனவும் விரியும்.

மற்று, திணைபால் விரியுமிடத்து, அப்பண்பு எப்பொருளுக்கு எது அடையாக நிற்கின்றதோ, அது அப்பொருளுக்குரிய திணைபால் விகுதிகளைப் பெற்று விரியும். அஃதாவது நெடுங்கண்ணன் என்னும் தொகையுள், நெடுமை கண்ணுக்குரியதாயின், நெடியதாகிய கண்ணை உடையவன் எனவும், கண்ணனுக்குரியதாயின், நெடியனாகிய கண்ணன் எனவும் விரியும். எனவே, வண்ணம் முதலிய அடைகள் எப்பொருளுக்குரியன என்பதை நன்கறிந்து, அவற்றிற்கு ஏற்ப விரித்தல் வேண்டும். பண்புத் தொகை பற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கணம்,

"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென் வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே" (தொல்.சொல்.410)

என்பதாகும்.

குணமும் குணமுடையதும் ஒரு பொருளேயாதலின் "அதன் குணம் நுதலி" என்றும், பொருளை "இது" என்றும், ஒன்றுபட்டுக்கிடக்கும் அதன் தன்மையை "இன்னது" என்றும் கூறுகிறது. இன்னது என்றதனான், இத்தொகை விரியுமிடத்து, கிழமைப் பொருள்தோன்ற விரியும் என அறிக. பண்புத் தொகை பல்வேறு வடிவங்களில் வருதலான், "என்ன கிளவியும்" என அடக்கிக் கூறப்பட்டது.

ஒரு பொருளை அதன் தன்மையொடு கூட்டிக் கூறாத பொழுது, அப்பொருட்பெயர் ஒருசொல் அளவினதாகவே நிற்கும் ஆதலின், "அதன் குணம் நுதலி வரூஉம் இயற்கை என்ன கிளவியும்" எனப்பட்டது. மேலும், உவமவேறுபாடாகிய உருவகமாக வருமிடத்து முகமதி, அடிமலர் என்றாற் போலத் தொக்கு வருவனவும் வடசொற் கிளவி, உரிச் சொற் கிளவி எனவும், வேழக்கரும்பு ஆயன் சாத்தன், மறவன் மாறன் என்றாற்போல குணத்தைச் சுட்டாமல், அப்பொருளையே சுட்டி வருவனவும், அன்னபிறவாறு வருவனவும் பண்புத் தொகையாகவே அமையும்.

இனி வண்ணம் முதலாயவற்றிற்கு எடுத்துக்காட்டு வருமாறு: கருங்குதிரை, வெண்டிங்கள், செங்காந்தள் என வருபவை வண்ணம் பற்றியவை. வட்டப்பலகை, முடத்தெங்கு என வருபவை வடிவுபற்றியவை. நெடுமாறன், குறுஞ்சாத்தன், பேரூர் எனவருபவையும், இருகழஞ்சு, நானாழி, இருநூறு என வருபவையும் அளவு பற்றியவை. தீங்கனி, உவர்நீர் எனவருபவை சுவை பற்றியனவாகும். அன்புருவம், கடுஞ்சொல், சினத்தீ என வருபவை பண்பு பற்றியவை.

பிறவாறு வருவன: தண்ணீர், நுண்பொருள், ஒண்சுடர், நறும்பூ, மெல்லணை, உரிச்சொல் எனப் பண்புபற்றி வருவனவும், சாரைப் பாம்பு, வேழக் கரும்பு, ஆயன் சாத்தன், குமாரவேலன் என இருபெயரொட்டாக வருவனவும் பிறவும் கொள்க.

பண்புத் தொகை விரியுங்கால், ஐம்பாலறியும் பண்பு விளங்க விரியும் என்பார் தொல்காப்பியர். அவர் கூறும் இலக்கணம்,

"உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழி" (தொல்.எழுத்து.482)

என்பதாகும். அது விரியுமாறு: 'கருங்குதிரை - கரியதாகிய நிறமுடைய குதிரை எனவும், முடத்தெங்கு - முடத்ததாகிய வடிவுடைய தெங்கு எனவும், நெடுமாறன் - நெடிய அளவினனான மாறன் எனவும், தீங்கனி - தீவிதாகிய சுவையையுடைய கனி எனவும், நுண்பொருள் - நுண்ணிதாகிய நோக்குடைய பொருள் எனவும், ஒண்சுடர் - ஒள்ளிதாகிய தேசுடைய சுடர் எனவும், நறும்பூ - நறிதாகிய மணமுடைய பூ எனவும், மெல்லணை - மெல்லிதாகிய பண்புடைய அணை எனவும் விரியும்.

இருபெயரொட்டும் பண்புத் தொகை முதலியவை விரியுங்கால், அப்பொருள்களை விளக்குதற்கு வேண்டும் சொற்களால் விரியும்.

சாரைப் பாம்பு - சாரை என்று சொல்லப்படும் பாம்பு எனவும் ஆயன்சாத்தன் - ஆயன் என்றழைக்கப் பெறும் சாத்தன் எனவும் விரியும். இவை சாதிப்பண்பு.

அடிமலர் - அடியாகிய மலர், முகமதி - முகமாகியமதி, இவை உருவகப்பண்பு. வட சொற்கிளவி - வடசொல்லாகிய கிளவி, உரிச்சொற் கிளவி - உரிச் சொல்லாகிய கிளவி, மீமிசைப் பண்பு.

அறுபது - ஆறாகியபத்து, பதிற்றுப் பத்து - பத்தாகியபத்து - இவை உறழ்ச்சிப் பண்பு. ஏனையவும் இவ்வாறே விரிந்துவரும்.

பண்புத் தொகையை விரிக்குமிடத்து வரும் ஆகிய என்பது ஆக்க வினைச் சொல்லன்று. பண்புத் தொகையை விளக்குதற்கு வரும் ஓர் இடைச் சொல்லாம். நன்னூலார் இதனைப் பண்புருபு என்பர்.

பண்புத் தொகையை விரிக்குமிடத்துப் பண்புச் சொற்களில், பாலுணர்த்தும் விகுதி தோன்ற விரித்தல்

வேண்டும். அஃதாவது, செந்தாமரை என்பதைச் செய்யதாகிய தாமரை எனவும், நெடுமாறன் என்பதை நெடியனாகிய மாறன் எனப்பால் தோன்ற விரித்தல் வேண்டும். இவ்வாறன்றிச் செம்மையாகிய தாமரை என்றோ, செம்மையுடைய தாமரை என்றோ, நெடுமையாகிய மாறன் என்றோ, விரித்தல் வழுவாகுமென உணர்க.

## உம்மைத் தொகை மொழி

உம்மைத் தொகை என்பது இரண்டும், இரண்டற்கு மேற்பட்டும் பெயர்கள் எண்ணுதற் பொருள்பட இணைந்து, ஒவ்வொன்றும் தனிப் பொருள் உணர்த்தித் தொகை பெற்றும், பெறாதும் தொடராகவரும் தொகை மொழியாகும்.

உம்மைத் தொகையின்கண் பெயர்கள், சில வகைப்பட்டு நிற்கும் அவையாவன. இயற்பெயர், பொருட் பெயர், அளவுப் பெயர், எண்ணியற் பெயர், எண்ணுப் பெயர் முதலியனவாம். இவைபற்றிய விளக்கம் வருமாறு:

**இயற்பெயர் :**

காரணம் பற்றியும், காரணம் பற்றாமலும் ஒருபொருளைக் குறிப்பிட்டு உணரும் பயத்தவாய், இருதிணைப் பொருட்கும் இடம்பெறும் குறியீட்டுப் பெயர். இவற்றைப் பொருட் பெயர்களுள் அடக்கியும் கூறுவர்.

**பொருட் பெயர் :**

தொன்று தொட்டு மரபாகப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலைக் குறித்து வழங்கும் பெயர்கள்.

**அளவுப் பெயர் :**

நீட்டல், நிறுத்தல், முகத்தல் பற்றி வரும் பெயர்கள்.

**எண்ணியற் பெயர் :**

மக்கள், தேவர், முனிவர் முதலானோரை எண்ணிக்கையாற் கூறப்படும் பெயர்கள்.

**எண்ணுப் பெயர் :**

ஒன்று, இரண்டு, மூன்று, பத்து, நூறு, ஆயிரம் எனப் பொருள்களின் மேல் வரும் பெயர்கள். எண்ணுதல் அளவையுள் அடங்கு மெனினும், எடுத்தல், முகத்தல் முதலிய அளவைப்

பெயர்கள் இயற்பெயராகவும், ஆகுபெயராகவும் வரும். எண்ணுப் பெயர்கள் ஆகுபெயராகவே வரும். அதனான் ஈண்டு வேறாக வகைப்படுத்தப்பட்டது.

ஏ,ஓ,என,என்று, ஒடு முதலிய இடைச் சொற்களும், எண்ணுப் பொருளில் வருமாயினும், அவற்றை விளக்குமிடத்தும் 'உம்' என்னும் இடைச் சொல்லாலேயே விளக்கப் பெறுதலின், எண்ணுதற்கண் உம்மை இடைச் சொல் தலைமை பெற்றது. அம்முறையில் எண்ணுதற்கண் வரும் தொகை உம்மைத் தொகை எனப்பட்டது.

மற்றும், உம் என்னும் இடைச் சொல் எச்சம், எதிர் மறை, சிறப்பு, தெரிநிலை, முற்று, ஆக்கம் முதலிய பொருளிலும் வரும். எனினும், அவை தொடர் மொழிக் கண்ணன்றி இரண்டும் பலவுமாகிய பெயர்கள் இணைந்து வரும் தொகை மொழிக்கண் வாராமையான், "உம்மை" என்றது ஈண்டு, எண்ணுப் பொருளில் வரும் உம்மையையே வரைந்து சுட்டுவதாயிற்று.

வேற்றுமைத் தொகை முதலிய ஏனைய தொகை மொழிகள் அடைச் சொல்லும், அவ்வடையைக் கொண்டு முடியும் பெயரும் என இரண்டே சொற்களாக வரும். கொண்டு முடியும் சொல்லே பயனிலையாகவும் நிற்கும். உம்மைத் தொகைக்கண் வரும் பெயர்கள் ஒன்றற்கு ஒன்று அடையாகாமல், ஒவ்வொன்றும் தலைமைத் தன்மை யுடையதாய்த் தொடர்ந்து பிறிதொரு பயனிலையொடு முடியும்.

வேற்றுமைத் தொகையுள், பல சொற்கள் அடுக்கிவரின், அவையெல்லாம் இறுதியில் நிற்கும் நோக்குடைய பெயர்க்கு அடைகளாக, ஒரு சொல் நீர்மைப்பட்டு ஒருங்கு நிற்கும். அஃதாவது, கற்சுனைக் குவளை இதழ் என்னும் தொடரில் குவளை இதழ் என்பவையே வேற்றுமைத் தொகைமொழி. கற்சுனை என்பவை தனித்துவரின் வேற்றுமைத் தொகை மொழியாம்.

உம்மைத் தொகைகள், கபிலபரணர் என இரண்டு பெயராகவும், புலிவிற்கயல் என மூன்று பெயர்களாகவும், அறம் பொருள் இன்பம் வீடு என நான்கு பெயர்களாகவும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என ஐந்து பெயராகவும், இதற்கு மேற்பட்டும் தனித்தனிச் சிறப்புப் பெயராய் வரும்.

உம்மைத்தொகை பற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கணம் வருமாறு:

> "இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
> எண்ணியற் பெயரே நிறைப் பெயர்க் கிளவி
> எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்
> கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே" (தொல்.சொல்.411)

என்பதாகும். இவற்றிற்கு எடுத்துக்காட்டு வருமாறு:

| | | |
|---|---|---|
| உவாஅப் பதினான்கு,<br>கணவன் மனைவி | | இருபெயர் உம்மைத் தொகை |
| இயல் இசை நாடகம்,<br>சேர,சோழ,பாண்டியர்,<br>அறம்,பொருள்,இன்பம்<br>வீடு,மெய்,வாய்,கண்<br>மூக்கு செவி | | பல்பெயர் உம்மைத் தொகை. |
| ஒருசாண், நால்விரல் | - | இது நீட்டல் அளவை உம்மைத் தொகை. |
| கலனே தூணிப்பதக்கு,<br>உழக்கேயாழக்கு | - | இவை முகத்தலளவை உம்மைத் தொகை |
| தொடியே கஃசரை | - | இது நிறுத்தலளவை உம்மைத் தொகை. |
| இராமலக்குமணர் | - | இஃது உயர்திணை இயற்பெயர் உம்மைத்தொகை. |
| மரஞ்செடி கொடிகள் | - | இஃது அஃறிணை இயற்பெயர் உம்மைத்தொகை. |
| பன்னிருவர்,<br>முப்பத்துமூவர் | - | இவை எண்ணியற்பெயர் உம்மைத் தொகை. |
| பதினைந்து,இருபத்தாறு,<br>நூற்றுப்பதினாறு | - | இவை எண்ணுப்பெயர் உம்மைத் தொகை. |

இவை விரியுங்கால், உவாவும் பதினான்குமாகிய மதிநாள், கணவனும், மனைவியுமாகிய காதலர் இருவர்,

இயலும், இசையும், நாடகமுமாகிய தமிழ்மூன்று, சேரனும், சோழனும், பாண்டியனுமாகிய வேந்தர் மூவர், அறமும், பொருளும், இன்பமும், வீடுமாகிய ஆண்மைப் பேறு நான்கு, மெய்யும், கண்ணும், வாயும், மூக்கும், செவியுமாகிய பொறிகள் ஐந்து, ஒருசாணும், நான்குவிரலுமாகிய நீளத்தடி, கலனும், தூணியும் பதக்குமாகிய நெற்குவை, உழக்கும், ஆழாக்கும் கொண்டபால், தொடியும், கஃசரையுமாகிய எடை கொண்ட பொன், இராமனும் இலக்குவனுமாகிய இருவர், மரமும், செடியும், கொடியுமாகிய தாவரங்கள். பதின்மரும், இருவருமாகிய குழுவினர், முப்பதும் மூவருமாகிய தேவர்கள். பத்தும், ஐந்துமாகிய பொருட்டொகுதி, இருபதும், அறுபதுமாகிய பொருட்டொகுதி, நூறும், பத்தும், ஆறும் ஆகிய பொருட்டொகுதி, எனவிரியும். (கஃசரை என்பது ஒருசொல். அரைக்கஃசு என்பது பொருள்)

இங்ஙனம், பயனிலை தோன்ற விரிக்காமல் உவாவும் பதினான்கும், இயலும், இசையும், நாடகமும் என உம்மை மட்டும் விரித்தல், குன்றக் கூறல் என்னும் குற்றமாகும்.

உம்மைத் தொகைகள் பிற சொற்களைப் பயனிலையாகக் கொண்டு முடியுமெனின், அன்மொழித் தொகைக்கும், உம்மைத் தொகைக்கும் வேறுபாடு யாதெனின்? அன்மொழித் தொகைக்கண் தொக்க இருபெயர்க்கண்ணும் பொருளமையாமல், அல்லாததாக வரும் ஒரு பெயரின் கண் பொருள் அமையும். (விளக்கம் அன்மொழித் தொகை என்னும் தலைப்பிற் காண்க) உம்மைத் தொகைக் கண் பெயர்தொறும் பொருள் நிரம்பி நிற்கும் என்க.

## அன்மொழித் தொகை

அன்மொழித் தொகை என்பது மேற்கூறப்பெற்ற, வேற்றுமைத் தொகை முதலாய ஐந்து தொகை மொழிகளைப் பற்று கோடாகக் கொண்டு, தொடர் மொழி ஆற்றலால் பிறிதொரு சொற்கண் பொருள் நிற்பதாகும். தொக்கு நிற்கும் சொற்பொருளல்லாத தொருமொழிக்கண் பொருள் நிற்பது (அல்-மொழி) இதன் இலக்கணமாகும். பெரும்பான்மையும் வேற்றுமைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை பற்றியும் சிறுபான்மை அடையடுத்த ஆகுபெயராகாத உவமத்தொகை, வினைத் தொகை பற்றியும் வரும். தொடர் மொழியின் பயனிலைகளால் தம் பொருள் உணர்த்தும்.

எ.டு: பொற்றொடி (வந்தாள்) மணிமேகலை (பாடினாள்) வெள்ளாடை (பேசினாள்) செங்கோல் (விளங்கிற்று) தகரஞாழல் (பூசப்பட்டது) புலி விற்கயல் (பறந்தது) தொடலைக் குறுந்தொடி (வந்தாள்) பான்மொழி (வந்தாள்) பெய்வளை(பாடினாள்) பணிமொழி(ஆடினாள்) எனவரும். இவை பயனிலையொடு முடியாமல் தனித்து நிற்பின் அன்மொழித் தொகையாகா. அவ்வத் தொகை மொழிகளாகும்.

பொற்றொடி - மணிமேகலை - என்பவை வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளாம். இவை, அவற்றை அணிதற்குரிவராகிய மகளிரை உணர்த்தி நின்றன.

வெள்ளாடை - செங்கோல் -என்பவை பண்புத் தொகைப் புறத்து பிறந்த அன்மொழித் தொகை. இவற்றுள் வெள்ளாடை என்பது, அதனை உடுத்தற்குரியளாகிய பெண்டினை உணர்த்திநின்றது. செங்கோல் என்பது அதனான் விளைந்த நீதியை உணர்த்தி நின்றது.

தகரஞாழல் - என்பது தகரமும், ஞாழலும் கூடியமைந்த சாந்தினை உணர்த்தி நின்றது.

புலிவிற்கயல் - என்பது அவற்றை எழுதிய கொடியை உணர்த்தி நின்றது. இவை உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தொடலைக் குறுந்தொடி - பான்மொழி - என்பவை உவமத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. தொடலை போலும், குறிய தொடியை அணிதற்குரிய மகளையும், பால் போலும் இனிய மொழியைப் பேசும் பெண்டினையும் உணர்த்தி நின்றன.

பெய்வளை - பணிமொழி - என்பவை வினைத் தொகைப் புறத்துப்பிறந்தஅன் மொழித் தொகை. இவை பெய்த வளையலை அணிதற்குரிய பெண்டினையும், பணிந்த மொழியைப் பேசுதற்குரிய பெண்டினையும் உணர்த்தி நின்றன.

பொற்றொடி முதலியவை அவ்வத் தொகையாதற்கும், அன்மொழித் தொகையாதற்கும் உரிய வேறுபாடு யாதெனின், பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகையாயின்,

பொன்னாலாகிய தொடி இது என வேற்றுமைத் தொகைப் பொருள் விரிந்து, பிறிதொரு பயனிலை யொடு முடியும். அன் மொழித் தாகையாயின், வேற்றுமைப் பொருள் விரியாமல், ஒரு சொல்லாய் தொடியை அணிதற்குரிய பெண் மகளை உணர்த்தி நிற்கும். அத் தொடரில் உணர்த்தப்படும் பெண்மகள் பயனிலை கொண்டு முடியும். பொற்றொடி வந்தாள், பொற்றொடி பாடினாள் எனவரும். வேற்றுமைத் தொகை முதலியவற்றின் பொருள் விளக்கம் இடைநின்றியலும். அன்மொழித் தொகையின் பொருள் விளக்கம் ஈற்றினின்றியலும்.

**அன்மொழித் தொகைபற்றித் தொல்காப்பியம் கூறும் இலக்கணம் வருமாறு :**

> "பண்புதொக வருஉம் கிளவி யானும்
> உம்மை தொக்க பெயர் வயினானும்
> வேற்றுமை தொக்க பெயர் வயினானும்
> ஈற்றினின் றியலும் அன்மொழித் தொகையே" (தொல்.சொல்.418)

உவமத் தொகைப் புறத்தும், வினைத் தொகைப் புறத்தும் அன்மொழித்தொகை அரிதாக வருமாதலின், அவற்றைத் தலைதடுமாற்றம் தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியாற் கொள்ளவைத்தார். நன்னூலார் கூறுமாறு "ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி" என்பதாகும். உவமத் தொகையும், வினைத் தொகையும் ஆகுபெயராயும், அன்மொழித் தொகையாயும் வருமாதலின், அவற்றைத் தொடர் மொழிப் பொருள் நிலையால் உணர்ந்து கொள்ளல் வேண்டும். தொகையுற்று நிற்கும் இரு சொற்களுள், பின்னிற்கும் சொல் ஆகுபெயராயின், முன்னிற்கும் சொல், அதற்கு அடைமொழியாக நிற்கும். அன்மொழித் தொகையாயின் இரண்டு சொற்களிலும், பொருள் நில்லாது, பிறிது ஒரு சொற்கண் பொருள் நிற்கும். சில எடுத்துக் காட்டு வருமாறு:

**உவமத் தொகை மொழிகள்:**

| | | |
|---|---|---|
| மதிமுகம் | - | மதிபோன்ற முகத்தினையுடைய பெண்மகள். முகம் - ஆகுபெயர். |
| துடியிடை | - | துடிபோன்ற இடையினையுடைய பெண்மகள். துடி - ஆகுபெயர். |
| கயற்கண் | - | கயல் போலும் கண்ணினையுடைய பெண்மகள். கண் - ஆகுபெயர். |

இவை சினையிற் கூறும், முதலறி கிளவியாய அடையடுத்த ஆகுபெயராயின.

கிளிமொழி - கிளிமொழி போலப் பேசும் நங்கை - அன்மொழித்தொகை

முகிலாடை - முகில்போன்ற ஆடையுடுத்தும் நங்கை - அன்மொழித்தொகை

பிடிநடை - பிடி யானை போன்ற நடையுடைய நங்கை அன்மொழித்தொகை.

**வினைத் தொகை மொழிகள்**

தாழ்குழல் - தாழ்ந்து நீண்ட கூந்தலையுடைய நங்கை. கூந்தல் - ஆகுபெயர்.

நொசி மருங்குல் - நொசியும் இடையையுடைய நங்கை. மருங்குல் - ஆகுபெயர்.

வளர்முலை - வளர்ந்த - வளரும் நகிலினையுடைய நங்கை. முலை- ஆகுபெயர்.

இவை சினையிற் கூறும் முதலறி கிளவியாய அடையடுத்த ஆகுபெயராயின.

பெய்வளை - பெய்யும் வளையலை அணியும் மடந்தை - அன்மொழித்தொகை

கழல் தொடி - கழலும் தொடியினைஅணியும் மடந்தை அன்மொழித்தொகை

குளிர் சிலம்பு - ஒலிக்கும் சிலம்பினை அணியும் மடந்தை - அன்மொழித்தொகை

உவமத்தொகையும், வினைத்தொகையும் ஆகுபெயராயின் தற்கிழமைப் பொருளாயும், அன்மொழித் தொகையாயின் பிறிதின் கிழமைப் பொருளாயும் அமைந்திருக்கும்.

இவ்விரு தொகை மொழிகளும், ஆகுபெயராக நிற்குமிடத்து, இருபெயரொட்டு ஆகுபெயர் என்றும்,

அடையடுத்த ஆகுபெயர் என்றும் கூறுதல் மரபாகும். ஆகுபெயர் தனி ஒரு சொல்லாக வரும். அன்மொழித் தொகை இரண்டு பெயர்களாகவே வரும்.

**ஆகுபெயர் - அன்மொழித்தொகை வேறுபாடுகள்:**

(1) ஆகுபெயர் ஒரு சொல்லாக வரும். இருபெயரொட்டாகு பெயரும். அடையடுத்த ஆகுபெயரும் இரு சொற்களான் வரும் மெனினும் அவற்றுள், ஒரு சொல் ஆகுபெயர்ப் பொருளையும், பிறிதொன்று ஆகுபெயர்ச் சொல்லைச் சிறப்பித்து (விசேடித்து) அடையாகவும் வரும்.

(2) முதலிற் கூறும் சினையறி கிளவி, சினையிற் கூறும் முதலறிகிளவி முதலிய இயைபுபற்றித் தன்னொடு தொடர்புடைய பொருளைக் குறித்து வரும்.

(3) ஒரு மொழி ஆகுபெயர்கள், இருவகை வழக்கிலும் தொன்று தொட்டு நியதிப் பெயராய்ப் பயின்று வரும். இருபெயரொட்டு ஆகுபெயர் செய்யுள் வழக்காகச் சிறுபான்மையாக வரும்.

**அன்மொழித் தொகை:**

(1) அன்மொழித் தொகை இரண்டு சொற்களாக, சிறுபான்மை இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக, (இவை உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவே இருக்கும்) ஒரு மொழிபோல் தொக்கதொகை மொழியாக வரும். அன்மொழிப் பொருள், அச்சொற்கள் ஏதுவாகப் புறத்தே வரும், அயலதொரு சொற்கண் பொருள் அமைந்து வரும்.

(2) தற்கிழமைத் திரிபாயும், பிறிதின் கிழமை யாயும் இலக்கிய வழக்காக ஆக்கம் பெற்றுவரும்.

(3) அன்மொழிப் பொருளைப் பெறுதற்குரிய தொகைமொழிகள், தம்பொருள் உணர்த்தாமல், அவற்றின் ஆற்றலால் தோன்றும், பிறிதொரு பொருளை உணர்த்தி வரும், தொகை மொழிப் பொருளின் தொடர்பு கருத்து வகையான் அமைந்திருக்கும்.

**விளக்கம் :**

கடுத்தின்றான்: கடு ஒருவகைமரம். அது மரத்தை உணர்த்தாமல், சினைத் தொடர்பு காரணமாக, அதன்காயை உணர்த்துமிடத்து ஆகுபெயராம். இது முதலும், சினையுமாகிய கிழமைத் தொடர்பால் அமைந்திருக்கும்

**அறுகால் பறந்தது :**

இது வண்டினை உணர்த்தும் ஆகுபெயர். இதன்கண் கால் ஆகுபெயர். கால்களையுடைய வண்டினைச் சினைத்தொடர்பான் உணர்த்தியது. ஆறு என்பது காலுக்கு அடைமொழியாகச் சிறப்பித்து நின்றது. ஆறாகிய கால்களையுடைய வண்டு என்பது இதன் பொருள்.

**மக்கட்சுட்டு :**

இதன்கண் சுட்டு என்பது ஆகுபெயர். அதுமக்கட் பண்பினை உணர்த்தி நின்றது. இதனது பண்பு என உணருமாறு மக்கள் என்பது அடையாய் நின்றது. மக்களுடைய உடம்பைக் கருதாமல், பண்பைக் கருதுமாறு செய்தலின் சுட்டு என்பது ஆகுபெயராயிற்று. மக்களும், மக்கட் பண்பும் வேறு அன்மையான், இருபெயரொட்டு ஆகுபெயராயிற்று. இவ்வாறு வருவனவற்றை அன்மொழித்தொகை என மயங்குவாரும் உளர். நோக்குடைய பொருள் அன்மொழியாக வாராமல், தொகைச் சொற்களே பொருளுணர்த்தலின் ஆகுபெயரேயாம்.

**வடநூலார் கூறும் சமாசன்கள்**

தமிழ்நூலார் தொகை மொழி எனக் கூறுவதும், வடநூலார் சமாசன் எனச் கூறுவதும் ஒத்த நோக்குடையவையாகும். மேலும் இருமொழியிலும், அவற்றின் வகை ஆறு ஆறாகவே அமைந்துள்ளன. எண்ணிக்கை வகையால் ஒன்றுபட்டிருத்தலை நோக்கிச் சிலர், தொகைமொழி இலக்கணத்தையும், சமாசன் இலக்கணத்தையும் ஒன்றாகவே கருதி மயங்குவர். இவை சிறுபான்மை ஒற்றுமையும், பெரும் பான்மை வேறுபாடும் உடையவை.

வடமொழியாளர், சொற்கள் தகுதி அவாய்நிலை அண்மை நிலை என்னும் முறையில், இரண்டு முதலாகச் சொற்கள் இணைந்து நிற்றலைச் சமாசன் என்று கூறுவர். ஒரோவழித் தனிச் சொல்லாக நின்று, தொடர் மொழிப் பொருளுணர்த்துவனவற்றையும் சமாசனாகக் கொள்வர்.

வேற்றுமை உருபுகள் முதலாயவை கெட்டு (நின்று மறைந்து), இரண்டு முதலாகச் சொற்கள் இணைந்து வருதலையும், உருபுகள் புணர்ந்து கெடாமல் இயல்பாக இரண்டு முதலாகச் சொற்கள், வேற்றுமை முதலிய பொருள்பட இணைந்து நிற்றலையும் பாணினி முனிவர் சமாசனாகக் கொள்வார்.

உருபு முதலியவை நின்று கெட்டன என்பது ஒவ்வாது, அவ்வவ் உருபுகளின் பொருள் தோன்ற, இரண்டு முதலாகச் சொற்கள் இணைந்து நிற்றலே சமாசன் என்பார் காத்தியாயனர். தமிழில் நன்னூலார் பாணினியார் கொள்கையுடையவர். உரையாசிரியர் சிலர் அக்கொள்கையினராவார். சேனாவரையர் முதலாய சிலர் காத்தியாயனர் கொள்கையை ஒட்டி விளக்கங் கூறுவர்.

## ஆறுவகை சமாசன்

1) தற்புருட சமாசன். (2) துவிகு சமாசன். (3) வெகுவிரீகி சமாசன் (4) கர்மதாரய சமாசன் (5) அவ்யயீபாவ சமாசன். (6) துவந்துவ சமாசன் என்பவை அவற்றின் நாமங்களாம்.

இவற்றுள் தற்புருட சமாசன் தமிழில் வேற்றுமைத் தொகையையும், வெகுவிரீகி சமாசன் அன்மொழித் தொகையையும், கர்மதாரய சமாசன் பண்புத் தொகையையும், துவந்துவ சமாசன் உம்மைத் தொகையையும் ஒத்து நிற்கும். துவிகு சமாசனும், அவ்யயீ சமாசனும் வடமொழிக்கே உரியவை. தமிழில் உள்ள உவமத் தொகை, வினைத்தொகைகள் தனியாக வடமொழியில் இல்லை. இவற்றைக் கர்மதாரய சமாசனில் அடக்கிக் கூறுவர். இனி இவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

## 1) தற்புருட சமாசன் (வேற்றுமைத் தொகை) :

வடமொழியில் ஒன்றுமுதல் ஏழு வேற்றுமைக்கும் உருபுகள் உண்டு. அம்முறையில் முதலாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறாக உள்ள வேற்றுமைப் பொருளும் உருபும் தொக்கு வருதலையும், எதிர்மறைப் பொருளுணர்த்தும் 'நஞ்ஞு' என்னும் அன்மை இன்மைப் பொருளும், எதிர்மறைப் பொருளும், ஆக எட்டுவகைப் பொருளும் தொக்கு (மறைந்து) வருதலைத் தற்புருட சமாசன் என்பர். இவற்றிற்குத் தமிழ்வழி எடுத்துக் காட்டு வருமாறு:

| | | |
|---|---|---|
| நுனிநா, கடைக்கண், முற்பகல் | - | முதல் வேற்றுமைத் தொகை. |
| களிதின்றான், நிலங்கடந்தான் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை. |
| அடியளந்தான்,நாய்கோட்பட்டார் | - | மூன்றாம் வேற்றுமைத் தொகை. |
| மனைப்பலி, குண்டலப்பொன் | - | நான்காம் வேற்றுமைத் தொகை. |
| சோரபயம், கருவூர் கீழ்த்திசை | - | ஐந்தாம் வேற்றுமைத் தொகை. |
| நாவிளிம்பு, சாத்தந்தை (சாத்தன் தந்தை) | - | ஆறாம் வேற்றுமைத் தொகை. |
| எண்ணெய், கைவிரல் | - | ஏழாம் வேற்றுமைத் தொகை. |

**நஞ்ஞு (அ):**

அகளங்கன் - களங்கமில்லாதவன் - இன்மைப் பொருள்.
அப்பிராமணன்- பிராமணனல்லாதவன் - அன்மைப் பொருள்.
அதர்மம் - தர்மத்திற்கு மாறானது - எதிர்மறைப் பொருள்.

மற்றும் ஒரு சாரார் அந் - ந - நி - கு - வி எனவரும் முன்னொட்டுக்களையும் நஞ்ஞுவில் அடக்கிக் கூறுவர்.
எ.டு:

| | | |
|---|---|---|
| அநங்கன் | = | (உடம்பில்லாதவன்) |
| நாத்தி (ந+அஸ்தி | = | நாஸ்தி உள்ளதில்லை (உண்டு என்பதற்கு எதிர்மறை) |
| அந்நியம் | = | வேறானது, வேறுபட்டது, அயல் |
| நிமலன் | = | மலமற்றவன் (மலம் = குற்றம், மாசு) |
| குதர்க்கம் | = | பிழையான வாதம். |
| விதிக்கு | = | (வி+திக்கு) திசையின்மை |

எனவரும்.

**2) துவிகு சமாசன் (எண் தொகை)**

இஃது இருவகைப்படும். 1) ஏகவற்பாவி = (ஒரு பொருளாக இருப்பது) எ.டு: முச்சுடர் - இருகலம், பஞ்சவடி. இவை தத்திதப் பொருள் இல்லாதவை. பன்னிருபடலம், பஞ்சகபாலம் இவை தத்திதப் பொருளுடையவை. (2) அநேகவற்பாவி = (பொருள் பலவாக இருப்பது)

எ.டு: மூவேந்தர், முப்பத்து மூவர் - இவை தத்திதப் பொருள் இல்லாதவை. பஞ்சபாண்டவர் - இது தத்திதப் பொருளுடையது.

**3) கர்மதாரய சமாசன் (பண்புத் தொகை)**

இதனை, முன்மொழிப் பண்பு முதலாக ஏழுவகையாகப் பிரித்துக் கூறுவர். எ.டு:

1) முன்மொழிப் பண்பு - கருங்குவளை, செங்காந்தள்.

2) இருமொழி பண்பு - பெருவெள்ளை, இன்பதுன்பம்.

3) முன்மொழி விசேடியம் - தெய்வப்புலவன், ஆசாரியதண்டி.

4) முன்மொழி ஒப்பு - சங்குவெள்ளை, மதிமுகம் (தமிழில் உவமத்தொகை)

5) பின்மொழி ஒப்பு - அடிமலர், பெண்ணணங்கு.

6) முன்மொழி எண்ணம் - அருசெல்வம், கல்விப் பொருள்.

7) முன்மொழித் தேற்றம் - அருளே செல்வம், கல்வியே பொருள், அருள் கல்வி முதலியவற்றைச் செல்வமாகவும், பொருளாகவும் எண்ணுமளவில் நில்லாமல், அருளே செல்வம், கல்வியே பொருள் எனத் தெளிதல் தேற்றமாம்.

**4) அவ்வியயீ பாவ சமாசன் (இடைச் சொல் தொகை) :**

இதனை நாமபூர்வபதம், அவ்வியயீ பூர்வபதம் என இருதிறனாக வகுத்துரைப்பர்.

1) நாமபூர்வபதம் : (பெயர் முன்மொழிச் சொல்) வாள்மன், அரசோ தஞ்சம் எனவரும்.

2) அவ்வியயீ பூர்வபதம் : (இடைச்சொல் முன்மொழிச் சொல்) கொன்னூர், மற்றை ஆடை எனவரும். தமிழில் இவை தொகை மொழியாகக் கொள்ளப்படவில்லை. ஆதலின், இடைச் சொல்தொகை வடமொழிக்கே உரியதாக அமைந்துள்ளது.

**5) துவந்துவ சமாசன் (உம்மைத் தொகை) :**

உம்மை இடைச் சொல்லை வடநூலார் சமாகாரம் என்பர். உம்மைத் தொகையை சமாகாரம், இதரேதரயோகம் என இருதிறனாக் கூறுவர். இவற்றுள் சமாகாரம் என்பது ஒருமையீறாக முடியும் அஃறிணை உம்மைத் தொகையாம். இதரேதர யோகம் என்பது பன்மையீறாக முடியும். உயர்திணை உம்மைத் தொகையாம்.

உம்மை சமுச்சயம் (எச்சவும்மை) என்றும், அன்வாசயம் (எதிர்மறை உம்மை) எனவும் இருவகைப்படும். எ.டு:

| | | |
|---|---|---|
| சமாகாரம் | - | அறம் பொருள், புலிவிற் கயல் என்றாற்போல வரும். |
| இதரேதரம் | - | இராமலட்சுமணர், சேரசோழ பாண்டியர் என்றாற்போல வரும். |
| சமுச்சயம் | - | நம்பியும் வந்தான் (நங்கையும் வந்தாள் என்பது எச்சப் பொருள்) |
| அன்வாசயம் | - | நம்பி உழுதும் வருவான் (உழாமலும் வருவான். எதிர்மறைப் பொருள்) |

இவையே யன்றி ஏகசேடபதத்து வந்துவன் என்பதும் ஒன்றுண்டு. அஃதாவது ஒரு சொல் மட்டும் எஞ்சி நிற்கும் பதம்.

எ.டு: "அண்கணாளனை நகுதும்யாமே" என்னுமிடத்து யாம் என்பது நீயும் நானும் என்னும் பொருளுடையதாகும். சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தியாம் அவணின்றும் வருதும் - என்னுமிடத்து யாம், நீயும் அவனும் யானும் என்னும் பொருளுடையதாகும். இங்ஙனம் ஒருசொல்லையும் தொகையாகக் கொண்டு விரித்துப் பொருள் கொள்வர்.

**6) வெகுவிரீகி சமாசன்**
**(அன்மொழித்தொகையை ஒத்தது)**

வெகுவிரீகி என்பதற்குப் பலநெல் என்பது பொருள். இதனை ஏழுவகையாக விரித்துக் கூறுவர். வகையும் எடுத்துக்காட்டும் வருமாறு.

1. துவிபத வெகுவிரீகி
   **எ.டு:** உண்ணாமுலை, பாயினமேகலை (வந்தாள்)

2. வெகுபத வெகுவிரீகி
   **எ.டு:** மட்டுவார் குழல் - திருமயிலாடுதுறை

3. சங்கியோத்ரயத வெகுவிரீகி
   **எ.டு:** கார் நாற்பது, புற நானூறு.

4. சங்கியோ உபயபத வெகுவிரீகி
   **எ.டு:** பத்தெட்டுடைமை, அஞ்சாறு.

5. திகந்தாரளலட்சண் வெகுவிரீகி
   **எ.டு:** வடகிழக்கு, தென்மேற்கு.

6. சகபூர்வபதலட்சண் வெகுவிரீகி
   **எ.டு:** சகநிதி, சகமூலம், சகரம் என்பதற்குக் கூடியது என்பது பொருள்.

7. வியதிகாரலடசண் வெகுவிரீகி
   **எ.டு:** தேசாதேசி, தண்டாதண்டி.

இவற்றுள் உண்ணாமுலை, கார் நாற்பது, புறநானூறு என்பவை, தமிழில் அடையடுத்த ஆகுபெயர்களாகும். மற்றவை ஓராற்றான் அன்மொழித் தொகையாம்.

இதுவரை சமாசன்பற்றிக் கூறியுள்ள விளக்கங்களால், தமிழ் நூலார் கூறும் தொகை மொழி என்னும் நோக்கிற்கும், வடநூலார் கூறும் சமாசன் என்னும் நோக்கிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உணரலாம். இதனை இலக்கணக் கொத்துரை நூலாசிரியர் பின்வருமாறு உணர்த்துவார்.

> **"சிலபெய ரெச்சம் சிலவினைத் தொகையும்**
> **இருவகை உவமையும் வண்ணச் சினைச் சொலும்**
> **பண்புத் தொகையெனப் பகரும் வடநூல்" (இலக்.99)**

"பகரும் வடநூல்" எனவே தமிழ்க்கு அடாதென்க, ஆயின் "ஈரிலக்கணமும் ஒன்று எனப் பாயிரத்திற் கூறியது என் எனின்? பெரும்பான்மை நோக்கி என்க" என்பது அவர் உரை விளக்கமாகும.

## தொகைமொழிகளின் கண் பொருள் நிற்கும் முறைமை

**வேற்றுமைத் தொகை :**

வேங்கைப்பூ - பொற்றொடி எனவரும். வேற்றுமைத் தொகைகளில், வேற்றுமை கொள்வன பூவும் தொடியுமாகலின், தொகைகள் இரண்டாவது சொல்லின்கண் தொகைப் பொருள் நிற்கும்.

**உவமத் தொகை :**

மதிமுகம், தேமொழி எனவரும். உவமத் தொகைகளில் உவமிக்கப்படுவன முகமும், மொழியுமாதலின் இரண்டாவது சொல்லின்கண் தொகைப் பொருள் நிற்கும்.

**வினைத் தொகை :**

கொல் யானை, தாழ்குழல் எனவரும். வினைத் தொகைகளில் காலத்தை விரிப்பவை கொல், தாழ் என்பவை. ஆதலின், வினைத்தொகையுள் முதலாவது சொல்லின்கண் தொகைப் பொருள் நிற்கும்.

**பண்புத் தொகை :**

கருங்குதிரை, வெண்டிங்கள் எனவரும். பண்புத் தொகை மொழிகளில் பண்பை விரித்தற்குரியவை குதிரையும், திங்களும் ஆதலின், வண்ணம் பற்றிய பண்புத் தொகைக்கண் இரண்டாவது சொல்லில் பொருள் நிற்கும். இருபெயரொட்டுப் பண்புத் தொகைகளில் இருசொற்களிலும் பொருள் நிற்கும்.

**உம்மைத் தொகை :**

தகரஞாழல், புலிவிற் கெண்டை எனவரும் உம்மைத் தொகைகளில் எண்ணுப் பொருள் ஒவ்வொன்றையும் பற்றி விரிதலின் ஒவ்வொரு சொல்லிலும் பொருள் சிறந்து நிற்கும்.

**அன்மொழித் தொகை :**

பொற்றொடி (வந்தாள்) மணிமேகலை (ஆடினாள்) எனப்

பிறிதொரு பொருளைச் சுட்டுதலின் அன்மொழியாக வரும். இரு சொற்களிலும் பொருள் சிறந்து நிற்கும்.

**உம்மைத் தொகைபற்றியதொரு குறிப்பு :**

உம்மை இடைச் சொல்லைத் தொகுத்துப் பெயர்களை எண்ணுமிடத்து, அஃறிணைப் பெயர்கள் பால்காட்டா வாகலின், அவை செஞ்சொற்களாகவே அடுக்கி, இராப்பகல், புலி விற்கயல், அறம், பொருள், இன்பம், வீடு எனவரும். உயர்திணைப் பெயர்கள் பால்காட்டும் ஈறுகளை யுடையன வாதலின், எண்ணுமிடத்துப் பாலீறு கெட்டு, இறுதிப்பெயர்கள் பலர்பாலீறு கொடுத்து முடிக்கப் பெறும். அஃதாவது கபிலபரணர், இராமலக்குவர், சேரசோழ பாண்டியர் எனவரும். இதனைத் தொல்காப்பியம்,

> *"உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே*
> *பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்" (தொல்.சொல்.415)*

எனவிதிக்கின்றது. உயர்திணை உம்மைத் தொகையை விரிக்குங்கால் கபிலன் பரணன் அல்லது கபிலர் பரணர் என்றும், இராமன் இலக்குமணன் என்றும், சேரன் சோழன் பாண்டியன் என்றும் ஒருமையீறாக விரியும்.

**பத்துவகை எச்சங்கள்**

எச்சம் என்பது ஒரு பொருளினின்று பிரிந்து கிடக்கும் அப்பொருளின் ஒருகூறும், குறையுற்று நிற்கும் பொருள் எதனால் நிறைவுறுமோ அப்பொருளும், ஒரு பொருளின் பல கூறுகளுள் அழியாமல் நிற்குமொரு கூறும் எச்சம் எனப்படும். (எச்சம் = எஞ்சி நிற்றல், குறைவுற்று நிற்றல், ஒருபொருளின் ஒரு கூறுமாட்டும் நிற்றல் என்பவை பொருளாகும்)

## சொல்லிலக்கணத்தில் எச்சம்

சொல்லிலக்கணத்தின் கண் எச்சம் என்பது தனிஒரு சொல்லோ, சொற்றொடரோ அவ்வளவில் முற்றுப் பெறாமல், பிறிதொரு சொல்லையோ, சொற்றொடரையோ, கருத்தையோ அவாவி நிற்குமிடத்து, அங்ஙனம் அவாவப்பெறும் சொல்லும், சொற்றொடரும், கருத்தும் எச்சம் எனப்படும்.

சொல்லிலக்கணத்துள் எச்சம் பத்துவகைப்படும். அவையாவன: வினையெச்சம், பெயரெச்சம், எனஎன்னும் எச்சம், சொல் எச்சம் முற்றுநிலை எச்சம், எதிர்மறை எச்சம்,

ஒழியிசை எச்சம், உம்மை எச்சம், குறிப்பெச்சம், இசை எச்சம் என்பனவாகும். இவைபற்றிய இயல்புகளை இனிமுறையே காண்போம்.

**1) வினையெச்சம் :**

பால்இட விகுதி குன்றிக் குறையாக நிற்கும் வினைச் சொல்லை முடித்தற்கு வரும் தெரிநிலை வினை முற்றும், தெரிநிலை வினையாலணையும் பெயரும், ஆக்கம் பெற்றும் பெறாமலும் வரும் குறிப்பு வினை முற்றுக்களும், தொழிற் பெயரும் குறைவினையை முடிக்கும் எச்சங்களாக வரும்.

**எ.டு:** உழுது வந்தான், உழுது வந்தவன், உழுது வருதல், கற்று வல்லனாயினான், கற்று வல்லன் எனவரும், பிற விளக்கங்களை வினையியலுள் கண்டு கொள்க.

**2) பெயரெச்சம் :**

பாலிடங் காட்டும் விகுதி குன்றிக் குறையாக நிற்கும் வினையாலணையும், பெயரை முடிக்கவரும் அறுவகைப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும் பெயரெச்சங்களாகும்.

**எ.டு:** கற்ற மாணவன், கற்கின்ற மாணவன், கற்கும் மாணவன் எனவும், பிறந்தநாடு, சிறந்த வேனில், பார்த்த கண்கள், அடைந்த பசலை, நடந்த நடை எனவும், உண்ட அவன் எனவும் வரும். பிறகாலங்களோடும், சுட்டுக்களோடும் ஒட்டிக் கண்டு கொள்க. பிற விளக்கங்களை வினையியலுள்ள கண்டு கொள்க.

**3) 'என' என்னும் எச்சம் :**

'என' என்பது செயவென் எச்சப்போலியாக வருவதோர் இடைச்சொல். இது 'என்று' என வடிவுவேறுபட்டும் வரும். இவ் இடைச்சொல் சொல்லெச்சமாகவும், எண்ணிடைச் சொல்லாகவும் வரும். வினையொடு முடியுமிடத்து எச்சம் எனப்படும்.

**எ.டு:** வெள்ளென விளர்த்தது, துண்ணெனத் துடித்தது, பொள்ளென ஆங்கே புறம் வேரார், ஒல்லென ஒலித்தது எனவரும். இஃது இடைச் சொல்லாகலின் தனித்து வாராது, பெயர் வினைகளை அடுத்தே வரும். இதன் மற்றொரு வடிவமாகிய 'என்று' என்பதும் இவ்வாறேவரும்.

எ.டு: நன்றென்று கொண்டான், தீதென்று கடிந்தாள் என்றாற் போல வரும்.

மற்று, கொள்ளெனக் கொடுத்தான் எனவருமிடத்துக் 'கொள்' எனச் சொல்லிக் கொடுத்தான் என்பது பொருளாதலின், இவ்வாறு வருமிடத்து இது சொல்லெச்சத்தின் பாற்படும். கண்ணெனக் காத்தான்- கண்ணைப் போலக் காத்தான் என்பது பொருளாதலின், இவ்விடத்து என என்பது 'என்ன' என்னும் உவம உருபின் இடைக் குறையாகும். ஆதலின், தொடர்மொழிகளின் பொருளை நோக்கி இவ்எச்சத்தின் இயல்பினை உணர்தல் வேண்டும்.

**4. சொல் எச்சம் :**

சொல்லெச்சம் என்பது ஒரு சொல் அளவினதாய் எச்சமாக வந்து, முடிக்குஞ்சொல் பிறிதொன்றாக வாராமல் அதனகத்தேயே எச்சமாக நிற்பதாகும். எ.டு:

*"அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப" (தொல்.எழுத்து.407)*

என்ப = என்று சொல்லுப.

*"தொல் வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக*
*நல்குரவு என்னும் நசை" (குறள்.1043)*

என்னும்=என்று சொல்லப்படும்.

*"அறிகிலார் எல்லாரும் என்றே என்காமம்*
*மறுகின் மறுகும் மருண்டு" (குறள்.1139)*

என்று = என்று கருதி எனவரும். இச் சொல்லெச்சம் என்-என்று என்பவற்றையே அடியாகக் கொண்டு வரும். தொல்காப்பியம் இதன் இலக்கணத்தைச்

*"சொல்என் எச்சம் முன்னும் பின்னும்*
*சொல்அள வல்லது எஞ்சுத லின்றே" (தொல்.சொல்.435)*

என்று கூறுகின்றது.

**5. பிரிநிலை எச்சம் :**

பிரிநிலை உணர்த்தும் இடைச்சொற்கள் ஓ,ஏ, என்னும் இரண்டுமாம் - இவை ஒருபெயரைச்சார்ந்து, பிரிநிலைப் பொருளுணர்த்தி எச்சமாக மேல்வரும் சொல்லொடு முடியும்.

எ.டு: "யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே", ஈண்டு, யானோ தேறே[illegible] என்னும் [illegible]காரம் பிறர்தேறின் தேறுக என உணர்த்திற்று. "ய[illegible] கள்வன்" என்னுமிடத்துப் பிறன்

கள்வனல்லன் என உணர்த்திற்று. பிறபொருளினின்றும் தன்னைப் பிரித்து நிறுத்தலான் பிரிநிலை எச்சம் எனப்பட்டது.

**6. எதிர்மறை எச்சம் :**

இடைச் சொற்களுள் ஓ, ஏ, உம் என்னும் மூன்று இடைச் சொற்களும் எதிர்மறைப் பொருளுணர்த்தி வரும்.

**எ.டு:** யானோ கொள்வேன் என்னும் ஓகாரம் கொள்ளேன் என எதிர்மறையாய் எச்சப் பொருள் தந்தது. யானேவைதேன் - யான் வையவில்லை என்று பொருள்தரும். சாத்தன் வருதற்கும் உரியன் என்னுமிடத்து உம்மை வாராமைக்கும் உரியன் எனப்பொருள்தந்தது.

**7. ஒழியிசை எச்சம் :**

இடைச் சொற்களுள், மன், தில், ஓ என்பவை ஒழிந்து நின்ற சொற் பொருளைத் தருவனவாகும். (இசை = சொல்)

**எ.டு:** கூரியதோர் வாள்மன், என்னுமிடத்து, இப்பொழுது கூர்மழுங்கிக் கிடக்கின்றது என்னும் ஒழிந்த சொற் பொருளைத் தரும். இவன் ஏழைமன் - என்னுமிடத்து, இப்பொழுது செல்வனாக உள்ளான் எனப் பொருள்தரும். "சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே" என்பதுமது. வருகதில் அம்ம எம் சேரிசேர - என்னுமிடத்து, வந்தால் ஆவன செய்வோம் (தலைவியைக் காணலாம்) என்னும் பொருளை உணர்த்திற்று. இவன் காணவோ வந்தான் என்னுமிடத்துக் கண்டுபரிசு பெற வந்தான் எனப் பொருள் தருமிடத்து, ஓகாரம் ஒழியிசை எச்சப் பொருள் பயந்தது.

**8. உம்மை எச்சம் :**

உம்மை எச்சம் இரண்டு தொடர்களாக வரும் அவை இருவகைப்படும்.

(1) ஒன்றை ஒன்று தழுவி வரும் தொடர்களில் வினைகள் ஒத்த காலத்தனவாக வரும்.

**எ.டு:** சாத்தன் உணவும் உண்டான், உடையும் பூண்டான். (இனிப்புறப்படுவான்) "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" - "பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன நெடுவெண்திங்களும் ஊர் கொண்டன்றே" - கண்ணன் ஓதவும்

வல்லன் எழுதவும் வல்லன் எனவரும். இவை ஒன்றையொன்று தழுவி வந்த உம்மை எச்சங்களாகும்.

(2) ஒன்றை யொன்று தழுவிவரும் தொடர்களுள், முன்னது உம்மை இன்றியும் பின்னது உம்மை பெற்றும் வரின், முன்னது இறந்தகாலமும் எதிர்காலமும் பெற்று நிற்கும். பின்னது எதிர்காலமாக வரும். இவற்றை இறந்தது தழுவிய எச்ச உம்மை என்பர்.

**எ.டு:** (இப்பொழுது) கனி உண்கின்றான் (இனி) பாலும் உண்பான். கனியுண்டான் பாலும் உண்பான் எனவரும். பாலும் உண்பான் என்னும் தொடரில் உள்ள உம்மையே எச்ச உம்மையேயாகும். அது பாலுண்பதற்கு முன்னிகழ்ந்த கனியுண்டதைத் தழுவி நிற்றலின் இறந்தது தழுவிய எச்சவும்மையாயிற்று.

இறந்தது தழுவிய எச்ச உம்மை முன்னிகழ்ந்த வினையை முடிபாகக் கொள்ளும். முன்னிற்கும் தொடர் உம்மையின்றி வரும். உம்மையொடுவரின் ஒத்தகாலவினைகளாக அமைந்து ஒன்றையொன்று தழுவி நிற்கும்.

இனி, இறந்தது தழுவிய எச்ச உம்மையைக் கருதி, அதற்கு இணையாக எதிரது தழுவிய எச்சஉம்மையும் இருத்தல் வேண்டும் என எண்ணி உரையாசிரியர் சிலர் மயங்குவர். எதிரது தழுவிய எச்ச உம்மைக்கு அவர்கள் காட்டும் சில உதாரணங்கள்.

சாத்தன் கனியும் உண்டான் என்னும் உம்மை இனிப்பாலும் உண்பான் என்றும், சாத்தன் நேற்றும் வந்தான் என்னும் உம்மை இனி இன்றும் வருவான் என்றும் வரும் என்பார். இவை சாத்தன் கனியுண்டான் இனிப்பாலும் உண்பான், சாத்தன் நேற்றுவந்தான் இனி இன்றும் வருவான் என முதல் தொடர்கள் உம்மையின்றியும் இரண்டாம் தொடர்களைத் தழுவும். ஆதலின், அவ்வும்மைகள் எதிரது தழுவின எனல் ஒவ்வாது. இத்தொடர்களும் பாலும் உண்பான், இன்றும் வருவாள் என்னும் உம்மையும் கனியுண்டான் நேற்றுவந்தான் என்பவற்றைத் தழுவும். எனவே, இறந்தது தழுவும் எச்ச உம்மையன்றி, எதிரது தழுவும் எச்சவும்மை என்பது பிழை என்பது விளங்கும்.

**9. குறிப்பெச்சம் :**

தெரிபுவேறு நிலையிலும், குறிப்பிற்றோன்றலுமாக வரும் பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் கூறுவோனது கூற்றினுள் அமைந்திருக்கும். அவனது கருத்தின் இன்றியமையாத குறிப்புப் பொருள் குறிப்பெச்சம் எனப்படும். அஃது, ஒரு சொல்லளவிலும், தொடர்மொழியளவிலும் அமைந்திருக்கும். எ.டு:

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்" (குறள்.56)

என்னுமிடத்துக் கேட்டவர் மழலையே இனிது என்பர் என்பது குறிப்பெச்சம்.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்" (குறள்.415)

என்னுமிடத்து, அவற்றைக் கேட்க என்பது குறிப்பெச்சம்.

"குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தான் போல நகும்" (குறள்.1095)

என்னுமிடத்து இனி, இவளை அடைதல் உறுதி எனக் கருதுதல் குறிப்பெச்சம். பிறவற்றையும் இவ்வாறே கண்டுகொள்க.

**10. இசையெச்சம் :**

இசை=சொல். அது சொற்றொடரையும் குறிக்கும். ஒருவர் ஒருபொருளைப் பற்றிக் கூறுமிடத்து, அக்கருத்துக்களை விளக்க உரைக்கும், எல்லாச் சொற்களையும் கூறாமல், சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றிச் சுருக்கமாகக் கூறுமிடத்துக் கேட்போர் அவர் விளக்கமாகக் கூறாமல்விட்ட சொற்பொருளை நன்கு உணர்ந்து கொள்ளும் முறையில் அமைந்திருப்பவை இசை எச்சமாகும். இது சில சொற்களாலும், பலசொற்களாலும் விரியும். எ.டு:

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை" (குறள்.327)

என்னுமிடத்து, யாவற்றினும் சிறந்ததாகப் போற்றப் பெறும் உயிர் என்பதும், தன்னைப் போலவே அவற்றிற்கும், அவ்வுயிர் இனிமையுடையது என்பதும் இசை எச்சம்.

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்" (குறள்.272)

என்னுமிடத்து, அவர்தோற்றம் தவஒழுக்கத்திற்கு ஒவ்வாத வேடமாகும் என்பது இசையெச்சமாம்.

இனி, ஒருவர் கூற்றின்கண் அவாய் நிலையாக நிற்பனவும், சொற்பொருள் நயமாக விரித்துக் கூறப்படுவனவும், நோக்கு என்னும் செய்யுளுறுப்பாக அமைந்துள்ளவற்றையும், சிலர் எச்சங்களாகக் கருதுவர். அவற்றையெல்லாம் இடம் நோக்கி உணர்தல் வேண்டும்.

# இடைச் சொல் இயல்

நால்வகை இலக்கணச் சொற்களுள், வியத்தகு செயல் உடையதாய், உரியடிச் சொற்களைத் திணை, பால், எண், இடம், காலம் காட்டும் பெயர்ச் சொற்களாகவும், வினைச் சொற்களாகவும் ஆக்கும் கருவியாய், உயிரினங்களுக்கு ஐம்பொறிகளைப் போலவும், கவிஞர்க்குக் கற்பனை போலவும், மொழிக்கு இன்றியமையாத உறுப்பாய்ப் பொருள்களின் கூறுபாடுகளையும், காலவேறுபாடுகளையும், பல்வேறு கோணங்களில் காட்டும் திறனுடையவாக அமைந்து திகழ்வன இடைச் சொற்கள்.

பெயர் வினைகட்குப் பொதுவாக உள்ள உரியடிச் சொற்களினின்றும் தோன்றி, அவற்றினின்று செயலால் வேறுபட்டு, அப்பெயரொடும். வினையொடும் கூடி, அவற்றிற்கு உறுப்பாக நின்று, தம் பொருளுணர்த்தும் இயல்புடையனவாய் வருவன இடைச் சொற்களாகும்.

இடைச்சொற்கள் தனிமொழியினிடத்து இறுதியில் (விகுதியாய்) நின்று, திணை, பாலிடங்களைக் காட்டுவனவாய், இடையிலும், ஈற்றிலும் நின்று காலம் காட்டுவனவாய், புணர்மொழிகளிடையே சாரியையாய்த் தொடர்மொழிகளின் முன்னும், பின்னும், இடையிலும் வருவனவாய்ப் பெயர் வினைகளைச் சார்ந்து, தம்பொருளைத் தருவனவாய், ஒருபொருட் பலசொல்லாய், பலபொருளொரு சொல்லாய், சொற்றொடர்களிடையே குன்றியும், விரிந்தும் நிற்பனவாய், பெயர்ப்போலிகளாய் வருதல், இடைச் சொற்களின் இலக்கணமாகும்.

இடைச் சொல் என்னும் பெயர்க் குறியீடு மூன்று காரணங்களால் அமைந்ததாகும்.

(1) பெயர் வினைகளாக அமையும் சொற்களின் மருஉவாய் இடுங்கி ஆக்கமுறுதல்.

**எ.டு:** ஏய என்னும் வினை ஐ-எனவும், கொண்டு என்னும் சொல் ஒடு எனவும் வேற்றுமை உருபுகளாயின. அகத்து என்னும் இடச் சொல் அத்து எனவும், அதற்கு என்பது அக்கு எனவும் சிதைந்து சாரியையாயின. பிறவும், இவ்வாறே ஆய்ந்துணரின் புலனாகும். இடுங்குதல் = இடைதல் - இடைச்சொல்.

(2) தனி மொழி, புணர்மொழிகளுக்கு இடையே, சாரியை இடைச் சொல்லாகவும், கால இடைநிலைகளாகவும் இடையே வருதல்.

**எ.டு:** அறிஞன் - அறி+ஞ்+அன். இயக்குநன் இயக்கு+ந்+அன். கணக்கன் - கண்+அக்கு+அன். வண்ணத்தான் வண்ணம்+அத்து+ஆன். தச்சிச்சி. தச்சு+இச்+இ. எனப் பெயர்களுக்கு இடையே வந்தன. கண்டான். காண்+ட்+ஆன்- பார்த்தான். பார்+(த்)+த்+ஆன். உண்கிறான். உண்+கிறு+ஆன். செல்வான். செல்+வ்+ஆன்- நடந்தனன். நட+ந்த்+அன்+அன்- வெல்லுவான். வெல்+உ+வ+ஆன் - எனக் கால இடை நிலைகளாகவும், சாரியைகளாகவும் சொற்களின் இடையே வந்தன.

(3) முதனிலைச் சொற்கள் திணை, பால், இடங்காட்டுதற் பொருட்டும், காலங் காட்டுதற் பொருட்டும் இடப்படுதல். இடும்சொல்= இடைச்சொல்.

**எ.டு:** பொன்னன் - பொன்+அன். பொன்னி - பொன்+இ. ஊரன் - ஊர்+அன். ஊரள்- ஊர்+அள். பரணி - பரண்+இ. பரணர் - பரண்+அர். ஆதிரையான். ஆதிரை+ஆன். செவியன் - செவி+அன். கருமை, கரியன், கரியள், கரியர், கரிது கரியன. நடை - நடையன். கூத்து - கூத்தன் எனப்பாலிடங்காட்ட இடப்பெற்றன. உண்கு - உண்+கு. உண்கும் - உண்+கும். செய்யும் - செய்+உம். எனக் காலங்காட்ட இடப்பெற்றன.

இங்ஙனம், இடுங்கிய சொல், இடையே வரும் சொல், இடப்படும் சொல் என்னும் முறையில் அமைந்த, பெயர்க்குறியீடு இடைச்சொல் என அமைந்தது.

மற்று பெயர், வினைகட்டு அடையாக, அவற்றின் முன்வருதலும், பின் வருதலுமாகப் பெயர்ச் சொல் வினைச்

சொற்களின், பொருளைச் சிறப்பித்து வேறுபடுத்த வருவனவும் இடைச் சொல்லாகும்.

**எ.டு:** கொன்னூர், அம்மவாழி தோழி. ஓபெரியன் எனமுன்வந்தன. பண்டு காடுமன், வருகதில் அம்ம. அவனோ பெரியன், யானோ செய்வேன் எனப் பின் வந்தன.

மேலும், சில இடைச் சொற்கள், பெயர்ப்போலியாக அமைந்து பால்சாட்டும் விகுதி பெற்றும், பெறாதும் வரும்.

**எ.டு:** பிற, மற்றை என்பவை. பிறன், பிறள், பிறர், பிறிது, பிற எனவும், மற்றையான், மற்றையது எனவும், மன்னன், மன்னர் எனவும், அரசோ தஞ்சம் எனவும் வரும்.

இடைச் சொற்கள் தனித்தும், பெயர் வினைகளைச் சார்ந்தும் பல்வேறு பொருளுணர்த்தி வரும். அவ்விடைச் சொற்கள் பற்றியும், அவற்றின் பொருள்நிலை பற்றியும், தொல்காப்பியம் கூறும் இலக்கண விளக்கங்களை இனிக் காண்போம்.

"இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே" (தொல்.சொல்.244)

"அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும்
ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவும் என்று
அப்பண்பினவே நுவலுங் காலை" (தொல்.சொல்.245)

"அவைதாம்
முன்னும் பின்னும் மொழியடுத்து வருநவும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப" (தொல்.சொல்.246)

என்பனவாகும். இவற்றின் விரிவான பொருளை, எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

இவற்றுள் விகுதி இடைச் சொற்களும், காலங்காட்டும் இடைநிலைகளும், சாரியைகளும், எழுத்துப்படலத்துள் விரிவாக எடுத்துக் காட்டி விளக்கப் பெற்றன. புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவும், சாரியைமுதலியவை எழுத்துப் படலப் புணரியலுள் கூறப்பெற்றன. வேற்றுமை உருபுகள் பற்றி இப்படலம் வேற்றுமையியலுள் கூறப்பெற்றன. உவம உருபிடைச் சொற்கள் உவம இயலுள் விளக்கப்படும். ஈண்டு, தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச் சொற்களும், அவற்றின் விளக்கங்களும் இனிக் கூறப்பெறும்.

## இருவகை வழக்கிலும் பயின்றுவரும் இடைச்சொற்கள்

மன், தில், கொன், உம், ஏ, ஓ, என, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், கொல், எல், ஆர், அம்ம, எனா, என்றா, தொறு, ஒடு, ஆ, கொம், ஏ, கில் முதலியனவாகும். பேச்சு வழக்கில் நிகழ்ந்து வருவன பற்றி இறுதியிற்கூறப்படும். இனி இவற்றின் பொருளும் எடுத்துக் காட்டுக்களும் வருமாறு:

**மன் :**

'மன்' என்னும் இடைச்சொல், ஒரு செயல் நடந்து கழிந்துபோன நிலையையும், ஒருபொருள் பழைய நிலைமாறி புதிய ஆக்கம் பெற்ற நிலையையும், எஞ்சி நிற்கும் பொருளையும் உணர்த்தி வரும். ஆக்கப் பொருளின் மிகுதியையும் குறித்து வரும். சிறுபான்மை நிலைபேறு உணர்த்தி வினையடியாகவும் வரும். அசை நிலையாகவும் வரும். எ.டு:

(1) "சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே"

இப்பொழுது அது கழிந்து போயிற்று என்பது பொருள். இது கழிந்த நிலையை உணர்த்திற்று.

(2) இவ்விடம் பண்டு காடுமன் - இப்பொழுது கயல்புரளும் வயலாகத் திகழ்கின்றது என்பது ஆக்கம் உணர்த்திற்று.

(3) எந்தை எமக்கு அருளும் மன் - மிகுதியாக எந்தை அருள்வான் என்பது பொருள்.

(4) கூரியதோர் வாள் மன் - இப்பொழுது கூர் மழுங்கிக் கிடக்கின்றது. எனக் கழிந்து போன முன்னைய நிலையை உணர்த்திற்று. இதனை ஒழியிசைப் பொருள் என்றும் கூறுவர்.

(5) அதுமன் கொண்கன் தேரே. அசை நிலையாக நின்றது.

(6) மன்னிய பெரும நிலைமிசை யானே - நிலை பெற்று வாழ்வாயாக என வினைப் பொருள் உணர்த்திற்று. மன்னன் எனப் பெயரடிச்சொல்லாக நின்றது. மன் என்பது மன்னைச் சொல் என்றும் கூறப்படும்.

**தில் :**

தில் என்னும் இடைச் சொல் விழைவு (விருப்பம்), காலம் (காலநிலை), ஒழியிசை (எஞ்சி நிற்கும் கருத்து) என்னும் மூன்று பொருளில்வரும்.

**எ.டு:** (1) சின்மொழி அரிவையைப் பெறுகதில் அம்மயானே. யான் பெறல் வேண்டுமென்னும் விழைவுப் பொருள் உணர்த்திற்று.

(2) பெற்றாங்கறிகதில் இவ்வூரே - பெறும் காலத்தை இவ்வூர் அறிக எனக் காலம் உணர்த்திற்று.

(3) வருகதில் அம்ம எம்சேரிசேர - வந்தால் நீ இன்ன நன்மையைப் பெறலாம் என ஒழியிசைப் பொருளுணர்த்திற்று. விழைவுப் பொருள் தன்மையிடத்தில் மட்டும் வரும். இது தில்லைச் சொல் எனவும் வழங்கப் பெறும்.

**கொன் :**

கொன் என்னும் இடைச்சொல் அச்சம், பயனின்மை, காலம், பெருமை என்னும் நான்கு பொருளில் வரும்.

**எ.டு:** (1) கொன்முனை இரவூர். அச்சந்தரும் போர் முனையிடத்து ஊர். என்பது பொருள்.

(2) கொன்னே கழிந்தன்று இளமை - வீணேகழிந்தது - இளமை என்பது பொருள்.

(3) கொன்வரல் வாடை. காலத்தோடு வந்த வாடைக் காற்று என்பது பொருள்.

(4) கொன்னூர் துஞ்சினும் யாம்துஞ்சலமே. பெருமைசான்ற ஊர் என்பது பொருள். கொன் என்பது கொன்னைச் சொல் என்றும் வழங்கப்பெறும்.

**உம் :**

உம்மை இடைச்சொல் எச்சம், சிறப்பு, எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளில் வரும்.

**எ.டு:** 1) சாத்தனும் வந்தனன் என்னும் உம்மை, முன்பே கொற்றன் வந்தமையைத் தழுவியதாகலின் எச்சவும்மை. இது அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என ஒன்றை ஒன்று தழுவியும் வரும்.

2) யானைக்கும் அடிசருக்கும் என்பது உயர்வு சிறப்பும்மை. இவ்வூர்ப்பூனையும் புலால் உண்ணாது என்பது இழிவு சிறப்பும்மை.

3) ஒன்று இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும். உலகம் புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன், அடக்கமு முடையன் ஒருவன் என்னுமிடத்து, அவன் நிலைமை துணியப்படாமையான் இஃது ஐயவும்மை.

4) "மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" என்னுமிடத்து, மறத்தல் கூடாத ஓத்து எனப் பொருள் தருதலின் எதிர்மறை உம்மை. சாத்தன் வருதற்கும் உரியன் என்னுமிடத்து, வாராமைக்கும் உரியன் எனப் பொருள் தருதலின் எதிர்மறை உம்மை. வந்து இருத்தற்கும் உரியன் எனப் பொருள்தரின் எச்சவும்மையுள் அடங்கும்.

5) முத்தமிழும் கற்றான் - தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தனர் என்பவை முற்றும்மை.

6) நிலனும், நீரும், காற்றும், தீயும், வானும் எனப் பூதங்கள் ஐந்து. இவை எண்ணும்மை.

7) இருநிலம் அடிதோய்தலின் திருமகளும் அல்லள், அரமகளும்அல்லள், யாராகும்இவள் என ஆய்வுபற்றி வருதல் தெரிநிலை உம்மை. தெரிநிலை = தேர்வு செய்யும் நிலை.

8) செந்தமிழால் வைதாரையும், வாழவைப்பான் முருகன் என்பது வைதலை வாழ்த்தாகக் கோடலின், இஃது ஆக்க உம்மையாம். செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே எனவருவனவும் ஆக்க உம்மையாம்.

எச்சவும்மையும், எதிர்மறை உம்மையும் ஒரு தொடரின் கண் வாரா. அஃதாவது, பாணன் பாடுதற்கும் உரியன் என்னுமிடத்து, வாயிலாகத் தூது செல்லுதற்கும் உரியன் எனப் பொருள் தரின் எச்சவும்மை. பாடாமைக்கும் உரியன்எனப் பொருள்தரின் எதிர்மறையும்மை. எனவே யாதானும் ஒருபொருளே தரும் என்பது கருத்து.

இறந்தது தழுவும் எச்சவும்மைத் தொடர்க்கு, முன்னிற்கும் தொடர் உம்மை பெறாது நிற்கும். அஃதாவது, சாத்தன் வந்தான் இனிக் கொற்றனும் வருவான் எனவரும். கொற்றனும் என்னும் உம்மை முன்பே, சாத்தன் வந்துள்ளமையை உணர்த்தி இறந்தது தழுவிநின்றது. சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் என்றோ, கொற்றனும் வருவான் என்றோ வரும் தொடரில், உம்மை ஒன்றை ஒன்று தழுவும் உம்மைகளாகும்.

இவற்றுள், சாத்தனும் வந்தான் என்னும் உம்மை, கொற்றனும் வருவான் என்னும் பொருளை உணர்த்திற்று என்றும், அதனான், அது எதிரது தழுவிய எச்சவும்மை என்றும் உரையாசிரியர் சிலர் கூறுவர். அது ஒவ்வாது. சாத்தனும் வந்தான் என்னும் தொடரில் உம்மை இல்லாமலும், கொற்றனும் வருவான் எனப் பொருளுணர்த்து மாகலின், அது உம்மையின் பொருளன்று. சொல்லாற்றல் குறிப்பாற் பெறப்படுவதாகும். எனவே, எதிரது தழுவிய எச்சவும்மை என்பது ஒன்றில்லை என அறிக.

முற்றும்மை தொகைப் பொருள்தரும் சொற்களிடத்து வரின், சில இடத்து எச்சப் பொருளையும் தரும். இது பெரும்பான்மையும் எதிர்மறை வினையின்கண் அமையும்.

எ.டு: அவனிடம் பத்தும் கொடு ,என்னுமிடத்துச் சிலகுறையக் கொடு எனப் பொருள்தரும். மற்றும் அவன் பெற்ற பத்தும் கொடுப்பான் என்னுமிடத்து, மேலும் சிலவும் கொடுப்பான் எனச் சிறுபான்மை விதிவினைக்கண்ணும் எச்சப் பொருள் அமையும்.

மேலும், செவ்வெண் ஈற்றில்வரும் உம்மை, சிலவிடத்து எச்சப் பொருள் தருதலும் உண்டு.

எ.டு: கல்வி, செல்வம், ஒழுக்கம், ஒப்புரவு, ஈகையும் உடையார் சிலர் என்னுமிடத்து பலர் இவற்றுள் சிலவே உடையார் எனப்பொருள் தருதல் காண்க. எனவே, உம்மை இடைச்சொல், பல கோணங்களில் வருதலை, இடம் நோக்கி உணர்தல் வேண்டுமென அறிக.

ஓ :

ஓ என்னும் இடைச் சொல் பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு, கழிவு, அசை என்னும் எண்வகைப் பொருள்படவரும்.

எ.டு: (1) "யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே" என்பது பிறர் தேறினும் தேறுக யான் தேறேன் எனப் பிறரிடத்தினின்றும் தன்னைப் பிரித்துணர்த்திற்று.

(2) சாத்தன் உண்டானோ? என வினாப் பொருளில் வந்தது.

(3) யானோ கொள்வேன் - என்பது கொள்ளேன் என எதிர்மறைப் பொருள் தரும்

(4) கற்கவோ வந்தான் - என்பது கற்க வரவில்லை, விளையாடற்கு வந்தான் எனப்பொருள்தரின் ஒழியிசை ஓகாரமாகும்.

(5) திருமகளோ அல்லள் கலைமகளோ அல்லள் யாரிவள் - என்பது தெரிநிலை பற்றி வந்தது. தெரிநிலை = ஆராயும் நிலை.

(6) ஓஒபெரியன் - என்பது பெருமை குறித்து வந்தது. இவ் ஓகாரம் அளபெடையாகவே வரும்.

(7) ஓஒ தமக்கோர் உறுதியுணராரே என்னுமிடத்துக் கழிவிரக்கப் பொருள்.

(8) காணிய வம்மினோ - என்னுமிடத்து அசையாக நின்றது.

ஏ :

ஏகார இடைச் சொல் வினா, பிரிநிலை, எண், ஈற்றசை, எதிர்மறை, தேற்றம் என்னும் ஆறு பொருளில் வரும்.

எ.டு: (1) நீயே கொண்டாய்? எனவினாப் பொருளில் வருமிடத்து வினா ஏகாரம்.

(2) இவனே பெரியன் மற்றவரில்லை என்னுமிடத்துப் பிரிநிலை ஏகாரம்.

(3) நிலனே, நீரே, தீயே, வளியே, வானே எனப்பூதம் ஐந்து, எண் ஏகாரம்.

(4) வாடா வள்ளியங் காடிறந் தோரே - ஈற்றசை ஏகாரம்.

(5) யானே கொண்டேன்? பிறர் கொள்ளவில்லை எனப் பொருள்படும். எதிர்மறை.

(6) உண்டே மறுமை - என்பது தேற்றேகாரம். (தேற்றம் = தெளிவு)

இனி, ஏஎ இவளொருத்தி பேடியோ என்றாள் - என்னுமிடத்து இசைநிறை. ஏஎ இவளொருபேதை என்னுமிடத்து இகழ்ச்சிக் குறிப்பு. சிறுபான்மை, "என்பிலதனை வெயில்போலக் காயுமே" என இரக்கம் பற்றியும் வரும்.

**என :**

என என்னும் இடைச்சொல் வினைப்பொருள், குறிப்புப் பொருள், இசைப் பொருள், பண்புப் பொருள், எண்ணுப் பொருள், பெயர்ப் பொருள் ஆகிய ஆறு பொருள்களில் வரும்.

எ.டு: (1) மலைவான் கொள்கென உயர்பலிதூஉய் வினைப்பொருள்

(2) துண்ணெனத்துடித்தது மனம் - குறிப்புப் பொருள்

(3) ஒல்லென ஒலிக்குங்கடல். - இசைப் பொருள்

(4) வெள்ளென விளர்த்தது வான் - பண்புப்பொருள்.

(5) நிலனென, நீரெனத் தீயென, வளியென, வானெனப் பூதம் ஐந்து - எண்ணுப் பொருள்.

(6) 'அழுக்காறென ஒருபாவி' - பெயர்ப் பொருள், 'என்று' என்னும் இடைச்சொல்லும் இவ் ஆறுபொருளில் வரும்.

**மற்று :**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளிலும் அசைப் பொருளிலும், வரும்.

**எ.டு:** (1) மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னுமிடத்து, நல்வினை (தவம்) பின்னர்ச் செய்வாம், இப்பொழுது இதனைச் செய்வாம் என, அவ்வினையை மாற்றுதலின் வினை மாற்றுப் பொருளில் வந்தது.

(2) அதுமற்று அவலங் கொள்ளாது. என்னுமிடத்து மற்று அசையாம்.

**எற்று :**

எற்று என்னும் இடைச் சொல், கடந்து சென்ற காலத்தை இரங்கல் குறிப்போடு உணர்த்தும்.

**எ.டு:** எற்றென் உடம்பின் எழில்நலம் - என்னுமிடத்து, முன்பு எழிலாக இருந்த என் உடம்பின் நலம், இப்பொழுது மாறிவிட்டது என இறந்து சென்ற காலத்தை உணர்த்திற்று.

**மற்றை :**

'மற்றை' என்னும் இடைச்சொல் இனப்பொருளைச் சுட்டிவரும். இச்சொல் யாதானும் ஒருபால் பற்றிய விகுதியொடுவரும்.

**எ.டு:** ஒருவன் இவ்வாடையைக் கொள்க என்னுமிடத்து, அதை விரும்பாத ஒருவன் மற்றையது தருக எனவரும். இவன் உண்டானோ என்னுமிடத்து மற்றையவன் உண்டான் எனவரும்.

**மன்ற :**

மன்ற என்னும் இடைச் சொல் தேற்றப் பொருளில் வரும். (தேற்றம்=நிச்சயம். உறுதி)

**எ.டு:** மடவை மன்ற வாழிய முருகே - முருகே நீ நிச்சயமாக அறியாமையை உடையை என்பது பொருள்.

**தஞ்சம் :**

தஞ்சம் என்னும் இடைச்சொல் எளிமை என்னும் பொருள்தரும்.

எ.டு: முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம். நீ அரசு வேண்டுமெனா இரந்தால், பெறுதல் உனக் கெளிதாம் என்பது பொருள்.

**கொல் :**

கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளில் வரும்.

எ.டு: சாத்தன் வருவான் கொல்? வாரான் கொல்? எனவரும்.

**எல் :**

எல் என்னும் இடைச்சொல் இலங்குதல் என்னும் பொருளில் வரும்.

எ.டு: எல்வளை மகளிர், ஒலிக்கும் வளையலணிந்த மகளிர் என்பது பொருள்

**ஆர் :**

ஒருமைப் பெயர்களின் ஈற்றின்கண், விகுதிபோல இணைந்து மதிப்புப் பொருளைத் தரும். சிறுபான்மை அசையாகவும் வரும்.

எ.டு: (1) சாத்தனார் வந்தார். சிதம்பரனார் வழங்கினார் எனவரும். [நரியார், புலியார் என அஃறிணைக் கண்ணும், நம்பியார், நங்கையார் என உயர்திணைக் கண்ணும் வரும். ஆர் விகுதிவேறு. இதுவேறு]

(2) எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே - அசையாக வந்தது.

**அம்ம :**

'அம்ம' என்னும் இடைச்சொல், கேட்பாயாக என்னும் பொருளில்வரும்.

எ.டு: அம்மவாழி தோழி எனவரும்.

**என்றா-எனா :**

இவ்விடைச் சொற்கள் எண்ணுதற் பொருளில் வரும். நிலனென்றா, தீயென்றா, நீரென்றா, வளியென்றா, வானென்றா பூதங்கள் ஐந்து எனவரும். நிலனெனா, தீயெனா, நீரெனா, வளியெனா, வானெனா எனவரும்.

**தொறு :**

'தொறு' என்னும் இடைச்சொல், ஒவ்வொன்றும் என்னும் பொருளில் வரும்.

**எ.டு:** ஊர்தொறும் ஒருபள்ளி அமைதல் வேண்டும். காணுந்தொறும் களிப்பு மிகும். வழக்கில் ஊர்தோறும் எனவரும்.

**ஒடு :**

'ஒடு' என்னும் இடைச் சொல், எண்ணுப்பொருளில் வரும்.

**எ.டு:** "பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

எனவரும். ஒடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுவேறு. இவ்இடைச்சொல் வேறு.

**ஆ :**

'ஆ' என்னும் இடைச்சொல், இரங்கற் குறிப்புணர்த்தி வரும். வழக்கின்கண் வியப்புணர்த்தியும் வரும்.

**எ.டு:** (1) அஆ இழந்தான் என்று எண்ணப்படும். (2)ஆஅ இஃதென்னே! எனவரும். ஆ என்னும் வினா இடைச்சொல் வேறு. இதுவேறு. வினா ஈற்றில் வரும். இது முதற்கண் வரும்.

**கொம் :**

'கொம்' (மை) என்னும் இடைச்சொல் பெருக்கங் குறித்துவரும்.

**எ.டு:** கொம்மெனக் கொழுத்தது.

**எ :**

'எ' என்னும் இடைச் சொல் (முழுமை) எஞ்சாப் பொருளில் வரும்.

**எ.டு:** எவ்வயிற் பெயரும் அவ்வியல் நிலையும் எனவரும்.

## அசையிடைச் சொற்கள்

## இசை நிறை இடைச்சொற்கள்

மியா, இக முதலாகப் பின்வருவன யாவும் அசையாகவும் சிறுபான்மை இசை நிறையாகவும் வரும். எடுத்துக் காட்டு வருமாறு:

| | | |
|---|---|---|
| மியா | - | கேண்மியா கொற்றா |
| கொல் | - | கற்றதனாலாய பயனென்கொல் |
| இக | - | காணிக |
| வாழிய | - | காணிய வாழிய நெஞ்சே |
| மோ | - | கேண்மோ தெய்ய |
| தெய்ய | - | கொல்லேன் தெய்ய |
| மதி | - | சென்மதி பாக |
| மாள | - | தவிர்ந்தீக மாள. |
| இகும் | - | என்றிகும் யானே |
| ஈ | - | சென்றீ பெரும |
| இசின் | - | என்றிசின் யானே |
| யாழ | - | செலவயர்ந்தி யாழ. |
| யா | - | யா, பன்னிருவர் |
| ஆர் | - | செல்லுமார் முதலே. |
| கா | - | இவள் காண்டிகா. |
| பிற | - | ஆயனை அல்லபிற. |
| குரை | - | பல்குரைத் துன்பங்கள் |
| பிறக்கு | - | பிறக்கதனுட் செல்லான் |
| ஒடு | - | வட்டில் போதொடு பொதுள. |
| அரோ | - | இருங்குயிலாலும் அரோ |
| ஒரும் | - | அஞ்சுவதோரும் அறனே. |
| போ | - | வாழாதென்போ |
| தாம் | - | அவர்தாம் வந்தார். |
| மாது | - | விளிந்தன்றுமாதோ |
| தான் | - | அவன்தான் வந்தான் |
| இருந்து | - | எழுந்திருந்தான் |
| அன்று | - | சே ., துமன்றே.. |

இட்டு - எழுந்திட்டான்

ஆம் - பணியுமாம் என்றும் பெருமை

ஏ - ஏஎ இஃதொத்தன்

போலும் - மகிழ்ந்தனை போலும்.

அந்தில் - அந்தில்கச்சினன்

ஆம்ம - அதுமற்றம்ம

ஆங்க - ஆங்கத்திறனல்ல யாங்கூற.

மா - உண்கமா கொற்கையோனே

அத்தை - செலீயர் அத்தை.

இத்தை - நீயொன்று பாடித்தை.

இனி, உலக வழக்கின்கண் வரும், பல்வேறு இடைச் சொற்கள் இடத்திற்கேற்பப் பொருள் கொண்டு வரும். அவற்றுள் சிலவருமாறு:- உம்: உம்மை இடைச்சொல், ஐயா ஒரு சேதிகேளும் என வியங்கோட் பொருளிலும், கண்டதும் ஓடிவிட்டான் என உடன் என்னும் பொருளிலும் வரும்.

**ஏன் :**

ஏன் என்னும் இடைச்சொல், ஐயா இதைக் கேளுங்களேன் இங்கே வாருங்களேன் எனவேண்டுகோள் பொருளில் அசையாகவரும். ஆம்: (ஆகும் என்பதன் மரூஉ) அவனைக் கேட்டுப்பார்க்கலாம் என உடன்பாட்டிலும், இனிமழைவரலாம் என எதிர்பார்ப்புப் பொருளிலும், நீ இனிப் போகலாம் என ஏவற்பொருளிலும், தலைவர் இதைப் பேசலாம் எனத் தகுதிப் பொருளிலும், அவன் சொன்னானாம், இவன் கேட்டானாம் என உடன்பாடின்மைப் பொருளிலும் வரும்.

**அட்டும் :**

(ஒட்டும் = ஒக்கும் என்பதன் திரிபு. காரியம் ஆகட்டும். அவன் இதைச் சொல்லட்டும், என்னோடு பேசிப்பார்க்கட்டும் என வியங்கோள் பொருளில் வரும்.

**ஆக்கும் :**

நீ வந்தாயாக்கும், அவன் பேசினானாக்கும் என ஆக்கும் என்னும் சொல் ஐயவினாப் பொருட் குறிப்புடன் வரும்.

## விகுதி இடைச் சொற்களின் வரலாறு

பெயர்ச் சொல், வினைச் சொற்களில் திணை, பால், இடம் காட்டும் விகுதி இடைச் சொற்களும், பகுநிலைச் சொற்களின் (பகுபதம்) இறுதி உறுப்பாக, ஒரு சொற்புணர்ச்சிக்கண் ஒன்றுபட்டு நிற்கும். அவற்றுள், பல நிறையுரிச் சொற்களின் அடியாகத் தோன்றித் திரிந்தும், மருவியும் அமைந்தனவாகும். சில விகுதிகள் குறிப்போசையாகவும் அமையும். அவற்றைத் தெற்றெனப் புலப்படுத்தல் அரிதாகலின், அவற்றின் பொருளமைதியை நோக்கி, அவற்றின் அடிப்படை வடிவம் ஈண்டுதரப் பெறுகின்றன.

**அன் - ஆன் :**

(வந்தனன் - வந்தான்) ஆன் என்னும் விகுதி ஆண் என்னும் ஆண்பாற் சொல்லின் திரிபாகும். ஆண் - ஆன். அன் என்பது இதன் குறுக்கமாம்.

**அள் - ஆள்:**

(மனையாள் - வந்தாள்) ஆள் என்பது ஆள் என்னும் பெண்பாற் சொல்லின் இயல்பு வடிவமாகும். அள் என்பது அதன் குறுக்கமாகும்.

**அல் :**

(வருவல் - செல்வல்) படர்க்கை ஒருமையுணர்த்தும் அன் என்னும் விகுதியின் னகரத்தைத் தன்மை ஒருமைக்கண் ஆக்குதல் வேண்டி, அல் எனத்திரித்துக் கொண்ட வடிவமாகும்.

**அர் - ஆர்:**

(வந்தனர் - வந்தார்) ஆர்தல் = நிறைதல் என்னும் பன்மைக் கருத்துடைய உரிச்சொல். ஆதலின், படர்க்கைப் பன்மை விகுதியாக அமைத்துக் கொள்ளப்பட்டது அர் என்பது இதன் குறுக்கமாகும்.

**மார் :**

(உண்மார் வந்தார் - தாய்மார்) வினையொடு முடியும் நிலையினை வேண்டியும், ஒருமைப் பெயர் பன்மையாதல் வேண்டியும், ஆர் என்பதன் கண் மகரமெய்யைக் கூட்டி ஆக்கஞ் செய்து கொண்டதாகும்.

**அ-ஆ :**

(வந்தன, வருவன, வாரா) அர், ஆர் என்பவை

உயர்திணைப் பன்மை விகுதிகளாக அமைத்துக் கொண்டமையின், அவற்றின் ரகர ஒற்றைக் குறைத்து, அ-ஆ என்பவற்றை அஃறிணைப் பன்மை விகுதிகளாகக் கொண்டனர் நூலோர்.

**ப-வ :**

உண்ப, காண்ப, வருவ, உண்ணுவ பன்மையுணர்த்தும் அகர ஈறொடு பகரமெய்யைக் கூட்டி உயர்திணை வினைகட்கும், வகர மெய்யைக் கூட்டி அஃறிணைப் பன்மை வினைகட்கும், ஈறாக ஆக்கம் செய்தனர். இவற்றை உயிர்மெய் எழுத்தாகவே கொள்ளல் வேண்டும். இன்றேல், பகர வகர மெய்கள் எதிர்கால இடைநிலைகளாகும்.

**து-று-டு :**

(வந்தது - வந்தன்று - குறுந்தாட்டு) அது, இது, உது என்னும் சுட்டுப் பெயர் ஈறு, அஃறிணை ஒருமைவினைகளின் விகுதியாகக் கொள்ளப்பட்டது. று-டு என்பவை துவ்வின் திரிபுகளாகும்.

**தும் -றும் - டும் :**

இவை து,று,டு என்பவற்றொடு பன்மைப் பொருள் தரும். உம்மை சேர்ந்து ஆக்கம் பெற்றனவாகும். இவை பன்மை உணர்த்துவதுடன் காலமும் காட்டும். அம்முறையில் உம் ஈற்று மகரம் கெட்டு, து-று-டு என நிற்குமிடத்து ஒருமைப் பாலுடன் காலமும் காட்டும்.

**கு-கும் :**

து-தும் என்பவற்றை ஒப்புமையாகக் கொண்டு, ஆக்கம் செய்து கொண்ட வினை விகுதிகளாகும். உண்கு - உண்கும் எனவரும்.

**என்-ஏன்-எம்-ஏம் :**

ஏன்-ஏம் என்பவை தன்மைப் பெயர்களாகிய யான்-யாம் என்பவற்றின் திரிபுகளாகும். என்-எம் என்பவை அவற்றின் குறுக்கங்களாக அமைந்தவையாகும்.

**அம்-ஆம்-ஓம் :**

இவை எம்-ஏம் என்பவற்றின் திரிபுகளாகும்.

**இ :**

இகரச்சுட்டு முன்னிலைக்குரியதாகலின், முன்னிலை வினை விகுதியாக அமைந்தது. பொருளெழுத்தாகிய நகரமெய்யொடு கூடுமிடத்து, நீ என நீண்டும், வேற்றுமை ஏற்குமிடத்து, நின் எனக் குறுகியும் அமையும். இஃது ஈனுதல் கருத்தில் பெண்பால் விகுதியாக வரும்.

**இர்-ஈர் :**

அர்-ஆர் என்பவை படர்க்கையாக அமைந்தனவாகலின், முன்னிலைக்கண் இர்-ஈர் என்பவை விகுதிகளாக அமைந்தன.

**ஐ-ஆய் :**

இவை (வந்தனை - வந்தாய்) முன்னிலை இகரவிகுதி இறந்தகாலம் காட்டுதற்பொருட்டுத் திரித்துக் கொள்ளப்பட்டவையாகும்.

**மின் :**

முன்னிலைப் பன்மை ஏவல் வினைக்கண் வரும். இவ்விகுதி செய்யும் என்னும் வாய்பாட்டு வினைக்கண், ஏன் என்னும் வியங்கோள் விகுதியைக் கூட்டி (செய்யும் + ஏன் = செய்யுமேன்)ச் செய்ம்மின் என உருவாக்கப்படும் சொல்லின் விகுதியாகும். மார் விகுதிபோல இதுவும் மகரத்தொடு சேர்ந்தே மின் எனவரும்.

**இய-இயர்-ஈயர் :**

'இய' என்பது இயங்குதல் என்னும் வினையடிச் சொல். எச்சப் பொருள்தரல் வேண்டி ரகரம் சேர்த்து விகுதியாக அமைக்கப்பட்டது. இதன் நீட்டல் விகாரம் ஈயர் என்பது.

**க-ய :**

படர்தல் கருத்துணர்த்தும் அகரம் ககர, யகர மெய்களை ஊர்ந்து, வியங்கோள் விகுதியாக ஆக்கம் பெற்றனவாகும்.

**வான்-பான் :**

அதற்கு என்னும் காரணப் பொருள் தரும் உருபேற்ற சொல். ஆன் எனமருவி எதிர்காலம் காட்டும். பகரவகர மெய்களொடு கூடி வான்-பான் என வினையெச்ச விகுதியாயின.

**பாக்கு :**

உண்பதற்கு - தின்பதற்கு என்னும் சொற்களில் காலத்தொடு காரணம் உணர்த்தும் 'பதற்கு' என்னும் உறுப்பு, பாற்கு - பாக்கு எனத்திரிந்து, வினையெச்ச விகுதியாக ஆக்கம் பெற்றது.

விடு, படு, பாடு, காண், இரு, ஒழி, வழி, உழி, உண், இடத்து என்னும் பகுதிகள் விகுதிப் பொருட்டாய் ஆக்கம் பெற்றனவாகும்.

**அல்-தல் :**

ஒல், தல், அல் என்னும் உரியடிச் சொற்கள் ஒலிக் குறிப்புணர்த்துவன. அல், தல், கல் எனத் தொழிற் பெயர் விகுதியாக அமைந்தனவாகும்.

**அம் :**

ஆகு என்னும் வினைமுற்றுச் சொல்லின் திரிபாக அமைந்து இடப்பொருள், காலப்பொருள், வினைப்பொருள் உணர்த்தும் விகுதியாயிற்று.

**ஐ,கை,வை :**

ஐ-என்னும் உயிரெழுத்து தனித்தும், ககர, வகர மெய் யொடு கூடியும், தொழிற்பெயர் விகுதிகளாயின ஐ-என்பது ஏய என்பதன் மரூஉவாகும்.

**உ-கு-பு :**

புள்ளியீற்றுச் சொற்களில் விடுப்பிசையாக வரும் உகரம் தனித்தும், ககர, பகர மெய்களை எழுத்துப்பேறாகக் கொண்டும், தொழிற்பெயர் பண்புப் பெயர் விகுதிகளாக ஆக்கம் பெற்றன.

**அரவு :**

(தோற்றரவு) இவ்விகுதி ஆர்வு என்னும் சொல்லின் திரிபாகும்.

**காடு :**

(வேக்காடு) இஃது ஆள்+து =ஆடு (ஆளுதல்) என்னும் சொல்லில் ககரம் எழுத்துப்பேறாக அமைந்து, . காடு எனத் தொழிற்பெயர் விகுதியாக ஆக்கம் பெற்றதாகும்.

**ஆல்-ஏல்-மல் :**

ஆல் என்பது ஆ, இல் என்னும் வினையெச்சச் சொல்லின் மரூஉவாகும். ஏல் என்பது அதன் திரிபாகும். ஆல் என்பது அல் எனக் குறுகி மகரம் பெற்று, மல் என விகுதியாக அமைந்ததாகும்.

**மே-மை :**

எதிர்மறைப் பொருள் தரும் ஏகாரம், மகரத்தை எழுத்துப் பேறாகப் பெற்று மே - என நின்றது. மை- என்பது அதன் திரிபாகும்.

**ஆட்டி :**

ஆள்+த்+இ=ஆட்டி, ஆளுபவள் என்னும் பொருளை உள்ளடக்கி விகுதியாக அமைந்தது.

**அத்தி :**

அத்தன் என்பதற்குரிய பெண்பாற் சொல் விகுதியளவாகக் குறத்தி - குயத்தி என அமைந்தது. இது தட்டாத்தி, வண்ணாத்தி என நீண்டும் வரும்.

**அச்சி :**

அச்சன் என்பதற்குரிய பெண்பாற் சொல் விகுதியளவாக நின்றது.

**காரன்-காரி-காரர் :**

என்பவை காரியத்திற்குரியவன் - உரியவள் - உரியவர் என்னும் பொருள்தரும், குறிப்புப் பெயர்கள் விகுதியளவாக அமைந்தன.

**வி-பி :**

பிறவினை விகுதிகளாகிய வி-பி என்பவற்றோடு ஒப்பவை, செய் என்பவை உண்ணவை - உண்ணச் செய் என விகுதியாகவும், வரும். ஏனைய விகுதி இடைச் சொற்களும், இவ்வாறு மருவி அமைந்தனவேயாம்.

## உரிச்சொல் இயல்

உலகில் வழங்கி வரும் மொழிகள் பல. அவற்றுள் மூலமொழிகள் சில. அவற்றினின்றும் கிளைத்த மொழிகள் பல. தனிமொழிகள் சில. கலப்பு மொழிகள் பல

மூலமொழியினின்றும் அறிவியல் நோக்கில் செம்மையுற்ற மொழிகள் மிகச்சில. அவற்றுள், முன்மையானதும் தொன்மையானதுமான மொழி செந்தமிழ் மொழி. யாப்பமைதி கொண்ட இலக்கிய வழக்கும், பேச்சமைப்புக் கொண்ட உலகியல் வழக்கும், பெற்றுக்கன்னித் தன்மை வழுவாத மொழி தமிழ்மொழி. சிக்கலில்லாத இலக்கணக்கட்டுக் கோப்பமைந்த மொழி தமிழ்மொழி. பகுத்தறிவு நோக்குடைய பண்பட்ட மொழி.

கணக்கியல் முறையில் தமிழிலக்கணத்தை வகுத்துரைத்த சான்றோர்கள் காட்சிப் பொருளும், கருத்து பொருளுமாகிய எல்லாப் பொருள்களையும், இருதிணையாக வகுத்து, அவற்றின் வடிவம் - உருவம் - இயக்கம் - பயன் ஆயவற்றை உணர்த்தும் சொற்களைப் படைத்து, அச்சொற்களின் ஒலிவடிவங்களைப் பிரித்து நோக்கி எழுத்திலக்கணத்தையும், பொருள்தரும் நிலை நோக்கிச் சொல்லிலக்கணத்தையும் வகுத்துரைத்தனர்.

தமிழ் நூலார், சொற்களைப் பெயர், வினை, இடை, உரி, என நால்வகையாகப் பிரித்து விளக்கிச் சென்றனர். அவற்றுள் இறுதியாக உள்ள பகுப்பு உரிச் சொல். இப்பகுப்பு உலகமொழிகள் பலவற்றிலும் அமைந்துள்ள தெனினும், உரிச்சொல் என்பதற்குப் பிறமொழியாளர் கொண்ட பொருளும், கருத்தும் வேறு. தமிழ்நூலார் கொண்ட கருத்து வேறு.

தமிழ் இலக்கண நெறிமுறைகள் பெரும்பான்மையும், வடமொழி எனப்படும் சமற்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பது தொல்காப்பிய உரையாளரின் கருத்தாகும். நன்னூல் முதலிய இடைக்கால நூலோர்க்கும் அதுவே கருத்தாகும். அதனான் தொல்காப்பியம் வகுத்துரைக்கும் உரிச்சொல் இலக்கணத்தை, வடமொழியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பில்லாமற் போனமையான், உரிச் சொல்லின் இலக்கணம் பற்றிய கோட்பாடுகளையும், நுணுக்கத்தையும் அவர்கள் உள்ளவாறு உணராமற் போயினர். உரிச் சொற்கள் பல்வகைப் பண்புணர்த்தி வரும். பெயர் வினைகளுக்கு அடையாகவரும் என்பதே, அவர்கள் கருத்தாகலின், அதற்கேற்ப உரைவிளக்கம் செய்து போயினர்.

சொற்கள் யாவும் பொருளுணர்வுக் குறிப்பு அடிப்படையில், ஓரசையாகத் தோன்றித் தனித்தும், முன்னொட்டு பின்னொட்டுக்களோடு, கூடித் தொடர்ந்து உருப்பெற்றி லங்குவதைக் காண்கின்றோம். அந்நிலையில் ஒருவர் கூறும் கூற்றில்

அமைந்துள்ள சொற்களைப் பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் கேட்பவர் உணர்கின்றனர்.

எடுத்துக்காட்டாக நலங்கிள்ளி - நெடுஞ்செழியன். செங்குட்டுவன் என்று கூறியவழி இவை பெயர்ச் சொற்கள் என்றும், செய்தான் - செய்திருக்கிறான் - உண்டிருப்பான் என்று கூறிய வழி இவை வினைச் சொற்கள் என்றும் உணர்கின்றனர். இவை தனி ஒரு எழுத்தாலோ, ஓர் அசையாலோ அமைந்த சொற்கள் அல்ல. பல அசைகள் இணைந்து ஒருபொருளைத் தருவனவாகும்.

இச்சொற்களில் அமைந்துள்ள அசைகளை நோக்கின் நல்+அம்+கிள்+இ என்றும் நெடு+உம்+செழு+இ+அன் என்றும், செம்+குள்+து+வ்+அன் என்றும் அமைந்துள்ளமை காணலாம். இவ்வாறே வினைச் சொற்களை நோக்கின் செய்-த்-ஆன் என்றும், செய்-த்-இரு-ப்-ஆன் என்றும், உண்-ட்-இரு-ப்-ஆன் என்றும் அமைந்திருத்தலைக் காணலாம்.

இவற்றுள், நல், அம், கிள், நெடு, செழு, செம், செய்,இரு,உண்,குள் என்பவை தனித்து நிற்பினும் பொருள்தரும். இ,உம்,த்,ப்,து,வ்,ஆன் என்பவை தனித்துநிற்பின் பெயர்ப் பொருளையோ, வினைப் பொருளையோ தாரா. மேலனவற்றோடு உறுப்பாக இணைந்தவழிப் பால், இடம், காலம் முதலியவற்றைக் காட்டும் பொருளினவாய் நிற்கும். அந்நிலையில் இவை இடைச் சொல் எனப்பெறும்.

இச்சொற்களில் உள்ள நல்-கிள், நெடு, செழு என்பவை பெயர்நிலையிலும், செய், உண், இரு என்பவை வினை நிலையிலும் அமைந்துள்ளன. இவை எவ்விடத்துவரினும், இப்பொருளையே தருமாயின் பெயரினும், வினையிலும் அடக்கிவிடலாம். இவையாண்டும் பெயராகவும், வினையாகவும் அமைதல் இல்லை. மேல்வரும் அசைகளுக்கேற்ப மாறிவரும்.

அஃதாவது நல் என்னும் முதனிலைச் சொல் நலம் எனவரின் பெயரடி. நல்கு எனவரின் வினையடி, கிள் என்னும் முதனிலைச் சொல். கிள்ளை எனவரின் பெயரடி. கிள்ளினான் எனவரின் வினையடி, இவ்வாறே செய் என்பது செய்யோள் செய்(வயல்) எனப்பெயராயும், செய்தான், செய்யான் எனவினையாயும் வருதலின், தனித்து நிற்குமிடத்துப் பெயரென்றோ, வினையென்றோ கூறஇயலாது. அவ்விரண்டிற்கும் பொது உரிமையுடையனவாகும்.

சில அடிச்சொற்கள் பெயர், வினைகட்கேயன்றி, இடைச் சொல்லுக்கும் பொதுவாக நிற்கும்.

எ.டு: ஆவந்தது (ஆ=பசு) ஆயினான் (ஆ=ஆதல்) அவனா(வினா) இங்ஙனம் அடிச்சொற்கள் பெயர், வினை, இடை என்னும் மூன்றற்கும் பொதுவாய் உரிமையுற்று நிற்றலின், அந்நிலையில் அவற்றை உணர்த்த ஒரு பெயர் வேண்டுமன்றோ?, அப்பெயரைத் தான் (உரி) உரிச்சொல் என அமைத்தனர் நூலோர்.

எனவே, உரிச்சொல் என்பது பெயராகவும், வினையாகவும் இடையாகவும் உருவாகும், சொற்களுக்கு அடிச்சொல்லாய் உரிமை பூண்டிருப்பது என்பது விளங்கும். அங்ஙனம் பெயராகவும், வினையாகவும் ஆக்கமுறாமல், பெயர்க்கும் வினைக்கும் அடையாக, அவற்றைச் சிறப்பித்து வருமிடத்து, நால்வகையுள் ஒன்றாகவும் இவ்வுரிச் சொல்நிற்கும்.

எ.டு: செங்காந்தன், நலங்கிள்ளி, கருங்குதிரை எனவும், நனிபேதை, தவச்சிறிது, தடந்தோள், கடிமணம் எனவும்வரும்.

அடையாகவருமிடத்து அவைகாலக் குறிப்பைப் பெற்றுவரின், வினைவகையுள் ஒன்றான பெயரெச்சமாக நிற்கும். வினையெச்சமாகவும் நிற்கும்.

எ.டு: நல்லபையன், சிறந்தமலர், கரிய குதிரை, உண்டயானை, சென்ற பொழுது, கண்டு வந்தான், ஓடிவந்தான், கேட்டு நின்றான் எனவரும்.

அடையாகவரும் உரிச் சொற்கள் அடையாக வருதலேயன்றிச் சொல்லாக்க விகுதி பெற்றுப் பெயர்ப் போலியாகவும், வினைப் போலியாகவும் வரும்.

எ.டு: சால் என்னும் உரிச்சொல் சால்பு எனப் பெயர்ப்போலியாகவும், சான்றான் 'எனவினைப் போலியாகவும் வரும். இவ்வாறே தவ என்பது தவம் எனப் பெயராகவரும். உறு என்பது உறவு எனப் பெயராகவும், உற்றான் என வினையாகவும் வரும்.

எழுத்துக்கள் சொல்லாக்கம் பெறுமிடத்து, அடிச்சொற்கள் யாவும் ஒரு நேரசையாகவே நிற்கும். நேரசை என்பது குறில், நெடில் தனித்தும், ஒற்றடுத்தும் நான்கு நிலையாக

நிற்றல். அங்ஙனம், நேரசையாக நிற்குமிடத்துச் சில அடிச்சொற்கள் பெயராகவோ, வினையாகவோ பொருள்தரும். இவற்றை நிறைஉரிச் சொல் என்றும், பொருள்தராத நிலையில் குறைஉரிச்சொல் என்றும் கூறுவர். உயிர் எழுத்துக்கள் யாவும் பொருள்தரும். அவை ஒற்றொடு கூடி நிற்குமிடத்துச் சில பொருள்தரும். சிலதரா. உயிரெழுத்துக்களின் பின் பதினெட்டு மெய்களும், தனித்தனி கூடி நிற்குமிடத்துச் சில பொருள்தரும். சிலதரா. ஒற்றொடு கூடிய வழியும் அவ்வாறேவரும். பொருள் தருவனவற்றை நிறைச்சொல் என்றும், தராதவைற்றைக் குறைச் சொல் என்றும் நூலோர் கூறுவர். தொல்காப்பியர்,

"உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி"

(தொல்.எழுத்து.482)

என்பார். இதனான் நெறிப்பட வருவன நிறைச்சொல் என்பது பெறப்படும். அ - சுட்டு இடைச்சொல். ஆ=பசு. ஆ=ஆகு. ஔ=சுருங்கு. அக்-பொருளில்லை. அல்=இரவு. ஆக் - பொருள் இல்லை. ஆண்=ஆடவன். க - பொருளில்லை, கா=சோலை. கக்-பொருளில்லை. கண்=விழி. காக்-பொருளில்லை, காண்=பார். பொருளுண்டு. இவ்வாறே ஏனையவற்றையும் அமைத்துக்கண்டு கொள்க. விளக்கம் பின்னர்க் கூறப்படும்.

அக்-ஆக், கக்-காக் என்றாற்போன்ற குறைச்சொற்கள் மேலும் ஓர் உயிரையோ உயிர் மெய்யையோ பெற்று நிறைச் சொல்லாகும். அவ்வழி அவை நிரையசையாகவும் ஈரசையாகவும் ஆக்கம் பெறும்.

உதாரணம்: அக்+ஐ=அகை (முகிழ்த்தல்) அக்கை-மூத்தவள். கக்+உ=கக்கு - உமிழ். காக்+கை=காக்கை. இவ்வாறே கண்டு கொள்க.

குறைச் சொற்கள் மேலும், ஓர் உயிரையோ, ஒற்றையோ, உயிர் மெய்மையோ பெற்றவழி, நிறைஉரிச் சொல்லாய் பெயராகவும், வினையாகவும் பெயர் வினைகளுக்குப் பகுதியாகவும் ஆக்கம் பெறும்.

எ.டு: அட்+இ=அடி. ஆட்+ஐ=ஆடை. கிள்+இ=கிளி. கன்+இ=கனி. கன்னி எனவரும். மேலும், சில எழுத்துக்கள் கூடியவழி உற்-உற-உறி- உறவு -உறல் எனப்பெயராயும் உற்றது,

உற்றான், உறுவான் எனவினையாயும் வரும். இவ்வாறே நிறை உரிச் சொற்களும் மேலும், எழுத்துக்களைப் பெறுமிடத்துப் பல்வேறு பொருளில் பெயராயும், வினையாயும் வரும்.

**எ.டு:** *கா-காண், கால், காய், காழ், கான்,காது,காவு எனவும், காவல், கானல், காதல், காசு, காப்பு, காரி,காவி எனவும் பலவாறாக வரும்.*

**எ.டு:** ஆர் - என்னும் நிறைஉரிச்சொல், ஆர் - ஆத்திமரம், கொன்றைமலர், வண்டிச்சக்கரம், ஆர்வம் எனப்பெயராயும், ஆர்த்தான், ஆர்க என வினையாயும், சாத்தனார், செல்லுமார் முதலே என இடைச் சொல்லாயும், ஆராரோ ஆரிரரோ என இசை உரிச் சொல்லாயும் வரும். இவ்வாறே, ஏனையவற்றையும் கண்டுகொள்க.

இனி, தொல்காப்பியர் உரிச்சொல் இலக்கணம்பற்றிச் கூறுவதைக் காண்போம்.

> *"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை*
> *இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்*
> *பெயரினும் வினையினும் மெய்தடு மாறி*
> *ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்*
> *பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்*
> *பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்*
> *தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்*
> *எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"* (தொல்.சொல்.292)

இந்நூற்பா உரிச்சொற்களின் பொது இலக்கணமும், அவற்றின் பொருள் நிலையை மாணாக்கர் அறிந்துகொள்ளும் முறையும், பற்றிக் கூறுகின்றது. மற்றும், உரிச் சொல்லின் இலக்கணத்தை நான்கு கூறுகளாக வகுத்துப் உணர்த்துகின்றது. அவையாவன:

1) உரிச் சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வு அடிப்படையில் தோன்றும். (2) தனித்து வருதலேயன்றிப் பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்கு முதனிலையாகத் தடுமாறிவரும். (3) வடிவால் ஒன்றுபட்டிருக்கும் உரியடிகள் ஒன்றே, பல பொருளைச், சுட்டிவரும். (4) ஒரு பொருளைப் பற்றிப்பல உரிச் சொற்கள் வரும் என்பனவாகும்.

உரிச்சொற்களின் பொருள் நிலைகளை ஓர்ந்துணரும் நல்லாசிரியன், வழக்கில் பெரிதும் பயின்றுவாராமல்

அருகிவரும், உரிச்சொற்களை எடுத்துக் கூறுமிடத்து, முன்னர்ப் பயின்று வழங்கப்பெறும் சொற்களொடு, சார்த்திக் கேட்போர் திரிபின்றி உணருமாறு விளக்கிக் கூறுதல் வேண்டும் என்பது அறிவுரை.

"தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" (தொல்.சொல்.292)

என்றது பெயர், வினைகட்கு முதல்நிலையாக வருபவை பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் சென்று வருதலின் தனித்தும், பெயர், வினைகட்கு அடைகளாகவும் அமைந்து இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகை இலக்கியச் சொற்களாக நிற்றலின், அவற்றைச்சுட்டி "எச்சொல்லாயினும்" என்றார் ஆசிரியர். எடுத்துக்காட்டு வாயிலாக, இந்நெறிமுறைகளை இனிப்பார்ப்போம்.

'உறு' என்னும் இவ்வுரிச்சொல் குறிப்பு அடிப்படையில் தோன்றியதாகும். 'உற்' என்பது இதன் அடிச்சொல் உகரம் பெற்று 'உறு' என நிறம்பிய சொல்லாக அமைந்தது. இவ்வுரிச் சொற்குரிய பொருள் மிகுதி என்பதாகும்.

இச்சொல் முதனிலையாக நின்று உறுதி, உறுவ, உறுகண், உறுப்பு, உறவு, உறுதல், உறீஇ,உறை என வெவ்வேறு விகுதிகளைப் பெற்றும், உற்று, உற்றார், உற்ற என இரட்டித்தும், உறற்க எனப்பிறிது பிறிது ஏற்றும் வரும். அங்ஙனம் வருங்கால், பெயர்க்கும். வினைக்கும் முதனிலையாக நின்று, பலபொருட்கு உரிமைபூண்டு நிற்றலைக் காணலாம்.

உறு என்பது பெயர் வினைகட்கு முதனிலையாக வருமிடத்துப் பொருந்துதல், அடைதல், செல்லுதல், சேர்தல், மோதுதல், வருத்துதல் முதலிய பொருள்களையும், உரிச்சொல் என்னும் அளவில் உறுபுனல், உறுகால் எனப்பெயரடையாக நிற்குமிடத்து, 'மிகுதி' என்னும் ஒரேபொருளையும் தந்து நிற்றலையும் காணலாம். இங்ஙனம் ஒரே முதனிலைப் பல்வேறு நிலையில் பொருள் வேறுபட்டு வருதலையும் உணரலாம்.

இங்ஙனம், உரிச்சொல்லாக நிற்குமிடத்து ஒரு பொருளும், பெயர் வினைகட்கு முதனிலையாக நிற்குமிடத்து ஒரு பொருளும், தருவனவற்றை வெளிப்படவாரா உரிச்சொல் என்றுகூறுவர்.

யாண்டும் ஒரே பொருளில் வருவனவற்றை வெளிப்படை உரிச்சொல் என்றும் கூறுவர். வெளிப்படை உரிச்சொற்குச் சில எடுத்துக்காட்டுவருமாறு:

கொள் என்னும் உரிச் சொல்லுக்கு ஏற்றல், அகப்படுத்தல், அடைதல் என்பவை பொருளாகும். இவை மூன்றும் ஒத்தகருத்துடையவை. இச்சொல், கொள் - கொள்கை - கொள்ளல் - கொள்ளி - கொள்ளை எனப் பெயராக வருமிடத்தும், கொண்டான், கொள்வான், கொள்ளான் என வினையாக வருமிடத்தும், கொள்கலம், குறிக்கோள், மாறுகோள், கோள் வல்லான் எனத் தனித்து வருமிடத்தும் கொள்ளுதல் என ஒரே பொருள் தருதலைக் காணலாம்.

இங்ஙனம் உரிச் சொற்கள் பல்வேறு நிலைகளில் வருதலின், தொல்காப்பியர் பல உரிச் சொற்களை எடுத்துக்காட்டி இவைஇவை இவ்விவ்பொருளில் வரும் என உணர்த்துகின்றார். அவற்றுள் சிலவருமாறு:

| | | |
|---|---|---|
| ஓய்,கவர்வு,உறு,கழி போல்வன | - | வெளிப்பட வாரா உரிச்சொற்கள் |
| நல்,வெல்,கெழு,கொழு போல்வன | - | வெளிப்படையாக வரும் உரிச்சொற்கள் |
| மழ,குழ,நொசி,நுழை போல்வன | - | பெயரடையாக வரும் உரிச்சொற்கள் |
| பழுது நன்று, வயா போல்வன | - | வினையடையாகவரும் உரிச்சொற்கள் |
| உறா,உறிது,பயப்பு,சாயல் போல்வன | - | பெயர்ப்போலியாக வரும் உரிச்சொற்கள் |
| வம்பு,துவன்று,ஏற்றம்,படர் போல்வன | | வினைப்போலியாக வரும் உரிச்சொற்கள் |
| குரு, கெழு,தட,கய,நளி போல்வன | - | பண்புணர்த்தும் உரிச்சொற்கள் |
| உறு,தவ,நனி,பையுள்,சிறுமை போல்வன | - | குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் |

கம்பலை,சிலைத்தல்,துவைத்தல் போல்வன- இசையுணர்த்தும் உரிச்சொற்கள்

உகப்பு,உவப்பு,வயா,வய போல்வன - ஒரு பொருளேதரும் உரிச்சொற்கள்

மத,மட,கடி போல்வன - பலபொருளுணர்த்தும் உரிச்சொற்கள்

பிறவற்றையும், இவ்வாறே ஓர்ந்துணர்ந்து கொள்க.

## நிரம்பிய உரிச் சொல்லும் நிரம்பா உரிச்சொல்லும்

மொழிமுதற்கண்வரும் எனவரையறை செய்யப் பெற்ற உயிர் பன்னிரண்டு, உயிர்மெய் எண்பத்து நான்கு ஆக தொண்ணூற்றாறு எழுத்துக்களின்பின், மொழியிறுதிக் கண் வாரா எனப்பெற்ற க்ச்ட்த்ப்றங் ஆகிய ஏழும் வந்து, ஓர் அசையாக நிற்குமிடத்து அவை பொருள் நிரம்பி நில்லா, அந்நிலையில் அவை நிரம்பா உரிச் சொற்களாம், அவைமேலும் ஓர் உயிரையோ, உயிர் மெய்யையோ கூடியவழிப் பொருள் தரும் நிரம்பிய உரிச் சொற்களாகும். மொழியிறுதியில் நிற்கும் எனக் கொள்ளப்பட்ட ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் மெய், குற்றியலுகரம் ஆகிய பன்னிரண்டும் மொழிமுதல் எழுத்துக்களின் பின்வந்து ஓர் அசையாக நிற்குமிடத்துப் பெரும்பாலானவை நிறை உரிச்சொல்லாக நின்று பொருள்தரும். சிலவே குறை உரிச்சொல்லாக நிற்கும். அவை ஓர் உயிரையோ, உயிர் மெய்யையோ கூடியவழிப் பொருள் தருவனவாய் நிரம்பி நிற்கும்.

உதாரணமாக 'ஆ' என்னும் உயிரின் பின் பதினொட்டுப் புள்ளி மெய்களைச் கூட்டியவழி, அவை நிரம்பிய சொல்லாய் அமைதலையும், குறையாக நிற்றலையும் காண்போம்.

உயிர் - உயிர் மெய்சேர்தல் - ஓரெழுத்தாக்வரும் நிறை உரிச் சொல்

ஆக் - குறையுரிச்சொல்-ஆக-ஆக்கை உயிர்பன்னிரண்டும் பொருள் தரும்.

ஆங் - குறை[illegible]சொல்-[illegible]ங்கு - கா,கு,கை,கோ, கௌ

ஆச் - குறையுரிச்சொல்-ஆசு-ஆச்சா. சா,சீ,சே,சோ

| | | |
|---|---|---|
| ஆஞ் | - குறையுரிச்சொல்-ஆஞ்சி - | தா,தீ,து,தூ,தே,தை |
| ஆட் | - குறையுரிச்சொல்-ஆடி-ஆட்சி- | நா,நீ,நே,நை,நொ,நோ |
| ஆண் | - நிறை உரிச்சொல்-<br>ஆடவன்-ஆணி-ஆண்டு - | பா,பீ,பூ,பே,பை,போ |
| ஆத் | - குறையுரிச்சொல்-ஆதி-ஆத்தி - | மா, மீ, மே, மை, மோ |
| ஆந் | - குறையுரிச்சொல்-ஆந்தை - | யா. |
| ஆப் | - குறையுரிச்சொல்-ஆப்பு - | வா,வீ,வே,வை,வௌ |
| ஆம் | - நிறை நீர். அமை-ஆம்பி - | |
| ஆய் | - நிறை பெண். ஆயி-ஆய்வு - | |
| ஆர் | - நிறை ஆத்தி.ஆரை-ஆர்வு - | |
| ஆல் | - நிறை மரம். ஆலி - | |
| ஆவ் | - குறை. ஆவி. - | |
| ஆழ் | - நிறை ஆழ்தல். ஆழி - | |
| ஆள் | - நிறை ஓர் ஆள். ஆளி - | |
| ஆற் | - குறை. ஆறு - ஆற்று - | பசுவைக் குறிக்குமிடத்து |
| ஆன் | - குறை அவ்விடம்.ஆனி - | ஆன்-ஆ-தனிச் சொல். ன்-சாரியை |

ஈரெழுத்தாக வரும் உரிச் சொற்களையும், அவை நிறையுமாறும் எனது மொழியாக்க நெறிமரபு என்னும் நூலில் விரிவாகக் கண்டு கொள்க.

இம்முறையில் மொழிமுதலாக வரும் தொண்ணூற்றாறு எழுத்துக்களுடன், பதினெட்டுப்புள்ளி மெய்களையும் இணைக்க (96X18=1728) ஆயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு அடிச் சொற்கள் வரும். அவற்றுள் நிறை உரிச் சொற்கள், குறைஉரிச் சொற்களை உணர்தல் வேண்டும். இவற்றிற்குரிய அட்டவணையும், ஆக்கமுறும் சொற்களும் பற்றி எனது "மொழியாக்க நெறிமரபிலக்கணம்" என்னும் நூலிற் கண்டுகொள்க.

## உரிச்சொற் பொருளும் பொருள்நிலை உணர்தலும்

நிரம்பிய உரிச்சொல் சிலவற்றின் பொருள் வெளிப்பட நில்லாது. அந்நிலையில் அச்சொற்களின் பொருளை

வெளிப்படைச் சொற்களால் விளக்குதல் வேண்டும். விளக்க எடுத்துக் கொண்ட சொற்கும், பொருள் விளக்கம் செய்தல் வேண்டின், அவைஓர் எல்லைக்குள் அமைதல் வேண்டும். மேலும்மேலும் விளக்கமுற்படின் அதற்கு எல்லை இராது.

பொருள்களைச் சுட்டிஉணர இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வின் அடிப்படையில், படைத்துக் கொள்ளப் பெறுபவை சொற்கள். அவை ஓர்காரணக் குறியீடுகளே தவிரப் பொருளுக்கும், எழுத்தொலிகளான சொல்லுக்கும், பொருள் இயைபு யாதொன்றுமில்லை. ஆதலின் இவ்வியல்பினைத் தொல்காப்பியம்,

*"பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம்பின்றே"*

*(தொல்.சொல்.385)*

என உணர்த்துகின்றது. எடுத்துக் காட்டாக 'யாண்' என்னும் உரிச்சொல் வெளிப்படையாகப் பொருள் விளங்காதசொல். இதன்பொருளை ஆசிரியர் "யாணுக் கவினாகும் விளங்காதவழி கவினாவது அழகு என்றால் வனப்பு என விளக்கலாம். வனப்பு என்பதும் விளங்கவில்லை யாயின் முருகு என விளக்கலாம். இப்படி ஒருவன் வினாவிக்கொண்டே செல்வானாயின் எடுத்துக் காட்டமைந்ததொடர்களால் விளக்குதல் வேண்டும். இதனைத் தொல்காப்பியம்,

*"பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்" (தொல்.சொல்.386)*

எனக் கூறுகின்றது.

அஃதாவது, கடுங்கால் என்று கூறியவழிக் கேட்போன் அதன் பொருளைத் தெளிவாக உணரும் அறிவிலனாயின், கடுமையான காற்று என வெளிப்படையான சொற்களால் விளக்கலாம். மிகுதியான காற்று என்று கூறலாம். அவ்வழியும் அவன் உணரானாயின், புயல் போன்ற பெருங்காற்று என உவமவாயிலாகவோ, மரங்களெல்லாம் அசைந்து சாயுமாறு வீசும்காற்று என்றோ, விளக்கலாம். அவ்வழியும், அவன் உணரானாயின் பெருங்காற்று வீசுகின்ற இடத்தில், அவனைக் கொண்டுபோய் நிறுத்துவதைத்தவிர வேறு வழியல்லை.

அதனான் சொல்லின் பொருள் உணர்வோரின் அறிவாற்றல், கல்வி நிலை, அனுபவம் ஆகியவற்றை ஒட்டி அமையும் என்று தொல்காப்பியம்,

*"உணர்ச் வாயில் உணர்வோர் வலித்தே" (தொல்.சொல்.387)*

என்று கூறுகின்றது.

உரிச் சொற்கள் யாவும் இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வடிப்படையில், புலவோரான் படைக்கப் பெற்றுள்ளமையான், அவையாவும் அக்காரணங்களையுடையன வேயாம். எனினும், சில சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்பவற்றுள் எதனடியாகப்பிறந்தது என்பது தெளிவாக விளங்குவதில்லை. சில சொற்களில் அவற்றுள் இரண்டு காரணங்கள் அமைந்திருக்கும். சிலவற்றில் மூன்றும் அமைந்திருக்கும். அதனான் அவை எல்லாச் சொற்களிலும் வெளிப்படையாகப் புலப்படாது. அந்நிலையில் அவற்றை வடநூலார் ரூடி என்பர். வடநூலாரைப் பின்பற்றிப் பவணந்தி முனிவர் இடுகுறி எனக் கூறிச் சென்றார். எக்காரியமாயினும் அதற்குக் காரணம் உண்டு. காரணமின்றிக் காரியம் இல்லை என அவர் கருதாது போயினர். சொற்களில் இடுகுறி என்னும் ஒருபிரிவு இல்லவே இல்லை என்பது தமிழ் நூலார் கொள்கையாகும்.

சிலசொற்களின் ஆக்கத்திற்குக் காரணம் வெளிப்படையாகப் புலனாகாதிருக்கலாம் என்பதைத் தொல்காப்பியம்,

"மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்றா"

(தொல்.சொல்.388)

என்கிறது. வெளிப்படையாகத் தோன்றா எனினும் காரணமின்றிச் சொற்கள் பிறவா என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

**சில எடுத்துக் காட்டுக்கள் :**

(1) கம்பலை - சும்மை - சிலைத்தல போன்ற உரிச் சொற்கள் இசை அடிப்படையில் அமைந்தவை. கம், அம், சில் என்பவை ஒலிக்குறிப்புணர்த்துபவை.

(2) உறுகால் தவப்பெரியன், பையுளுற்றான் - சிறுமையுற்றான் என்னுமிடத்து மிகுதி, துன்பம், அவலம் ஆகியவற்றை, அப்பொருள்களில் நன்குணரப்படுதலின் இவைபோல்வன குறிப்பு அடிப்படையில் அமைந்தனவாகும்.

(3) தடமருப் பெருமை, குருமணித்தாலி என்னுமிடத்து தட, குரு என்பன பருமையும், செம்மையுமான பண்பு நோக்கி அமைதலின், இவைபோல்வன பண்பு அடிப்படையில் அமைந்தனவாகும்.

இனி, நளியிருமுந்நீர் என்னுமிடத்து நீர்நிறைந்திருத்தல், செறிவாக இருத்தல் என்னும் பொருள்களை உணர்த்தலின், இதுபண்பும் குறிப்பும் அமைந்த உரிச் சொல்லாகும். இவைபோல் வருவன சில.

அழுங்கல் நீர்வையம் என்னுமிடத்து அழுங்கல் என்பது ஆரவாரம் என்னும் உணர்வில் இசையும், வருந்துதல் என்னும் பொருளில் குறிப்பும் பற்றி வரும். இதைப்போல் வருவனசில. அம்முறைமையான் ஆசிரியர்,

**"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"** **(தொல்.சொல்.366)**

என்று கூறிப் பின்னர்

**"நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப"** **(தொல்.சொல்.367)**

என்றும் விளக்கினார்.மேலும்,

**"மதவே மடனும் வலியுமாகும்"** **(தொல்.சொல்.371)**

என்று கூறிப் பின்னர்

**"மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே"** **(தொல்.சொல்.372)**

என்று விளக்கினார்.

உரிச்சொற்கள் பெரும்பான்மையும் ஓரசைச் சொல்லாயும், சிறுபான்மை ஈரசைச் சொல்லாயும் ஆக்கம் பெறும். ஓரசைச் சொற்களில் சாரியை போன்ற இறுதி ஒட்டுக்கள் பெற்றுச் சில அமையும். ஈரசைச் சொற்கள் இரண்டு சொற்களைப் போலவும் பகுதி, விகுதி போலவும் அமைந்து வரும். **எ.டு:**

'உறு' என்பது மிகுதிப் பொருளுணர்த்தும், ஓர் உரிச்சொல் இதன் அடிநிலை 'உற்' என்பது, இஃது உகரத்தைச் சாரியைபோலப் பெற்று 'உறு' என ஆக்கம் பெற்றது.

'எறுழ்' - என்பது வலிமை என்னும் உரிச்சொல், இது எறு+ஊழ் என்னும் இரண்டு மூலங்கள் இணைந்து ஒருநிரையாக ஆக்கம் பெற்றது.

'இன்னல்' - என்பது துன்பத்தை உணர்த்தும் ஓர் உரிச்சொல். இஃது இன்+அல் என இரண்டு அடிச்சொற்கள் இணைந்து ஒரு சொல்லாக ஆக்கம் பெற்றது.

இவை, இங்ஙனம் ஆக்கம் பெற்றவை எனினும், இவற்றைய பிரித்துப் புணர்ச்சி விதி காணுதல் ஒவ்வாது.

இவையெல்லாம் ஒருமொழியாக்கத் திரிபுகளாகும். இதனை ஆசிரியர்,

"எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண் இயல்பின்றே"

(தொல்.சொல்.389)

என்பார். 'இவண்' என்றது உரிச் சொல்லாக்கத்தை உணர்த்தி நின்றது. இவற்றைப் பிரித்துப் புணர்ப்பின் இருமொழிப் புணரியல் விதிப்படி உற்+உ=உற்று எனல் வேண்டும். எறு+ஊழ்=எறுவூழ் எனல் வேண்டும்.

எனவே, உரிச் சொற்களின் ஆக்கம், இருமொழிப், புணர்ச்சி விதிகளின்படி அமைவனவல்ல. அவற்றைப் பிரித்துரைத்தல் கூடாது என்பது விளங்கும். சொல்லாய்வின்கண் சொல்லமைப்பினைப் பிரித்துப் பார்க்கலாமே தவிர, பிரித்துப் புணர்ச்சி விதிகாணுதல் கூடாது என்பது இதன் கருத்தாகும்.

செல்லல் - என்பது துன்பம் என்னும் பொருள் தரும். குறிப்புரிச் சொல். இதன்கண் துன்பம் என்னும் பொருள் எவ்வாறு அமைந்துள்ளது எனச் சொல்லாய்வு முறையிற் காணுமிடத்து, செல்+அல். செல் என்பது இடி. இடியைப் போன்ற துன்பம். அல் என்பது சொல்லாக்க விகுதி எனக் கூறலாம்.

அல்லல் - என்பது துன்பம் என்னும் பொருள் தரும் குறிப்புரிச்சொல். இதன்கண் அப்பொருள் எங்ஙனம் அமைந்துள்ளது எனின் அல் என்பது எதிர்மறை. அது ஈண்டு நன்மைக்கு எதிர்மறையாக அடுக்கி நின்றது எனல் சொல்லாய்வு முறை. இதனடியாக அலைத்தல், அலந்தான், அலமரல், அலுப்பு முதலாய சொற்கள் ஆக்கம் பெறும்.

உரிச் சொற்களையும் பகுதியாக நிற்கும் முதனிலைச் சொற்களையும், இருமொழிப் புணர்ச்சிக்குக் கூறிய விதிகளைக் கொண்டு பிரித்துக் காணல் ஒவ்வாது. அவை மருவின் பாத்தியவாய் ஆக்கம் பெற்றனவாகும் என்பதைக் கூறுமிடத்து, ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்ததிகாரப் புணரியலின் இறுதிக்கண்,

"உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாரா குறைச் சொற் கிளவியும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . ."

*அன்னவை எல்லாம் மருவின் பாத்திய*
*புணரியல் நிலையிடை உணரத் தோன்றா"* (தொல்.எழுத்து.182)

என்றார்.

இந்நூற்பா ஆணைகூறல் என்னும் உத்திவகையாற் கூறப்பெற்றதாகும். இதுகாறும் உரிச்சொல்பற்றிய அடிப்படை விளக்கமே கூறப்பெற்றது. சொற்கள் பற்றிய பிற விளக்கங்களை, எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை யுரையுள்ளும், தென்னூலுரையுள்ளும், மொழியாக்க நெறிமரபியல் நூலுள்ளும் கண்டு கொள்க.

இனி, ஓரெழுத்தொருமொழி முதலாய மூவகை மொழிகளும், எவ்வெவ்வாறு ஆக்கம் பெற்றுள்ளன என்பதைச் சில எடுத்துக் காட்டுக்கள் வாயிலாகக் காண்போம்.

## சொல்லாக்க நெறிமரபுகள்

மக்களால் பேசப்பெறும் சொற்கள் யாவும் ஓரெழுத்தாலும், இரண்டெழுத்தாலும், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலும் உருவாகின்றன. அவற்றை ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என நுலோர் வகைப்படுத்தினர் என்பது மேல் எழுத்தியலுள் விளக்கப்பட்டது.

சொற்கள் யாவும் பருப்பொருள் நுண்பொருள் காட்சிப் பொருள், கருத்துப்பொருள்களை, ஒருவர் மற்றவர்க்கு உணர்த்துவதற்காக உருவாக்கப்படுவனவாகும். சொற்கள் உருவாகுமிடத்து அச் சொற்கட்கும், அவற்றால் சுட்டப் பெறும் பொருள்கட்கும் யாதானும் ஓர்தொடர்பு அமையும்.

அஃதாவது சொற்களால் சுட்டப்பெறும், பொருள்காட்சிப் பொருளாயின், அப்பொருளின் வடிவம், நிறம், குணம், செயல் அவற்றால் ஏற்படும் இன்பதுன்பங்கள், பெறப்படும் பயன் முதலியவை காரணமாக ஆக்கம் பெறும். கருத்துப்பொருளாயின் பருப்பொருள்களைப் போல, அவற்றால் விளையும் இன்பதுன்பங்கள் பயன்தரு நிலை பற்றியும், மெய்ப்பாடு பற்றியும், தன்வேட்கை பற்றியும் ஒப்புமை வகையால் ஆக்கம்பெறும். புதிய பொருள்களை மக்கள் செயற்கையாகப் படைக்குமிடத்துப் பயன் அடிப்படையில், பருப்பொருள் ஒப்புமையோடு ஆக்கம் பெறும்.

இவையெல்லாம் நேர்முகமாகவும், குறியீடாகவும் அமைந்து பொருளுணர்த்தும். இடுகுறி என்பவை பிறபொருளுணர்த்தும் சொற்களை, வேறு பொருளுக்கு வழங்கற்பாடு பற்றி அமைத்துக் கூறுவனவாகும். பிறமொழியாளர்கள் காரணத்தோடு அமைத்து வழங்கும் சொற்களை, வேறு மொழியாளர் இடுகுறிபோலவே மேற்கொள்ளுதல் மக்கள் வழக்காகும்.

சொல்லாக்கத்திற்கு அடிப்படை மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம், என்னும் கருவிகள், உணர்வறிவாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எண்ணும் புலனறிவாகும். இப்புலனுணர்வுகளைத் தமிழ் நுலார், சொல்லாக்கத்தின்கண் இசை, குறிப்பு, பண்பு என மூன்றாக வகுத்துக் கூறுவர். இசை என்பது செவிப்புலனுக்குரியது, குறிப்பு என்பது சிறப்பாக மனத்திற்கும், பொதுவாக ஏனைப் புலன்களுக்கு உரியது. பண்பு என்பது அகப்புலன் புறப்புலன்களுக்குப் பொதுவானவை.

எல்லாச் சொற்களும் ஓசை, இசை ஒலிகளால் உருவாவதனால், இசை பருவுடம்பாகவும் குறிப்புப்பண்பு நுண்ணுடம்பாகவும் அமையும். இவைபற்றி உரிச்சொல் இலக்கணம் கூறியவிடத்து விளக்கப் பெற்றது.

சொல்லுருவாக்கம் யாவும் காரண வகையால் அமையுமென்பது தமிழ்நூலார் கோட்பாடாகும். காரணம், கருவி, ஏது என்னும் மூன்றும் காரணம் எனப்படும். கருவி என்பது முதற்கருவி, துணைக் கருவி, நிமித்த கருவி எனமூவகைப்பட்டுக் காரணத்துள் அடங்கும். இவைபற்றிய விளக்கங்கள் 'மேலே வேற்றுமையியலுள் தரப்பெற்றன. வடமொழியில் சொற்களைப் பெயர், வினை, இடை எனமூன்றாகவே கொண்டு, இவற்றின் முதனிலைகளைத் தாது என்றும் பிராதிபதிகம் என்றும், கொண்டமையான் பலவற்றிற்குக் காரணம் காணவியலாமல், அவற்றை இடுகுறி யென்றும், வெளிப்படையாகக் காரணம் புலப்பட்டவற்றைக் காரணம் என்றும், இரண்டும் கலந்துள்ள வற்றைக் காரண இடுகுறி என்றும், வகுத்துக் கொண்டு சொல்லமைப்புக்களை ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர். வடமொழி இலக்கணத்தைத் தமிழ் மொழியின் வழிகாட்டியாக எண்ணித் தொல்காப்பியத்திற்கு உரைஎழுதிய உரையாசிரியன் மாரும். அவர் உரைகளையும், வடமொழி இலக்கண நூல்களையும் தழுவி, இலக்கண நூல்கள் செய்த இடைக்கால நூலாசிரியர்களும், உரிச்சொல் பற்றித்

தெளிவாகக் கூற இயலாது போயினர். அதனான் இன்றைய சொல்லாய்வாளர் பலர், மேலைநாட்டு மொழியியலார் கொள்கைகளைத் தழுவியே சொல்லாய்வு செய்து வருகின்றனர்.

இந்நூலுள் கூறப்பெறும், சொல்லாக்க நெறிமரபு பற்றிய கருத்துக்கள் பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் ஆக்கம் பெற்றுள்ள சொற்கள் தரும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, தொல்காப்பியத்தின் துணையோடு கூறப் பெறுவனவாகும்.

## எழுத்துக்களும் அவை சொல்லாதலும்

எல்லாச் சொற்களுக்கும் அடிநிலை அல்லது வேர், உரிச் சொல் எனப்படும். அவ்வடிச் சொற்களுள் பெயர், வினை, இடைச்சொல் என்பவற்றுள் யாதாயினும், ஒன்றன் பொருளைத் தருவன நிரம்பிய உரிச்சொல், பொருள் தராதன நிரம்பா உரிச்சொல் எனப்படும்.

எழுத்துக்கள் ஓசை, இசை, ஒலி எனமுத்திறமாகச் செவிப்புலனாகும் மூன்றையும், பொதுவாக ஒலி என வழங்குதல் மரபு, கண்டத்தினின்றும் தடையின்றி உயிர்ப்புடன் வெளிப்படும் எழுத்து உயிர்ப்புடையது ஆதலின், அவை உயிர் எழுத்து எனப்படும். வடமொழியில் சுரம் எனப்படும். உயிர்ப் பொலியை இசை என்பது இலக்கண மரபு. க் ங் ச் முதலியவை நா அண்ணத்தைப் பொருந்துதலானும், இதழ்கள் இயைதலானும் வடிவு கொள்ளும். தாமே வெளிப்படா உயிர்ப்பிசையின் பின்னோ, உயிர்ப்புடன் இணைந்தோ, வெளிப்படும் உருவு கொள்ளும் நிலையில் மெய் எனப்படும். அவை உயிருக்குப்பின் ஒலித்துவரின் புள்ளிமெய் என்றும், உயிர்ப்பிசையின் துணையால் வெளிப்பட்டுவரின் உயிர்மெய் என்றும் கூறப்படும். (உயிர்மெய் = உயிர்க்கும் மெய்) தமிழில் ஓசையாக வெளிப்படும் எழுத்து ஆய்தம் ஒன்று மட்டுமே. இவைபற்றிய விளக்கங்கள் எழுத்தியலுள் கூறப்பெற்றன. இவ்வெழுத்தொலிகளால் ஆக்கம் பெறுவனவே சொல். சொல் என்பதற்கு நாவால் எழும் ஒலி என்பது பொருளாகும். (ச்+ஒல்=சொல்) 'ச்' நாவைக் குறிக்கும் குறியீடு.

அவ்எழுத்துக்களுள் உயிர் எழுத்துக்கள், தனித்தும் பிறவற்றோடு இணைந்தும் சொல்லாக்கம் பெறும். மெய் தனித்துச் சொல்லாக்கம் பெறா, உயிரின் பின்னோ, உயிரொடு

இணைந்தோ ஆக்கம் பெறும். உயிரொடு இணைந்து வெளிப்படும் உயிர்மெய்கள் தனித்தும், பிறவற்றோடு இணைந்தும் சொல்லாக ஆக்கம் பெறும். ஆய்தம் தனியே வாராது. உயிர், உயிர் மெய்களுக்கு இடையே நின்று சொல்லாக்கம் பெறும்.

நிரம்பிய நிரம்பா உரியடிகள், ஓர் எழுத்தாக அமையுமிடத்து உயிராகவோ, உயிர்மெய்யாகவோ நின்று சொல்லாக உருப்பெறும். உயிரும், உயிர் மெய்யும் தமக்குப்பின் புள்ளி மெய்களைப் பெற்று, ஈரெழுத்தொரு மொழியாக உருப்பெறும். இரண்டெழுத்துக்கு மேற்பட்ட சொற்கள், ஒன்றற்கு மேற்பட்ட உரியடிகளால் உருவாகும். இரண்டு எழுத்துகட்கும் மேற்பட்ட சொற்களில் இறுதி உரியடி சொல்லாக்க இடைச் சொல்லாகவே அமையும்.

உயிர்ப்பிசை எழுத்துக்கள் மாத்திரை யளவானும், பொருள் நிலைகளானும் மூன்று நிலையாக வரும். அரைமாத்திரைஉயிர் இரண்டு, அவை குற்றியலிகரம் குற்றியலுகரம் எனப்படும். இவை தனித்து வாரா. மெய்யொடு கூடியே வரும். ஒருமாத்திரை எழுத்துக்கள் ஐந்து, அவை அ, இ, உ,எ, ஒ இரண்டு மாத்திரை எழுத்துக்கள் ஏழு. அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழாகும். இவை தனித்தும், மெய்யொடு கூடியும் வரும். இவை பன்னிரண்டும் தனித்து நிரம்பிய உரிச் சொல்லாக நின்று பொருள்தரும். மெய்யொடு கூடி வருமிடத்துச் சில நிரம்பிய உரிச் சொல்லாக அமைந்து பொருள்தரும். பல நிரம்பா உரியடிகளாக வரும். உயிர்மெய்கள் வரிவடிவில் இருநூற்றுப் பதினாறாக அமையும். அவை தமக்குப்பின் புள்ளி மெய்களைப் பெறுமிடத்துச் சில நிரம்பியும், பல நிரம்பாமலும் நிற்கும்.

அம்முறையில் தமிழ் மொழியில் உள்ள உரியடிகளை வகுத்துக் காணுமிடத்து, ஓரெழுத்தொருமொழியாக வருவன உயிர் பன்னிரண்டும், உயிர்மெய்யுள் முப்பத்திரண்டும் ஆக நாற்பத்து நான்காகும். உயிரும் உயிர் மெய்யும் தமக்குப்பின் புள்ளி மெய்களைப் பெற்று ஈரெழுத்து உரியடியாக வருவன 2972 ஆகும். இவற்றுள் நிரம்பிய உரிச் சொல்லாக வருவன சிலவாகும். பிறவிளக்கங்களை அட்டவணையிற் கண்டு கொள்க. நிரம்பிய உரியடிகள் பெயராகவோ, வினைப்பகுதியாகவோ, விகுதி இடைச்சொல்லாகவோ அமைந்துவரும்.

எடுத்துக் காட்டாக, 'அ' என்னும் உயிரெழுத்து அவ்வுலகம், அக்கடல் எனப் பெயர்ப்போலியாய் சுட்டிடைச் சொல்லாகவும், அவ்வாங்குந்தி எனப் பண்புப் பெயராகவும், வந்தன, உண்டன என விகுதி இடைச் சொல்லாகவும் வரும்.

'ஆ' என்னும் நெட்டுயிர் எழுத்து ஆவந்தது எனப் பெயராயும், ஆயினான், ஆவான் என வினைப்பகுதியாகவும், 'அவனா' என வினா இடைச்சொல்லாகவும், ஆஆ என்றே அஞ்சினர் என இசை உரிச்சொல்லாகவும் வரும். இவ்வாறே ஏனையவும் வரும்.

புள்ளியிறுதி ஈரெழுத்தொரு மொழிகளில், பல நிரம்பா உரியடியாக நின்று மேலும், எழுத்துக்களைப் பெற்று முதனிலைச் சொல்லாகவரும். சில நிரம்பி வரும்.

எடுத்துக்காட்டாக 'அ' என்பதன்கண் புள்ளி மெய்பதினெட்டும் வருமிடத்து அக், அங், அச் - எனவருபவை நிரம்பாதவை. அண்(நெருங்கு) அம் (அழகு, நீர்) அர் - பலர்பால் விகுதி, அல் (இரவு) அவ் - சுட்டுப்பன்மைப் பெயர். இவை நிரம்பியவை. பிறவற்றை அட்டவணையிற்கண்டு கொள்க.

நிரம்பிய உரியடிகள் பெயராயும், வினைப்பகுதியாகவும், விகுதி இடைச் சொல்லாகவும், உரிச் சொல்லாயும் பொருந்தும் நிலையில் வரும். உதாரணமாக, அல் என்பது இரவு என்னும் பொருள் தருமிடத்துப் பெயர். அல்லாந்தான் என்னுமிடத்து வினைப்பகுதி. ஆடல், பாடல் என்னுமிடத்து விகுதி இடைச் சொல். அல்லல் என்னுமிடத்துக் குறிப்புரிச் சொல். அல்லன், அல்லள் என்னுமிடத்துக் குறிப்பு வினையடி. இவ்வாறே ஏனையவும் வரும். அல் என்பது பிற எழுத்துக்களைப் பெற்றுப் பல்வேறு பொருளில் வரும். அலி, அலை, அல்லி, அலகு, அலுப்பு, அலக்கண், அலவன், அலங்கல், அலசு, அலரி எனப்பல நிலையில் வரும்.

உயிர் எழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்தாகிய மூவகை எழுத்துக்களும், பேச்சுவழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்கிலும், பொருளை உட்கொண்டு சொல்லாக ஆக்கம் பெறும் நிலையில், சில எழுத்துக்கள் சொல் முதற்கண்வாரா. சில ஈற்றின்கண் வாரா. இடையில் வருமிடத்துச் சில நியதிகளோடு வரும். இவ்வியல்பு பற்றி எழுத்தியலுள் - மொழி முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, மெய்மயக்கம்

என்னும் தலைப்புக்களில் விரிவாக விளக்கப் பெற்றன. அவ்விலக்கணப்படி, மொழி முதற்கண் உயிர் எழுத்துக்களின் பின்னும், மொழிமுதற்கண் வரும் உயிர்மெய் எழுத்துகளின் பின்னும், பதினெட்டு மெய்களைச் சேர்க்குமிடத்து, மொழியிறுதியில் வருதற்குரியவை நிரம்பிய உரியடியாக நிற்கும். மற்றவை நிரம்பா உரியடியாக நின்று மேலும் ஓர் உயிரையோ, உயிர் மெய்யையோ பெற்று முதனிலைப் பகுதியாகவும் சொல்லாகவும் வரும், உதாரணமாக 'அ' என்ற உயிரெழுத்தின் பின், பதினெட்டு மெய்களையும் இணைக்கும்போது அக், அங், அச், அட், அத், அப், அற் என்பவை, நிரம்பாமல் நிற்கும் காரணம், க்,ங்,ச்,ட்,த்,ப்,ற் என்னும் ஏழு ஒற்றுக்களும் மொழியிறுதியில் வாராதனவாகும். மொழியிறுதியில் வரும் ஏனைய பதினொரு எழுத்துக்களுள் ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் - என்பவை மொழியிறுதியில் வருமேனும் ஞ்,ந்,ழ் என்பவை பிறஎழுத்துக்களுடன் கூடியல்லது தனி ஒரு எழுத்தைச் சார்ந்து வாரா. இவை உரிஞ், பொருந், புகழ் என முதனிலைப் பகுதிச் சொற்களாகவே ஆக்கம்பெறும். ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ள் என்பவை தனி ஒரு எழுத்தின்பின் நாம், யான், சீர்,தெவ்,எள் என நால்வகைச் சொற்களுள் ஒன்றாக வரும். மொழியிறுதியில் வராத ங்,க்,ச்,ட்,த்,ப்,ற் என்பவை, தமக்குப்பின் பிறஎழுத்துக்களைப் பெற்று அங்கு, பாக்கு, கச்சு, மட்டு,முத்து, செப்பு, நெற்று எனவரும்.

சொல்லாக்கத்தின்கண் யாதானும் ஒரு பொருளை எழுத்துக்கள், தனித்தும் இணைந்தும் தொடர்ந்து நின்று தருமிடத்து, அவை தனிச் சொல் எனப்படும். அவை பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகையில் ஒன்றற்குரிய தாகவோ, பிறவற்றிற்கும் பொதுவாகவோ நிற்கும். அவற்றைப் பகுநிலைச் சொல் - பகாநிலைச் சொல் (பகுபதம் - பகாப்பதம்) என இடைக்கால இலக்கண நூலார் கூறுவர். பகுநிலைச் சொற்களில் சில உறுப்புக்களைப் பெற்றிருக்கும். அவற்றை முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, சாரியை எனக் கூறுவார். முதனிலையைப் பகுதியென்றும், இறுதிநிலையை விகுதி என்றும் நன்னூலாசிரியர் கூறுவார். அக்குறியீடுகளும் இங்குக் கையாளப்படும். பகுபதங்களில் வினைச்சொல்லில் வரும் இடைநிலை காலப் பொருளைத் தரும். விகுதிகள் பெயரிலும், வினையிலும் திணை, பால் இடங்களைக் காட்டிவரும். திணை பால் இடங்களைக் காட்டாமல், சொல்லாக்கத்துணையாக விகுதிகள் வருமாயின், அவ்விகுதி பெற்ற சொற்களைப்

பகாப்பதமாகவே கொள்ளல் வேண்டுமென்பது நன்னூலார் கொள்கை. அஃதாவது கா,சீ,நா, கண்,பல் என்பவை விகுதிபெறாத பகாப்பதம். மலை(மல்+ஐ) நிலம் (நில்+அம்) கடல் (கட+அல்) எனவிகுதி பெற்றுவருவன, விகுதியால் பாலிடங்காட்டாமையின், இவை போல்வன சொல்லாக்க விகுதி எனப்படும். விகுதிகளைப் பற்றிய விரிவான விளக்கங்கள், எழுத்தியலுள் கூறப்பெற்றுள்ளன. அவற்றைக் கண்டு கொள்க.

இங்ஙனம், பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் எழுத்துக்களால் ஆக்கம் பெறுமிடத்து, ஒருசொல்லே தனிமொழியாயும், தொகை மொழியாயும், தொடர் மொழியாயும் அமைந்திருக்கும். ஓரெழுத்தால் அமையும் சொற்கள்யாவும் தனி மொழியாகவே நிற்கும். இரண்டும் இரண்டுக்குமேற்பட்டும் ஆக்கமாகும் சொற்களில் சில தனிமொழியாயும், தொகை மொழியாயும் நிற்கும். சில தொடர் மொழியாயும் நிற்கும்.

ஒற்றொடு கூடி இரண்டெழுத்துக்களாக் நிற்கும் உரியடிகள் சொல்லாக ஆக்கம் பெறுமிடத்து. அவை பல நிலைகளில் ஆக்கம் பெற்றுவரும். அவற்றுள் சிறப்பானவை.

(1) ஒற்று இரட்டாமலும் இரட்டியும் ஆக்கம் பெற்றுப் பொருள் வேறுபட்டும், சிறுபான்மை வேறுபடாமலும் நிற்கும்.

பொருள் வேறுபடுவன:

அல் - அலி - அல்லி.
கண் - கணி - கண்ணி.
உள் - உளி - உள்ளி.
இல் - இலம் - இல்லம்.
கள் - களம் - கள்ளம்.

வேறுபடாதவை :

கல் - கலை - கல்லை.
கிள் - கிளை - கிள்ளை.
சில்-சில-சில்ல, அல்-அல-அல்ல
முன்-முனம்-முன்னம்.

(2) சில முதல் எழுத்து நீண்டு வினைப்பகுதி பெயராக நிற்கும்.
எ.டு:

உண் - ஊண்.
கொல் - கோல்.
மின் - மீன்.
பண் - பாண் - எனவரும்.

(3) சில ஈறுதிரிந்து பொருள் வேறுபட்டுப் பெயராகும்.
எ.டு:

| | | |
|---|---|---|
| பகு - பகை. | ஓது - ஓதை, | நிறு - நிறை. |
| தொகு - தொகை. | பொறு - பொறை, | நகு - நகை. |
| படு - படை. | புகு - புகை. | மிகு - மிகை. |
| கொடு - கொடை. | மறு - மறை. | |
| எடு - எடை. | தொடு - தொடை | |

(4) சில வினைப்பகுதி விகுதி பெற்றுப் பெயராதல்
எ.டு:

| | | |
|---|---|---|
| காண் - காணி. | பழு - பழம். | |
| சேர் - சேரி. | கிள் - கிளை. | தின் - தினை |
| வாழ் - வாழை. | நில் - நிலை. | கொல் - கொலை |

எனவரும்.

(5) மூன்றெழுத்து நிரையசைச் சொல் முதல் நீண்டு இடைகுன்றி வருதல்.
எ.டு:

| | | |
|---|---|---|
| அகல் - ஆல். | பகல் - பால். | நிகர் - நேர். |
| உயர் - ஊர். | துகள் - தூள். | நுவல் - நூல். |
| பொரல் - போல் | மகன் - மான். (பெருமகன்= பெருமான்) | |

சில நிரையசை நேரசைச் சொற்கள் நேர்அசையாக வருதல்.

| | |
|---|---|
| அகழி - ஆழி. | தொகுப்பு - தோப்பு. |
| வியர்வை - வேர்வை. | மலர்பு - மார்பு. |
| உவகை - ஓகை எனவரும். | |

(6) நெடில் ஈற்றுச் சொற்கள் குறுகி உகரம் பெறுதல்.
எ.டு:
இரா - இரவு. நிலா - நிலவு. கனா - கனவு. முழா - முழவு.

(7) சிலபகுதிச் சொற்கள் விகுதி பெற்று எதிர்மறையாகும்.
எ.டு:
தண்+அல்=தணல். கன்+அல்=கனல். பாகு+அல்=பாகல்.

*(8) உட்பிணைப்பாக இருசொல் திரிதல்.*

**எ.டு:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துய்க்கும்+இல் | = | துச்சில். | இருள்+உ | = | இரவு. |
| பால்+செய் | = | பாச்சி, | ஊர்+அகம் | = | உரகம் (பாம்பு) |
| அடு+செயல் | = | அடிசில். | வள்+த்+உ | = | வண்டு. |

*(9) எழுத்துப் பேறு பெறுதல்*

**எ.டு:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்+த்+இ | = | நன்றி. | இருள்+த்+உ | = | இருட்டு |
| வெல்+த்+இ | = | வெற்றி. | எல்+த்+உ | = | என்று (சூரியன்) |
| கால்+த்+உ | = | காற்று. | குள்+த்+இ | = | குட்டி - |

எனவரும். பிறவாறு வருவனவற்றைப் பின்னர்க் கண்டு கொள்க.

*(10) முதல் இடை கடைகளில் சிதைதல்.*

**எ.டு:**

குஞ்சரம் - யானை, கொம்மைசரம். கூர்தல் - கூந்தல்
கீழ்+நீர் = கேணி. கீழ்+விரி=கீரை.

## சொல்லாக்கம்

முழுமையாக ஒரு பொருளைத்தரும் தனிமொழிகள் தனிநிலை - தொகைநிலை - தொடர்நிலை என முத்திறப்படும். Ü Õ øÅ ÷ ¢ îÙ ¯ñ ô âÙ ÕÏ ஒருதனிநிலை - ஒட்டு நிலை - திரிபுநிலை என முத்திறப்படும். ஓரெழுத்தால் ஆக்கம் பெறுவன யாவும் ஒருதனி நிலையாகவே அமையும். ஈரெழுத்து உரியடிகளால் ஆக்கம் பெறுவன, குறிலைச் சார்ந்த புள்ளியீற்று உரியடிகள், உயிர்வரின் இரட்டியும், இரட்டாமலும் பெரும்பான்மையும் வேறு வேறான பொருளாக ஆக்கம் பெறும். ஈரெழுத்து உரியடிச் சொற்களுள் சில ஒட்டுநிலையாக அமைந்து வரும். ஒட்டுக்கள் ஓரெழுத்தாகவும் வரும். இரண்டெழுத்தாகவும் வரும். இரண்டு மூன்று எழுத்தாக ஒட்டுக்கள் வருமிடத்து இயல்பாயும், திரிந்தும் மூன்றெழுத்து, நான்கெழுத்துச் சொல்லாக ஆக்கம் பெறும். அவ்வழி, அவை ஒட்டுநிலைச் சொல்லாகவும், தொகை நிலைச் சொல்லாகவும் நிற்கும். அவற்றை முறையாக இனிக் காண்போம்.

## ஓரெழுத்தொருமொழி

**ஒரு தனி நிலை:**

ஆ=பசு, கோ=அரசன். ஏ=அம்பு. ஐ=தலைவன். வா, போ, மீ, மோ, கூ எனவரும்.

**ஒட்டுநிலை :**

நா,ந்+ஆ, ந் குளிர்ந்த நீர்ப்பசைக் குறிப்பொலி ஆ=ஆக்குவது. குளிர்ந்த நீரை ஊறச் செய்து ஆக்குவது. ந்+ஆ=நா. மா(மரம்)ம்+ஆ. ம் - இனிமைக் குறிப்புணர்த்தும், ஆ=ஆக்குவது. தனது கனியினால் இனிமையாக்குவது. ம்+ஆ=மா. மா=விலங்கு ம் -ஓசைக் குறிப்பு, ஆ=ஆக்குவது. பேச்சொலியின்றிக் குரல் ஒலியால், தம்மை வெளிப்படுக்கும் விலங்குகளாதலின் விலங்கு - மா- எனப்பட்டது. மாவினுடைய பிறபொருட்களும், இவ்வாறே ஒட்டு நிலையில் அமைந்தனவாகும்.

**திரிபுநிலை :**

நீ, முன்னிலைப் பெயர். ந்-பொருள். ஈ முன்னிலை இடம். ந்+ஈ= நீ, வீ=வீழும் பருவத்தில் உள்ளமலர் =வீழ்வு என்பதன் திரிபு வீ, தீ, த் = தீ தெறுதல் குறிப்புடையது. ஈ= வழங்கும் குறிப்புடையது. த்+ஈ = தீ.

## ஈரெழுத்தொரு மொழி

**தனி நிலை :**

கண்-கல்-கார் - எள்- ஊழ் எனவரும்.

**ஒட்டுநிலை :**

மணி (மண்+இ) அடி (அடு+இ) நடை(நடு+ஐ) விடு (விள்+து) நிறை (நிறு+ஐ) எனவரும்.

**திரிபுநிலை :**

வெல் - வேல். சூல்-சொல்(நெல்) மின்- மீன்(நட்சத்திரம். வியன் - வான். பார்வை - பாவை(கண்ணின் மணிநிழல்) கொழி=கோழி.

ஈரெழுத்து உரியடி ஒட்டுவிதியால் மூன்றெழுத்து மொழியாதல்.

**எ.டு:**

நில்+அம்=நிலம். ஓடு+அம் ஓடம், நிறு+அம்=நிறம். ஆர்+உள்=அருள், பொரு+உள்= பொருள். கான்+அல்=கானல்.

## தொகை நிலைச் சொல்

இரண்டு உரியடிகள் இணைந்து ஒரு சொல்லாக. ஒரு

பொருள் தருவன தொகைநிலைச் சொல்லாம். அவை இயல்பாயும் திரிந்தும் ஆக்கம் பெறும்.
**எ.டு:**

இயல்புநிலை:- வயிறு= உணவை வைத்து இறுத்துமிடம். வை+இறு=வயிறு புறணி - உயிரின் புற உடம்பாக அமைந்து அழகு செய்யும் மேனி, புற+அணி=புறணி, (தோல்) மயிர்=தலையில் கரிய நிறத்தோடு குளிர்ச்சி பெற்றிருப்பது. மை+ஈர்=மயிர். உரகம்(பாம்பு)மார்பினால் ஊர்ந்து செல்வது. ஊர்+அகம்=உரகம்.

**திரிபுநிலை :**

இது ஈறுதிரிதல், இடைதிரிதல், முதல்நிலை திரிதல், முழுதும் திரிதல் எனப்பலநிலைகளில் ஆக்கம்பெறும்.
**எ.டு:**

மேனி-உயிருக்குக் கவசமாக மேல் நிற்பது. மேல்+நில்=மேனி. கொடிறு= வாயின்வறு ஈறுகள் கூடுமிடம். கூடு+எயறு=கொடிறு. தொப்பை(வயிறு) உணவைக் கொள்ளும் தோல்பை= தொப்பை. கீரை-நிலத்தில்படர்ந்து செழிப்பது. கீழ்+விரி= கீவிரி-கீரை. நல்+விழி=நவ்வி (மான்) காழ்+ஓதை= கழுதை எனவரும்.

**தொடர்நிலை :**

முதல்நிலை உரியடி சிலஉறுப்புக்களோடு கூடி, ஒருபொருள் தருவன தொகைநிலைச் சொல், தொடர்நிலைச் சொல் எனப்படும்.
**எ.டு:**

கண்ணன் - அழகிய கண்களையுடையவன். கண்+அன்= கண்ணன். ஆயன் - ஆக்களைப் பேணி வளர்ப்பவன். ஆ+அன்= ஆயன். மருதி- மருநிலத்தில் வாழும் பெண்மகள். மருதம்+இ=மருதி. தாமரை - பரவி விரிந்து மணத்தை உள்ளடக்கி நிற்கும் மலர். தா+மாரை=தாமரை. அகழி- ஆழமாகத் தோண்டி அமைக்கப் பெற்ற நீர்நிலை. அகழ்+இ=அகழி. நடந்தான் - இவ்ஆடவன் நடத்தல் செய்து முடித்தான் - நடத்தல் தொழிலைச் செய்து முடித்தவன். உண்கிறான் - இவ்வாடவன் உணவை உண்டு கொண்டுள்ளான் - உண்டு கொண்டிருப்பவன்.

இங்ஙனம், தனிச் சொற்கள், ஈரெழுத்து உரியடிச் சொற்கள் ஒன்றும், இரண்டுமாக ஆக்கம் பெறுவன நால்வகைச் சொற்களாக அமைந்து வரும். இவற்றை இனிமுறையாகக் காண்போம்.

**சொல்லாக்க நிலைகள்:**

1) ஈரெழுத்து உரியடிச் சொற்கள் இ-ஐ-அம் என்னும் சொல்லாக்க விகுதிகளைப் பெறுமிடத்து, ஒற்றீறுகள் உயிர்முன் இரட்டியும், இரட்டாமலும், அல்வழிப் பொருளிலும் வேற்றுமைப் பொருளிலும் ஆக்கம் பெறும்.

எ.டு:

அல்+இ = அலி - அல்லி. இம்+ஐ = இமை - இம்மை.

எல்+இ = எலி - எல்லி. திண்+ஐ = திணை - திண்ணை.

கன்+இ = கனி - கன்னி, இல்+அம் = இலம் - இல்லம்.

உள்+இ = உளி - உள்ளி. வல்+அம் = வலம் - வல்லம்

கிள்+ஐ = கிளை - கிள்ளை. கள்+அம் = களம் - கள்ளம்.

பண்+ஐ = பணை - பண்ணை. வன்+அம் = வனம் - வன்னம்.

எனப் பெரும்பாலும் பொருள் வேறுபட்டும், சிறுபான்மை சில்-சில-சில்ல, முன்-முனம்-முன்னம், உள்-உள-உள்ள எனப்பொருள் வேறுபடாதும் வரும்.

இவ்விகுதிகள் வினைமுதற்பொருள், செயப்படுபொருள் முதலிய வேற்றுமைப் பொருள்பட அமையும்.

எ.டு:

ஓடு+ஐ= ஓடை = நீரோட்டத்தைச் செய்வது ஓடை.

(முர்-மூர்) மூரி = காளை. முரணைச் செய்வது மூரி.

நகு+அம்=நகம் = நகுதலைச் செய்வது (பற்களை ஒத்திருத்தலின்) நகம்

கால்+து= காற்று = கலித்தலைச் செய்வது. இவை வினை முதற்பொருள்.

உடு+உடை = உடுப்பதற்குரியது.

அணி = உடம்போடு அணுகுதலைச் செய்வது. இவை செயப்படு பொருள்.

கொல்லி-கொல்+இ= கொல்லுதற்குத் துணைபுரிவது. (சேர்ந்தாரைக் கொல்லி என்பது

| | | |
|---|---|---|
| | | நெருப்பிற்கு ஒரு பெயர்) வினை முதற் பொருள் எனினுமாம். |
| மண்வெட்டி | = | வெட்டுதற்குத் துணைபுரிவது. |
| நேரம் | = | நேர்வதற்குத் துணைபுரிவது. இவை கருவிப் பொருள். |
| கொள்ளி | = | நெருப்பைக் கொண்டிருப்பது |
| காரி | = | கரிய நிறத்தை உடையது. |
| வெள்ளை | = | வெண்மை நிறத்தையுடையது. |
| மணம் | = | நறுநாற்றத்தை உடையது. இவை உடைமைப் பொருள். |
| சேரி | = | மக்கள் சேர்ந்து வாழும் இடம். |
| கூடம் | = | மக்கள் கூடியிருப்பதற்குரிய இடம். இவை இடப்பொருள். |
| மடை | = | நீரைக் கொண்டிருப்பது. |
| விழி | = | பொருள்களைத் தன்னுள்ளே ஏற்றுக் கொள்வது. இவை கோடற்பொருள் (வீழ்த்திக் கொள்வது விழி) |
| தூவி | = | சிறகு - உடம்பினின்றும் தூவப்படுவது. |
| கழி | = | (உப்பங்கழி) கடலினின்றும் கழிவுடையது. இவை நீக்கப் பொருள். |

இங்ஙனம் இ, ஐ,அம்,து ஆகிய விகுதிகள் வேற்றுமைப் பொருளைக் கொண்டு நிற்கும்.

(2) ஈரெழுத்து, மூவெழுத்துக் குற்றுகர முற்றுகர ஈற்றுச் சொற்கள் இயல்பாக, ஒருபொருளும் ஒற்றிரட்டி ஒருபொருளும் தரும்.

எ.டு:

| | | | |
|---|---|---|---|
| வடு | - வட்டு. | பகடு | - பகட்டு. |
| நாகு | - நாக்கு. | உருகு | - உருக்கு |
| பாடு | - பாட்டு. | பயிறு | - பயிற்று. |
| ஓது | - ஓத்து. | கருது | - கருத்து. |

(3) உகர ஈற்றுக் சொற்களுள், சில ஒற்றுடன் ஒரு பொருளும் ஒற்றுக் கெட வேறு பொருளும் தரும்.

எ.டு:

கொள்ளு - கொளு. ஒழுங்கு - ஒழுகு.
மருந்து - மருது. வண்டு - வடு - எனவரும்.

(4) முதனிலைத் தொழிற்பெயர்கள், இ,உ,ஐ,அம் என்னும் சொல்லாக்க விகுதிபெற்று பொருட்பெயர் முதலியவாக வரும்.

எ.டு:

| | | |
|---|---|---|
| அகழ் - அகழி. | அறு - அறுவை. | அண் - அண்ணம். |
| உந்து - உந்தி. | கற - கறவை. | இடு - இடம். |
| காண் - காட்சி. | பச - பசலை. | ஈட்டு - ஈட்டம். |
| புல - புலவி. | புகு - புகை. | ஊக்கு - ஊக்கம். |
| தூ - தூவி. | மித - மிதவை. | ஏற்று - ஏற்றம். |
| அறி - அறிவு. | உண் - உணவு. | நாடு - நாட்டம். |
| போழ் - போழ்து. | பழு - பழுப்பு. | அறு - அறம். |

எனவரும்.

(5) சில பெயர்கள் இ,உ,ஐ,அம் விகுதிபெற்றுப் பொருள் வேறுபடும்.

எ.டு:

நா - நாயி. கண் - கணு. மல் - மலை. மண் - மணம்.
வேல் - வேலி. மர் - மரு. மால் - மாலை. தட - தடம்
எனவரும்.

(6) முதனிலைவினை முதல்நீண்டு பெயராதல்

எ.டு:

கொழி - கோழி. மடி - மாடி. தொடு - தோடு. விடு - வீடு.
தழை - தாழை. பதி - பாதம். பகு - பாகம்,

(7) பெயர் நீண்டு பொருள் தருதல்.

எ.டு: வரை - வாரை. கொடு - கோடு. பண் - பாண்.

(8) ஒற்றிரட்டல்

எ.டு: எழுது - எழுத்து. ஓது - ஓத்து. ஏசு - ஏச்சு.

(9) இனமாதல் :

எ.டு: தீண்டு - தீட்டு. சாற்று - சான்று.

(10) முழுதும் திரிதல் :

எ.டு: குதி-கூத்து. நொசி-நுசுப்பு. குவி-குப்பை. களி-காளை.

(11) புள்ளியீற்று நேரசை வினைப் பகுதிகள் சில, முதல் நீண்டு பொருட் பெயராக வரும்.

எ.டு:

| | | | |
|---|---|---|---|
| உண் | - ஊண் (உணவு) | கிள் | - கேள் (உறவு) |
| கல் | - (கலித்தல்) கால். | கொல் | - கோல். |
| கொள் | - கோள். | வெல் | - வேல். |
| நொய் | - நோய். | தின் | - தீன் (தீனி) |
| செல் | - சேல் (கெண்டை) | | |

12. பெயரடிகள் சில இவ்வாறு நீண்டு வேறு பொருள் தரும்.

எ.டு:

| | | | |
|---|---|---|---|
| நள் (செறிவு) | - நாள் (விண்மீன்) | தொல் | - தோல். |
| பல் | - பால். | தென் | - தேன். |
| மண் | - மாண். | பெண் | - பேண். |
| பண் | - பாண். | | |

13. புள்ளியீற்று நிரையசை வினைப்பகுதிகள் சில, முதல் நீண்டு இடை எழுத்துக் கெட்டுப் பெயராகவரும்.

எ.டு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் | - ஊர். | வரல் | - வால். | நுவல் | - நூல். |
| பொரல் (பொருவல் = ஒத்தல்) | - போல் | நிகர் | - நேர். | அகல் | - ஆல் |
| துவள் | - தோள். | படர் | - பார், | பகல் | - பால். |
| சுழல் | - சூழ். | | | | |

14. சில பெயரடிகளும் அவ்வாறு வரும்.

எ.டு:

| | | |
|---|---|---|
| துகள் - தூள். | வியன் - வான். | வியர் - வேர் (வியர்த்தல்) வேர்வை |
| மயல் - மால். | மகன் - மான். | தேயம் - தேம். |
| பெயர் - பேர். | மகள் - மாள். | சுவல் - சூல் (வயிற்றுமேடு) |
| சுவல் - மேடு. | | |

15. ஈரசைச் சொற்கள் சில முதல் நீண்டு இடைகுன்றி அவ்வாறு வரும்.

எ.டு:

| | | |
|---|---|---|
| அகழி - ஆழி. | தொகுப்பு - தோப்பு. | வியலை - வேலை |
| குவடு - கோடு. | பொருவல் - போல். | முதிரல் - மூரல். |
| மலர்பு - மார்பு. | உவகை - ஓகை. | சுவடு - சோடு |

16) முதனிலைச் சொற்கள் சில, அல் என்னும் எதிர் விகுதி பெற்று இயற்பெயர் போல வரும்.

எ.டு:

தணல் = தண்+அல்- குளிர்ச்சி அல்லாதது - நெருப்பு.

மணல் = மணல்+அல். கரைத்துக் கழுவுதற்கு இயலாதது.

கனல் = கன்+அல் - இனிமையல்லாதது நெருப்பு. கன்-இனிமை.

கானல் = கான்+அல். காடல்லாதது. கடற்கானல். கான் - காடு.

இன்னல் = இன்+அல் - இனிதல்லாதது. துன்பம்.

பாகல் = பாகு+அல் - இன்சுவை அல்லாதது. கசப்புடையது.

பாகு = இன் சுவை

கடல் = கட+அல்- கடத்தற் கரியது

தழல் = தழுவு+அல் - நெருங்கித் தழுவுதற்காகதது - நெருப்பு.

இகல் = இகு+அல் - நட்பல்லாதது. பகை(இகு - நட்பு. தோழமை)

தையல் = தை+அல் - தலைமையுறுதற்கு இயலாத பெண்பால்

தை = தலைவன்.

(17) ஆகல் என்பதன் மரூஉவாகிய அல் என்னும் இறுதிநிலை சேர்ந்த சொற்கள் ஆக்கல் பொருள்தரும்.

எ.டு:

மல்லல் - மல்+ஆகல் - வளமாக இருப்பது.

ஈரல் - ஈர்+ஆகல் - ஈரமாகக்குளிர்ச்சியாக இருப்பது.

வள்ளல் - வள்+ஆகல் - வள்ளன்மையுடையவர்.

பாகல் (பலா) பாகு+ஆகல் - இன்சுவையாக இருப்பது.

(18) 'இல்' என்னும் ஈறு இருத்தல் பொருளில் ஆக்கம் பெறும்.

எ.டு:

குடில் - கூடு+இல் - கூடியிருத்தற்குரிய இடம்.

எழில் - எழு+இல்
(எழு-ஏர்-அழகு) - அழகு தங்கியிருப்பது.

முகில் - முகு+இல் - நீரை முகந்து இருக்கும் கார்மேகம்.

வெய்யில் - வெய்+இல் - வெம்மை தங்கியிருப்பது

நெடில் - நீண்டிருப்பது.

குறில் - குறுகியிருப்பது.

அணில் - அழகாக இருப்பது. (அணி= அலங்காரம்)

நகில் - (நகு+இல்) இன்பினைக் கொண்டிருப்பது.

(19) 'இல்' ஈறு எதிர்மறைப் பொருளில் ஆக்கம் பெறுதல்.

எ.டு:

துயில் = துய்ப்பு இல்லாத நிலை, (உறக்கம்)

பொழில் = பொழுது - சூரியன் (பொழு - பகுதி) வெப்பமில்லாத இடம்.

## தொழிற் பெயர்கள் பொருட் பெயராதல்

இ,உ,ஐ, கை, வை,அல்,உள் என்னும் விகுதிகளைப் பெற்ற முதனிலை வினை உரிச் சொற்கள் சில பொருட்பெயராக ஆக்கம் பெறும்.

எ.டு:

| | | |
|---|---|---|
| கட+உள் | = | கடவுள் - கடத்துதல். (இஃது இறைவன் தெய்வம் என்னும் பொருட் பெயராகியது. |
| இய+உள் | = | இயங்குதல். இஃது பெயராகியது. |
| வைகல்-வைகு+அல் | = | தங்குதல். இதுநாள் என்னும் காலப் பெயராயிற்று. |
| ஒலியல்-ஒலி+அல் | = | ஒலித்தல். இது நீரோட்ட முடையயாற்றிற்குப் பெயராயிற்று. |
| பகல் - பகு+அல் | = | பகுத்தல். இது சூரியனுக்குப் பெயராயிற்று. |
| பருக்கை - பரு+கை | = | பருத்தல். இது வெந்த சோற்றிற்குப் பெயராயிற்று. |
| மிதவை - மித+வை | = | மிதத்தல். இது கட்டுமர ஓடத்திற்குப் பெயராயிற்று. |
| நகை - நகு+ஐ | = | நகைத்தல். இது பற்களின் பெயராயிற்று. |
| பொருப்பு - பொரு+பு | = | தாங்குதல். இது மலைக்குப் பெயராயிற்று. |

ஆகுபெயர்ப் பொருள்தரும் வற்றல், கந்தல் முதலிய தொழிற் பெயர் வேறு. இவை வேறு.

இரண்டு உரியடிகள் இணைந்து ஒரு சொல்லாய்ப் பொருட் பெயராகச் சிலவரும். அவற்றுள் சில ஈறு கெட்டு நிற்கும். சில திரிந்து நிற்கும்.

எ.டு:

பருதி - பரு+தீ (பெருநெருப்பு) சூரியன்.

பரிதி - பரி+தீ (பரி=தூய்மை) தூய நெருப்புப் பிழம்பு · சூரியன்

கரும்பு - கரும் +புல் (கருமை=வலிமை) கன்னலின் பெயராயிற்று.

தம்பி - தம்+பின் (பின்=பின்பிறந்தவன்) உடன் பிறந்த இளையவன்.

கோளி - கோள்+இல்= காய்த்துப் பழுத்தலில்லாத ஆலமரம்.

முறி - முறு+இல்= முற்றாத இளந்தளிர்.

குடிசை - குடி+செய்= கூடித்தங்குமிடம். சிறு வீடு.

மாகம் - மா+ஆகம்= பெரிதாக விரிந்து நிற்கும் திசை.

உரியடிகள் சில அடையடுத்துப் பெயராக ஆக்கம்பெறும்

எ.டு:

தாமரை - தா+மரை - விரிந்த வலிய மலர்.

ஆகாயம் - ஆ+காயம் - பரந்து விரிந்த விண்வெளி. க்திரவன் ஒளிவெப்பத்தால் நிறைந்து நிற்பது.

ஒட்டகம் - ஒட்டு+அகம் - இருகூறாக ஒட்டிய புறத்தையுடைய விலங்கு.

மிளகாய் - மிளகு+காய்= மிளகுபோல உறைப்புடைய காய்

கட்டடம் - அடுக்கிக் கட்டப்பட்ட அணிகலன் - புத்தகம் முதலியவை அடுக்கிக் கட்டப்படும்.

கட்டிடம் - இடத்திற் கட்டப்பட்ட வீடு - மாளிகை. கட்டிய இடம் = கட்டிடம்.

கண்ணாடி - கண்ணுக்கு அணியும் ஆடி. (ஆடி=நிழல் செய்யும் பளிங்கு)

அரும்பு - அரும்+பூ = மலராதமுகை.

பாசறை - பசுமை+அறை. பசுந்தழை வளார்களால் அமைந்த இருப்பிடம்.

கட்டூர் - கட்டு+ஊர். புதிதாகக் கட்டப்பட்ட ஊர். படைகள் தங்குமிடம்.

மூன்றெழுத்து மொழிகள் சிலவற்றின் ஈறுகள் விகுதி, இடைச் சொற்கள் போலப் பிரித்துணரும் வகையில், பகாநிலைச் சொற்களாக அமைந்து இயங்கல், இருத்தல், தன்மை, உடைமை, வினைப்பண்பு, பொருண்மை ஆயவற்றைச் சுட்டிவரும். அவற்றுள் சிலவருமாறு:

## இயங்கற் பொருண்மை :

எ.டு:

முகிழ் - (முகு+இழ்) மலரும் நிலையில் உள்ள மலர் மொட்டு

மகிழ் - (மகு+இழ்) களிப்புணர்வைத் தரும் வினைப் பண்பு

நெகிழ் - (நெகு+இழ்) இளகும் தன்மையுடைய நிலை.

அகழ் - (அக+அழ்) தோண்டுதல் குறிப்புணர்த்தும் நிலை. பள்ளம்.

விரல் - (விரி+அல்) விரியும் நிலையை உடைய உறுப்பு.

குரல் - (குரு+அல்) ஒலியெழுப்பும் நிலையுடைய இடம்.

நகில் - (நகு+இல்) மகிழ்தற்குரிய உறுப்பாகிய உறுப்பு.

வியர் - (விய+அர்) (வியர்வை) பரந்து நீரைப் பொடிப்பது.

மலர் - (மல்+அர்) தேனாகிய வளத்தை நிரப்பும் நிலையினது.

குடர் - (கூடு+அர்) உள்துளையுடைய கூடாக இருப்பது.

தொடர் - (தொடு+அர்) தொடங்கிச் செல்வது. தொட்டுச் செல்வது.

**இருத்தல் பொருண்மை**

எ.டு:

நிரல் - (நிர+அல்) வரிசைப்பட அமைந்தது

அரில் - (அரி+இல்) பின்னலாக அமைந்திருப்பது முட்களாக இருப்பது

அரண் - (ஆர்+அண்) வட்டமாக உயர்ந்தமைந்திருப்பது.

பரண் - (பர+அண்) மேலாக அமைந்திருக்கும் இடம்.

பரம் - (பர+அம்) மேலாக நிலவும் விண்ணிடம்.

இனம் - (இன்+அம்) குணம் ஒத்தனவாக அமைந்துள்ள பொருள்.

புறம் - (புற+அம்) பின்பாக அமைந்துள்ள இடம்.

விடர் - (விடு+அர்) பிளவாக அமைந்துள்ள இடம் (விள் பிளவு)

களர் - (கள்+அர்) களியாக உள்ள இடம்.

இருள் - (இரு+உள்) கருமையைக் கொண்டிருப்பது.

மருள் - (மரு+உள்) அறியாமையை மயக்கத்தைக் கொண்டது

தெருள் - (தெரு+உள்) விளக்கம் தங்கியுள்ள நிலை.

**தன்மை நிலை**

மயல் - (மய்+அல்) மயங்கும் நிலைமை

முரண் - (முரு+அன்) பகைமையுள்ள நிலை.

குணம் - (குள்+குண் + அம்)உள்மைந்திருக்கும் இயல்பு.

காய் - (கை+ஆய்) கைப்புத் தன்மையது.

பொய் - (போ+ஆய்) உண்மையை விலகிய தன்மை.

மெய் - (மே+ய்) பொருந்தும் தன்மையுடையது.

**உடைமைநிலை**

புகழ் - (புகு+ஆழ்)தன்னிடம்புக்கு ஆழ்ந்திருப்பது.

நிறம் - (நிறை+அம்) இடமுழுதும் படர்ந்திருப்பது.

வாய் - (வா+ய்)உணவை உள்வாங்குதலுடையது.

நோய் - (நோ+ய்) துன்பத்தைக் கொண்டிருப்பது.

அருள் - (அர்+உள்) நிறைவான பண்புடையது.

பொருள் - (பொரு+உள்) துய்ப்பனவற்றைக் கொண்டிருப்பது.

## வினைப்பண்பு

துயர் - (துய்+அர்) துய்க்க அரிதினைச் செய்வது.

செயிர் - (செய்+இர்) செய்தற்குரியவற்றினின்று நீங்கியது. (இர் - இரிதல்)

இடர் - (இடு+அர்) ஊற்றினை இட்டு நிரப்புவது.

படர் - (படு+அர்) துன்பப் படுதலைச் செய்வது.

சுடர் - (சுடு+அர்) சுடுதலைச் செய்வது.

அகல் - (அக+அல்) அகமாக நில்லாமல் நீங்குவது.

வலம் - (வல்+அம்) வல்லமையால் விளைவது (வெற்றி)

## பொருண்மை

கவண் - (கவ+ண்) கவையாக உள்ள வேட்டைக் கருவி.

சுரம் - (சுர்+அம்) வெப்பமாக உள்ள பாலை நிலம்.

பேய் - (பே+ய்) அச்சந்தரும் பொருள்.

நெய் - (நெ+ய்) நெகிழ்வாக இருக்கும் உண்பொருள் முதலியவை.

பயிர் - (பை+இர்) பசுமையாக உள்ள புல்பூண்டுகள்.

மதிள் - (மத+இள்) வலிமையாக உள்ள (சுவர்) அரணம்.

வான் - (விய+ன்) பரந்து விரிந்துள்ள ஆகாயம்

இவை இங்ஙனம் ஆக்கம் பெற்றனவாயினும் இலக்கண நோக்கில் இவை ஒரு சொல்லாகப் பகாநிலை மொழியாகவே கொள்ளப்படும்.

## உட்பிணைப்புச் சொல்லாக்கம்

ஒருசொல் முதனிலை இறுதிநிலை இணைப்புப் போலவும், வேற்றுமைத் தொகை முதலிய தொகைநிலைச் சொற்கள் போலவும், மரூஉ மொழியாகவும் அமைந்து ஒரு சொல் நீர்மையவாக ஆக்கம் பெறும் சொற்கள் உட்பிணைப்பு மொழிகளாகும். வடமொழியாளர், இவற்றைத் தத்திதபதம் என்று கூறுவர்.

எ.டு:

அளக்கர் - கடல். அளக்க+அரியது. அளக்க+ர். இருசொற்கள் இணைந்து ஒருசொல்லாக அமைந்தது.

துச்சில் - துய்க்கும்+இல்லம் - சிதைந்து ஒருசொல்போல நின்றது.

பாச்சி - (முலை) பால்+செய் - பால் ஊறும் இடம். இது சிதைவுச் சொல்.

மூச்சு - மூக்கு - செயல். மூ+செய் = மூச்சு, சுவாசக் காற்று.

நோலை - நூவு+ஒல்+ஐ. நூவு=எள். ஒல்லை - லை உருண்டை.

உரகம் - பாம்பு. ஊர் + ஆகம். ஊர்ந்து செல்லும் நெஞ்சினையுடையது.

படிறு - குற்றம். பாடு+இறு - பெருமைக்கு மாறாக அமைந்தது. குற்றம் எனப் பொருளமைந்தது.

குஞ்சரம் - கொம்மை+சரம் = குஞ்சரம்.

நவ்வி, கீரை, கொடிறு, அரசபுரசல் முதலியவை இவ்வாறு ஆக்கம் பெற்றனவாகும்.

இரண்டு சொற்கள் இணைந்து ஒரு மொழியாக ஆக்கம் பெறுதல்.

எ.டு:

என்றூழ் - சூரியன். என்று+ஊழ் என்பவற்றின் இணைப்பு

அம்புலி - நிலவு. அம்+புல்லி = அம்புலி

கார்கோள் - கார்+கோள் = கடல். ஆர்கலி. ஆர்+கலி = கடல்

ஊருணி - ஊர்+உண்ணி = உருணி. பெருங்குளம்.

கோட்டகம் - கோடு + அகம் = கோட்டகம் - குளக்கரை.

செவுள் - செவி+உள் = செவுள்.

இங்ஙனம் பலவாறாக ஆக்கம் பெறும். விரிவான விளக்கங்களை எனது “மொழியாக்க நெறிமரபு இலக்கணம்” என்னும் நூலிற் கண்டு கொள்க.

## சொற்படலம் முற்றிற்று

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

## அண்மைவெளியீடுகள்

| | |
|---|---|
| காஞ்சிக் கோயில்கள் | 90.00 |
| பார்புகழும் பால்சங்கு | 40.00 |
| தன்வந்திரி வைத்தியக்கும்மி | 50.00 |
| தஞ்சைக் கூத்து மரபுகள் | 50.00 |
| தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி - 3 | 100.00 |
| வீட்டு மருத்துவம் | 44.00 |
| தொண்டைமான் செப்பேடுகள் | 70.00 |
| தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு | 120.00 |
| சாந்தாதி அசுவமகம் | 240.00 |
| அறிவியல் களஞ்சியம் தொகுதி - 14 | 700.00 |
| தமிழில் சொல்லாக்கம் | 130.00 |
| பழவேற்காடு 1816 இல் (மெக்கன்சியின் சுவடி - பதிப்பாய்வு) | 125.00 |
| தமிழ்நாவல்களில் உளச் சித்திரிப்பு | 130.00 |
| தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் தொகுதி - 2 | 160.00 |
| தமிழக அறிவியல் வரலாறு | 60.00 |
| இசைத்தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி - 1 | 60.00 |
| உலக நாடுகளில் தமிழர் பண்பாடு | 50.00 |
| 108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடுகளும் அமைவுகளும் | 50.00 |
| பாவேந்தரின் மொழியுணர்வும் மொழிநடையும் | 35.00 |
| தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை | 140.00 |

தொடர்பு முகவரி :
இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)
தஞ்சாவூர் - 613 001. தொ.பே. 04362 - 239221